தமிழ்நாடு அரசு

ஒன்பதாம் வகுப்பு

தமிழ்

பள்ளிக் கல்வித்துறை

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 1 22/05/18 6:56 PM

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு – 2018

(புதிய பாடத்திட்டத்தின்கீழ்
வெளியிடப்பட்ட நூல்)

பாடநூல் உருவாக்கமும் தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி
மற்றும் பயிற்சி நிறுவனம்
© SCERT 2018

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்
www.textbooksonline.tn.nic.in

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 2 22/05/18 6:56 PM

முகவுரை

கல்வி, அறிவுத் தேடலுக்கான பயணம் மட்டுமல்ல; எதிர்கால வாழ்விற்கு அடித்தளம் அமைத்திடும் கனவின் தொடக்கமும்கூட. அதே போன்று, பாடநூல் என்பது மாணவர்களின் கைகளில் தவழும் ஒரு வழிகாட்டி மட்டுமல்ல; அடுத்த தலைமுறை மாணவர்களின் சிந்தனைப் போக்கை வடிவமைத்திடும் வல்லமை கொண்டது என்பதையும் உணர்ந்துள்ளோம். பெற்றோர், ஆசிரியர் மற்றும் மாணவரின் வண்ணக் கனவுகளைக் குழைத்து ஓர் ஓவியம் தீட்டியிருக்கிறோம். அதனூடே கீழ்க்கண்ட நோக்கங்களையும் அடைந்திடப் பெருமுயற்சி செய்துள்ளோம்.

- கற்றலை மனனத்தின் திசையில் இருந்து மாற்றிப் படைப்பின் பாதையில் பயணிக்க வைத்தல்.
- தமிழர்தம் தொன்மை, வரலாறு, பண்பாடு மற்றும் கலை, இலக்கியம் குறித்த பெருமித உணர்வை மாணவர்கள் பெறுதல்.
- தன்னம்பிக்கையுடன் அறிவியல் தொழில்நுட்பம் கைக்கொண்டு மாணவர்கள் நவீன உலகில் வெற்றிநடை பயில்வதை உறுதிசெய்தல்.
- அறிவுத்தேடலை வெறும் ஏட்டறிவாய்க் குறைத்து மதிப்பிடாமல் அறிவுச் சாளரமாய்ப் புத்தகங்கள் விரிந்து பரவி வழிகாட்டுதல்.
- தோல்வி பயம் மற்றும் மன அழுத்தத்தை உற்பத்தி செய்யும் தேர்வுகளை உருமாற்றி, கற்றலின் இனிமையை உறுதிசெய்யும் தருணமாய் அமைத்தல்.

புதுமையான வடிவமைப்பு, ஆழமான பொருள் மற்றும் குழந்தைகளின் உளவியல் சார்ந்த அணுகுமுறை எனப் புதுமைகள் பல தாங்கி உங்களுடைய கரங்களில் இப்புதிய பாடநூல் தவழும்பொழுது, பெருமிதம் ததும்ப ஒரு புதிய உலகத்துக்குள் நீங்கள் நுழைவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 3 22/05/18 6:56 PM

நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா.
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

– *மகாகவி இரவீந்திரநாத தாகூர்.*

நாட்டுப்பண் – பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒடிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சி அடையச் செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு

வெற்றி! வெற்றி! வெற்றி!

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 4 22/05/18 6:56 PM

தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே!

– 'மனோன்மணீயம்' பெ. சுந்தரனார்.



தமிழ்த்தாய் வாழ்த்து – பொருள்

ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணுக்கு, அழகு மிளிரும் சிறப்பு நிறைந்த முகமாகத் திகழ்கிறது பரதக்கண்டம். அக்கண்டத்தில், தென்னாடும் அதில் சிறந்த திராவிடர்களின் நல்ல திருநாடும், பொருத்தமான பிறை போன்ற நெற்றியாகவும், அதிலிட்ட மணம் வீசும் திலகமாகவும் இருக்கின்றன.

அந்தத் திலகத்தில் இருந்து வரும் வாசனைபோல, அனைத்துலகமும் இன்பம் பெறும் வகையில் எல்லாத் திசையிலும் புகழ் மணக்கும்படி (புகழ் பெற்று) இருக்கின்ற பெருமைமிக்க தமிழ்ப் பெண்ணே! தமிழ்ப் பெண்ணே! என்றும் இளமையாக இருக்கின்ற உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே! வாழ்த்துவோமே!

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 5 22/05/18 6:56 PM

தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தவர்கள். என் நாட்டை நான் பெரிதும் நேசிக்கிறேன். இந்நாட்டின் பழம்பெருமைக்காகவும் பன்முக மரபுச் சிறப்புக்காகவும் நான் பெருமிதம் அடைகிறேன். இந்நாட்டின் பெருமைக்குத் தகுந்து விளங்கிட என்றும் பாடுபடுவேன்.

என்னுடைய பெற்றோர், ஆசிரியர்கள், எனக்கு வயதில் மூத்தோர் அனைவரையும் மதிப்பேன்; எல்லாரிடமும் அன்பும் மரியாதையும் காட்டுவேன்.

என் நாட்டிற்கும் என் மக்களுக்கும் உழைத்திட முனைந்து நிற்பேன். அவர்கள் நலமும் வளமும் பெறுவதிலேதான் என்றும் மகிழ்ச்சி காண்பேன்.

தீண்டாமை மனித நேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 6 22/05/18 6:56 PM

உலகின் மூத்த மொழியாம் தமிழின் பல்வேறு பரிமாணங்களை
இன்றைய இளம்தலைமுறைக்கு
அறிமுகப்படுத்தும் ஒரு துணைக்கருவியாக இப்பாடநூல்.

ஒவ்வொரு இயலையும்
ஆர்வத்துடன் அணுக
உரைநடைஉலகம்,
கவிதைப்பேழை, விரிவானம்,
கற்கண்டு
ஆகிய தலைப்புகளாக . . . . .

பொருண்மைக்கு ஏற்ப
இயலின் தொடக்கத்தில்
கற்றல் நோக்கங்கள்

பாடப்பகுதிகளின்
கருத்தை விளக்க அரிய,
புதிய செய்திகளை
அறிந்து கொள்ள
தெரிந்து தெளிவோம்
தெரியுமா? . . . .

காலத்தின் பாய்ச்சலுக்கு
ஈடுகொடுப்பதாக
இணையவழி உரலிகள் . . .

பாடப்பகுதிகளின் தொழில்
நுட்பக் கருத்தை விளக்க
திட்பமும் நுட்பமும். . . .

ஆளுமை மிக்க
ஆசிரியர்களுக்கும்
ஆற்றல் நிறை
மாணவர்களுக்கும்...

படிப்பின்
அகலமும் ஆழமும் தொடர
அறிவை விரிவு செய் . . .

பயின்ற பாடங்கள் குறித்துச்
சிந்திக்க, கற்றல்
செயல்பாடுகளாக
கற்பவை கற்றபின் . . . .

இயலின் இறுதியில்
விழுமியப் பக்கமாக
நிற்க அதற்குத் தக. . .

உயர்சிந்தனைத் திறன்பெற,
படைப்பாக்கத்தின்வழி
வாழ்வைத் தன்னம்பிக்கையுடன்
எதிர்கொள்ள, படித்துச்சுவைக்க,
மொழிவிளையாட்டு . . . .

இலக்கியச்சுவை உணர்ந்து
நுட்பங்களை உள்வாங்கி
மொழியை ஆற்றலுடன்
பயன்படுத்த
மொழியை ஆள்வோம் . . . .

மாணவர்தம்
அடைவை அளவிட
மதிப்பீடு . . . .

பாடநூலில் உள்ள விரைவு குறியீட்டைப் (QR Code) பயன்படுத்துவோம்! எப்படி?

- உங்கள் திறன்பேசியில், கூகுள் playstore /ஆப்பிள் app store கொண்டு QR Code ஸ்கேனர் செயலியை இலவசமாகப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியைத் திறந்தவுடன், ஸ்கேன் செய்யும் பொத்தானை அழுத்தித் திரையில் தோன்றும் கேமராவை QR Code–இன் அருகில் கொண்டு செல்லவும்.
- ஸ்கேன் செய்வதன் மூலம் திரையில் தோன்றும் உரலியைச் (URL) சொடுக்க, அதன் விளக்கப் பக்கத்திற்குச் செல்லும்.

மொழிப்பாடத்தை மட்டுமல்லாமல் பிறபாடங்களைப் பயில,
கருத்துகளைப் புரிந்து எதிர்வினையாற்ற உதவும் ஏணியாய்..... புதிய வடிவம், பொலிவான
உள்ளடக்கத்துடன் இப்பாடநூல் உங்கள் கைகளில்...

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 7 22/05/18 6:56 PM

பொருளடக்கம்

வ.எண்	பொருண்மை/இயல்	பாடத்தலைப்புகள்	ப. எண்
1	மொழி	திராவிட மொழிக்குடும்பம்	2
		தமிழோவியம்	8
	அழுதென்று பேர்	தமிழ்விடு தூது *	10
		வளரும் செல்வம்	13
		தொடர் இலக்கணம்	18
2	இயற்கை, சுற்றுச்சூழல்	நீரின்றி அமையாது உலகு	32
		பட்டமரம்	38
	உயிருக்கு வேர்	பெரியபுராணம் *	40
		புறநானூறு *	44
		தண்ணீர்	47
		துணைவினைகள்	52
3	பண்பாடு	ஏறுதழுவுதல்	64
		மணிமேகலை	68
	உள்ளத்தின் சீர்	அகழாய்வுகள்	72
		வல்லினம் மிகும் இடங்கள்	78
		திருக்குறள் *	87
4	அறிவியல், தொழில்நுட்பம்	இயந்திரங்களும் இணையவழிப் பயன்பாடும்	96
		ஓ, என் சமகாலத் தோழர்களே! *	103
	எட்டுத்திக்கும் சென்றிடுவீர்	உயிர்வகை*	105
		விண்ணையும் சாடுவோம்	107
		வல்லினம் மிகா இடங்கள்	113
5	கல்வி	கல்வியிற் சிறந்த பெண்கள்	124
		குடும்ப விளக்கு	130
	கசடற மொழிதல்	சிறுபஞ்சமூலம் *	133
		வீட்டிற்கோர் புத்தகசாலை	135
		இடைச்சொல் – உரிச்சொல்	139

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 8 22/05/18 6:56 PM

வ.எண்	பொருண்மை/இயல்	பாடத்தலைப்புகள்	ப. எண்
6	நாகரிகம், தொழில், வணிகம்	வணிக வாயில்	154
		நான்மாடக்கூடல்	159
	தொழில் பல முனைதல்	மதுரைக்காஞ்சி	161
		சந்தை	164
		ஆகுபெயர்	170
		திருக்குறள் *	177
7	கலை, அழகியல், புதுமைகள்	சிற்பக்கலை	182
		இராவண காவியம் *	187
	கலை பல வளர்த்தல்	நாச்சியார் திருமொழி	191
		செய்தி	193
		புணர்ச்சி	198
8	நாடு, சமூகம், அரசு, நிருவாகம்	பழந்தமிழர் சமூக வாழ்க்கை	208
		சீவக சிந்தாமணி *	212
	வாழிய நிலனே	முத்தொள்ளாயிரம் *	215
		இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு	217
		பொருளிலக்கணம்	221
9	அறம், தத்துவம், சிந்தனை	பெரியாரின் சிந்தனைகள்	232
		ஒளியின் அழைப்பு	237
	என்தலைக் கடனே	தாவோ தே ஜிங்	239
		யசோதர காவியம் *	241
		மகனுக்கு எழுதிய கடிதம்	242
		யாப்பிலக்கணம்	245
10	மனிதம், ஆளுமை	விரிவாகும் ஆளுமை	254
		அக்கறை *	259
	அன்பென்னும் அறனே	குறுந்தொகை	261
		தாய்மைக்கு வறட்சி இல்லை	263
		அணியிலக்கணம்	268
		திருக்குறள்	277

*(*) இக்குறியிட்ட பாடல்கள் மனப்பாடப்பகுதி*

3YL9N5

மின் நூல்

4B9E6C

மதிப்பீடு

இணைய வளங்கள்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 9 22/05/18 6:56 PM

தமிழ்

ஒன்பதாம் வகுப்பு

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

இயல் ஒன்று

அழுதென்று பேர்

கற்றல் நோக்கங்கள்

- மொழியின் தேவை, தோற்றம், தொன்மை, தனித்தன்மைகள் ஆகியவற்றை அறிதல்
- வேறுபட்ட கவிதை வடிவங்களைப் படித்துப் பொருளுணர்தல்
- தமிழ்ச் சொற்களையும் பிறமொழிச் சொற்களையும் வேறுபடுத்தி அறிதல்
- தொடர்களின் அமைப்பினை அறிந்து பயன்படுத்துதல்
- கடிதம், கட்டுரை வாயிலாகக் கருத்துகளை வெளிப்படுத்துதல்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 1 22/05/18 6:56 PM

இயல் ஒன்று

திராவிட மொழிக்குடும்பம்



திராவிட மொழிகளுக்குள் மூத்த மொழியாய் இலங்குவது தமிழ். எத்தகைய கால மாற்றத்திலும் எல்லாப் புதுமைகளுக்கும் ஈடுகொடுத்து இயங்கும் ஆற்றல் தமிழுக்கு உண்டு. தமிழாய்ந்த அயல்நாட்டறிஞரும் செம்மொழித் தமிழின் சிறப்பைத் தரணியெங்கும் எடுத்துரைத்து மகிழ்கின்றனர். இவ்வுரைப்பகுதி, தமிழின் சிறப்பைப் பிறமொழிகளுடன் ஒப்பிட்டு உணர்த்துகிறது.

தமக்குத் தோன்றிய கருத்துகளைப் பிறருக்கு உணர்த்த மனிதர் கண்டுபிடித்த கருவியே மொழியாகும். முதலில் தம் எண்ணங்களை மெய்ப்பாடுகள், சைகைகள், ஒலிகள், ஓவியங்கள் முதலியவற்றின் மூலமாகப் பிறருக்குத் தெரிவிக்க முயன்றனர். இவற்றின் மூலம் பருப்பொருள்களை மட்டுமே ஓரளவு உணர்த்த முடிந்தது. நுண்பொருள்களை உணர்த்த இயலவில்லை. அதனால், ஒலிகளை உண்டாக்கிப் பயன்படுத்தத் தொடங்கினர். சைகையோடு சேர்ந்து பொருள் உணர்த்திய ஒலி, காலப்போக்கில் தனியாகப் பொருள் உணர்த்தும் வலிமைபெற்று மொழியாக வளர்ந்தது.

மனிதஇனம் வாழ்ந்த இடஅமைப்பும் இயற்கை அமைப்பும் வேறுபட்ட ஒலிப்பு முயற்சிகளை உருவாக்கத் தூண்டின. இதனால் பல மொழிகள் உருவாயின. உலகத்திலுள்ள மொழிகளெல்லாம் அவற்றின் பிறப்பு, தொடர்பு, அமைப்பு, உறவு ஆகியவற்றின் அடிப்படையில் மொழிக்குடும்பங்கள் பலவாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

மொழிகளின் காட்சிச் சாலை

இந்தியாவில் பேசப்படும் மொழிகளின்

எண்ணிக்கை 1300க்கும் மேற்பட்டது. இவற்றை நான்கு மொழிக்குடும்பங்களாகப் பிரிக்கின்றனர். அவை,

1. இந்தோ – ஆசிய மொழிகள்
2. திராவிட மொழிகள்
3. ஆஸ்திரோ ஆசிய மொழிகள்
4. சீன – திபெத்திய மொழிகள்

என அழைக்கப்படுகின்றன. பல கிளை

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 2 22/05/18 6:56 PM

மொழிகளும் இங்குப் பேசப்படுவதால் இந்திய நாடு மொழிகளின் காட்சிச்சாலையாகத் திகழ்கிறது என்று ச. அகத்தியலிங்கம் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் குறிப்பிடத்தக்க, பழைமையான நாகரிகங்களுள் இந்திய நாகரிகமும் ஒன்று. மொகஞ்சதாரோ – ஹரப்பா அகழாய்வுக்குப் பின்னர் இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதைத் திராவிட நாகரிகம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். திராவிடர் பேசிய மொழியே திராவிட மொழி எனப்படுகிறது. திராவிடம் என்ற சொல்லை முதலில் குறிப்பிட்டவர் குமரிலபட்டர். தமிழ் என்ற சொல்லிலிருந்துதான் திராவிடா என்ற சொல் பிறந்தது என்று மொழி ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். ஹீராஸ் பாதிரியார் என்பார் இம்மாற்றத்தைத் தமிழ் → தமிழா → தமிலா → டிரமிலா → ட்ரமிலா → த்ராவிடா → திராவிடா என்று விளக்குகின்றார்.

மொழி ஆய்வு

திராவிட மொழிக்குடும்பம் என்ற பகுப்பு உருவாவதற்கு ஒரு வரலாறு இருக்கிறது. தமிழ், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகள் சமஸ்கிருத மொழியிலிருந்து உருவானவை என்ற கருத்து அறிஞர் பலரிடையே நிலவிவந்தது. இம்மொழிகளில் வடமொழிச் சொற்கள் மிகுந்து காணப்பட்டதால் 18ஆம் நூற்றாண்டின் தொடக்கம்வரை இந்திய மொழிகள் அனைத்திற்கும் வடமொழியே மூலம் எனவும் அதிலிருந்தே மற்ற மொழிகள் தோன்றி வளர்ந்தன எனவும் அறிஞர்கள் கருதினர். அறிஞர் வில்லியம் ஜோன்ஸ் என்பார் வடமொழியை ஆராய்ந்து மற்ற ஐரோப்பிய மொழிகளோடு தொடர்புடையது வடமொழி என முதன்முதலில் குறிப்பிட்டார். தொடர்ந்து, 1816ஆம் ஆண்டில் பேராசிரியர்கள் பாப், ராஸ்க், கிரிம் முதலானோராலும் மொழி சார்ந்த பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

முதன்முதலில் பிரான்சிஸ் எல்லிஸ் என்பார் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளை ஒப்புமைப்படுத்தி ஆய்ந்து இவை தனியொரு மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை என்ற கருத்தை முன்வைத்தார். இம்மொழிகளை ஒரே இனமாகக் கருதித் தென்னிந்திய மொழிகள் எனவும் பெயரிட்டார். இதனையொட்டி, மால்தோ, தோடா, கோண்டி முதலான மொழிகள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஹோக்கன் என்பார் இம்மொழிகள் அனைத்தையும் இணைத்துத் தமிழியன் என்று பெயரிட்டதோடு ஆரிய மொழிகளிலிருந்து இவை மாறுபட்டவை என்றும் கருதினார். மாக்ஸ் முல்லரும் இதே கருத்தைக் கொண்டிருந்தார்.

1856இல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலில் கால்டுவெல், திராவிட மொழிகள், ஆரிய மொழிக்குடும்பத்திலிருந்து வேறுபட்டவை எனவும் இம்மொழிகள் சமஸ்கிருத மொழிக்குள்ளும் செல்வாக்கு செலுத்தியுள்ளன எனவும் குறிப்பிட்டார். இதனை மேலும் உறுதிப்படுத்தப் பல்வேறு இலக்கணக் கூறுகளைச் சுட்டிக்காட்டி, திராவிட மொழிகளுக்குள் இருக்கும் ஒற்றுமைகளையும் எடுத்துரைத்தார்.

கால்டுவெல்லுக்குப் பின்னர் ஸ்டென்கனோ, கே.வி. சுப்பையா, எல்.வி.இராமசுவாமி, பரோ, எமினோ, கமில்சுவலபில், ஆந்திரனோவ், தெ.பொ. மீனாட்சிசுந்தரம் முதலான அறிஞர்கள் திராவிட மொழிகளின் ஆய்விற்குப் பங்களிப்புச் செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள்.

திராவிட மொழிக்குடும்பம்

திராவிட மொழிக்குடும்பம், மொழிகள் பரவிய நில அடிப்படையில் தென்திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வடதிராவிட மொழிகள் என மூன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. திராவிட மொழிக்குடும்பத்திலுள்ள தமிழ், கன்னடம், மலையாளம் முதலானவை தென்திராவிட மொழிகள் எனவும் தெலுங்கு முதலான சில மொழிகள் நடுத்திராவிட மொழிகள் எனவும் பிராகுயி முதலானவை வடதிராவிட மொழிகள் எனவும் பகுக்கப்பட்டுள்ளன.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 3 22/05/18 6:56 PM

தென்திராவிடம்	நடுத்திராவிடம்	வடதிராவிடம்
தமிழ்	தெலுங்கு	குரூக்
மலையாளம்	கூயி	மால்தோ
கன்னடம்	கூவி (குவி)	பிராகுய் (பிராகுயி)
குடகு (கொடகு)	கோண்டா	
துளு	கோலாமி (கொலாமி)	
கோத்தா	நாய்க்கி	
தோடா	பெங்கோ	
கொரகா	மண்டா	
இருளா	பர்ஜி	
	கதபா	
	கோண்டி	
	கோயா	

மேலுள்ள பட்டியலில் உள்ள 24 மொழிகள் தவிர அண்மையில் கண்டறியப்பட்ட எருகலா, தங்கா, குறும்பா, சோழிகா ஆகிய நான்கு மொழிகளையும் சேர்த்துத் *திராவிட மொழிகள் மொத்தம் 28* எனக் கூறுவர்.

திராவிடமொழிகளின் பொதுப்பண்புகள்

சொற்களின் இன்றியமையாப் பகுதி வேர்ச்சொல், அடிச்சொல் எனப்படும். திராவிட மொழிகளின் சொற்களை ஆராய்ந்தால், அவை *பொதுவான அடிச்சொற்களைக்* கொண்டிருப்பதைக் காணமுடிகிறது.

தெரியுமா?

தமிழ் வடமொழியின் மகளன்று; அது தனிக் குடும்பத்திற்கு உரியமொழி; சமஸ்கிருதக் கலப்பின்றி அது தனித்தியங்கும் ஆற்றல் பெற்ற மொழி; தமிழுக்கும் இந்தியாவின் பிற மொழிகளுக்கும் தொடர்பு இருக்கலாம்.

– கால்டுவெல்

சான்று

அடிச்சொல்	திராவிட மொழிகள்
கண்	– தமிழ்
கண்ணு	– மலையாளம், கன்னடம்
கன்னு	– தெலுங்கு, குடகு
ஃகன்	– குரூக்
கெண்	– பர்ஜி
கொண்	– தோடா

திராவிட மொழிகளில் *எண்ணுப் பெயர்கள்* ஒன்று போலவே அமைந்துள்ளன.

மூன்று	– தமிழ்
மூணு	– மலையாளம்
மூடு	– தெலுங்கு
மூரு	– கன்னடம்
மூஜி	– துளு

குறில், நெடில் வேறுபாடு

திராவிட மொழிகளில் உயிர் எழுத்துகளில் உள்ள குறில், நெடில் வேறுபாடுகள் பொருளை வேறுபடுத்தத் துணை செய்கின்றன.

அடி – குறில்	வளி – குறில்
ஆடி – நெடில்	வாளி – நெடில்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 4 22/05/18 6:56 PM

பால்பாகுபாடு

திராவிட மொழிகளில் பொருள்களின் தன்மையை ஒட்டிப் பால்பாகுபாடு அமைந்துள்ளது. ஆனால், வடமொழியில் இவ்வாறு அமையவில்லை. உயிரற்ற பொருள்களும் கண்ணுக்கே புலப்படாத நுண்பொருள்களும்கூட ஆண், பெண் என்று பாகுபடுத்தப்படுகின்றன. இம்மொழியில் கைவிரல்கள் பெண்பால் என்றும் கால்விரல்கள் ஆண்பால் என்றும் வேறுபடுத்தப்படுகின்றன. ஜெர்மன் மொழியிலும் இத்தகைய தன்மையைக் காணமுடிகிறது. முகத்தின் பகுதிகளான வாய், மூக்கு, கண் ஆகியவை வேறுவேறு பால்களாகச் சுட்டப்படுகின்றன. வாய்- ஆண்பால், மூக்கு - பெண்பால், கண் - பொதுப்பால் எனப் பகுக்கும் நிலை உள்ளது.

திராவிட மொழிகளில் ஆண்பால், பெண்பால் என்ற பகுப்பு உயர்திணை ஒருமையில் காணப்படுகிறது. அஃறிணைப் பொருள்களையும் ஆண், பெண் என்று பால் அடிப்படையில் பகுத்தாலும் அவற்றிற்கெனப் பால்காட்டும் விகுதிகள் இல்லை. தனிச்சொற்களாலேயே ஆண், பெண் என்ற பகுப்பை உணர்த்தினர். (எ.கா. கடுவன் – மந்தி; களிறு – பிடி)

வினைச்சொற்கள்

ஆங்கிலம் போன்ற மொழிகளில் வினைச்சொற்கள் காலத்தை மட்டும் காட்டுமே தவிர திணை, பால், எண் ஆகிய வேறுபாட்டைக் காட்டுவதில்லை. திராவிட மொழிகளின் வினைச்சொற்கள் இவற்றைத் தெளிவாகக் காட்டுகின்றன. எடுத்துக்காட்டு:

வந்தான் - உயர்திணை ஆண்பால் ஒருமை

இவ்வியல்புக்கு மாறாக மலையாள மொழி மட்டுமே அமைந்துள்ளது. அம்மொழியில் திணை, பால், எண் ஆகியவற்றைக் காட்டும் பாலறி கிளவிகள் இல்லை. தனிச் சொற்களாலேயே ஆண், பெண் பகுப்பை அறிந்துகொள்ள முடியும்.

இவ்வாறு திராவிடமொழிகள் சில பொதுப்பண்புகளைப் பெற்றிருந்தாலும் அவற்றுள் தமிழுக்கென்று சில சிறப்புக் கூறுகளும் தனித்தன்மைகளும் உள்ளன.

காலந்தோறும் தமிழின் வரிவடிவ வளர்ச்சி

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 5 22/05/18 6:56 PM

சில திராவிடமொழிகளின் பழமையான இலக்கிய இலக்கணங்கள்

மொழி	இலக்கியம்	காலம்	இலக்கணம்	காலம்	ஆதாரம்
தமிழ்	சங்க இலக்கியம்	பொ.ஆ.மு. 5 – பொ.ஆ.பி. 2ஆம் நூற்றாண்டு அளவில்	தொல்காப்பியம்	பொ.ஆ.மு. 3ஆம் நூற்றாண்டு அளவில்	தமிழ் இலக்கிய வரலாறு (மு.வ.) சாகித்திய அகாதெமி
கன்னடம்	கவிராஜ மார்க்கம்	பொ.ஆ.பி. 9ஆம் நூற்றாண்டு	கவிராஜ மார்க்கம்	பொ.ஆ.பி. 9ஆம் நூற்றாண்டு	இந்திய இலக்கணக் கொள்கைகளின் பின்னணியில் தமிழ் இலக்கணம் – செ. வை. சண்முகம்
தெலுங்கு	பாரதம்	பொ.ஆ.பி. 11ஆம் நூற்றாண்டு	ஆந்திர பாஷா பூஷணம்	பொ.ஆ.பி. 12ஆம் நூற்றாண்டு	
மலையாளம்	ராம சரிதம்	பொ.ஆ.பி. 12ஆம் நூற்றாண்டு	லீலா திலகம்	பொ.ஆ.பி. 15ஆம் நூற்றாண்டு	மலையாள இலக்கிய வரலாறு – சாகித்திய அகாதெமி

திராவிட மொழிகளில் சொல் ஒற்றுமை

தமிழ்	மலையாளம்	தெலுங்கு	கன்னடம்	துளு	கூர்க்
மரம்	மரம்	மானு	மரம்	மர	மர
ஒன்று	ஒண்ணு	ஒகடி	ஒந்து	ஒஞ்சி	---------
நூறு	நூறு	நூரு	நூரு	நூது	---------
நீ	நீ	நீவு	நீன்	ஈ	நின்
இரண்டு	ஈர்ரெண்டு	ஈர்ரெண்டு	எரடு	ரட்டு	------
நான்கு	நால், நாங்கு	நாலுகு	நாலு	நாலு	------
ஐந்து	அஞ்சு	ஐது	ஐது	ஐனு	-------

டாக்டர் கால்டுவெல்லின் திராவிடமொழிகளின் ஒப்பிலக்கணம்

தமிழின் தனித்தன்மைகள்

1. தொன்மையும் இலக்கண இலக்கியவளமும் உடையது தமிழ் மொழியாகும்.

2. இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா, பிஜித்தீவு ஆகிய நாடுகளில் மட்டுமல்லாமல் தென்ஆப்பிரிக்கா, மொரிஷியஸ், இங்கிலாந்து, கயானா, மடகாஸ்கர், ட்ரினிடாட், ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளிலும் பேசப்படும் பெருமையுடையது தமிழ் மொழி.

3. ஏனைய திராவிட மொழிகளை விடவும் தமிழ்மொழி தனக்கெனத் தனித்த

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 6 22/05/18 6:56 PM

தெரியுமா ?

மொரிசியஸ், இலங்கை உள்ளிட்ட நாடுகளின் பணத்தாளில் தமிழ்மொழி இடம்பெற்றுள்ளது.

இலக்கணவளத்தைப் பெற்றுத் தனித்தியங்கும் மொழியாகும்.

4. திராவிட மொழிகளுள் பிற மொழித் தாக்கம் மிகவும் குறைந்ததாகக் காணப்படும் மொழி தமிழேயாகும்.

5. தமிழ்மொழி, திராவிட மொழிகள் சிலவற்றின் தாய்மொழியாகக் கருதப்படுகிறது.

6. ஒரேபொருளைக் குறிக்கப் பலசொற்கள் அமைந்த சொல்வளமும் சொல்லாட்சியும் நிரம்பப் பெற்ற மொழி தமிழேயாகும்.

7. இந்தியாவின் தொன்மையான கல்வெட்டுகளில் பெரும்பாலானவை தமிழிலேயே அமைந்துள்ளன.

8. தமிழின் பல அடிச்சொற்களின் ஒலியன்கள், ஒலி இடம்பெயர்தல் என்ற விதிப்படி பிற திராவிட மொழிகளில் வடிவம் மாறியிருக்கின்றன. சுட்டுப்பெயர்களும் மூவிடப்பெயர்களும் பெரும்பாலும் குறிப்பிடத் தக்க மாற்றங்களைப் பெற்றிருக்கின்றன.

திராவிட மொழிக்குடும்பத்தின் தொன்மையான மூத்த மொழியாகத் திகழ்கின்ற தமிழ், பிற திராவிட மொழிகளைவிட ஒப்பியல் ஆய்வுக்குப் பெருந் துணையாக அமைந்துள்ளது.

தமிழ் மொழி மூலத்திராவிட மொழியின் பண்புகள் பலவற்றையும் பேணிப் பாதுகாத்து வருகிறது. அத்துடன் தனித்தன்மை மாறுபடாமல் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்டதாகவும் தமிழ்மொழி விளங்கி வருகிறது.

கற்பவை கற்றபின்...

3YV5PS

1. உங்கள் பெயருக்கான விளக்கம் தெரியுமா? உங்கள் பெயரும் உங்கள் நண்பர் பெயரும் தனித்தமிழில் அமைந்துள்ளதா? கண்டறிக.

2. பயன்பாட்டில் எவ்வாறெல்லாம் தமிழ்மொழியின் வேர்ச்சொற்கள், வடிவ மாற்றம் பெறுகின்றன என்பது குறித்து வகுப்பில் கலந்துரையாடுக .

(எ.கா.) செய் – செய்தாள், செய்கிறாள், செய்வாள், செய்து, செய்த, செய்வீர், செய்கிறோம்

வா – .....

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 7 22/05/18 6:56 PM

கவிதைப் பேழை

இயல் ஒன்று

தமிழோவியம்

நுழையும்முன்

என்றென்றும் நிலைபெற்ற தமிழே! தோற்றத்தில் தொன்மையும் நீதான்! தொழில்நுட்பத்தை ஏற்ற புதுமையும் நீதான்! அறியும் இலக்கணம் தந்ததும் நீதான்! அரிய இலக்கணம் கொண்டதும் நீதான்! காலந்தோறும் உன்னைப் புதுப்பித்துக் கொண்டு கணினித் தமிழாய் வலம் வருகிறாய்! ஆதிமுதல் எல்லாமுமாய் இலங்குகிற உன்னைத் தமிழோவியமாகக் கண்டு மகிழ்கிறோம்!



காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! எந்தக்
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!

அகமாய்ப் புறமாய் இலக்கியங்கள் – அவை
அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள்
நிகரிலாக் காப்பியப் பூவனங்கள் – உன்
நெஞ்சம் நடத்தட்டும் ஊர்வலங்கள்!
– காலம் பிறக்கும் முன்....

ஏனிவ் விருட்டெனக் கேட்டுவரும் – நீதி
ஏந்திய தீபமாய்ப் பாட்டுவரும்
மானிட மேன்மையைச் சாதித்திடக் – குறள்
மட்டுமே போதுமே ஓதி, நட...
– காலம் பிறக்கும் முன்....

எத்தனை எத்தனை சமயங்கள் – தமிழ்
ஏந்தி வளர்த்தது தாயெனவே
சித்தர் மரபிலே தீதறுக்கும் – புதுச்
சிந்தனை வீச்சுகள் பாய்ந்தனவே...
– காலம் பிறக்கும் முன்...

விரலை மடக்கியவன் இசையில்லை – எழில்
வீணையில் என்று சொல்வதுபோல்
குறைகள் சொல்வதை விட்டுவிட்டுப் புதுக்
கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய்!

– ஈரோடு தமிழன்பன்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 8 22/05/18 6:56 PM

இலக்கணக்குறிப்பு

எத்தனை எத்தனை, விட்டு விட்டு – அடுக்குத் தொடர்கள்

ஏந்தி – வினையெச்சம்

காலமும் – முற்றும்மை

பகுபத உறுப்பிலக்கணம்

வளர்ப்பாய் – வளர் + ப் + ப் + ஆய்

வளர் – பகுதி

ப் – சந்தி, ப் – எதிர்கால இடைநிலை

ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

நூல் வெளி

ஈரோடு தமிழன்பன் எழுதிய தமிழோவியம் என்னும் நூலில் இடம்பெற்றுள்ள கவிதை இது. இக்கவிதை குறித்துக் கவிஞர் முன்னுரையில் "ஒரு பூவின் மலர்ச்சியையும் ஒரு குழந்தையின் புன்னகையையும் புரிந்துகொள்ள அகராதிகள் தேவைப்படுவதில்லை. பாடலும் அப்படித்தான்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

ஈரோடு தமிழன்பன் புதுக்கவிதை, சிறுகதை முதலான பல வடிவங்களிலும் படைப்புகளை வெளியிட்டுள்ளார். ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ எனப் புதுப்புது வடிவங்களில் கவிதை நூல்களைத் தந்துள்ளார். இவரது 'வணக்கம் வள்ளுவ' என்னும் கவிதை நூலுக்கு 2004ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது. 'தமிழன்பன் கவிதைகள்' தமிழக அரசின் பரிசுபெற்ற நூல். இவரது கவிதைகள் இந்தி, உருது, மலையாளம், ஆங்கிலம் உள்ளிட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

தெரிந்து தெளிவோம்

இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும்

– பிங்கல நிகண்டு

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்

– பாரதியார்

தெரியுமா?

உலகத் தாய்மொழி நாள்
பிப்ரவரி 21

தமிழை ஆட்சி மொழியாகக் கொண்ட நாடுகள்

இலங்கை, சிங்கப்பூர்

கற்பவை கற்றபின்...

1. *பிறமொழிக் கலப்பின்றித் தனித்தமிழில் இரண்டு மணித்துளிகள் வகுப்பறையில் பேசுக.*
2. ***கவிதையைத் தொடர்க.***

அன்னை சொன்ன மொழி
ஆதியில் பிறந்த மொழி
இணையத்தில் இயங்கும் மொழி
ஈடிலாத் தொன்மை மொழி
உலகம் போற்றும் மொழி
ஊர்கூடி வியக்கும் மொழி

……

……

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 9 22/05/18 6:56 PM

கவிதைப் பேழை

இயல் ஒன்று

தமிழ்விடு தூது

தமிழின் பெருமையைப் பாடக் கவிஞர்கள் கையாளும் உத்திகள் பற்பல. கவிதை, அதற்கொரு கருவி. கிளி, அன்னம், விறலி, பணம், தந்தி என்று பல தூது வாயில்களைப்பற்றி அறிந்துள்ளோம். தமிழையே தூதுப் பொருளாக்கியுள்ளது 'தமிழ்விடு தூது'. தமிழின் இனிமை, இலக்கிய வளம், பாச்சிறப்பு, சுவை, அழகு, திறம், தகுதி ஆகியன இச்சிற்றிலக்கியத்தில் விரவியுள்ளன.

சீர்பெற்ற செல்வம்

தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே – புத்திக்குள்

உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்துஉரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் – மண்ணில்

குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு
உறவுஎன்று மூன்றுஇனத்தும் உண்டோ – திறம்எல்லாம்

வந்துஎன்றும் சிந்தா மணியாய் இருந்தஉனைச்
சிந்துஎன்று சொல்லிய நாச்சிந்துமே – அந்தரமேல்*

முற்றும்உணர்ந்த தேவர்களும் முக்குணமே பெற்றார்நீ
குற்றம்இலாப் பத்துக் குணம்பெற்றாய் – மற்றொருவர்

ஆக்கிய வண்ணங்கள் ஐந்தின்மேல் உண்டோநீ
நோக்கிய வண்ணங்கள் நூறுஉடையாய் – நாக்குலவும்

ஊனரசம் ஆறுஅல்லால் உண்டோ செவிகள்உணவு
ஆன நவரசம்உண் டாயினாய் – ஏனோர்க்கு

அழியா வனப்பு ஒன்று அலது அதிகம் உண்டோ
ஒழியா வனப்புஎட்டு உடையாய்....

(கண்ணிகள் 69 – 76)

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 10 22/05/18 6:56 PM

சொல்லும் பொருளும்

குறம், பள்ளு – சிற்றிலக்கிய வகைகள்; மூன்றினம் – துறை, தாழிசை, விருத்தம் ; திறமெல்லாம் – சிறப்பெல்லாம்; சிந்தாமணி – சீவகசிந்தாமணி, சிதறாத மணி என்னும் இருபொருளையும் குறிக்கும் ; சிந்து – ஒருவகை இசைப்பாடல்.

முக்குணம் – மூன்று குணங்கள் (சத்துவம்–அமைதி, மேன்மை ஆகியவற்றைச் சுட்டும் குணம்; இராசசம் – போர், தீவிரமான செயல்களைக் குறிக்கும் குணம்; தாமசம்–சோம்பல், தாழ்மை போன்றவற்றைக் குறிக்கும் குணம்); பத்துக்குணம் – செறிவு, சமநிலை முதலிய பத்துக்குண அணிகள்.

வண்ணங்கள் ஐந்து – வெள்ளை, சிவப்பு, கறுப்பு, மஞ்சள், பச்சை; வண்ணம்நூறு – குறில், அகவல், தூங்கிசை வண்ணம் முதலாக இடை மெல்லிசை வண்ணம் ஈறாக நூறு.

ஊனரசம் – குறையுடைய சுவை; நவரசம் – வீரம், அச்சம், இழிப்பு, வியப்பு, காமம், அவலம், கோபம், நகை, சமநிலை ஆகிய ஒன்பது சுவை; வனப்பு– அழகு. அவை அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு.

பாடலின் பொருள்

இனிக்கும் தெளிந்த அமுதமாய் அந்த அமிழ்தினும் மேலான வீடுபேற்றைத் தரும் கனியே! இயல் இசை நாடகம் என, மூன்றாய்ச் சிறந்து விளங்கும் என் தமிழே! அறிவால் உண்ணப்படும் தேனே! உன்னிடம் நான் மகிழ்ந்து விடுக்கும் வேண்டுகோள் ஒன்றுள்ளது. அதைக் கேட்பாயாக.

தமிழே! உன்னிடமிருந்து குறவஞ்சி, பள்ளு என்ற நூல்களைப் பாடிப் புலவர்கள் சிறப்புக் கொள்கின்றனர். நீயும் அவற்றைப் படிக்க எடுத்துக் கொடுப்பாய். அதனால் உனக்குத் தாழிசை, துறை, விருத்தம் என்னும் மூவகைப் பாவினங்களிலும் உறவு ஏதேனும் உண்டோ?

தெரிந்து தெளிவோம்

கண்ணி – இரண்டு கண்களைப் போல் இரண்டிரண்டு பூக்களை வைத்துத் தொடுக்கப்படும் மாலைக்குக் கண்ணி என்று பெயர். அதேபோல் தமிழில் இரண்டிரண்டு அடிகள் கொண்ட எதுகையால் தொடுக்கப்படும் செய்யுள் வகை கண்ணி ஆகும்.

பாவின் திறம் அனைத்தும் கைவரப்பெற்று (பொருந்தி நின்று) என்றுமே 'சிந்தா (கெடாத) மணியாய் இருக்கும் உன்னை (இசைப்பாடல்களுள் ஒருவகையான) 'சிந்து' என்று (அழைப்பது நின் பெருமைக்குத் தகுமோ? அவ்வாறு) கூறிய நா இற்று விழும் அன்றோ?

வானத்தில் வசிக்கும் முற்றும் உணர்ந்த தேவர்கள் கூட சத்துவம், இராசசம், தாமசம் என்னும் மூன்று குணங்களையே பெற்றுள்ளார்கள். ஆனால், நீயோ பத்துக்குற்றங்கள் இல்லாமல் செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி என்னும் பத்துக்குணங்களையும் பெற்றுள்ளாய்.

மனிதரால் உண்டாக்கப்பட்ட வண்ணங்கள் வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை என ஐந்திற்குமேல் இல்லை. நீயோ புலவர்கள் கண்டடைந்த குறில், அகவல், தூங்கிசை வண்ணம் முதலாக இடைமெல்லிசை வண்ணம் ஈறாக நூறு வண்ணங்களைக் கொண்டுள்ளாய்.

நாவின்மீது பொருந்தும் குறைபாடுடைய உணவின் சுவைகள் ஆறுக்கு மேல் இல்லை. நீயோ செவிகளுக்கு விருந்தளிக்கும் ஒன்பது சுவைகளைப் பெற்றுள்ளாய். தமிழை அடையப் பெறாத மற்றையோர்க்கு அழியாத அழகு ஒன்றே ஒன்று அல்லாமல் அதிகம் உண்டோ? நீயோ நீங்காத அம்மை முதலிய அழகு எட்டினைப் பெற்றுள்ளாய்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 11 22/05/18 6:56 PM

இலக்கணக் குறிப்பு

முத்திக்கனி – உருவகம்

தெள்ளமுது – பண்புத்தொகை

குற்றமிலா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

நா – ஓரெழுத்து ஒருமொழி

செவிகள் உணவான – நான்காம் வேற்றுமைத்தொகை.

சிந்தாமணி – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

பகுபத உறுப்பிலக்கணம்

கொள்வார் – கொள் + வ் + ஆர்

கொள் – பகுதி

வ் – எதிர்கால இடைநிலை

ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி

உணர்ந்த – உணர் + த் (ந்) + த் + அ

உணர் – பகுதி

த் – சந்தி, த் – ந் ஆனது விகாரம்

த் – இறந்த கால இடைநிலை

அ – பெயரெச்ச விகுதி

நூல் வெளி

தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் 'தூது' என்பதும் ஒன்று. இது, 'வாயில் இலக்கியம்', 'சந்து இலக்கியம்' என்னும் வேறு பெயர்களாலும் அழைக்கப்படுகிறது. இது தலைவன் தலைவியர்களுள் காதல் கொண்ட ஒருவர் மற்றொருவர்பால் செலுத்தும் அன்பைப் புலப்படுத்தித் தம்முடைய கருத்திற்கு உடன்பட்டமைக்கு அறிகுறியாக 'மாலையை வாங்கிவருமாறு' அன்னம் முதல் வண்டு ஈறாகப் பத்தையும் தூது விடுவதாகக் 'கலிவெண்பா'வால் இயற்றப்படுவதாகும். தமிழ்விடு தூது, மதுரையில் கோவில்கொண்டிருக்கும் சொக்கநாதர் மீது காதல்கொண்ட பெண் ஒருத்தி, தன் காதலைக் கூறிவருமாறு தமிழ்மொழியைத் தூதுவிடுவதாக அமைந்துள்ளது. இந்நூல் 268 கண்ணிகளைக் கொண்டுள்ளது. தமிழின் சிறப்புகளைக் குறிப்பிடும் சில கண்ணிகள் இப்பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ளன. இந்நூலை 1930இல் உ.வே.சா. முதன் முதலில் பதிப்பித்தார். இதன் ஆசிரியர் யார் என அறிந்துகொள்ள இயலவில்லை.

கற்பவை கற்றபின்...

1. *நமது எண்ணங்களையும் கருத்துகளையும் எளிதாக எடுத்துரைக்க உதவுவது தமிழ்மொழி என்ற தலைப்பில் ஒரு பக்க அளவில் உரை ஒன்றை எழுதுக.*

2. *படித்துத் திரட்டுக.*

"காதொளிரும் குண்டலமும் கைக்கு வளையாபதியும் கருணை மார்பின்
மீதொளிர் சிந்தாமணியும் மெல்லிடையில் மேகலையும் சிலம்பார் இன்பப்
போதொளிரும் திருவடியும் பொன்முடி சூளாமணியும் பொலியச் சூடி
நீதியொளிர் செங்கோலாய்த் திருக்குறளைத் தாங்குதமிழ் நீடுவாழ்க"
– கவியோகி சுத்தானந்த பாரதியார்.

இப்பாடல் காட்டும் இலக்கியங்களின் பெயர்களை வரிசைப்படுத்துக.

3Z51RF

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 12 22/05/18 6:56 PM

விரிவானம்

இயல் ஒன்று

வளரும் செல்வம்



சொற்கள் வரலாற்றைப் பேசுபவை. ஒவ்வொரு சொல்லிலும் இனத்தின், மொழியின் வரலாறு இருக்கிறது. தமிழ்ச் சொற்கள்வழி தமிழர் நாகரிகத்தையும் வாழ்வையும் அறியமுடியும். இதேபோலத் தமிழில் வழங்கும் பிறமொழிச் சொற்களும் அவைசார்ந்த இனத்தின் மொழியின் வரலாற்றைக் காட்டுகின்றன. தமிழ்மொழி, பிறமொழிச் சொற்களை அப்படியே ஏற்பதில்லை என்பது மரபு. அந்த வகையில் கலைச்சொல்லாக்கத்திற்கான பணிகள் இன்று முதன்மை பெற்றுள்ளன. இதுவே மொழி வளர்ச்சிக்கான வாயிலாகவும் உள்ளது. சொற்கள் புலப்படுத்தும் வரலாறு, பண்பாடு ஆகியவற்றை உரையாடல்வழிக் காண்போம்.

உரையாடல்

பங்கு பெறுவோர்

ஆனந்தி, மும்தாஜ், டேவிட்

டேவிட்: ஆனந்தி, தமிழில் முதல் மதிப்பெண் பெற்றுள்ளாய். என் வாழ்த்துகள்.

ஆனந்தி: நன்றி.

மும்தாஜ்: எனக்கு ஓர் ஐயம். உன்னைக் கேட்கலாமா?

ஆனந்தி: உறுதியாக! கேள் மும்தாஜ்.

மும்தாஜ்: நாமெல்லோரும் மடிக்கணினி (Laptop) பயன்படுத்துகிறோம். கணினி தொடர்பான சொற்களை அப்படியே ஆங்கிலத்தில் வழங்குகிறோமே? அவற்றுக் கெல்லாம் தமிழ்ச்சொற்கள் உள்ளனவா ஆனந்தி?

ஆனந்தி: அவ்வாறான தமிழ்ச் சொற்கள் இப்போது எங்கும் நிறைந்துள்ளன. எடுத்துக்காட்டாக

சாப்ட்வேர் [software] – மென்பொருள்

ப்ரௌசர் [browser] – உலவி

க்ராப் [crop] – செதுக்கி

கர்சர் [cursor] – ஏவி அல்லது சுட்டி

சைபர்ஸ்பேஸ் [cyberspace] – இணையவெளி

சர்வர் [server] – வையக விரிவு வலை வழங்கி

ஃபோல்டர் [Folder] – உறை

லேப்டாப் [Laptop] – மடிக்கணினி என்றெல்லாம் பயன்படுத்தத் தொடங்கி விட்டோம்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 13 22/05/18 6:56 PM

டேவிட்: எனக்கும் ஐயம் இருக்கிறது.

ஆனந்தி: சொல் டேவிட்.

டேவிட்: கணிதத்தில் ஒன்று, பத்து, ஆயிரம் ஆகிய எண்ணிக்கைகளுக்கான தமிழ்ச்சொற்கள் எனக்குத் தெரியும். 1/320, 1/160 ஆகிய எண்ணிக்கைகளுக்கான தமிழ்ச் சொற்களை எனக்குச் சொல்வாயா?

மும்தாஜ்: சொல். நானும் கேட்கிறேன்.

ஆனந்தி:

பெயர்	எண் அளவு
முந்திரி	1/320
அரைக்காணி	1/160
அரைக்காணி முந்திரி	3/320
காணி	1/80
கால் வீசம்	1/64
அரைமா	1/40
அரை வீசம்	1/32
முக்காணி	3/80
முக்கால் வீசம்	3/64
ஒருமா	1/20
மாகாணி (வீசம்)	1/16
இருமா	1/10
அரைக்கால்	1/8
மூன்றுமா	3/20
மூன்று வீசம்	3/16
நாலுமா	1/5

போன்ற பின்ன இலக்கங்களுக்கும் தமிழ்ச்சொற்கள் உள்ளன.

டேவிட்: இவையெல்லாம் புழக்கத்தில் இருந்திருந்தால் நம் எல்லோருக்கும் தெரிந்திருக்கும் இல்லையா?

ஆனந்தி: ஆம். நம் முன்னோர்கள் பயன்படுத்திய சொற்களைக் கால மாற்றத்தில் கைவிட்டுவிட்டோம். நாம் நினைத்தால் அவற்றை மீட்டெடுக்கலாம். என்ன யோசனை மும்தாஜ்?

மும்தாஜ்: நீ சொல்வதெல்லாம் நன்றாகப் புரிகிறது. இவ்வளவு வளர்ச்சி பெற்ற நாம் ஏன் கணினித்துறைச் சொற்களை ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கிறோம்?

ஆனந்தி: நல்ல கேள்வி மும்தாஜ். ஒரு துறை எங்கு வளர்க்கப்படுகிறதோ அங்குள்ள மொழி, அத்துறையில் செல்வாக்குப் பெற்றிருக்கும். அத்துறையைப் பெறுபவர்கள் அது சார்ந்த மொழிக்கூறுகளைத் தம் மொழியில் மாற்ற வேண்டும்.

மும்தாஜ்: ஏன் மாற்ற வேண்டும்?

ஆனந்தி: வேற்று மொழிச்சொற்களை எளிதாக நாம் நினைவில் வைத்துக்கொள்ள முடியாது. அவ்வாறு நினைவில் வைத்துக் கொள்வதற்கு மேலும் நேரத்தைச் செலவிட வேண்டும். நம் சிந்தனை வேகத்தையும் இது மட்டுப்படுத்தும். சொற்கள் அந்தந்த மொழி பேசுவோரின் பேச்சுறுப்புகளுக்கு ஏற்ப அமைந்தவை. அவற்றை நாம் பேசும்போது ஒலித்திரிபு ஏற்பட்டுப் பொருள்மயக்கம் உண்டாகும். கேட்போர்க்குப் பொருள்புரியாத நிலை ஏற்படும்.

இது ஒருபுறமிருக்க ஒரு காலகட்டத்தில் தாய்மொழி சார்ந்த சொற்களின் எண்ணிக்கையைவிட வேற்று மொழிச் சொற்களின் எண்ணிக்கை மிகுதியாகும். எனவேதான் நம் வாழ்க்கையில் இடம்பெறும் அறிவியல் கருத்துகளுக்கான கலைச்சொற்களை எல்லாம் நம் மொழியிலும் உருவாக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது.

டேவிட்: ஆமாம். கலைச்சொற்களை ஒலிபெயர்ப்புச் செய்தோ மொழிபெயர்ப்புச் செய்தோ உருவாக்கலாம் என எங்கோ படித்திருக்கிறேன். ஆனாலும், எனக்கோர் ஐயம்.

ஆனந்தி: என்ன?

டேவிட்: வளர்ந்த துறைகளுக்கான சொற்களை வேற்று மொழிகளிலிருந்து

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 14 22/05/18 6:56 PM

தமிழ் மொழி பெறுவதைப் போன்று, வேற்று மொழிகள் தமிழிலிருந்து பெற்றுள்ளனவா?

ஆனந்தி: பெற்றுள்ளன டேவிட். தமிழர்கள் பழங்காலத்திலேயே கடல்துறையில் பெரும் முன்னேற்றம் அடைந்திருந்தனர். சங்க இலக்கியத்தில் நாவாய், வங்கம், தோணி, கலம் போன்ற பலவகையான கடற்கலன்கள் இயக்கப்பட்டதற்கான குறிப்புகள் உள்ளன. இதில் தமிழ்ச்சொல்லாகிய நாவாய் என்பதே ஆங்கிலத்தில் நேவி என ஆகியுள்ளது டேவிட்.

மும்தாஜ்: தமிழரின் கடல் ஆளுமை சார்ந்த வேறு எவ்வகைச் சொற்கள் எந்தெந்த மொழிகளில் இடம்பெற்றுள்ளன ஆனந்தி?

ஆனந்தி: உலகின் தொன்மையான மொழியாகவும் செவ்வியல் மொழியாகவும் திகழ்வது கிரேக்க மொழியாகும். இம் மொழியின் கடல் சார்ந்த சொற்களில்

எதிரை (Ερέτης [எரெதிரான்]), கலம் (Γαύκου [கலயுகோய்]), நீர் (Νηρός [நீரோஸ்]), Νηρία [நீரிய], நாவாய் (Ναύ [நாயு]), தோணி (Θόνις [தோணிஸ்])

போன்ற தமிழ்ச் சொற்கள் இடம்பெற்றுள்ளன.

மும்தாஜ்: மிக வியப்பாக இருக்கிறது. கடல் சார்ந்த சொற்கள் மட்டும்தாம் தமிழிலிருந்து வேற்று மொழிகளுக்குச் சென்றுள்ளனவா?

ஆனந்தி: இல்லை மும்தாஜ், பல்வேறு துறை சார்ந்த தமிழ்ச்சொற்களும் வேற்று மொழிகளுக்குச் சென்றுள்ளன.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 15 22/05/18 6:56 PM

டேவிட்: இதைக் கேட்பதற்கு மிக ஆவலாக உள்ளது. விரிவாகக் கூறுகிறாயா?

ஆனந்தி: கடல் சார்துறையில் மட்டுமல்லாது பண்டைத் தமிழர்கள் கவிதையிலும் முன்னேற்றம் பெற்றிருந்தனர். கவிதை சார்ந்த சொற்களைத் தமிழிலும் கிரேக்க மொழியிலும் ஒப்பாகக் காணமுடிகிறது.

தமிழில் பா என்றால் என்னவென்று உனக்குத் தெரியும். இச்சொல் கிரேக்க மொழியின் தொன்மையான காப்பியமாகிய இலியாத்தில் பாய்யியோனா (παιήονα) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்போலோ என்னும் கடவுளுக்குப் பாடப்படுவது 'பா' எனக் கிரேக்கத்தில் குறிக்கப்படுகிறது.

பா வகைகளுள் ஒன்று வெண்பா என்பது உனக்குத் தெரியும். வெண்பாவின் ஓசையானது செப்பலோசை ஆகும். கிரேக்கத்தில் வெண்பா வடிவப் பாடல்கள் சாப்போ என அழைக்கப்படுகின்றன.

இது கிரேக்கத்திலிருந்து இலத்தீன் மொழிக்கு வந்து பின் ஆங்கிலத்தில் சேப்பிக் ஸ்டேன்சா என இன்று வழங்கப்படுகிறது.

பாவின் சுவைகளில் ஒன்றாக இளிவரல் என்ற துன்பச் சுவையினைத் தமிழிலக்கணங்கள் சுட்டுகின்றன. கிரேக்கத்தில் துன்பச் சுவையுடைய பாடல்கள் இளிகியா (ελεγεία) என அழைக்கப்படுகின்றன.

டேவிட்: நீ கூறும் இலியாத் காப்பியம் கி.மு. எட்டாம் நூற்றாண்டைச் சார்ந்தது அல்லவா?

ஆனந்தி: ஆமாம்.

டேவிட்: இன்று வேற்று நாட்டினருடன் தொடர்புகொள்வதற்குக் கணினி உள்ளது, சென்றுவர வானூர்தி உள்ளது. அன்றைய காலகட்டத்தில் அவர்கள் எவ்வாறு தகவல் தொடர்புகொண்டிருந்தனர் ஆனந்தி?

ஆனந்தி: நல்ல கேள்வி. நான் முன்னரே தமிழரின் கடல் ஆளுமை பற்றி விளக்கினேன் அல்லவா. தமிழரும் கிரேக்கரும் கடல்வழியாகவும் தொடர்புகொண்டனர்.

மும்தாஜ்: விளக்கமாகச் சொல் ஆனந்தி.

ஆனந்தி: கிரேக்கத்திலிருந்து தமிழ்நாட்டிற்குக் கடலில் எவ்வழியாக வரவேண்டும் என்பதைக் கிரேக்க நூலொன்று விளக்குகிறது.

டேவிட்: எவ்வளவு வியப்பாக உள்ளது. இந்நூலில் தமிழ்நாடு பற்றியெல்லாம் குறிப்பிடப்பட்டுள்ளதா ஆனந்தி?

ஆனந்தி: ஆம். குறிப்பிடப்பட்டுள்ளது டேவிட். அவ்வளவு ஏன், எறிதிரேசியன் ஆப் த பெரிபுலஸ் (*Periplus of the Erythraean Sea*) என்னும் இந்நூலின் பெயரிலேயே தமிழ்ச்சொல் இருப்பதாகக் கூறுகின்றனர்.

மும்தாஜ்: அப்படியா? என்ன சொல் அது?

ஆனந்தி: எறிதிரை என்பதுதான் அது. கடலைச் சார்ந்த பெரிய புலம் என்பதே எறிதிரேசியன் ஆப் த பெரிபுலஸ் என ஆகியுள்ளது. இதுபோல் தொல்தமிழின் வளர்ச்சி தொடரவும் நிலைத்திருக்கவும் நம்மாலான பணிகளைச் செய்ய வேண்டும்.

டேவிட்: நம் தமிழ்மொழி நிலைத்திருக்க நாம் என்ன செய்ய வேண்டும்?

ஆனந்தி: வளர்ந்துகொண்டிருக்கும் அறிவியல் துறைக் கலைச்சொற்களை உடனுக்குடன் தமிழ்மொழியில் மொழி பெயர்த்து அத்துறைகளை மேலும் வளர்க்க வேண்டும். அப்போதுதான் நம் தமிழ்மொழி அறிவுக்கான கருவியாக மாறும். தமிழில் உள்ள தத்துவம், அரசியல் ஆகிய துறைகளின் சிந்தனைகளை எல்லாம் பிற மொழிகளுக்குக் கொண்டு செல்லவேண்டும். இதுவும் நம் தமிழ்மொழி நிலைத்திருக்க நாம் செய்யவேண்டிய இன்றியமையாத பணியாகும்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 16 22/05/18 6:56 PM

மும்தாஜ்: ஆமாம்... ஆமாம். சரியாகச் சொன்னாய்.

நம்மொழி தொடர்ந்து நிலைத்திருக்க வேண்டுமானால் வளர்ந்துவரும் மருத்துவம், பொறியியல், கணினி, விண்வெளி போன்ற பிறதுறைகளின் பதிவுகள் எல்லாம் உடனுக்குடன் நம் மொழிக்குக் கொண்டுவரப்பட வேண்டும். நம்மொழியில் புதிய புதிய சொல்வளம் பெருகவேண்டும்.

ஆனந்தி: நன்றாகச் சொன்னாய் மும்தாஜ். நாமும் நம்மாலான பணிகளைத் தொடர்ந்து செய்வோம்.

டேவிட், மும்தாஜ்: ஆம். அப்படியே செய்வோம்.

(மூவரும் விடைபெற்றுச் சென்றனர்)

கற்பவை கற்றபின்...

1. நீங்கள் நாள்தோறும் வகுப்பறையில் மிகுதியாகப் பயன்படுத்தும் சொற்களைப் பட்டியலிட்டு, அவற்றில் இடம்பெற்றுள்ள பிறமொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச்சொற்களை அறிந்து எழுதுக.

சொற்பட்டியல்	பிறமொழிச் சொற்கள்	நிகரான தமிழ்ச் சொற்கள்
வகுப்பு, புத்தகம், பிளாக் போர்டு, பேனா, பென்சில், நோட்டு,	ப்ளாக்போர்டு (BLACK BOARD)	கரும்பலகை
.....	.....	.....
.....	.....	.....

2. உரையாடலை நிறைவு செய்க. அவற்றுள் இடம்பெறும் பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்துக.

அருண் : ஹலோ! நண்பா!

நளன் : .....

அருண் : ஆமாம்! டென் இயர்ஸ் ஆச்சு இல்லையா?

நளன் : ஆமாம். நான் இப்ப மல்ட்டி நேஷனல் கம்பெனி ஒன்றில் பிராஜக்ட் மேனேஜரா இருக்கேன். நீ?

அரண் : .....

நளன் : அந்த காலேஜ்லதான் என் தம்பி பஸ்டு இயர் படிக்கிறான்.

அருண் : .....

நளன் : பை! பை!

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 17 22/05/18 6:56 PM

கற்கண்டு

இயல் ஒன்று

தொடர் இலக்கணம்

எட்வர்டு வந்தான்.

இந்தச் சொற்றொடரில் பெயர்ச்சொல், எட்வர்டு என்பதாகும். இந்தச் சொற்றொடர் எழுவதற்கு அடிப்படையாக அமைந்த பெயர்ச்சொல்லையே எழுவாய் என்கிறோம்.

கனகாம்பரம் பூத்தது.

இந்தச் சொற்றொடரில் வினைச்சொல், பூத்தது. இந்த வினைச்சொல்லே பயனிலை ஆகும். ஒரு தொடரில் பயன் நிலைத்து இருக்கும் இடத்தைப் பயனிலை என்கிறோம்.

மீனா கனகாம்பரத்தைச் சூடினாள்.

இத்தொடரில், சொற்றொடர் எழுவதற்குக் காரணமாக அமைந்த மீனா என்னும் பெயர்ச்சொல்லே எழுவாய் ஆகும். அவ்வெழுவாயின் பயனிலை சூடினாள் என்பதாகும். எனில், மற்றொரு பெயர்ச்சொல்லான கனகாம்பரம் என்பது யாது? அது செயப்படுபொருள் என்று அழைக்கப்படுகிறது. எழுவாய் ஒரு வினையைச் செய்ய அதற்கு அடிப்படையாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருளே, செயப்படுபொருள் ஆகும்.

ஒரு தொடரில் எழுவாயும், செயப்படு பொருளும் பெயர்ச்சொல்லாகவும் பயனிலை வினைமுற்றாகவும் இருக்கும். பயனிலை, அந்தத் தொடரின் பயன் நிலைத்து இருக்கும் இடமாகும். ஒரு தொடரில் செயப்படுபொருள் இருக்க வேண்டும் என்கிற கட்டாயம் இல்லை. செயப்படுபொருள் தோன்றும் தொடர், விளக்கமாக இருக்கும்.

படித்தாய்.

இத்தொடரில் படித்தாய் என்பது பயனிலை. நீ என்னும் எழுவாய் வெளிப்படையாகத் தெரியவில்லை. இதைத் தோன்றா எழுவாய் என்று கூறுகிறோம்.

நான் வந்தேன்.

இத்தொடரில் வினைமுற்று பயனிலையாக வந்தது. இது வினைப் பயனிலை எனப்படும்.

சொன்னவள் கலா.

இங்கு கலா என்னும் பெயர்ச்சொல் பயனிலையாக வந்துள்ளது. இது பெயர்ப் பயனிலை எனப்படும்.

விளையாடுபவன் யார்?

இங்கு யார் என்னும் வினாச்சொல் பயனிலையாக வந்துள்ளது. இது வினாப் பயனிலை எனப்படும்.

சில இடங்கள் தவிர, ஒரு சொற்றொடரில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் மூன்றும் இந்த வரிசையில்தான் வரவேண்டும் என்று எந்தக் கட்டுப்பாடும் இல்லை. தமிழின் தொடர் அமைப்பின் சிறப்புகளுள் இதுவும் ஒன்று.

எடுத்துக்காட்டு: நான் பாடத்தைப் படித்தேன் (எழுவாய், செயப்படுபொருள், பயனிலை)

பாடத்தை நான் படித்தேன் (செயப்படுபொருள், எழுவாய், பயனிலை)

படித்தேன் நான் பாடத்தை (பயனிலை, எழுவாய், செயப்படுபொருள்)

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 18 22/05/18 6:56 PM

நான் படித்தேன் பாடத்தை (எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்)

பாடத்தைப் படித்தேன் நான் (செயப்படுபொருள், பயனிலை, எழுவாய்)

அன்பரசன் நல்ல பையன்.

இத்தொடரில் நல்ல என்னும் சொல், எழுவாயாக வரும் பெயர்ச்சொல்லுக்கு அடையாக வருகிறது. இவ்வாறு அமைவதனைப் பெயரடை என்கிறோம்.

மகிழ்நன் மெல்ல வந்தான்.

இத்தொடரில் மெல்ல என்னும் சொல், வந்தான் என்னும் வினைப் பயனிலைக்கு அடையாக வருகிறது. இதை வினையடை என்கிறோம்.

வினை வகைகள் – தன்வினை, பிறவினை, காரணவினை

மாணவர்கள் கால்பந்து விளையாடிக்கொண்டிருக்கின்றார்கள். எங்கும் விளையாட்டு, மகிழ்ச்சியின் ஆரவாரம். கண்ணன் முகமதுவை நோக்கி, "பந்தை என்னிடம் உருட்டு" என்று கத்தினான். முகமது பந்தைக் கண்ணனிடம் உருட்டினான். பந்து உருண்டது. கண்ணன் முகமது மூலம் பந்தை உருட்டவைத்தான்.

மேற்கண்ட சூழலில்,

பந்து உருண்டது என்பது தன்வினை.

பந்தை உருட்டினான் என்பது பிறவினை.

உருட்டவைத்தான் என்பது காரணவினை.

வினையின் பயன் எழுவாயைச் சேருமாயின் அது தன்வினை எனப்படும்.

வினையின் பயன் எழுவாயையன்றிப் பிறிதொன்றைச் சேருமாயின் பிறவினை எனப்படும். எழுவாய் தானே வினையை நிகழ்த்தாமல், வினை நிகழ்வதற்குக் காரணமாக இருப்பது காரணவினை எனப்படும்.

காரணவினைகள், வி, பி போன்ற விகுதிகளைக் கொண்டும் செய், வை, பண்ணு போன்ற துணை வினைகளை இணைத்தும் உருவாக்கப்படுகின்றன.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 19 22/05/18 6:56 PM

தன்வினை	பிறவினை	காரணவினை
நடந்தான்	நடத்து	நடத்தச் செய்தார்
அடங்கு திருந்தினான்	அடக்கு திருத்தினான்	அடக்கச் செய்தாள் திருந்தச்செய்தான்
ஆடினான் மாறுவாள்	ஆட்டினான் மாற்றுவாள்	ஆட்டுவித்தான் / ஆடவைத்தான் மாற்றுவித்தாள் / மாறச்செய்தாள்
செய்தான் வா	செய்வித்தான் வருவி	செய்யவைத்தான் வரவைத்தார்
காண் ஆடு	காட்டு ஆட்டு	காட்டுவி ஆட்டுவி

செய்வினை, செயப்பாட்டுவினை

அப்பா சொன்னார், "குமுதா, இலையில் உள்ள இட்டிலியை விரைந்து சாப்பிடு. அடுத்து தோசை வரப்போகிறது." அவள் சாப்பிட்டு முடிப்பதற்குள், தோசை வைக்கப்பட்டது.

அப்பா சொன்னார் – செய்வினைத் தொடர்

தோசை வைக்கப்பட்டது – செயப்பாட்டுவினைத் தொடர்

இது போலவே, பாட்டுப் பாடுகிறாள் – செய்வினைத் தொடர்

பாட்டுப் (அவளால்) பாடப்பட்டது – செயப்பாட்டுவினைத் தொடர்

'படு' என்னும் துணை வினைச்சொல் செயப்பாட்டு வினைத்தொடரில் சேர்ந்துவிடுகிறது.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 20 22/05/18 6:56 PM

'படு' என்பதைப் போல, 'உண், பெறு' முதலான துணைவினைகள் செயப்பாட்டு வினைகளாக அமைகின்றன. அவற்றைப் போலவே, எச்சங்களுடன் சேர்ந்து 'ஆயிற்று, போயிற்று, போனது' முதலான துணை வினைகள் செயப்பாட்டுவினைகளை உருவாக்குகின்றன.

கோவலன் கொலையுண்டான்.

ஓவியம் குமரனால் வரையப்பட்டது.

வீடு கட்டியாயிற்று.

சட்டி உடைந்து போயிற்று.

பணம் காணாமல் போனது.

தெரிந்து தெளிவோம்

செய்பவரை முதன்மைப்படுத்தும் வினை செய்வினை; செயப்படுபொருளை முதன்மைப்படுத்தும் வினை செயப்பாட்டு வினை என்பதை நினைவில் கொள்க.

தொடர் வகைகள்

மன்னன் வந்தான்	*எழுவாய்த் தொடர்*
வந்தான் மன்னன்	*வினைமுற்றுத் தொடர்*
அண்ணனோடு வருவான்	*வேற்றுமைத் தொடர் (ஓடு – வேற்றுமை உருபு)*
நண்பா கேள்	*விளித் தொடர்*
உண்ணச் சென்றான்	*தெரிநிலை வினையெச்சத் தொடர்*
நன்கு பேசினான்	*குறிப்பு வினையெச்சத் தொடர் (வினையடைத் தொடர்)*
பாடும் குயில்	*தெரிநிலைப் பெயரெச்சத் தொடர்*
இனிய காட்சி	*குறிப்புப் பெயரெச்சத் தொடர் (பெயரடைத் தொடர்)*
பாம்பு பாம்பு வா வா வா	*அடுக்குத் தொடர்*

பயன்பாட்டுத் தொடர்கள்

அப்துல் நேற்று வந்தான்	*தன்வினைத் தொடர்*
அப்துல் நேற்று வருவித்தான்	*பிறவினைத் தொடர்*
கவிதா உரை படித்தாள்	*செய்வினைத் தொடர்*
உரை கவிதாவால் படிக்கப்பட்டது	*செயப்பாட்டுவினைத் தொடர்*
குமரன் மழையில் நனைந்தான்	*உடன்பாட்டுவினைத் தொடர்*
குமரன் மழையில் நனையவில்லை	*எதிர்மறைவினைத் தொடர்*

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 21 22/05/18 6:56 PM

என் அண்ணன் நாளை வருவான்	செய்தித் தொடர்
எவ்வளவு உயரமான மரம்!	உணர்ச்சித் தொடர்
உள்ளே பேசிக்கொண்டிருப்பவர் யார்?	வினாத் தொடர்
பூக்களைப் பறிக்காதீர்	கட்டளைத் தொடர்
இது நாற்காலி அவன் மாணவன்	பெயர்ப் பயனிலைத் தொடர்

கற்பவை கற்றபின்...

1. தொடர்களை மாற்றி உருவாக்குக.

அ) பதவியைவிட்டு நீக்கினான் - இத்தொடரைத் தன்வினைத் தொடராக மாற்றுக.

ஆ) மொழியியல் அறிஞர்கள் திராவிட மொழிகளை ஆய்வு செய்தனர்– இத்தொடரைப் பிறவினைத் தொடராக மாற்றுக.

இ) உண்ணப்படும் தமிழ்த்தேனே – இத்தொடரை செய்வினைத் தொடராக மாற்றுக.

ஈ) திராவிட மொழிகளை மூன்று மொழிக் குடும்பங்களாகப் பகுத்துள்ளனர் – இத்தொடரை செயப்பாட்டுவினைத் தொடராக மாற்றுக.

உ) நிலவன் சிறந்த பள்ளியில் படித்தார் – இத்தொடரைக் காரணவினைத் தொடராக மாற்றுக.

2. சொற்களைத் தொடர்களாக மாற்றுக.

அ) மொழிபெயர் – தன்வினை, பிறவினைத் தொடர்களாக.

ஆ) பதிவுசெய் – செய்வினை, செயப்பாட்டுவினைத் தொடர்களாக.

இ) பயன்படுத்து – பிறவினை, காரணவினைத் தொடர்களாக.

ஈ) இயங்கு - செய்வினை, செயப்பாட்டுவினைத் தொடர்களாக.

3. பொருத்தமான செயப்படுபொருள் சொற்களை எழுதுக.

(தமிழிலக்கிய நூல்களை, செவ்விலக்கியங்களை , நம்மை, வாழ்வியல் அறிவை)

அ) தமிழ் ..... கொண்டுள்ளது.

ஆ) நாம் _____ வாங்கவேண்டும்.

இ) புத்தகங்கள் _____ கொடுக்கின்றன.

ஈ) நல்ல நூல்கள் _____ நல்வழிப்படுத்துகின்றன.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 22 22/05/18 6:56 PM

4. பொருத்தமான பெயரடைகளை எழுதுக.

(நல்ல, பெரிய, இனிய, கொடிய)

அ) எல்லோருக்கும் _____ வணக்கம்.

ஆ) அவன் _____நண்பனாக இருக்கிறான்.

இ) _____ ஓவியமாக வரைந்து வா.

ஈ) _____ விலங்கிடம் பழகாதே.

5. பொருத்தமான வினையடைகளைத் தேர்வுசெய்க.

(அழகாக, பொதுவாக, வேகமாக, மெதுவாக)

அ) ஊர்தி _____ சென்றது.

ஆ) காலம் _____ ஓடுகிறது.

இ) சங்க இலக்கியம் வாழ்க்கையை _____ காட்டுகிறது.

ஈ) இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டதை அனைவருக்கும்____ காட்டு.

6. அடைப்புக் குறிக்குள் கேட்டுள்ளவாறு தொடர்களை மாற்றி எழுதுக.

அ) நம் முன்னோர் இயற்கையோடு இயைந்த வாழ்வு நடத்தினர். (வினாத்தொடராக)

ஆ) பாடினான். (எழுவாய்த் தொடராக)

இ) இசையின்றி அமையாது பாடல். (உடன்பாட்டுத் தொடராக)

ஈ) நீ இதைச் செய் எனக் கூறினேன் அல்லவா? (கட்டளைத் தொடராக)

7. வேர்ச்சொற்களை வைத்துச் சொற்றொடர்களை உருவாக்குக.

அ) தா (அடுக்குத் தொடர், உடன்பாட்டுவினைத் தொடர், பிறவினைத் தொடர்)

ஆ) கேள் (எழுவாய்த் தொடர், வினைமுற்றுத் தொடர், வினாத் தொடர்)

இ) கொடு (செய்தித் தொடர், கட்டளைத் தொடர், தெரிநிலை வினையெச்சத் தொடர்)

ஈ) பார் (செய்வினைத் தொடர், செயப்பாட்டுவினைத் தொடர், பிறவினைத் தொடர்)

8. சிந்தனை வினா

அ) அவை யாவும் இருக்கின்றன.

அவை யாவையும் இருக்கின்றன.

அவை யாவும் எடுங்கள்.

அவை யாவையும் எடுங்கள்.

அவை யாவற்றையும் எடுங்கள்

3ZDHT3

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 23 22/05/18 6:56 PM

மேற்கண்ட சொற்றொடர்கள் சரியானவையா? விளக்கம் தருக.

ஆ) புதிய வார இதழ் ஒன்று வெளிவரப் போகிறது. அதற்காக நாளிதழில் விளம்பரம் தருவதற்குச் சொற்றொடர்களை வடிவமைத்து எழுதுக.

இ) சொற்றொடர் வகைகளை அறிந்து, அவை எவ்வாறு பேசுவதற்கும் எழுதுவதற்கும் பயன்படுகின்றன என்பதைப் பதிவு செய்க.

ஈ) வந்திருப்பவர்கள் அனைவரும் இருக்கையில் அமருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இத்தொடர் ஆங்கிலத்திலிருந்து நேரடியான தமிழ் மொழிபெயர்ப்பாக இருந்தாலும் மொழி மரபை இத்தொடரில் பேணுகிறோமா?

உ) கீழ்க்காணும் காட்சியை விவரிக்க.

ஊ) தமிழ் எண்கள் அறிவோம்.

1	2	3	4	5	6	7	8	9	10
க	உ	ங	ச	ரு	சு	எ	அ	கூ	கம் / ய

தமிழ் எண்களில் எழுதுக.

பன்னிரண்டு	
பதின்மூன்று	
நாற்பத்து மூன்று	
எழுபத்தெட்டு	
தொண்ணூறு	

பலமொழிகளிலும்
உங்கள் பெயர் எழுதி மகிழுங்கள்

http://mylanguages.org/tamil_write.php

கலைச்சொல் அறிவோம்

உருபன் – *Morpheme*

ஒலியன் – *Phoneme*

ஒப்பிலக்கணம் – *Comparative Grammar*

பேரகராதி – *Lexicon*

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 24 22/05/18 6:56 PM

மதிப்பீடு

பலவுள் தெரிக.

1. குழுவில் விடுபட்ட வரிசையைத் தேர்ந்தெடுக்க.

குழு – 1	குழு – 2	குழு – 3	குழு – 4
நாவாய்	மரம்	துறை	தன்வினை
…….	…….	…….	…….
தோணி	மர	விருத்தம்	காரணவினை

அ. 1- வங்கம், 2- மானு, 3- தாழிசை, 4- பிறவினை

ஆ. 1- தாழிசை, 2- மானு, 3- பிறவினை, 4- வங்கம்

இ. 1- பிறவினை, 2- தாழிசை, 3- மானு, 4- வங்கம்

ஈ. 1- மானு, 2- பிறவினை, 3- வங்கம், 4- தாழிசை

3ZMSUQ

2. தமிழ் விடு தூது ……. என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.

அ. தொடர்நிலைச் செய்யுள் ஆ. புதுக்கவிதை

இ. சிற்றிலக்கியம் ஈ. தனிப்பாடல்

3. விடுபட்ட இடத்திற்குப் பொருத்தமான விடை வரிசையைக் குறிப்பிடுக.

அ. ……..இனம் ஆ. வண்ணம் …….

இ. ……..குணம் ஈ. வனப்பு …….

i) மூன்று, நூறு, பத்து, எட்டு ii) எட்டு, நூறு, பத்து, மூன்று

iii) பத்து, நூறு, எட்டு, மூன்று iv) நூறு, பத்து, எட்டு, மூன்று

4. காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே!

காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!..... இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள்-

அ. முரண், எதுகை, இரட்டைத் தொடை ஆ. இயைபு, அளபெடை, செந்தொடை

இ. எதுகை, மோனை, இயைபு ஈ. மோனை, முரண், அந்தாதி

5. அழியா வனப்பு, ஒழியா வனப்பு, சிந்தா மணி - அடிக்கோடிட்ட சொற்களுக்கான இலக்கணக்குறிப்பு –

அ. வேற்றுமைத்தொகை ஆ. ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

இ. பண்புத்தொகை ஈ. வினைத்தொகை

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 25 22/05/18 6:56 PM

குறுவினா

1. நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?
2. தமிழோவியம் கவிதையில் உங்களை மிகவும் ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக.
3. கண்ணி என்பதன் விளக்கம் யாது?
4. கணினி சார்ந்து நீங்கள் அறிந்த எவையேனும் ஐந்து தமிழ்ச் சொற்களைத் தருக .
5. அகமாய்ப் புறமாய் இலக்கியங்கள் – அவை

   அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள் – இலக்கியங்களின் பாடுபொருள்களாக இவ்வரிகள் உணர்த்துவன யாவை?
6. செய்வினையைச் செயப்பாட்டு வினையாக மாற்றும் துணைவினைகள் இரண்டினை எடுத்துக்காட்டுடன் எழுதுக.
7. வீணையோடு வந்தாள், கிளியே பேசு – தொடரின் வகையைச் சுட்டுக.

சிறுவினா

1. சங்க இலக்கியத்தில் காணப்படும் கடற்கலனுக்குரிய சொல் கிரேக்க மொழியில் எவ்வாறு மாற்றம் பெற்றுள்ளது?
2. திராவிடமொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.
3. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிட மொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?
4. காலந்தோறும் தமிழ்மொழி தன்னை எவ்வாறு புதுப்பித்துக் கொள்கிறது?
5. வளரும் செல்வம் - உரையாடலில் குறிப்பிடப்படும் பிறமொழிச்சொற்களைத் தொகுத்து அதற்கு இணையான தமிழ்ச்சொற்களைப் பட்டியலிடுக
6. தன்வினை, பிறவினை, காரணவினைகளை எடுத்துக்காட்டுகளுடன் வேறுபடுத்திக் காட்டுக.
7. புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய்- உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.

நெடுவினா

1. திராவிட மொழிகளின் ஒப்பியல் ஆய்விற்குத் தமிழே பெருந்துணையாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.
2. தூது அனுப்பத் தமிழே சிறந்தது – தமிழ்விடுதூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 26 22/05/18 6:56 PM

மொழியை ஆள்வோம்!

படித்துச் சுவைக்க.

விறகுநான்; வண்டமிழே! உன்னருள் வாய்த்த
பிறகுநான் வீணையாய்ப் போனேன்; – சிறகுநான்
சின்னதாய்க் கொண்டதொரு சிற்றீசல்; செந்தமிழே!
நின்னால் விமானமானேன் நான்!

தருவாய் நிழல்தான் தருவாய்; நிதம்என்
வருவாய் எனநீ வருவாய்; – ஒருவாய்
உணவாய் உளதமிழே! ஓர்ந்தேன்; நீ பாட்டுக்
கணவாய் வழிவரும் காற்று!

– கவிஞர் வாலி

மொழிபெயர்க்க.

1. *Linguistics* – .....
2. *Literature*– .....
3. *Philologist* – .....
4. *Polyglot* – .....
5. *Phonologist* – .....
6. *Phonetics* – .....

அடைப்புக்குள் உள்ள சொற்களைக் கொண்டு கோடிட்ட இடங்களில் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி எழுதுக.

1. இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் ..... (திகழ்)
2. வைதேகி நாளை நடைபெறும் கவியரங்கில் ..... (கலந்துகொள்)
3. உலகில் மூவாயிரம் மொழிகள் ..... (பேசு)
4. குழந்தைகள் அனைவரும் சுற்றுலா ..... (செல்)
5. தவறுகளைத் …… (திருத்து)

வடிவம் மாற்றுக.

பின்வரும் பத்தியைப் படித்துப் பார்த்து, அச்செய்தியை உங்கள் பள்ளி அறிவிப்புப் பலகையில் இடம்பெறும் அறிவிப்பாக மாற்றுக.

மருதூர் அரசு மேல் நிலைப்பள்ளி இருபத்தைந்து ஆண்டுகளாகச் சிறந்த கல்விப்பணியை வழங்கி வருகிறது. இப்பள்ளி, சிறந்த கவிஞராகத் திகழும் இன்சுவை முதலான பன்முகப் படைப்பாளிகளை உருவாக்கிய பெருமை கொண்டது. ஒரு சோற்றுப் பதமாய் மருதூர்ப் பள்ளி மாணவி பூங்குழலி படைத்த "உள்ளங்கை உலகம்" என்ற நூலின் வெளியீட்டு விழா 21 ஜூன் திங்கள், பிற்பகல் 3:00 மணியளவில் நடைபெற உள்ளது. அவ்விழாவில் (கின்னஸ் சாதனை படைத்த) முன்னாள் மாணவர் இன்சுவை நூலை வெளியிட்டு, சிறப்புரை ஆற்றுவார். மருதூர்ப் பள்ளி விழா அரங்கத்தில் நிகழும் இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொள்ள, அனைவரையும்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 27 22/05/18 6:56 PM

அழைக்கின்றோம்.

தொடரைப் பழமொழிகொண்டு நிறைவு செய்க.

1. இளமையில் கல்வி …… 2. சித்திரமும் கைப்பழக்கம் ……

3. கல்லாடம் படித்தவரோடு …… 4. கற்றோர்க்குச் சென்ற ……..

கடிதம் எழுதுக.

உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணனின், "கால்முளைத்த கதைகள்" என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.

நயம் பாராட்டுக.

விரிகின்ற நெடுவானில், கடற்பரப்பில்
விண்ணோங்கு பெருமலையில், பள்ளத்தாக்கில்
பொழிகின்ற புனலருவிப் பொழிலில், காட்டில்
புல்வெளியில், நல்வயலில், விலங்கில் புள்ளில்
தெரிகின்ற பொருளிலெல்லாம் திகழ்ந்து நெஞ்சில்
தெவிட்டாத நுண்பாட்டே, தூய்மை ஊற்றே,
அழகு என்னும் பேரொழுங்கே, மெய்யே, மக்கள்
அகத்திலும் நீ குடியிருக்க வேண்டுவேனே!

– ம.இலெ. தங்கப்பா

நிகழ்ச்சி நிரல் வடிவமைக்க.

உங்கள் பள்ளி இலக்கிய மன்ற விழா சார்பில் நடைபெறவிருக்கும் உலகத் தாய்மொழி நாள் (பிப்ரவரி 21) வி… நிகழ்ச்சி நிரல் ஒன்றினை வடிவமைக்க.

மொழியோடு விளையாடு

அந்தாதிச் சொற்களை உருவாக்குக.

அத்தி, குருவி, விருது, இனிப்பு, வரிசையாக.

அத்தி
திகைப்பு
புகழ்ச்சி
சிரிப்பு
புன்னகை
கைப்பேசி
சிறப்பு
புதுமை
மைனா

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 28 22/05/18 6:56 PM

(எ.கா)

அகராதியில் காண்க.

நயவாமை, கிளத்தல், கேழ்பு, செம்மல், புரிசை

கொடுக்கப்பட்ட வேர்ச்சொற்களைப் பயன்படுத்தி விடுபட்ட கட்டங்களில் காலத்திற்கேற்ற வினைமுற்றுகளை நிறைவு செய்க.

வா			
	இறந்த காலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
நான்	வந்தேன்		
நாங்கள்			வருவோம்
நீ		வருகிறாய்	
நீங்கள்	வந்தீர்கள்		
அவன்		வருகிறான்	
அவள்			
அது			வரும்
அவர்	வந்தார்		
அவர்கள்			
அவை		வருகின்றன	

தா, காண், பெறு, நீந்து, பாடு, கொடு போன்ற வேர்ச்சொற்களைப் பயன்படுத்தி மேற்கண்ட கட்டத்தினைப் போன்று காலத்திற்கேற்ற வினைமுற்றுகளை அமைத்து எழுதுக.

அடைப்புக்குள் உள்ள சொற்களைக் கொண்டு எழுவாய், வினை அடி, வினைக்குப் பொருத்தமான தொடர் அமைக்க. (திடலில், போட்டியில், மழையில், வேகமாக, மண்ணை)

(எ.கா) நான் திடலில் ஓடினேன் (தன்வினை).

திடலில் மிதிவண்டியை ஓட்டினேன் (பிறவினை).

நான் நண்பர்களைத் திடலில் ஓடச்செய்தேன் (காரணவினை).

எழுவாய்/ பெயர்	வினை அடி	தன்வினை	பிறவினை	காரணவினை
நான்	ஓடு			
காவியா	வரை			
கவிதை	நனை			
இலை	அசை			
மழை	சேர்			

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 29 22/05/18 6:56 PM

காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



.....

.....

.....

.....

செயல் திட்டம்

நீங்கள் வாழும் பகுதியில் மக்கள் பேசும் மொழிகளைப் பட்டியலிட்டு அம்மொழி பேசப்படுகின்ற இடங்களை நிலப்படத்தில் வண்ணமிட்டுக் காட்டுக.

நிற்க அதற்குத் தக...

உங்களுடைய நாட்குறிப்பில் இடம்பெற்ற ஒரு வாரத்திற்குரிய மகிழ்ச்சியான செய்திகளைத் தொகுத்து அட்டவணைப்படுத்துக.

திங்கள்	வருத்தம் தெரிவிக்கிறேன், பொறுத்துக் கொள்ளவும் ஆகிய சொற்றொடர்களை இன்று இரண்டு முறை வகுப்பில் பயன்படுத்தினேன். இதனால் புதிய நண்பர் கிடைத்தார்.
செவ்வாய்	
புதன்	
வியாழன்	
வெள்ளி	வீட்டிற்குத் தேவையான பொருள்களை நானாக முன்வந்து வாங்கிக் கொடுத்தேன். அம்மா பாராட்டினார்.
சனி	
ஞாயிறு	

அறிவை விரிவு செய்

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் – ராபர்ட் கால்டுவெல்

மொழிபெயர்ப்பும் ஒலிபெயர்ப்பும் – மணவை முஸ்தபா

தமிழ்நடைக் கையேடு

மாணவர்களுக்கான தமிழ் – என். சொக்கன்

இணையத்தில் காண்க.

1. திராவிட மொழிகள் http://www.tamilvu.org/courses/degree/a051/a0511/html/a05114l2.htm
2. திராவிட மொழிகளும் தமிழும் http://www.tamilvu.org/ta/courses-degree-a051-a0511-html-a05115in-9477

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 30 22/05/18 6:56 PM

இயல் இரண்டு

உயிருக்கு வேர்

கற்றல் நோக்கங்கள்

- நீரின் இன்றியமையாமையை உணர்ந்து நீர்நிலைகளைப் பாதுகாத்தல்
- கருத்தரங்கில் கருத்துகளை வெளிப்படுத்த அறிதல்
- கட்டுரைகள், கதைகளைப் படித்துக் கருத்துகளைச் சுருக்கியும் விரித்தும் எழுதுதல்
- இயற்கை அழகைப் போற்றும் கவிதைகளைப் படைத்தல்
- துணைவினைகளை முறையாகப் பயன்படுத்துதல்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 31 22/05/18 6:56 PM

இயல் இரண்டு

நீரின்றி அமையாது உலகு



இயற்கை என்பது உயிர்களுக்குக் கிடைத்த பெரும்பேறு. உயர்ந்தோங்கிய மலைகள், காடுகள், பசுமைப் புல்வெளிகள், நீர்நிலைகள், வயல்வெளிகள், பசுமையான தோப்புகள் என இயற்கையின் கொடைகள் கணக்கிலடங்காதவை. அவற்றை உரிய வகையில் பயன்படுத்தியும் பாதுகாத்தும் அடுத்த தலைமுறையினருக்கு அளிப்பது நமது பொறுப்பு. எனவே, நீர் மேலாண்மையின் தேவையை உணர்ந்தே ஆகவேண்டிய காலகட்டம் இது.

கருத்தரங்க அழைப்பிதழ்

பள்ளிச் சுற்றுச்சூழல் மன்றத்தின் சார்பில் நடைபெறும் மாணவர் கருத்தரங்கம்

தலைமை: மாணவர் **வெண்மதி**

முன்னிலை: தமிழாசிரியர் **கலைச்செல்வி**

கருத்தாளர்கள்	தலைப்புகள்
மாணவர் **ஆமீனா**	**நீர் மேலாண்மை**
மாணவர் **முகிலன்**	**தமிழ் மக்களும் தண்ணீரும்**
மாணவர் **மெர்சி**	**இன்றைய வாழ்வில் தண்ணீர்**

அனைவரும் வருக!

3ZHNHD

தலைமையுரை – மாணவர் வெண்மதி

வணக்கத்திற்குரிய வகுப்பாசிரியர் அவர்களே! இனிய நண்பர்களே! வணக்கம். வான்சிறப்பு என்னும் தலைப்பில் பத்துக் குறட்பாக்களைப் பாடிய வள்ளுவரையும் மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும் என்று இயற்கையை வாழ்த்திப் பாடிய இளங்கோவடிகளையும் வணங்கி என் உரையைத் தொடங்குகின்றேன்.

ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 5 ஆம் நாள் உலகச் சுற்றுச்சூழல் நாளாகக் கொண்டாடப்படுகிறது. இயற்கை வழங்கிய தண்ணீரின் இன்றியமையாமை குறித்து எல்லோரும் சிந்திக்கவே இந்த ஏற்பாடு.

தெரிந்து தெளிவோம்

அகழி, ஆழிக்கிணறு, உறைக்கிணறு, அணை, ஏரி, குளம், ஊருணி, கண்மாய், கேணி – எனப் பல்வேறு பெயர்களில் நீர்நிலைகள் உள்ளன.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 32 22/05/18 6:56 PM

நீர்இன்று அமையாது உலகம் என்னும் தம் கருத்தைத் தெளிவாகப் பதிவுசெய்துள்ளார் திருவள்ளுவர். நீரே மனித வாழ்வின் அடித்தளம் என்பதால், நம்முடைய முன்னோர்கள் பல்வேறு வகையான நீர் நிலை வடிவங்களை உருவாக்கி நீரைப் பாதுகாத்தனர்.

ஒவ்வோர் ஆண்டும் பெய்கின்ற மழையின் அளவு கூடுதலாகவோ குறைவாகவோ இருக்கலாம். ஆனால், மழை வழங்கிய நீரை இத்தகைய நீர்நிலைகளே பாதுகாத்துத் தருகின்றன.

மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க்கூட்டமும் மகிழ்ச்சியாக வாழப் பெருந்துணை புரிகின்றது.

மழை உழவுக்கு உதவுகிறது. விதைத்த விதை ஆயிரமாகப் பெருகுகிறது. நிலமும் மரமும் உயிர்கள் நோயின்றி வாழவேண்டும் என்னும் நோக்கில் வளர்கின்றன என்று மாங்குடி மருதனார் கூறியதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

இக்கருத்தரங்கம் நீரைப்பற்றிய ஆக்கம் நிறைந்த சிந்தனைகளை முன்வைக்க இருக்கின்றது.

முதல் கருத்தாளராக நண்பர் ஆமீனா அவர்களை நீர் மேலாண்மை என்னும் தலைப்பில் உரை நிகழ்த்த அழைக்கிறேன்.

ஆமீனா

எல்லோருக்கும் இனிய வணக்கம்.

மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, உறைவிடம். இவற்றுள் முதலிரண்டும் வேளாண்மையை ஆதாரமாகக் கொண்டவை. வேளாண்மையோ நீரை அடிப்படையாகக் கொண்டது.

மழைநீர், ஆற்றுநீர், ஊற்றுநீர் ஆகியவற்றைச் சிறிய, பெரிய நீர்நிலைகளில் சேகரிக்க வேண்டும். அதனை வேளாண்மைக்குப் பயன்படுத்த வேண்டும் என்பதை நம் முன்னோர்கள் திட்டமிட்டுச் செய்தனர்.

திட்பமும் நுட்பமும்

காவிரி ஆற்றின் மீது பெரிய பாறைகளைக் கொண்டுவந்து போட்டனர். அந்தப் பாறைகளும் நீர் அரிப்பின் காரணமாகக் கொஞ்சம் கொஞ்சமாக மண்ணுக்குள் சென்றன. அதன்மேல் வேறொரு பாறையை வைத்து நடுவே தண்ணீரில் கரையாத ஒருவித ஒட்டும் களிமண்ணைப் புதிய பாறைகளில் பூசி, இரண்டையும் ஒட்டிக்கொள்ளும் விதமாகச் செய்தனர். இதுவே, கல்லணையைக் கட்டப் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பமாகக் கருதப்படுகிறது.

ஒவ்வொரு வட்டாரத்தின் நில அமைப்பு, மண்வளம், மக்கள்தொகை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டே நீர்நிலைகளை வடிவமைத்தனர். இதில் ஏரிகளும் குளங்களும் பாசனத்திற்கான அமைப்புகளாய்ப் பெருமளவில் பயன்பட்டன.

பாண்டி மண்டலத்து நிலப்பகுதியில் ஏரியைக் கண்மாய் என்று அழைப்பர். கம்மாய் என்பது வட்டார வழக்குச் சொல்லாகும்.

மணற்பாங்கான இடத்தில் தோண்டிச் சுடுமண் வளையமிட்ட கிணற்றுக்கு உறைக்கிணறு என்றும் மக்கள் பருகுநீர் உள்ள நீர்நிலைக்கு ஊருணி என்றும் பெயர் சூட்டியுள்ளனர்.

தமிழக வரலாற்றில் பல நூற்றாண்டுகளுக்கு முன் கரிகால்சோழன் காலத்தில் கட்டப்பட்ட கல்லணையே விரிவான பாசனத்திட்டமாக இருந்துள்ளது. கல்லணையின் நீளம் 1080 அடியாகவும் அகலம் 40 முதல் 60 அடியாகவும் உயரம் 15 முதல் 18 அடியாகவும் இருக்கிறது. அது வலுவான கட்டுமானத் தொழில்நுட்பத்தால் இன்றும் பயன்படுவதோடு நமது வரலாற்றுப் பெருமைக்கும் சான்றாக நிலைத்து நிற்கிறது.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 33 22/05/18 6:56 PM

மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற் காடும் உடையது அரண்

என்னும் குறட்பாவில் நாட்டின் சிறந்த அரண்களுள் நீருக்கே முதலிடம் தருகிறார் திருவள்ளுவர். உணவெனப்படுவது நிலத்தொடு நீரே (புறம் 18) என்றும் சங்கப்பாடல், நீரின் இன்றியமையாமையை எடுத்துரைக்கிறது.

யார் இவர்?

இந்திய நீர்ப் பாசனத்தின் தந்தை என அறியப்படும் சர் ஆர்தர் காட்டன் என்ற ஆங்கிலப் பொறியாளர் கல்லணையைப் பல ஆண்டுக்காலம் ஆராய்ந்தார்.

கல்லணை பலகாலம் மணல் மேடாகி நீரோட்டம் தடைப்பட்டது. ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டம் தொடர்ச்சியாக வெள்ளத்தாலும் வறட்சியாலும் வளமை குன்றியது. இந்தச் சூழலில் 1829இல் காவிரிப் பாசனப் பகுதிக்குத் தனிப் பொறுப்பாளராக ஆங்கிலேய அரசால் சர் ஆர்தர் காட்டன் நியமிக்கப்பட்டார்.

இவர்தான் பயனற்று இருந்த கல்லணையைச் சிறு சிறு பகுதியாய்ப் பிரித்து மணல் போக்கிகளை அமைத்தார். அப்போது, கல்லணைக்கு அமைக்கப்பட்ட அடித்தளத்தை ஆராய்ந்த அவர் பழந்தமிழரின் அணை கட்டும் திறனையும் பாசன மேலாண்மையையும் உலகுக்கு எடுத்துக் கூறினார். கல்லணைக்கு கிராண்ட் அணைக்கட் என்ற பெயரையும் சூட்டினார்.

மேலும் கல்லணையின் கட்டுமான உத்தியைக் கொண்டுதான் 1873ஆம் ஆண்டு கோதாவரி ஆற்றின் குறுக்கே தௌலீஸ்வரம் அணையைக் கட்டினார்.

இவ்வாறு தமிழர்கள் தண்ணீரின் தேவையை நன்றாகப் புரிந்துகொண்டு, நீர் மேலாண்மையை அறிவியல் நோக்கில் கட்டமைத்தனர். அவற்றை இன்றைய காலச்சூழலுக்கு ஏற்ப வளப்படுத்துவது நம் அனைவரின் கடமையாகும். நன்றி, வணக்கம்.

அரங்கத் தலைவர்

ஒரு நாட்டின் வளர்ச்சிப்போக்கை நெறிப்படுத்துவதே நீர் மேலாண்மைதான் என்பதைக் கருத்தாழத்துடன் நண்பர் ஆமீனா சிறப்பாக விளக்கினார். இப்போது கேள்வி நேரம். பார்வையாளர்கள் வினாக்களை எழுப்பலாம்.

(கலந்துரையாடல்)

இப்போது அடுத்த தலைப்பிற்குச் செல்வோம். தமிழ்மக்களும் தண்ணீரும் என்னும் தலைப்பில் நண்பர் முகிலன் தமது கருத்துரையை முன்வைக்க வருகின்றார்.

முகிலன்

அனைவருக்கும் அன்பு வணக்கம்.

நாம் வாழும் தமிழ்நாடு வெப்பமண்டலப் பகுதியில் உள்ளது. எனவே, நீர் சார்ந்த தன்னுணர்ச்சி தமிழக மக்களுக்கு மிகுதி. தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே என்பது சொல் வழக்கு.

தமிழ் மரபில் நீரும் நீராடலும் வாழ்வியலோடு பிணைக்கப்பட்டவையாக விளங்குகின்றன என்பார் பேராசிரியர் தொ.பரமசிவன். அவர் குளித்தல் என்ற சொல்லைக் குறித்துக் கூறும் கருத்துகள் நமக்குப் புதிய சிந்தனைகளைத் தருகின்றன.

குளித்தல் என்ற சொல்லுக்கு உடம்பினைத் தூய்மை செய்தல் அல்லது அழுக்கு நீக்குதல் என்பதல்ல பொருள்; சூரியவெப்பத்தாலும் உடல் உழைப்பாலும் வெப்பமடைந்த உடலைக் குளிர வைத்தல் என்பதே அதன் பொருளாகும். குளிர்த்தல் என்பதே குளித்தல் என்று ஆயிற்று என்பது அவரது விளக்கம். குள்ளக் குளிரக் குடைந்து நீராடி என்கிறார் ஆண்டாள். தெய்வச்சிலைகளைக் குளி(ர்)க்க வைப்பதை திருமஞ்சனம் ஆடல் என்று கூறுவர்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 34 22/05/18 6:56 PM

சிற்றிலக்கியமாகிய பிள்ளைத்தமிழில் நீராடல் பருவம் என்று ஒரு பருவம் உண்டு. நாட்டுப்புறத் தெய்வக்கோவில்களில் சாமியாடிகளுக்கு மஞ்சள் நீர் கொடுத்து அருந்தச் செய்வதும் நீராட்டுவதும் தற்போதும் நடைமுறையில் உள்ளன.

திருமணமானபின் கடலாடுதல் என்னும் வழக்கமும் தமிழகத்தில் நிலவுகிறது. இறப்புச் சடங்கிலும் உடலை நீராட்டுவதற்காக நீர்மாலை எடுத்து வருதல் என்பதும் நடைமுறையில் உள்ளது.

அம்மை நோய் கண்டவர்கள் குணமடைந்தபின் தலைக்குத் தண்ணீர் ஊற்றியாகிவிட்டதா? என்று கேட்பது வழக்கம்.

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்னர் வாரம் தோறும் நல்லெண்ணெய் தேய்த்துக் குளிப்பதைத் தமிழர்கள் மரபாகவே வைத்திருந்தனர். சனி நீராடு என்பது ஔவையின் வாக்கு.

அதிகாலையில் விவசாய நிலத்திற்கு உழைக்கச் செல்வோர் நீராகாரம் குடிப்பார்கள். வீட்டிற்கு வரும் விருந்தினர்க்கு அன்பான வரவேற்பின் அடையாளமாக நீரே வழங்கப்படுகிறது.

இவ்வாறு தமிழக மக்களின் குடும்பம் தொடங்கி, சமூகம் வரை அனைத்திலும் தண்ணீர் முக்கியப் பங்காற்றுகிறது. நன்றி வணக்கம்.

அரங்கத் தலைவர்

கேள்வி நேரம். (கலந்துரையாடல் நடைபெறுகிறது)

அடுத்து இன்றைய வாழ்வில் தண்ணீர் என்னும் தலைப்பில் கருத்துரையாற்ற வருகிறார் மெர்சி.

திட்பமும் நுட்பமும்

சோழர் காலக் குமிழித்தூம்பு

மழைக்காலங்களில் ஏரி நிரம்பும்போது நீந்துவதில் வல்லவரான ஒருவர் தண்ணீருக்குள் சென்று கழிமுகத்தை அடைந்து குமிழித்தூம்பை மேலே தூக்குவார். அடியில் இரண்டு துளைகள் காணப்படும். மேலே இருக்கும் நீரோடித் துளையிலிருந்து நீர் வெளியேறும். கீழே உள்ள சேறோடித் துளையிலிருந்து நீர் சுழன்று சேற்றுடன் வெளியேறும். இதனால் தூர் வார வேண்டிய அவசியம் இல்லை.





குமிழித்தூம்பு செயல்படும் விதம்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 35 22/05/18 6:56 PM

மெர்சி

எல்லோருக்கும் இனிய வணக்கம்.

அறிவியல் தொழில்நுட்பம் வளர்ந்தோங்கிய இன்றைய வாழ்வில் தண்ணீரின் நிலை குறித்து ஆய்வுசெய்ய வேண்டியது இன்றியமையாததாகும்.

உலகம் முழுவதும் தண்ணீர்ப் பஞ்சம் உருவாகத் தொடங்கிவிட்டது. அமெரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளில் நிலத்தடி நீர்வளம் குறைந்து வருகின்றது. குறிப்பாக நமது நாட்டில் இராஜஸ்தான் மாநிலத்தில் பத்தாண்டுகளுக்கு முன்பே 700 அடிவரை ஆழ்குழாய்கள் இறக்கியும் நீர் கிட்டவில்லை. சிறுநகரங்களிலும்கூட நிலத்தடி நீர் குறைந்து வருகிறது. கோடைக் காலத்தில் தண்ணீர்ப் பற்றாக்குறை மக்களுக்குப் பெரும் வாழ்வியல் நெருக்கடியாக மாறியுள்ளது.

உலகச் சுகாதார நிறுவனம், உலகம் விரைவில் குடிநீருக்கான கடும் சிக்கலை எதிர்கொள்ளும் என எச்சரிக்கிறது.

குடிநீரை விலைகொடுத்து வாங்கும் அவலம் தொடரும் நிலையை மாற்றியமைக்கத் திட்டமிட வேண்டியது உடனடித் தேவையாகும். ஆண்டுதோறும் பெய்கின்ற மழைப்பொழிவை ஆக்கநிலையில் பயன்படுத்தும் செயல் திட்டத்தை நாம் உருவாக்க வேண்டும்.

அறிவியல் அணுகுமுறையில் மழைநீரைத் தேக்கி வைத்துப் பாசனத்திற்குப் பயன்படுத்த ஊர்தோறும் ஏரிகளை உருவாக்கினர் நம் முன்னோர். அவற்றைத் தூர்வாரி முறையாகப் பராமரிப்புப் பணிகளைச் செய்தல் வேண்டும். இதை ஒரு மக்கள் இயக்கமாக, மழைக்காலத்திற்கு முன்பே செய்ய வேண்டும்.

இயற்கை நமக்குத் தரும் தண்ணீர்க்கொடையைத் திட்டமிட்டுப் பயன் படுத்துவதே நீர்த்தட்டுப்பாட்டை எதிர்கொள்ளும் சிறந்த வழியாகும் என்பதைக் கூறி நிறைவு செய்கின்றேன். வணக்கம்.

தெரிந்து தெளிவோம் — தமிழகத்தின் நீர்நிலைப் பெயர்களும் விளக்கமும்

அகழி – கோட்டையின் புறத்தே அகழ்ந்தமைக்கப்பட்ட நீர் அரண்

அருவி – மலைமுகட்டுத் தேக்கநீர் குத்திட்டுக் குதிப்பது

ஆழிக்கிணறு – கடலருகே தோண்டிக் கட்டிய கிணறு

ஆறு – இரு கரைகளுக்கிடையே ஓடும் நீர்ப்பரப்பு

இலஞ்சி – பலவகைக்கும் பயன்படும் நீர்த்தேக்கம்

உறைக்கிணறு – மணற்பாங்கான இடத்தில் தோண்டிச் சுடுமண் வளையமிட்ட கிணறு

ஊருணி – மக்கள் பருகுநீர் உள்ள நீர்நிலை

ஊற்று – அடியிலிருந்து நீர் ஊறுவது

ஏரி – வேளாண்மைப் பாசன நீர்த்தேக்கம்.

கட்டுக்கிணறு – சரளை நிலத்தில் தோண்டி கல், செங்கற்களால் அகச்சுவர் கட்டிய கிணறு

கடல் – அலைகளைக் கொண்ட உப்புநீர்ப் பெரும்பரப்பு

கண்மாய் – பாண்டி மண்டலத்தில் ஏரிக்கு வழங்கப்படும் பெயர்

குண்டம் – சிறியதாய் அமைந்த குளிக்கும் நீர்நிலை

குண்டு – குளிப்பதற்கேற்ற சிறுகுளம்

குமிழி ஊற்று – அடிநிலத்து நீர், நிலமட்டத்திற்குக் கொப்புளித்து வரும் ஊற்று

கூவல் – உவர்மண் நிலத்தில் தோண்டப்படும் நீர்நிலை

கேணி – அகலமும் ஆழமும் உள்ள பெருங்கிணறு

புனற்குளம் – நீர்வரத்து மடையின்றி மழைநீரையே கொண்டுள்ள குளிக்கும் நீர்நிலை

பூட்டைக் கிணறு – கமலை நீர்பாய்ச்சும் அமைப்புள்ள கிணறு

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 36 22/05/18 6:56 PM

அரங்கத் தலைவர்

நடப்பு வாழ்க்கையில் உள்ள தண்ணீர்ச் சிக்கலைச் சான்றுகளுடன் மெர்சி விளக்கியுள்ளார். இப்போது வினாக்கள் கேட்கலாம்.

(கலந்துரையாடல்)

மூன்று கருத்தாளர்களின் கருத்துகளையும் இன்றைய சமூகச் சூழ்நிலைகளையும் இணைத்துச் சிந்திக்க வேண்டியது நமது கடமை.

உலகின் பல்லுயிர்ப் பாதுகாப்பிற்கு அடிப்படைத் தேவையாக உள்ள தண்ணீரைப் பாதுகாத்துப் பயன்படுத்த வேண்டும். நமது முன்னோர்கள் கண்டுணர்ந்த மரபார்ந்த அணுகுமுறைகளைப் பின்பற்றவேண்டும். குளம், ஏரி, கால்வாய், கிணறு போன்ற நீர்நிலைகளின் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை மக்களிடம் உருவாக்குதல் வேண்டும்.

பணம் கொடுத்தால் உணவை விலைக்கு வாங்கிவிடலாம் என்னும் மேலோட்டமான கருத்தோட்டத்தை மாற்றிக் கொள்வோம். உணவு உற்பத்திக்கு அடிப்படை நீரே. அதுமட்டுமன்றி நீரே உணவாகவும் இருக்கிறது என்பதை இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே,

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை

என்று திருவள்ளுவர் கூறியுள்ளதைக் கருத்தில்கொண்டு செயல்படுவோம். அடுத்த உலகப்போர் ஒன்று உருவானால், அது தண்ணீருக்காகத்தான் உருவாகும் என்னும் நிலைமைக்கு முடிவுரை எழுதுவோம்.

நன்றி, வணக்கம்.

யார் இவர்?

தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களான தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம் ஆகியவற்றின் விவசாயத்திற்கும் குடிநீருக்கும் உதவும் முல்லைப் பெரியாறு அணையைக் கட்டியவர் ஜான் பென்னி குவிக்.

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் வைகை வடிநிலப் பரப்பில் மழை பொய்த்துப் பஞ்சம் ஏற்பட்டதால் பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டனர். மேற்குத் தொடர்ச்சி மலையில் பெய்யும் மழைநீர் பெரியாற்றில் ஓடி வீணாகக் கடலில் கலப்பதை அறிந்த இவர் அங்கு ஓர் அணை கட்ட முடிவு செய்தார். கட்டுமானத்தின்போது இடையில் கூடுதல் நிதி ஒதுக்க ஆங்கிலேய அரசு மறுத்தபோது தனது சொத்துகளை விற்று அணையைக் கட்டி முடித்தார். அவருக்கு நன்றி செலுத்தும் விதமாக அப்பகுதி மக்கள் தம் குழந்தைகளுக்குப் பென்னி குவிக் எனப் பெயர் சூட்டும் வழக்கம் இன்றும் உள்ளது.

கற்பவை கற்றபின்...

1. நீரின்று அமையாது உலகு, நீரின்று அமையாது யாக்கை இவ்விரண்டு தொடர்களையும் ஒப்புமைப்படுத்தி வகுப்பில் கலந்துரையாடுக .
2. வீடுகளில் பயன்படுத்தப்படும் தண்ணீர் எங்கிருந்து கிடைக்கிறது? இதற்கான நீர் எங்கிருந்து வருகிறது? இன்னும் எவ்வளவு காலத்திற்குத் தண்ணீர் போதுமானதாக இருக்கும்? என்பவற்றுக்கான தகவல்களைத் திரட்டி ஒப்படைவு உருவாக்குக.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 37 22/05/18 6:56 PM

இயல் இரண்டு

கவிதைப் பேழை

பட்ட மரம்

நுழையும்முன்

நம் முன்னோரின் வாழ்க்கை இயற்கையோடு இயைந்தது. அவர்கள் மரம், செடி, கொடிகளையும்போற்றிக் காத்தனர். கால மாற்றத்தில் இவ்வாழ்வு சிறிது சிறிதாக மறைந்துகொண்டே வருகிறது. மரம் என்பது மனித வாழ்வில் மிகவும் இன்றியமையாதது. மரங்கள் இல்லை என்றால் நமக்கு உயிர்வளி கிடைக்காமல் போய்விடும். அவ்வகையில் பட்டுப்போன மரமொன்று கவிஞர் ஒருவரின் உள்ளத்தில் ஏற்படுத்திய குமுறலை வெளிப்படுத்தும் இக்கவிதை, மரங்களை வளர்த்துப் பேணிக் காத்திட வேண்டும் என்ற உணர்வை நமக்கு ஏற்படுத்துகிறது.

மொட்டைக் கிளையொடு
நின்று தினம்பெரு
மூச்சு விடும்மரமே !
வெட்டப் படும்ஒரு
நாள்வரு மென்று
விசனம் அடைந்தனையோ ?
குந்த நிழல்தரக்
கந்த மலர்தரக்
கூரை விரித்தஇலை !
வெந்து கருகிட
இந்த நிறம்வர
வெம்பிக் குமைந்தனையோ ?
கட்டை யெனும்பெயர்
உற்றுக் கொடுந்துயர்
பட்டுக் கருகினையே !
பட்டை யெனும்உடை
இற்றுக் கிழிந்தெழில்
முற்றும் இழந்தனையே !

காலம் எனும்புயல்
சீறி எதிர்க்கக்
கலங்கும் ஒருமனிதன்
ஓலமி டக்கரம்
நீட்டிய போல்இடர்
எய்தி உழன்றனையே!
பாடும் பறவைகள்
கூடி உனக்கொரு
பாடல் புனைந்ததுவும்
மூடு பனித்திரை
யூடு புவிக்கொரு
மோகங் கொடுத்ததுவும்
ஆடுங் கிளைமிசை
ஏறிச் சிறுவர்
குதிரை விடுத்ததுவும்
ஏடு தருங்கதை
யாக முடிந்தன!
இன்று வெறுங்கனவே!

– கவிஞர் தமிழ் ஒளி

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 38 22/05/18 6:56 PM

சொல்லும் பொருளும்

குந்த – உட்கார, கந்தம் – மணம்

மிசை – மேல் , விசனம் – கவலை

இலக்கணக்குறிப்பு

வெந்து, வெம்பி, எய்தி – வினையெச்சங்கள்

மூடுபனி, ஆடுகிளை – வினைத்தொகைகள்

வெறுங்கனவு – பண்புத்தொகை

பகுபத உறுப்பிலக்கணம்

விரித்த – விரி + த் + த் + அ

விரி – பகுதி

த் – சந்தி

த் – இறந்தகால இடைநிலை

அ – பெயரெச்ச விகுதி

குமைந்தனை – குமை + த்(ந்) + த் + அன்+ஐ

குமை – பகுதி

த் – சந்தி. த் – ந் ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை, அன் – சாரியை

ஐ – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி

நூல் வெளி

கவிஞர் தமிழ் ஒளி (1924–1965) புதுவையில் பிறந்தவர். பாரதியாரின் வழித்தோன்றலாகவும் பாரதிதாசனின் மாணவராகவும் விளங்கியவர். மக்களுக்காகப் பல படைப்புகளை உருவாக்கியவர். நிலைபெற்ற சிலை, வீராயி, கவிஞனின் காதல், மே தினமே வருக, கண்ணப்பன் கிளிகள், குருவிப்பட்டி, தமிழர் சமுதாயம், மாதவி காவியம் முதலானவை இவரின் படைப்புகளுள் குறிப்பிடத்தக்கவை. பாடப்பகுதி தமிழ் ஒளியின் கவிதைகள் என்னும் நூலில் இடம்பெற்றுள்ளது.

கற்பவை கற்றபின்...

1. *விளைநிலங்கள் கட்டடங்களாகின்றன – என்னும் தலைப்பில் ஒட்டியும் வெட்டியும் பேசுக.*

2. *பட்டமரம், புதிதாக முளைவிட்ட குருத்து ஆகிய இரண்டும் பேசிக்கொள்வதாய்க் கற்பனை உரையாடல் நிகழ்த்துக.*

3. *பட்டணத்துப் பறவைகளும் ஊர்ப் பறவைகளும் பேசுவது போலச் சிறு சிறு கவிதைகள் படைக்க.*

எ.கா – பட்டணத்துக் காக்கை

ஊரைத் தூய்மை செய்கின்றோம்
உறவைக் கூட்டிப் பகிர்கின்றோம்
கரைந்து தாகம் எடுக்கிறதே
விரைந்து நீரை வைப்பீரே!

கிராமத்துக் கிளி

தத்திப் பறக்கும் உறவுகளே
கொத்தித் தின்ன வாருங்கள்
பழுத்துத் தொங்கும் பழக்கூட்டம்
கழுத்து வரைக்கும் உண்பீரே!

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 39 22/05/18 6:56 PM

இயல் இரண்டு

பெரியபுராணம்

நுழையும்முன்

வரப்புயர நீர் உயரும்; நீருயர நெல் உயரும்; நெல்லுயரக் குடி உயரும். உயர்ந்த குடியாக, நாடெல்லாம் நீர் நாடாகச் சோழநாடு திகழ்கிறது. காவிரியின் பாதையெல்லாம் பூவிரியும் கோலத்தை அழகாக விவரித்துரைக்கிறது பெரியபுராணம். வளங்கெழு திருநாட்டின் சிறப்பை இயற்கை எழிற் கவிதைகளாய்ப் படரச் செய்துள்ளது.

திருநாட்டுச் சிறப்பு

1. மாவி ரைத்தெழுந் தார்ப்ப வரைதரு
பூவி ரித்த புதுமதுப் பொங்கிட
வாவி யிற்பொலி நாடு வளந்தரக்
காவி ரிப்புனல் கால்பரந் தோங்குமால் (பா.எ.59)

சொல்லும் பொருளும்: மா – வண்டு ; மது – தேன் ; வாவி–பொய்கை.

416JY1

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 40 22/05/18 6:56 PM

2. மண்டுபுனல் பரந்தவயல் வளர்முதலின் சுருள்விரியக்
கண்டுழவர் பதங்காட்ட களைகளையுங் கடைசியர்கள்
தண்டரளஞ் சொரிபணிலம் இடறியிடை தளர்ந்தசைவார்
வண்டலையும் குழல்அலைய மடநடையின் வரம்பணைவார் (பா.எ.63)

சொல்லும் பொருளும்: வளர் முதல் – நெற்பயிர் ; தரளம் – முத்து; பணிலம் – சங்கு; வரம்பு – வரப்பு.

3. காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடல்அன்ன
நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம்* (பா.எ.67)

சொல்லும் பொருளும்: கழை – கரும்பு ; கா – சோலை ; குழை – சிறு கிளை; அரும்பு – மலர் மொட்டு; மாடு – பக்கம்; நெருங்கு வளை – நெருங்குகின்ற சங்குகள் ; கோடு – குளக்கரை.

4. அன்னம் ஆடும் அகன்துறைப் பொய்கையில்
துன்னும் மேதி படியத் துதைந்தெழும்
கன்னி வாளை கமுகின்மேற் பாய்வன
மன்னு வான்மிசை வானவில் போலுமால் (பா.எ.69)

சொல்லும் பொருளும்: ஆடும் – நீராடும் ; மேதி – எருமை ; துதைந்து எழும் – கலக்கி எழும்; கன்னி வாளை – இளமையான வாளைமீன்.

5. அரிதரு செந்நெற் சூட்டின் அடுக்கிய அடுக்கல் சேர்ப்பார்
பரிவுறத் தடிந்த பன்மீன் படர்நெடுங் குன்று செய்வார்
சுரிவளை சொரிந்த முத்தின் சுடர்ப்பெரும் பொருப்பு யாப்பார்
விரிமலர்க் கற்றை வேரி பொழிந்திழி வெற்பு வைப்பார் (பா.எ.73)

சொல்லும் பொருளும்: சூடு – நெல் அரிக்கட்டு ; சுரிவளை – சங்கு ; வேரி – தேன்.

6. சாலியின் கற்றை துற்ற தடவரை முகடு சாய்த்துக்
காலிரும் பகடு போக்கும் கரும்பெரும் பாண்டில் ஈட்டம்
ஆலிய முகிலின் கூட்டம் அருவரைச் சிமயச் சாரல்
போல்வலங் கொண்டு சூழும் காட்சியின் மிக்க தன்றே. (பா.எ.74)

சொல்லும் பொருளும்: பகடு – எருமைக்கடா ; பாண்டில் – வட்டம் ; சிமயம் – மலையுச்சி.

7. நாளிகே ரஞ்செ ருந்தி நறுமலர் நரந்தம் எங்கும்
கோளிசா லந்த மாலம் குளிர்மலர்க் குரவம் எங்கும்
தாளிரும் போந்து சந்து தண்மலர் நாகம் எங்கும்
நீளிலை வஞ்சி காஞ்சி நிறைமலர்க் கோங்கம் எங்கும். (பா.எ.78)

சொல்லும் பொருளும்: நாளிகேரம் – தென்னை ; நரந்தம் – நாரத்தை ; கோளி – அரசமரம் ; சாலம் – ஆச்சா மரம் ; தமாலம் – பச்சிலை மரங்கள்; இரும்போந்து – பருத்த பனைமரம் ; சந்து – சந்தன மரம் ; நாகம் – நாகமரம் ; காஞ்சி – ஆற்றுப்பூவரசு.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 41 22/05/18 6:56 PM

பாடலின் பொருள்

1. காவிரிநீர் மலையிலிருந்து புதிய பூக்களை அடித்துக்கொண்டு வருகிறது. அப்பூக்களில் தேன் நிறைந்திருப்பதால் வண்டுகள் சூழ்ந்து ஆரவாரம் செய்கின்றன. நீர்நிலைகள் நிறைந்த நாட்டுக்கு வளத்தைத் தரும் பொருட்டுக் காவிரி நீர் கால்வாய்களில் பரந்து எங்கும் ஓடுகிறது.

2. நட்டபின் வயலில் வளர்ந்த நாற்றின் முதல்இலை சுருள் விரிந்தது. அப்பருவத்தைக் கண்ட உழவர் இதுதான் களைபறிக்கும் பருவம் என்றனர். அவ்வாறே களைகளைக் களைந்து செல்லும் உழத்தியரின் கால்களில் குளிர்ந்த முத்துகளை ஈனும் சங்குகள் இடறின. அதனால், இடை தளர்ந்து வண்டுகள் மொய்க்கும் கூந்தல் அசையுமாறு மென்மையாக நடந்து அருகில் உள்ள வரப்பினை அடைவர்.

3. காடுகளில் எல்லாம் கழையாகிய கரும்புகள் உள்ளன. சோலைகள் எங்கும் குழைகளில் (செடிகளின் புதிய கிளைகளில், புதிய தளிர்களில்) மலர் அரும்புகள் உள்ளன. பக்கங்களில் எங்கும் கரிய குவளை மலர்கள் மலர்ந்துள்ளன. வயல்களில் எங்கும் நெருக்கமாகச் சங்குகள் கிடக்கின்றன. நீர்நிலையின் கரையெங்கும் இளைய அன்னங்கள் உலவுகின்றன. குளங்கள் எல்லாம் கடலைப்போன்ற பரப்பை உடையன. அதனால், நாடு முழுதும் நீர்நாடு என்று சொல்லத்தக்கதாய் உள்ளது. இத்தகைய சிறப்புகளால் பிற நாடுகள் சோழநாட்டிற்கு ஈடாக மாட்டா.

4. அன்னங்கள் விளையாடும் அகலமான துறைகளைக் கொண்ட நீர்நிலைகளில் எருமைகள் வீழ்ந்து மூழ்கும். அதனால், அந்நீர்நிலையில் உள்ள வாளை மீன்கள் துள்ளி எழுந்து அருகில் உள்ள பாக்கு மரங்களின் மீது பாயும். இக்காட்சியானது நிலையான வானத்தில் தோன்றி மறையும் வானவில்லைப் போன்று விளங்கும்.

5. அரியப்பட்ட செந்நெல்லின் சூடுகளை அடுக்கிப் பெரிய போராகக் குவிப்பர். மிகுதியாகப் பிடிக்கப்பட்ட பலவகை மீன்களையும் நீண்ட குன்றைப்போல் குவிப்பர்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 42 22/05/18 6:56 PM

வளைந்த சங்குகள் ஈன்ற முத்துகளையும் குன்றைப்போல் உயர்த்திக் கூட்டுவர். தேன்வடியும் விரிந்த மலர்த்தொகுதியை மலைபோல் குவித்து வைப்பர்.

6. நெல்கற்றைகள் குவிந்த பெரிய மலைபோன்ற போரை மேலேயிருந்து சாயச் செய்வர். பெரிய வண்டிகளைச் செலுத்தும் கருமையான எருமைக்கூட்டங்கள் வலமாகச் சுற்றிச்சுற்றி மிதிக்கும் இத்தோற்றமானது கரிய மேகங்கள் பெரிய பொன்மாலைச் சாரல் மீது வலமாகச் சுற்றுகின்ற காட்சிபோல உள்ளது. இத்தகைய காட்சிகள் அங்கு மிகுதியாகத் தோன்றும்.

7. அந்நாட்டில் எங்கும் தென்னை, செருந்தி, நறுமணமுடைய நரந்தம் போன்றவை உள்ளன. அரச மரம், கடம்ப மரம், பச்சிலை மரம், குளிர்ந்த மலரையுடைய குரா மரம் போன்றவை எங்கும் வளர்ந்துள்ளன. பெரிய அடிப்பாகத்தைக் கொண்ட பனை, சந்தனம், குளிர்ந்த மலரையுடைய நாகம், நீண்ட இலைகளையுடைய வஞ்சி, காஞ்சி மலர்கள் நிறைந்த கோங்கு முதலியன எங்கெங்கும் செழித்து வளர்ந்துள்ளன.

இலக்கணக்குறிப்பு

கருங்குவளை, செந்நெல் – பண்புத் தொகைகள்.

விரிமலர் – வினைத்தொகை

தடவரை – உரிச்சொல் தொடர்

பகுபத உறுப்பிலக்கணம்

பாய்வன – பாய் + வ் + அன் + அ

பாய் – பகுதி

வ் – எதிர்கால இடைநிலை, அன் – சாரியை

அ – பலவின்பால் வினைமுற்று விகுதி

நூல் வெளி

சுந்தரரின் திருத்தொண்டத் தொகை அடியவர் பெருமையை ஓர் அடியில் கூறுகிறது. இதைச் சிறிது விரித்து நம்பியாண்டார்நம்பியால் எழுதப்பட்ட திருத்தொண்டர் திருவந்தாதி ஒவ்வொரு பாடலிலும் அவ்அடியார்களின் சிறப்பைக் கூறுவதாக அமைந்துள்ளது. இந்த இரண்டு நூல்களையும் அடிப்படையாகக் கொண்டு சேக்கிழாரால் ஒவ்வொரு புராணத்திலும் ஒவ்வோர் அடியாராக அறுபத்துமூவரின் சிறப்புகளை விளக்கிப் பாடப்பட்டது திருத்தொண்டர் புராணம். இதன் பெருமை காரணமாக இது பெரியபுராணம் என்று அழைக்கப்படுகிறது.

கி.பி. 12ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சேக்கிழார், சோழ அரசன் இரண்டாம் குலோத்துங்கன் அவையில் முதலமைச்சராக இருந்தார். 'பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய கவிவலவ' என்று இவரை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் பாராட்டுகிறார்.

கற்பவை கற்றபின்...

1. மூச்சு விடும் மரம், புரட்டிப் போட்ட புயல் , இசை பாடும் பறவைகள் , பனித்துளியில் தெரியும் பனை, என் இனிய கனவு போன்ற தலைப்புகளில் பள்ளி இலக்கிய மன்றத்தில் கவிதை படிக்க.
2. கவிதையின் விவரிப்பை உரைநடையில் எழுதுக.

வானகமே, இளவெயிலே, மரச்செறிவே, நீங்களெல்லாம்
கானலின் நீரோ? – வெறுங் காட்சிப் பிழைதானோ?
போன தெல்லாம் கனவினைப்போல் புதைந்தழிந்தே
போனதனால் நானும்ஓர் கனவோ? – இந்த
ஞாலமும் பொய்தானோ? – பாரதியார்

41FFZN

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 43 22/05/18 6:56 PM

கவிதைப் பேழை

இயல் இரண்டு

புறநானூறு

நுழையும்முன்

நிலம், நீர், காற்று என்பவை மனிதனின் அடிப்படைத் தேவைகளாகும். இயற்கை நமக்குக் கொடையாகத் தந்திருக்கும் இவற்றை உரிய முறையில் பேணிப் பாதுகாக்க வேண்டும். நீரின் இன்றியமையாமையை உணர்ந்த நம் முன்னோர்கள், நீர்நிலைகளை உருவாக்குபவர்களை "உயிரை உருவாக்குபவர்கள்" என்று போற்றினர்.

வான் உட்கும் வடிநீண் மதில்,
மல்லல் மூதூர் வய வேந்தே!
செல்லும் உலகத்துச் செல்வம் வேண்டினும்
ஞாலம் காவலர் தோள்வலி முருக்கி,
ஒருநீ ஆகல் வேண்டினும், சிறந்த
நல்லிசை நிறுத்தல் வேண்டினும், மற்றுஅதன்
தகுதி கேள்இனி மிகுதி ஆள!

நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே;
நீரும் நிலமும் புணரியோர், ஈண்டு
*உடம்பும் உயிரும் படைத்திசினோரே!**

வித்திவான் நோக்கும் புன்புலம் கண்ணகன்
வைப்பிற்று ஆயினும், நண்ணி ஆளும்
இறைவன் தாட்கு உதவாதே ! அதனால்
அடுபோர்ச் செழிய ! இகழாது வல்லே ;
நிலன் நெளிமருங்கின் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம ! இவண் தட்டோரே !
தள்ளாதோர் இவண் தள்ளா தோரே !

(புறம் 18: 11 – 30)

பாண்டியன் நெடுஞ்செழியனைக்
குடபுலவியனார் பாடியது

திணை: பொதுவியல் துறை: பொருண்மொழிக்காஞ்சி

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 44 22/05/18 6:56 PM

விண்ணை முட்டும் திண்ணிய நெடுமதில்
வளமை நாட்டின் வலிய மன்னவா
போகும் இடத்திற்குப் பொருள்
உலகம் வெல்லும் ஒரு தனி ஆட்சி
வாடாத புகழ் மாலை வரவேண்டுமென்றால்
தகுதிகள் இவைதாம் தவறாது தெரிந்துகொள்
உணவால் ஆனது உடல்
நீரால் ஆனது உணவு
உணவு என்பது நிலமும் நீரும்
நீரையும் நிலத்தையும் இணைத்தவர்
உடலையும் உயிரையும் படைத்தவர்
புல்லிய நிலத்தின் நெஞ்சம் குளிர
வான் இரங்கவில்லையேல்
யார் ஆண்டு என்ன
அதனால் எனது சொல் இகழாது
நீர்வளம் பெருக்கி நிலவளம் விரிக்கப்
பெற்றோர் நீடுபுகழ் இன்பம் பெற்றோர்
நீணிலத்தில் மற்றவர் இருந்தும் இறந்தும்
கெட்டோர் மண்ணுக்கு பாரமாய்க் கெட்டோர்

பொதுவியல் திணை

வெட்சி முதலிய புறத்திணைகளுக் கெல்லாம் பொதுவான செய்திகளையும் முன்னர் விளக்கப்படாத செய்திகளையும் கூறுவது பொதுவியல் திணையாகும்.

பொருண்மொழிக்காஞ்சித் துறை

சான்றோர் தெளிவாய் ஆராய்ந்து தெளிந்த பொருள்களைப் பிறர்க்குப் பயன்படுமாறு எடுத்துரைப்பது பொருண்மொழிக் காஞ்சித்துறையாகும்.

சொல்லும் பொருளும்

யாக்கை – உடம்பு, புணரியோர் – தந்தவர், புன்புலம் – புல்லிய நிலம், தாட்கு – முயற்சி, ஆளுமை; தள்ளாதோர் இவண் தள்ளாதோரே – குறைவில்லாது நீர் நிலை அமைப்பவர்கள் குறைவில்லாது புகழுடையவர்களாக விளங்குவார்கள்.

பாடலின் பொருள்

வான்வரை உயர்ந்த மதிலைக் கொண்ட பழைமையான ஊரின் தலைவனே! வலிமை மிக்க வேந்தனே! நீ மறுமை இன்பத்தை அடைய விரும்பினாலோ உலகு முழுவதையும் வெல்ல விரும்பினாலோ நிலையான புகழைப் பெற விரும்பினாலோ செய்ய வேண்டியன என்னவென்று கூறுகிறேன். கேட்பாயாக!

உலகில் உள்ள யாவற்றையும் மிகுதியாகக் கொண்டு விளங்கும் பாண்டிய நெடுஞ்செழியனே! நீர் இன்றி அமையாத உடல் உணவால் அமைவது; உணவையே முதன்மையாகவும் உடையது. எனவே உணவு தந்தவர் உயிரைத் தந்தவர் ஆவர்.

உணவு எனப்படுவது நிலத்துடன் நீரும் ஆகும். நிலத்தையும் நீரையும் ஒன்று சேர்த்தவர் இவ்வுலகில் உடலையும் உயிரையும் ஒன்று சேர்த்தவர். நெல் முதலிய தானியங்களை விதைத்து மழையைப் பார்த்திருக்கும் பரந்த நிலமாயினும் அதனைச் சார்ந்து ஆளும் அரசனின் முயற்சிக்குச் சிறிதும் உதவாது. அதனால், நான் கூறிய மொழிகளை இகழாது விரைவாகக் கடைப்பிடிப்பாயாக.

நிலம் குழிந்த இடங்கள்தோறும் நீர்நிலையைப் பெருகச் செய்தல் வேண்டும். அவ்வாறு நிலத்துடன் நீரைக் கூட்டியோர் மூவகை இன்பத்தையும் நிலைத்த புகழையும் பெறுவர். இதைச் செய்யாதவர் புகழ் பெறாது வீணே மடிவர்.

இலக்கணக்குறிப்பு

மூதூர், நல்லிசை, புன்புலம் – பண்புத்தொகைகள்; நிறுத்தல் – தொழிற்பெயர் ; அமையா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

நீரும் நிலமும், உடம்பும் உயிரும் – எண்ணும்மைகள்; அடுபோர் – வினைத்தொகை.

கொடுத்தோர் – வினையாலணையும் பெயர்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 45 22/05/18 6:56 PM

பகுபத உறுப்பிலக்கணம்

நிறுத்தல் – நிறு + த் + தல்

நிறு – பகுதி

த் – சந்தி

தல் – தொழிற்பெயர் விகுதி

கொடுத்தோர் – கொடு +த் + த் + ஓர்

கொடு – பகுதி

த் – சந்தி

த் – இறந்தகால இடைநிலை

ஓர் – பலர்பால் வினைமுற்று விகுதி

நூல்வெளி

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று புறநானூறு. இது பண்டைய வேந்தர்களின் வீரம், வெற்றி, கொடை குறித்தும் குறுநில மன்னர்கள், புலவர்கள், சான்றோர்கள் உள்ளிட்டவர்களின் பெருமைகளைப் பற்றியும் அன்றைய மக்களின் புறவாழ்க்கையைப் பற்றியும் கூறுகிறது. இந்நூல் பண்டைத் தமிழர்களின் அரிய வரலாற்றுச்செய்திகள் அடங்கிய பண்பாட்டுக் கருவூலமாகத் திகழ்கிறது.

குளம்தொட்டுக் கோடு பதித்து வழிசீத்து

உளம்தொட்டு உழுவயல் ஆக்கி – வளம்தொட்டுப்

பாகுபடும் கிணற்றோடு என்று இவ்வைம் பாற்படுத்தான்

ஏகும் சொர்க்கத்து இனிது

– சிறுபஞ்சமூலம்

கற்பவை கற்றபின்...

1. பின்வரும் புறநானூற்றுத் தொடர்களுக்கான பொருளைப் பள்ளி நூலகத்திற்குச் சென்று அறிந்து எழுதுக.

   அ) உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே! (புறம் – 18)

   ஆ) உண்பது நாழி உடுப்பவை இரண்டே ! (புறம் – 189)

   இ) யாதும் ஊரே யாவரும் கேளிர் ! (புறம் – 192)

   ஈ) சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே !
   நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே ! (புறம் – 312)

   உ) உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் ,
   பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே ! (புறம் – 183)

2. "உணவாகும் மழை" என்னும் தலைப்பில் விளக்கக் குறிப்புகளுடன் கூடிய படத்தொகுப்பை உருவாக்குக.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 46 22/05/18 6:56 PM

விரிவானம்

இயல் இரண்டு

தண்ணீர்

– கந்தர்வன்

நுழையும்முன்

தண்ணீரின் இன்றியமையாமையையும் தேவையையும் பண்டைய காலத்திலிருந்து இலக்கியங்கள் வலியுறுத்திக் கொண்டேயிருக்கின்றன. இன்று நீர் நெருக்கடி உச்சத்தில் இருக்கிறது. குறிப்பாகச் சிற்றூர்களில் இந்த நெருக்கடி வாழ்க்கைச் சிக்கலாகவே மாறிவருகிறது. இதை உணர்த்துகிறது இச்சிறுகதை.

வெயில் குரூரமாய் அடித்துவிட்டுத் தணியத் தொடங்கிய வேளை; பாசஞ்ஜர் ரயிலின் கூவல் வெகு தொலைவிலிருந்து அருவலாகக் கேட்டது. வல்லநேந்தல் தாண்டியதும் இன்ஜின் டிரைவர்கள் இப்படித்தான் ஒலி எழுப்புவார்கள். திண்ணைக்கு ஓடிவந்து, தூணைப் பிடித்துக் கொண்டு திரும்பிப் பார்த்தாள் இந்திரா. தூரத்தில் ரயில் வருவது மங்கலாகத் தெரிந்தது.

உள்ளே அம்மா 'பொட்டுத் தண்ணியில்லை' என்று ரயில் ஊதல் கேட்டு

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 47 22/05/18 6:56 PM

அனிச்சையாகச் சொல்லிக் கொண்டிருந்தது. ஐயா, சினை ஆட்டைப் பார்த்தபடி திண்ணையில் உட்கார்ந்திருந்தார். ஐயாவுக்கு எப்போதும் கணக்குத்தான். ஆடு குட்டி போட... குட்டி பெருத்துக் குட்டிகள் போட்டுக் குபேரனாகும் கணக்கு.

இந்திரா குடத்தைத் தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டு வாரியைத் தாண்டி ஓடினாள். மேட்டை எட்டும்போது ஏழெட்டுப் பெண்கள் இடுப்பில் குடங்களோடு ஓடிவந்து இந்திராவை முந்தப் பார்த்தார்கள். எல்லோரும் வாலிபப் பெண்கள். முந்துகிற பெண்களைப் பிந்துகிற பெண்கள் சடைகளைப் பிடித்து இழுத்தார்கள். கைகளைப் பிடித்து மடக்கினார்கள். அடுத்தவர் குடங்களைப் படபடவென்று கையால் அடித்தார்கள். சிரிப்பும் கனைப்புமாக ஓடினாலும் முந்துபவர்களைப் பார்த்து நொடிக்கொருமுறை கடுகடுவென்று கோபமானார்கள். அடுத்த நொடியில் முந்தும்போது சிரித்துக் கொண்டார்கள்.

இரண்டு மூன்று குடங்களைத் தூக்கிக்கொண்டு புயல் நுழைவது போல் ரயில் நிலையத்துக்குள் பாய்ந்தார்கள்.

இந்திரா இதில் படுகெட்டியான பெண். எல்லோருக்கும் முன்பாக இடம்பிடித்ததோடு மட்டுமல்லாமல், பதற்றமேயில்லாமல் அலட்சியமாக நிற்கிற அழகைப் பார்த்தால் ஐந்தாறு வருசங்களாக அதே இடத்தில் நிற்பது போல இருந்தது. இடம்பிடிக்க முடியாத பெண்கள் சுவர்களில் சாய்ந்துகொண்டு எகத்தாளம் பேசினார்கள். ஸ்டேஷன் மாஸ்டர் வெள்ளை உடைகளோடும் பச்சைக் கொடியோடும் வந்தவர் இந்தச் சச்சரவைப் பார்த்துவிட்டு, 'ஒரு நாளைக்கு ஸ்குவார்டை வரச்சொல்லி எல்லோரையும் அள்ளிக்கிட்டுப் போயி ஜெயில்ல போடுறேன்' என்றார். பெண்கள் இடுப்புக் குடங்களுக்குள் முகங்களைக் கவிழ்த்து வக்கணையாகச் சிரித்தார்கள்.

ரயில், காட்டுயானை பிளிறிக்கொண்டு வருவதுபோல் நிலையத்துக்குள் நுழைந்தது. பயணிகள் யாரும் இறங்கும் முன்பாக இந்திரா குடத்தோடு பெட்டிக்குள் பாய்ந்தாள். முகம் கழுவும் பேசின் குழாயை அழுத்தி வேகம் வேகமாக அரைச்செம்பும் கால் செம்புமாகப் பிடித்துக் குடத்தில் ஊற்றிக்கொண்டிருந்தாள். இந்தக் குழாயில் தண்ணீர்ச் சனியனும் விறுவிறுவென்று வந்துவிடாது; இந்தப் பீடைக் குடமும் நிறைந்து தொலைக்காது.

இதுதான் நாளை சாயந்திரம்வரை வீட்டுக்குக் குடிதண்ணீர். இதுவும் கிடையாதென்றால், பிலாப்பட்டிக்குப் போக வேண்டும் நல்ல தண்ணீருக்கு. இந்த ஊரும் அக்கம்பக்கத்து ஊர்களும் உவடு அரித்துப் போய்விட்டன. ஊருக்குள் நாலு இடங்களில் கிணறு வெட்டிப் பார்த்தார்கள். உப்பென்றால் குடலை வாய்க்குக் கொண்டுவருகிற உப்பு. கடல் தண்ணீரைவிட ஒருமடங்கு கூடுதலான உப்பு. கிணற்றுத் தண்ணீரில் உப்பளம் போடலாம் என்றார்கள்.

எல்லா ஊர்களும் தீய்ந்து போய்விட்டன. எல்லா ஊரிலும் பருவகாலத்தில் மழை பெய்யும். புயல் வந்தால்தான் இந்தப் பக்கம் பூராவுக்கும் மழை. மழை பெய்வதில்லை... பெய்தால் பேய் மழை. கண்மாய், ஊருணி எல்லாம் உடைப்பெடுத்து வெள்ளம் போய் மூன்றாம் நாள் மறுபடி நீரில்லாப் பூமியாகக் கிடக்கும். ஆகாயத்துக்கும் பூமிக்கும் இந்த ஊர்ப்பக்கம் நிரந்தரப் பகை. ஐயா காலத்தில் உலகம்மாள் கோயில் கிணறு மட்டும் நல்ல தண்ணீர்க் கிணறாக இருந்தது. ஏற்றம் வைத்து அதிகாலை முதல் டின் கட்டி நாலைந்து இளவட்டங்கள் இறைத்துக்கொண்டே இருந்தார்கள். பெண்கள் தலையில் ஒரு குடம், இடுப்பில் ஒரு குடமென்று எடுத்துவந்தார்கள். ஜனங்கள் இலுப்பை மரத்துக்காய், கண்மாய்க் கரம்பை என்று தலை தேய்த்து ஜன்னி வருகிற மாதிரி சுகமாகக் குளித்தார்கள். சனிக்கிழமைகளில் வானவில்லாக எண்ணெயும் வாசனையாகச் சீயக்காயும் மிதக்கும், நந்தவனத்துக்குப் பாயும் தண்ணீரில்.

இப்போது எல்லாமே பூண்டற்றுப் போய்விட்டன. முல்லை மணந்த

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 48 22/05/18 6:56 PM

நந்தவனம் குட்டிச்சுவர்களில் சின்ன அடையாளங்களோடு பாழடைந்து கிடக்கிறது. கிணற்றில் முள்ளை வெட்டிப் போட்டிருக்கிறார்கள். மழைபெய்து குண்டுக்கால் நிறையும்வரை குடிக்கத் தண்ணீர் வேண்டிப் பெண்கள் குடங்களோடு பிலாப்பட்டிக்குப் போகிறார்கள்.

மூணு மைல் தூரம் நடக்கவேண்டும் பிலாப்பட்டிக்கு. ஊருணிக்குப் பக்கமாயிருக்கிறது அந்த நல்ல தண்ணீர்க் கிணறு. ஊற ஊறத்தான் இறைக்கவேண்டும். மதியம் வரை பிலாப்பட்டி ஜனம் மட்டும் இறைத்துக்கொள்ளும். மதியத்துக்குமேல் வெளியூர் ஆள்களுக்கு விடுவார்கள். காய்ந்து கருவாடாகக் கிடந்து, ஒரு சொட்டு சிந்தாமல் நடந்து ஊர் திரும்பி, வீட்டுப் படியேறினால் பொழுது சாய்ந்துகொண்டிருக்கும்.

அம்மாதான் தினமும் பிலாப்பட்டிக்குப்போய் வந்து கொண்டிருந்தது. வயிற்றில் கட்டி வந்ததிலிருந்து இந்திரா குடத்தை எடுத்தாள். நாலு மாசத்துக்கு முன்தான் ரயில் நிலைய ஓரத்து வீடுகளில் இந்தப் பேச்சு வந்தது. 'ஒலகம் பூராவும் தண்ணிலயில்லென்னாலும் சரி, நாள் தவறாம ரயிலுக்கு மட்டும் எங்கிருந்தாவது கொண்டு வந்து ஊத்திவிட்டுருறான் பாரு'. இப்படிப் பேசிப்பேசியே மூன்று மணிக்கு வரும் பாசஞ்சர் ரயிலைக் குறிவைத்துத் தண்ணீர் பிடிக்க ஆரம்பித்தார்கள்.

மூன்று மணி ரயிலுக்கு மதியம் பன்னிரண்டு மணிக்கே பெண்கள் வந்தார்கள். இந்திரா இந்த நேரங்களில் அதிகமாகக் கனவு கண்டாள். உள்ளூரில் எவனுக்கும் கழுத்தை நீட்டிவிடக் கூடாதென்றும் பிலாப்பட்டி மாதிரி தண்ணீருள்ள ஊர்களிலிருந்து பெண்கேட்டு வருவது மாதிரியும் கனவு காண்பாள். பிலாப்பட்டிக்கு நடந்துபோய்த் தண்ணீர் தூக்கிவந்த ராத்திரிகளில், கால் வலியோடு விடிய விடியக் கிடந்திருக்கிறாள்.

நோவோ நொக்காடோ, பொம்பிளை பிலாப்பட்டி போயாக வேண்டும். தண்ணீர்

கொண்டுவந்து சோறு பொங்க வேண்டும். குடிக்கக் கொடுக்கவேண்டும்.

இந்திரா மாதிரி அமைதியாக மற்ற பெண்கள் கனவு காணாமல் இடம்பிடிக்க அடிதடி சண்டைகளில் இறங்குவதையும் ரயில் நிலையமே அவர்கள் ஆதிக்கத்துக்குப் போய்க் கொண்டிருப்பதையும் ஸ்டேஷன் மாஸ்டர் விரும்பவில்லை. சிப்பந்திகளைக் கொண்டு ஒருநாள் வீடுவரை விரட்டினார். அன்று ஒரு பொட்டுத் தண்ணீர்கூட ரயிலிலிருந்து யாராலும் கொண்டு போகமுடியவில்லை. பாய்ண்ட்ஸ்மேன் பக்கத்து ஊர்க்காரர். அவரை வைத்துப் பேசித்தான் இந்த ஏற்பாடு. ரயில் வரும்போதுதான் வரவேண்டும். வந்து சத்தம் போடக்கூடாது. தண்ணீர் கொஞ்சம்தான் பிடிக்க வேண்டும். இவற்றுக்குக் கட்டுப்பட்டு வருவதாகப் பேர்; சண்டை இன்னும்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 49 22/05/18 6:56 PM

நாறிக்கொண்டுதானிருக்கிறது. எந்தச் சண்டை எப்படி நடந்தாலும் இந்தப் பெண்களுக்கு ஆறாத ஆச்சரியம் ஒன்று உண்டு. நம் ஊர்த் தண்ணீரைவிட ஒசத்தியான தண்ணீர் ரயில் குழாயில் வரும்போது, ஏன் சில ரயில் பயணிகள் வெள்ளை வெள்ளை பாட்டில்களில் தண்ணீரைப் பதினைந்து ரூபாய்க்கும் இருபது ரூபாய்க்கும் வாங்கி வைத்துக்கொண்டு திரிகிறார்களென்று.

இந்திரா உள்ளங்கையை இன்னும் அழுத்திக் கொண்டிருந்தாள். தண்ணீர் சன்னமாக வந்தது குழாயில். பாதிக்குடம் கூட நிறையவில்லை. இன்ஜினிலிருந்து ஊதல் ஒலி வந்தது. அம்மா 'சொட்டுத் தண்ணியில்லை' என்று முனகியது ஞாபகத்துக்கு வந்தது. சில நேரங்களில் இன்ஜினிலிருந்து ஊதல் ஒலி வந்தாலும் புறப்படத் தாமதமாகும். ரயில் நகர்கிற மாதிரி இருந்தது. இன்னும் கொஞ்சம் மட்டிலும் பிடித்துக் குடத்தில் ஊற்றிவிட்டுக் குதித்துவிடலாம் என்று நினைத்துக்கொண்டே உள்ளங்கையை மேலும் அழுத்தினாள்.

ரயில் வேகம் அதிகரித்து பிளாட்பார முனை வருவது போலிருந்தது. படபடவென்று செம்பை எடுத்துக் குடத்தைப் பாதையில் வைத்துவிட்டுக் குதிக்கப் போனாள். முழங்கை வரை கண்ணாடி வளையல்கள் அணிந்த ஒரு வடக்கத்திப் பெண் ஓடிவந்து இவளை இழுத்து வண்டிக்குள் தள்ளிவிட்டுக் கோபமாகக் கத்தினாள். மொழி புரியவில்லையென்றாலும், 'தற்கொலை பண்ணிக் கொள்ளவா பார்த்தாய்?' என்கிற மாதிரி ஒலித்தது.

சினை ஆட்டைப் பார்த்தபடி கணக்குப் போட்டுக்கொண்டிருந்த ஐயா காலாறக் கடைத் தெருவுக்குப் போனபோது சின்னவன் ஓடிவந்து இரைந்துகொண்டே சொன்னான், 'ரயில் போயிருச்சு... அக்கா இன்னும் வரலை.'

ஐயா ரொம்ப சாதாரணமாகச் சொன்னார், 'எங்கெயாவது வாயளந்துகிட்டிருக்கும். போய் நல்லாப் பாருலெ.'

'நல்லாப் பாத்துட்டுத்தான் அம்மா சொல்லச் சொன்னுச்சு.'

லேசான பதற்றத்துடன் வீடு வந்தவரிடம் அம்மா படபடவென்று சொன்னாள். 'ஓடுங்க... அந்த ரயிலைப் பிடிங்க. எம்மக அதிலெதான் போயிட்டா. அடுத்த டேசன்ல பிடிங்க போங்க.'

அண்ணன் வீடு, தம்பிவீடு, மச்சினன் வீடுகளிலிருந்து ஆட்கள் ஓடி வந்தார்கள். இரண்டு பஸ்கள் போய் மூன்றாவதாக வந்த ராமநாதபுரம் பஸ்ஸில் ஏறியும் ஏறாமலுமாக கண்டக்டரிடம் கத்தினார்கள். 'பாசஞ்சர் ரயிலைப் பிடிப்பா...' டிக்கெட் கொடுப்பதில் மும்முரமாயிருந்த கண்டக்டர், அதைச் சாதாரண முறையில் கேட்டுக்கொண்டு பதறாமலுமிருக்கவே ஐயாவின் மைத்துனர் பாய்ந்தார்...

'பொண்ணு ரயிலோட போயிருச்சுனு நாங்க ஈரக்குலையைப் பிடிச்சுக்கிட்டுக் கத்துறோம். சிணுங்காமக் கேட்டுக்கிட்டு நிக்கிறீரு. டிரைவர்ட்ட சொல்லுமய்யா, வேகமா ஓட்டச் சொல்லி...' விவகாரம் வேண்டாமென்று கண்டக்டரும், 'வேகமாப் போங்கண்ணே' என்று ஒப்புக்குச் சொல்லிவிட்டு டிக்கெட் கொடுத்துக்கொண்டிருந்தார்.

கும்பல், டிரைவரிடம் போய்க் கத்தியது. டிரைவர் விரட்டிக் கொண்டுபோய்ச் சேர்ந்தார்.

இவர்கள் போய்ச் சேர்ந்தபோது ராமநாதபுரம் ரயில் நிலையத்தில் ஈ எறும்புகூட இல்லை. ஸ்டேஷன் மாஸ்டரிலிருந்து ஒவ்வொருவரிடமாக விசாரித்தார்கள்.

'குடத்தோட ஒரு பொண்ணு எறங்குச்சா...?' என்று. யாரும் பார்த்ததாகச் சொல்லவில்லை. போன ஆட்களில் குயுக்தியான ஒருவர் சொன்னார், 'புள்ளைட்ட டிக்கெட் இல்லைங்கிறதனாலெ யாருக்கும் தெரியாம ஒளிஞ்சு ஒளிஞ்சு வெளியே போயிருக்கும்யா.'

ரயில் நிலையத்துக்கு வெளியே எல்லா இடங்களிலும் கேட்டார்கள். ராமநாதபுரம் வடக்குத் தெருவில், அத்தை வண்டிக்காரத் தெருவில், சின்னம்மா வீடு, தெரிந்தவீடு, அறிந்தவீடு பூராவும் தேடிவிட்டு பஸ் ஸ்டாண்டுக்குப் போனார்கள். பால்கடை,

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 50 22/05/18 6:56 PM

பழக்கடையென்று ராமநாதபுரத்தையே சல்லடை போட்டுச் சலித்துப் பார்த்துவிட்டுக் கவலையும் அசதியுமாக ஆட்கள் ஊர் திரும்பினார்கள்.

வீட்டு வாசலில் இவர்களை எதிர்பார்த்துக் காத்திருந்த கூட்டத்தில் ஒருவர் 'மெட்ராசுக்கே போயிருச்சோ புள்ளை' என்று சந்தேகம் எழுப்ப.... ஐயா கத்தினார், 'ஒன் கழுத்தைக் கடிச்சு மென்னுபுருவேன்; பேசாம இரு' ஐயா கூடப் போய்த் திரும்பிய ஆள்களில் ஒருவர் கூட்டத்தின் கவலையைக் கவனித்துவிட்டுச் சொன்னார். 'நாம அடுத்தடுத்த ஸ்டேஷன்களுக்குப் போய்ப் பார்த்திருக்கணும் எங்கெயாவது புள்ளை எறங்கித் தெசை தெரியாம நிக்குதான்னு... இங்கெ உக்காந்து என்ன செய்யிறது.'

அம்மாவுக்கு இந்தப் பேச்சுகளைக் கேட்டுக் குமட்டலும் மயக்கமுமாய் வந்தது. இந்தக் கூட்டத்தில் யாரும் எட்டமுடியாத யோசனைக்குப் போய், பொருமிக்கொண்டும் வாயில் முந்தானையை அழுத்திக்கொண்டும் சொன்னாள், 'எம்புள்ளை எந்த ஊரு தண்டவாளத்திலெ விழுந்து கெடக்கோ' அவளால் அடக்கமுடியவில்லை. அவளை யாரும் பிடித்து அடக்கவும் முடியவில்லை.

ஆவேசம் வந்தவள்போல் ரயில் நிலையத்துக்கு ஓடினாள். பின்னாலேயே ஐயாவும் ஊர் ஜனமும் ஓடியது. பொழுது இருட்டிக்கொண்டு வந்தது. அம்மா தண்டவாளத்தின் ஓரத்திலேயே ஓட ஆரம்பித்தாள். பத்தடி ஓடியதும் ஐயா, அம்மாவைப் பிடித்து இழுத்து நிறுத்திவிட்டுக் கூர்ந்து பார்த்தார். தூரத்தில் ஒரு உருவம் தெரிந்தது.

நெருங்க நெருங்க அம்மாதான் முதலில் கத்தினாள். 'அந்தா, இந்திரா வருது. இடுப்பில் தண்ணீர்க் குடத்தோடு இந்திரா கூட்டத்தருகில் வந்தாள். அம்மா நிறை பூரிப்பில் விம்மிக்கொண்டு போய்க் குடத்தை வாங்கினாள். நிறைகுடம், சொட்டுச் சிந்தாமல் கொண்டு வந்துவிட்டாள்.

மகள் வந்து சேர்ந்ததில் மலர்ந்துபோய் ஐயா கேட்டார்... 'பயமகளே... இதையும் சொமந்துக்கிட்டா வரணும்; இத்தனை மைலுக்கும்?' இந்திரா சொன்னாள்... 'ஊக்கும்.. நாளைக்கு வரை குடிக்க எங்கெ போறது?'

நூல் வெளி

கந்தர்வனின் இயற்பெயர் நாகலிங்கம். இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். தமிழ்நாடு அரசின் கருவூலக் கணக்குத்துறையில் பணியாற்றியவர். கவிதைகளையும் எழுதியிருக்கிறார். சாசனம், ஒவ்வொரு கல்லாய், கொம்பன் முதலியவை இவரது குறிப்பிடத் தகுந்த சிறுகதைத் தொகுப்புகள்.

கற்பவை கற்றபின்...

1. உலகில் நீர் இல்லை என்றால் என்னவெல்லாம் நடக்கும் என்பதைக் கற்பனை செய்து உங்கள் கருத்துகளை வகுப்பறையில் பகிர்ந்து கொள்க.

2. பீங்... பீங்... என்ற சத்தத்துடன் தண்ணீர் வாகனம் ஒன்று வேகமாக வந்து நின்றது. அம்மா குடங்களுடன் ஓடிச்சென்று வரிசையில் நின்றாள். அப்போது கருமேகங்கள் திரண்டன..... கதையைத் தொடர்ந்து எழுதி நிறைவு செய்க.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 51 22/05/18 6:56 PM

கற்கண்டு

இயல் இரண்டு

துணைவினைகள்

வினைவகைகள்

வினைச்சொற்களை அவற்றின் அமைப்பு, பொருள், சொற்றொடரில் அவை தொழிற்படும் விதம் முதலான அடிப்படைகளில் பலவகையாகப் பாகுபடுத்தலாம்.

தனிவினையும் கூட்டுவினையும்

வினைச்சொற்களை அமைப்பின் அடிப்படையில் தனிவினை, கூட்டுவினை என இருவகைப்படுத்தலாம்.

தனிவினை

படி, படியுங்கள், படிக்கிறார்கள்.

மேற்காணும் சொற்களைக் கவனியுங்கள். இவற்றில் படி என்னும் வினையடியும் சில ஒட்டுகளும் உள்ளன. படி என்னும் வினையடி, பகாப்பதம் ஆகும். அதை மேலும் பொருள்தரக்கூடிய கூறுகளாகப் பிரிக்க முடியாது. இவ்வாறு, தனிவினையடிகளை அல்லது தனிவினையடிகளைக் கொண்ட வினைச்சொற்களைத் தனிவினை என்பர்.

கூட்டுவினை

ஆசைப்பட்டேன், கண்டுபிடித்தார்கள், தந்தியடித்தேன், முன்னேறினோம்.

மேற்காணும் சொற்களைக் கவனியுங்கள். ஆசைப்படு, கண்டுபிடி, தந்தியடி, முன்னேறு என்பன அவற்றின் வினையடிகள். அவை பகுபதங்கள் ஆகும். இவ்வாறு பகுபதமாக உள்ள வினையடிகளைக் கூட்டுவினையடிகள் என்பர். அவ்வகையில் கூட்டுவினையடிகளைக் கொண்ட வினைச்சொற்களைக் கூட்டுவினை என்பர்.

கூட்டுவினைகள் பொதுவாக மூன்று வகையாக ஆக்கப்படுகின்றன.

1) பெயர் + வினை = வினை

தந்தி + அடி = தந்தியடி

ஆணை + இடு = ஆணையிடு

கேள்வி + படு = கேள்விப்படு

2) வினை + வினை = வினை

கண்டு + பிடி = கண்டுபிடி

சுட்டி+ காட்டு = சுட்டிக்காட்டு

சொல்லி + கொடு = சொல்லிக்கொடு

3) இடை + வினை = வினை

முன் + ஏறு = முன்னேறு

பின் + பற்று = பின்பற்று

கீழ் + இறங்கு = கீழிறங்கு

முதல்வினையும் துணைவினையும்

நான் படம் பார்த்தேன்.

கண்ணன் போவதைப் பார்த்தேன்.

இந்தச் சொற்றொடர்களில், பார் என்னும் வினை, கண்களால் பார்த்தல் என்னும் பொருளைத் தருகிறது. இது பார் என்னும் வினையின் அடிப்படைப் பொருள் அல்லது சொற்பொருள்(LEXICAL MEANING) எனலாம்.

ஓடப் பார்த்தேன்.

எழுதிப் பார்த்தாள்.

இந்தச் சொற்றொடர்களில் ஓடப்பார், எழுதிப்பார் என்பன கூட்டுவினைகள் ஆகும். இவற்றில் இரண்டு உறுப்புகள் உள்ளன. ஓட,

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 52 22/05/18 6:56 PM

எழுதி என்பன முதல் உறுப்புகள். இவை அந்தந்த வினைகளின் அடிப்படைப் பொருளைத் தருகின்றன. பார் என்பது இரண்டாவது உறுப்பு. இது இவ்வினையின் அடிப்படைப் பொருளான பார்த்தல் என்னும் பொருளைத் தராமல் தனது முதல் உறுப்போடு சேர்ந்து வேறு பொருள் தருகிறது.

ஓடப் பார்த்தேன் – இதில் பார் என்பது முயன்றேன் என்னும் முயற்சிப் பொருளைத் தருகிறது.

எழுதிப் பார்த்தாள் – இதில் பார் என்பது சோதித்து அறிதல் என்னும் பொருளைத் தருகிறது.

ஒரு கூட்டுவினையின் முதல் உறுப்பாக வந்து தன் அடிப்படைப் பொருளைத் தரும் வினை முதல் வினை (MAIN VERB) எனப்படும். ஒரு கூட்டுவினையின் இரண்டாவது உறுப்பாக வந்து தன் அடிப்படைப் பொருளை விட்டுவிட்டு முதல் வினைக்குத் துணையாக வேறு இலக்கணப் பொருளைத் தரும் வினை துணைவினை எனப்படும்.

கூட்டுவினையின் முதல் வினை செய அல்லது செய்து என்னும் வினையெச்ச வடிவில் இருக்கும். துணைவினை, வினையடி வடிவில் இருக்கும். துணைவினையே திணை, பால், இடம், காலம் காட்டும் விகுதிகளைப் பெறும். தமிழில் ஏறத்தாழ 40 துணைவினைகள் உள்ளன. அவற்றுள் பெரும்பாலானவை முதல்வினையாகவும் செயல்படுகின்றன.

பார், இரு, வை, கொள், போ, வா, முடி, விடு, தள்ளு, போடு, கொடு, காட்டு முதலானவை இருவகை வினைகளாகவும் செயல்படுகின்றன.

துணைவினைகளின் பண்புகள்

1. துணைவினைகள் பேசுவோரின் மனநிலை, செயலின் தன்மை போன்றவற்றைப் புலப்படுத்துகின்றன.

2. இவை முதல் வினையைச் சார்ந்து அதன் வினைப்பொருண்மைக்கு மெருகூட்டுகின்றன.

3. பேச்சு மொழியிலேயே துணைவினைகளின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது.

தற்காலத் தமிழில் ஆம், ஆயிற்று, இடு, ஒழி, காட்டு, கூடும், கூடாது, கொடு, கொண்டிரு, கொள், செய், தள்ளு, தா, தொலை, படு, பார், பொறு, போ, படு, வை, வந்து, விடு, வேண்டாம், முடியும், முடியாது, இயலும், இயலாது, வேண்டும், உள் போன்ற பல சொற்கள் துணைவினைகளாக வழங்குகின்றன.

வினையடி	முதல்வினை	துணைவினை
இரு	புத்தகம் மேசையில் இருக்கிறது	நான் மதுரைக்குப் போயிருக்கிறேன்.
	என்னிடம் பணம் இருக்கிறது.	அப்பா வந்திருக்கிறார்.
வை	அவள் நெற்றியில் பொட்டு வைத்தாள்.	நீ என்னை அழ வைக்காதே.
	அவன் வானொலியில் பாட்டு வைத்தான்.	அவர் ஒருவரைப் பாட வைத்தார்.
கொள்	பானை நான்கு படி அரிசி கொள்ளும்.	நீ சொன்னால் அவன் கேட்டுக் கொள்வான்.
	நான் சொன்னதை நீ கருத்தில் கொள்ளவில்லை.	நோயாளியைப் பார்த்துக் கொள்கிறேன்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 53 22/05/18 6:56 PM

போ	அவன் எங்கே போகிறான்?	மழை பெய்யப் போகிறது.
	நான் கடைக்குப் போனேன்.	நான் பயந்துபோனேன்.
வா	நீ நாளைக்கு வீட்டுக்கு வா.	அந்நியர் நம்மை ஆண்டு வந்தனர்.
	எனக்கு இப்போதுதான் புத்தி வந்தது.	வானம் இருண்டு வருகிறது.
விடு	யாரையும் உள்ளே விடாதே.	அடுத்த மாதம் நான் போய்விடுவேன்.
	மழைவிட்டதும் போகலாம்.	அப்பா இனி வந்துவிடுவார்.
தள்ளு	அவன் என்னைக் கீழே தள்ளினான்.	அவர் கதைகதையாக எழுதித்தள்ளுகிறார்.
	காய்கறிவண்டியைத் தள்ளிச் சென்றார்.	அவன் அனைத்தையும் வாசித்துத் தள்ளுகிறான்.
போடு	புத்தகத்தைக் கீழே போடாதே.	மலிவான விலையில் வாங்கிப் போட்டேன்.
	தலையில் தொப்பியைப் போடு.	விழித்தவுடன் பாயைச் சுருட்டிப் போடவேண்டும்.
கொடு	நான் அவருக்குப் பணம் கொடுத்தேன்.	பசித்தவனுக்குச் சோறு வாங்கிக் கொடுத்தான்.
	அவன் உயிரைக் கொடுத்து வேலை செய்கிறான்.	பாடம் சொல்லிக் கொடுப்பேன்.
காட்டு	தாய் குழந்தைக்கு நிலவைக் காட்டினாள்.	ஆசிரியர் செய்யுளைப் பாடிக் காட்டினார்.
	சான்றோர் காட்டிய பாதையில் செல்.	படித்தபடி நடந்துகாட்ட வேண்டும்.

தமிழ் மற்றும் ஜப்பானிய மொழிகளில் துணைவினைகள் முதல் வினைகளுக்குப் பின்பே இடம்பெறும். (எ.கா.) கீழே விழப் பார்த்தான். இத்தொடரில் விழு (விழ) என்பது முதல்வினை; பார்த்தான் என்பது துணைவினை.

தமிழின் துணைவினைக் கொள்கை ஆங்கிலத்தின் துணைவினைக் கொள்கையிலிருந்து வேறுபட்டது. அதாவது, தமிழில் துணைவினையாக வரும் வேர்ச்சொல் சில தொடர்களில் முதல்வினையாகவும் வரும்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 54 22/05/18 6:56 PM

கற்பவை கற்றபின்...

1. பொருத்தமான துணைவினைகளைப் பயன்படுத்துக.

அ) மனிதனையும் விலங்குகளையும் (வேறு) _____ மொழியாகும்.

ஆ) திராவிட மொழிகள் சில, பொதுப் பண்புகளைப் (பெறு) _____ .

இ காலந்தோறும் தன்னைப் (புதுப்பித்து) _____ மொழி தமிழ்.

ஈ) என் ஐயத்தைக் கேட்பதற்கு எவரேனும் கிடைக்கமாட்டார்களா என்று (தேடு) _____.

2. கீழ்க்காணும் துணைவினைகளைப் பயன்படுத்திப் புதிய தொடர்களை எழுதுக.

அ) வேண்டும் ஆ) பார் இ) உள் ஈ) வா உ) விடு

3. பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்துகையில் துணைவினைகளைச் சேர்க்கிறோம். பிறமொழிச் சொற்களைத் தமிழ்ச் சொற்களாக மாற்றி, ஏற்ற துணைவினைகளை இட்டு எழுதுக

மார்னிங் எழுந்து, பிரஷ் பண்ணி, யூனிஃபார்ம் போட்டு ஸ்கூலுக்குப் போனாள்.

.....

.....

.....

.....

4. சிந்தனை வினா

அ) வேற்று மொழிச் சொற்களைப் பயன்படுத்துகையில் துணைவினைகளின் பங்கு குறித்துச் சிந்தித்து எழுதுக. (எடுத்துக்காட்டு: பேனாவை யூஸ் பண்ணு)

ஆ) நாம் நமது தொலைபேசி எண்ணைச் சொல்லும்போது மட்டும் ஆங்கிலத்தில் சொல்கிறோம்! தமிழில் சொல்ல முயல்க.

இ) சந்தையில் காய்கறிகளை வாங்கும்போது, உங்களுக்கும் கடைக்காரருக்கும் நடக்கும் உரையாடலைத் துணைவினைகளைப் பயன்படுத்தி எழுதுக.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 55 22/05/18 6:56 PM

மதிப்பீடு

பலவுள் தெரிக.

1. "மிசை" – என்பதன் எதிர்ச்சொல் என்ன ?

   அ) கீழே ஆ) மேலே இ) இசை ஈ) வசை

2. நீர் நிலைகளோடு தொடர்பில்லாதது எது ?

   அ) அகழி ஆ) ஆறு இ) இலஞ்சி ஈ) புலரி

3. பொருத்தமான விடையைத் தேர்க.

   அ. நீரின்று அமையாது உலகு – திருவள்ளுவர்

   ஆ. நீரின்று அமையாது யாக்கை – ஔவையார்

   இ. மாமழை போற்றுதும் – இளங்கோவடிகள்

   i) அ, இ ii) ஆ, இ iii) அ, ஆ iv) அ, ஆ, இ

4. பொருத்தமான வினையை எடுத்து எழுதுக.

   கதிர் அலுவலகத்திலிருந்து விரைவாக ----------.

   அவன் பையன் பள்ளியிலிருந்து இன்னும் ----------.

   அ) வந்தான் , வருகிறான் ஆ) வந்துவிட்டான், வரவில்லை

   இ) வந்தான் , வருவான் ஈ) வருவான், வரமாட்டான்

5. மல்லல் மூதூர் வயவேந்தே- கோடிட்ட சொல்லின் பொருள் என்ன?

   அ) மறுமை ஆ) பூவரசு மரம் இ) வளம் ஈ) பெரிய

குறுவினா

1. "கூவல்" என்று அழைக்கப்படுவது எது?

2. உங்களது பள்ளியைச் சுற்றியுள்ள நீர்நிலைகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

3. உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே – குறிப்பு தருக.

4. நிலையான வானத்தில் தோன்றி மறையும் காட்சிக்குப் பெரியபுராணம் எதனை ஒப்பிடுகிறது?

5. மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
   காடும் உடையது அரண் – இக்குறள் கூறும் நாட்டின் அரண்கள் யாவை?

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 56 22/05/18 6:56 PM

சிறுவினா

1. அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை – அதற்கு நாம் செய்யவேண்டியவற்றை எழுதுக.
2. நிலைத்த புகழைப் பெறுவதற்குக் குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?
3. சோழர்காலக் குமிழித்தூம்பு எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?
4. பட்ட மரத்தின் வருத்தங்கள் யாவை?

நெடுவினா

1. நீரின்று அமையாது உலகு – என்னும் வள்ளுவரின் அடி உணர்த்தும் பொருள் ஆழத்தை எடுத்துக்காட்டுடன் விவரி.
2. பெரியபுராணம் காட்டும் திருநாட்டுச் சிறப்பினைத் தொகுத்து எழுதுக.
3. 'தண்ணீர்' கதையைக் கருப்பொருள் குன்றாமல் சுருக்கித் தருக.

மொழியை ஆள்வோம்!

படித்துச் சுவைக்க.

பூ மொழி

வீட்டின் பக்கத்தில் நிற்கிறது ஒரு மரம்
கூடத்துச் சன்னலையும்
சமையலறைச் சன்னலையும்
விரிந்த கிளைகளால்
பார்த்துக் கொண்டிருக்கிறது.
கைகளசைத்துக் கால்களுதைத்துக்
கூடத்தில் கிடக்கும் சிசு
மிழற்றுகிறது ஒரு சொல்லை
சமையலறையில்
பணி முனைந்திருக்கிற அம்மா
அச்சொல்லையே நீள வாக்கியங்களாக்கிப்
பதில் அனுப்புகிறாள்.
விரல் நீட்டிச் சிசு பேசுகிறது மீண்டும்
அத்தொனியிலேயே அம்மா குழறுகிறாள்
கடவுளுக்கும் புரியாத அவ்வுரையாடலைக் கிரகிக்கக்
கூடத்துச் சன்னலுக்கும்
சமையலறைச் சன்னலுக்குமாய்க்
கிளைகளின் வழியே ஓடி ஓடிக்
கவனிக்கிறது அணில்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 57 22/05/18 6:56 PM

பெருகும் சொற்களும்
அபூர்வ எதிர்வினைகளும்
அதீதக் குழப்பத்திலாழ்த்த
அணில் ஓடிக் களைக்கிறது சன்னல்களுக்கிடையே
அர்த்தங்களை மரம் பூக்களாக மொழிபெயர்த்து
அதன்மீது உதிர்த்துக்கொண்டிருப்பது தெரியாமல்.

–யூமா வாசுகி

இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.

1. *Every flower is a soul blossoming in nature – Gerard De Nerval*
2. *Sunset is still my favourite colour, and rainbow is second – Mattie Stepanek*
3. *An early morning walk is a blessing for the whole day – Henry David Thoreau*
4. *Just living is not enough... One must have sunshine, freedom, and a little flower – Hans Christian Anderson*

பிழை நீக்கி எழுதுக.

1. சர் ஆர்தர் காட்டன் கல்லணையின் கட்டுமான உத்திகொண்டுதான் தௌலீஸ்வரம் அணையைக் கட்டியது.
2. மதியழகன் தீக்காயம் ஏற்பட்ட இடத்தில் உடனடியாகத் தண்ணீர் கொண்டு குளிர வைத்தாள்.
3. மழையே பயிர்க்கூட்டமும் உயிர்க்கூட்டமும் வாழப் பெருந்துணை புரிகின்றன.
4. நீலனும் மாலனும் அவசரகாலத் தொடர்புக்கான தொலைப்பேசி எண்களின் பட்டியலை வைத்திருக்கிறோம்.
5. சூறாவளியின் போது மேல்மாடியில் தங்காமல் தரைத்தளத்திலேயே தங்கியதால் தப்பிப்பான்.

பழமொழிகளைப் பயன்படுத்திச் சொற்றொடர் அமைக்க.

1. நெல்லுக்குப் பாய்கிற தண்ணீர் புல்லுக்குப் பாய்வது போல.
2. தண்ணீர் வெந்நீர் ஆனாலும் நெருப்பை அணைக்கும்.
3. மெல்லப் பாயும் தண்ணீர் கல்லையும் கரைக்கும்.
4. கிணற்றுத் தண்ணீரை வெள்ளம் கொண்டு போகாது.

வடிவ மாற்றம் செய்க.

நீர்ச் சுழற்சி குறித்த கருத்து விளக்கப்படத்தின் உட்பொருளைப் புரிந்துணர்ந்து பத்தியாக மாற்றி அமைக்க.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 58 22/05/18 6:56 PM



வரவேற்பு மடல் எழுதுக.

சுற்றுச் சூழலைப் பேணிக்காக்கும் பள்ளிகளின் வரிசையில் மாவட்டத்திலேயே சிறந்த தாக உங்கள் பள்ளி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அதனைக் கொண்டாடும் விழாவில் கலந்துகொள்ளும் மாவட்டக் கல்வி அலுவலருக்கு வரவேற்பு மடல் ஒன்றை எழுதுக.

நயம் பாராட்டுக.

கல்லும் மலையும் குதித்துவந்தேன் – பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி – எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்.
ஏறாத மேடுகள் ஏறிவந்தேன்–பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்;
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன்–மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.

– *கவிமணி*

மொழியோடு விளையாடு

சொல்லுக்குள் சொல் தேடுக.

எ.கா. ஆற்றங்கரையோரம் – ஆறு, கரை, ஓரம்

கடையெழுவள்ளல்கள், எடுப்பார்கைப்பிள்ளை, தமிழ்விடுதூது
பாய்மரக்கப்பல், எட்டுக்கால்பூச்சி.

அகராதியில் காண்க.

கந்தி, நெடில், பாலி, மகி, கம்புள், கைச்சாத்து.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 59 22/05/18 6:56 PM

சொற்களை இணைத்துத் தொடர்களை விரிவுபடுத்துக.

(எ.கா.) அரிசி போடுகிறேன்.

விடை:

புறாவுக்கு அரிசி போடுகிறேன்.

காலையில் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.

நாள்தோறும் காலையில் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.

நான் நாள்தோறும் காலையில் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.

நான் நாள்தோறும் காலையில் மறக்காமல் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.

நான் நாள்தோறும் காலையில் ஒருபோதும் மறக்காமல் புறாவுக்கு அரிசி போடுகிறேன்.

1. மழை பெய்தது.
2. வானவில்லைப் பார்த்தேன்.
3. குழந்தை சிரித்தது.
4. எறும்புகள் போகின்றன.
5. படம் வரைந்தான்.

வேறுபட்ட வினையெச்சங்களைப் பயன்படுத்தி, முதல்வினைகளைத் துணைவினைகளாக மாற்றுக.

முதல்வினைகள் – பார்த்தேன், கொடுத்தார், நடந்தான், சேர்ந்தார், அமைத்தோம்.

(எ.கா.) பார்த்தேன்



வினையடிகளை முதல்வினையாகவும் துணைவினையாகவும் அமைந்த தொடர்களாக உருவாக்குக.

வினையடி – வா, போ, செய், மாற்று, இரு, கொடு, கொள், எழுது, விடு, போடு.

(எ.கா.) வினையடி – வை

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 60 22/05/18 6:56 PM

முதல்வினை	துணைவினை
மூட்டையைத் தலையில் வைத்தான்.	அம்மா குழந்தையைத் தூங்க வைத்தார்.
இலையில் இனிப்பை வைத்தனர்.	நான் உனக்கு ஒரு நூல் வாங்கி வைத்தேன்.
	எதற்கும் சொல்லி வை.

காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

.....

.....

.....

.....

செயல்திட்டம்

கொடுக்கப்பட்ட இணையத்தள இணைப்பில் உள்ள காணொலியைக் கண்டு அதுகுறித்த உங்கள் கருத்துகளை இருபக்க அளவில் எழுதி வகுப்பறையில் கலந்துரையாடுக.

https://www.youtube.com/watch?v=0ReVrONNvoQ

நிற்க அதற்குத் தக...

என் பொறுப்புகள்...

அ) தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவேன்.

ஆ) வகுப்பறையில் நண்பர்கள் வைத்திருக்கும் பொருள்கள் மீது நாட்டம் இருந்தும் அவற்றைத் தெரியாமல் எடுக்கும் ஒழுங்கற்ற செயலைச் செய்யமாட்டேன்.

இ) அறையை விட்டு வெளியே செல்லும்போது மின்விசிறி, மின்விளக்குகளை நிறுத்திவிட்டுச் செல்வேன்.

ஈ) ----------

உ) ----------

ஊ) ----------

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 61 22/05/18 6:56 PM

கலைச்சொல் அறிவோம்

குமிழிக் கல் – *Conical Stone*

நீர் மேலாண்மை – *Water Management*

பாசனத் தொழில்நுட்பம் – *Irrigation Technology*

வெப்ப மண்டலம் – *Tropical Zone*

அறிவை விரிவு செய்

1. அழகின் சிரிப்பு – பாவேந்தர் பாரதிதாசன்
2. தண்ணீர் தண்ணீர் – கோமல் சுவாமிநாதன்
3. தண்ணீர் தேசம் – வைரமுத்து
4. வாய்க்கால் மீன்கள் – வெ. இறையன்பு
5. மழைக்காலமும் குயிலோசையும் – மா. கிருஷ்ணன்

மறைநீர் (*Virtual Water*)

கண்ணுக்குத் தெரியாமல் நாம் இரண்டு வகையில் நீரைப் பயன்படுத்துகிறோம். முதல் வகை நாம் பயன்படுத்தும் பொருள்கள் வழியாக; இரண்டாவது வகை நாம் உண்ணும் உணவின் வழியாக. புலப்படாத் தண்ணீர் என்பது உணவுப் பொருள்களின் உற்பத்தி குறித்தும் அதனை உற்பத்தி செய்ய செலவிடப்பட்ட தண்ணீர்த் தேவை குறித்தும் பேசுவது ஆகும். ஒரு கிலோ ஆப்பிளை உற்பத்தி செய்ய 822லிட்டர் தண்ணீரும் ஒரு கிலோ சர்க்கரையை உற்பத்தி செய்ய 1780லிட்டர் தண்ணீரும் ஒரு கிலோ அரிசியை உற்பத்தி செய்ய 2500 லிட்டர் தண்ணீரும் ஒரு கிலோ காப்பிக் கொட்டையை உற்பத்தி செய்ய 18,900 லிட்டர் தண்ணீரும் தேவைப்படுகின்றது. நீர்வளத்தைப் பாதுகாக்க நாட்டின் மேல்புற நீர்வளம் மற்றும் நிலத்தடி நீர்வளம் குறித்து அக்கறை கொள்ளவேண்டும். நீர் அதிகம் தேவைப்படும் உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்வதைத் தவிர்த்து தேவைக்கேற்ப இறக்குமதி செய்துகொள்ள வேண்டும். இதனால் நாட்டின் நிலத்தடி நீரும், ஆற்று நீரும் சேமிக்கப்படும்.

(மா. அமரேசன்--கண்ணுக்குப் புலப்படாத தண்ணீரும் புலப்படும் உண்மைகளும்)

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 62 22/05/18 6:56 PM

இயல் மூன்று

உள்ளத்தின் சீர்

கற்றல் நோக்கங்கள்

- தமிழர்களின் பண்பாட்டு அசைவுகளை உணர்ந்து பின்பற்றுதல்
- அறவுணர்வை வெளிப்படுத்தும் வீர விளையாட்டென ஏறுதழுவுதலை ஏற்றல்
- தொல்லியல் எச்சங்களைப் பாதுகாத்தல்
- விழாக்கள் பண்பாட்டின் தொடர்ச்சியாகக் கொண்டாடப்பட்டு வருபவை என்பதை உணர்ந்து பங்கேற்றல்
- பட்டிமன்றம் என்ற கருத்துப்பரிமாற்ற வடிவத்தை நேர்த்தியுடன் பயன்படுத்துதல்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 63 22/05/18 6:56 PM

இயல் மூன்று

ஏறு தழுவுதல்



வீரத்திற்கும் விளைச்சலுக்கும் செழிப்பிற்கும் செல்வத்திற்கும் தமிழர்களால் அடையாளப்படுத்தப்படுபவை மாடுகள். முல்லை மற்றும் மருதநிலங்களில் கால்கொண்டு தமிழர்தம் வாழ்வோடு பின்னிப்பிணைந்து பண்பாடாகியுள்ளது ஏறுதழுவுதல். ஏறுதழுவுதல், தமிழரின் நாகரிகத்தை உணர்த்தும் விளையாட்டு; இளைஞர்களின் வீரத்தைப் பெருமிதப்படுத்தும் பண்பாட்டு நிகழ்வு. இது, நூற்றாண்டுகள் பல கடந்தும் தமிழர்தம் அடையாளமாகவே நிறுவப்பட்டிருக்கிறது.

பண்பாட்டுத் தொன்மையும் இலக்கிய வளமையும் வாய்ந்தது தமிழர் வரலாறு. இயற்கையைச் சார்ந்தும் பிற உயிர்களோடு இணைந்தும் வாழ்ந்தனர் சங்ககாலத் தமிழர்கள். இதற்குச் சங்க இலக்கியங்களில் ஏராளமான சான்றுகள் உள்ளன. அவற்றுள் ஒன்று ஏறு தழுவுதல் நிகழ்வாகும்.

இலக்கியங்களில் ஏறு தழுவுதல்

சங்க இலக்கியமான கலித்தொகையில், ஏறு தழுவுதல் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. முல்லைநில ஆயர்கள் பங்கேற்கும் இந்நிகழ்வு, அவர்களின் வீரத்தினை மெய்ப்பிக்கக்கூடிய ஒன்றாகத் திகழ்கிறது.

எழுந்தது துகள்,
ஏற்றனர் மார்பு
கவிழ்ந்தன மருப்பு,
கலங்கினர் பலர்

(கலி – 102: அடி 21–24)

என்று முல்லைக்கலியில் ஏறு தழுவுதல் களம் குறித்த அடிகள், காட்சியை நம் கண்முன்னே நிறுத்துகின்றன. காளைகளின் பாய்ச்சல் பற்றியும் கலித்தொகை கூறுகிறது.

திமில் பெருத்த காளைகள் பல, நிலத்திலிருந்து நீரைக் கொண்டு

வருபவைபோல நிலத்தை முட்டின; சில நிலத்தை நொறுக்கின; சில தம்முள் முரண்பட்டு ஒன்றோடொன்று எதிர்த்துக் கொண்டன; சில மண்டியிட்டுப் பாய்ந்தன.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 64 22/05/18 6:56 PM

இந்தக் காளைகள் மிடுக்குடனும் வீரத்துடனும் போருக்குச் செல்லும் மருதநிலத்துப் போர் வீரர்களை நிகர்த்தனவாக இருந்தன. இதனை,

நீறு எடுப்பவை, நிலம் சாடுபவை,
மாறுஏற்றுச் சிலைப்பவை, மண்டிப் பாய்பவையாய்
துளங்கு இமில் நல்ஏற்றினம் பல களம்புகும்
மள்ளர் வனப்பு ஒத்தன

(கலி – 106: அடி 7–10)

என்று கலித்தொகை விவரிக்கிறது.

கலித்தொகை தவிர, சிலப்பதிகாரம் முதலான இலக்கியங்களிலும் புறப்பொருள் வெண்பாமாலை என்னும் இலக்கண நூலிலும் ஏறுகோள் குறித்துக் கூறப்பட்டுள்ளது.

ஏறு தழுவுதல் பற்றிப் பிற்காலச் சிற்றிலக்கியங்களுள் ஒன்றான பள்ளு இலக்கியத்திலும் குறிப்புகள் உள்ளன. எருதுகட்டி என்னும் மாடு தழுவுதல் நிகழ்வைக் கண்ணுடையம்மன் பள்ளு பதிவு செய்துள்ளது.

தொல்சான்றுகள்

ஏறு தழுவுதல் குறித்த பல நடுகற்கள், புடைப்புச் சிற்பங்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கண்டறியப்பட்டுள்ளன.

நடுகல் – சேலம்

தெரிந்து தெளிவோம்

எகிப்தில் உள்ள பெனி – ஹாசன் சித்திரங்களிலும், கிரீட் தீவிலுள்ள கினோஸஸ் என்னுமிடத்தில் உள்ள அரண்மனைச் சித்திரங்களிலும் காளைப்போர் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன.

சேலம் மாவட்டத்தில் எருது விளையாடி மரணமுற்றவன் பெயரால் எடுக்கப்பட்ட எருது பொருதார் கல் ஒன்று உள்ளது. கோவுரிச் சங்கன் கருவந்துறையிலே எருது விளையாடி பட்டான் சங்கன் மகன் பெரிய பயலு நட்டகல்லு என்பது அந்நடுகல் பொறிப்பு. கருவந்துறை என்னும் ஊரில் எருதோடு போராடி இறந்துபட்டவனாகிய சங்கன் என்பவனுக்கு அவனுடைய மகன் பெரிய பயல் எடுத்த நடுகல் என்பது இதன் பொருள்.

கரிக்கையூர் பாறை ஓவியம்

கூரிய கொம்புகளும் சிலிர்த்த திமில்களும் கொண்ட மூன்று எருதுகளைப் பலர் கூடி விரட்டுவதுபோன்ற பண்டைய ஓவியம் நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகேயுள்ள கரிக்கையூரில் காணப்படுகிறது. திமிலுடன் கூடிய காளையொன்றை ஒருவர் அடக்க முயல்வது போன்ற ஓவியம் மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அருகே கல்லூத்து மேட்டுப்பட்டியில் கண்டறியப்பட்டுள்ளது. தேனி மாவட்டம் மயிலாடும் பாறை அருகே சித்திரக்கல் புடவில் என்ற இடத்தில் திமிலுடன் கூடிய காளை ஓவியம் கண்டறியப்பட்டுள்ளது.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 65 22/05/18 6:56 PM

சிந்துவெளி நாகரிக வரலாற்றிலும் காளை முக்கியப் பங்கு வகிக்கின்றது. இம்மக்கள் காளையைத் தெய்வமாக வழிபட்டதை அகழாய்வில் கிடைக்கப்பெற்ற சான்றுகள் வாயிலாக அறிகிறோம். சிந்துவெளி அகழாய்வுகளில் கண்டறியப்பட்ட மாடு தழுவும் கல் முத்திரை ஒன்று தமிழர்களின் பண்பாட்டுத் தொல்லியல் அடையாளமான ஏறு தழுவுதலைக் குறிப்பதாக ஐராவதம் மகாதேவன் தெரிவித்துள்ளார்.

சிந்துவெளி கல் முத்திரை

பண்பாட்டு அடையாளம்

ஏறு தழுவுதல், முல்லை நிலத்து மக்களின் அடையாளத்தோடும் மருத நிலத்து வேளாண் குடிகளின் தொழில் உற்பத்தியோடும் பாலை நிலத்து மக்களின் தேவைக்கான போக்குவரத்துத் தொழிலோடும் பிணைந்தது. இதுவே வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாளமாக நீட்சி அடைந்தது.

ஏரில் பூட்டி உழவு செய்ய உதவிய காளை மாடுகள் ஏர் மாடுகள், எருதுகள், ஏறுகள் என்று அழைக்கப்பட்டன. தமிழக உழவர்கள் தங்களின் உழவு சார்ந்த கருவிகளோடு அறுவடைக்குப் பெரிதும் துணைநின்ற மாடுகளைப் போற்றி மகிழ்விக்க ஏற்படுத்திய விழாவே மாட்டுப் பொங்கல். அவ்விழாவன்று மாடுகளைக் குளிப்பாட்டிப் பல வண்ணங்களில் பொட்டிட்டு, மூக்கணாங் கயிறு, கழுத்துக் கயிறு, பிடி கயிறு அனைத்தையும் புதிதாக அணிவிப்பர். கொம்புகளைப் பிசிறு சீவி, எண்ணெய் தடவி, கழுத்து மணியாரம் கட்டி, வெள்ளை வேட்டியோ, துண்டோ கழுத்தில் கட்டுவர். பின்னர், பூமாலை அணிவித்துப் பொங்கலிட்டுத் தம்மோடு உழைப்பில் ஈடுபட்ட மாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் விதத்தில் தளிகைப் பொங்கலை ஊட்டிவிடுவர்.

இதன் தொடர்ச்சியாக, வேளாண் குடிகளின் வாழ்வோடும் உழைப்போடும் பிணைந்துகிடந்த மாடுகளுடன் அவர்கள் விளையாடி மகிழும் மரபாக உருக்கொண்டதே ஏறு தழுவுதலாகும்.

ஏறு தழுவுதல், தமிழகத்தின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்றது. அது மாடு பிடித்தல், மாடு அணைதல், மாடு விடுதல், மஞ்சுவிரட்டு, வேலி மஞ்சுவிரட்டு, எருது கட்டி, காளை விரட்டு, ஏறு விடுதல், சல்லிக்கட்டு எனப் பல பெயர்களில் அழைக்கப்படுகின்றது.

சல்லிக்கட்டு பேச்சுவழக்கில் திரிபுற்று, ஜல்லிக்கட்டு என அழைக்கப்படுகிறது. சல்லி என்பது மாட்டின் கழுத்தில் கட்டப்படுகின்ற வளையத்தினைக் குறிக்கும். புளியங்கொம்பினால் வளையம் செய்து காளையின் கழுத்தில் அணிவிக்கும் வழக்கம் தற்போதும் உள்ளது. அக்காலத்தில் புழங்கிக் கொண்டிருந்த சல்லி நாணயங்களை, துணியில் முடிந்து மாட்டின் கொம்புகளில் கட்டிவிடும் பழக்கமும் இருந்தது. மாட்டைத் தழுவும் வீரருக்கு அந்தப் பணமுடிப்பு சொந்தமாகும்.

ஏறு தழுவுதலும் தமிழர் அறமும்

மேலைநாடுகளில் குறிப்பாக, தேசிய விளையாட்டாகக் காளைச் சண்டையைக் கொண்டிருக்கும் ஸ்பெயின் நாட்டில், காளையைக் கொன்று அடக்குபவனே வீரனாகக் கருதப்படுவான். அவ்விளையாட்டில், ஆயுதங்களைப் பயன்படுத்துவதும் உண்டு.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 66 22/05/18 6:56 PM

மேலை நாட்டுக் காளை விளையாட்டு

தமிழக ஏறு தழுவுதல்

காளையை அடக்கும் வீரன் வென்றாலும் தோற்றாலும் ஆட்டத்தின் முடிவில் அந்தக் காளை சில நாட்டு விளையாட்டுகளில் கொல்லப்படுதலும் உண்டு. மேலைநாடுகளில் ஆண்டு முழுவதும் நடத்தப்படும் காளை விளையாட்டு, மனிதனுள் ஒளிந்திருக்கும் வன்மத்தையும் போர் வெறியையும் வெளிப்படுத்துவது போல் இருக்கிறது.

தமிழகத்தில் நடைபெறும் ஏறு தழுவுதலில் காளையை அடக்குபவர்கள் எந்த ஆயுதத்தையும் பயன்படுத்தக் கூடாது. நிகழ்வின் தொடக்கத்திலும் முடிவிலும் காளைகளுக்கு வழிபாடு செய்வர். எவராலும் அடக்க முடியாத காளைகளும் உண்டு. எனவே, காளைகளும் வெற்றி பெற்றதாகக் கருதப்படும். அன்பையும் வீரத்தையும் ஒருசேர வளர்த்தெடுக்கும் இவ்விளையாட்டில் காளையை அரவணைத்து அடக்குபவரே வீரராகப் போற்றப்படுவர்.

நம் கடமை

தமிழர்களின் பண்பாட்டுத் திருவிழாவாக விளங்கும் ஏறு தழுவுதல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட தொன்மையுடையது.

பண்டைய வீரவுணர்வை நினைவூட்டும் ஏறுதழுவுதல் விலங்குகளை முன்னிலைப்படுத்தும் வழிபாட்டையும் இயற்கை வேளாண்மையையும் வலியுறுத்தும் பண்பாட்டுக் குறியீடு ஆகும். நம் முன்னோரின் இத்தகைய பண்பாட்டுக்கூறுகளைப் பேணிப் பாதுகாப்பது நம் ஒவ்வொருவரின் கடமையுமாகும்.

கற்பவை கற்றபின்...

1. இலக்கியங்கள் காட்டும் ஏறுதழுவுதல் காட்சிகளை உங்கள் பகுதியில் நடைபெற்ற எருது விடும் விளையாட்டு நிகழ்வுடன் ஒப்பிட்டு வகுப்பறையில் கலந்துரையாடுக.

2. உங்கள் ஊரில் பொங்கல்விழா நடைபெறுகிறது. அவ்விழாவில் சாக்கு ஓட்டம், தவளை ஓட்டம், புட்டியில் தண்ணீர் நிரப்புதல், இசை நாற்காலி, உருளைக் கிழங்கு பொறுக்குதல், ஊசியில் நூல் கோத்தல், கோலம் போடுதல், கயிறு இழுத்தல், மெதுவாக மிதிவண்டி ஓட்டுதல், பானை உடைத்தல் ஆகிய போட்டிகள் நடைபெறுகின்றன. அப்போட்டிகள் குறித்து நேரடி வருணனை செய்க.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 67 22/05/18 6:56 PM

இயல் மூன்று

மணிமேகலை



மக்களின் வாழ்வில் பிறந்தது முதலாக நடத்தப்படுகின்ற நிகழ்வுகளில் விழா தனக்கென ஒரு தனியிடம் பெறுகிறது. மனித மாண்புகளை எடுத்துரைக்கும் விழா, பண்பாட்டின் வெளிப்பாடாகவும் திகழ்கிறது. அல்லும் பகலும் உழைப்பில் திளைக்கின்ற மக்களை உற்சாகப்படுத்தி ஓய்வு தரும் வாயில் விழாதான். அவ்வகையில் புகார் நகரோடு அதிகம் தொடர்புடையதாகத் திகழ்ந்த இந்திரவிழா சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் விவரிக்கப்படுகிறது. அவ்விழா நிகழ்வுகளைக் கண்முன்னே காட்சிப்படுத்துவதாய் அமைகிறது மணிமேகலையின் விழாவறை காதை.

49P3VG

விழாவறை காதை

மெய்த்திறம் வழக்கு நன்பொருள் வீடெனும்
இத்திறம் தத்தம் இயல்பினிற் காட்டும்
சமயக் கணக்கரும் தந்துறை போகிய
அமயக் கணக்கரும் அகலா ராகிக்
கரந்துரு எய்திய கடவு ளாளரும்
பரந்தொருங்கு ஈண்டிய பாடை மாக்களும்
ஐம்பெருங் குழுவும் எண்பேர் ஆயமும்
வந்தொருங்கு குழீஇ வான்பதி தன்னுள்

(அடிகள் 11–18)

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 68 22/05/18 6:56 PM

தோரண வீதியும் தோம்அறு கோட்டியும்
பூரண கும்பமும் பொலம்பா லிகைகளும்
பாவை விளக்கும் பலவுடன் பரப்புமின்;
காய்க்குலைக் கமுகும் வாழையும் வஞ்சியும்
பூக்கொடி வல்லியும் கரும்பும் நடுமின்;
பத்தி வேதிகைப் பசும்பொன் தூணத்து
முத்துத் தாமம் முறையொடு நாற்றுமின்;
விழவுமலி மூதூர் வீதியும் மன்றமும்
பழமணல் மாற்றுமின்; புதுமணல் பரப்புமின்;
கதலிகைக் கொடியும் காழ்ஊன்று விலோதமும்
மதலை மாடமும் வாயிலும் சேர்த்துமின்;
(அடிகள் 43–45)

தண்மணற் பந்தரும் தாழ்தரு பொதியிலும்
புண்ணிய நல்லுரை அறிவீர் பொருந்துமின்;
ஒட்டிய சமயத்து உறுபொருள் வாதிகள்
பட்டிமண் டபத்துப் பாங்கறிந்து ஏறுமின்;
பற்றா மாக்கள் தம்முடன் ஆயினும்
செற்றமும் கலாமும் செய்யாது அகலுமின்;
வெண்மணற் குன்றமும் விரிபூஞ் சோலையும்
தண்மணல் துருத்தியும் தாழ்பூந் துறைகளும்
தேவரும் மக்களும் ஒத்துடன் திரிதரும்
நாலேழ் நாளினும் நன்கறிந்தீர் என –
ஒளிறுவாள் மறவரும் தேரும் மாவும்
களிறும் சூழ்தரக் கண்முரசு இயம்பி
பசியும் பிணியும் பகையும் நீங்கி
வசியும் வளனும் சுரக்க! என வாழ்த்தி;
அணிவிழா அறைந்தனன் அகநகர் மருங்கென் .
(அடிகள் 58–72)

சொல்லும் பொருளும்

சமயக் கணக்கர் –சமயத் தத்துவவாதிகள், பாடைமாக்கள் – பல மொழிபேசும் மக்கள், குழீஇ– ஒன்றுகூடி, தோம் – குற்றம், கோட்டி–மன்றம், பொலம்–பொன், வேதிகை–திண்ணை, தூணம்–தூண், தாமம்–மாலை, கதலிகைக் கொடி –சிறு சிறு கொடியாகப் பல கொடிகள் கட்டியது, காழூன்று கொடி – கொம்புகளில் கட்டும் கொடி, விலோதம் – துணியாலான கொடி, வசி– மழை, செற்றம்–சினம், கலாம்–போர், துருத்தி– ஆற்றிடைக்குறை (ஆற்றின் நடுவே இருக்கும் மணல்திட்டு).

பாடலின் பொருள்

இந்திர விழாவைக் காண வந்தோர்

உயர்வுடைய புகார் நகரில் மெய்ப்பொருள் உணர்த்தும் உலகியல், தத்துவம், வீடுபேறு ஆகிய பொருள்களை அவரவர் இயற்கைத் தன்மைக்கு ஏற்ப விளக்குபவராகிய சமயவாதிகள் கூடியிருக்கின்றனர். தமது நெறியில் சிறந்தவராக விளங்கும் காலத்தைக் கணக்கிட்டுச் சொல்லும் காலக்கணிதரும் கூடியிருக்கின்றனர். இந்நகரை விட்டு நீங்காதவராய்த் தம் தேவருடலை மறைத்து மக்கள் உருவில் வந்திருக்கும் கடவுளரும் கடல்வழி வாணிகம் செய்து பெரும் செல்வம் காரணமாய்ப் புகார் நகரில் ஒன்று திரண்டிருக்கும் பல மொழி பேசும் அயல் நாட்டினரும் குழுமியிருக்கின்றனர். அரசர்க்குரிய அமைச்சர் குழுவாகிய ஐம்பெருங்குழு, எண்பேராயத்தைச் சேர்ந்தவர்களும் அரசவையில் ஒன்று திரண்டிருக்கின்றனர்.

விழா முன்னேற்பாடுகள்

தோரணம் கட்டிய தெருக்களிலும் குற்றமில்லாத மன்றங்களிலும் பூரணகும்பம், பொற்பாலிகை, பாவை விளக்கு மற்றும் பலவகையான மங்கலப் பொருள்களை முறையாக அழகுபடுத்தி வையுங்கள். குலை முற்றிய பாக்கு மரத்தையும் வாழை மரத்தையும் வஞ்சிக்கொடியையும் பூங்கொடிகளையும் கரும்பையும் நட்டு வையுங்கள். வீடுகளின்முன் தெருத் திண்ணையில் வரிசை வரிசையாக இருக்கும் தங்கத் தூண்களிலே முத்து மாலைகளைத் தொங்கவிடுங்கள்.

விழாக்கள் நிறைந்த இம்மூதூரின் தெருக்களிலும் மன்றங்களிலும் பழைய மணலை மாற்றிப் புதிய மணலைப் பரப்புங்கள். துகில் கொடிகளையும் கம்புகளில் கட்டிய கொடிகளையும் பெரிய மாடங்களிலும் மாடங்களின் வாயில்களிலும் சேர்த்துக் கட்டுங்கள்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 69 22/05/18 6:56 PM

பட்டிமண்டபம் ஏறுமின்

குளிர்ந்த மணல் பரப்பிய பந்தல்களிலும் மரங்கள் தாழ்ந்து நிழல்தரும் ஊர் மன்றங்களிலும் நல்லன பற்றிச் சொற்பொழிவாற்றுங்கள். அவரவர் சமயத்திற்கு உரிய உட்பொருளறிந்து வாதிடுவோர் பட்டிமண்டப முறைகளைத் தெரிந்து வாதிட்டுத் தீர்வு காணுங்கள்.

சினமும் பூசலும் கைவிடுக

மாறுபாடு கொண்ட பகைவர்களிடம் கூடக் கோபமும் பூசலும் கொள்ளாது அவர்களைவிட்டு விலகி நில்லுங்கள். வெண்மையான மணல் குன்றுகளிலும் மலர் செறிந்த பூஞ்சோலைகளிலும் குளிர்ந்த ஆற்றிடைக்குறைகளிலும் மரக்கிளைகள் நிழல் தரும் தண்ணீர்த் துறைகளிலும் விழா நடைபெறும். அந்த இருபத்தெட்டு நாள்களிலும் தேவரும் மக்களும் ஒன்றுபட்டு மகிழ்வுடன் உலாவிவருவர் என்பதை நன்கு அறியுங்கள்.

வாழ்த்தி அறிவித்தல்

ஒளிவீசும் வாளேந்திய காலாட் படையினரும் தேர்ப்படையினரும் குதிரைப் படையினரும் யானைப் படையினரும் சூழ்ந்து வர, அகன்ற முரசினை அறைந்து, "பசியும் நோயும் பகையும் நீங்கி மழையும் வளமும் எங்கும் பெருகுவதாகுக" என வாழ்த்தி மேற்கண்ட செய்திகளை நகருக்கு முரசறைவோன் அறிவித்தான்.

தெரிந்து தெளிவோம்

ஐம்பெருங்குழு

1. அமைச்சர்
2. சடங்கு செய்விப்போர்
3. படைத்தலைவர்
4. தூதர்
5. சாரணர் (ஒற்றர்)

எண்பேராயம்

1. கரணத்தியலவர்
2. கரும விதிகள்
3. கனகச்சுற்றம்
4. கடைக்காப்பாளர்
5. நகரமாந்தர்
6. படைத்தலைவர்
7. யானை வீரர்
8. இவுளி மறவர்

இலக்கணக் குறிப்பு

தோரணவீதியும், தோமறு கோட்டியும் – எண்ணும்மைகள்

காய்க்குலைக் கமுகு, பூக்கொடி வல்லி, முத்துத்தாமம் – இரண்டாம் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்கத் தொகைகள்

மாற்றுமின், பரப்புமின் – ஏவல் வினைமுற்றுகள்

உறுபொருள் – உரிச்சொல்தொடர்

தாழ்பூந்துறை – வினைத்தொகை

பாங்கறிந்து – இரண்டாம் வேற்றுமைத்தொகை

நன்பொருள், தண்மணல், நல்லுரை – பண்புத்தொகைகள்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 70 22/05/18 6:56 PM

பகுபத உறுப்பிலக்கணம்

பரப்புமின் – பரப்பு + மின்

பரப்பு – பகுதி

மின் – முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி

அறைந்தனன் – அறை +த்(ந்) + த் +அன்+அன்

அறை – பகுதி

த் – சந்தி. த் – ந் ஆனது விகாரம்

த் – இறந்தகால இடைநிலை

அன் – சாரியை

அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி

நூல் வெளி

தொடர்நிலைச் செய்யுள் வரிசையில் இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரம், மணிமேகலை இரண்டும் தமிழ் மக்களின் வாழ்வியலைச் சொல்லும் கருவூலங்களாகத் திகழ்கின்றன. மணிமேகலை, ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று. மணிமேகலையின் துறவு வாழ்க்கையைக் கூறுவதால், இந்நூலுக்கு மணிமேகலைத் துறவு என்னும் வேறு பெயரும் உண்டு. இது பெண்மையை முதன்மைப்படுத்தும் புரட்சிக் காப்பியம்; பண்பாட்டுக் கூறுகளைக் காட்டும் தமிழ்க்காப்பியம். இக்காப்பியம் சொற்சுவையும் பொருட்சுவையும் இயற்கை வருணனைகளும் நிறைந்தது. பௌத்த சமயச் சார்புடையது. கதை அடிப்படையில் மணிமேகலையைச் சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியெனக் கூறுவர். முப்பது காதைகளாக அமைந்துள்ள மணிமேகலையின் முதல் காதையே விழாவறை காதை.

மணிமேகலைக் காப்பியத்தை இயற்றியவர் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார். சாத்தன் என்பது இவரது இயற்பெயர். இவர், திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த சீத்தலை என்னும் ஊரில் பிறந்து மதுரையில் வாழ்ந்தவர் என்று கூறுவர். கூலவாணிகம் (கூலம் – தானியம்) செய்தவர். இக்காரணங்களால் இவர் மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்று அழைக்கப்பெற்றார். சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகளும் இவரும் சமகாலத்தவர் என்பர். தண்டமிழ் ஆசான், சாத்தன், நன்னூற்புலவன் என்று இளங்கோவடிகள் சாத்தனாரைப் பாராட்டியுள்ளார்.

அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள்! மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்டது இல். (மணிமேகலை 25: 228 – 231)

கற்பவை கற்றபின்...

1. *உங்கள் ஊரில் நடைபெறும் திருவிழாவிற்கான அழைப்பிதழ் ஒன்றினை வடிவமைக்க.*
2. *குறிப்புகளைக் கொண்டு ஓர் இயற்கைக் காட்சியை விரித்தெழுதுக.*

   பூஞ்சோலை – சிரிக்கும் மலர்கள் – பசுமையான புல்வெளி – கூவும் குயில் – வீசும் தென்றல் – விளையாடும் குழந்தைகள் – அழகிய காட்சிகள்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 71 22/05/18 6:56 PM

விரிவானம்

இயல் மூன்று

அகழாய்வுகள்

– பட்டிமன்றம்

மனிதன் தோன்றிப் பல்லாயிரம் ஆண்டுகள் கடந்துவிட்டன. இன்றும் பண்பாட்டு அளவில் சிறந்த வாழ்வை வெளிப்படுத்திய தமிழர்களின் வரலாற்றை அறிந்துகொள்ள தமிழகத்தின் தொன்மையான பகுதிகளை அகழாய்வு செய்தல் இன்றியமையாதது. அகழாய்வு செய்தல் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட நிலப்பகுதியில் செதுக்கிச் செதுக்கி ஆராய்தல் ஆகும். அகழாய்வு வரலாறு முழுமை பெற உதவுகிறது. அகழாய்வில் கிடைத்த பொருள்கள் நாம் வாழ்ந்த காலத்தை மட்டுமன்றி, நமது வரலாற்றையும் உணர்த்துகின்றன.

பட்டிமன்ற அழைப்பிதழ்

பள்ளி இலக்கிய மன்றத் தொடக்கவிழாவில் மாணவர்களே பங்கேற்று நடத்தும்

சிந்தனைப் பட்டிமன்றம்

49XYX4

நடுவர்: மாணவர் பூங்குன்றன்

முன்னிலை: தமிழாசிரியர் கலைவாணன்

இன்றைய சூழ்நிலையில் அகழாய்வு என்பது

தேவையான செயல்பாடே!

மாணவர் பாத்திமா

மாணவர் செல்வன்

தேவையற்ற செலவினமே!

மாணவர் முத்து

மாணவர் அன்புமேரி

அனைவரும் வருக!

அறிமுகவுரை (இலக்கிய மன்றச் செயலர்)

அன்பிற்குரிய நல்லுள்ளங்களே! வணக்கம். இன்று நம் பள்ளியில் இலக்கிய மன்றத் தொடக்கவிழா இனிதே தொடங்குகிறது. அதனை முன்னிட்டு நடைபெறவுள்ள பட்டிமன்றத் தலைப்பினை அறிய ஆவலாக இருக்கிறதா? இதோ சொல்கிறேன். இன்றைய சூழ்நிலையில் அகழாய்வு என்பது தேவையான செயல்பாடா? தேவையற்ற செலவினமா? (மாணவர்கள் கரவொலி எழுப்புதல்)

அண்மையில் நடைபெற்ற மாநிலப் பேச்சுப்போட்டியில் முதல் பரிசுபெற்ற நம் வகுப்புத்தோழர் பூங்குன்றன் நடுவராகப் பொறுப்பேற்கிறார். வாதிடுவோராக நம்முடன் பயிலும் முத்து, பாத்திமா, அன்புமேரி, செல்வன் ஆகியோர் பங்கேற்கின்றனர். இதோ பட்டிமன்றம் தொடங்குகிறது.

நடுவர்

அருந்தமிழ் வணக்கம்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 72 22/05/18 6:56 PM

திட்பமும் நுட்பமும்

மதுரை நகருக்கு அருகே உள்ள கீழடி என்னுமிடத்தில் நடத்தப்பட்ட அகழாய்வில் சுடுமண் பொருள்கள், உலோகப் பொருள்கள், முத்துகள், கிளிஞ்சல் பொருள்கள், மான்கொம்புகள், சோழிகள், கிண்ணங்கள், துளையிடப்பட்ட பாத்திரங்கள், இரத்தினக்கல் வகைகள், பழுப்பு, கறுப்பு, சிவப்பு–கறுப்புப் பானைகள், சதுரங்கக் காய்கள், தானியங்களைச் சேகரிக்கும் கலன்கள், செம்பு, சங்கு வளையல்கள், எலும்பினால் ஆன கூர் முனைகள், தமிழ்–பிராமி எழுத்துகள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள், கற்கருவிகள், நீர் சேகரிக்கும் பெரிய மட்கலன்கள், சிறிய குடுவைகள், உறைக்கிணறுகள், சுடுமண் கூரை ஓடுகள் போன்ற பல்வேறு தொல்லியல் பொருள்கள் கிடைத்துள்ளன. மூன்று வெவ்வேறு காலகட்டத்தைச் சேர்ந்த இவற்றுள் தொன்மையானவை சுமார் 2300ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனக் கருதப்படுகின்றன. இதுவரை அகழாய்வு செய்யப்பட்ட பெரும்பான்மையான இடங்கள், இறப்பு தொடர்பான தடயங்களை வெளிப்படுத்துவனவாக அமைந்திருந்தன. ஆனால், கீழடியில் கண்டறியப்பட்டுள்ள முழுமையான வாழ்விடப்பகுதியும் செங்கல் கட்டுமானங்களும் இதரப்பொருள்களும் தமிழரின் உயரிய நாகரிகத்தைக் கண்முன் காட்டும் சாட்சிகளாய் அமைந்துள்ளன.

கீழடி அகழாய்வுக்களம்

மதிப்பிற்குரிய தமிழாசிரியர் அவர்களே! அன்பிற்குரிய ஆசிரியப் பெருமக்களே! அருமை மாணவ நண்பர்களே! அனைவருக்கும் அன்பான வணக்கம்.

வரலாற்றை அறிவதற்கு வகையாய் ஒரு தலைப்பெடுத்துப் பேச முனைகின்றோம். ஒரு செடி வளர்வதற்கு, விதையை ஊன்றுவதற்குக்கூடக் குழி தோண்டுகிறோம். தோண்டிய குழிக்குள் ஒரு பழம்பொருள் கிடைத்தால்கூடக் கொண்டாடுகிறோம். அதில் பயன் இருக்கிறதா என்பதைச் சிந்திப்பதற்கே இந்த மாபெரும் சிந்தனைப் பட்டிமன்றம்.

ஆய்வு என்பது அறிவின் வெளிப்பாடு. அதற்கு ஓய்வு என்பதே கிடையாது. இதோ! இன்றைய சூழ்நிலையில் அகழாய்வு என்பது தேவையற்ற செலவினமே! என்னும் தலைப்பில் உரைவீச்சைத் தொடங்க வருமாறு அன்புத் தோழர் முத்து அவர்களை அழைத்து என் முன்னுரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். (மாணவர் கரவொலி)

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 73 22/05/18 6:56 PM

முத்து

உங்கள் அனைவருக்கும் என் பணிவான வணக்கம். நடுவர் அவர்களே! உள்ளங்கையில் உலகத்தை அளந்து பார்க்கும் காலகட்டத்தில் மண்ணைத் தோண்டி எலும்புகளைத் தேடும் மனிதர்களைப் பற்றி நான் என்ன சொல்ல?

அறிவியல் உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பழைய தலைமுறையைப் பற்றித் தெரிந்து என்ன செய்யப் போகிறோம்? செல்லிடப் பேசிக்குள்ளே, உலகத்தைச் சுற்றும் வேளையில் அகழாய்வில் கிடைக்கும் செல்லாக் காசுகளை வைத்து என்ன செய்வதாம்?

வானுலகத்தில் பறந்து செவ்வாயில் குடியேற வழிதேடும் நேரத்தில் பழைய வரலாற்றுக்கு முந்தைய காலத்தைப் பற்றி அறிந்து என்ன பயன்? உள்ளங்கையில் உலகம் இருக்கிறது. மடிக்கணினி மலைக்க வைக்கிறது. அதையெல்லாம் விட்டுவிட்டு மண் ஓடுகள், இறந்தோரைச் சுமந்த மண்தாழிகள் இவற்றைக் கண்டறிந்து எதைச் சாதிக்கப் போகிறோம்?

நாம் கண்டுபிடிக்க வேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன. அறிவை விரிவுசெய் எனப் பாவேந்தர் கூறினார். நாம் அறிவை விரயம் செய்துகொண்டிருக்கிறோம். எனவே, நடுவர் அவர்களே! அகழாய்வு என்பது தேவையற்ற செலவினமே, செலவினமே என்றுகூறி என் வாதத்தை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

நடுவர்

நண்பர் முத்து, காரசாரமான தன் வாதத்தை முன்வைத்தார். மிகவும் அருமை. இதற்குப் பாத்திமா, எப்படித்தான் பதில் சொல்லப் போகிறார் என்பது தெரியவில்லை. வாங்கம்மா! வாங்க எப்படிச் சமாளிக்கப் போறீங்க!

பாத்திமா

அவையோரை வணங்கி என் உரையைத் தொடங்குகிறேன்.

மண்ணைத் தோண்டிப் பார்ப்பது எலும்புகளைச் சேகரித்து எண்ணிப் பார்ப்பதற்கன்று. நம் முன்னோர்களின் பண்பாட்டை எண்ணிப் பார்ப்பதற்கு. கடந்த காலத்தைப் புரிந்துகொள்ளாமல் நிகழ்காலத்தில் வெற்றிபெற முடியுமா? எதிர்காலத்தைத்தான் கணிக்க இயலுமா?

நமது வரலாறு மிக நீண்டது. 150 ஆண்டுகளுக்கு முன்னால் 1863ஆம் ஆண்டு இராபர்ட் புரூஸ்புட் என்னும் தொல்லியல் அறிஞர் சென்னைப் பல்லாவரம் செம்மண் மேட்டுப்பகுதியில் எலும்பையும் கற்கருவியையும் கண்டுபிடித்தார். இந்தக் கற்கருவிதான் இந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட முதல் கல்லாயுதம். இந்தக் கல்லாயுதம் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பே, ரோமானியர்களின் பழங்காசுகளைக் கோவையில் கண்டெடுத்தோம்.

அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய மட்பாண்டங்கள் கிடைத்தன. அதனால், ரோமானியர்களுக்கும் நமக்கும் இருந்த வணிகத் தொடர்பு உறுதிப்படுத்தப்பட்டது.

அதற்குப் பின்னால், 1914ஆம் ஆண்டு ஆதிச்சநல்லூரில் நடத்தப்பட்ட அகழாய்வில் ஏராளமான முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டன. நண்பர் சொன்னார்! உள்ளங்கையில் உலகம் இருக்கிறதாம். மடிக்கணினி மலைக்க வைக்கிறதாம். நம் முன்னோர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, அறிவியல் அடிப்படையிலான பண்பாட்டு வாழ்க்கையை வாழ்ந்தவர்கள். தமிழர்களின் உணவு, உடை, வாழிடம் முதலியன இயற்கையைச் சிதைக்காத இயல்புகளைக் கொண்டவை என்பதற்கு அகழாய்வில் கண்ட சான்றுகளே ஆவணங்களாகத் திகழ்கின்றன.

எதிரணித் தலைவருக்கு ஒன்றைச் சொல்லி விடைபெறுகிறேன். மடிக்கணினியில் பூக்கின்ற ரோஜா மணக்காது; செல்லிடப் பேசியில் பார்க்கும் வற்றல் குழம்பு சுவைக்காது; மாறாக நமது மூளையைக்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 74 22/05/18 6:56 PM

தெரிந்து தெளிவோம்

பட்டிமண்டபம்

பட்டிமண்டபம் என்பதுதான் இலக்கியவழக்கு. ஆனால் இன்று நடைமுறையில் பலரும் பட்டிமன்றம் என்றே குறிப்பிடுகிறார்கள். பேச்சுவழக்கையும் ஏற்றுக்கொள்கிறோம்.

மகத நன்நாட்டு வாள்வாய் வேந்தன், பகைப்புறத்துக் கொடுத்த பட்டிமண்டபம்
என்று சிலப்பதிகாரத்திலும் (காதை 5, அடி 102)

பட்டிமண்டபத்துப் பாங்கு அறிந்து ஏறுமின் என்று மணிமேகலையிலும் (காதை 1, அடி 16)

பட்டிமண்டபம் ஏற்றினை, ஏற்றினை; எட்டினோடு இரண்டும் அறியேனையே என்று திருவாசகத்திலும் (சதகம் 41)

பன்ன அரும் கலைதெரி பட்டிமண்டபம் என்று கம்பராமாயணத்திலும் (பாலகாண்டம், நகரப் படலம் 154) பட்டிமண்டபம் என்ற சொல் பயின்று வருகிறது.

குப்பைத்தொட்டியாக்கும்; நமது மண்ணை நெகிழிக் கிடங்காக மாற்றும். ஆனால், அகழாய்வில் கிடைத்த ஆவணங்களோ அடுத்த தலைமுறைக்கு நம் பண்பாட்டின் மேன்மையைப் பறைசாற்றும். எனவே, நடுவர் அவர்களே! அகழாய்வு என்பது நமக்கு மிகமிகத் தேவையான செயல்பாடே! என்றுகூறி நல்ல தீர்ப்பு வேண்டி விடைபெறுகின்றேன்.

நடுவர்

அடேயப்பா! பாத்திமாவின் வார்த்தைகளுக்குள் மின்னிய வரலாறு புதிய வெளிச்சத்தைக் காட்டியது. என்ன அன்புமேரி! என்ன செய்யப் போறீங்க? பேசத்தான் போறீங்களா? இல்லை பட்டிமன்றத்தை இப்படியே முடிச்சிட்டுத் தீர்ப்பைச் சொல்லிவிடட்டுமா?

அன்புமேரி

பாரதியை வணங்கித் தொடங்குகின்றேன்.

ஐயா, நடுவர் அவர்களே! எங்க ஊர்ல ஒரு சொலவடை சொல்லுவாங்க. பகுமானக் கோழி பறந்துக்கிட்டே முட்டை போட்டுச்சாம்.

நடுவர்

என்ன! பகுமானக் கோழி பறந்துக்கிட்டே முட்டை போட்டுச்சா? சரி, தலைப்புக்கு வாங்கம்மா.

அன்புமேரி

இல்லைங்கய்யா, வெட்டிப் பெருமைக்காகவே வீறாப்பா பேசுபவர்களைப் பற்றிச் சொல்ல வந்தேன். நாம் எப்படிப்பட்ட காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்? உலகத்தில் குட்டி நாடுகள்கூட அறிவியல் விந்தைகளால் வானத்தை அளந்து பார்க்கின்றன. அமெரிக்காவில் இருக்கும் என் தோழியின் நட்பை இணையத்தளம் இணைத்துக் காட்டுகிறது. விபத்தில் துண்டிக்கப்பட்ட கால்களுக்கு அறிவியல், செயற்கைக் கால் பொருத்தி அழகு பார்க்கிறது. பழுதுபட்ட இதயத்திற்கு மாற்று இதயம் பொருத்தி மருத்துவ அறிவியல் மனிதனை வாழவைக்கிறது.

புற்றுநோய் என்னும் அரக்கனை வீழ்த்த, புதிய மருந்து கண்டுபிடிக்க அறிவியலாளர்கள் பெருமுயற்சி மேற்கொண்டு வருகிறார்கள். இன்னும் எவ்வளவோ சாதனைகள் கண்முன்னே நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. இந்த உலகப்போக்கிற்கு ஈடுகொடுத்து நாமும் நமது அறிவியல் பயணத்தை முன்னெடுக்காமல் அகழாய்வுக்குள் விழுந்து கிடப்பது என்ன நியாயம்? நானொன்றும் அகழாய்விற்கு எதிரானவள் இல்லை.

இன்றைய மாறிவரும் உலகச் சூழலில் அகழாய்வு என்ன, முக்கியத் தேவைகளுள் ஒன்றா? இருபத்தோராம் நூற்றாண்டு

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 75 22/05/18 6:56 PM

அறிவியலால் வியக்க வைக்கின்ற காலத்தில், இந்தப் பழைய காலத்துப் பொருள்களையும் கட்டடங்களையும் கண்டுபிடித்து என்ன சாதிக்கப் போகின்றோம்?

நடுவர் அவர்களே! பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே என்று நமது இலக்கணப் புலவர் ஒருவர் சொன்னதை எதிரணிக்கு நினைவூட்டி நல்ல தீர்ப்புத் தருமாறு கேட்டு விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

நடுவர்

அருமை, அன்புமேரி... அருமை. உங்களுக்கு ஆதரவா நன்னூலை இயற்றிய பவணந்தி முனிவரையும் துணைக்கு இழுத்து வந்துட்டீங்க. மிக்க மகிழ்ச்சி. இப்போ இந்த அணி கொஞ்சம் சோர்ந்து போனமாதிரி தெரியுது. நண்பர் செல்வன் வாங்க. எப்படிப் பதில் சொல்லப் போறீங்க.

செல்வன்

அவைக்கு என் பணிவான வணக்கத்தைக் கனிவோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

நடுவர் அவர்களே! அறிவியலைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடுகிறார் சகோதரி அன்புமேரி. ஏதோ, நாங்கள் எல்லாம் அறிவியலுக்குப் பகைவர் என்பதைப் போல. அகழாய்வே அறிவியலை ஆதாரமாகக் கொண்டதுதான் என்பதை அறியாதவராக இருக்கின்றார். இதில் பவணந்தி முனிவரைவேறு சாட்சிக்கு இழுத்திருக்கிறார். பழமையின் பட்டையை உரித்துக் கொண்டுதான் புதுமையே பிறக்கும். தனியாகப் புதுமைக்கென்று வேரோ விதையோ கிடையாது நண்பர்களே!

கடந்த காலத்தை ஆராய்ந்து அறிந்துகொண்டால்தான் நிகழ்காலத்தைச் செம்மைப்படுத்திக் கொள்ளலாம். வருங்காலம் வளமாக அமைவதற்கு வலிமையான கட்டமைப்பை உருவாக்கலாம். நமது முன்னோர்கள் வாழ்ந்து பெற்ற பட்டறிவை வகைப்படுத்தித் தொகுத்துப் பார்ப்பதற்குத் தொல்லியல் ஆய்வே பெரும் கல்வியாக அமைகின்றது.

வேடிக்கை என்னவென்றால், தமிழகத்தில் பண்டைக் காலத்திலேயே நமது தமிழ் முன்னோர்கள் செம்மையான பண்பாட்டுக் கட்டமைப்போடு வாழ்ந்திருக்கிறார்கள். நாம்தான் அந்தத் தொன்மை வரலாற்றின் உண்மையை அறியாமல் தொடர்ச்சி அறுபட்டு இடையில் எங்கோ பாதைமாறி, பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

இன்றைக்கு நாம் ஒரு புதிய நாகரிகச் சூழலைப் பழகிக் கொண்டிருக்கிறோம். அது என்னவென்றால், ஒரு பொருளை ஒருமுறை பயன்படுத்திவிட்டுத் தூக்கி எறி என்பதாகும். எழுதுகிற பேனா, குடிக்கிற தண்ணீர்ப்புட்டி, பழுதுபட்ட மடிக்கணினி, செல்லிடப்பேசி போன்றவற்றை ஒருமுறை பயன்படுத்தித் தூக்கி எறிகிற வழக்கத்தால் மின்சாதனக் குப்பைகள் மலையெனக் குவிந்துவிட்டன. சுற்றுச்சூழல் சிதைந்து புற்றுநோயாளிகள் பெருகும் அபாயம் வந்துவிட்டது. ஆனால், நமது முன்னோர்கள் கண்டுபிடித்துப் பயன்படுத்திய சுடுமண்ணாலும் உலோகத்தாலும் செய்யப்பட்ட பொருள்கள் பல தலைமுறைகளைக் கடந்து பயன்பாட்டில் இருந்திருக்கின்றன.

பழுதுபட்டால் சரிசெய்து மீண்டும் பயன்படுத்துவோம். இது கடந்த நூற்றாண்டுவரை தொடர்ந்தது. எதிரணி கூறிய போலி அறிவியல் பண்பாட்டுச் சூழல் வளர்ந்த பின்தான் "பயன்படுத்து, தூக்கி எறி" என்ற பழக்கம் பிறந்து வளர்ந்தது. அதன் தொடர்ச்சி எதுவரை வந்தது தெரியுமா? பெற்றெடுத்து வளர்த்த தாய்தந்தையரையும் கூடப் பயன்படுத்திவிட்டு முதியோர் இல்லத்தில் தூக்கி எறிகிற மூடத்தனம் உருவாகியிருக்கிறது.

எனவே, நடுவர் அவர்களே! அகழாய்வு தரும் ஆதாரங்களின் மூலம் நமது வளமான வரலாற்றையும் பண்பாட்டையும் அறிந்துகொண்டு வலிமையான எதிர்காலத்தை உருவாக்க முடியும். நெடிய வரலாறு நமக்கு

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 76 22/05/18 6:56 PM

இருக்கிறது. எனவே, அதனை உறுதியுடன் வலியுறுத்துகிறோம்.

நடுவர் அவர்களே! அகழாய்வு என்பது தேவையற்ற செலவினமல்ல. தேவையான செயல்பாடே! என்று திசைகள்தோறும் அறிவியல் குரல்கள் ஒலிக்கத் தொடங்கிவிட்டன. நல்ல தீர்ப்பு தாருங்கள். நன்றி, வணக்கம்.

நடுவர்

செல்வனின் ஆய்வுக் கண்ணோட்டம் அருமையானது. அரிய செய்திகளோடு இரண்டு அணிகளும் வாதிட்டுள்ளன. *1863*இல் ஆரம்பித்த அகழாய்வுப் பணி *2018*ஆம் ஆண்டிலும் தொடரும்போது பல உண்மைகள் உறைக்கத்தொடங்கி இருக்கின்றன. பழையனவற்றை ஏன் தோண்டியெடுத்துப் பாதுகாக்க வேண்டும்? ஆராய வேண்டும்? அதற்கு நம் புழங்குபொருள் பண்பாடே சான்றுகளாக நிற்கின்றன. தேவையற்ற செயல்பாடே! என்று பேசிய அணியினர் கூறியது போல அகழாய்வு என்பது அறிவியலுக்கு எதிரான சிந்தனை அன்று.

அறிவியலில் இரண்டு வகையுண்டு. ஒன்று *வணிக அறிவியல்*. மற்றொன்று *மக்கள் அறிவியல்*. வணிக அறிவியல், மூலதனத்தைப் பெருக்குவதற்காகப் பொருள்களைக் கண்டுபிடிக்கிறது. அதனை விற்பனை செய்கிறது. அதன் விளைவுதான் நெகிழிக் குப்பைகள். ஆனால், அகழாய்வில் கிடைத்த சுடுமண், கல், இரும்பு, செம்பு ஆகியவற்றாலான புழங்கு பொருள்கள், கருவிகள் பல நூற்றாண்டுகளாக வாழையடி வாழையாகப் பயன்பாட்டில் இருந்தன. இயற்கையோடு இணைந்த பண்பாட்டு வாழ்க்கை நம்முடையது என்பதனை அறிந்துகொண்டோம். இதுவே, மக்கள் அறிவியல்.

மக்கள் அறிவியல் என்கிற *மகத்தான சிந்தனையைப்* புரிந்து கொள்வதற்கும் நமது *பண்பாட்டின் மேன்மைகளை* இன்றைய தலைமுறை எடுத்துக் கொண்டு சிறப்பாக வாழ்வதற்கும் அகழாய்வு துணைநிற்கின்றது.

எனவே, அகழாய்வு என்பது அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டிய, புரிந்துகொள்ள வேண்டிய, *தேவையான செயல்பாடே!* அகழாய்வைத் தொடர்வோம், தொன்மை வரலாற்றை மீட்போம் என்ற எனது தீர்ப்பினைக் கூறி, நல்ல வாய்ப்பைத் தந்த இலக்கிய மன்றத்திற்கு நன்றி பாராட்டி, பட்டிமன்றத்தை நிறைவு செய்கிறேன்.

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

வாழிய பாரத மணித்திருநாடு!

நன்றி, வணக்கம்.

கற்பவை கற்றபின்...

1. இளைஞர்களிடையே பண்பாட்டினை வளர்ப்பதில் பெரும்பங்கு வகிப்பது குடும்பமா? சமூகமா? – என்னும் தலைப்பில் சொற்போர் நிகழ்த்துக.
2. தொல்லியல் துறை சார்ந்த அலுவலர் ஒருவரிடம் நேர்காணல் நிகழ்த்துவதற்கான வினாப்பட்டியலை உருவாக்குக.
3. உங்கள் ஊருக்கு அருகில் உள்ள தொன்மையான இடத்தைப் பார்வையிட்டுக் குறிப்பு எழுதுக.

4A7UYR

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 77 22/05/18 6:56 PM

கற்கண்டு

இயல் மூன்று

வல்லினம் மிகும் இடங்கள்

வாணன் வேலைக் கொடுத்தான்.

வாணன் வேலை கொடுத்தான்.

இந்த இரண்டு தொடர்களுக்கும் உள்ள பொருள் வேறுபாடு யாது?

தோன்றல், திரிதல், கெடுதல் என விகாரப் புணர்ச்சி மூன்று வகைப்படும்

வல்லினம் மிகுந்து வருதல் தோன்றல் விகாரப் புணர்ச்சியின்பாற்படும்.

வல்லெழுத்துகள் க, ச, த, ப ஆகிய நான்கும் மொழிக்கு முதலில் வரும். இவை நிலைமொழியுடன் புணர்கையில் அவற்றின் மெய்யெழுத்துகள் தோன்றிப் புணரும். இதை வல்லினம் மிகுதல் என்பர். இவ்வாறு எந்த எந்த இடங்களில் அவ்வல்லினம் மிகும் என்பதை விதிகளின் மூலமும் எடுத்துக்காட்டுகள் மூலமும் அறியலாம்.

சொல்லமைப்பின் கட்டுப்பாடுகளைப் பேணவும் பொருள் மயக்கத்தைத் தவிர்க்கவும் பேச்சின் இயல்பைப் பேணவும் இனிய ஓசைக்காகவும் இவ்வல்லின எழுத்துகளின் புணர்ச்சி இலக்கணம் தேவைப்படுகிறது.

வல்லினம் மிகும் இடங்கள்

தற்கால உரைநடையில் வல்லினம் மிகவேண்டிய இடங்களாகக் கீழ்க்காண்பனவற்றைக் கூறலாம்.

1.	அச்சட்டை இந்தக்காலம் எத்திசை? எந்தப்பணம்?	அ, இ என்னும் சுட்டெழுத்துகளுக்குப் பின்னும், அந்த, இந்த என்னும் சுட்டுப் பெயர்களின் பின்னும், எ என்னும் வினாவெழுத்தின் பின்னும், எந்த என்னும் வினாச் சொல்லின் பின்னும் வல்லினம் மிகும்.
2.	கதவைத்திற தகவல்களைத்திரட்டு காட்சியைப்பார்	ஐ என்னும் இரண்டாம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும்.
3.	முதியவருக்குக்கொடு மெட்டுக்குப்பாட்டு ஊருக்குச்செல்	கு என்னும் நான்காம் வேற்றுமை உருபு வெளிப்படும் தொடர்களில் வல்லினம் மிகும்.
4.	எனக்கேட்டார் வருவதாகக்கூறு	என, ஆக போன்ற சொல்லுருபுகளின்பின் வல்லினம் மிகும்.

மேற்கண்டவாறு வல்லினம் மிகும் இடங்களை இனங்கண்டு பயன்படுத்தத் தொடங்கினாலே, தவறுகளைத் தவிர்த்துவிடலாம். மரபையும் பட்டறிவையும் தாண்டி, சொற்களை ஒலித்துப் பார்ப்பதும் வல்லினம் மிகும், மிகா இடங்களை அறிவதற்கு எளியவழி எனலாம்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 78 22/05/18 6:56 PM

மேலும் சில வல்லினம் மிகும் இடங்களை அறிந்துகொள்வோம்

அதற்குச் சொன்னேன் இதற்குக் கொடு எதற்குக் கேட்கிறாய்?	அதற்கு, இதற்கு, எதற்கு என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகும்.
இனிக் காண்போம் தனிச் சிறப்பு	இனி, தனி ஆகிய சொற்களின்பின் வல்லினம் மிகும்.
மிகப் பெரியவர்	மிக என்னும் சொல்லின்பின் வல்லினம் மிகும்.
எட்டுத்தொகை பத்துப்பாட்டு	எட்டு, பத்து என்னும் எண்ணுப் பெயர்களின்பின் வல்லினம் மிகும்.
தீப் பிடித்தது பூப் பந்தல்	ஒரெழுத்து ஒரு மொழிக்குப் பின் வல்லினம் மிகும்.
கூவாக் குயில் ஓடாக் குதிரை	ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சத்தின்பின் வல்லினம் மிகும்.
கேட்டுக் கொண்டான் விற்றுச் சென்றான்	வன்தொடர்க் குற்றியலுகரங்கள் நிலை மொழியாக இருந்து புணர்கையில் வல்லினம் மிகும்.
ஆடச் சொன்னார் ஓடிப் போனார்	(அகர, இகர ஈற்று) வினையெச்சங்களுடன் புணர்கையில் வல்லினம் மிகும்.
புலித்தோல்	ஆறாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகும்.
கிழக்குப் பகுதி வடக்குப் பக்கம்	திசைப் பெயர்களின்பின் வலிமிகும்.
மல்லிகைப்பூ சித்திரைத்திங்கள்	இரு பெயரொட்டுப் பண்புத் தொகையில் வல்லினம் மிகும்.
தாமரைப்பாதம்	உவமைத் தொகையில் வல்லினம் மிகும்.
சாலப்பேசினார் தவச்சிறிது	சால, தவ, தட, குழ என்னும் உரிச் சொற்களின்பின் வல்லினம் மிகும்.
நிலாச் சோறு கனாக் கண்டேன்	தனிக் குற்றெழுத்தை அடுத்துவரும் ஆகார எழுத்தின்பின் வல்லினம் மிகும்.
வாழ்க்கைப்படகு உலகப்பந்து	சில உருவகச் சொற்களில் வல்லினம் மிகும்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 79 22/05/18 6:56 PM

கற்பவை கற்றபின்...

1. வல்லினம் மிகலாமா?

அ) பெட்டி __செய்தி

ஆ) விழா __ குழு

இ) கிளி __ பேச்சு

ஈ) தமிழ் __ தேன்

உ) தை __பூசம்

ஊ) கூட __கொடு

எ) கத்தியை விட __ கூர்மை

ஐ) கார் __பருவம்

2. தொடர் தரும் பொருளைக் கூறுக.

அ) சின்னக்கொடி, சின்னகொடி

ஆ) தோப்புக்கள், தோப்புகள்

இ) கடைப்பிடி, கடைபிடி

ஈ) நடுக்கல், நடுகல்

உ) கைம்மாறு, கைமாறு

ஊ) பொய்ச்சொல், பொய்சொல்

3. சிந்தனை வினா

நாளிதழ்கள் சிலவற்றில் வல்லினம் மிகவேண்டிய இடத்தில் மிகாமல் எழுதிவருவதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். அவ்வாறு எழுதுவது மொழிக்கு வளம் சேர்க்குமா? வல்லினம் மிகவேண்டியதன் முக்கியத்துவத்தை எழுதுக.

4. உரிய இடங்களில் வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக.

பழங்கால மக்களின் நாகரிகம், பண்பாடு தொடர்பான வரலாறுகளை அகழாய்வில் கிடைக்கின்றப் பொருள்களும் உறுதி படுத்துகின்றன. பல்வேறு இடங்களில் அகழாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவ்வகையில் ஆய்வு நடைபெறுகின்ற இடங்களில் கீழடியும் ஒன்று.

கீழடியில் வாழ்ந்த மக்களுள் பலர்ச் செல்வந்தர்களாக இருந்துள்ளனர் என்பதை அகழாய்வில் கிடைத்தப் பொருள்கள் நமக்கு உணர்த்துகின்றன. இங்கு குறைவான எண்ணிக்கையில் தான் தங்கத்தினாலானப் பொருள்கள் கிடைக்கின்றன.

மேலும் இரும்பை பயன்படுத்தி செய்தக் கோடரி, குத்தீட்டிகள் முதலான கருவிகளும் யானை தந்தத்தினால் செய்தச் சீப்பு, மோதிரம், பகடை, காதணிகள், கண்ணாடிப் பொருள்களில் உருவாக்கிய மணிகள், வளையல், தோடு போன்றவையும் கிடைத்துள்ளன.

அதற்க்கு - தவறு	அதற்கு = அது+அன்+கு அது (சுட்டுப்பெயர்) + அன் (சாரியை) + கு (வேற்றுமை உருபு) அதன்+கு = அதற்கு - என்பதே சரி (எ.கா.) இந்தப் பொருள் வேண்டாம். அதற்குப் பதிலாக இதை வைத்துக்கொள்.
கடைபிடித்தல் கடைப்பிடித்தல்	கடைபிடித்தல் - கடையைப்பிடித்தல் கடைப்பிடித்தல் - பின்பற்றுதல் (எ.கா.) சேகர் புதிதாக வாணிகம் தொடங்கக் கடைபிடித்தார். நாங்கள் என்றும் தூய்மையைக் கடைப்பிடிப்போம்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 80 22/05/18 6:56 PM

மதிப்பீடு

பலவுள் தெரிக.

1. பொருந்தாத இணை எது?

அ) ஏறுகோள் – எருதுகட்டி ஆ) திருவாரூர் – கரிக்கையூர்

இ) ஆதிச்சநல்லூர் – அரிக்கமேடு ஈ) பட்டிமன்றம் – பட்டிமண்டபம்

2. முறையான தொடர் அமைப்பினைக் குறிப்பிடுக.

அ) தமிழர்களின் வீரவிளையாட்டு தொன்மையான ஏறுதழுவுதல்.

ஆ) தமிழர்களின் வீரவிளையாட்டு ஏறுதழுவுதல் தொன்மையான.

இ) தொன்மையான வீரவிளையாட்டு தமிழர்களின் ஏறுதழுவுதல்.

ஈ) தமிழர்களின் தொன்மையான வீரவிளையாட்டு ஏறுதழுவுதல்.

3. பின்வருவனவற்றுள் தவறான செய்தியைத் தரும் கூற்று –

அ) அரிக்கமேடு அகழாய்வில் ரோமானிய நாணயங்கள் கிடைத்தன.

ஆ) புறப்பொருள் வெண்பாமாலை என்னும் இலக்கண நூலிலும் ஏறுகோள் குறித்துக் கூறப்பட்டுள்ளது.

இ) எட்டு, பத்து ஆகிய எண்ணுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது.

ஈ) பட்டிமண்டபம் பற்றிய குறிப்பு மணிமேகலையில் காணப்படுகிறது.

4. ஐம்பெருங்குழு, எண்பேராயம் – சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்

அ) திசைச்சொற்கள் ஆ) வடசொற்கள்

இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச்சொற்கள்

5. சொற்றொடர்களை முறைப்படுத்துக.

அ) ஏறுதழுவுதல் என்பதை ஆ) தமிழ் அகராதி இ) தழுவிப் பிடித்தல் என்கிறது

i) ஆ – அ – இ ii) ஆ – இ – அ iii) இ – ஆ – அ iv) இ – அ – ஆ

குறுவினா

1. நீங்கள் வாழும் பகுதியில் ஏறுதழுவுதல் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?

2. தொல்லியல் சான்றுகள் காணப்படும் இடங்களை அகழாய்வு செய்ய வேண்டும். ஏன்?

3. ஏறுதழுவுதல் நிகழ்விற்கு இலக்கியங்கள் காட்டும் வேறுபெயர்களைக் குறிப்பிடுக.

4. பழமணல் மாற்றுமின்; புதுமணல் பரப்புமின் – இடஞ்சுட்டிப் பொருள்விளக்குக.

5. பட்டிமண்டபம், பட்டிமன்றம் – இரண்டும் ஒன்றா? விளக்கம் எழுதுக.

6. ஏறுதழுவுதல் குறித்துத் தொல்லியல் சான்றுகள் கிடைத்த இடங்களைப் பட்டியலிடுக.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 81 22/05/18 6:56 PM

சிறுவினா

1. வேளாண் உற்பத்தியின் பண்பாட்டு அடையாள நீட்சியை விளக்குக.
2. ஏறுதழுவுதல், திணைநிலை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்திருந்தது?
3. வியத்தகு அறிவியல் விரவிக் கிடக்கும் நிலையில் அகழாய்வின் தேவை குறித்த உங்களது கருத்துகளைத் தொகுத்துரைக்க.
4. உங்கள் ஊரில் நடைபெறுகின்ற விழா முன்னேற்பாடுகளை இந்திரவிழா நிகழ்வுகளுடன் ஒப்பிடுக

நெடுவினா

1. ஏறுதழுவுதல் தமிழரின் அறச்செயல் என்று போற்றப்படுவதற்கான காரணங்களை விவரிக்க.
2. பண்பாட்டுக் கூறுகளைப் பேணிப் பாதுகாக்க நாம் செய்ய வேண்டிய செயல்களைத் தொகுத்து எழுதுக.

மொழியை ஆள்வோம்!

படித்துச் சுவைக்க.

ஆராரோ ஆரிராரோ ஆராரோ ஆரிராரோ
தூங்காத கண்ணே உனைத் தூங்க வைப்பேன் ஆரிராரோ
மாம்பழத்தைக் கீறி வயலுக்கு உரம்போட்டுத்
தேன் பார்த்து நெல்விளையும் செல்வந்தனார் புத்திரனோ!
வெள்ளித்தேர் பூட்டி மேகம்போல் மாடுகட்டி
அள்ளிப் படியளக்கும் அதிர்ஷ்டமுள்ள புத்திரனோ
முத்துச் சிரிப்பழகா முல்லைப்பூப் பல்லழகா
தொட்டில் கட்டித் தாலாட்ட தூக்கம் வருமோடா
கதிரறுக்கும் நேரத்திலே கட்டியுன்னைத் தோளிலிட்டால்
மதியத்து வெயிலிலே மயக்கமும்தான் வாராதோ
வயலிலே வேலை செய்வேன் வரப்பினிலே போட்டிடுவேன்
வயலைவிட்டு ஏறுமுன்னம் வாய்விட்டு அழுவாயோ?

– நாட்டுப்புறப்பாட்டு, தகவலாளர்: வேலம்மாள்

பொன்மொழிகளை மொழிபெயர்க்க.

A nation's culture resides in the hearts and in the soul of its people – Mahatma Gandhi

The art of people is a true mirror to their minds – Jawaharlal Nehru

The biggest problem is the lack of love and charity – Mother Teresa

You have to dream before your dreams can come true – A.P.J. Abdul Kalam

Winners don't do different things; they do things differently – Shiv Khera

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 82 22/05/18 6:56 PM

வடிவம் மாற்றுக.

பின்வரும் கருத்துகளை உள்வாங்கிக் கொண்டு, வரிசைப்படுத்தி முறையான பத்தியாக்குக.

1. உலகின் மிகப்பெரிய கல்மரப் படிமமும் இங்கேதான் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

2. டைனோசர்கள் உலாவித் திரிந்த தமிழ்மண் என்று அரியலூர் பெரம்பலூர் மாவட்டங்கள் அறியப்படுகின்றன. பெரம்பலூர் மாவட்டத்தில் கடல்பகுதி இருந்துள்ளது என்பதை அங்குக் கிடைத்துள்ள ஆதாரங்கள் உறுதி செய்கின்றன.

3. இங்குக் கல்லாகிப் போன டைனோசர் முட்டைகள், பாறைப் படிமமாகக் கிடைத்த கடல் நத்தை, டைனோசரின் வால்பகுதி, கடல் கிளிஞ்சல்களின் பாறைப் படிமங்கள் போன்றவை கிடைத்துள்ளன.

4. தமிழ்மக்களின் தொன்மையை மீட்டெடுப்பதுடன் நாம் வாழ்கின்ற நிலப்பகுதியின் வரலாற்றையும் தெரிந்துகொள்ள அரியலூரும் பெரம்பலூரும் அரிய ஊர்களாய்த் திகழ்கின்றன.

மரபு இணைச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

1. மேடும் பள்ளமும் 2. நகமும் சதையும் 3. முதலும் முடிவும்

4. கேளிக்கையும் வேடிக்கையும் 5. கண்ணும் கருத்தும்

(எ.கா.) ஆரிப் சொன்னதில் நம்பிக்கை இல்லாமல் குமார் மேலும் கீழும் பார்த்தான்.

தொகுப்புரை எழுதுக.

பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சிகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.

பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க.

தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன. தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று 'காங்கேயம்' கருதப்படுகிறது. பிறக்கும்போது சிவப்பு நிறத்தில் இருக்கும் காங்கேயம் மாடுகள், ஆறு மாதம் வளர்ந்த பிறகு சாம்பல் நிறத்துக்கு மாறிவிடுகின்றன. பசுக்கள் சாம்பல் அல்லது வெள்ளை நிறத்தில் இருக்கின்றன. மிடுக்கான தோற்றத்துக்குப் பெயர்பெற்ற காங்கேயம் இனக் காளைகள் ஏறுதழுவுதல் நிகழ்விற்கும் பெயர் பெற்றுள்ளன. அத்துடன், ஏர் உழுவதற்கும் வண்டி இழுப்பதற்கும் அதிகம் பயன்படுத்தப்படுகின்றன.

கடுமையாக உழைக்கக்கூடிய காங்கேயம் மாடுகள் கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மாநிலத்தவரால் விரும்பி வாங்கிச் செல்லப்படுகின்றன. இலங்கை, பிரேசில், பிலிப்பைன்ஸ், மலேசியா ஆகிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. கரூர் அமராவதி ஆற்றுத் துறையில் காங்கேய மாடுகளின் உருவம் பொறித்த கி.மு. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த சேரர் கால நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

1. பின்வரும் நான்கு வினாக்களுக்கும் பொருந்தும் ஒரு விடையைத் தருக.

அ) மிடுக்குத் தோற்றத்திற்கும் ஏறுதழுவுதலுக்கும் பெயர் பெற்றவை எவை?

ஆ) தமிழக மாட்டினங்களின் தாய் இனம் என்று கருதப்படுவது யாது?

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 83 22/05/18 6:56 PM

இ) பிற மாநிலத்தவர் விரும்பி வாங்கிச் செல்கின்ற காளை இனம் எது?

ஈ) மேற்கண்ட பத்தி எதைக் குறிப்பிடுகிறது?

2. பொருந்தாத சொல்லைக் கண்டறிக.

அ) கர்நாடகம் ஆ) கேரளா இ) இலங்கை ஈ) ஆந்திரா

3. பிரித்து எழுதுக: கண்டெடுக்கப்பட்டுள்ளன.

அ) கண்டு + எடுக்கப்பட்டு + உள்ளன

ஆ) கண்டு + எடுக்கப் + பட்டுள்ளன

இ) கண்டெடுக்க + பட்டு + உள்ளன

ஈ) கண் + டெடுக்க + பட்டு + உள்ளன

4. தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாகக் காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன – இது எவ்வகைத் தொடர்?

அ) வினாத்தொடர் ஆ) கட்டளைத்தொடர்

இ) செய்தித்தொடர் ஈ) உணர்ச்சித்தொடர்

மொழியோடு விளையாடு

பொருள் எழுதித் தொடரமைக்க.

கரை, கறை; குளவி, குழவி; வாளை, வாழை; பரவை, பறவை; மரை, மறை;

எ.கா

அலை - கடலலை இன்று கடலலையின் வேகம் மிக அதிகமாகவுள்ளது.

அழை - வரவழைத்தல் என் நண்பர்களை வரவழைத்துள்ளேன்.

அகராதியில் காண்க.

இயவை, சந்தப்பேழை, சிட்டம், தகழ்வு, பௌரி

பொருள்தரும் வகையில் சொற்றொடர் உருவாக்குக.

கொடுக்கப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு பொருள்தரும் வகையில் ஒரு சொல்லில் தொடரைத் தொடங்குக. அத்துடன் அடுத்தடுத்துச் சொற்களைச் சேர்த்து, புதிய புதிய சொற்றொடர்களை உருவாக்குக. இறுதித் தொடர் அனைத்துச் சொற்களையும் சேர்த்ததாக அமைய வேண்டும்.

காலங்களில் தெருவில் வைக்காதீர்கள் காப்புக் கம்பிகள் கவனக் குறைவுடன் ஆகியவற்றின் மீது காலை அறுந்த மழை மின்கம்பிகள்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 84 22/05/18 6:56 PM

1. வைக்காதீர்கள்

2. .... வைக்காதீர்கள்

3. .... வைக்காதீர்கள்

4. ....

குறுக்கெழுத்துப் புதிர்



இடமிருந்து வலம்

2. விழாவறை காதை குறிப்பிடும் விழா (6)

5. சரி என்பதற்கான எதிர்ச்சொல் தரும் எழுத்துகள் இடம் மாறியுள்ளது (3)

7. பொங்கல் விழாவையொட்டி நடத்தப்படும் சிறுவர்களுக்கான போட்டிகளில் ஒன்று (7)

10. ஊழ் என்பதற்குத் தற்காலப் பயன்பாட்டில் உள்ள சொல் (2)

13. மா + அடி - இதன் புணர்ந்த வடிவம் (3)

19. கொள்ளுதல் என்பதன் முதல்நிலை திரிந்த சொல் (2)

வலமிருந்து இடம்

9. தூய்மையற்ற குருதியை எடுத்துச் செல்லும் இரத்தக் குழாய் (2)

11. ஆராய்ச்சி என்பதன் சொற்சுருக்கம் (3)

12. மணிமேகலை காப்பியத்தின் ஆசிரியர் (5)

18. தனி + ஆள் -சேர்த்து எழுதுக. (4)

மேலிருந்து கீழ்

1. தமிழர்களின் வீர விளையாட்டு (7)

2. இவள் + ஐ – சேர்ந்தால் கிடைப்பது (3)

3. மரத்தில் காய்கள் ... .ஆகக் காய்த்திருந்தன (4)

5. உரிச்சொற்களுள் ஒன்று (2)

6. ……..சிறந்தது (2)

8. நேரத்தைக் குறிப்பிடும் வானியல் சொல் (2)

12. அகழாய்வில் கிடைத்த கொள்கலன்களுள் ஒருவகை (4)

15. காய் பழுத்தால் ……(2)

கீழிருந்து மேல்

14. ஒருவர் பற்றி ஒருவர் பிறரிடம் இதை வைக்கக் கூடாது (3)

17. யா முதல் வரும் வினாப்பெயர்(2)

18. தகவிலர் என்பதற்கு எதிர்ச்சொல்லாகத் திருவள்ளுவர் குறிப்பிடுவது (4).

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 85 22/05/18 6:56 PM

காட்சியைக் கண்டு கவினுற எழுதுக

.....

.....

.....

.....

.....

செயல்திட்டம்

தமிழ்நாட்டில் அகழாய்வு மேற்கொள்ளப்பட்ட இடங்கள் குறித்த செய்திகளை, நாளிதழ்களிலோ புத்தகங்களிலோ திரட்டிச் செய்திப் படத்தொகுப்பினை உருவாக்குக.

நிற்க அதற்குத் தக...

நான் பாராட்டு பெற்ற சூழல்கள்

அ) கூடுதலாக மீதம் கொடுத்த கடைக்காரரிடம் அந்தப் பணத்தை மீண்டும் அளித்த போது.

ஆ) கட்டுரை ஏடுகளைக் கீழே தவறவிட்ட என் ஆசிரியருக்கு அதை எடுத்துத் தந்தபோது.

இ) ……

ஈ) ……

அறிவை விரிவு செய்

1. தமிழர் நாகரிகமும் பண்பாடும் – அ. தட்சிணாமூர்த்தி
2. தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும் – மா. இராசமாணிக்கனார்
3. தமிழ்ச் செவ்வியல் இலக்கியத்தில் பறவைகள் – க. ரத்னம்
4. தொல்லியல் நோக்கில் சங்க காலம் – கா. ராஜன்
5. தமிழர் சால்பு – சு. வித்யானந்தன்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 86 22/05/18 6:56 PM

இயல் மூன்று

திருக்குறள்

பொறையுடைமை

1) *அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை*
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

தன்னைத் தோண்டுபவரைத் தாங்கும் நிலம் போலத் தன்னை இகழ்பவரைப் பொறுப்பது தலைசிறந்தது.

அணி – உவமையணி

2) *திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து*
அறனல்ல செய்யாமை நன்று.

பிறர் தனக்குத் தரக்கூடாத துன்பத்தைத் தந்தாலும் மனம் நொந்து அறம் அல்லாத செயல்களைச் செய்யாமலிருப்பதே நன்றாம்.

4AGR1E

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 87 22/05/18 6:56 PM

3) *மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்*
*தகுதியான் வென்று விடல்.**

செருக்கினால் துன்பம் தந்தவரை நம்முடைய பொறுமையால் வெல்ல வேண்டும்.

தீவினை அச்சம்

4) *தீயவை தீய பயத்தலால் தீயவை*
தீயினும் அஞ்சப் படும்.

தீயவை தீயவற்றையே தருதலால்
தீயைவிடக் கொடியதாகக் கருதி அவற்றைச் செய்ய அஞ்சவேண்டும்.

5) *மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்*
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு.

மறந்தும்கூடப் பிறருக்குக் கெடுதல் செய்ய நினைக்கக் கூடாது.
நினைத்தால், நினைத்தவருக்குக் கெடுதல் செய்ய அறம் நினைக்கும்.

கேள்வி

6) *செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்*
செல்வத்துள் எல்லாந் தலை.

செல்வத்தில் சிறந்தது செவியால் கேட்டறியும் கேள்விச்செல்வம்.
அது பிற வழிகளில் வரும் செல்வங்களைவிடத் தலைசிறந்தது.
அணி – சொற்பொருள் பின்வருநிலையணி

7) *எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்*
*ஆன்ற பெருமை தரும். **

எவ்வளவு சிறிதானாலும் நல்லவற்றைக் கேட்டால்,
கேட்ட அளவுக்குப் பெருமை உண்டாகும்.

8) *நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய*
வாயினர் ஆதல் அரிது.

நுட்பமான கேள்வியறிவு இல்லாதவர்
அடக்கமான சொற்களைப் பேசுவது அரிது.

9) *செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்*
அவியினும் வாழினும் என்.

கேட்பதன் சுவையை உணராமல் நாவின் சுவை மட்டும் உணர்பவர்
இறந்தால்தான் என்ன! இருந்தால்தான் என்ன!

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 88 22/05/18 6:56 PM

தெரிந்துதெளிதல்

10) *குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்*
மிகைநாடி மிக்க கொளல்.

ஒருவரின் குணத்தையும் குற்றத்தையும் ஆராய்ந்து,
அவற்றுள் மிகுதியானதைக் கொண்டு அவரைப்பற்றி முடிவு செய்க.
அணி – சொற்பொருள் பின்வருநிலையணி

11) *பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்*
கருமமே கட்டளைக் கல்.

ஒருவரின் பெருமைக்கும் சிறுமைக்கும்
அவரது செயல்பாடுகளே ஆராய்ந்து அறியும் உரைகல் ஆகும்.
அணி – ஏகதேச உருவக அணி

12) *தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்*
தீரா இடும்பை தரும்.

ஆராயாமல் ஒருவரைத் தேர்வு செய்வதும் அவ்வாறு தேர்வு செய்தபின்
அவரைப்பற்றி ஐயப்படுதலும் தீராத துன்பம் தரும்.

ஒற்றாடல்

13) *ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்*
ஒற்றினால் ஒற்றிக் கொளல்.

ஒற்றர் ஒருவர் சொன்ன செய்தியை மற்றோர் ஒற்றரால் அறிந்து முடிவு செய்க!

வினைத்தூய்மை

14) *ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை*
*ஆஅதும் என்னு மவர்.**

வாழ்வில் உயர நினைப்பவர் புகழைக் கெடுக்கும் செயல்களைப் புறம் தள்ளவேண்டும்.

15) *ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க*
சான்றோர் பழிக்கும் வினை.

தாயின் பசியைக் கண்டபோதும் சான்றோர் பழிக்கும் செயல்களைச் செய்யாதே.

16) *சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்*
கலத்துநீர் பெய்திரீஇ யற்று.

தீய செயலால் பொருள் சேர்த்துப் பாதுகாத்தல் சுடாத மண்கலத்தில் நீரூற்றி வைப்பதைப் போன்றது.
அணி – உவமையணி

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 89 22/05/18 6:56 PM

பழைமை

17) *விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையாற்*
கேளாது நட்டார் செயின்.

நட்பின் உரிமையில் தம்மைக் கேட்காமலேயே ஒரு செயலைச் செய்தாலும் நட்பு பாராட்டுவோர் விருப்பத்தோடு அச்செயலுக்கு உடன்படுவர்.

தீ நட்பு

18) *கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு*
சொல்வேறு பட்டார் தொடர்பு.

செயல் வேறு, சொல் வேறு என்று உள்ளவர் நட்பு கனவிலும் இனிமை தராது.

பேதைமை

19) *நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்*
பேணாமை பேதை தொழில்.

தகாத செயலுக்கு வெட்கப்படாமை, தக்கவற்றை நாடாமை, பிறரிடம் அன்பு இல்லாமை, ஏதொன்றையும் பாதுகாக்காமை முதலியவை பேதையின் செயல்கள்.

20) *ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்*
பேதையின் பேதையார் இல்.

படித்தும் படித்ததை உணர்ந்தும் உணர்ந்ததை மற்றவருக்குக் கூறியும் தான் அதன்படி செயல்படாத பேதையைப் போலப் பேதை யாருமில்லை!

நூல் வெளி

உலகப் பண்பாட்டிற்குத் தமிழினத்தின் பங்களிப்பாக அமைந்த நூல், திருக்குறள். இனம், சாதி, நாடு குறித்த எவ்வித அடையாளத்தையும் முன்னிலைப்படுத்தாத உலகப் பொதுமறை இந்நூல். இது முப்பால், பொதுமறை, பொய்யாமொழி, வாயுறைவாழ்த்து, தெய்வநூல், தமிழ்மறை, முதுமொழி, பொருளுறை போன்ற பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சர், பரிதி, பரிமேலழகர், திருமலையர், மல்லர், பரிப்பெருமாள், காளிங்கர் ஆகிய பதின்மரால் திருக்குறளுக்கு முற்காலத்தில் உரை எழுதப்பட்டுள்ளது. இவ்வுரைகளுள் பரிமேலழகர் உரையே சிறந்தது என்பர். இந்நூல் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இந்நூலைப் போற்றும் பாடல்களின் தொகுப்பே திருவள்ளுவ மாலை.

உலகின் பல மொழிகளிலும் பன்முறை மொழிபெயர்க்கப்பட்டதுடன், இந்திய மொழிகளிலும் தன் ஆற்றல் மிக்க அறக் கருத்துகளால் இடம் பெற்றது திருக்குறள். தமிழில் எழுதப்பட்ட உலகப் பனுவல் இந்நூல்.

பிற அறநூல்களைப் போல் அல்லாமல் பொது அறம் பேணும் திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இவருக்கு நாயனார், தேவர், முதற்பாவலர், தெய்வப் புலவர், நான்முகனார், மாதானுபங்கி, செந்நாப்போதார், பெருநாவலர் போன்ற சிறப்புப் பெயர்கள் உண்டு.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 90 22/05/18 6:56 PM

கற்பவை கற்றபின்...

1. படத்திற்கேற்ற குறளைத் தேர்வு செய்க.

.....

.....

.....

.....

.....

அ) நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

ஆ) விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையாற்
கேளாது நட்டார் செயின்.

இ) செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாந் தலை.

2. பாடலின் பொருளுக்குப் பொருத்தமான திருக்குறளைக் கண்டறிக.

பாடல்

ஆண்டில் இளையவனென்று அந்தோ அகந்தையினால்
ஈண்டிங்கு இகழ்ந்தென்னை ஏளனம்செய் – மாண்பற்ற
காரிருள்போல் உள்ளத்தான் காந்திமதி நாதனைப்
பாரதி சின்னப் பயல்.

குறள்

அ) செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்.

ஆ) மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

இ) குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 91 22/05/18 6:56 PM

3. பொருளுக்கேற்ற அடியைக் கண்டுபிடித்துப் பொருத்துக.

பசுமண் கலத்துநீர் பெய்திரீஇ யற்று	ஒருவனின் செயல்பாடுகளே உரசி அறியும் உரைகல்
தத்தம் கருமமே கட்டளைக்கல்	அவ்வளவிற்குப் பெருமை உண்டாக்கும்
அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்	சுடாத மண்கலத்தில் நீரூற்றி வைப்பதைப் போல

4. தீரா இடும்பை தருவது எது?

அ. ஆராயாமை, ஐயப்படுதல்

ஆ. குணம், குற்றம்

இ. பெருமை, சிறுமை

ஈ. நாடாமை, பேணாமை

5. சொல்லுக்கான பொருளைத் தொடரில் அமைத்து எழுதுக.

அ. நுணங்கிய கேள்வியர் - நுட்பமான கேள்வியறிவு உடையவர்

ஆ. பேணாமை – பாதுகாக்காமை

இ. செவிச் செல்வம் – கேட்பதால் பெறும் அறிவு

ஈ. அறனல்ல செய்யாமை – அறம் அல்லாத செயல்களைச் செய்யாதிருத்தல்

குறுவினா

1. நிலம் போல யாரிடம் பொறுமை காக்கவேண்டும்?

2. தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

இக்குறட்பாவின் கருத்தை விளக்குக.

3. ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்.

இக்குறட்பாவில் அமைந்துள்ள நயங்களை எழுதுக.

4. கனவிலும் இனிக்காதது எவர் நட்பு?

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 92 22/05/18 6:56 PM

கதைக்குப் பொருத்தமான குறளைத் தேர்வு செய்து காரணத்தை எழுதுக.

மௌனவிரதம் என்னும் தலைப்பில் நான்கு நண்பர்கள் ஒரு சொற்பொழிவைக் கேட்டனர். தாங்களும் ஒரு வாரத்துக்கு மௌனவிரதம் இருப்பதாகத் தீர்மானம் செய்தனர். மௌனவிரதம் ஆரம்பமாகி விட்டது! கொஞ்ச நேரம் போனதும் ஒருவன் சொன்னான், "எங்கள் வீட்டு அடுப்பை அணைத்துவிட்டேனா தெரியவில்லையே!"

பக்கத்திலிருந்தவன் "அடப்பாவி! பேசிட்டியே!" என்றான்.

உடனே மூன்றாவது ஆள், "நீ மட்டும் என்ன? நீயும்தான் பேசிவிட்டாய்!" என்றான்.

நான்காவது ஆள், "நல்லவேளை! நான் மட்டும் பேசவில்லை!" என்றான்.

இப்படியாக அவர்களின் மௌனவிரதம் முடிந்துபோனது.

1. *மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்*
   அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு.

2. *திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து*
   அறனல்ல செய்யாமை நன்று.

3. *ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்*
   பேதையின் பேதையார் இல்.

திருக்குறள் பற்றிய சில ஆராய்ச்சிச் செய்திகள்

திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு–1812

திருக்குறள் அகரத்தில் தொடங்கி னகர ஒற்றில் முடிகிறது.

திருக்குறளில் இடம்பெறும் இருமலர்கள்–அனிச்சம், குவளை

திருக்குறளில் இடம்பெறும் ஒரே பழம்– நெருஞ்சிப்பழம்

திருக்குறளில் இடம்பெறும் ஒரே விதை– குன்றிமணி

திருக்குறளில் இருமுறை வரும் ஒரே அதிகாரம்– குறிப்பறிதல்

திருக்குறளில் இடம்பெற்ற இரண்டு மரங்கள்– பனை, மூங்கில்

திருக்குறள் மூலத்தை முதன் முதலில் அச்சிட்டவர்– தஞ்சை ஞானப்பிரகாசர்

திருக்குறளுக்கு முதன் முதலில் உரை எழுதியவர்–மணக்குடவர்

திருக்குறளில் கோடி என்ற சொல் ஏழு இடங்களில் இடம்பெற்றுள்ளது.

ஏழு என்ற சொல் எட்டுக் குறட்பாக்களில் எடுத்தாளப்பட்டுள்ளது.

திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்– ஜி.யு. போப்

திருக்குறள் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் வெளிவந்துள்ளது.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 93 22/05/18 6:56 PM

கலைச்சொல் அறிவோம்

அகழாய்வு – *Excavation*

கல்வெட்டியல் – *Epigraphy*

நடுகல் – *Hero Stone*

பண்பாட்டுக் குறியீடு – *Cultural Symbol*

புடைப்புச் சிற்பம் – *Embossed sculpture*

பொறிப்பு – *Inscription*

தமிழகத்தில் அகழாய்வு நடைபெற்ற முக்கிய இடங்கள்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 94 22/05/18 6:56 PM

இயல் நான்கு

எட்டுத்திக்கும் சென்றிடுவீர்



கற்றல் நோக்கங்கள்

- மின்னணு இயந்திரங்களின் தேவையையும் இணையத்தின் இன்றியமையாமையையும் அறிந்து பயன்படுத்துதல்
- இலக்கியங்கள் காட்டும் தமிழர்களின் அறிவியல் சிந்தனைகள், சமூகத் தேவைகளுக்கு ஏற்ப மேம்பட்டு வருவதை உணர்தல்
- தொல்காப்பியம் குறிப்பிடும் உயிர்களின் வகைப்பாட்டினை அறிவியல் செய்திகளோடு ஒப்பிடல்
- அறிவியல் செய்திகளையும் கவிதையாக்க முடியும் என்பதை அறிந்து படைப்பூக்கம் பெறுதல்
- நேர்காணலின் நோக்கமறிந்து ஏற்றவாறு வினாக்களை வடிவமைத்தல்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 95 22/05/18 6:56 PM

இயல் நான்கு

இயந்திரங்களும் இணையவழிப் பயன்பாடும்

நுழையும்முன்

இயந்திரங்கள் இல்லாத மனித வாழ்க்கையைக் கற்பனை செய்ய முடியாத அளவிற்கு இன்று தொழில்நுட்பம் நம்மைச் சூழ்ந்துள்ளது. இணையவழிப் பயன்பாடு வாழ்வை எளிதாக்கி, நேரத்தையும் உழைப்பையும் வீணாக்காமல் தடுக்கிறது. என்றாலும், பல நன்மைகளும் சில தீமைகளுமாக மாற்றங்களும் முன்னேற்றங்களும் நம்மை முன்னோக்கிப் பயணிக்கச் செய்கின்றன. எதிர்கால நலன் ஒன்றையே கருத்தில்கொண்டு இயந்திரங்களையும் இணையத்தையும் முறையாகப் பயன்படுத்தி வாழ்வில் ஏற்றம் பெறுவோம்.



படி 1
செயலியை நிறுவுதல்

படி 2
முன்பதிவு செய்தல்

படி 3
பயணச்சீட்டைப் பெறுதல்

படி 4
பயணப் பதிவு (PNR) நிலையை அறிதல்

பெருந்துகளில் பயணச்சீட்டு வழங்குவதற்கும் உணவு விடுதிகளில் உணவுக் கட்டணச் சீட்டு வழங்குவதற்கும் உரிய கருவிகளைப் பார்த்திருப்போம். அவை எளிய வடிவிலான மின்னணு இயந்திரங்கள்; இணைய இணைப்பு இல்லாதவை. அந்தந்த நிறுவனத்தின் தேவைக்கென்று மட்டுமே வடிவமைக்கப்பட்டவை. இவற்றைப் போன்ற பல இயந்திரங்களை அன்றாடம் பயன்படுத்தும் காலத்தில் நாம் வாழ்கிறோம்.

முதன்முதலாக மின்னஞ்சல் மூலம் தொடர்புகொண்டபோது உலகம் சுருங்கிவிட்டது என்று மகிழ்ந்தோம். கடிதப் போக்குவரத்து குறைந்தது. குறுஞ்செய்தியின் வருகைக்குப்பின் தந்தி விடைபெற்றுக் கொண்டது. சமூக வலைத்தளங்கள் மூலம் காணொலி இணைப்பில் பேசுகையில், உலகம் உள்ளங்கைக்குள் அடங்கிவிடுகிறது. ஆண்டிபட்டியில் நடைபெறும் திருமணத்தை அமெரிக்காவில் அதே நேரத்தில்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 96 22/05/18 6:56 PM

இணையவழிக் காணொலிமூலம் காண முடிகிறது. இணையம் என்னும் தொழில்நுட்ப உலகில், அனைத்துத் துறைகளும் புகுந்துகொண்டன. வங்கிகள் தரும் அட்டைகளில் உருள்கிறது வாழ்க்கை.

அறிவியல் முன்னேற்றத்தால், மனிதனின் பயணநேரம் குறைந்துள்ளது. அறிவியல் கண்டுபிடிப்புகள் நமது நேரத்தைப் பலவழிகளிலும் மிச்சப்படுத்துகின்றன. கணினிப் பயன்பாடு மிகுந்துள்ளதால் சமையல் எரிவாயு பதிவு செய்வது, மின் கட்டணம் செலுத்துவது, பயணத்திற்கு முன்பதிவு செய்வது போன்ற செயல்களுக்கு நேரில் சென்று வரிசையில் நிற்பது குறைந்துள்ளது. அங்காடிகளுக்குச் சென்று பொருள்களை வாங்குவதும்கூட இணையவழியில் தொடங்கிவிட்டது. தெருவுக்குத் தெரு 24 x 7 தானியக்கப் பண இயந்திரமும் கடைக்குக் கடை, வங்கி அட்டைகள் பயன்படுத்தும் இயந்திரமும் புழக்கத்திற்கு வந்துவிட்டன. இந்த இயந்திரங்களின் பின்னால் இருப்பது கணினி யுகத்தின் கண்ணுக்குத் தெரியாத இணைய வலை! இணைப்பு அலை!

ஒளிப்படி இயந்திரம் (Photo copier)

கல்வி, வணிகம், அரசு மற்றும் தனியார் அலுவலகங்கள் என அனைத்துத் துறைகளிலும் நகல் எடுக்கப் பயன்படுகின்ற முக்கியமான இயந்திரம் இது. அனைவரும் ஜெராக்ஸ் (Xerox) என்று பொதுவாகக் கூறுவது வழக்கத்தில் உள்ள சொல்.

நியூயார்க்கைச் சேர்ந்த காப்புரிமைச் சட்ட வல்லுநரும் பகுதிநேர ஆய்வாளருமான செஸ்டர் கார்ல்சன் (chester Carlson), தம் தொழிலுக்காக நிறைய காகிதங்களைப் படி எடுக்க வேண்டியிருந்தது. அந்தப் பணிச்சுமையே அவரை இப்புதிய கண்டுபிடிப்பை நோக்கித் தள்ளியது. மின்னணுப் புகைப்படச் சோதனைகளுக்குத் தமது சமையலறையையே அவர் பயன்படுத்திக்கொண்டார். கந்தகம் தடவிய துத்தநாகத் தட்டைக்கொண்டு, 1938இல் உலகின் முதல் ஒளிப்படியை எடுத்தார். கிரேக்க மொழியில் சீரோகிராஃபி (Xerography) என்றால் உலர் எழுத்துமுறை (dry writing) என்று பொருள். அவரால் 1959இல் இந்த இயந்திரம் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இன்று, பல பெரிய நிறுவனங்கள் ஒளிப்படி எடுக்கும் கருவியை உருவாக்கி விற்பனை செய்தாலும் ஜெராக்ஸ் என்ற பெயரே நிலைத்து விட்டது.

தொலைநகல் இயந்திரம் (Fax)

தொலைநகல் இயந்திரம் கோப்புகளையும் ஒளிப்படங்களையும் உடனடியாக ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு அனுப்பப் பயன்படுகிறது.

1846இல் ஸ்காட்லாந்துக் கண்டுபிடிப்பாளர் அலெக்சாண்டர் பெயின் (Alexander Bain) என்பார் குறியீடுகளை மின்னாற்றல் உதவியுடன் அச்சிடுவதில் வெற்றிகண்டு அதற்குரிய காப்புரிமையைப் பெற்றார். இத்தாலி நாட்டு இயற்பியல் அறிஞர் ஜியோவான்னி காசில்லி (Giovanni Caselli) பான்டெலிகிராஃப் (Pantelegraph) என்ற தொலைநகல் கருவியை உருவாக்கினார். அவருடைய கண்டுபிடிப்பைக்கொண்டு, 1865இல் பாரிஸ் நகரிலிருந்து லியான் நகரத்துக்குத் தொலைநகல் சேவை

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 97 22/05/18 6:56 PM

தொடங்கப்பட்டது.

தொலைபேசியைக் கண்டுபிடிப்பதற்குப் பதினோராண்டுகளுக்கு முன்பே இந்நிகழ்வு நடந்தது. பின்னர் அறிவியல் அறிஞர் பலரின் முயற்சியால் இந்த இயந்திரம் மேம்படுத்தப்பட்டது.

*1985*இல் அமெரிக்காவின் *ஹாங்க் மாக்னஸ்கி* (*Hank Magnuski*) என்பவர் கணினி மூலம் தொலைநகல் எடுக்கும் தொழில்நுட்பத்தைக் கண்டுபிடித்தார். அந்த இயந்திரத்திற்கு *காமா ஃபேக்ஸ்* (*Gamma Fax*) என்று பெயரிட்டு விற்பனைக்குக் கொண்டுவந்தார்.

தானியக்கப் பண இயந்திரம் (Automated Teller Machine)

உழைத்துச் சேர்த்த பணத்தைப் பெட்டியில் பூட்டி வைக்கும் பழக்கம் இன்று இல்லை.

தெரிந்து தெளிவோம்

நான் இங்கிலாந்திலோ உலகின் எந்த மூலையிலோ இருந்தாலும் என் வங்கிப் பணத்தை எடுத்துப் பயன்படுத்துவதற்கொரு வழியைச் சிந்தித்தேன். சாக்லேட்டுகளை வெளித்தள்ளும் இயந்திரத்திலிருந்து யோசனை கிடைத்தது. அங்கு சாக்லேட்; இங்கே பணம்.

– ஜான் ஷெப்பர்டு பாரன்

அரசின் உதவித்தொகை, ஊக்கத்தொகை, பணியாளரின் ஊதியம் போன்றவற்றை வங்கிக் கணக்குகளில் நேரடியாகச் செலுத்தும் மின்னணுப் பரிமாற்றமுறை நடைமுறைக்கு வந்துவிட்டது. அதனை எடுக்க வங்கிக்குச் செல்லவேண்டியதில்லை. தானியக்கப் பண இயந்திரம் மூலமே பணம் எடுக்கலாம்;

4AQM32

இங்கிலாந்தைச் சேர்ந்த பொறியாளரான *ஜான் ஷெப்பர்டு பாரன்* (*John Shepherd Barron*) என்பவர் தலைமையிலான குழுவொன்று, பார்க்லேஸ் வங்கிக்காக இலண்டனில் *1967* ஜூன் *27*இல் தானியக்கப் பண இயந்திரத்தை நிறுவியது.

வங்கி அட்டையெல்லாம் அப்போது கிடையாது. வங்கியில் வழங்கப்பட்ட காசோலையைக் கொண்டுதான் பணம் எடுக்கப்பட்டது. அந்தக் காசோலையில் உள்ள குறியீடுகளை இயந்திரம் படித்துப் புரிந்துகொண்டு பணத்தைத் தள்ளும். பின்னர் அது வாடிக்கையாளரின் ஆறிலக்கக் கடவுச்சொல் தருமாறு மேம்படுத்தப்பட்டது.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 98 22/05/18 6:56 PM

இந்தக் காசோலைகளை ஒருமுறை மட்டுமே பயன்படுத்த முடியும். பணம் எடுக்கும்போது காசோலை, இயந்திரத்துக்கு உள்ளே போய்விடும்.

பின்னர் வங்கிகளின் அட்டைகளில் தனிப்பட்ட அடையாள எண்ணை உருவாக்கித் தானியக்கப் பண இயந்திரத்தில் பயன்படுத்தத் தொடங்கினர். இன்று உலகெங்கும் பரவியுள்ள தானியங்கி இயந்திரம் பல வசதிகளுடன் விளங்குகிறது. வங்கி அட்டையே இல்லாமல், அலைபேசி எண் மற்றும் வங்கிக் கணக்கு எண் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பணம் செலுத்தும் முறை வந்துவிட்டது.

இது வங்கிக்குச் செல்வதைப் பெருமளவு குறைத்துவிட்டது. ஆனாலும், பெருகிவரும் இணையப் பயன்பாட்டின் காரணமாகவும் பணமற்ற வணிகமுறை அனைத்து இடங்களிலும் நடைமுறைப்படுத்தப்படுவதன் காரணமாகவும் இந்தத் தானியக்கப் பண இயந்திரங்களின் பங்கு எதிர்காலத்தில் குறைந்துவிடக்கூடும்.

அட்டை பயன்படுத்தும் இயந்திரம் (Swiping Machine)

கையில் பணமே இல்லாமல் கடைக்குச் சென்று பொருள் வாங்கவும் மற்ற வணிகப் பரிமாற்றங்களுக்கும் இந்தக் கருவி பயன்படுத்தப்படுகிறது. இது, கட்டணம் செலுத்தும் கருவி (*payment terminal*) என்றும் விற்பனைக் கருவி (*point of sale terminal*) என்றும் அழைக்கப்படுகிறது.

தெரிந்து தெளிவோம்

ஆட்ரியன் ஆஷ்ஃபீல்டு (Adrian Ashfield) என்பவர் 1962இல் கடவுச்சொல்லுடன் கூடிய அட்டைக்கு இங்கிலாந்தில் காப்புரிமை பெற்றிருந்தார். ஆரம்பத்தில் பெட்ரோல் தருவதற்குப் பயன்படுத்தவே காப்புரிமை தரப்பட்டது. அதுவே பின்னர் அனைத்துப் பயன்பாட்டுக்குமான காப்புரிமையாக மாற்றப்பட்டது.

இந்த இயந்திரத்தில் வங்கி அட்டையின் காந்தப்பட்டை இருக்கும் பகுதியைத் தேய்க்கும்போது வாடிக்கையாளரின் விவரங்கள், இணையத் தொடர்பின் மூலம் வங்கிக் கணினிக்குச் செல்கிறது. கணினியால் அட்டை ஆராயப்பட்டுக் கடவுச் சொல்லைச் சரிபார்த்தபின் பணப்பரிவர்த்தனைக்கு வங்கி ஒப்புதல் அளிக்கிறது. தற்காலத்தில் பயன்படுத்தப்படும் அட்டைகளில் சில்லு (*chip*) என்று சொல்லப்படும் பகுதி மூலம் வணிகப் பரிமாற்றங்கள் நடைபெறுகின்றன.

தமிழக மக்கள் பயன்படுத்தும் குடும்ப அட்டைகள் திறன் அட்டைகளாக (*smart cards*) மாற்றப்பட்டுள்ளன. குடும்பத்தில் உள்ளவர்களின் ஆதார் எண்கள், அலைபேசி எண்கள், முகவரி உள்ளிட்ட விவரங்களைச் சேர்த்துத் திறன் அட்டைகள் வழங்கப்படுகின்றன. குடும்ப உறுப்பினர்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 99 22/05/18 6:56 PM

நியாயவிலைக் கடைக்குச் செல்கையில் அவர்களது திறன் அட்டை அங்கிருக்கும் விற்பனைக் கருவியில் வருடப்படுகிறது (scanning). அங்கு விற்பனை செய்யப்படும் பண்டங்களும் விலை விவரங்களும் பற்றிய குறிப்புகள் பதிவு செய்யப்பட்ட அலைபேசி எண்ணுக்குக் குறுஞ்செய்தியாக வந்துவிடுகின்றன.

ஆளறிசோதனைக் கருவி (Biometric Device)

ஆளறிசோதனைக் கருவி மனிதனின் கைரேகை, முகம், விழித்திரை ஆகியவற்றில் ஒன்றையோ அனைத்தையுமோ அடையாளமாகப் பதிவு செய்யவும் பதிவு செய்த அடையாளம் மூலம் மறுபடி ஆளை அறியவும் பயன்படுகிறது. நடுவண் அரசின் ஆதார் அடையாள அட்டையைப் பெறுவதற்கு நம்முடைய ஒளிப்படத்தையும் விழித்திரையையும் இரு கைகளின் பத்து விரல் ரேகைகளையும் பதிவு செய்கிறோம்.

அரசு நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் வருகைப் பதிவுக்காகவும் வெளியேறுகைப் பதிவுக்காகவும் இக்கருவி பயன்படுகிறது.

இணைய வணிகம்

இங்கிலாந்தைச் சேர்ந்த மைக்கேல் ஆல்ட்ரிச் (Michael Aldrich) 1979இல் இணைய வணிகத்தைக் கண்டுபிடித்தார். இது இணைய உலகின் மற்றொரு பாய்ச்சலாகக் கருதப்படுகிறது. 1989இல் அமெரிக்காவில் இணையவழி மளிகைக்கடை தொடங்கப்பட்டது.

1991இல் இணையம், பொதுமக்களின் பயன்பாட்டுக்கு வந்தது. இன்று இணைய நிறுவனங்கள் விற்காத பொருள்கள் எதுவும் உலகில் இல்லை. கரும்பு முதல் கணினி வரை இணையவழியில் விற்கப்படுகின்றன. இணைய வணிகம் தவிர்க்க முடியாத இடத்தைப் பிடித்துள்ளது.

இந்தியத் தொடர்வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக் கழக இணைய வழிப் பதிவு (IRCTC)

மக்கள்தொகை மிகுந்த இந்தியா போன்ற நாடுகளில் வரிசையில் நிற்பது நேர விரயம். இதனைக் குறைப்பதுடன், இருந்த இடத்திலிருந்தே பயணச்சீட்டு எடுப்பதை எளிதாக்கிய மிகப் பெரிய இந்திய நிறுவனம் இந்தியத் தொடர்வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக் கழகம். இது பயணச்சீட்டு வழங்குவதையும் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்வதையும் திறம்படச் செய்து வருகிறது.

இதன் இணையத்தளத்தில் பதிவு செய்வது, மிகவும் எளிதானது. பயணம் செய்ய வேண்டிய நாளில் ஊர்களுக்குச் செல்லும் தொடர்வண்டிகளையும் அவற்றின் நேரங்களையும் பயணம் செய்ய விரும்பும் வகுப்புகளையும் (பெட்டி வகைகள்) அதற்குண்டான தொகையையும் காண்பிக்கிறது. வங்கி அட்டைகளின் உதவியுடன் தொகையைச் செலுத்தி முன்பதிவு செய்துகொள்ளலாம். மின்னஞ்சலில் பயணச்சீட்டு வந்துவிடுகிறது. நமது

தெரிந்து தெளிவோம்

1990இல் டிம் பெர்னெர்ஸ் லீ (Tim Berners – Lee) வையக விரிவு வலை வழங்கியை (www – server) உருவாக்கினார். "இணையத்தில் இது இல்லையெனில், உலகத்தில் அது நடைபெறவேயில்லை!" என்பது லீயின் புகழ் பெற்ற வாசகம்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 100 22/05/18 6:56 PM

அலைபேசிக்குக் குறுஞ்செய்தியும் வந்துவிடுகிறது. பயணத்தின்போது குறுஞ்செய்தியையும் நமது அடையாள அட்டையையும் காண்பித்தாலே போதும். பயணம் தேவையில்லையெனில், பயணச் சீட்டை நீக்கம் செய்வதையும் இந்தத் தளத்திலேயே செய்து கொள்ளலாம்.

2002ஆம் ஆண்டு இந்த வசதி அறிமுகப்படுத்தப்பட்ட போது சராசரியாக ஒரு நாளைக்கு 29 பயணச்சீட்டுகள் இணையவழியே பதிவு செய்யப்பட்டன. ஆனால், 13 ஆண்டுகள் கழித்து 2015 ஏப்ரல் 1 அன்று ஒரே நாளில் 13 இலட்சம் பயணச்சீட்டுகள் பதிவு செய்யப்பட்டது ஒரு சாதனை. தற்போது ஒரு நிமிடத்திற்கு 1500 பயணச்சீட்டுகள் பதிவு செய்யும் வகையிலும் 3 இலட்சம் பயனர்கள் ஒரே நேரத்தில் இணையவழிச் சேவையைப் பயன்படுத்தவும் உரிய வழிவகை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தற்காலத்தில் பேருந்து முன்பதிவு, விமான முன்பதிவு, தங்கும் விடுதிகள் முன்பதிவு ஆகியவற்றை இணையம் மூலமாக மேற்கொள்ளப் பல முகமைகள் உள்ளன. இது பலருக்கு வேலைவாய்ப்பையும் தருகிறது. பெருநகரங்களில் திரைப்படங்களின் இருக்கைகள் முன்பதிவு செய்வதுகூட இணையம் மூலம் நடைபெறுகின்றது.

அரசுக்குச் செலுத்தவேண்டிய சொத்து வரி, தண்ணீர் வரி ஆகியன இணையவழியில் செலுத்தப்படுகின்றன. அரசின் அனைத்துத் திட்டங்களுக்கும் உரிய படிவங்களைப் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். அவற்றை நிரப்பி இணையம் மூலமாகவே விண்ணப்பிக்கலாம். பிறப்புச் சான்றிதழ், வருமானவரிச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் போன்றவை அரசால் மக்களுக்கு இணையம் மூலம் வழங்கப்படுகின்றன. அரசின் மின்னணுச் சேவை மையங்களின் உதவியை நாடியும் மேற்கண்ட சேவைகளைப் பெறலாம்.

இணையப் பயன்பாடு

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 101 22/05/18 6:56 PM

தெரியுமா ?

பத்தாம் வகுப்பும் பன்னிரண்டாம் வகுப்பும் முடித்த மாணவர்களுக்கு, அரசின் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் செய்யப்படவேண்டிய பதிவு, ஆண்டுதோறும் அவர்கள் படித்த பள்ளிகளிலேயே இணையத்தின் வழியாகச் செய்யப்பட்டு வருகிறது. அரசின் விலையில்லா மிதிவண்டி, மடிக்கணினி ஆகியவற்றைப் பெற்ற மாணவர்களின் விவரங்கள் இணையத்தின் மூலம் பதிவு செய்யப்படுகின்றன.

நடுவண் அரசும் மாநில அரசும் பள்ளி மாணவர்களுக்குக் கல்வி உதவித் தொகை வழங்குவதற்கு ஆண்டுதோறும் பல போட்டித் தேர்வுகளை நடத்துகின்றன. பத்தாம் வகுப்பு மாணவர்களுக்குத் தேசியத் திறனாய்வுத் தேர்வு (National Talent Search Exam), எட்டாம் வகுப்பு மாணவர்களுக்குத் தேசியத் திறனாய்வு மற்றும் கல்வி உதவித் தொகைத் தேர்வு (National Means-cum -Merit Scholarship Scheme Exam), கிராமப்புறப் பள்ளிகளில் படிக்கும் ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு ஊரகத் திறனாய்வுத் தேர்வு (TRUST – Tamilnadu Rural Students Talent Search Examination) ஆகியவை நடத்தப்படுகின்றன. அவற்றில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள் தாங்கள் படிக்கும் பள்ளிகளிலேயே இணையத்தின்வழி விண்ணப்பிக்கலாம்.

பள்ளிக்கல்வி முடித்த மாணவர்கள் கல்லூரிகளுக்கு இணையம் வழியாக விண்ணப்பிக்கலாம். பள்ளிக் கட்டணம், கல்லூரிக் கட்டணம் ஆகியவற்றையும் இணையம் வழியாகவே செலுத்த முடியும். தேர்வுக் கட்டணங்கள் செலுத்துதல், தேர்வு அறை அடையாளச் சீட்டு பதிவிறக்கம் செய்தல் ஆகியவை இணையச் செயல்பாடுகளாக ஆகிவிட்டன. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் போன்ற தேர்வு முகமைகள் நடத்தும் தேர்வுகளுக்கு இணையம் மூலமே விண்ணப்பித்தால் போதுமானது. பன்னிரண்டாவது முடித்தபின் மாணவர்கள் பல்வேறு தொழிற்கல்வி நுழைவுத்தேர்வுகளுக்கு இணையத்திலேயே விண்ணப்பிக்கின்றனர்.

மனித இனம் தோன்றியது முதல் இன்றுவரை பல்வேறுவிதமான வளர்ச்சி களைக் கண்டுள்ளது. மனிதனது தேவைகள் பெருகப் பெருக கண்டுபிடிப்புகளும் பெருகின. நேரத்தையும் தூரத்தையும் சுருக்குவதில் மனிதன் வெற்றி பெற்றான். நீரின்றி அமையாது உலகு என்பதுபோல, இன்று இயந்திரங்களும் கணினிகளும் இன்றி உலகம் இயங்குவதில்லை!

கற்பவை கற்றபின்...

1. வங்கியில் இணையவழி சேமிப்புக் கணக்குத் தொடங்கும் நடைமுறையை எழுதுக.
2. உங்கள் குடும்பத்தினருடன் வெளியூர் சென்ற தொடர்வண்டிப் பயணத்திற்கு இணையத்தில் எவ்வாறு முன்பதிவு செய்தீர்கள்? அதன் வழிமுறைகளை அனுபவத்தில் (அ) கேட்டறிந்து வகுப்பறையில் வழங்குக.
3. விரலியில் (Pendrive) உள்ள பாடல்களையும் எழுத்துக் கோப்புகளையும் (Document) கணினியில் நுழைந்து உறைகளில் (Folder) இட்டுச் சேமிப்பதைச் செய்து பார்த்துத் தெரிந்து கொள்க.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 102 22/05/18 6:56 PM

இயல் நான்கு

ஓ, என் சமகாலத் தோழர்களே!

நுழையும்முன்

அறவியலும் அறிவியலும் இணைந்து வளர்ந்ததே தமிழ்ச் சமூகம். எனவே அறவியலோடு அறிவியல் கண்ணோட்டமும் வளர்க்கப்பட வேண்டும் என்பதைத் தற்காலப் படைப்பாளர்கள் வலியுறுத்துகின்றனர். அவ்வகையில் அறிவியல் துறையில் தமிழர்கள் சிறந்து விளங்க வேண்டும் என்ற தம் விழைவை இப்பாடல் மூலம் கவிஞரும் வெளிப்படுத்துகின்றார்.

கிளிக்கு றெக்கை இருக்கும் வரைக்கும்
கிழக்கு வானம் தூரமில்லை
முளைக்கும் விதைகள் முளைக்கத் துடித்தால்
பூமி ஒன்றும் பாரமில்லை

பாய்ந்து பரவும் இளைய நதிகளே
பள்ளம் நிரப்ப வாருங்கள்
காய்ந்து கிடக்கும் கழனிகள் எங்கும்
கதிர்கள் சுமந்து தாருங்கள்

முன்னோர் சொன்ன முதுமொழி எல்லாம்
முதுகில் சுமந்தால் போதாது
சொன்னோர் கருத்தை வாழ்க்கைப் படுத்த
துணிந்தால் துன்பம் வாராது

காட்டும் பொறுமை அடக்கம் என்னும்
கட்டுப் பாட்டைக் கடவாதீர்
கூட்டுப் புழுதான் பட்டுப் பூச்சியாய்க்
கோலம் கொள்ளும் மறவாதீர்

அறிவை மறந்த உணர்ச்சி என்பது
திரியை மறந்த தீயாகும்
எரியும் தீயை இழந்த திரிதான்
உணர்ச்சி தொலைந்த அறிவாகும்

பழையவை எல்லாம் பழமை அல்ல
பண்பும் அன்பும் பழையவைதாம்
இளையவர் கூட்டம் ஏந்தி நடக்க
இனமும் மொழியும் புதியவைதாம்

அறிவியல் என்னும் வாகனம் மீதில்
ஆளும் தமிழை நிறுத்துங்கள்
கரிகா லன்தன் பெருமை எல்லாம்
கணிப்பொறி யுள்ளே பொருத்துங்கள்*

ஏவும் திசையில் அம்பைப் போல
இருந்த இனத்தை மாற்றுங்கள்
ஏவு கணையிலும் தமிழை எழுதி
எல்லாக் கோளிலும் ஏற்றுங்கள்.*

– வைரமுத்து

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 103 22/05/18 6:56 PM

இலக்கணக்குறிப்பு

பண்பும் அன்பும், இனமும் மொழியும் – எண்ணும்மைகள்.

சொன்னோர் – வினையாலணையும் பெயர்.

பகுபத உறுப்பிலக்கணம்

பொருத்துங்கள் – பொருத்து + உம் + கள்

பொருத்து – பகுதி

உம் – முன்னிலைப் பன்மை விகுதி

கள் – விகுதி மேல் விகுதி

நூல் வெளி

கவிஞர் வைரமுத்து தேனி மாவட்டத்திலுள்ள மெட்டூர் என்னும் ஊரில் பிறந்தவர். இந்திய அரசின் உயர்ந்த விருதுகளுள் ஒன்றான பத்மபூஷண் விருதினைப் பெற்றவர். கள்ளிக்காட்டு இதிகாசம் புதினத்துக்காக 2003ஆம் ஆண்டு சாகித்திய அகாதெமி விருது பெற்றவர். இந்தியாவின் சிறந்த பாடலாசிரியருக்கான தேசிய விருதினை ஏழு முறையும் மாநில அரசின் விருதினை ஆறு முறையும் பெற்றவர். இவருடைய கவிதைகள் இந்தி, தெலுங்கு, மலையாளம், வங்காளம், ஆங்கிலம் உள்ளிட்ட பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இப்பாடப் பகுதி வைரமுத்து கவிதைகள் என்னும் தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

இலக்கியங்களில் அறிவியல்

புலவர் பாடும் புகழுடையோர் விசும்பின்
வலவன் ஏவா வான ஊர்தி

புறநானூறு

பாடல் 27, அடி 7–8.

அந்தரத் தார்மய னேஎன ஐயுறும்
தந்திரத்தால் தம நூல்கரை கண்டவன்
வெந்திற லான், பெருந் தச்சனைக் கூவி,"ஓர்
எந்திர வூர்திஇ யற்றுமின்" என்றான்.

– சீவக சிந்தாமணி

நாமகள் இலம்பகம் 50.

கற்பவை கற்றபின்...

1. அறிவியல் செய்திகளை வெளிப்படுத்தும் கவிதைகளைத் தொகுத்து வகுப்பறையில் படித்துக் காட்டுக.

2. விமானமும் ஏவுகணையும் பேசிக்கொள்வதுபோல ஓர் உரையாடலைக் குழுவாகச் சேர்ந்து உருவாக்குக.

3. பாடலில் அமைந்துள்ள தொடைநயங்களை எழுதுக.

கிளிக்கு றெக்கை இருக்கும் வரைக்கும்
கிழக்கு வானம் தூரமில்லை

முளைக்கும் விதைகள் முளைக்கத் துடித்தால்
பூமி ஒன்றும் பாரமில்லை"

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 104 22/05/18 6:56 PM

கவிதைப் பேழை

இயல் நான்கு

உயிர்வகை

நுழையும்முன்

கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும் ஐம்புல உணர்வுகளின் வாயிலாகவே அறிவு என்பதை நாம் பெறுகிறோம். இதற்குரிய பொறிகளான கண், காது, வாய், மூக்கு, உடல் என்னும் ஐந்து உறுப்புகளில் எது குறைந்தாலும் குறிப்பிட்ட ஓர் அனுபவத்தை இழந்துவிடுவோம். ஆனால், அனைத்து உயிரினங்களுக்கும் இந்தப் புலன் அறிவுகள் எல்லாம் இருப்பதில்லை. இதைக் கொண்டு உயிரினங்களைப் புலன்களின் எண்ணிக்கை அடிப்படையில் முன்னோர் பகுத்தனர். ஆறாவது அறிவு மனத்தால் அறியப்படுவது என்பர்.

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
*நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே**

– தொல்காப்பியர் நூ.எ.1516

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 105 22/05/18 6:56 PM

இலக்கணக்குறிப்பு

உணர்ந்தோர் – வினையாலணையும் பெயர்.

பகுபத உறுப்பிலக்கணம்

நெறிப்படுத்தினர் – நெறிப்படுத்து+இன்+அர்

நெறிப்படுத்து – பகுதி

இன் – இறந்தகால இடைநிலை

அர் – பலர்பால் வினைமுற்று விகுதி

அறிவுநிலை	அறியும் ஆற்றல்	உரையாசிரியர்களின் எடுத்துக்காட்டு
ஓரறிவு	உற்றறிதல் (தொடுதல் உணர்வு)	புல், மரம்
ஈரறிவு	உற்றறிதல் + சுவைத்தல்	சிப்பி, நத்தை
மூவறிவு	உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல்	கரையான், எறும்பு
நான்கறிவு	உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல்	நண்டு, தும்பி
ஐந்தறிவு	உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல் + கேட்டல்	பறவை, விலங்கு
ஆறறிவு	உற்றறிதல் + சுவைத்தல் + நுகர்தல் + காணல் + கேட்டல் +பகுத்தறிதல் (மனம்)	மனிதன்

நூல் வெளி

தமிழ்மொழியில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கணநூல் தொல்காப்பியம். இதனை இயற்றியவர் தொல்காப்பியர். தொல்காப்பியம் பிற்காலத்தில் தோன்றிய பல இலக்கண நூல்களுக்கு முதல் நூலாக அமைந்திருக்கிறது. இது எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களையும் 27 இயல்களையும் கொண்டுள்ளது. எழுத்து, சொல் அதிகாரங்களில் மொழி இலக்கணங்களை விளக்குகிறது. பொருளதிகாரத்தில் தமிழரின் அகம், புறம் சார்ந்த வாழ்வியல் நெறிகளையும் தமிழ் இலக்கியக் கோட்பாடுகளையும் இந்நூல் விளக்குகிறது. இந்நூலில் பல அறிவியல் கருத்துகள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாகப் பிறப்பியலில் எழுத்துகள் பிறக்கும் இடங்களை உடற்கூற்றியல் அடிப்படையில் விளக்கியிருப்பதை அயல்நாட்டு அறிஞர்களும் வியந்து போற்றுகின்றனர். இது தமிழர்களின் அறிவாற்றலுக்குச் சிறந்த சான்றாகும்.

கற்பவை கற்றபின்...

1. அ. தட்டான் பூச்சி தாழப்பறந்தால் தப்பாமல் மழை வரும்.

   ஆ. வானில் பறக்குது குதிரை
   பறக்கப் பறக்க வால் குறையும் குதிரை – அது என்ன?

   -இவை போன்ற அறிவியல் செய்திகள் கொண்ட பழமொழிகள், விடுகதைகளைப் படித்தும் கேட்டும், அவற்றின் அறிவியல் அடிப்படையை வகுப்பறையில் கலந்துரையாடுக.

2. 'விமான நிலையத்தில் நான்' - கற்பனையாகக் கதை ஒன்றினை எழுதுக.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 106 22/05/18 6:56 PM

விரிவானம்

இயல் நான்கு

விண்ணையும் சாடுவோம்

நுழையும்முன்

ஒரு வண்ணத்துப் பூச்சியின் சிறகசைப்பு, உலகில் எங்கோ எதிர்விளைவை ஏற்படுத்தும் என்று அறிவியல் கூறுகிறது. ஆனால், நம் இந்திய விண்வெளித்துறை விண்ணில் அனுப்பிய செயற்கைக்கோள்கள் மக்களின் வாழ்க்கைத் தரத்தில் வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. விசையுறு பந்தினைப் போல் உள்ளம் வேண்டிய நேரத்தில் எல்லாம் நம்மால் திசையன்விளையிலிருந்து தில்லிவரை தொடர்புகொள்ள முடிகிறது. இணையத்தில் வாழ்க்கைப் பயணம் – பயணத்தில் பாதி இணையம் என்று நம்நாடு மாறிக்கொண்டிருக்கிறது. இந்த மாற்றத்தில் தமிழ் அறிவியலாளர்களுக்கும் பங்கு உண்டு. இவற்றையெல்லாம் நாம் அறியக்கூடிய வாயிலாக விளங்குவது, தொலைக்காட்சியிலும் வானொலியிலும் இதழ்களிலும் காணும் ஒரு கலை வடிவமான நேர்காணல். செய்திகளைத் தருவதில் கட்டுரை, கதை, கவிதை வடிவங்களைப் போல நேர்காணல் வடிவமும் நேர்த்தியானதுதான்.

4AZI4P

இருபதாம் நூற்றாண்டில் இந்திய வானியல் அறிவியல் துறையில் தமிழர்களின் பங்கு மகத்தானது! அப்துல் கலாம், மயில்சாமி அண்ணாதுரை, வளர்மதி போன்றோர் வரிசையில் மற்றுமொரு வைரம், தமிழ்நாட்டைச் சேர்ந்த அறிவியலாளர் சிவன். இஸ்ரோவின் ஒன்பதாவது தலைவர், இந்தப் பதவியை ஏற்றிருக்கும் முதல் தமிழர் என்னும் சிறப்புகளுக்கு உரியவர். 2015ஆம் ஆண்டில் விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தின் இயக்குநராக இருந்து, இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (ISRO) தலைவராகப் பொறுப்பேற்றுள்ளார்.

அவர் இஸ்ரோவின் தலைவரான பிறகு அளித்த நேர்காணல்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 107 22/05/18 6:56 PM

ஐயா வணக்கம்! தங்களுக்கு எங்கள் வாழ்த்துகள்! தங்களின் இளமைக்காலம் பற்றிக் கூறுங்கள்.

'எனக்குச் சொந்த ஊர், நாகர்கோவில் பக்கம் வல்லங்குமாரவிளை என்ற கிராமம். அங்குள்ள அரசுப் பள்ளியில்தான் தமிழ்வழியில் படித்தேன். என் அப்பா கைலாச வடிவுக்கு, மாங்காய் வியாபாரம். அவர், 'எவ்வளவு வேணும்னாலும் படி. ஆனால், உன் படிப்புக்கு உண்டான செலவை நீயே வேலை செஞ்சு சம்பாதிச்சுக்க' என்று சொன்னார். அதனால் வேலை செய்துகொண்டே படித்தேன். கல்லூரியில் கணினி அறிவியல் இளங்கலைப் படிப்பில் முதலாவதாக வந்தேன். என் ஆசிரியர், 'நீ நன்றாகப் படிக்கிறாய். எம்.ஐ.டி-யில் வானூர்திப் பொறியியல் என்னும் துறையை எடுத்துப் படி' என்று அறிவுரை கூறினார். அந்த வார்த்தையை அப்போதுதான் நான் கேள்விப்பட்டேன். இருந்தாலும் நம்பிக்கையோடு நுழைவுத்தேர்வு எழுதி, எம்.ஐ.டி-யில் சேர்ந்தேன். அதே துறையில் எம்.இ படித்து முடித்து, விக்ரம் சாராபாய் நிறுவனத்தில் பொறியாளர் ஆனேன்.

சிறிய வயதில் உங்கள் கனவு என்னவாக இருந்தது?

சின்ன வயதில் என்னுடைய அதிகபட்சக் கனவு, எங்கள் கிராமத்துக்கு மேலே பறக்கும் விமானத்தில் என்றாவது ஒருநாள் பறக்க வேண்டும் என்பதுதான். 'இந்த ஏரோப்பிளேன் எப்படிப் பறக்குது? நாமும் இதுபோல ஒன்று செய்து பறக்கவிடணும்'னு நினைப்பேன். சிறிய வயதிலிருந்தே நான் நினைத்தது எதுவும் நடக்கவில்லை. ஒவ்வொரு முறையும் நான் ஆசைப்படுவது நிராகரிக்கப்படும். இருந்தாலும் கிடைத்ததை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வேன். ஆனால், 'எல்லாம் நன்மைக்கே' என்று சொல்வதுபோல, முடிவில் எனக்கு எல்லாம் நல்லதாகவே முடிந்திருக்கிறது. அப்படித்தான் நான் அறிவியல் வல்லுநர் ஆனதும்.

தங்களுடைய ஆரம்பகாலப் பணி பற்றிக் கூறுங்களேன்...

1983ஆம் ஆண்டு, முதன்முதலில் பி.எஸ்.எல்.வி (Polar Satellite Launch Vehicle) திட்டத்தைத் தொடங்க, அரசாங்கம் இசைவு தந்தது. அதற்கு ஓர் ஆண்டு முன்னால்தான் நான் வேலையில் சேர்ந்தேன். விண்வெளி ஆராய்ச்சியில் ஆனா ஆவன்னாகூடத் தெரியாது. மற்ற அறிவியலாளர்களுக்கும் அந்தத் திட்டப்பணி புதிதுதான். ஒரு குழந்தைபோல் எல்லாருமே தத்தித் தத்தித்தான் கற்றுக்கொண்டோம்.

ஒரு செயற்கைக்கோள் ஏவுதளத்தில் என்னமாதிரி மென்பொருள் பயன்படுத்த வேண்டும், வாகனத்தின் வடிவம் எப்படி இருக்க வேண்டும், எவ்வளவு உயரம், எவ்வளவு அகலம், எந்தப் பாதையில் போக

விக்ரம் சாராபாய்

இவர் 'இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை' என்று அழைக்கப்படுகிறார். ஆரியபட்டா என்ற முதல் செயற்கைக்கோள் ஏவுதலுக்குக் காரணமானவர். செயற்கைக்கோள் உதவியுடன் தொலைக்காட்சி வழியாக 24,000 இந்திய கிராமங்களில் உள்ள ஐம்பது இலட்சம் மக்களுக்குக் கல்வியை எடுத்துச் செல்ல உதவினார். இவரின் பெயரால் 'விக்ரம் சாராபாய் விண்வெளி மையம்' திருவனந்தபுரத்தில் செயல்பட்டுவருகிறது. இங்கு, வானூர்தியியல் (Aeronautics), வான்பயண மின்னணுவியல் (Avionics), கூட்டமைப் பொருள்கள் (Composites), கணினி – தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல துறைகளில் ஆராய்ச்சிகளும் வடிவமைப்புகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இவருடைய முயற்சியால்தான் இஸ்ரோ தொடங்கப்பட்டது.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 108 22/05/18 6:56 PM

வேண்டும் ஆகியவற்றை முடிவுசெய்வது என் வேலை. வன்பொருள் பகுதியைத் தவிர்த்த மற்ற வேலைகள் எல்லாவற்றையும் நான் கவனிக்க வேண்டும். அப்போது நான் இரவு பகலாக முயற்சி செய்து, ஒரு செயலியை உருவாக்கினேன். அதற்குப் பெயர் 'சித்தாரா'. (*SITARA – Software for Integrated Trajectory Analysis with Real time Application*). இது, செயற்கைக்கோள் ஏவு ஊர்தி பற்றிய முழு விவரங்களையும் மின்னிலக்க முறையில் (*Digital*) சேகரிக்கும். அதைப் பயன்படுத்தி, வாகனத்தின் செயல்பாடு எப்படி இருக்கும் என்பதை முன்கூட்டியே கணிக்கலாம்.

எளிதாகச் சொல்வதானால், ஒரு கல்லைத் தூக்கி வீசும்போது, அந்தக் கல் எந்தத் திசையில், எவ்வளவு கோணத்தில், எவ்வளவு நேரத்தில், எந்த இடத்தில், எவ்வளவு அழுத்தத்தில் விழும் என்று சொல்வதுதான் 'சித்தாரா'வின் பணி. ஏதாவது தவறு நடந்திருந்தால், உடனே கண்டுபிடித்துச் சரி செய்துவிடலாம். இதைப் பயன்படுத்தித்தான் பி.எஸ்.எல்.வி. ஏவப்பட்டது.

இப்போதுவரை நம்முடைய நாட்டிலிருந்து ஏவப்படும் அனைத்துச் செயற்கைக்கோள் ஏவு ஊர்திகளும் 'சித்தாரா' செயலியைப் பயன்படுத்தித்தான் விண்ணில் ஏவப்படுகின்றன. இந்திய விண்வெளி ஆராய்ச்சித் துறைக்கு இதுவே என் முக்கியமான பங்களிப்பு.

முன்னாள் குடியரசுத் தலைவர் அறிவியல் வல்லுநர் அப்துல் கலாம் பற்றி...

என் அனுபவத்தில் நான் பார்த்த சிறந்த மனிதர், அப்துல் கலாம். தன்னுடன் வேலை செய்பவர்களுக்குத் தன்னால் முடிந்த உதவிகளைச் செய்வார். கலாம், எனக்கு வயதில் மூத்தவர்; மிகவும் அமைதியானவர்; யாராவது சிறியதாகச் சாதித்தாலே, பெரிதாகப் பாராட்டுவார். நான் 'சித்தாரா' போன்ற தொழில்நுட்ப மென்பொருள் உருவாக்கியதால், என்னை எப்போதும் மென்பொறியாளர் என்றே அழைப்பார்.

அப்துல்கலாம்

இந்தியாவின் 11ஆவது குடியரசுத் தலைவராகப் பணியாற்றிய இந்திய அறிவியலாளர். தமிழ்நாட்டின் இராமேசுவரத்தைச் சேர்ந்தவர். ஏவுகணை மற்றும் ஏவுகணை ஏவு ஊர்தித் தொழில்நுட்ப வளர்ச்சியில் கலாமின் ஈடுபாட்டினால் அவர் 'இந்திய ஏவுகணை நாயகன்' என்று போற்றப்படுகின்றார். பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்திலும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திலும் விண்வெளிப் பொறியாளராகப் பணியாற்றினார். இந்தியாவின் உயரிய விருதான பாரதரத்னா விருது பெற்றவர். இவர் தம் பள்ளிக் கல்வியைத் தமிழ்வழியில் கற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நீங்கள் அனுப்புகிற செயற்கைக்கோள்கள் இந்தியக் குடிமக்களுக்கு எப்படிப் பயனளிக்கின்றன?

1957ஆம் ஆண்டு முதலே இரஷ்யா உட்பட, பல நாடுகள் செயற்கைக்கோள்களை ஏவியிருக்கின்றன. அவற்றையெல்லாம் இராணுவத்துக்கு மட்டுமே பயன்படுத்தினார்கள். வல்லரசு நாடுகள், அவற்றின் ஆற்றலைக் காண்பிக்கவே இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தின. ஆனால் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நம் நாட்டு அறிவியலாளர் டாக்டர் விக்ரம் சாராபாய் இந்தத் தொழில்நுட்பத்தை மக்களுக்கு எப்படிப் பயன்படுத்தலாம் என்றே சிந்தித்தார்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 109 22/05/18 6:56 PM

பொதுமக்களுக்கு இந்தத் தொழில்நுட்பத்தால் என்ன பயன்?

ஒவ்வொரு ஆண்டும் விவசாயத்தின் மூலம் எவ்வளவு விளைச்சல் கிடைக்கும் என்பதைக் கணித்து அரசுக்குத் தெரிவிக்கிறோம். இதைப் பயன்படுத்தி அரசால் அதற்கு ஏற்ற திட்டங்கள் வகுக்க முடிகிறது. நிலத்தில் எந்த இடத்தில் நீரின் அளவு எவ்வளவு இருக்கும் என்பதைச் செயற்கைக் கோள் மூலம் சொல்கிறோம். கடல் பகுதியில் எந்த எந்த இடங்களில் மீன்கள் அதிகமாகக் கிடைக்கும் என்றும் மீனவர்களுக்குச் சொல்ல முடிகிறது.

இப்போது நாம் திறன்பேசிகளைப் (Smart phones) பயன்படுத்துகிறோம்; தானியக்கப் பணஇயந்திரம், அட்டை பயன்படுத்தும் இயந்திரம் இதற்கெல்லாம் செயற்கைக்கோள் பயன்படுகிறது. மக்கள் பயன்படுத்தும் இணையச் செயல்கள் அனைத்திற்கும் செயற்கைக்கோள்கள் அவசியம் தேவை. நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதற்குச் செயற்கைக்கோள்கள் பயன்படுகின்றன.

இஸ்ரோவின் தலைவராக நீங்கள் எதற்கு முன்னுரிமை தருவீர்கள்?

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் முக்கிய நோக்கமே, இந்தத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்திக் குறைந்த செலவில் மக்களுக்குத் தரமான சேவைகளைக் கொடுப்பதுதான்.

தற்போது உங்கள் முன் உள்ள அறைகூவல்கள் எவை?

இதுவரை இந்தியாவுக்காக 45 செயற்கைக்கோள்கள் செலுத்தப்பட்டுள்ளன. ஆனால் நம்முடைய தேவைகளுக்கு மேலும் 45 செயற்கைக்கோள்கள் தேவை! இப்போது இருக்கும் வசதி வாய்ப்புகளை வைத்து இவற்றை விண்வெளியில் நிறுவக் குறைந்தது நான்கு ஆண்டுகளாவது ஆகும். ஆனால், அதற்குள் நம்முடைய தேவைகள் இன்னும் இரண்டு மடங்காகிவிடும்!

வளர்மதி

அரியலூரில் பிறந்த இவர், 2015இல் தமிழ்நாடு அரசின் அப்துல்கலாம் விருதைப் பெற்ற முதல் அறிவியல் அறிஞர். இஸ்ரோவில் 1984ஆம் ஆண்டு முதல் பணியாற்றி வருகிறார். 2012இல் உள் நாட்டிலேயே உருவான முதல் ரேடார் இமேஜிங் செயற்கைக்கோள் (RISAT–1) திட்டத்தின் இயக்குநராகப் பணியாற்றினார். இவர், இஸ்ரோவின் செயற்கைக்கோள் திட்ட இயக்குநராகப் பணியாற்றிய இரண்டாவது பெண் அறிவியல் அறிஞர் ஆவார்.

30,000 அடி உயரத்தில் பறந்து கொண்டே, கீழே நம் அலுவலகத்தில் உள்ளவர்களோடு தொடர்பு கொள்ளமுடிகிறது. ஆனால் கடலில் சென்று மீன்பிடிக்கும் மீனவர்கள் ஆழ்கடலுக்கோ அல்லது 300 கடல்மைல் தூரம் சென்றாலோ நம்மால் தொடர்பு கொள்ள முடியவில்லையே, ஏன்?

'நேவிக்' (NAVIC) என்ற செயலியைக் கடல் பயணத்திற்காக உருவாக்கி இருக்கிறோம். அனைத்து மீனவர்களுக்கும் அந்தச் செயலி பொருத்தப்பட்ட கருவி, பலவிதங்களில் பயன்படும். அவர்கள், கடலில் எல்லை தாண்டினால் உடனடியாக எச்சரிக்கும். மீன்கள் அதிகம் உள்ள பகுதியைக் காட்டும் செயலியையும் உருவாக்கியிருக்கிறோம். இந்தக் கண்டுபிடிப்புகளை மக்களிடம் கொண்டு சேர்க்கும் முயற்சிகளை முன்னெடுப்போம்.

நாம் செயற்கைக்கோள் உருவாக்குவதில் அடைந்த முன்னேற்றத்தினை, அதனைச் செலுத்தும் தொழில்நுட்பத்தில் அடையவில்லை என்ற கருத்தை எப்படிப் பார்க்கிறீர்கள்?

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 110 22/05/18 6:56 PM

இது தவறான கருத்து. விண்வெளித் துறையில் மூன்று வகையான தொழில்நுட்பங்கள் இருக்கின்றன. செயற்கைக்கோளை ஏவுவதற்கான தொழில்நுட்பம், செயற்கைக்கோளை ஏற்றிச்செல்லும் ஏவு ஊர்தி, அந்த ஏவு ஊர்தியிலிருந்து விடுபட்ட செயற்கைக்கோள் தரும் செய்திகளைப் பெற்று அதைப் பொதுமக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவருதல். இந்த மூன்று கூறுகளுக்கும் தேவையான அனைத்து மூலப்பொருள்களையும் தொழில்நுட்பங்களையும் இந்தியாவிலேயே உருவாக்கியிருக்கின்றோம். விண்வெளித்துறையில இந்தியா தன்னிறைவு பெற்றுவிட்டது என்பதே உண்மை.

உலகிலேயே இந்தியா குறைந்த செலவில் செயற்கைக்கோள்களை விண்வெளியில் நிறுவுகிறது. இதை எப்படிச் சாத்தியப்படுத்துகிறீர்கள்?

தொழில்நுட்பம் நாளுக்கு நாள் மாறிக்கொண்டே வருகிறது. குறைந்த செலவில் நிறைந்த பயனைப் பெறுவதே சிறப்பானது. செலவைக் குறைப்பதில் பல வழிகள் இருக்கின்றன. தற்போது மறுபயன்பாட்டிற்கு ஏற்ற ஏவு ஊர்திகளை உருவாக்கிகொண்டிருக்கிறோம். அந்த முயற்சியில் முதல் கட்டத்தையும் வெற்றிகரமாகக் கடந்துவிட்டோம். இன்னும் சில ஆண்டுகளில் மறுபயன்பாட்டு ஏவு ஊர்திகளை உருவாக்குவதில் வெற்றி பெற்றுவிடுவோம்.

அதிக எடைகொண்ட செயற்கைக் கோள்களை அவற்றின் வட்டப்பாதைகளில் நிறுவ, பிற நாடுகளைத்தான் சார்ந்திருக்கிறோம், இல்லையா?

உண்மைதான். கூடிய விரைவில் இந்த நிலையில் மேம்பாடு அடைந்துவிடுவோம். ஜி.எஸ்.எல்.வி. மார்க்-2 ஏவுகணை 2.25 டன்களிலிருந்து 3.25 டன்கள் சுமக்கும் திறனாக மாற்றப்படும். ஜி.எஸ்.எல்.வி. மார்க்-3 ஏவுகணையின் சுமக்கும் திறன் 3 டன்களிலிருந்து 6 டன்களாக அதிகரிக்கப்படும்.

சந்திரயான் – 1 நம் விண்வெளித் துறைக்குப் பெரிய புகழைக் கொடுத்தது. சந்திரயான் –2 இன் பணிகள் என்ன?

சந்திரயான் -1 நிலவின் புறவெளியை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டது. செயற்கைக்கோளை நிலவில் இறக்குவதன் விளைவை ஆராய்ந்து பார்த்துவிட்டோம். சந்திரயான்-2இன் பணியில், ஆய்வுப் பயண ஊர்தி இறங்குதலை (exploration vehicle lander) நிலவின் மேற்பரப்பில் துல்லியமான கட்டுப்பாடுகளின் மூலம் செயல்படுத்த உள்ளோம். அதிலிருந்து ரோவர் (rover) எனப்படும் ஆராயும் ஊர்தி, ரோபோட்டிக் (robotic) தொழில்நுட்ப உதவியினால் தானாகவே வெளிவந்து, நிலவில் இறங்கிப் பதினான்கு நாள்கள் பயணிக்கும். பல்வேறு பரிசோதனைகளை அங்கு மேற்கொள்ளும். அதற்கான ஏற்பாடுகள் முழுவதும் முடிந்துவிட்டன. சந்திரயான் – 2 நிலவில்

அருணன் சுப்பையா

இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் அறிவியலாளர் மற்றும் திட்ட இயக்குநர் ஆவார். திருநெல்வேலி மாவட்டத்தின் ஏர்வாடி அருகில் உள்ள கோதைசேரி என்னும் ஊரைச் சேர்ந்தவர். இயந்திரப் பொறியியலில் பட்டம் பெற்று, 1984இல் திருவனந்தபுரத்திலுள்ள விக்ரம்சாராபாய் விண்வெளி மையத்தில் பணியில் சேர்ந்து, தற்போது பெங்களூரில் உள்ள இந்திய விண்வெளி ஆய்வு மையத்தில் பணிபுரிகிறார். 2013இல் மங்கள்யான் செயற்கைக்கோளை உருவாக்கிய இந்தியாவின் செவ்வாய் சுற்றுகலன் திட்டத்தின் திட்ட இயக்குநராக இருக்கின்றார்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 111 22/05/18 6:56 PM

மயில்சாமி அண்ணாதுரை

'இளைய கலாம்' என்று அன்புடன் அழைக்கப்படும் இவர் கோவை மாவட்டம் பொள்ளாச்சி வட்டம், கோதவாடி என்னும் சிற்றூரில் பிறந்தவர். 11ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் தமிழ்வழியில் படித்தவர். இதுவரை 5 முனைவர் பட்டங்கள் பெற்றுள்ளார். 1982ஆம் ஆண்டு இந்திய விண்வெளி ஆய்வு மையத்தில் பணியில் சேர்ந்த இவர் தற்போது இயக்குநராகப் பணிபுரிகிறார். நம் நாடு நிலவுக்கு முதன் முதலில் அனுப்பிய ஆய்வுக்கலம் சந்திரயான்–1 திட்டத்தின் திட்ட இயக்குநராகப் பணியாற்றியவர். சந்திரயான் – 2 திட்டத்திலும் பணியாற்றிவருகிறார். சர்.சி.வி. இராமன் நினைவு அறிவியல் விருது உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றவர். தமது அறிவியல் அனுபவங்களை, கையருகே நிலா என்னும் நூலாக எழுதியுள்ளார்.

இறங்கும் இடத்தைக் கூடத் தீர்மானித்து விட்டோம்.

விண்வெளித்துறையில் உங்களின் எதிர்காலச் செயல்திட்டம் என்ன ?

மூன்று ஆண்டுகள், ஏழு ஆண்டுகள், 15 ஆண்டுகள் என இஸ்ரோவில் மூன்று வகையான திட்டங்கள் எப்போதும் இருக்கும். அதைச் செயல்படுத்துவதில் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறோம்.

வணிக நோக்கில் இஸ்ரோவின் செயல்பாடு என்ன ?

நம் நாட்டிற்குத் தேவையான செயற்கைக்கோளை விண்ணில் அனுப்பி நம் தேவைகளை நிறைவு செய்வதே இஸ்ரோவின் செயல்பாடு. அதேநேரத்தில் அருகில் உள்ள நாடுகளின் செயற்கைக்கோள்களையும் அனுப்புவதன் மூலம் கிடைக்கும் வருவாய் இஸ்ரோவின் வளர்ச்சித்திட்டங்களுக்கு உதவும்.

விவசாயக் குடும்பத்தில் பிறந்த நீங்கள் கடினமான பாதையைக் கடந்து வந்திருக்கிறீர்கள். தற்போது இஸ்ரோவின் தலைவராகியிருக்கிறீர்கள். உங்கள் வெற்றியின் பின்னுள்ள காரணிகள் யாவை?

படிப்பாக இருப்பினும் பணியாக இருப்பினும் நான் முழு ஈடுபாட்டுடன் செயல்படுவேன். நிதி நெருக்கடிகளுக்கிடையில் என்னை உயர்கல்வி படிக்க வைத்த என் பெற்றோர், பள்ளி ஆசிரியர்கள், தொழில்நுட்பக் கல்லூரி ஆசிரியர்கள், இஸ்ரோவின் மூத்த அறிஞர்கள், சகபயணிகள், அனைவருக்கும் நான் என்றென்றும் நன்றியுடையவன்.

விண்வெளித்துறையில் நீங்கள் மேன்மேலும் மகத்தான சாதனைகள் படைக்க வாழ்த்துகள்.

நன்றி!

கற்பவை கற்றபின்...

1) பி.எஸ்.எல்.வி. (PSLV) பற்றியும் ஜி.எஸ்.எல்.வி. (GSLV) பற்றியும் செய்திகளைத் திரட்டி விளக்கப் படத்தொகுப்பு உருவாக்குக.

2) வகுப்புத் தோழர் ஒருவரை அறிவியல் அறிஞராக அமரச்செய்து வகுப்பறையில் கற்பனையாக நேர்காணல் ஒன்றை நிகழ்த்துக.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 112 22/05/18 6:56 PM

கற்கண்டு

இயல் நான்கு

வல்லினம் மிகா இடங்கள்

தோப்புக்கள் – தோப்புகள்

கத்தி கொண்டு வந்தான் – கத்திக்கொண்டு வந்தான்

மேற்கண்ட சொற்களில் வல்லினம் மிகும்போது ஒரு பொருளும் மிகாதபோது வேறொரு பொருளும் வருவதை அறியலாம். நாம் பேசும்போதும் எழுதும்போதும் பொருள் மயக்கம் தராத வகையில் மொழியைப் பயன்படுத்துவதற்கு வல்லினம் மிகா இடங்களை அறிவது இன்றியமையாததாகும்.

வல்லினம் மிகா இடங்கள்:

தற்கால உரைநடையில் வல்லினம் மிகா இடங்களாகக் கீழ்க்காண்பவற்றைக் கூறலாம்.

அது செய் இது காண்	அது, இது என்னும் சுட்டுப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது.
எது கண்டாய்? எவை தவறுகள்?	இவ்வினாப் பெயர்களின் பின் வல்லினம் மிகாது.
குதிரை தாண்டியது. கிளி பேசும்.	எழுவாய்த் தொடரில் வல்லினம் மிகாது.
அண்ணனோடு போ. எனது சட்டை.	மூன்றாம், ஆறாம் வேற்றுமை விரிகளில் வல்லினம் மிகாது.
தந்தையே பாருங்கள். மகளே தா.	விளித் தொடர்களில் வல்லினம் மிகாது.
வந்த சிரிப்பு பார்த்த பையன்	பெயரெச்சத்தில் வல்லினம் மிகாது.
நாடு கண்டான். கூடு கட்டு	இரண்டாம் வேற்றுமைத் தொகையில் வல்லினம் மிகாது.
வரும்படி சொன்னார். பெறும்படி கூறினார்.	படி என்று முடியும் வினையெச்சத்தில் வல்லினம் மிகாது.
வாழ்க தமிழ் வருக தலைவா!	வியங்கோள் வினைமுற்றுத் தொடரில் வல்லினம் மிகாது.
குடிதண்ணீர், வளர்பிறை, திருவளர்செல்வன்	வினைத்தொகையில் வல்லினம் மிகாது.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 113 22/05/18 6:56 PM

ஒரு புத்தகம், மூன்று கோடி	எட்டு, பத்து தவிர பிற எண்ணுப் பெயர்களுடன் புணரும் வல்லினம் மிகாது.
தாய்தந்தை, இரவுபகல்	உம்மைத் தொகையில் வல்லினம் மிகாது.
அன்று சொன்னார். என்று தருவார். அவராவது தருவதாவது யாரடா சொல். ஏனடி செல்கிறாய்? கம்பரைப் போன்ற கவிஞர் யார்?	அன்று, இன்று, என்று, ஆவது, அடா, அடி, போன்ற என்னும் சொற்களின் பின் வல்லினம் மிகாது.
அவ்வளவு பெரியது. அத்தனை சிறியது. அவ்வாறு பேசினான். அத்தகைய பாடங்கள். அப்போதைய பேச்சு. அப்படிப்பட்ட காட்சி. நேற்றைய சண்டை.	அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு, அத்தனை, இத்தனை, எத்தனை, அவ்வாறு, இவ்வாறு, எவ்வாறு, அத்தகைய, இத்தகைய, எத்தகைய, அப்போதைய, இப்போதைய, எப்போதைய, அப்படிப்பட்ட, இப்படிப்பட்ட, எப்படிப்பட்ட நேற்றைய, இன்றைய, நாளைய ஆகிய சொற்களின் பின் வல்லினம் மிகாது.
என்னோடு சேர். மரத்திலிருந்து பறி. குரங்கினது குட்டி.	மூன்று, ஐந்து, ஆறாம் வேற்றுமைத் தொடர்களில் வல்லினம் மிகாது.
தமிழ் படி. (ஐ) கை தட்டு. (ஆல்) வீடு சென்றாள். (கு) வரை பாய்ந்தான். (இருந்து)	இரண்டாம், மூன்றாம், நான்காம், ஐந்தாம், வேற்றுமைத் தொகைகளில் வல்லினம் மிகாது.
தலைவி கூற்று. தொண்டர் படை	நிலைமொழி உயர்திணையாய் அமையும் பெயர்த் தொகையில் வல்லினம் மிகாது.
உறு பொருள் நனி தின்றான். கடி காவல்	சால, தவ, தட, குழ என்னும் உரிச்சொற்களைத் தவிர ஏனைய உரிச்சொற்களின் பின் வல்லினம் மிகாது.
பார் பார் சல சல	அடுக்குத் தொடர், இரட்டைக் கிளவி ஆகியவற்றில் வல்லினம் மிகாது.
கருத்துகள் பொருள்கள் வாழ்த்துகள்	கள் என்னும் அஃறிணைப் பன்மை விகுதி சேரும்போது வல்லினம் மிகாது. (மிகும் என்பர் சிலர்)
பைகள், கைகள்	ஐகார வரிசை உயிர்மெய் ஒரெழுத்துச் சொற்களாய் வர, அவற்றோடு கள் விகுதி சேரும்போது வல்லினம் மிகாது.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 114 22/05/18 6:56 PM

கற்பவை கற்றபின்...

1. வல்லினம் வருமா?

அ) தோழி __ கூற்று

ஆ) பெரிய __தம்பி

இ) சிறிய __ பறவை

ஈ) பழகு __தமிழ்

உ) இது __கேள்

ஊ) எலி __ கடிக்கும்

எ) ஓடிய __ குதிரை

ஏ) தரும்படி __ சொன்னார்

ஐ) வாழ்க __ தலைவர்

ஒ) கார் __ காலம்

2. வல்லினம் இடலாமா?

அ) வாழ்த்து __கள்

ஆ) எழுத்து__ கள்

இ) திருநிறை __ செல்வன்

ஈ) திருவளர் __ செல்வி

3. எது சரி? எது தவறு? காரணம் கூறுக.

அ) அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

ஆ) அத்தனைச் சிறிய

இ) ஆத்திச்சூடி

ஈ) எடுத்துக்காட்டுகள்

ஏ) கீழ்பக்கம்

ஐ) சான்றோர் பேரவை

ஒ) சென்னைப் பல்கலைக்கழகம்

ஓ) தயிர்ச்சோறு

4. கீழ்க்காணும் தொடர்களில் வல்லினம் மிகும், மிகா இடங்களைக் கண்டறிந்து அதற்கான இலக்கணம் அறிக.

அ) வங்கி கடன்

ஆ) பழங்களை பறிக்காதீர்கள்

இ) திட்ட குழு

ஈ) அரசு ஆணை பிறப்பித்தது

உ) மருந்து கடை

ஊ) வேலையில்லா பட்டதாரி

எ) சிறப்பு பரிசு

அறிவை விரிவு செய்.

1. அக்கினிச் சிறகுகள் - அப்துல் கலாம்
2. மின்மினி- ஆயிஷா நடராஜன்
3. ஏன், எதற்கு, எப்படி? - சுஜாதா

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 115 22/05/18 6:56 PM

மதிப்பீடு

பலவுள் தெரிக.

1. கீழ்க்காணும் மூன்று தொடர்களுள் –

அ) இருந்த இடத்திலிருந்தே பயணச்சீட்டு எடுப்பதை எளிதாக்கிய மிகப் பெரிய இந்திய நிறுவனம் இந்தியத் தொடர்வண்டி உணவு வழங்கல் மற்றும் சுற்றுலாக் கழகம் ஆகும்.

ஆ) வங்கி அட்டை இல்லை என்றால் அலைபேசி எண், வங்கிக் கணக்கு எண் ஆகியவற்றைக் கொண்டு பணம் செலுத்துதல் இயலாது.

இ) திறன் அட்டைகள் என்பவை குடும்ப அட்டைகளுக்கு மாற்றாக வழங்கப்பட்டனவாகும்.

i) அ, ஆ ஆகியன சரி; இ தவறு ii) அ, இ ஆகியன சரி; ஆ தவறு

iii) அ தவறு; ஆ, இ ஆகியன சரி iv) மூன்றும் சரி

2. தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?

அ) தேசியத் திறனாய்வுத் தேர்வு ஆ) ஊரகத் திறனாய்வுத் தேர்வு

இ) தேசியத் திறனாய்வு மற்றும் கல்வி உதவித் தொகைத் தேர்வு ஈ) மூன்றும் சரி

3. ஒன்றறிவதுவே உற்றறிவதுவே
இரண்டறிவதுவே அதனொடு நாவே

இவ்வடிகளில் அதனொடு என்பது எதைக் குறிக்கிறது?

அ) நுகர்தல் ஆ) தொடு உணர்வு இ) கேட்டல் ஈ) காணல்

4. பின்வரும் தொடர்களைப் படித்து 'நான்' யார் என்று கண்டுபிடிக்க.

அறிவியல் வாகனத்தில் நிறுத்தப்படுவேன்

எல்லாக் கோளிலும் ஏற்றப்படுவேன்

இளையவர் கூட்டம் என்னை ஏந்தி நடப்பர்

அ) இணையம் ஆ) தமிழ் இ) கணினி ஈ) ஏவுகணை

5. விடை வரிசையைத் தேர்க.

அ) இது செயற்கைக்கோள் ஏவு ஊர்தியின் செயல்பாட்டை முன்கூட்டியே கணிக்கும்.

ஆ) இது கடல்பயணத்துக்காக உருவாக்கப்பட்ட செயலி.

i) நேவிக், சித்தாரா ii) நேவிக், வானூர்தி iii) வானூர்தி, சித்தாரா iv) சித்தாரா, நேவிக்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 116 22/05/18 6:56 PM

குறுவினா

1. *கூட்டுப் புழுவை எடுத்துக்காட்டிக் கவிஞர் உணர்த்தும் கருத்துகளை எழுதுக.*
2. இணையவழியில் இயங்கும் மின்னணு இயந்திரங்கள் எவையேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.
3. *மூன்றறிவதுவே அவற்றொடு மூக்கே*
   நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே
   ஐந்தறிவதுவே அவற்றொடு செவியே
   இவ்வடிகளில் தொல்காப்பியர் குறிப்பிடும், மூவறிவு, நான்கறிவு, ஐந்தறிவு உயிர்கள் யாவை?
4. செயற்கைக்கோள் ஏவு ஊர்தியில் பொருத்தும் செயலியைப் பற்றி திரு. சிவன் கூறுவது யாது?

சிறுவினா

1. 'என் சமகாலத் தோழர்களே' கவிதையில் கவிஞர் விடுக்கும் வேண்டுகோள் யாது?
2. அறிவையும் உயிரினங்களையும் தொல்காப்பியர் எவ்வாறு தொடர்புபடுத்துகிறார்?
3. பள்ளி மாணவர்களுக்கான தமிழக அரசின் இணையவழிச் சேவைகளை எழுதுக.
4. மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்வதில் செயற்கைக்கோளின் பங்கு யாது?
5. வல்லினம் இட்டும் நீக்கியும் எழுதுவதன் இன்றியமையாமையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

நெடுவினா

1. அன்றாட வாழ்வில் நீங்கள் பயன்படுத்தும் இரண்டு இணையவழிச் சேவைகள் பற்றி விரிவாகத் தொகுத்து எழுதுக.
2. இந்திய விண்வெளித் துறை பற்றிய செய்திகளை விவரிக்க.

மொழியை ஆள்வோம்!

படித்துச் சுவைக்க.

மயில்பொறியை வானத்தில் பறக்க வைத்தோம்
மணிபல்லவத் தீவிற்குப் பறந்து சென்றோம்
குயில்மொழியாம் கண்ணகியை அழைத்துச் செல்லக்
குன்றுக்கு வானவூர்தி வந்த தென்றே
உயில்போன்று நம்முன்னோர் எழுதி வைத்த
உண்மைகளை அறிவியலின் அற்பு தத்தைப்
பயில்கின்ற காப்பியத்தில் படித்த தெல்லாம்
பார்தன்னில் நனவாகக் காணு கின்றோம்!

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 117 22/05/18 6:56 PM

மொழிபெயர்க்க.

Bottle xylophone, Make music with bottles

You will need: 6 glass bottles, Wooden spoon, Water, Food coloring.

1. *Fill one bottle with water, then fill each other bottle with slightly less than the bottle next to it.*
2. *Add some food coloring to help you to see the different levels of water.*
3. *Tap the bottles with the end of a wooden spoon. Can you play a tune?*

Water music

Hitting the bottles with the spoon makes them vibrate and produce a sound. The more the bottle vibrates, the higher the note will be. The more water in a bottle, the less it vibrates, so less water means higher notes.

பின்வரும் பத்தியில் இடம்பெற்றுள்ள பிறமொழிச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களை எழுதுக.

நாக்குதான் ஐம்புலன்களிலேயே ரொம்ப வீக்கு! அதற்கு நான்கு ஆதார ருசிகள்தாம் தெரியும். எலுமிச்சையின் புளிப்பு, சர்க்கரையின் தித்திப்பு, காபியின் கசப்பு, உப்பு. இவை தவிர ஸேவரி என்று சொல்கிற டேஸ்ட் எல்லாம் இந்த நான்கு ஆதார ருசிகளின் கலப்புதான். இந்த ருசிகளைத் தொட்டு அறிய நாக்கில் வெவ்வேறு இடங்கள் உண்டு. தித்திப்பு – நுனி நாக்கு, உப்பு – பரவலாக, குறிப்பாக நுனியில். கசப்பு – உள்நாக்கு. புளிப்பு, ஸேவரி – நாக்கின் வலது – இடது புறங்கள்! ஒரு சராசரி மனிதனுடைய நாக்கில் 9,000 சுவை அரும்புகள் உண்டு. அலட்டல் வேண்டாம். குழந்தையின் நாக்குடன் ஒப்பிடும்போது இது ஒன்றுமே இல்லை. ஏதாவது மருந்தை நாக்கில் தொட்டால் குழந்தைகள் என்னமாக எக்ஸ்பிரஷன் காட்டுகின்றன! சுவைக்கு வாசனையும் சேரவேண்டும். இரண்டும் ஒத்துழைத்தால்தான் பாதாம் அல்வா, ஐஸ்க்ரீம் போன்றவற்றை ரசிக்க முடியும். மூக்கைப் பிடித்துக் கொண்டு ஐஸ்க்ரீம் சாப்பிட்டுப் பாருங்கள். ஜில்லென்று இருக்கும். அவ்வளவே. கூடவே சூடும், உணவின் தோற்றமும் முக்கியம். மூக்குக்கு மொத்தம் ஏழு வாசனைகள். கற்பூர வாசனை, பெப்பர்மிண்ட் வாசனை, மலர்களின் வாசனை, மஸ்க் என்னும் அரபுசேக் செண்ட் வாசனை, ஈத்தர் அல்லது பெட்ரோல் வாசனை, அழுகிய முட்டை வாசனை, காட்டமான அமில வாசனை. இந்த ஏழு வாசனைகளின் கலப்புகளால் நம்மால் ஆயிரக்கணக்கான வாசனைகளை உணர முடிகிறது. (ஏன்? எதற்கு? எப்படி? – சுஜாதா)

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 118 22/05/18 6:56 PM

கதையைப் படித்து உரையாடலாக மாற்றுக.

ஒரு சிப்பி, இன்னொரு சிப்பியிடம் சொன்னது – 'ஐயோ, என்னால் வலி தாங்கமுடியவில்லையே'. 'ஏன்? என்னாச்சு? ' என்று விசாரித்தது இரண்டாவது சிப்பி.

'எனக்குள் ஏதோ ஒரு கனமான உருண்டை, பந்து உருள்வதுபோல் இருக்கிறது. ரொம்ப வலி. '

இதைக் கேட்டதும் இரண்டாவது சிப்பிக்கு மிகுந்த மகிழ்ச்சி. பெருமையுடன் நெஞ்சு நிமிர்த்தி, 'ஆகா! நான் எந்த வலியும் இல்லாமல், நலமாக இருக்கிறேன்' என்றது உற்சாகமாக.

இவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்த ஒரு நண்டு, இரண்டாவது சிப்பியிடம் சொன்னது– 'உனக்கு எந்த வலியும் இல்லை என்பது உண்மையாக இருக்கலாம். வலியைத் தாங்க விரும்பாத நீ, எப்பொழுதும் இப்படியே வெறுமையாகக் கிடக்க வேண்டியதுதான். ஆனால், இப்போது சிரமப்படுத்தும் அந்த வலி, இன்னும் சில நாள்களில், ஓர் அழகான முத்தாக உருவெடுக்கும். அது பெருமை தேடித்தரும். '

செய்து கற்க.

1) செய்தித்தாள்களில் இடம்பெற்றுள்ள ஒரு வாரத்திற்குரிய அறிவியல் செய்திகளைப் படித்துக் குறிப்பெடுக்க.

2) அங்காடியில் வாங்கிய உணவுப் பொருளின் உருவாக்க நாள், கெடுநாள், உறையில் அச்சடிக்கப்பட்ட உணவுப்பொருளின் ஆற்றல், குறியீட்டுப் பட்டை (Barcode) ஆகியவற்றின் விவரங்களைக் கொண்டு உணவுப் பொருளின் உண்மைத்தன்மையை எவ்வாறு அறிவது?

நயம் பாராட்டுக.

பொங்கியும் பொலிந்தும் நீண்ட புதுப்பிடர் மயிர்ச்சி லிர்க்கும்
சிங்கமே! வான வீதி திகுதிகு எனஎ ரிக்கும்
மங்காத தணற்பி ழம்பே! மாணிக்கக் குன்றே! தீர்ந்த
தங்கத்தின் தட்டே! வானத் தகளியிற் பெருவி ளக்கே!

கடலிலே கோடி கோடிக் கதிர்க்கைகள் ஊன்று கின்றாய்
நெடுவானில் கோடி கோடி நிறைசுடர்க் கைகள் நீட்டி
இடைப்படு மலையோ காடோ இல்லமோ பொய்கை ஆறோ
அடங்கநின் ஒளிஅ ளாவ அமைந்தனை! பரிதி வாழி!

– பாரதிதாசன்

மொழியோடு விளையாடு

குழுவில் விளையாடுக.

- நான்கு மாணவர்கள் கொண்ட குழுக்களாக எண்ணிக்கைக்கு ஏற்பப் பிரிந்து கொள்க.
- முதல் மாணவர் ஒரு சொல்லைத் தொடங்குக.
- அதனோடு தொடர்புடைய ஒரு சொல்லை இரண்டாம் மாணவர் கூறுக.
- இப்படியே நான்கு மாணவர்களும் கூறிய சொற்களைக் கொண்டு ஒரு தொடர் அமைக்க.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 001-121.indd 119 22/05/18 6:56 PM

எ.கா. மாணவர் 1 : கணினி மாணவர் 2 : அறிவியல்

மாணவர் 3 : தமிழ் மாணவர் 4 : மொழி

சொல்லப்பட்ட சொற்கள்: கணினி, அறிவியல், தமிழ், மொழி

தொடர்: அறிவியல், கணினித் தொழில்நுட்ப வளர்ச்சி ஆகியவற்றுக்கு ஈடுகொடுத்துத் தமிழ் மொழி வளர்ந்து வருகிறது.

அகராதியில் காண்க.

இமிழ்தல், இசைவு, துவனம், சபலை, துகலம்

ஒரு சொல்லால் தொடரின் இரு இடங்களை நிரப்புக. (விலங்கு, எழுதி, அகல், கால், அலை)

அ) எண்ணெய் ஊற்றி ..... விளக்கு ஏற்றியவுடன், இடத்தைவிட்டு .....

ஆ) எனக்கு ..... பங்கு பிரித்துக் கொடுக்க வா! கீழே ஈரம்; பார்த்து உன் ..... ஐ வை.

இ) கைப்பொருளைக் கடல் ..... யில் தொலைத்துவிட்டு, கரையில் தேடி .....ந்தால் கிடைக்குமா?

ஈ) வீட்டு ..... ஆன நாயுடன் விளையாடுவது மகிழ்ச்சி தரும்; வெளியில் அதனைக் கழுத்து ..... உடன் மட்டுமே பிடித்துச் செல்ல வேண்டும்.

உ) எழுத்தாணி கொண்டு .....ய தமிழை, ஏவுகணையில் ..... எல்லாக் கோளிலும் ஏற்றுங்கள்.

ஒரு தொடரில் இருவினைகளை அமைத்து எழுதுக.

குவிந்து – குவித்து; சேர்ந்து - சேர்த்து; பணிந்து – பணித்து; பொருந்து – பொருத்து; மாறு – மாற்று.

(எ.கா.) விரிந்தது – விரித்தது

அ. மழைக்காற்று வீசியதால், பூவின் இதழ்கள் விரிந்தன; மயில் தோகையை விரித்தது.

ஆ. ----------

இ. ----------

ஈ. ----------

காட்சியைக் கண்டு கவினுறக் கருத்தளிக்க.

.....

.....

.....

.....

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 120 22/05/18 6:56 PM

செயல்திட்டம்

மின்சாரச் சேமிப்பு பற்றிய விழிப்புணர்வு முழக்கத்தொடர்களை எழுதி வகுப்பறையிலும் பள்ளியிலும் காட்சிப்படுத்துக.

நிற்க அதற்குத்தக...

என் பெற்றோர் மகிழுமாறு நான் செய்ய வேண்டியது

என் வீட்டின் நிலையறிந்து, தேவையறிந்து பொருள்கள் வாங்குவது.

அலைபேசிப் பயன்பாட்டினைப் பத்து நிமிடங்களுக்கு மேல் நீட்டிக்காமல் இருப்பது.

தொலைக்காட்சி பார்ப்பதைக் குறிப்பிட்ட நேரமாகக் குறைத்துக் கொள்வது.

கலைச்சொல் அறிவோம்

ஏவு ஊர்தி – *Launch Vehicle*

ஏவுகணை – *Missile*

கடல்மைல் – *Nautical Mile*

காணொலிக் கூட்டம் – *Video Conference*

பதிவிறக்கம் – *Download*

பயணியர் பெயர்ப் பதிவு – *Passenger Name Record (PNR)*

மின்னணுக் கருவிகள் – *Electronic devices*

இணையத்தில் காண்க

செயல்பாட்டிற்கான மென்பொருள் / செயலியைத் தரவிறக்கம் செய்யும் உரலி

IRCTC – இணையத்தில் தொடர் வண்டிப் பயணத்திற்கான முன்பதிவு செய்து *PNR* நிலையை அறிதல்

http://play.google.com/store/apps/details?id=cris.org.in.prs.ima

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 001-121.indd 121 22/05/18 6:56 PM

இணையச் செயல்பாடுகள்

விண்வெளி ஆய்வு

விண்ணில் கொஞ்சம்
மிதப்போமா!

படிகள்

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி "solarsystemscope" இணையச்செயலியின் பக்கம் செல்க.
- திரையில் தோன்றும் 'start online model' என்பதைச் சொடுக்கி, செயல்பாட்டின் உட்பக்கம் செல்க.
- திரையில் தோன்றும் சூரிய மண்டலத்தைச் சொடுக்கி, சூரிய மண்டலத்தின் அனைத்துச் செயல்பாட்டையும் அறிக.

செயல்பாட்டிற்கான உரலி

https://www.solarsystemscope.com

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 122 23/05/18 4:32 PM

இயல் ஐந்து

கசடற மொழிதல்

கற்றல் நோக்கங்கள்

- கல்வி, பெண்கள் முன்னேற்றத்தில் பெரும்பங்கு ஆற்றியுள்ளமையை உணர்ந்து பெண்கல்விக்குத் தம் பங்களிப்பை நல்குதல்
- பலவாறான இலக்கிய வடிவங்களின்வழி கருத்துகளைப் படித்து அறிதல்
- குறிப்பிட்ட தலைப்பின்கீழ் கருத்துகளைத் திரட்டிக் கோவையாக எழுதும் திறன் பெறுதல்
- நூலகத்தின் பயனறிந்து பயன்படுத்த முனைதல்
- இடைச்சொல், உரிச்சொல் ஆகியவற்றை எழுதுதலில் முறையாகப் பயன்படுத்துதல்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 123 23/05/18 4:32 PM

இயல் ஐந்து

கல்வியில் சிறந்த பெண்கள்

நுழையும்முன்

கையிலுள்ள செல்வத்தைக்காட்டிலும் நிலைத்த புகழுடைய கல்விதான் ஒருவருக்கு வாழ்வின் இறுதிவரையிலும் கைகொடுக்கிறது. கல்வி பெறுதலே பெண்டிர்க்கு அழகு. சங்ககாலத்தில் உயர்ந்திருந்த பெண்கல்வி, இடைக்காலத்தில் ஒடுங்கிப்போனது. பெண்கல்வியை மீட்டெடுக்க உலகம் முழுவதும் சான்றோர் பலர் பாடுபட்டிருக்கின்றனர். மருத்துவர் முத்துலட்சுமி முதல் மலாலா வரை ஒவ்வொரு சாதனைப் பெண்ணின் வரலாற்றிலும் ஒரு சோதனைக் காலமும் ஒரு வேதனை முகமும் இருக்கின்றது. இனி, பெண்கல்வி காலூன்றிக் கடந்து வந்த பாதைகளில் நடந்து செல்லும் வில்லிசையைச் செவிமடுப்போம்.

வில்லுப்பாட்டு

பங்கு பெறுவோர்

வில்லுப்பாட்டுக் குழுத்தலைவர், குழுவினர்

KAFFNJ

வில்லுப்பாட்டுக் குழுத்தலைவர்: தந்தனத்தோம் என்று சொல்லியே வில்லினில் பாட

குழுவினர்: ஆமாம், வில்லினில் பாட

குழுத்தலைவர்: வந்தருள்வாய் தமிழ்மகளே!

குழுவினர்: ஆமாம், வந்தருள்வாய் தமிழ்மகளே!

அண்ணே, என்னண்ணே, இன்னைக்கு எதைப் பத்திப் பாடப்போறோம்?

குழுத்தலைவர்: நாடும் தாய்தான் நகரும் நதியும் தாய்தான் ... மொழியும் தாய்தான் சுழலும் புவியும் தாய்தான்

குழுவினர்: பீடிகை போடாம செய்திக்கு வாங்கண்ணே!

குழுத்தலைவர்: இப்படி எல்லாத்தையும் பெண்ணாகப் பார்த்து வணங்கற நாம எல்லாரும், வீட்டில் இருக்கும் பெண்ணை மதிக்கிறோமா?

குழுவினர்: அண்ணே... மதிக்க என்ன இருக்கு. எல்லார் வீட்டிலயும் இப்படித்தானே?

குழுத்தலைவர்: சரி, இதுவே ஒரு பெண் ஆட்சியர் வந்தா என்ன செய்வ?

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 124 23/05/18 4:32 PM

குழுவினர்: என்ன அண்ணே கேள்வி இது? உடனே எழுந்து நின்று வணக்கம் சொல்வேன்.

குழுத்தலைவர்: அப்போ, ஒரு பெண் படிச்சுப் பெரிய பதவிக்கு வரும்போது, தானா மரியாதை வருதுல்ல? அதான், இன்னிக்குப் பெண் கல்வியின் அவசியம் பத்தியும் கல்வியில் சிறந்த பெண்களைப் பத்தியும் பாடப்போறோம்.

படிக்க வேண்டும் பெண்ணே – அப்பத்தான்
பார்முழுதும் போற்றிடும் கண்ணே . . .
சுயமாகச் சிந்திக்கத் துணையாகும் கல்வி
சொந்தக்காலில் நின்றிடவே உடனுதவும்
கல்வி...(படிக்க)

குழுவினர்: ஆமா, பார் முழுதும் போற்றிடும் கண்ணே.

ஆமாண்ணே, எனக்கொரு சின்ன ஐயம். அந்தக் காலத்தில எந்தப் பெண்ணைப் படிக்க வச்சாங்க? அப்பல்லாம் நாடு நல்லா இல்லையாண்ணே!

குழுத்தலைவர்: தம்பி, உனக்கு விவரம் பத்தாது. சொல்றேன் கேட்டுக்கோ.

கற்காலம் முதலே கனிந்திருந்த தமிழின்
பொற்காலம் எனவே புகழப்படும் காலம்
எக்காலம்? அது எக்காலம்?
பாட்டும் தொகையும் உருவான காலம்
ஊட்டும் தமிழுணர்வு உயர்ந்திருந்த காலம்
சங்ககாலம்... அது சங்ககாலம்...
ஔவையும் குயத்தியும் வெறிபாடிய
கண்ணியும்
கொவ்வைத் தமிழைக் கொண்டு பாடிய
மாசாத்தியும்
செழித்திருந்த காலம்... புகழ் வளர்த்திருந்த
காலம்...

குழுவினர்: ஓகோ! சங்க காலத்தில் பெண்பாற் புலவர் பலர் இருந்ததச் சொல்றீங்களா அண்ணே, மேலே சொல்லுங்க. நானும் தெரிஞ்சுக்கணும். நம்ம மக்களும் தெரிஞ்சு நடந்துக்கட்டும்

தெரிந்து தெளிவோம்

சங்ககாலப் பெண்பாற் புலவர்கள் சிலர்

ஔவையார், ஒக்கூர் மாசாத்தியார், ஆதிமந்தியார், வெண்ணிக் குயத்தியார், பொன்முடியார், அள்ளூர் நன்முல்லையார், நக்கண்ணையார், காக்கைப்பாடினியார். வெள்ளிவீதியார், காவற்பெண்டு, நப்பசலையார்,

வில்லுப்பாட்டுக் குழுத்தலைவர்:

பெண்பாற் புலவர்கள் வந்தாங்க...
பெண்ணுணர்வைப் பாடலில் தந்தாங்க...
தூது போனாங்க... துயரைத் தீர்த்தாங்க...
ஓதும் தமிழாலே உயர்வைப் பெற்றாங்க...

குழுவினர்: படிச்ச பெண்களுக்குக் கிடைச்ச பெருமைய இன்னும் சொல்லுங்கண்ணே!

குழுத்தலைவர்: சமண மதமும் புத்த மதமும் வளர்ந்த காலத்திலே, மாதவி மகள் மணிமேகலை கல்வி கற்ற பெண்ணாக இருந்தாங்க.

குழுவினர்: அப்படியா அண்ணே, வேற யாரெல்லாம் படிச்சுப் பெருமை அடைஞ்சாங்க?

குழுத்தலைவர்: பக்தி இயக்கம் வளர்ந்த காலத்தில் காரைக்கால் அம்மையார், ஆண்டாள் முதலிய பெண்கள், தம் இறைவனுக்குப் பாமாலை சூட்டினாங்க.

குழுவினர்: ஆமாண்ணே நானும் கேள்விப்பட்டிருக்கேன். ஆனா, திரும்பவும் எனக்கொரு ஐயம். இவ்வளவு பெண்கள் படிச்சிருந்த நம்ம நாட்டில சில நூற்றாண்டுகளா ஏன் பெண்ணடிமைத்தனம் வந்துச்சு?

குழுத்தலைவர்: தம்பி நல்ல கேள்வி கேட்ட, சொல்றேன் கேளு.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 125 23/05/18 4:32 PM

ஆணும் பெண்ணும் இயற்கைப் படைப்பிலே
சமம் என்று நினைச்சாங்க – முன்னோர்கள்
சரியாக வாழ்ந்தாங்க...
இடையில் குடிபுகுந்த மூடப்பழக்கங்களால்
பெண்களைத் தாழ்த்தினாங்க – சமத்துவத்தை
அடியோடு வீழ்த்தினாங்க...

குழுவினர்: அது சரிண்ணே, இன்று பெண்கள் நல்லாப் படிச்சு உயர்ந்த பதவியெல்லாம் பெற்று நாட்டையே ஆளறாங்க. இந்த நிலை எப்படிண்ணே வந்தது?

குழுத்தலைவர்: அது, ஒரு நூற்றாண்டு கால வரலாறு தம்பி. இந்த நிலை அடைய அவங்க பட்டபாடு சொல்லி முடியாது.

குழுவினர்: அதைத்தான், கேட்கறேன் விரிவாகச் சொல்லுங்கண்ணே!

குழுத்தலைவர்:
அடுப்பூதும் பெண்ணுக்குப் படிப்பெதுக்கு என்று
ஆணவமாக் கேட்டவங்க மத்தியிலே
குழுவினர்: ஆமா மத்தியிலே

குழுத்தலைவர்: தமிழகத்தின் முதல் பெண் மருத்துவராய், சாதனை படைச்சாங்க முத்துலெட்சுமி

குழுவினர்: ஆமா! முத்துலெட்சுமி

குழுவினர்: அடடா! என்ன அருமையான செய்தி. அவங்க வேற என்னல்லாம் செய்தாங்கண்ணே?

குழுத்தலைவர்:
பொதுச்சேவைக்கு வந்தாங்க புதுமையைப் படைச்சாங்க
சட்டசபை உறுப்பினராய்ச் சரித்திரமாய் நின்னாங்க
மகளிருக்கெதிரான கொடுமைகளை மாண்புடனே எதிர்த்தாங்க
மனிதகுலத்தின் மாணிக்கமாய் மக்கள்மனங்களில் நிறைந்தாங்க

பெண்மை – புரட்சி

முத்துலெட்சுமி
(1886 – 1968)

தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர்

இந்தியப்பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர். சென்னை மாநகராட்சியின் முதல் துணை மேயர். சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி.

தேவதாசிமுறை ஒழிப்புச் சட்டம், இருதார தடைச்சட்டம், பெண்களுக்குச் சொத்துரிமை வழங்கும் சட்டம், குழந்தைத் திருமணத் தடைச்சட்டம் ஆகியவை நிறைவேற காரணமாக இருந்தவர். அடையாற்றில் 1930இல் அவ்வை இல்லம், 1952இல் புற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றை நிறுவியவர்.

குழுவினர்: என்ன இருந்தாலும் படிச்சவங்க படிச்சவங்கதான்.

குழுத்தலைவர்: அவங்களைப் போலவே மூவலூர் இராமாமிர்தம் அம்மையாரும் நல்லா படிச்சவங்க. சமூக சேவகியா இருந்து பெண்களின் முன்னேற்றத்துக்குப் பாடுபட்டாங்க.

குழுவினர்: இன்னும் வேறு யாரெல்லாம் பெண்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டாங்க அண்ணே?

குழுத்தலைவர்: சொல்றேன் கேளு தம்பி ...

முடியாது பெண்ணாலே என்கின்ற மாயையினை முடக்க எழுந்தவர் யாரு...
தந்தை பெரியாரு
விடியாது பெண்ணாலே என்கின்ற கேலியினை மிதித்துத் துவைத்தவர் யாரு...
நம்ம பாரதியாரு ...
பெண்ணடிமை தீரும்வரை மண்ணடிமை தீருமோவென

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 126 23/05/18 4:32 PM

இடிமுழக்கம் செய்தவர் யாரு...

பாரதிதாசனாரு ...

குழுவினர்: இவ்வளவு சேதி கேட்ட நாங்க, பெண் கல்விக்காக நமது அரசாங்கம் என்னென்ன செய்தது என்பதையே கேட்க மறந்து விட்டோம் அண்ணே!

குழுத்தலைவர்: பெண்கல்வி மேம்பாட்டிற்குத் தற்போதைய அரசு மட்டுமல்ல, ஆங்கில அரசே சட்டங்கள் போட்டது தம்பி.

குழுவினர்: என்னண்ணே சொல்றீங்க! நம்ப முடியல. ஆங்கில அரசு சட்டம் போட்டதா? புரியும்படி சொல்லுங்க!

குழுத்தலைவர்: தம்பி 1882இல் ஹண்டர் குழு முதன்முதலில் பெண் கல்விக்குப் பரிந்துரை செய்தது. அந்த அறிக்கையின்படி மராட்டிய மாநிலத்தில் ஜோதிராவ் பூலே, சாவித்திரிபாய் பூலே இணையர் முதன் முதலாகப் பெண்களுக்கான பள்ளியைத் தொடங்கினாங்க.

குழுவினர்: இது புதிய செய்தியா இருக்கே!

குழுத்தலைவர் : அதன் பிறகு, பெண்கள் கல்வி பயில, பல உயர்கல்வி நிறுவனங்களை அரசு உருவாக்குச்சு.

பெண்மை – துணிவு

மூவலூர் இராமாமிர்தம்
(1883 – 1962)

தமிழகத்தின் சமூகச் சீர்திருத்தவாதி; எழுத்தாளர்; திராவிட இயக்க அரசியல் செயல்பாட்டாளர்.; தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேறத் துணைநின்றவர். தமிழக அரசு 8ஆம் வகுப்புவரை படித்த இளம் பெண்களுக்கான திருமண உதவித் தொகையை இவரின் பெயரில் வழங்கிவருகிறது.

பெண்மை – உயர்வு

பண்டித ரமாபாய்
(1858 – 1922)

இவர் சமூகத் தன்னார்வலர். தடைகளை மீறிக் கல்வி கற்றுப் பண்டிதராகியவர். பெண்களின் உயர்வுக்குத் துணை நின்றவர்.

குழுவினர்: ஆங்கில அரசு பத்தி சொன்னீங்க சரி, விடுதலைக்குப் பின் நமது மத்திய, மாநில அரசுகள் பெண் கல்விக்காக என்ன செய்தன அண்ணே!

குழுத்தலைவர்: அதைச் சொல்லாம விடுவேனா தம்பி?

கற்க வேண்டும் பெண்கள் என்று
முழங்கியது அரசாங்கம்
கற்பதனாலேயே நம் நாட்டின்
நிலையோங்கும்
பெண்கள் பள்ளிக்கூடங்கள் திறந்தார்கள்
பெண்களும் கல்வி கற்று உயர்ந்தார்கள்....

குழுவினர்: நமது தமிழக அரசு நல்ல திட்டங்களையே தந்திருக்கு அண்ணே.

பெண்மை – சிறப்பு

ஐடாஸ் சோபியா ஸ்கட்டர்
(1870–1960)

பெண்கள் மருத்துவராவதை மருத்துவ உலகமே விரும்பாத காலத்தில் மருத்துவராகி, தமிழகத்திற்கு வந்து, வேலூரில் இலவச மருத்துவம் அளித்தவர்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 127 23/05/18 4:32 PM

குழுத்தலைவர்: ஆமா ஆமா. அரசுத் திட்டங்கள் மட்டுமல்ல; தனிமனிதப் பங்களிப்பும் இருக்கு தம்பி. இந்தியாவில் குழந்தையைப் பாதுகாப்போம் என்ற அமைப்பை நிறுவி, இதுவரைக்கும் 80ஆயிரம் குழந்தைகள் கல்விபெற உதவியா ஒருத்தர் இருந்திருக்காரு.

குழுவினர்: அப்படிப்பட்ட பெருமைக்குரியவர் யாரு அண்ணே?

குழுத்தலைவர்: 2014இல் நோபல் பரிசு வாங்கின பெருமைக்குரியவரு. அவர்தான் நம்ம கைலாஷ் சத்யார்த்தி.

குழுவினர்: எவ்வளவோ செய்திகளை இன்னைக்குச் சொன்னீங்க, இன்னும் ஏதாவது?...

குழுத்தலைவர்: ஏன் தம்பி! இழுக்கற. சொல்றேன் கேளு! பெண் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி அதற்காகப் போராடிய வீரச்சிறுமி மலாலா "நோபல் பரிசு" வாங்கினாங்க தெரியுமோ!

குழுவினர்: ஆமாண்ணே நான் கூடக் கேள்விப்பட்டேன்.

குழுத்தலைவர்: இவ்வளவு நேரம் என்னுடைய வில்லுப்பாட்டால என்ன தெரிஞ்சுக்கிட்ட தம்பி. மக்களுக்குச் சுருக்கமாகச் சொல்லு!

யார் இவர்?

பாகிஸ்தானில், பெண் கல்வி வேண்டுமெனப் போராட்டக் களத்தில் இறங்கியபோது மலாலாவின் வயது பன்னிரண்டு (1997).

பெண்மை – அறிவு

சாவித்திரிபாய் பூலே
(1831 – 1897)

1848 இல் பெண்களுக்கெனத் தொடங்கப்பட்ட பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றியவர். இவரே நாட்டின் முதல் பெண் ஆசிரியர்.

குழுவினர்:

பெண்கள் படிக்கணும் நாட்டின் கண்கள் திறக்கணும்

இன்னும் படிக்கணும் உயர்வு என்றும் விளையணும்

ஆணும் பெண்ணும் சரிநிகரென்னும் அறிவு வளரணும்

அன்பினாலே அகிலம் பூக்கும் உண்மை புரியணும்... (பெண்கள்)

குழுத்தலைவர்: பரவாயில்லை நல்லாவே புரிஞ்சுக்கிட்ட தம்பி. இத்தனை போரட்டங்களுக்குப் பிறகுதான் இன்று பெண்கள் அதிகமாகக் கல்வி கற்க வாராங்க. உயர்கல்வி கற்று அனைத்துத் துறைகளிலும் பணியாற்றித் திறமையாகச் செயல்படுறாங்க.

குழுவினர்: அடடே! இது எவ்வளவு பெரிய சேதி அண்ணே! என்னண்ணே...நீங்க சொன்னதைக் கேட்டுக்கிட்டே இருந்ததாலே நேரம் போனதே தெரியல.

குழுத்தலைவர்: சரி சரி. அப்படின்னா மங்களம் பாடிடுவோம்!

அனைவரும்:

வாழியவே பெண்மை வாழியவே
வளமான பெண்கல்வி வாழியவே
சமத்துவம் வாழியவே
புவி வளம் பெறவே
புதிய உலகம் நலம்பெறவே
(வாழியவே பெண்மை வாழியவே)

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 128 23/05/18 4:32 PM

தெரிந்து தெளிவோம்

பெண்கல்வி ஊக்குவிப்புத் திட்டங்கள்

ஈ.வெ.ரா. – நாகம்மை இலவசக் கல்வி உதவித் திட்டம் பட்டமேற்படிப்பிற்கு உரியது.

சிவகாமி அம்மையார் கல்வி உதவித்திட்டம் – கல்வி, திருமண உதவித் தொகை ஆகியவற்றுடன் தொடர்புடையது. காண்க: tavikaspedia.in

தனித் தமிழில் சிறந்த நீலாம்பிகை அம்மையார் (1903 – 1943)

மறைமலையடிகளின் மகள் ஆவார். தந்தையைப் போலவே தனித்தமிழ்ப் பற்றுடையவர்; இவரது தனித்தமிழ்க் கட்டுரை, வடசொல் தமிழ் அகரவரிசை, முப்பெண்மணிகள் வரலாறு, பட்டினத்தார் பாராட்டிய மூவர் ஆகிய நூல்கள் தனித்தமிழில் எழுத விரும்புவோர்க்கு மிகவும் பயனுள்ளனவாக விளங்குகின்றன.

கோத்தாரி கல்விக் குழு

1964ஆம் ஆண்டு கோத்தாரிக் கல்விக் குழு தன் பரிந்துரையில் அனைத்து நிலையிலும் மகளிர் கல்வியை வலியுறுத்தியது.

சாரதா சட்டம்

பெண் முன்னேற்றத்தின் தடைக்கல்லாய் இருப்பது குழந்தைத் திருமணம். எனவே, அதைத் தடுக்க 1929ஆம் ஆண்டு சாரதா சட்டம் கொண்டு வரப்பட்டது.

ஈ.த. இராஜேஸ்வரி அம்மையார் (1906 –1955)

தமிழ், இலக்கியம் அறிவியல் ஆகிய துறைகளிலும் சிறந்து விளங்கினார். திருமந்திரம், தொல்காப்பியம், கைவல்யம் போன்ற நூல்களிலுள்ள அறிவியல் உண்மைகள் குறித்துச் சொற்பொழிவு ஆற்றியுள்ளார். இராணி மேரி கல்லூரியில் அறிவியல் பேராசிரியாகப் பணியாற்றினார். சூரியன், பரமாணுப் புராணம் போன்ற அறிவியல் நூல்களை எழுதியுள்ளார்.

கற்பவை கற்றபின்...

1. *இன்றைய சாதனைப் பெண்மணிகள் என்னும் தலைப்பில் தொகுப்பேடு உருவாக்குக.*
2. *கல்வி குறித்த சிறப்புத் தொடர்கள், பொன்மொழிகளைத் திரட்டிக் கட்டுரை எழுதுக.*

தொடர்கள்

- *கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு*
- *கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி*
- *கல்வி கரையில கற்பவர் நாள்சில*
- *கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு*
- *கல்வியழகே அழகு*

KAPBQ7

பொன்மொழிகள்

- *கற்ற கல்வியும் பெற்ற செல்வமும் கடைசி மூச்சுவரை பிறருக்குக் கொடுக்கத்தான்.*
- *எடுத்தால் குறைவது செல்வம், கொடுத்தால் வளர்வது கல்வி.*
- *கல்வி ஓர் அணிகலன். அணிந்தால் அழகு தரும், அணிவித்தால் சிறப்பினைத் தரும்.*

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 129 23/05/18 4:32 PM

இயல் ஐந்து

கவிதைப் பேழை

குடும்ப விளக்கு

KAY7RU

நுழையும்முன்

புதுமைக் கருத்துகளை இயம்பும் வகையில் இருபதாம் நூற்றாண்டில் எழுந்தவையே மறுமலர்ச்சி இலக்கியங்கள். இயற்கையைப் போற்றுதல், தமிழுணர்ச்சி ஊட்டல், பகுத்தறிவு பரப்பல், பொதுவுடைமை பேசுதல், விடுதலைக்குத் தூண்டல், பெண்கல்வி பெறுதல் போன்ற பாடுபொருள்களில் தோன்றிய பல்வேறு இலக்கியங்களுள் குறிப்பிடத்தக்க ஒன்று, பாவேந்தர் பாரதிதாசனின் குடும்பவிளக்கு.

1. *கல்வி இல்லாத பெண்கள்*
களர்நிலம் அந்நி லத்தில்
புல்விளைந் திடலாம் நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை
கல்வியை உடைய பெண்கள்
திருந்திய கழனி அங்கே
நல்லறிவு உடைய மக்கள்
விளைவது நவில வோநான்!

சொல்லும் பொருளும்:

களர்நிலம் – உவர்நிலம்,
நவிலல் – சொல்லல்.

2. *வானூர்தி செலுத்தல் வைய*
மாக்கடல் முழுது அளத்தல்
ஆனஎச் செயலும் ஆண்பெண்
அனைவர்க்கும் பொதுவே! இன்று
நானிலம் ஆட வர்கள்
ஆணையால் நலிவு அடைந்து
போனதால் பெண்களுக்கு
விடுதலை போனது அன்றோ!

சொல்லும் பொருளும்:

வையம் – உலகம்;
மாக்கடல் – பெரிய கடல்,

3. *இந்நாளில் பெண்கட்கு எல்லாம்*
ஏற்பட்ட பணியை நன்கு
பொன்னேபோல் ஒருகை யாலும்
விடுதலை பூணும் செய்கை
இன்னொரு மலர்க்கை யாலும்
இயற்றுக! கல்வி இல்லா
மின்னாளை வாழ்வில் என்றும்
மின்னாள் என்றே உரைப்பேன்! *

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 130 23/05/18 4:32 PM

சொல்லும் பொருளும்: இயற்றுக – செய்க; மின்னாளை – மின்னலைப் போன்றவளை; மின்னாள் – ஒளிரமாட்டாள்.

4. *சமைப்பதும் வீட்டு வேலை*
சலிப்பின்றிச் செயலும் பெண்கள்
தமக்கே ஆம் என்று கூறல்
சரியில்லை; ஆடவர்கள்
நமக்கும் அப் பணிகள் ஏற்கும்
என்றெண்ணும் நன்னாள் காண்போம் !
சமைப்பது தாழ்வா ? இன்பம்
சமைக்கின்றார் சமையல் செய்வார்!

5. *உணவினை ஆக்கல் மக்கட்கு!*
உயிர்ஆக்கல் அன்றோ? வாழ்வு
பணத்தினால் அன்று! வில்வாள்
படையினால் காண்ப தன்று!
தணலினை அடுப்பில் இட்டுத்
தாழியில் சுவையை இட்டே
அணித்திருந் திட்டார் உள்ளத்(து)
அன்பிட்ட உணவால் வாழ்வோம்!

சொல்லும் பொருளும்: தணல் – நெருப்பு; தாழி – சமைக்கும் கலன்; அணித்து – அருகில்.

6. *சமைப்பது பெண்க ளுக்குத்*
தவிர்க்கஒணாக் கடமை என்றும்
சமைத்திடும் தொழிலோ, நல்ல
தாய்மார்க்கே தக்கது என்றும்
தமிழ்த்திரு நாடு தன்னில்
இருக்குமோர் சட்டந் தன்னை
இமைப் போதில் நீக்கவேண்டில்
பெண்கல்வி வேண்டும் யாண்டும்!

சொல்லும் பொருளும்: தவிர்க்கஒணா – தவிர்க்க இயலாத; யாண்டும் – எப்பொழுதும்.

பாடலின் பொருள்

1. கல்வியறிவு இல்லாத பெண்கள் பண்படாத நிலத்தைப் போன்றவர்கள். அந்நிலத்தில் புல் முதலானவைதான் விளையலாம். நல்ல பயிர் விளையாது. அதுபோல அறிவுடைய மக்கள் உருவாகமாட்டார்கள். கல்வியைக் கற்ற பெண்கள் பண்பட்ட நன்செய் நிலத்தினைப் போன்றவர்கள். அவர்கள் மூலம் சிறந்த அறிவுடைய மக்கள் உருவாகின்றனர் என்பதை நான் சொல்லவும் வேண்டுமோ?

2. வானூர்தியைச் செலுத்துதல், உலகையும் கடலையும் அளத்தல் போன்ற எந்தச் செயலும் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானவை. இன்று உலகமானது ஆண்களின் கட்டுப்பாட்டில் நலிந்து போனதால்தான் பெண்களுக்கு விடுதலை பறிபோனது.

3. இன்று பெண்களுக்கென உள்ள வேலைகளையும், அவர்களின் விடுதலைக்கான செயலையும் பெண்களே செய்தல் வேண்டும். மின்னல்போல் ஒளிரும் இயல்புடையவள் பெண்; ஆனால் கல்வியறிவு இல்லாத பெண் தன் வாழ்வில் என்றும் ஒளிரமாட்டாள் என்றே நான் சொல்வேன்.

4. சமைப்பது, வீட்டு வேலைகளைச் சலிப்பில்லாமல் செய்வது போன்றவை பெண்களுக்கே உரியவை என்று கூறுவது பொருத்தமற்றது. அவை நமக்கும் உரியவை என்று ஆண்கள் ஏற்றுக்கொள்ளும் எண்ணம் வரவேண்டும். அந்த நன்னாளைக் காண்போம். சமைப்பது தாழ்வென எண்ணலாமா? சமைப்பவர் உணவை மட்டும் சமைப்பதில்லை. அதற்கும் மேலாக இன்பத்தையும் படைக்கின்றார்.

5. உணவைச் சமைத்துத் தருவது என்பது உயிரை உருவாக்குவது போன்றதாகும். "வாழ்க்கை" என்பது பொருட்செல்வத்தாலோ வீரத்தாலோ அமைவதன்று. அடுப்பில் உள்ள சமைக்கும் கலத்தில் சுவையை இட்டு, அருகில் இருந்து உள்ளத்து அன்போடு உணவு பரிமாறுதலில்தான் வாழ்வு நலம்பெறுகிறது.

6. சமைக்கும் பணி பெண்களுக்குத் தவிர்க்க முடியாத கடமை எனவும் அப்பணி நல்ல தாய்மார்களுக்கே உரியது எனவும் தமிழ்த்திரு நாட்டில் இருக்கின்ற வழக்கத்தினைக் கண் இமைக்கும் நேரத்தில் நீக்க வேண்டுமாயின் பெண்களுக்கு எப்போதும் கல்வி வேண்டும்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 131 23/05/18 4:32 PM

இலக்கணக்குறிப்பு

மாக்கடல் – உரிச்சொல்தொடர்;

ஆக்கல் – தொழில்பெயர்;

பொன்னேபோல் – உவம உருபு;
மலர்க்கை – உவமைத்தொகை;

வில்வாள் – உம்மைத்தொகை;

தவிர்க்கஒணா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

பகுபத உறுப்பிலக்கணம்

விளைவது = விளை + வ் +அ + து

விளை – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை; அ – சாரியை; து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி.

சமைக்கின்றார் = சமை + க் + கின்று + ஆர்

சமை – பகுதி; க் – சந்தி; கின்று – நிகழ்கால இடைநிலை; ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி.

நூல் வெளி

குடும்ப விளக்கு, குடும்ப உறவுகள் அன்பு என்னும் நூலால் பிணைந்துள்ளதை உணர்த்துகிறது; கற்ற பெண்ணின் குடும்பமே பல்கலைக்கழகமாக மிளிரும் என்பதைக் காட்டுகிறது; குடும்பம் தொடங்கி உலகினைப் பேணுதல்வரை தன் பணிகளைச் சிறப்பாகச் செய்யும் பெண்ணுக்குக் கல்வி முதன்மையானதும் இன்றியமையாததும் ஆகும். இந்நூல் ஐந்து பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் பகுதியில், விருந்தோம்பல் தலைப்பிலுள்ள தலைவியின் பேச்சில் இடம்பெற்றுள்ள கவிதைகள் பாடப்பகுதியாக உள்ளன.

பாரதிதாசனின் இயற்பெயர் கனக.சுப்புரத்தினம். இவர் பாரதியின் கவிதை மீதுகொண்ட ஈர்ப்பினால் பாரதிதாசன் என்று தம்பெயரை மாற்றிக் கொண்டார். பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு, இருண்ட வீடு, குடும்ப விளக்கு, தமிழியக்கம் உள்ளிட்டவை இவரது படைப்புகள். இவர் இயற்றிய கவிதைகள் அனைத்தும் 'பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகள்' என்னும் பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன. இவரது பிசிராந்தையார் நாடக நூலுக்குச் சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டுள்ளது.

கற்பவை கற்றபின்...

1. *பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்*
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் – பாரதி

மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம்
செய்திடல் வேண்டுமம்மா.... – கவிமணி

பெண்எனில் பேதை என்ற எண்ணம்
இந்த நாட்டில் இருக்கும் வரைக்கும்
உருப்படல் என்பது சரிப்படாது – பாவேந்தர்

KB83TH

இவை போன்ற பெண்மையைப் போற்றும் கவிதை அடிகளைத் திரட்டுக.

2. ஆணுக்கும் சமையல் செய்யத் தெரிந்திருப்பதன் பயன் குறித்து வகுப்பறையில் கலந்துரையாடி அதன் கருத்துகளைத் தொகுக்க.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 132 23/05/18 4:32 PM

இயல் ஐந்து

கவிதைப் பேழை

சிறுபஞ்சமூலம்

KBGYV5



மனித வாழ்வைச் செழுமையாக்குபவை அறப் பண்புகளே. காலந்தோறும் தமிழில் அறக் கருத்துகளைக் கூறும் இலக்கியங்கள் தோன்றிவருகின்றன. அவற்றுள் ஒன்றுதான் சிறுபஞ்சமூலம் என்னும் நூல். வயதுக்கும் அறிவுக்கும் சில நேரங்களில் தொடர்பு இருப்பதில்லை. சாதனைக்கு வயது ஒரு தடையில்லை.

அறிவுடையார் தாமே உணர்வர்

பூவாது காய்க்கும் மரம் உள; நன்று அறிவார்,
மூவாது மூத்தவர், நூல் வல்லார்; தாவா,
விதையாமை நாறுவ வித்துஉள; மேதைக்கு
உரையாமை செல்லும் உணர்வு.* *(பா. எண்: 22)*

பாடலின் பொருள்

பூக்காமலே சில மரங்கள் காய்ப்பதுண்டு. இதைப் போலவே நன்மை, தீமைகளை நன்குணர்ந்தவர், வயதில் இளையவராக இருந்தாலும், அவர் மூத்தவரோடு வைத்து எண்ணத் தக்கவரே ஆவார். பாத்தி அமைத்து விதை விதைக்காமலே, தானே முளைத்து வளரும் விதைகளும் உள்ளன. அதைப் போலவே மேதையரும் பிறர் உணர்த்தாமல் எதையும் தாமே உணர்ந்து கொள்வர்.

அணி : பாடலில் எடுத்துக்காட்டு உவமையணி பயின்று வந்துள்ளது.

சொல்லும் பொருளும்

மூவாது – முதுமை அடையாமல்; நாறுவ – முளைப்ப, தாவா – கெடாதிருத்தல்

இலக்கணக் குறிப்பு

அறிவார், வல்லார்– வினையாலணையும் பெயர்கள்

விதையாமை, உரையாமை – எதிர்மறைத் தொழிற்பெயர்கள்

தாவா – ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

பகுபத உறுப்பிலக்கணம்

உரையாமை = உரை + ய் + ஆ + மை

உரை – பகுதி; ய் – சந்தி (உடம்படுமெய்)

ஆ – எதிர்மறை இடைநிலை

மை – தொழிற்பெயர் விகுதி

காய்க்கும் = காய் + க் + க் + உம்

காய் – பகுதி; க் – சந்தி; க் – எதிர்கால இடைநிலை; உம் – பெயரெச்ச விகுதி

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 133 23/05/18 4:32 PM

நூல் வெளி

தமிழில் சங்க இலக்கியங்களைத் தொடர்ந்து நீதிநூல்கள் தோன்றின. அவை பதினெண் கீழ்க்கணக்கு எனத் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் ஒன்று சிறுபஞ்சமூலம். ஐந்து சிறிய வேர்கள் என்பது இதன் பொருள். அவை கண்டங்கத்திரி, சிறுவழுதுணை, சிறுமல்லி, பெருமல்லி, நெருஞ்சி ஆகியன. இவ்வேர்களால் ஆன மருந்து உடலின் நோயைப் போக்குகின்றது. அதுபோலச் சிறுபஞ்சமூலப் பாடல்களில் உள்ள ஐந்தைந்து கருத்துகள் மக்களின் அறியாமையைப் போக்கி நல்வழிப்படுத்துவனவாய் அமைந்துள்ளன. இப்பாடல்கள் நன்மை தருவன, தீமை தருவன, நகைப்புக்கு உரியன என்னும் வகையில் வாழ்வியல் உண்மைகளை எடுத்துக்காட்டுகின்றன.

சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் காரியாசான், மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனாரின் மாணாக்கர். காரி என்பது இயற்பெயர். ஆசான் என்பது தொழிலின் அடிப்படையில் அமைந்தபெயர். மாக்காரியாசான் என்று பாயிரச் செய்யுள் இவரைச் சிறப்பிக்கிறது.

தெரிந்து தெளிவோம்

சாதனைக்கு வயது தடையன்று

10 வயதிற்குள்ளாகவே சொற்பொழிவு நிகழ்த்தவும், பாடவும் ஆற்றல் பெற்றவர் வள்ளலார்.

11ஆவது வயதிலேயே அரசவையில் கவிதை எழுதி 'பாரதி' என்னும் பட்டம் பெற்றவர் பாரதியார்.

15ஆவது வயதிலேயே பிரெஞ்சு இலக்கியக் கழகத்துக்குத் தமது கவிதைகளை எழுதியனுப்பியவர் விக்டர் ஹியூகோ.

16ஆவது வயதிலேயே தமது தந்தையின் போர்ப் படையில் தளபதியானவர் மாவீரன் அலெக்சாண்டர்.

17ஆவது வயதிலேயே பைசா நகரச் சாய்ந்த கோபுரத்தின் விளக்கு ஊசலாடுவது குறித்து ஆராய்ந்தவர் விஞ்ஞானி கலீலியோ.

தெரியுமா?

சிறுபஞ்சமூலத்தின் பாடலில் ஐந்து கருத்துகள் இடம்பெற்றுள்ளன. அது போல, ஒரு பாடலில் மூன்று, ஆறு கருத்துகளைக் கொண்ட அறநூல்கள் பதினெண்கீழ்க்கணக்கு வரிசையில் அமைந்துள்ளன. அந்நூல்களைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

கற்பவை கற்றபின்...

1. *பூக்காமலே காய்க்கும் மரங்கள், விதைக்காமலே முளைக்கும் விதைகள் எவையெனக் கேட்டறிந்து வகுப்பறையில் கூறுக.*

2. *மூவாது மூத்தவர், காணாது கண்டவர்*
   இவை போல நயம் அமைந்த தொடர்களை உருவாக்குக.

KBQUWS

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 134 23/05/18 4:32 PM

விரிவானம்

இயல் ஐந்து

வீட்டிற்கோர் புத்தகசாலை

KBZQYF

நுழையும்முன்

"நான் இன்னும் வாசிக்காத நல்ல புத்தகம் ஒன்றை வாங்கிவந்து என்னைச் சந்திப்பவனே என் தலைசிறந்த நண்பன்" என்பார் ஆபிரகாம் லிங்கன். மனிதனை விலங்கிடமிருந்து வேறுபடுத்துவது சிரிப்பு மட்டுமன்று, சிந்திப்பதும்தான். சிந்தனையைத் தூண்டுவது கற்றல் மட்டுமன்று, நூல்களும்தான். உலகமெங்கும் பயணம் செல்லும் பட்டறிவை நூலுலகம் தருகிறது. நல்ல நண்பனைப் போன்ற நூலையும், நல்ல நூலைப் போன்ற நண்பனையும் தேடிப் பெறவேண்டும். இசையைப் போன்றே இதயத்தைப் பண்படுத்துவன நூல்களே. ஆதலின் வீட்டிற்கோர் புத்தகசாலை என்றும் தேவை.

உலகிலே எங்கேனும் ஓரிடத்தில் ஏதோ ஓர் காரணத்தால் நேரிடும் ஏதோ ஓர் சம்பவம், உலகின் மற்ற பாகங்களைப் பாதிக்கும் நாட்களில் நாம் வாழ்கிறோம். உலகத் தொடர்பு அதிகரித்துவிட்ட, வளர்ந்துகொண்டே போகும் நாட்களிலே நாம் வாழ்கிறோம்.

நாட்டுநிலை, உலகநிலைக்கு ஏற்ப வளர்ந்தாக வேண்டும். இதற்கு வீட்டுநிலை மாற வேண்டும். வீட்டிற்கோர் புத்தகசாலை என்ற இலட்சியம், நாட்டுக்கோர் நல்லநிலை ஏற்படச் செய்ய வேண்டும் என்ற திட்டத்துக்கு அடிப்படை. மலை கண்டு, நதி கண்டு, மாநிதி கண்டு அல்ல, ஒரு நாட்டை உலகம் மதிப்பது அந்த நாட்டு மக்களின் மனவளத்தைக் கண்டே. மாநிலம் மதிக்கும் மனவளம் வேண்டும்.

எழுத்தறிவற்றவர் ஏராளம் இந்நாட்டில். இது பெருங்கேடு. கல்வி பெற்றவர்கள் அனைவருக்குமாவது மனவளம் இருக்கிறதா?

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 135 23/05/18 4:32 PM

அவர்களின் வீடுகளாவது நாட்டுக்குச் சிறப்பளிக்கும் நற்பண்புகள் செழிக்கும் பண்ணைகளாக, நாட்டுக்கு வலிவும் வனப்பும் தேடித்தரும் கருத்துகள் மலரும் சோலையாக உள்ளனவா என்றால், இல்லை என்று பெருமூச்சுடன் கூறித்தான் ஆகவேண்டும். உள்ளதை மறைக்காதிருக்க வேண்டுமானால், நாட்டுநிலை கண்டு உலகம் மதிக்கவேண்டுமானால், இந்தச் சூழ்நிலை மாறியாக வேண்டும்.

வீட்டிற்கோர் புத்தகசாலை என்ற இலட்சியத்தை நடைமுறைத் திட்டமாக்கி, சற்றுச் சிரமப்பட்டால், நமது நாட்டிலே நிச்சயமாக மனவளத்தைப் பெறமுடியும். நமது முன் சந்ததியார்களுக்கு இருந்ததைவிட, அதிகமான வசதிகள் நமக்கு உள்ளன.

அவர்களின் காலம் அடவியில் ஆற்றோரத்தில் பர்ணசாலைக்குப் பக்கத்தில் ஆலமரத்தடியில் சிறுவர்கள் அமர்ந்திருக்க, குரு காலைக் கடன்களை முடித்துக்கொண்டு வந்து, பாடங்களைச் சொல்லித்தரும் முறை இருந்த காலம்; ஏடும் எழுத்தாணியும் இருந்த காலம். இப்போதுள்ளது உலகை நமது வீட்டுக்கு அழைத்துவந்து காட்டக்கூடிய காலம். பாமர மக்கள் பாராளும் காலம்; மனவளத்தை அதிகப்படுத்தும் மார்க்கம் முன்பு இருந்ததைவிட அதிகம் உள்ள காலம்.

இதோ நான் பேசுகிறேன். நீங்கள் கேட்கிறீர்கள். இடையே பலப்பல மைல்கள். இந்த ஒலி கேட்பது அறிவின் துணைகொண்டு.

விஞ்ஞானி ஆக்கித் தந்த சாதனம் நமக்குக் கிடைத்திருக்கிறது. இவ்வதிசயச் சாதனங்கள் இல்லாதிருந்த நாட்கள் நமது முன்னோர்கள் காலம். இவ்வளவு வசதிகள் நமக்கிருக்கிறது. ஏன், மனவளம் இவ்வளவு குறைவாக இருக்கிறது? வீடுகளிலே, மனவளத்தை அதிகரிக்கவோ, பாதுகாக்கவோ, நாம் முயற்சி செய்வதில்லை, வழிவகை தேடிக் கொள்வதில்லை.

வீடுகளில் மேஜை, நாற்காலி, சோபாக்கள் இருக்கும். பீரோக்கள் இருக்கும். அவைகளில் வெள்ளித் தாம்பாளமும், விதவிதமான வட்டில்களும், பன்னீர்ச்செம்பும் இருக்கும். பித்தளைப் பாத்திரங்கள் இருக்கும். உடைகள் சிறு கடை அளவுக்கு இருக்கும். மருந்து வகைகள் சிறு வைத்தியசாலை அளவுக்கு இருக்கும். அப்படிப்பட்ட வசதியுள்ள வீடுகளிலேயுங்கூட புத்தகசாலை இராது.

வீட்டிற்கோர் புத்தகசாலை நிச்சயம் வேண்டும். வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம், அலங்காரப் பொருள்களுக்கும் போக போக்கியப் பொருள்களுக்கும் தரப்படும் நிலைமாறி, புத்தகசாலைக்கு அந்த இடம் தரப்படவேண்டும். உணவு, உடை, அடிப்படைத் தேவை அந்தத் தேவையைப் பூர்த்தி செய்தானதும் முதல் இடம் புத்தகசாலைக்குத் தரப்படவேண்டும்.

வீட்டிற்கோர் புத்தகசாலை அமைக்க வேண்டும். மக்களின் மனத்திலே உலக அறிவு புக வழிசெய்ய வேண்டும். அவர்கள் தங்கள் நாட்டை அறிய, உலகை அறிய, ஏடுகள் வேண்டும். நிபுணத்துவம் தரும் ஏடுகள்கூட

தெரியுமா?

2009 ஆம் ஆண்டு நடுவண் அரசு அண்ணா நினைவாக அவர் உருவம் பொறிக்கப்பட்ட ஐந்து ரூபாய் நாணயத்தை வெளியிட்டது. 2010ஆம் ஆண்டு அண்ணா நூற்றாண்டு நிறைவடைந்ததை நினைவுபடுத்தும் வண்ணம் தமிழ்நாடு அரசு அண்ணா நூற்றாண்டு நூலகத்தை உருவாக்கியது.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 136 23/05/18 4:32 PM

இன்றும் நிலைபெற்றுள்ள பேரறிஞர் அண்ணாவின் புகழ்பெற்ற பொன்மொழிகளுள் சில

1. மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு
2. கத்தியைத் தீட்டாதே உன்றன் புத்தியைத் தீட்டு. வன்முறை இருபக்கமும் கூர் உள்ள கத்தி ஆகும்.
3. எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.
4. சட்டம் ஒரு இருட்டறை – அதில் வழக்கறிஞரின் வாதம் ஒரு விளக்கு.
5. மக்களின் மதியைக் கெடுக்கும் ஏடுகள் நமக்குத் தேவையில்லை; தமிழரைத் தட்டி எழுப்பும் தன்மான இலக்கியங்கள் தேவை; தன்னம்பிக்கை ஊட்டி மதிப்பைப் பெருக்கும் நூல்கள் தேவை.
6. நல்ல வரலாறுகளைப் படித்தால்தான் இளம் உள்ளத்திலே புது முறுக்கு ஏற்படும்.
7. இளைஞர்களுக்குப் பகுத்தறிவும் சுயமரியாதையும் தேவை.
8. இளைஞர்கள் உரிமைப் போர்ப்படையின் ஈட்டி முனைகள்.
9. நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்; இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்.

அல்ல, அடிப்படை உண்மைகளாவது அறிவிக்கும் நூல்கள் சிலவாவது வேண்டும்.

வீடுகளிலே நடைபெறும் விஷேசங்களின்போது, வெளியூர்கள் சென்று திரும்பும்போது, பரிசளிப்புகள் நடத்தும்போது புத்தகங்கள் வாங்குவது என்று ஒரு பழக்கத்தைக் கொஞ்சம் வசதியுள்ள வீட்டார் சில காலத்துக்காவது ஏற்படுத்திக்கொண்டால், சுலபத்தில் ஒரு சிறு புத்தகசாலையை அமைத்துவிடலாம். உலக அறிவை, உருப்படியான காரியத்துக்குப் பயன்படும் அறிவைத் தரக்கூடிய புத்தகங்களைச் சேகரிக்க வேண்டும்.

பூகோள, சரித ஏடுகள் இருக்க வேண்டும். நமக்கு உண்மை உலகைக் காட்ட, நமக்கு ஒழுக்கத்தையும் வாழ்வுக்கான வழிகளையும் காட்ட, வீட்டிற்கோர் திருக்குறள் கட்டாயமாக இருக்கவேண்டும்.

நமது தமிழகத்தின் தனிச்சிறப்பு என்று கூறத்தகும் சங்க இலக்கியச் சாரத்தைச் சாமானியரும் அறிந்து வாசிக்கக் கூடிய முறையில் தீட்டப்பட்ட ஏடுகள் இருக்கவேண்டும். குறைந்தபட்சம் மக்கள் முன்னேற்றத்துக்கும் வாழ்க்கை வசதிக்கும் உதவும் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளைப் பற்றிய முக்கியமான தகவலைத் தெரிவிக்கும் நூல்கள் இருக்க வேண்டும்.

நாட்டு விடுதலைக்கு உழைத்தவர்கள், மக்களின் மனமாசு துடைத்தவர்கள், தொலைதேசங்களைக் கண்டவர்கள், வீரர்கள், விவேகிகள் ஆகியோரின் வாழ்க்கைக் குறிப்பு ஏடுகள் இருக்க வேண்டும்.

இந்த அடிப்படையில் வீட்டிற்கோர் புத்தகசாலை அமைத்துக்கொண்டால், நாட்டுக்கு நல்லநிலை ஏற்படும். வீட்டிற்கோர் புத்தகசாலை தேவை.

ஆனால் கேட்டினை நீக்கிட, தக்க முறைகளைத் தரும் ஏடுகள் கொண்டதாக இருக்கவேண்டும், வீட்டிலே அமைக்கும் புத்தகசாலை.

நூலகப் பயன்பாட்டிற்கான இணையத்தளங்கள்

http:www.tamilvu.org,http:www.thamizham.net,www.projectmadurai.com

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 137 23/05/18 4:32 PM

நூல் வெளி

பேரறிஞர் அண்ணா தமிழிலும் ஆங்கிலத்திலும் மிகச்சிறந்த பேச்சாளராக விளங்கியவர். எழுத்தாளரான அண்ணாவைத் 'தென்னகத்துப் பெர்னாட்ஷா' என்று அழைத்தனர். சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம் முதல் இன்பஒளி வரை பல படைப்புகளைத் தந்தவர். அவரது பல படைப்புகள் திரைப்படங்களாயின. தம்முடைய திராவிட சீர்திருத்தக் கருத்துகளை நாடகங்கள், திரைப்படங்கள் மூலமாக முதன்முதலில் பரப்பியவர் இவரே. 1935இல் சென்னை, பெத்தநாயக்கன் பேட்டை, கோவிந்தப்ப நாயக்கன் பள்ளியில் ஆங்கில ஆசிரியராக ஓராண்டு பணியாற்றினார். ஹோம்ரூல், ஹோம்லேண்ட், நம்நாடு, திராவிடநாடு, மாலைமணி, காஞ்சி போன்ற இதழ்களில் ஆசிரியராகவும் குடியரசு, விடுதலை ஆகிய இதழ்களில் துணையாசிரியராகவும் இருந்தார். முதலமைச்சராகப் பொறுப்பை ஏற்றதும் இருமொழிச் சட்டத்தை உருவாக்கினார். சென்னை மாகாணத்தைத் 'தமிழ்நாடு' என்று மாற்றித் தமிழக வரலாற்றில் நீங்கா இடம் பெற்றார்

அண்ணாவின் சிறுகதைத் திறன் – ப.373 – முனைவர் பெ. குமார்.

தெரிந்து தெளிவோம்

புகழுக்குரிய நூலகம்

ஆசியாவிலேயே மிகப் பழமையான நூலகம் என்ற புகழுக்குரியது தஞ்சை சரசுவதி மகால் நூலகம். இந்திய மொழிகள் அனைத்திலும் உள்ள ஓலைச்சுவடிகள் இங்குப் பாதுகாக்கப்படுகின்றன.

உலகளவில் தமிழ் நூல்கள் அதிகமுள்ள நூலகம் கன்னிமரா நூலகமே. இது சென்னை எழும்பூரில் அமைந்துள்ளது.

இந்தியாவில் தொடங்கப்பட்ட முதல் பொது நூலகம் என்ற பெருமைக்கு உரியது, திருவனந்தபுரம் நடுவண் நூலகம்.

கொல்கத்தாவில் 1836ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, 1953இல் பொதுமக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட தேசிய நூலகமே இந்தியாவின் மிகப் பெரிய நூலகமாகும். இது ஆவணக் காப்பக நூலகமாகவும் திகழ்கிறது.

உலகின் மிகப் பெரிய நூலகம் என்ற பெருமையைத் தாங்கி நிற்பது அமெரிக்காவிலுள்ள லைப்ரரி ஆப் காங்கிரஸ்.

கற்பவை கற்றபின்...

1. *வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம் புத்தக சாலைக்குத் தரப்படவேண்டும்!* – *அறிஞர் அண்ணா*

   உலகில் சாகாவரம் பெற்ற பொருள்கள் புத்தகங்களே! – *கதே*

   இவை போன்ற பொன்மொழிகளை எழுதி வகுப்பறையில் படித்துக் காட்டுக.

   KC9M13

2. *சீர்காழி இரா. அரங்கநாதன் அவர்களின் பிறந்த நாளான ஆகஸ்ட் ஒன்பதாம் நாள், தேசிய நூலக நாளாகக் கொண்டாடப்படுவதன் காரணத்தை அறிக.*

3. *நூலகத்தில் கவிதை, கதை முதலிய நூல்களை நூலாசிரியர் வரிசையிலும் நூலின் அடையாளக் குறியீட்டு எண் அடிப்படையிலும் எவ்வாறு தேடுவது என்பதைத் தெரிந்துகொள்க.*

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 138 23/05/18 4:32 PM

இயல் ஐந்து

இடைச்சொல் – உரிச்சொல்

சுசீலா, அவளுடைய தோழி கமீலாவின் வீட்டுக்குப் போனாள். கமீலாவும் சுல்தானும் தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தனர். சுல்தானைவிடக் கமீலா இரண்டு ஆண்டுகள் பெரியவள். ஆனால் உருவத்தில் சுல்தான்தான் அண்ணனைப் போல இருப்பான். சுசீலாவைக் கண்டவுடன் கமீலா மகிழ்ச்சியடைந்தாள்.

மேற்கண்ட பகுதியில் இடைச் சொற்களை இனம் காண முடிகிறதா?

இன், கு, உடைய, உம், ஐ, விட, கள், ஆனால், தான், போல, உடன் போன்றவை இடைச் சொற்கள்.

பெயர்ச் சொற்கள், வினைச் சொற்கள் ஆகியவற்றைப்போல இடைச்சொற்கள்

தமிழில் மிகுதியாக இல்லை. ஆயினும், இடைச் சொற்களே மொழிப் பயன்பாட்டை முழுமையாக்குகின்றன.

இடைச் சொற்கள், பெயரையும், வினையையும் சார்ந்து இயங்கும் இயல்பை உடையன; தாமாகத் தனித்து இயங்கும் இயல்பை உடையன அல்ல என்கிறார் தொல்காப்பியர்.

இடைச்சொல் பலவகையாக அமையும்.

இடைச்சொற்களின் வகைகள்

வேற்றுமை உருபுகள்	ஐ, ஆல், கு, இன், அது, கண்
பன்மை விகுதிகள்	கள், மார்
திணை, பால் விகுதிகள்	ஏன், ஓம், ஆய், ஈர்(கள்), ஆன், ஆள், ஆர், ஆர்கள், அது, அ
கால இடைநிலைகள்	கிறு, கின்று,...
பெயரெச்ச, வினையெச்ச விகுதிகள்	அ, உ, இ, மல்,...
எதிர்மறை இடைநிலைகள்	ஆ, அல், இல்
தொழிற்பெயர் விகுதிகள்	தல், அம், மை
வியங்கோள் விகுதிகள்	க, இய
சாரியைகள்	அத்து, அற்று, அம்,...
உவம உருபுகள்	போல, விட, காட்டிலும், மாதிரி
இணைப்பிடைச் சொற்கள்	உம், அல்லது, இல்லையென்றால், ஆனால், ஓ, ஆகவே, ஆயினும், எனினும்,...

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 139 23/05/18 4:32 PM

இடைச்சொற்களின் வகைகள்

தத்தம் பொருள் உணர்த்தும் இடைச் சொற்கள்	உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம்
சொல்லுருபுகள்	மூலம், கொண்டு, இருந்து, பற்றி, வரை
வினா உருபுகள்	ஆ, ஓ

இவற்றுள் உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம் ஆகிய இடைச்சொற்கள் தற்காலத் தமிழில் அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன.

உம்

'உம்' என்னும் இடைச்சொல் எதிர்மறை, சிறப்பு, ஐயம், எச்சம், முற்று, அளவை, தெரிநிலை, ஆக்கம் என்னும் பொருள்களில் வரும்.

மழை பெய்தும் புழுக்கம் குறையவில்லை. (எதிர்மறை உம்மை)

பாடகர்களும் போற்றும் பாடகர். (உயர்வு சிறப்பு)

ஓ

ஓகார இடைச்சொல் ஒழியிசை, வினா, சிறப்பு (உயர்வு, இழிவு), எதிர்மறை, தெரிநிலை, கழிவு, பிரிநிலை, அசைநிலை ஆகிய எட்டுப் பொருளில் வரும் என்று நன்னூல் கூறுகிறது.

தற்காலத்தில் ஓகார இடைச்சொல் பிரிநிலைப் பொருளில் அதிகமாக வருகின்றது. அதைத் தவிர ஐயம், உறுதியாகக் கூறமுடியாமை, மிகை, இது அல்லது அது, இதுவும் இல்லை – அதுவும் இல்லை போன்ற பொருள்களிலும் வருகின்றன.

• இன்றைக்கு மழை பெய்யுமோ? (ஐயம்)

• பூங்கொடியோ மலர்க்கொடியோ பேசுங்கள். (இது அல்லது அது)

• பாலுவோ கண்ணனோ பேசாதீர்கள். (இதுவும் இல்லை – அதுவும் இல்லை)

ஏ

ஏகார இடைச்சொல் பிரிநிலை, வினா, எண், ஈற்றசை, தேற்றம், இசைநிறை ஆகிய ஆறு பொருள்களில் வரும் என்று நன்னூல் குறிப்பிடுகின்றது.

தற்காலத்தில் ஏகாரம் தேற்றப் பொருளில் (அழுத்தம்) மட்டுமே வருகிறது.

அண்ணல் காந்தி அன்றே சொன்னார்.

நடந்தே வந்தான்.

தான்

'தான்' என்னும் இடைச்சொல்லும் அழுத்தப் பொருளில்தான் வருகின்றது. சொற்றொடரில் எந்தச் சொல்லுடன் வருகிறதோ, அதனை முதன்மைப்படுத்துகின்றது. ஒரு சொற்றொடரில் ஒருமுறை மட்டுமே வருகிறது.

நிர்மலாதான் நேற்று விழாவில் பாடினாள்.

நிர்மலா நேற்றுதான் விழாவில் பாடினாள்.

நிர்மலா நேற்று விழாவில்தான் பாடினாள்.

நிர்மலா நேற்று விழாவில் பாடினாள்தான்.

வேறுபாட்டை உணருங்கள்:

நிர்மலாதான் பாடினாள். (தான் – இடைச்சொல்)

நிர்மலா தானும் பாடினாள். (தான் – தற்சுட்டுப் படர்க்கை ஒருமை இடப்பெயர் – பெயர்ச்சொல்)

மட்டும்

இச்சொல் வரையறைப் பொருள் தருகிறது. முடிந்தவரை, குறிப்பிட்ட நேரம் வரை என்னும் பொருள்களிலும் வருகிறது.

படிப்பு மட்டும் இருந்தால் போதும். (வரையறைப் பொருள்)

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 140 23/05/18 4:32 PM

ஆவது

இது பல பொருள்களில் வரும் இடைச்சொல்லாகும்.

• ஐந்து பேராவது வாருங்கள். (குறைந்த அளவு)

• அவனாவது, இவனாவது செய்து முடிக்கவேண்டும். (இது அல்லது அது)

முதலாவது, இரண்டாவது, ... (வரிசைப்படுத்தல்)

கூட

• என்னிடம் ஒரு காசுகூட இல்லை. (குறைந்தபட்சம்)

• தெருவில் ஒருவர்கூட நடமாடவில்லை. (முற்றுப் பொருள்)

• அவனுக்கு வரையக்கூடத் தெரியும். (எச்சம் தழுவிய கூற்று)

ஆ

வினாப் பொருளில் வரும் இடைச் சொல்லாகும்.

ஆ என்னும் இடைச்சொல், சொற்றொடரில் எந்தச் சொல்லுடன் இணைந்து வருகிறதோ, அச்சொல் வினாவாகிறது.

புகழேந்தி நேற்று உன்னுடன் பேசினானா?

புகழேந்தி நேற்று உன்னுடனா பேசினான்?

ஆம்

சொற்றொடரின் இறுதியில் வந்து இசைவு, சாத்தியம், பொருத்தம் ஆகிய பொருள்களிலும், தகவலாகவும், வதந்தியாகவும் செய்தியைக் கூறுவதற்கும் பயன்படுகிறது.

உள்ளே வரலாம். (இசைவு)

இனியன் தலைநகர் போகிறானாம். (தகவல்)/செய்தி

பறக்கும் தட்டு நேற்றுப் பறந்ததாம். (வதந்தி)/பொய்மொழி

தெரிந்து தெளிவோம்

அன்று என்பது ஒருமைக்கும்

அல்ல என்பது பன்மைக்கும் உரியன.

(எ.கா.) இது பழம் அன்று.

இவை பழங்கள் அல்ல.

எத்தனை என்பது எண்ணிக்கையைக் குறிக்கும்

எத்துணை என்பது அளவையும் காலத்தையும் குறிக்கும்

(எ.கா.) எத்தனை நூல்கள் வேண்டும்?

எத்துணை பெரிய மரம், எத்துணை ஆண்டு பழைமையானது.

உரிச்சொற்கள்

உரிச்சொற்கள் பெயர்களையும் வினைகளையும் சார்ந்து வந்து பொருள் உணர்த்துகின்றன. உரிச்சொல் இசை, குறிப்பு, பண்பு என்னும் பொருள்களுக்கு உரியதாய் வரும். உரிச்சொற்கள் ஒவ்வொன்றும் தனித்த பொருள் உடையவை. ஆனால் இவை தனித்து வழங்கப்படுவதில்லை. உரிச் சொற்கள் செய்யுளுக்கே உரியன என்று நன்னூலார் கூறுகிறார்.

கடி மலர் – மணம் மிக்க மலர் கடி நகர் – காவல் மிக்க நகர் கடி விடுதும் – விரைவாக விடுவோம் கடி நுனி – கூர்மையான நுனி	ஒரு சொல் பல பொருளுக்கு உரியது
உறு, தவ, நனி என்ற மூன்று உரிச்சொற்களும் மிகுதி என்னும் பொருளில் வருகின்றன. உறு பசி; தவச் சிறிது; நனி நன்று	பல சொல் ஒரு பொருள்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 141 23/05/18 4:32 PM

உரிச்சொற்கள், பெயரையும் வினையையும் சார்ந்து அவற்றிற்கு முன்னால் வந்து பொருள் உணர்த்துகின்றன. மேலும் அவை

1) ஒரு சொல் பல பொருள்களுக்கு உரியதாய் வருவதும் உண்டு

2) பல சொல் ஒரு பொருளுக்கு உரியதாய் வருவதும் உண்டு

மழ, குழ என்பவற்றிலிருந்து உருவானவை மழலை, குழந்தை போன்ற சொற்கள். உவப்பு (உவகை), பசப்பு (நிறம் மங்குதல்), பயப்பு (பயன்) போன்றவை அப்படியே பயன்படுகின்றன. செழுமை என்பது செழிப்பு, செழித்த, செழிக்கும் எனப் பெயராகவும், வினையாகவும் பயன்படுகிறது. விழுமம் என்பது விழுப்பம், விழுமுதல், விழுமிய எனப் பெயராகவும் வினையாகவும் பயன்படுகிறது. பிற உரிச் சொற்களும் அவ்வாறே தற்காலத்தில் பயன்படுகின்றன.

கற்பவை கற்றபின்...

1) பத்தியில் இடம்பெற்றுள்ள இடைச்சொற்களைக் கண்டறிந்து எழுதுக.

KCSE4D

அ) பெண்ணடிமை போகவேண்டும்; பெண், கல்வி பெறவேண்டும். பெண்கள் படித்தால்தான் தம் சொந்தக் காலில் நிற்கலாம். பெண், கல்வி கற்றால் வீடும் நாடும் முன்னேறும். சமுதாயத்தின் சரிபாதியான பெண்களுக்கும் எல்லா உரிமைகளும் உண்டு.

ஆ) நமது முன் சந்ததியார்களுக்கு இருந்ததைவிட, அதிகமான வசதிகள் நமக்கு உள்ளன. அவர்களின் காலம், அடவியில் ஆற்றோரத்தில் பர்ணசாலைக்குப் பக்கத்தில் ஆலமரத்தடியில் சிறுவர்கள் அமர்ந்திருக்க, குரு காலைக்கடன்களை முடித்துக்கொண்டு வந்து, பாடங்களைச் சொல்லித்தரும் முறை இருந்த காலம், ஏடும் எழுத்தாணியும் இருந்த காலம். இப்போதுள்ளது உலகை நமது வீட்டுக்கு அழைத்துவந்து காட்டக்கூடிய காலம். பாமர மக்கள் பாராளும் காலம். மனவளத்தை அதிகப்படுத்தும் வழிகள் முன்பு இருந்ததைவிட அதிகம் உள்ள காலம்.

2) உம், ஓ, ஏ, தான், மட்டும், ஆவது, கூட, ஆ, ஆம் ஆகிய இடைச்சொற்களைப் பயன்படுத்திச் சொற்றொடர்களை உருவாக்குக.

3) பொருத்தமான இடைச்சொற்களைப் பயன்படுத்துக.

அ) மணற்கேணி__ ப்போல் விளங்கும் நூல்__ உறுதுணை__ இருக்கிறது.

ஆ) பெண்கள்__ ப்படிக்க வைக்காத காலத்தில்__ பெண் இனம்__ பெருமை சேர்க்கும்படி__ நம் முத்துலட்சுமி அம்மையார் முதல் பெண் மருத்துவர்__ வந்தார்கள்.

இ) மக்கள்__ மனம்___ உலக அறிவுபுக வழிசெய்ய வேண்டும்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 142 23/05/18 4:32 PM

4) இணைத்து எழுதிப் பாருங்கள்.

அவன்	தான்	மனிதன்
இயற்கை	உம் ஏ ஆ	அழகு

உனக்கு	மட்டும் கூட ஆவது	தெரியுமா?
		தெரியும்

வீடு, நாடு	உம் ஓ	நமதே
காற்று, வெளிச்சம்		தேவை
அன்பு, அமைதி		வேண்டும்
வான்மதி, பானு		வாருங்கள்

5) பொருத்தமான உரிச்சொற்களை எழுதுக.

அ) _____ பெரும் பொதுக் கூட்டம் (கடி, மா)

ஆ) _____ விடுதும் (உறு, கடி)

இ) _____ நுதல் (வாள், தவ)

ஈ) _____ சிறந்தது (சால, மழ)

உ) _____ மனை (கடி, தட)

சிந்தனை வினா

1) "தான்" என்னும் இடைச்சொல்லை எப்படியெல்லாம் பயன்படுத்தலாம்?

2) அவர்களுக்குப் பரிசு தருவேன் – இத்தொடரில் "ஆ" என்னும் இடைச்சொல்லைச் சேர்த்து வினாக்களை அமைக்க.

3) செய்யுளில் உரிச்சொற்கள் எத்தகைய பொருள்களில் இடம்பெறுகின்றன?

4) தற்காலத் தமிழ்ப் பயன்பாட்டில் காணப்படுகின்ற உரிச்சொற்களை எழுதுக.

5) 'ஆ' என்னும் இடைச்சொல் எதிர்மறைப் பொருளில் எப்படி வரும் என்பதை எழுதுக.

6) இடைச் சொற்களைப் பயன்படுத்திக் கீழ்க்காணும் சொற்றொடர்களை மாற்றியமைத்துக் காண்க.

அ) வீட்டுக்குச் செல்லத்தான் இவ்வளவு பீடிகையா?

ஆ) இந்தச் சூழ்நிலை மாறியாக வேண்டும்.

இ) வானூர்தியைச் செலுத்துதல், உலகையும் கடலையும் அளத்தல் போன்ற எந்தச் செயலும் ஆண்,பெண் இருபாலருக்கும் பொதுவானவை.

ஈ) சமைப்பது தாழ்வென எண்ணலாமா?

உ) பூக்காமலே சில மரங்களில் காய்ப்பதுண்டு.

ஊ) வாளால் வெட்டினான்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 143 23/05/18 4:32 PM

பகுபத உறுப்பிலக்கணம்

பதம்(சொல்) இருவகைப் படும். அவை பகுபதம், பகாப்பதம் ஆகும். பிரிக்கக்கூடியதும், பிரித்தால் பொருள் தருவதுமான சொல் பகுபதம் எனப்படும். இது பெயர்ப் பகுபதம், வினைப் பகுபதம் என இரண்டு வகைப்படும்.

பகுபத உறுப்புகள் ஆறு வகைப்படும்.

பகுதி (முதனிலை)	சொல்லின் முதலில் நிற்கும்; பகாப் பதமாக அமையும்; வினைச்சொல்லில் ஏவலாகவும், பெயர்ச் சொல்லில் அறுவகைப் பெயராகவும் அமையும்.
விகுதி (இறுதிநிலை)	சொல்லின் இறுதியில் நின்று திணை, பால், எண், இடம் காட்டும்.
இடைநிலை	பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் நின்று காலம் காட்டும்.
சந்தி	பகுதியையும் பிற உறுப்புகளையும் இணைக்கும்; பெரும்பாலும் பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையில் வரும்.
சாரியை	பகுதி, விகுதி, இடைநிலைகளைச் சார்ந்து வரும்; பெரும்பாலும் இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையில் வரும்.
விகாரம்	தனி உறுப்பு அன்று; மேற்கண்ட பகுபத உறுப்புகளில் ஏற்படும் மாற்றம்.

பகுதி:

ஊரன் – ஊர், வரைந்தான் – வரை

நடிகன் – நடி, மடித்தார் – மடி

பார்த்தான் – பார், மகிழ்ந்தாள் – மகிழ்

விகுதி:

படித்தான்	ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி	அன், ஆன்
பாடுகிறாள்	ஆள் – பெண்பால் வினைமுற்று விகுதி	அள், ஆள்
பெற்றார்	ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி	அர், ஆர்
நீந்தியது	து – ஒன்றன்பால் வினைமுற்று விகுதி	து, று
ஓடின	அ – பலவின்பால் வினைமுற்று விகுதி	அ, ஆ
சிரிக்கிறேன்	ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி	என், ஏன்
உண்டோம்	ஓம் – தன்மைப் பன்மை வினைமுற்று விகுதி	அம், ஆம், எம், ஏம், ஓம்
செய்தாய்	ஆய் – முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி	ஐ, ஆய், இ
பாரீர்	ஈர் – முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதி	இர், ஈர்
அழகிய, பேசும்	அ, உம் – பெயரெச்ச விகுதிகள்	அ, உம்
வந்து, தேடி	உ, இ – வினையெச்ச விகுதிகள்	உ, இ
வளர்க	க – வியங்கோள் வினைமுற்று விகுதி	க, இய, இயர்
முளைத்தல்	தல் – தொழிற்பெயர் விகுதி	தல், அல், ஐ, கை, சி, பு...

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 144 23/05/18 4:32 PM

இடைநிலைகள்

வென்றார்	ற்-இறந்தகால இடைநிலை	த், ட், ற், இன்
உயர்கிறான்	கிறு – நிகழ்கால இடைநிலை	கிறு, கின்று, ஆநின்று
புகுவான், செய்கேன்	வ், க் – எதிர்கால இடைநிலைகள்	ப், வ், க்
பறிக்காதீர்	ஆ – எதிர்மறை இடைநிலை	இல், அல், ஆ
மகிழ்ச்சி, அறிஞன்	ச், ஞ் – பெயர் இடைநிலைகள்	ஞ், ந், வ், ச், த்

சந்தி

உறுத்தும்	த் - சந்தி	த், ப், க்
பொருந்திய	ய் – உடம்படுமெய் சந்தி	ய், வ்

சாரியை

நடந்தனன்	அன் – சாரியை	அன், ஆன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், தம், நம், நும், ஏ, அ, உ, ஐ, கு, ன்

எழுத்துப்பேறு

பகுபத உறுப்புகளுள் அடங்காமல் பகுதி, விகுதிக்கு நடுவில் காலத்தை உணர்த்தாமல் வரும் மெய்யெழுத்து எழுத்துப்பேறு ஆகும். பெரும்பாலும் 'த்' மட்டுமே வரும். சாரியை இடத்தில் 'த்' வந்தால் அது எழுத்துப்பேறு.

எடுத்துக்காட்டுகள்

வந்தனன்: வா(வ) + த் (ந்) + த் + அன் + அன்

வா – பகுதி ('வ' ஆனது விகாரம்)
த்(ந்) – சந்தி ('ந்' ஆனது விகாரம்)
த் – இறந்தகால இடைநிலை
அன் – சாரியை
அன் – ஆண்பால் வினைமுற்று விகுதி

செய்யாதே: செய் + ய் + ஆ + த் + ஏ

செய் – பகுதி
ய் – சந்தி
ஆ – எதிர்மறை இடைநிலை
த் – எழுத்துப்பேறு
ஏ – முன்னிலை ஒருமை ஏவல் வினைமுற்று விகுதி

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 145 23/05/18 4:32 PM

மதிப்பீடு

பலவுள் தெரிக.

1. பொருத்தமான விடையைத் தேர்க.

அ) சிறுபஞ்சமூலம்	–	1. காப்பிய இலக்கியம்
ஆ) குடும்ப விளக்கு	–	2. சங்க இலக்கியம்
இ) சீவகசிந்தாமணி	–	3. அற இலக்கியம்
ஈ) குறுந்தொகை	–	4. தற்கால இலக்கியம்.

(i) அ–3, ஆ– 4, இ –1, ஈ– 2 (ii) அ– 2, ஆ– 3, இ– 1, ஈ– 4

(iii) அ– 3, ஆ–1, இ– 4. ஈ –2 (iv) அ– 4, ஆ –1, இ – 2, ஈ– 3

2. மாறுபட்டுள்ள குழுவினைக் கண்டறிக.

அ) கலைக்கூடம் ஆ) கடி
திரையரங்கம் உறு
ஆடுகளம் கூர்
அருங்காட்சியகம் கழி

இ) வினவினான் ஈ) இன்
செப்பினான் கூட
உரைத்தான் கிறு
பகன்றான் அம்பு

3. கீழ்க்காண்பவற்றுள் உணர்ச்சித் தொடர் எது?

அ) சிறுபஞ்ச மூலத்தில் உள்ள பாடல்கள் பெரும்பாலும் மகடூஉ முன்னிலையில் அமைந்துள்ளன.

ஆ) இந்திய நூலகவியலின் தந்தையென அறியப்படுபவர் யார்?

இ) என்னண்ணே! நீங்கள் சொல்வதை நம்பவே முடியவில்லை!

ஈ) வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடத்தைப் புத்தகசாலைக்குத் தருக.

4. சரியான கூற்றினைத் தெரிவு செய்க.

அ) 'ஆ' என்பது எதிர்மறை இடைநிலை.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 146 23/05/18 4:32 PM

ஆ) வீட்டிற்கோர் புத்தகசாலை என்பது அண்ணாவின் மேடைப்பேச்சு.

இ) வில்லுப்பாட்டு ஓர் இலக்கிய வடிவம்.

1. ஆ, இ சரி; அ தவறு
2. அ, இ, சரி; ஆ தவறு
3. மூன்றும் சரி
4. மூன்றும் தவறு

5. பூவாது காய்க்கும், மலர்க்கை - அடிக்கோடிட்ட சொற்களுக்குரிய இலக்கணம் யாது?

அ) பெயரெச்சம், உவமைத்தொகை
ஆ) எதிர்மறைப் பெயரெச்சம், உருவகம்
இ) வினையெச்சம், உவமை
ஈ) எதிர்மறை வினையெச்சம், உவமைத்தொகை

குறுவினா

1. தலைவியின் பேச்சில் வெளிப்படுகின்ற பாடுபொருள் யாது?
2. மூவாது மூத்தவர், நூல் வல்லார்- இத்தொடர் உணர்த்தும் பொருளைக் குறிப்பிடுக.
3. நீங்கள் மிகவும் விரும்பிப் படித்த நூல்கள் யாவை?
4. சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?

சிறுவினா

1. சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக.
2. சமைப்பது தாழ்வா? இன்பம்
   சமைக்கின்றார் சமையல் செய்வார்.

   அ) இன்பம் சமைப்பவர் யார்?

   ஆ) பாவேந்தரின் கூற்றுப்படி சமைப்பது தாழ்வா?
3. விதைக்காமலே முளைக்கும் விதைகள் -இத்தொடரின்வழிச் சிறுபஞ்சமூலம் தெரிவிக்கும் கருத்துகளை விளக்குக.
4. இன்றைய பெண்கல்வி என்னும் தலைப்பில் வில்லுப்பாட்டு வடிவில் பாடல் எழுதுக.
5. மருத்துவர் முத்துலெட்சுமியின் சாதனைகளைக் குறிப்பிடுக.
6. நீலாம்பிகை அம்மையாரின் தமிழ்ப் பணி குறித்த சிறப்பம்சங்களை எழுதுக.

நெடுவினா

1. நீங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் குறித்த செய்திகளை விவரிக்க.
2. குடும்ப விளக்கு நூலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண்கல்விக்கான கருத்துகளை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு எழுதுக.
3. நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 147 23/05/18 4:32 PM

மொழியை ஆள்வோம்

ஒப்பிட்டுச் சுவைப்போம்.

பாப்பா பாட்டு	Child's Song
ஓடி விளையாடு பாப்பா, – நீ ஓய்ந்திருக்க லாகாது பாப்பா, கூடி விளையாடு பாப்பா, – ஒரு குழந்தையை வையாதே பாப்பா.	*Run about and play my sweet little Child* *And idle not sweet little child;* *In game and sport have many mates* *And revile not any one child.*
காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு மாலை முழுதும் விளையாட்டு – என்று வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா.	*Rise at dawn to learn your lesson,* *Then sing such airs that are soothing,* *To games devote the whole evening,* *Get habituated thus, oh child!*

மொழிபெயர்க்க.

Akbar said, "How many crows are there in this city?"

Without even a moment's thought, Birbal replied "There are fifty thousand five hundred and eighty nine crows, my lord".

"How can you be so sure?" asked Akbar.

Birbal said, "Make your men count, My lord. If you find more crows it means some have come to visit their relatives here. If you find less number of crows it means some have gone to visit their relatives elsewhere".

Akbar was pleased very much by Birbal's wit.

பிழை நீக்கி எழுதுக.

1. மதீனா சிறந்த இசை வல்லுநர் வேண்டும்.
2. நல்ல தமிழுக்கு எழுதுவோம்
3. பவளவிழிதான் பரிசு உரியவள்.
4. துன்பத்தால் பொறுத்துக்கொள்பவனே வெற்றி பெறுவான்.
5. குழலியும் பாடத் தெரியும்.

இடைச் சொற்களைக் கொண்டு தொடர்களை இணைக்க.

(எ.கா.) பெரும் மழை பெய்தது. வெள்ளம் கரை புரண்டு ஓடியது.

பெரும் மழை பெய்ததால் வெள்ளம் கரை புரண்டு ஓடியது.

1. அலுவலர் வந்தார்; அனைவரும் பதற்றம் அடைந்தனர்.
2. சுடர்க்கொடி பாடினாள்; மாலன் பாடினான்.
3. பழனிமலை பெரியது; இமயமலை மிகப் பெரியது.
4. கவலையற்ற எதிர்காலம்; கல்வியே நிகழ்காலம்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 148 23/05/18 4:32 PM

விளம்பரத்தைச் செய்தித்தாள் செய்தியாக மாற்றி அமைக்க.

புத்தகம் படிப்போம்! புதியன அறிவோம்!

புத்தகத் திருவிழா

நாள் – செப்டம்பர் 19 முதல் 28 வரை

இடம் – சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

நேரம் – காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை.

(முதல்நாள் காலை 9 மணிக்குத் தமிழகக் கல்வி அமைச்சர் தொடங்கி வைக்கிறார்.)

(நாள்தோறும் மாலை 6 மணிக்குப் புதிய புத்தகங்கள் வெளியீடும் சிறப்புப் பேச்சாளர்களின் உரையும் இடம்பெறும்.)

அனைவரும் வாரீர்! அறிவுத்திறம் பெறுவீர்!

நிகழ்வினைப் படித்து, வினாக்களுக்கு விடையளிக்க.

அண்ணாவின் வாழ்க்கையில்...

தமிழக முதலமைச்சராக அண்ணா பொறுப்பேற்ற காலகட்டத்தில், அரிசி வெளி மாநிலங்களுக்குச் செல்லக்கூடாது என்ற கட்டுப்பாடு இருந்தது. ஒரு நாள் அண்ணா விருத்தாசலம் கூட்டத்தை முடித்துவிட்டுத் திரும்பிக்கொண்டிருந்தார். வழியில் சோதனைச் சாவடியில் அவரது வண்டி நிறுத்தப்பட்டது. அங்கிருந்த வருவாய் அலுவலர், முதலமைச்சரின் மகிழுந்து என்று அறியாமலே திறந்துகாட்டச் செய்தார். மகிழுந்தின் பின்பக்கம் முழுவதும் மாலைகள், கைத்தறி ஆடைகள், வாழ்த்துமடல்கள் இருந்தன. அவற்றைப் பார்த்த பிறகுதான் அந்த அலுவலருக்கு வந்திருப்பது யார் என்பது புரிந்தது. உடனே அவர் அண்ணாவின் அருகில் சென்று," தெரியாமல் நடந்துவிட்டது பொறுத்துக் கொள்ளுங்கள் " என்றார். ஆனால், அண்ணா அவர் உதவியாளரிடம், " இந்த அலுவலரின் பெயரைக் குறித்துக்கொள்ளுங்கள் "என்றார். அந்த அலுவலர் தனக்கு ஏதோ நடந்து விடப்போகிறது என அச்சப்பட்டு அழாத குறையாகக் கெஞ்சினார். உடனே, அண்ணா, " நாங்கள் போடும் சட்டங்களைச் சரியான முறையில் நிறைவேற்றும் பொறுப்பு உங்களைப்போன்ற அலுவலரின் கையில்தான் இருக்கிறது. இன்று நேரில் உங்கள் செயலைப் பார்த்தேன். உங்களைப் போன்றவர்கள்தாம் உயர்பதவிக்கு வரவேண்டும் . அதற்காகத்தான் உங்கள் பெயரைக் கேட்டேன்" என்றார்.

1. மகிழுந்தில் வந்திருப்பது அண்ணா என்பதை வருவாய் அலுவலர் எப்படி அறிந்தார்?
2. அண்ணாவிடம் ஏன் வருவாய் அலுவலர் பொறுத்துக்கொள்ளச் சொன்னார்?
3. அண்ணா, வருவாய் அலுவலரின் செயலை எவ்வாறு பாராட்டினார்?
4. பத்தியில் இடம்பெறும் இடைச் சொற்களைக் கொண்டு இரு புதிய சொற்றொடர்களை உருவாக்குக.
5. நிகழ்வுக்குப் பொருத்தமான தலைப்பு இடுக.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 149 23/05/18 4:32 PM

மொழியோடு விளையாடு

சொற்களைப் பயன்படுத்தித் தொடர்களை உருவாக்குக

மாணவர்கள்	ஆசிரியர்	பாடவேளை	கரும்பலகை
புத்தகம்	எழுதுகோல்	அழிப்பான்	வழிபாட்டுக் கூட்டம்
அறை	கல்லூரி	உயர்நிலை	சீருடை
மடிக்கணினி			

எ. கா. வழிபாட்டுக் கூட்டத்தில் மாணவர்கள் சீருடையுடன் நின்றனர்.

அகராதியில் காண்க.

அரங்கு, ஒட்பம், கான், நசை, பொருநர்

படங்களை இணைத்தால் கிடைக்கும் நூல்களின் பெயர்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

(ஒரு கிராமத்து நதி, கிழவனும் கடலும், கருப்பு மலர்கள், சாக்ரட்டீஸின் சிவப்பு நூலகம், தண்ணீர்தண்ணீர்)

1. நா. காமராசனின் கவிதை நூல் ...

.....

2. திரைப்படமாக வெளிவந்த கோமல் சுவாமிநாதனின் நாடகநூல்.

.....

4. நோபல் பரிசு பெற்ற எர்னஸ்ட் ஹெமிங்வேவின் குறுநாவல்

.....

5. சிற்பியின் சாகித்திய அகாதெமி பரிசுபெற்ற கவிதை நூல்

1

.....

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 150 23/05/18 4:32 PM

6. எஸ். ராமகிருஷ்ணனின் சிறார் நாவல்.

.....

காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

.....

.....

.....

.....

.....

கடிதம் எழுதுக.

உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ்- தமிழ் -ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதிகள் பத்தினைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக.

செயல்திட்டம்

பெண்கல்வி வளர்ச்சிக்கு உழைத்தவர்கள் பற்றிய செய்திப் படத்தொகுப்பினை உருவாக்குக.

நிற்க அதற்குத் தக

எனக்குப் பிடித்தவை / என் பொறுப்புகள்

1. என்னை உயர்வாகப் பேசுவது எனக்குப் பிடிக்கும்.

   எவரையும் காயப்படுத்தாமல் நடந்துகொள்வது, குறைகூறாமல் பேசுவது என் பொறுப்பு.

2. எனக்குப் படம் வரைவது பிடிக்கும்.
   பள்ளிச்சுவர், வீட்டுச்சுவர், பொதுச்சுவர் ஆகியவற்றில் வரையாமல் எழுதாமல் இருப்பதோடு பிறரையும் அவ்வாறு செய்யவிடாமல் தடுப்பது என் பொறுப்பு.

கலைச்சொல் அறிவோம்

சமூக சீர்திருத்தவாதி – Social Reformer
தன்னார்வலர் – Volunteer
களர்நிலம் – Saline Soil
சொற்றொடர் – Sentence

அறிவை விரிவு செய்

ஓய்ந்திருக்கலாகாது – கல்விச் சிறுகதைகள் (தொகுப்பு: அரசி -ஆதிவள்ளியப்பன்)
முதல் ஆசிரியர் – சிங்கிஸ் ஐத்மாத்தவ்
கல்வியில் நாடகம் – பிரளயன்
மலாலா - கரும்பலகை யுத்தம்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 151 23/05/18 4:32 PM

இணையத்தில் காண்க.

http://www.tamilvu.org/courses/degree/d051/d0514/html/d05142l5.htm
http://tamilvu.org/courses/degree/a051/a0514/html/a051435.htm
http://www.annavinpadaippugal.info/sorpozhivugal/delhiyil_muthal_muzhakkam_1.htm
http://www.tamilvu.org/courses/degree/a021/a0213.pdf
http://www.tamilvu.org/courses/degree/a051/a0512/html/a0512315.htm

இணையச் செயல்பாடுகள்

Pongutamil

சிதறியதைச் சேகரிப்போமா!

படிகள்

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி pongutamil என்னும் செயலியைப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியைத் திறந்தவுடன் மேகங்களுக்கு மத்தியில் பூட்டுகள் கொடுக்கப்பட்டிருக்கும் . அதில் முதலாவதைத் தெரிவு செய்துகொள்ளவும்.
- திரையின் பின் மெலிதாய்த் தோன்றும் படத்தின் மேல் சிதறிக் கிடக்கும் படங்களை ஒன்று சேர்த்து உண்மையான வடிவத்தை உருவாக்குக.
- எடுத்துக்காட்டாகத் தமிழரின் நீர் மேலாண்மையை உணர்த்தும் கல்லணைப் படத்தை ஒன்று சேர்க்க .





செயல்பாட்டிற்கான உரலி

https://play.google.com/store/apps/details?id=com.EL4.PonguTamil

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 152 23/05/18 4:32 PM

இயல் ஆறு

தொழில் பல முனைதல்

கற்றல் நோக்கங்கள்

- தமிழரின் பண்டைய துறைமுகங்கள், வணிகச்சிறப்பு ஆகியவற்றின் இன்றியமையாமையை உணர்ந்து இன்றைய வணிகத்துடன் ஒப்பிடல்
- சங்ககால மதுரைநகரக் காட்சிகளை இலக்கியங்கள்வழி அறிதல்
- நாட்டுப்புறப் பாடலின் வடிவத்தை அறிந்து சந்தப் பாடல்களைப் படைத்தல்
- நிகழ்வுகளை எழுத்தில் வருணனையாக வெளிப்படுத்தும் திறன் பெறுதல்
- மொழிப் பயன்பாட்டில் ஆகுபெயர் எவ்விதம் வெளிப்படுத்தப்படுகிறது என்பதைக் கண்டறிதல்
- திருக்குறளின் எளிய வடிவத்தையும் அதன் பொருளையும் அறிந்து சுவைக்கும் திறன் பெறுதல்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 153 23/05/18 4:32 PM

இயல் ஆறு

வணிக வாயில்

KDB67N

நுழையும்முன்

துறைமுக நகரங்கள், யவனக் குதிரைகள் ஓடுகிற ஓசையாலும் உரோமானியர்கள் பொருள்களைப் பொற்காசுகள் கொடுத்து வாங்கும் ஒலியாலும் விளக்கொளியாலும் நிரம்பி, வெளிநாட்டினரும் உள்நாட்டினரும் இரவில் நடமாடும் தூங்காத நகரங்களாகத் திகழ்ந்தன. மார்க்கோபோலோ தமது பயணக் குறிப்பில் இந்த நகர அமைப்புகள், மாட மாளிகைகள் ஆகியன தம்மைக் கவர்ந்ததாக எழுதியுள்ளார். பொ. ஆ. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த இத்தாலி நாட்டின் பிளினி தம் குறிப்பில் எகிப்து அரசி கிளியோபாட்ரா கொற்கை முத்தை அணிந்ததாகப் பதிவு செய்துள்ளார். கொற்கை முத்தின் சிறப்பினை அர்த்தசாஸ்திரமும் குறிப்பிடுகிறது. அக்காலத்தில் வணிக நகரங்களாகப் புகழ் பெற்றிருந்த துறைமுகங்கள் தமிழகத்தின் வளத்தையும் நாகரிக முதிர்ச்சியையும் வெளிக்காட்டுபவை அன்றோ!

கப்பல்களும் படகுகளும் வந்து தங்கிச் செல்வதற்குரிய இடம் துறைமுகமாகும்; இப்பகுதி கடல்வழிப் போக்குவரத்து நடைபெறும் இடமாக உள்ளது. பண்டைத் தமிழர்கள் போர், வணிகம் போன்ற காரணங்களுக்காகவும் துறைமுகங்களைப் பயன்படுத்தினர். தமிழகத்தின் துறைமுகங்கள் ஆற்றின் கழிமுகங்களில் அமைந்திருந்தன.

அறிவியல் வளர்ச்சியடைந்த இந்நாளில் திசைகாட்டும் கருவிகள், செயற்கைக்கோள்கள் துணையோடு கடல்வழிப் பயணத்தைத் திறம்பட மேற்கொள்ளமுடிகிறது. உலகெங்கும் உருவாக்கப்படும் பொருள்களைக் குறைந்த பொருட்செலவில் உலகநாடுகள் முழுவதிலும் கொண்டு சேர்க்க இன்றும் தரைவழி, வான்வழிப் போக்குவரத்தைவிடக் கடல்வழிப் போக்குவரத்தே பெரிதும் துணைபுரிகின்றது.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 154 23/05/18 4:32 PM

வங்காள விரிகுடா, அரபிக்கடல், இந்தியப் பெருங்கடல் எனக் கடல்களுக்குப் பெயர் சூட்டப்படுவதற்கு முன்பே தமிழர்கள் அந்தக் கடல்களைக் கடந்து கிழக்கு நாடுகளுக்கும் மேற்கு நாடுகளுக்கும் வணிகம் செய்யப் பயணம் மேற்கொண்டனர். தமிழர்கள் கடல் கடந்து சென்றதைப் போலவே கிரேக்கர்களும் உரோமானியர்களும் சாவகத்தீவினரும் வணிகத்திற்காகத் தமிழகத்திற்கு வந்து சென்றனர்.

பண்டைக் காலத்தில் வடவேங்கடம்முதல் தென்குமரிவரையிலான பகுதி தமிழர் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. கொல்லந்துறை, எயிற்பட்டினம், அரிக்கமேடு, காவிரிப்பூம்பட்டினம், தொண்டி, மருங்கை, கொற்கை ஆகியன கிழக்குக்கரைப் பகுதியிலிருந்த புகழ்பெற்ற துறைமுகங்களாகும். மங்களூர், நறவு, தொண்டி, மாந்தை, முசிறி, வைக்கரை, விழிஞம் ஆகியன மேற்குக் கடற்கரைப் பகுதியில் புகழ்பெற்று விளங்கிய துறைமுகங்களாகும்.

முசிறி

தமிழ்நாட்டின் மேற்குக் கடற்கரைப் பகுதியில் சேரர்களின் ஆட்சி எல்லைக்குள் அமைந்த புகழ்பெற்ற துறைமுகம் முசிறி. இது மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து உருவான பேரியாறு கடலில் கலக்குமிடத்தில் இயற்கையாய் உருவான துறைமுகமாகும். அக்காலத்தில் சேரநாட்டுத் தலைநகரான வஞ்சி, பேரியாற்றின் கரையிலுள்ள முசிறித் துறைமுகப் பட்டினத்திற்கு அருகேயே அமைந்திருந்தது.

தெரியுமா?

மணிமேகலையில் காந்தவூசி பற்றிய செய்தி இருக்கிறது. பழங்காலத்தில் திசை அறிய காந்தவூசியைப் பயன்படுத்தினர் எனலாம்.

முசிறித் துறைமுகத்தில் மிளகு ஏற்றுமதி சிறப்புடன் நடைபெற்றது. யவனர் விரும்பி வாங்கியதால் மிளகிற்கு 'யவனப்பிரியா' என்ற பெயர் ஏற்பட்டது. யவனக் கப்பல்கள் பொன்னைத் தந்து மிளகை வாங்குவதற்காக முசிறிக்கு வந்தன. இதனை,

சுள்ளியம் பேர்யாற்று வெண்ணுரை கலங்க
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங் கெழு முசிறி
என்கிறது அகநானூறு (149)

அரேபியர் சேரநாட்டு மிளகைக் கொண்டுபோய்ச் செங்கடல் துறைமுகங்களிலும் எகிப்தின் நைல்நதி கடலில் கலக்கும் இடத்திலுள்ள அலெக்சாண்டிரியா துறைமுகப்பட்டினத்திலும் விற்றனர். முசிறித் துறைமுகப்பட்டினத்தில் அரேபியர் வணிகம் செய்த இடத்திற்குப் பந்தர் (கடைவீதி) என்று பெயர் இடப்பட்டிருந்தது. முசிறித் துறைமுகப் பந்தரில் முத்துகளும் விலையுயர்ந்த நகைகளும் விற்கப்பட்டன.

முசிறித் துறைமுகத்தில் பவளம், கண்ணாடி, செம்பு, தகரம், ஈயம் முதலிய பொருள்கள் யவனர்களால் இறக்குமதி செய்யப்பட்டன. கடல்வழி வணிகம் ஒப்பந்தங்களின் அடிப்படையிலும் மேற்கொள்ளப்பட்டது. எடுத்துக்காட்டாக, முசிறி – அலெக்சாண்டிரியா ஒப்பந்தம் என்பது முசிறியில் வாழ்ந்த தமிழ் வணிகன் ஒருவனுக்கும் எகிப்தின் நைல் நதிக்கரையிலுள்ள அலெக்சாண்டிரியா நகரில் வாழ்ந்த கிரேக்க வணிகன் ஒருவனுக்கும் பொ.ஆ.பி. 150 அளவில் ஏற்படுத்தப்பட்டதாகும்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 155 23/05/18 4:32 PM

"நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர்"
(பாடல் 55, அடி: 4)
"பந்தர்ப் பெயரிய பேரிசை மூதூர்"
(பாடல் 67, அடி: 2)
"பந்தர்ப் பயந்த பலர்புகழ் முத்தம்"
(பாடல் 74, அடி: 6)
– பதிற்றுப்பத்து

அவ்வணிக ஒப்பந்தப்படி, தமிழ் வணிகன் ஒருவன், கப்பலில் ஒருமுறை கொண்டுசென்ற வணிகப் பொருள்களின் பண மதிப்பீடு 2,94,84,000 கிராம் வெள்ளியின் எடைக்கு ஈடானது என்பது குறிப்பிடத்தக்கது. அன்று எகிப்து நாடு உரோமப் பேரரசின்கீழ் இருந்தது.

காவிரிப்பூம்பட்டினம்

சோழவள நாட்டில் காவிரியாறு கடலில் கலக்கின்ற இடத்தில் வடகரையின்மேல் காவிரிப்பூம்பட்டினம் என்னும் இயற்கைத் துறைமுகம் அமைந்திருந்தது. காவிரிப்பூம்பட்டினம் மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என இரண்டு கூறுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இரண்டு பிரிவுகளுக்கும் இடையில் நாளங்காடி இருந்தது. கடற்கரை ஓரமாகக் காவிரியாற்றின் கரைமேல் கலங்கரை விளக்கம் அமைந்திருந்தது.

காவிரியாற்றின் கழிமுகம் ஆழமாகவும் அகலமாகவும் பல கப்பல்கள் தங்குவதற்கு ஏற்றதாகவும் இருந்தது. கப்பல்கள் பாய்களைச் சுருட்டாமலும் பாரத்தைக் குறைக்காமலும் நேரே ஆற்றினுள் புகுந்து துறைமுகத்தை அடைந்தன.

புகார் நகரத்தின் அகன்ற பெரிய தெருக்களில் மேற்கண்ட பொருள்களோடு கங்கைக்கரையிலிருந்து வந்த பொருள்களும் காவிரிக்கரை வழங்கிய வளங்களும் ஈழத்து உணவுப் பொருள்களும் கடாரம் தந்த பொருள்களும் இன்னும் பல நாடுகளில் இருந்துவந்த பொருள்களும் கலந்து நிறைந்திருந்தன.

இக்காலத்தில் ஒரு துறைமுகத்தின் செயல்திறனைக் கணக்கிடுவதற்கு, கப்பல்கள் ஏற்றுமதி, இறக்குமதி வேலைகளை முடித்துவிட்டுச் செல்லும் நேரத்தைக் கணக்கில் எடுத்துக் கொள்கின்றனர். இதற்கென இன்று நமது துறைமுகங்களில் ஒருவழிப்பாதை ஒற்றைச் சாளரமுறை கொண்டுவரப்பட்டுள்ளது. இதுபோல் அக்காலத்திலேயே துறைமுகங்களுக்கு அருகில் ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்களைப் பாதுகாப்பாக வைக்க நல்ல அகன்ற கிடங்குகள் அமைக்கப்பட்டிருந்தன என்றும் பொருள்களுக்குச் சுங்கத் தீர்வைகள் அங்கேயே வசூலிக்கப்பட்டன என்றும் பட்டினப்பாலை தெரிவிக்கிறது.

"பல்வேறு நாடுகளிலிருந்து கடல்

தெரிந்து தெளிவோம்

இராமநாதபுரம் அழகன்குளத்தில் நிகழ்த்தப்பட்ட அகழாய்வில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பானை ஓடு கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதில் இடம்பெற்றுள்ள கீறல் கோட்டோவியம் வணிகக் கப்பலைக் குறிக்கிறது. சங்ககாலத் தமிழர்களின் துறைமுகமாகக் கருதப்படும் அழகன் குளத்திலிருந்து ரோம் நகரத்திற்குக் கடல் பயணம் மேற்கொண்ட கப்பலின் மாதிரியாக இது குறிப்பிடப்படுகிறது.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 156 23/05/18 4:32 PM

வழியாகக் கப்பல்கள் மூலம் வந்து இறங்கிய பொருள்களும், வெளிநாடுகளுக்குக் கப்பல்கள் மூலம் ஏற்றுமதி செய்யப்படுவதற்காக உள்நாட்டின் பலபகுதிகளில் இருந்தும் வந்துள்ள பொருள்களும் எண்ண முடியாத அளவுக்குக் குவிந்திருக்கும்; புகார் நகரத்தில், காவல் மிகுந்த சுங்கச்சாவடி இருக்கும் சாலையில், சுங்கத் தீர்வையைப் பெற்றுக்கொண்டு, சோழப் பேரரசின் இலச்சினையான புலிச்சின்னத்தை அடையாளமிட்டு வெளியே அனுப்புவதற்காகக் குவித்து வைக்கப்பட்டிருக்கும் பண்டங்கள் மலைபோல் தோற்றம் தரும்" என்கிறது பட்டினப்பாலை (அடிகள் 124–135).

பொ.ஆ.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் உரோமாபுரியிலிருந்து வந்த யவனர்களும் கிழக்கிலிருந்து வந்த சாவக நாட்டினரும் வட இந்தியரும் இங்கு வணிகம் செய்தார்கள். சோழ நாட்டு வணிகர் இந்தத் துறைமுகத்திலிருந்து புறப்பட்டுச் சாவக நாடு, காழகம், கங்கைத் துறைமுகம் முதலான இடங்களுக்குச் சென்று வணிகம் செய்தனர்.

காவிரிப்பூம்பட்டினத்தில் சோழ இளவரசர்கள் வாழ்ந்திருந்தனர். சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் காப்பியங்களின் தலைமை மாந்தர்களான கோவலன், கண்ணகி, மாதவி, மணிமேகலை ஆகியோர் இளவரசன் கிள்ளிவளவன் ஆட்சிக்காலத்தில் இப்பட்டினத்தில் வாழ்ந்திருந்தனர் என்று இலக்கியங்கள் கூறுகின்றன.

கொற்கை

தாமிரபரணி ஆறு கடலில் கலக்கும் இடத்தில் ஆற்றின் மேற்குக்கரையில் அமைந்த இயற்கைத் துறைமுகம் கொற்கை. பாண்டியர்களில், ஆளும் மன்னரை அடுத்து அரசாள வரும் பட்டத்து இளவரசர்கள் இத்துறைமுக நகரிலேயே தங்கி நிருவாகம் கற்றனர். பாண்டியன் நெடுஞ்செழியன் உயிர்துறந்தபின் கொற்கையில் இருந்த பட்டத்து இளவரசன் வெற்றிவேற் செழியன் மதுரை வந்து அரியணை ஏறினான் என்னும் செய்தியைச் சிலப்பதிகாரத்தின் நீர்ப்படைக் காதையிலுள்ள

கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன்
(அடி : 127)

மன்பதை காக்கும் முறைமுதல் கட்டிலின்
(அடி : 134)

மாலைத் திங்கள் வழியோன் ஏறினன்
(அடி: 138)

ஆகிய அடிகள் குறிப்பிடுகின்றன. பாண்டியர்களின் கப்பற்படைத் தளமாகவும் கொற்கை விளங்கியது.

கொற்கைக் குடாக்கடல் அக்காலத்தில் நிலத்தின் உள்ளே ஐந்து கல் தொலைவிற்கு ஊடுருவியிருந்தது. இங்கு முத்துச்சிப்பிகளும், சங்குகளும் உண்டாயின. செல்வர் ஏறிவரும் குதிரையின் குளம்புகளுக்குள் மாட்டிக்கொள்ளும் அளவிற்குக் கரையோரங்களில் பொருள்கள் குவிந்திருந்தன. இதனை அகநானூறு,

... திரை தந்த ஈர்ங்கதிர் முத்தம்
கவர்நடைப்புரவிக் கால்வடுத் தபுக்கும்
நற்றேர் வழுதி கொற்கை முன்துறை
(வெண்கண்ணனார் பாடல் 130)

என்று குறிப்பிடுகிறது. முத்துக் குளிப்பது மட்டுமன்றி வலம்புரிச்சங்கு எடுக்கவும்

வெளிநாடுகளில் இருந்து கடல்வழி வந்தவை	குதிரைகள்
உள்நாட்டில் இருந்து தரைவழியில் வந்தவை	கறி (மிளகு)
வடமலையில் இருந்து வந்தவை	மெருகிடப்பட்ட பொன், மணிக்கற்கள்
மேற்குமலையில் இருந்து வந்தவை	சந்தனம், ஆரம்
தென் கடலில் இருந்து கிடைத்தவை	முத்து
கீழ்க்கடலில் விளைந்தவை	பவளம்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 157 23/05/18 4:32 PM

தெரியுமா?

பொ.ஆ.பி. முதல் நூற்றாண்டில் ஹிப்பல்ஸ் என்னும் பெயர் கொண்ட கிரேக்க மாலுமி, பருவக்காற்றின் உதவியினால் முசிறித் துறைமுகத்துக்கு நேரே நடுக்கடல் வழியாக விரைவில் பயணம் செய்யும் புதிய வழியைக் கண்டுபிடித்தார். அது முதல், யவனக் கப்பல்கள் விரைவாகவும் அதிகமாகவும் சேரநாட்டு முசிறித் துறைமுகத்துக்கு வந்து சென்றன. அந்தப் பருவக்காற்றுக்கு யவனர், அதைக் கண்டுபிடித்தவர் பெயராகிய ஹிப்பல்ஸ் என்பதையே சூட்டினார்கள். ஹிப்பல்ஸ் பருவக்காற்று வழியில் யவனக் கடல் வணிகம் பெருகிற்று. பொ.ஆ.பி. முதல் நூற்றாண்டின் உரோமப் பேரரசை அரசாண்ட அகஸ்தஸ் சீஸர், யவனர் – தமிழர் வணிகத்தை விரிவுபடுத்தினார். உரோமபுரி அரசர்களின் உருவ முத்திரை இடப்பட்ட பழைய நாணயப் புதையல்கள் தமிழ்நாட்டில் சில இடங்களில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

அங்குள்ள ஆடவர் கடலில் மூழ்குவர் என்னும் செய்தியை, 'வலம்புரி மூழ்கிய வான்திமில் பரதவர்' என அகநானூற்றின் 350ஆம் பாடல் சுட்டுகிறது.

தற்காலத்தில் கொற்கைப்பகுதியில் நடந்த அகழாய்வின்போது கிடைத்த பெருங்கற்காலத்தைச் சார்ந்த முதுமக்கள் தாழிகள், இப்பகுதியின் தொன்மைக்கு மேலும் சான்றுகளாகின்றன. சங்ககாலம்முதல் பிற்காலப் பாண்டியர் காலம்வரை பாண்டிய நாட்டு முத்துகளை உரோம் நகரத்தினர் விரும்பி வாங்கியுள்ளனர். கொற்கையை ஆண்ட பாண்டிய மன்னர்கள் உரோம் நாட்டின் அகஸ்டஸ் மன்னனின் அரசவைக்கு முத்துகளைப் பரிசாக அளித்தார்கள் என்று வரலாற்று அறிஞர் ஸ்டிராபோ குறிப்பிடுகிறார்.

பாண்டிய மன்னர்களின் குதிரைப்படைகளுக்காக ஆண்டுதோறும் கொற்கைத் துறைமுகத்தில் ஆயிரக்கணக்கான பாய்மரக் கப்பல்களில் 16,000 அரேபியக் குதிரைகள் வந்து இறங்கின என்கிற செய்தியையும் வரலாற்று ஆசிரியர்கள் பதிவு செய்துள்ளனர்.

கொற்கைப் பட்டினத்தில் பாண்டிய நாட்டு நாணயங்களை அச்சிடுவதற்கான பட்டறைகள் நிறைந்த ஒரு தெரு இருந்திருக்கிறது. அந்தத் தெருவிற்கு அஃகசாலை எனப் பெயரிடப்பட்டிருந்தது. பாண்டியர்கள் வெளியிட்ட மீன்முத்திரை பதித்த வெள்ளி நாணயங்கள் இங்குக் கிடைத்துள்ளன.

யாதும் ஊரே யாவரும் கேளிர் என உலக மாந்தரின் உறவை விரும்பியவர்கள் தமிழர்கள். சேர, சோழ, பாண்டியர் ஆட்சியின்கீழ் இருந்த கிழக்குக்கரை, மேற்குக்கரைத் துறைமுகங்கள் ஒவ்வொன்றும் பல்வேறு காலத்தில் வெவ்வேறு வகைகளில் சிறந்து விளங்கின. தமிழர்கள் கடல் வணிகத்தின்மூலம் ஆழிசூழ் நிலவுலகை மட்டுமன்றி ஆழியையும் தம் ஆளுகையில் பல நூற்றாண்டுகளாக வைத்திருந்தார்கள் என்பதற்கு இத்துறைமுகங்கள் சான்று பகர்கின்றன.

கற்பவை கற்றபின்...

1. உங்கள் வாழிடத்தின் அருகிலுள்ள துறைமுகம் குறித்த செய்திகளைப் படங்களுடன் திரட்டுக.

2. பண்டமாற்று முறைக்கும் தற்போதுள்ள பண வணிகத்திற்கும் இடையே உள்ள வேறுபாடுகளைக் கலந்துரையாடிப் பதிவு செய்க.

KEHXRZ

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 158 23/05/18 4:32 PM

கவிதைப் பேழை

இயல் ஆறு

நான்மாடக் கூடல்

நுழையும்முன்

தமிழகத்தின் தொன்மையான நகரம் மதுரை. இரண்டாயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து மக்கள் வாழ்ந்து வரும் நகரங்களுள் இதுவும் ஒன்று. பாண்டிய மன்னர்களின் தலைமையிடமாகவும் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த இடமாகவும் இந்நகரம் விளங்குகிறது. கௌடில்யர் (பொ.ஆ.மு. 370), கிரேக்க தூதர் மெகஸ்தனிஸ் (பொ.ஆ.மு 350) போன்ற வெளிநாட்டுப் பயணிகளாலும் குறிப்பிடப்பட்டுள்ள வரலாற்றுச் சிறப்புமிக்கது நான்மாடக்கூடலாம் மதுரை. செவ்விலக்கியத்தின் தலைநகராகத் திகழும் மதுரையின் பெருமையைக் கூறுகிறது இந்தச் சிந்துவகைப் பாடல்.

KERTTH

சந்தம்

தன்னன்ன னாதினம் தன்னானே– தனத்
தன்னன்ன னாதினம் தன்னானே!

பாடல்

பாவலர் பாடிய வையைநதி –தமிழ்ப்
பாண்டியர் செங்கோல் நின்னபதி!
ஓவிய வீதிகள் சூழ்ந்திருக்கும் – ஊரில்
மல்லிகைப் பூமணம் வாழ்ந்திருக்கும்!

காவியம் எழுந்த தென்மதுர – விழாக்
காணுமே அழகர் பொன்குதிர!
ஆவலாய் இருக்கு சுத்திவர– இங்கு
ஆளும் தமிழுக்கு என்னதர?

நாயக்கர் மகாலின் தூணழகு– பொன்
தாமரைக் குளமோ பேரழகு!
தூங்கா நகரம் முழிச்சிருக்கும் – அதுல
தொண்ணூறு வியாபாரம் செழிச்சிருக்கும்!

பாரதி போதிச்ச பாடசாலை – திருப்
பரங்குன்ற முருகன் நின்னசோலை!
கோரிப் பாளையத்தில் பள்ளிவாசல் – உயர்
கோபுர மீனாட்சி மேகஊஞ்சல்!

ஆனமலை நல்ல நாகமலை – சுத்தி
அமைஞ்ச பசுமலை சமணமலை!
நாலுமலை கொண்ட பெருநகரம் – இதுக்கு
நான்மாடக் கூடல்னு நல்லபேராம்!

சீரான வண்டியூர் தெப்பக்குளம் – மிகச்
சிறப்பான பண்பாட்டுத் தலைநகரம்!
ஏறுதழுவுதல் காளைகளால் – தோள்
ஏறுமே கம்பீரம் மாலைகளால்!

எல்லா இனமும் மதமும்உண்டு –இங்கு
இறையருள் ஆலயம் ஏகமுண்டு!
பல்லாயிரம் ஆண்டு வரலாறு – இதைப்
பாடாத நாவில்லை பண் பாடு!

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 159 23/05/18 4:32 PM

இலக்கணக் குறிப்பு

செங்கோல், பேரழகு – பண்புத்தொகைகள்

எழுந்த – பெயரெச்சம்

பாடாத – எதிர்மறைப் பெயரெச்சம்

பாடு – ஏவல் வினைமுற்று

பகுபத உறுப்பிலக்கணம்

வாழ்ந்திருக்கும் – வாழ்ந்திரு + க் + க் + உம்

வாழ்ந்திரு – பகுதி

க் – சந்தி

க் – எதிர்கால இடைநிலை

உம் – வினைமுற்று விகுதி

நூல் வெளி

சிந்து என்பது ஓசைநயத்துடன் பாடக்கூடிய பாவகை. நாட்டுப்புறப் பாடல் அமைப்பிலிருந்து தோன்றிய இவ்வடிவம் சிலப்பதிகாரக் காலத்திலிருந்து வழக்கில் இருக்கிறது. சிந்துவகைப் பாடல்களை ஆராய்ந்தால், அவை சந்தமும் இயைபுத் தொடையும் அமைந்த கண்ணிகளைக் கொண்டவை என்பதை அறிய முடிகிறது. இதே காலத்தில் கும்மிப்பாடல்களும் காவடிச்சிந்து, வழிநடைச்சிந்து, நொண்டிச்சிந்து போன்ற சந்தப்பாடல்களும் ஆனந்தக்களிப்பு, தெம்மாங்கு (தென்பாங்கு) முதலிய நாட்டுப்பாடல் வடிவங்களும் புதிய பாவடிவங்களாகத் தோன்றியுள்ளன. பாடப் பகுதியான மதுரை பற்றிய சிந்துப் பாடல் ஆசிரியர் குழுவால் இயற்றப்பட்டது.

தெரிந்து தெளிவோம்

ஓரெதுகை பெற்ற இரண்டு அடிகள் அளவொத்து வருவது சிந்துப் பாவகையாகும்.

பாரதியார் சிந்து வகையினை அதிகமாகக் கையாண்டிருக்கிறார். அவர் சிந்துக்குத் தந்தை என்று போற்றப்படுகிறார்.

சிந்து என்பது இசைத்தமிழ்ப் பாகுபாடுகளில் ஒன்று. பல்லவி (எடுப்பு), அனுபல்லவி (தொடுப்பு) இன்றிச் சரணங்களுக்குரிய (முடிப்பு) கண்ணிகளுடன் உடைய பாக்கள் சிலவகைச் சிந்துகளில் காணப்படுகின்றன.

சித்தர் பாடல்கள் பல சிந்துவகையில் அமைந்திருப்பதை நாம் காணலாம்.

எ.கா. கடுவெளிச் சித்தரின் 'பாபம் செய்யாதிருமனமே' என்னும் பாடல்.

கற்பவை கற்றபின்...

1. *அண்ணாமலையாரின் காவடிச்சிந்துப் பாடல்கள் சிலவற்றைத் தொகுத்து வகுப்பறையில் பாடுக.*
2. *பாரதியும் பாரதிதாசனும் பட்டுக்கோட்டையாரும் பாடிய சிந்துப் பாடல்களைத் தொகுத்துப் பாடல்தொகுப்பு ஒன்றை உருவாக்குக.*
3. *உங்கள் ஊர்ப்பெருமையைக் கூறும் வகையில் ஒரு சந்தப்பாடலை எழுதிப் பாடுக.*

KF1PVA

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 160 23/05/18 4:32 PM

இயல் ஆறு

கவிதைப் பேழை

மதுரைக்காஞ்சி



மதுரையைச் சிறப்பித்துப் பாடியுள்ள நூல்களுள் பதினெண் மேற்கணக்கின், மதுரைக்காஞ்சி முதன்மையானது. இந்நூலில் மதுரை மாநகர் மக்களின் வாழ்விடம், கோட்டை கொத்தளம், அந்நகரில் நிகழும் திருவிழாக்கள், பலவகைப் பள்ளிகள், நாற்பெருங்குழு, அந்தி வணிகம் ஆகிய காட்சிகள் கவித்துவமாய் விரிந்துள்ளன. காலை தொடங்கி மறுநாள் விடியல்வரையில் நகரத்தைச் சுற்றிவந்து கண்ணுற்றதை முறைப்படுத்திக் கூறுவது போன்ற வருணனைப் பாடல் இது.

மதுரை மாநகர்

மண்உற ஆழ்ந்த மணிநீர்க் கிடங்கின்
விண்உற ஓங்கிய பல்படைப் புரிசை
தொல்வலி நிலைஇய, அணங்குடை நெடுநிலை
நெய்படக் கரிந்த திண்போர்க் கதவின்
மழைஆடும் மலையின் நிவந்த மாடமொடு
வையை அன்ன வழக்குடை வாயில்
வகைபெற எழுந்து வானம் மூழ்கி
சில்காற்று இசைக்கும் பல்புழை நல்இல்
ஆறு கிடந்தன்ன அகல்நெடுந் தெருவில்
பல்வேறு குழாஅத்து இசைஎழுந்து ஒலிப்ப
மாகால் எடுத்த முந்நீர் போல
முழங்கிசை நன்பணை அறைவனர் நுவல
கயம் குடைந்தன்ன இயம்தொட்டு இமிழிசை
மகிழ்ந்தோர் ஆடும் கலிகொள் சும்மை
ஓவுக் கண்டன்ன இரு பெரு நியமத்து

(அடிகள் 351–365)

– மாங்குடி மருதனார்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 161 23/05/18 4:32 PM

மண்வரை ஆழ்ந்த தெளிந்த அகழி,
விண்ணை முட்டும் கற்படை மதில்கள்,
தொன்மை உடைய வலிமை மிக்க
தெய்வத் தன்மை பொருந்திய நெடுவாசல்,
பூசிய நெய்யால் கறுத்த கதவுகள்,
முகில்கள் உலவும் மலையொத்த மாடம்,
வற்றாத வையைபோல் மக்கள் செல்லும் வாயில்,
மாடம் கூடம் மண்டபம் எனப்பல
வகைபெற எழுந்து வானம் மூழ்கி
தென்றல் வீசும் சாளர இல்லம்,
ஆற்றைப் போன்ற அகல்நெடும் தெருவில்
பலமொழி பேசுவோர் எழுப்பும் பேச்சொலி,
பெருங்காற்று புகுந்த கடலொலி போல
விழாவின் நிகழ்வுகள் அறையும் முரசு,
நீர்குடைந்ததுபோல் கருவிகளின் இன்னிசை,
கேட்டோர் ஆடும் ஆரவார ஓசை,
ஓவியம் போன்ற இருபெரும் கடைத் தெருக்கள்.

பாடலின் பொருள்

மதுரை மாநகரில் ஆழமான தெளிந்த நீரையுடைய அகழி உள்ளது. பல கற்களைக் கொண்டு கட்டப்பட்ட மதில் வானளவு உயர்ந்துள்ளது. பழைமையானதும் வலிமை மிக்கதும் தெய்வத்தன்மை பொருந்தியதுமாகிய வாயில் உள்ளது. அவ்வாயில் நெய்பூசியதால் கருமையடைந்த வலிமையான கதவுகளை உடையது. மேகங்கள் உலாவும் மலைபோல் மாளிகைகள் உயர்ந்து உள்ளன. இடைவிடாது ஓடுகின்ற வையை ஆற்றைப்போல மக்கள் எப்போதும் வாயில்கள்வழிச் செல்கின்றனர்.

மண்டபம், கூடம், அடுக்களை எனப் பல்வேறு அங்கங்களைக்கொண்டு வான்வரை ஓங்கிய தென்றல் காற்று இசைக்கும் பல சாளரங்களையுடைய நல்ல இல்லங்கள் உள்ளன. ஆறு போன்ற அகலமான நீண்ட தெருக்களில் பொருள்களை வாங்க வந்த மக்கள் பேசும் பல்வேறு மொழிகள் ஒலிக்கின்றன. விழா பற்றிய முரசறைவோரின் முழக்கம் பெருங்காற்று புகுந்த கடலொலிபோல் ஒலிக்கிறது. இசைக்கருவிகளை இயக்குவதால் உண்டாகும் இசை, நீர்நிலைகளைக் கையால் குடைந்து விளையாடும் தன்மைபோல எழுகிறது. அதனைக் கேட்ட மக்கள் தெருக்களில் ஆரவாரத்தோடு ஆடுகின்றனர். பெரிய தெருக்களில் இருக்கும் நாளங்காடியும் அல்லங்காடியும் ஓவியங்கள்போலக் காட்சியளிக்கின்றன.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 162 23/05/18 4:32 PM

தெரியுமா?

"பொறிமயிர் வாரணம் ...
கூட்டுறை வயமாப் புலியொடு குழும" (மதுரைக்காஞ்சி 673 – 677 அடிகள்) என்ற அடிகளின் மூலமாக மதுரையில் வனவிலங்குச் சரணாலயம் இருந்த செய்தியை மதுரைக் காஞ்சியின் மூலம் அறியலாம்.

பத்துப்பாட்டு ஆராய்ச்சி – மா. இராசமாணிக்கனார்

சொல்லும் பொருளும்

புரிசை – மதில்; அணங்கு – தெய்வம்; சில்காற்று – தென்றல்; புழை – சாளரம்; மாகால் – பெருங்காற்று; முந்நீர் – கடல்; பணை – முரசு; கயம் – நீர்நிலை; ஓவு – ஓவியம்; நியமம் – அங்காடி.

இலக்கணக் குறிப்பு

ஓங்கிய – பெயரெச்சம்; நிலைஇய – சொல்லிசை அளபெடை; குழாஅத்து – செய்யுளிசை அளபெடை; வாயில் – இலக்கணப் போலி.

மா கால் – உரிச்சொல் தொடர்; முழங்கிசை, இமிழிசை – வினைத்தொகைகள்.

நெடுநிலை, முந்நீர் – பண்புத் தொகைகள்; மகிழ்ந்தோர் – வினையாலணையும் பெயர்.

பகுபத உறுப்பிலக்கணம்

ஆழ்ந்த – ஆழ் + த்(ந்) + த் + அ

ஆழ் – பகுதி; த் – சந்தி (ந் ஆனது விகாரம்);

த் – இறந்தகால இடைநிலை;
அ – பெயரெச்ச விகுதி.

ஓங்கிய – ஓங்கு + இ(ன்) + ய் + அ

ஓங்கு – பகுதி;
இ(ன்) – இறந்தகால இடைநிலை

ய் – உடம்படுமெய் அ – பெயரெச்ச விகுதி.

மகிழ்ந்தோர் – மகிழ் + த்(ந்) + த் + ஓர்

மகிழ் – பகுதி;

த் – சந்தி (ந் ஆனது விகாரம்);

த் – இறந்தகால இடைநிலை;

ஓர் – பலர்பால் வினைமுற்று விகுதி

நூல் வெளி

பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று மதுரைக்காஞ்சி. காஞ்சி என்றால் நிலையாமை என்பது பொருள். மதுரையின் சிறப்புகளைப் பாடுவதாலும் நிலையாமையைப் பற்றிக் கூறுவதாலும் மதுரைக்காஞ்சி எனப்பட்டது. இந்நூல் 782 அடிகளைக் கொண்டது. அவற்றுள் 354 அடிகள் மதுரையைப் பற்றி மட்டும் சிறப்பித்துக் கூறுகின்றன. இதைப் 'பெருகுவள மதுரைக்காஞ்சி' என்பர். இதன் பாட்டுடைத் தலைவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்.

மதுரைக்காஞ்சியைப் பாடியவர் மாங்குடி மருதனார். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள மாங்குடி என்னும் ஊரில் பிறந்தவர். எட்டுத்தொகையில் பதின்மூன்று பாடல்களைப் பாடியுள்ளார்.

கற்பவை கற்றபின்...

1. *உங்கள் ஊரின் பெயர்க் காரணத்தை எழுதி வகுப்பறையில் கலந்துரையாடுக.*
2. *தமிழ்த்தாயின் ஆணிவேர் துளிர்த்த இடம் மதுரை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் மேற்பட்ட வரலாற்றைக் கொண்ட உலகின் தொன்மை நகரங்களில் ஒன்று மதுரை. அந்நகரத்தில் இயலும் இசையும் நாடகமும் பொங்கிப் பெருகின – இத்தொடர்களுக்கு வலிமை சேர்க்கும் வகையில் கருத்துகளைத் திரட்டி ஐந்து மணித்துளிகள் பேசுக.*

KFJGYK

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 163 23/05/18 4:32 PM

விரிவானம்

இயல் ஆறு

சந்தை

KFTD18

நுழையும்முன்

வண்டிப் பட்டைகளின் தொடர்ந்த தாளக்கட்டோடு, இழுத்துச் செல்கிற மாடுகளின் கழுத்துமணி ஓசையோடு சந்தைக்குப் பொருள் கொண்டுபோவதும் பொருள் வாங்கிவருவதுமான மகிழ்ச்சி பெருநகரங்களில் தொலைந்துவிட்டது. இருப்பினும், இன்றும் சில இடங்களில் சந்தை மரபு இருந்துகொண்டுதான் இருக்கிறது. பல்பொருள் அங்காடிகளின் வருகை, வணிகருக்கும் மக்களுக்குமான உறவைக் குறைத்து வருகிறது. சந்தையில் வணிகம் மட்டுமல்லாமல் வாங்குபவரின் மனநிறைவும் பேணப்பட்டது. தலைமுறை தலைமுறையாகப் பொருள்களை விற்பவர் – வாங்குபவர் உறவு வளர்த்த சந்தை வணிகம் அறியப்படவேண்டிய ஒன்று.

பூஞ்சோலை கிராமத்திலிருந்து புதுச்சேரியில் உள்ள தம்முடைய மகள் வீட்டிற்கு வந்திருக்கிறார் பெரியவர் தணிகாசலம். இவர்தம் ஊரில் மரபுவழி வேளாண்மை செய்பவர். ஊராட்சித் தலைவராகவும் தொண்டாற்றிய அனுபவம் மிக்கவர். ஒன்பதாம் வகுப்பில் படிக்கும் பெயரன் மூர்த்தியும் நான்காம் வகுப்பில் படிக்கும் பெயர்த்தி கீர்த்தனாவும் அவருடன் நடத்திய உரையாடலின் சிறு பகுதி.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 164 23/05/18 4:32 PM

கீர்த்தனா: தாத்தா! எங்க ஊர்ல புதுசா 'மால்' திறந்திருக்காங்க, வர்றீங்களா போய்ப் பார்த்துட்டு வரலாம்?

தாத்தா: 'மால்'னா, என்ன கண்ணு அர்த்தம்?

மூர்த்தி: ஒரே இடத்துல எல்லாக் கடைகளும் இருக்கும் தாத்தா. குண்டூசியிலிருந்து கணினி வரைக்கும் வாங்கலாம். பல்லங்காடியகம்னு சொல்லலாம்.

தாத்தா: பழங்காலத் தமிழ் இலக்கியத்தில் 'நாளங்காடி', 'அல்லங்காடி' என்பார்களே அது மாதிரியா?

மூர்த்தி: நாளங்காடி, அல்லங்காடியா? ஒன்னும் புரியலியே?

தாத்தா: பகலில் செயல்படும் கடைவீதிகளை 'நாளங்காடி' என்றும் இரவில் செயல்படும் கடைவீதிகளை 'அல்லங்காடி' என்றும் சொல்வாங்க. நாள் என்றால் பகல்; அல் என்றால் இரவு.

மூர்த்தி: நீங்க கடைவீதியைப் பத்தி சொல்றீங்க. அது இல்ல தாத்தா இது. இங்க ஒரே கட்டடத்துல கடைகள், திரைப்பட அரங்கு, உணவகம், கேளிக்கை அரங்குகள்-ன்னு எல்லாமே இருக்கும் தாத்தா.

கீர்த்தனா: தாத்தா, அவன் ஏதாவது பேசிகிட்டே இருப்பான். நீங்க கிளம்புங்க போயிட்டு வரலாம்.

தாத்தா: சரி கண்ணு. நீதான் கிளம்பணும். நான் தயாராகத்தான் இருக்கேன். எங்க காலத்துச் 'சந்தை' தான் இப்ப வளர்ந்து, நீங்க சொல்ற 'மால்' ஆயிடுச்சா மூர்த்தி?

மூர்த்தி: சந்தையா? அது எப்படி இருக்கும்? நான் மேல்நிலை வகுப்பில் வணிகவியல் எடுத்துப் படிக்கலாம்னு இருக்கேன். அதனால அதைப்பற்றித் தெளிவாச் சொல்லுங்க தாத்தா.

தாத்தா: மனுசங்க நாடோடியா வேட்டையாடி வாழ்ந்த காலத்துல அவங்களுக்குக் கிடைச்ச உணவை அவங்களுக்குள்ளாவே பகிர்ந்துகிட்டாங்க. அதனால் அந்தக் காலத்துல பொதுச் சந்தைன்னு ஒன்னு தேவைப்படலை. பின்னாடி காலம் மாறி உற்பத்திப்பெருக்கம் ஏற்பட்டபோது தமிழ்நாட்டின் நால்வகை நிலங்களில் வாழ்ந்த மக்களோட தேவை, பயன்பாடு, உற்பத்தி ஆகியவை பெருகின. ஒன்றைக் கொடுத்து இன்னொன்று வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. விற்று வாங்குவதும், வாங்கி விற்பதுமான பண்டமாற்று முறை உண்டாச்சு.

கீர்த்தனா: தாத்தா கிளம்புங்க. இங்க இருந்து பக்கம்தான் நடந்தேகூட போயிடலாம்.

மூர்த்தி: எதுக்கு கீர்த்தனா தாத்தாவ நச்சரிக்கிற? தாத்தா சந்தையைப் பற்றிச் சொல்லி முடிக்கட்டும், அப்புறம் போகலாம்.

தாத்தா: பரவாயில்ல மூர்த்தி, நடந்துகிட்டே சொல்றேன் வா.

(மூவரும் தெருவில் இறங்கி நடந்து செல்கின்றனர்.)

மூர்த்தி : பண்டமாற்றுமுறை என்றால் காசு பணம் இல்லாம செய்கிற சிறு வணிகம் தானே. அது எப்படி தாத்தா சந்தை முறையா மாறிச்சு?

தாத்தா: கிராமத்து மக்கள் தங்களோட நிலத்தில் விளையும் காய்கறி, கீரை, தானியம் போன்ற பொருள்களை விற்கவும் தேவையான மாற்றுப் பொருள்களை வாங்கவும் விரும்பி முச்சந்தி, நாற்சந்தின்னு மக்கள் கூடும் இடங்களில் கடை விரிச்சாங்க. இதுதான் சந்தைங்கிற பொது வணிக இடமாகப் பின்னால் மாறியது.

கீர்த்தனா: தாத்தா! அங்க பாருங்க எவ்வளவு பெரிய விளம்பரம் வச்சிருக்காங்க.

தாத்தா: இப்பல்லாம் விளம்பரம் இல்லன்னா வியாபாரமே இல்லன்னு ஆயிடுச்சு. ஆளுக்கு ஒப்பனை செய்தது பத்தாதுன்னு இப்ப ஆப்பிளுக்கே ஒப்பனை செய்கிறார்கள். பிரபலங்களை வைத்து விளம்பரம் கொடுத்துச் செய்வதுதான் கல்லா

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 165 23/05/18 4:32 PM

கட்டும் தந்திரம்னு ஆயிடுச்சு! ஆனா, சமூகம் சார்ந்து உண்டான கிராமச்சந்தையில் அப்படி இல்ல. கலப்படம் இல்லாத நேர்மைதான் கிராமச்சந்தையோட அடிப்படை. ஒரு குறிப்பிட்ட ஊரை மையப்படுத்தி நூற்றுக்கணக்கான கிராம மக்கள் இப்படி நேர்மையா தங்களோட பொருள்களைப் பகிர்ந்துக்கிட்டாங்க.

மூர்த்தி: முதல்ல 'சந்தை'ன்னு சொல்லிட்டு, அப்புறம் ஏன் அத கிராமச்சந்தைன்னு மாத்திச் சொல்றீங்க தாத்தா.

தாத்தா: உள்ளூர்த் தேவைக்கு ஏற்ற மாதிரி, அங்க விளைகிற உணவுப் பொருள்களையும் விவசாயம், சமையல், வீடு ஆகியவற்றுக்குத் தேவையான பொருள்களையும் சிறிய அளவில் விற்கிற சிறு வணிகச் செயல்பாடுதான் கிராமச்சந்தை. மக்களோட அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யறதுதான் அதோட நோக்கம். நம்ம மனசை மயக்கிற மாதிரி வெறும் மிகைவரவு சார்ந்து இயங்குவது புதிய சந்தை. அதிலிருந்து வேறுபடுத்தத்தான் அப்படிச் சொன்னேன்.

மூர்த்தி: சந்தையில என்னவெல்லாம் வாங்கலாம் தாத்தா?

தாத்தா: கிராமச்சந்தையில கிடைக்காத பொருள்களே இல்லை. கடுகு, சீரகத்தில் இருந்து உணவுத் தானியங்கள், காய்கறிகள்; கோழி, ஆடு, மாடு, குதிரைன்னு கால்நடைகள்; சோப்பு, சீப்பு, கண்ணாடி, வளையல்கள் போன்ற அலங்காரப் பொருள்கள்; இரும்புப் பொருள்கள், பாத்திரங்கள், துணிமணிகள்னு ஒரு குடும்பத்துக்கு, தொழிலுக்குத் தேவையான எல்லாத்தையும் வாங்கலாம். அது மட்டுமல்லாம பல பேருக்கு வேலை வாய்ப்பையும் கொடுத்தது கிராமச்சந்தை.

மூர்த்தி: காய்கறி, தானியம் சந்தையில விற்பார்கள் என்று சொன்னீங்க. ஆடு மாடுங்கள ஏன் தாத்தா சந்தையில விற்கிறாங்க?

தாத்தா: மக்கள் நாகரிகம் குறிஞ்சி நிலத்துல வேரூன்றி, முல்லை நிலத்துல வளர்ந்து, மருதத்துல முழுமையும் வளமையும் அடைஞ்சுது. எல்லா நிலங்களிலும் மக்களுக்கு ஆடு, மாடுகளோடு தொடர்பு இருந்துகிட்டே இருக்கு. உழவுத் தொழில்ல மனுசனுக்குப் பக்கபலமா மட்டுமில்ல, இணையாகவும் துணையாகவும் கால்நடைங்க இருந்திருக்கு. அந்த வகையிலதான் அவற்றோட தேவை அதிகமாகி வாங்க வேண்டிய, விற்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கு. கால்நடைச் சந்தை தமிழ்நாடு முழுவதும் இருக்கு. மதுரைப்பக்கம் மாட்டுச் சந்தைய 'மாட்டுத்தாவணி'ன்னு சொல்லுவாங்க. தாவணின்னா சந்தைன்னு பொருளாம். இப்ப மதுரைப் பேருந்து நிலையம் இருக்கிற இடம் அது.

கீர்த்தனா: கிராமச்சந்தை பத்திக் கேக்கவே ஆர்வமா இருக்கு. மேல சொல்லுங்க தாத்தா.

தாத்தா: கழக்கூத்தும் பொம்மலாட்டமும் கிராமச்சந்தையில உண்டு. சந்தைக்குப் போறது எங்க காலத்துல திருவிழாவிற்குப் போகிற மாதிரி; அக்கம் பக்கத்து ஊர் உறவுகளைச் சந்தித்துப் பேசலாம்; சாதி மதத்தைத் தாண்டி எல்லோருடனும் பழக முடியும்; ஆண்-பெண் பேதமில்லாம, ரெண்டு பேரும் சந்தைச் செயல்பாடுகள்ல

தெரியுமா?

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளிச் சந்தை 18 ஏக்கர் பரப்பில் எட்டாயிரம் கடைகளுடன் இன்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் கூடுகிறது. பல ஊர்களைச் சேர்ந்த மக்கள், தக்காளி முதல் தங்கம் வரை வாங்குவதற்குக் கூடுகிறார்கள். விற்பவரும் வாங்குபவரும் உறவுகளாய்ப் பேசி மகிழும் ஆரவாரம் அங்கே ஒலிக்கிறது. 125 ஆண்டுகள் வயதான அச்சந்தையில் நான்கு தலைமுறை நட்பு நிலவுகிறது. கலப்படமில்லாத பொருள்களை வருவாய் நோக்கின்றி அச்சந்தை இன்றும் விற்பனை செய்கிறது.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 166 23/05/18 4:32 PM

கலந்துக்குவாங்க; மக்களுக்கும் வியாபாரிகளுக்கும் தலைமுறை தலைமுறையா தொடர்பும் நட்பும் இருக்கும்; வாரம் ஒருமுறை உறவுக்காரர்களைப் பார்த்துட்டு வர்ற மாதிரி ஒரு மகிழ்ச்சி இருக்கும்.

மூர்த்தி: பூஞ்சோலை வீட்டுல அத்தனை ஆடுமாடு இருக்கே எல்லாமே சந்தையில் வாங்கியதுதானா?

தாத்தா: சந்தையில் வாங்கியதும் உண்டு, வீட்டிலேயே பிறந்து வளர்ந்ததும் உண்டு. சந்தையில ஆடு, மாடு வாங்குவதை இப்ப நினைச்சா வேடிக்கையா இருக்கும். துண்டைப் போட்டுக் கைகளை மறைச்சுக்கிட்டு விலை பேசுவது ஒரு உத்தி. கொம்பு, பல், வால், புஜத்தைப் பார்த்து மாட்டோட வயசு, வலிமையைக் கண்டுபிடிக்கிறது ஒரு தனித்திறமை. நான் தஞ்சாவூர்ச் சந்தையில மாட்டை வாங்கி, அதைக் கொள்ளிடம் வழியா நடந்தே ஒரு வாரம் ஓட்டி வந்திருக்கேன்.

மூர்த்தி: ஆடு மாடுகளை மட்டுந்தான் சந்தையில் விற்பனை செய்வாங்களா தாத்தா?

தாத்தா: யார் சொன்னது? ஒவ்வொரு ஊரும் ஒவ்வொரு சந்தைக்குப் பேர் போனது. மணப்பாறைன்னு சொன்னா மாட்டுச்சந்தை, அய்யலூர்னா ஆட்டுச் சந்தை, ஒட்டன்சத்திரம்னா காய்கறிச் சந்தை, நாகர்கோவில் தோவாளைன்னா பூச்சந்தை, ஈரோடுன்னா ஜவுளிச் சந்தை, கடலூருக்குப் பக்கமா இருக்கிற காராமணி குப்பம்னா கருவாட்டுச் சந்தை, நாகப்பட்டினம்னா மீன் சந்தை இப்படித் தமிழ்நாடு முழுதும் பல சந்தைகள் இருக்கு. இவை தவிர ஒவ்வொரு வட்டாரத்திலும் கிராமச் சந்தைகள் ஏராளம். கிழமையைக் கணக்கு வைத்து ஒவ்வொரு ஊர்ச் சந்தைக்கும் சென்று வரும் வியாபாரிகள் உண்டு. எந்தச் சந்தையில் எது சிறப்பு, எது விலை மலிவு என அனுபவத்தில் அறிந்து வாங்கிவர ஊர் ஊராகச் செல்லும் மக்களும் உண்டு.

கீர்த்தனா: அங்கே அதோ தெரியுது பாருங்க தாத்தா பெரிய கட்டடம். அதுதான் 'மால்'.

தெரியுமா?

இன்றைக்கும் தமிழகத்தின் அனைத்து ஊர்களிலும், வாரச் சந்தைகளும் மாதச் சந்தைகளும் குறிப்பிட்ட சில பொருள்களை மட்டும் விற்கும் சந்தைகளும் மாலை நேரச் சந்தைகளும் நடந்தவண்ணம் உள்ளன.

மூர்த்தி: இந்த மாதிரி பன்னாட்டு அறிவியல் தொழில் நுட்பத்தோட இயங்குற வணிக வளாகங்களுக்கும் கிராமச்சந்தைகளுக்கும் என்ன வேறுபாடு? தாத்தா!

தாத்தா: நவீன சந்தையில் உற்பத்தி செய்கிறவன் ஒருத்தன்; மொத்தமாக வாங்குகிறவன் வேறு ஒருத்தன். சில்லறையாக விற்கிறவன் இன்னொருத்தன்னு இருப்பாங்கன்னு நினைக்கிறேன். கிராமச்சந்தையில உற்பத்தியாளன்தான் விற்பனையாளன். பெரும்பாலும் இடைத்தரகர்களுக்கு வேலை இல்ல. குளிரூட்டப்பட்ட அறை இல்லை. வாடகை இல்லை. விற்கிறவனும் வாங்குகிறவனும் ஓர் உடன்பாட்டுக்கு வந்தால் அதுதான் பொருளோட விலை.

கீர்த்தனா: இதோ வந்தாச்சு. வாங்க அந்தத் தானியங்கிப் படிக்கட்டில் ஏறி மேலே போகலாம்.

தாத்தா: நீ என்ன வாங்கணும் மூர்த்தி?

மூர்த்தி: எனக்கு ஒன்னும் வேணாம் தாத்தா. கீர்த்திதான் பாக்கறதெல்லாம் கேப்பா.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 167 23/05/18 4:32 PM

(நடக்கிறவர்கள் பேசிக்கொள்வதும்
இயந்திரங்களின் ஓசைகளும்
பேரிரைச்சலை ஏற்படுத்தின.)

மூர்த்தி: 'சந்தைக்கடைச் சத்தம்' அப்படின்னு சொல்வாங்களே அதுவும் இந்தச் சத்தமும் ஒண்ணா தாத்தா?

தாத்தா: சந்தைக்கடை சத்தமாத்தான் இருக்கும். ஆனா இந்த மாதிரி இரைச்சலா இருக்காது. சந்தை வெறும் உதட்டு வியாபாரம் மட்டும் பேசும் களம் இல்லை. வாங்க வாங்க என ஏதோ கல்யாண வீடு போல வரவேற்று நலம் விசாரித்த பிறகுதான் ஒவ்வொரு கடையிலும் வியாபாரம் நடக்கும். விசாரிப்புகளுக்கு மத்தியில் ஓர் உறவுக் கம்பி இழையோடும். இதனால, உரிய வயசுல பேச்சு வராத குழந்தைங்களைச் சந்தைக்குக் கூட்டிக்கிட்டுப் போவோம். சந்தையில கேக்குற சொற்களையும் பலவித குரல் ஏற்ற இறக்கங்களையும் உள்வாங்கிக்கிற குழந்தைங்களுக்குப் பேச்சு வந்துவிடும்.

(கீர்த்தனா ஒரு கண்ணாடிப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்த பெரிய குரங்கு பொம்மை ஒன்றைத் தொட முயன்றாள். கடையின் வேலையாள் தொடக்கூடாதெனக் கீர்த்தனாவிற்குச் சைகை காட்டினார்.)

தாத்தா: பார்த்தியா? பொம்மையைத் தொடக்கூடாதுன்னு சொல்கிறார். குழந்தைகளை நாட்டுச்சந்தைக்குக் கூட்டிக்கொண்டு போனால், கடையில் இருக்கும் தக்காளி, கேரட் எனக் குழந்தை எதை எடுத்தாலும் அதற்குக் காசு இல்லை. குழந்தையின் ஆசையில் வணிகம் குறுக்கிடாது.

மூர்த்தி: வியாபாரத்துல கருணைக்கு இடம் கொடுத்தா, முதல் தேறாதே தாத்தா.

தாத்தா: நாட்டுச் சந்தையில் வியாபாரிக்கும் வாடிக்கையாளருக்குமான உறவு என்பது வெறுமனே பொருளை விற்று வாங்குவதோடு முடிந்துபோவதில்லை. சந்தையில் பார்த்துப் பழகியவர்கள் சம்பந்திகளாகி உறவினர்கள் ஆகிவிடுவதுமுண்டு! சந்தையின் சாதாரண விசாரிப்புகளிலும் நேசம் உண்டு, நேர்மை உண்டு.

கீர்த்தனா: தாத்தா அங்கே பாருங்க அந்தக் குழந்தை பொம்மை எவ்ளோ பெருசா இருக்கு? விலை அதிகமா இருக்குமோ தாத்தா?

தாத்தா: விலையைப் பத்தி என்ன இருக்கு. உனக்குப் பிடிச்சிருக்கா சொல்லு.

கீர்த்தனா: 'ஏம்மா, இவ்வளவு பெரிய பொம்மைய வாங்கியாந்தே?'ன்னு அம்மா சத்தம் போடும் தாத்தா.

தாத்தா: அதை நான் பார்த்துக் கொள்கிறேன். (பொம்மை வாங்குகிறார்கள்) உனக்கு ஏதும் வேணுமா மூர்த்தி?

மூர்த்தி: வேணாம் தாத்தா. பழக்கூழ் வேணும்னா குடிக்கலாம் தாத்தா.

தாத்தா: சரி. குடிக்கலாம். எனக்குப் பனிக் கட்டி போடாமல் வாங்கு. (மூவரும் பழக்கூழ் அருந்தியவாறே உரையாடுகின்றனர்)

மூர்த்தி: இவ்வளவு பிரம்மாண்டமான கடையில பல அடுக்குகளில் பொருள்களைக் குவிச்சு வெச்சிருக்காங்க

தாத்தா: ஆமா. யார்யாருக்கு எது வேணுமோ அதுக்குத் தனித்தனியான பகுதிகள் இருக்கு. தேவைக்கும் அளவுக்கும் ஏற்பப் பொருள்களை நாமே தேர்ந்தெடுக்கலாம் போல.

கீர்த்தனா: ஆமா, தாத்தா பெரும்பாலும் பல அளவுள்ள பொட்டலங்கள் போட்டு வைத்திருக்காங்க. கெடுநாளும் குறிச்சிருப்பாங்க. நாமதான் பாத்து வாங்கனும். சரி வீட்டுக்குப் போலாம் தாத்தா.

தாத்தா: சரி, வாங்க போகலாம்

மூர்த்தி: இந்தமாதிரி அங்காடிகள் பலபேருக்கு நிரந்தர வேலை கொடுக்குது தாத்தா

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 168 23/05/18 4:32 PM

தாத்தா: அப்படிச் சொல்ல முடியாது. நிரந்தரப் பணியாளர் குறைச்சலாத்தான் இருப்பாங்க. தற்காலிகப் பணியாளர்தான் அதிகம். பலபேர் வந்து கொஞ்சநாள் வேலை பார்த்துட்டுப் போயிடுவாங்க.

கீர்த்தனா: பொருள்களை விற்கணும். தீர்ந்தவுடனே வாங்கிவைக்கணும். பெரிய வேலைதான் தாத்தா.

தாத்தா: இதுபோன்ற கடைகளைத் திட்டமிட்டாத்தான் நிருவகிக்க முடியும். அதற்கேற்ப மேலாண்மை, கண்காணிப்பு, கட்டமைப்பு வசதி, தொடர் பராமரிப்புன்னு இதன்பின்னால ஏகப்பட்ட தொடர் செயல்பாடுகள் இருக்கு. கிராமச்சந்தைல இருக்கறமாதிரி இங்க யார்வேண்ணாலும் கடை வைத்துவிட முடியாது. பெரிய அளவுல முதலீடு தேவைப்படும். (மூவரும் வீட்டை அடைந்தார்கள்)

கீர்த்தனா அம்மா: எதுக்குமா இவ்வளவு பெரிய பொம்மை? ஏற்கனவே நிறைய பொம்மைங்க இருக்கே!

தாத்தா: விடும்மா. குழந்தை ஆசையா கேட்டா. நான்தான் வாங்கித்தந்தேன்.

அம்மா: மூர்த்தி ஒன்னும் வாங்கலையாப்பா?

மூர்த்தி: கீர்த்தனா, அவ ஆசைப்பட்ட பொம்மையை வாங்கிக்கிட்டா. நானும் என் படிப்புக்குத் தேவையான சந்தைபற்றிய விவரங்களைத் தாத்தாவிடம் கேட்டுத் தெரிஞ்சுக்கிட்டேன். அந்தக் காலத்துச் சந்தையில மக்கள் பணத்தைவிட மனித மாண்புகளுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தாங்க என்பதை நினைத்தாலே பெருமையா இருக்கு.

பொதியை ஏத்தி வண்டியிலே
பொள்ளாச்சி சந்தையிலே
விருதுநகர் வியாபாரிக்கு – செல்லக்கண்ணு
நீயும் வித்துப்போட்டுப் பணத்த எண்ணு
செல்லக்கண்ணு.

அம்மா: ஆமா, நானும் சந்தைக்குப் போயிருக்கேன். சந்தைன்னாலே சந்தோசம் தானா வரும். சரி வாங்க. தாத்தா ஊர்ச் சந்தையிலிருந்து வாங்கி வந்த காய்கறியில குழம்பு வெச்சுருக்கேன், சாப்பிடுங்க.

கற்பவை கற்றபின்...

1. சந்தை நிகழ்வுகளை நாடகமாக நடித்துக் காட்டுக.
2. சந்தை/அங்காடியில் இருக்கும் பொருள்களுக்கான விலைப்பட்டியல் எழுதிய விளம்பரப் பதாகை ஒன்றை உருவாக்குக.
3. சிறு வணிகர் ஒருவரிடம் நேர்காணல் செய்க.
   (எ.கா. சந்தைப் பொருள்கள் மீதமானால் என்ன செய்வீர்கள்?)
4. "கடன் அன்பை முறிக்கும் " இது போன்ற சொற்றொடர்களைக் கடைகள், பல்பொருள் அங்காடிகள் , சந்தைகளில் பார்த்து எழுதுக.

KG392V

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 169 23/05/18 4:32 PM

இயல் ஆறு

கற்கண்டு

ஆகுபெயர்

KGC54I

'கலாம் சாட் கண்டுபிடித்த பள்ளி மாணவனை ஊரே பாராட்டியது.'

'பெண்களைக் கேலி செய்த இளைஞரை ஊரே இகழ்ந்தது.'

இத்தொடர்களில் ஊர் பாராட்டுவதோ, திட்டுவதோ இல்லை. மாறாக, அவ்வூரில் உள்ள மக்கள் பாராட்டினர் / இகழ்ந்தனர் என்பது இதன் பொருள். ஊர் என்னும் பெயர், ஊரில் உள்ள மக்களுக்கு ஆகிவந்தது. இதனை இடவாகுபெயர் என்பர்.

ஒன்றின் இயற்பெயர், அதனோடு தொடர்புடைய மற்றொன்றிற்குத் தொன்றுதொட்டு ஆகி வருவது ஆகுபெயர் ஆகும். தொல்காப்பியர் ஆகுபெயர்களை ஏழாகவும் நன்னூலார் பதினைந்தாகவும் வகைப்படுத்தி இலக்கணம் வகுத்துள்ளனர். அவற்றுள் குறிப்பிடத்தக்கவை சில-

முல்லையைத் தொடுத்தாள்		பொருளாகுபெயர் (முதலாகுபெயர்) – முதற்பொருளாகிய முல்லைக்கொடி, அதன் சினை(உறுப்பு)யாகிய பூவுக்கு ஆகி வந்தது.
வகுப்பறை சிரித்தது		இடவாகுபெயர் – வகுப்பறை என்னும் இடப்பெயர் அங்குள்ள மாணவர்களுக்கு ஆகி வந்தது.
கார் அறுத்தான்		காலவாகுபெயர் - கார் என்னும் காலப்பெயர் அக்காலத்தில் விளையும் பயிருக்கு ஆகி வந்தது.
மருக்கொழுந்து நட்டான்		சினையாகுபெயர் – மருக்கொழுந்து என்னும் சினைப் (உறுப்பு) பெயர், அதன் செடிக்கு ஆகிவந்தது.
மஞ்சள் பூசினாள்		பண்பாகுபெயர் – மஞ்சள் என்னும் பண்பு, அவ்வண்ணத்தில் உள்ள கிழங்குக்கு ஆகிவந்தது.
வற்றல் தின்றான்		தொழிலாகுபெயர் – வற்றல் என்னும் தொழிற்பெயர் வற்றிய உணவுப்பொருளுக்கு ஆகி வந்தது.
வானொலி கேட்டு மகிழ்ந்தனர்		கருவியாகுபெயர் – வானொலி என்னும் கருவி, அதன் காரியமாகிய நிகழ்ச்சிகளுக்கு ஆகி வந்தது.
பைங்கூழ் வளர்ந்தது		காரியவாகுபெயர் – கூழ் என்னும் காரியம் அதன் கருவியாகிய பயிருக்கு ஆகி வந்தது.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 170 23/05/18 4:32 PM

அறிஞர் அண்ணாவைப் படித்திருக்கிறேன்		கருத்தாவாகுபெயர் – அறிஞர் அண்ணா என்னும் கருத்தாவின் பெயர், அவர் இயற்றிய நூல்களுக்கு ஆகி வருகிறது.
ஒன்று பெற்றால் ஒளிமயம்		எண்ணலளவை ஆகுபெயர் – ஒன்று என்னும் எண்ணுப் பெயர், அவ்வெண்ணுக்குத் தொடர்புடைய குழந்தைக்கு ஆகி வந்தது.
இரண்டு கிலோ கொடு		எடுத்தலளவை ஆகுபெயர் – நிறுத்தி அளக்கும் எடுத்தல் என்னும் அளவை பெயர், அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது.
அரை லிட்டர் வாங்கு		முகத்தலளவை ஆகுபெயர் – முகந்து அளக்கும் முகத்தல் அளவை பெயர், அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது.
ஐந்து மீட்டர் வெட்டினான்		நீட்டலளவை ஆகுபெயர் – நீட்டி அளக்கும் நீட்டலளவைப் பெயர், அவ்வளவையுள்ள பொருளுக்கு ஆகி வந்தது.

கற்பவை கற்றபின்...

1. ஆகுபெயரைக் கண்டறிக.

   அ. தமிழரசி வள்ளுவரை ஓவியமாக வரைந்தாள்.
   தமிழரசி வள்ளுவரைப் படித்தாள்.

   ஆ. மாமாவின் வருகைக்கு வீடே மகிழ்கிறது.
   நாடும் வீடும் நமது இரு கண்கள்.

   இ. கலைச்செல்வி பச்சைநிற ஆடையை உடுத்தினாள்.
   கலைச்செல்வி பச்சை உடுத்தினாள்.

   ஈ. நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி.
   நாலடி நானூறும் இரண்டடித் திருக்குறளும் வாழ்வுக்கு உறுதி தரும்.

   உ. ஞாயிற்றை உலகம் சுற்றி வருகிறது.
   நீங்கள் கூறுவதை உலகம் ஏற்குமா?

2. ஆகுபெயர் அமையுமாறு தொடர்களை மாற்றி எழுதுக.

   அ. மதுரை மக்கள் இரவிலும் வணிகம் செய்கின்றனர்.

   ஆ. இந்திய வீரர்கள் எளிதில் வென்றனர்.

   இ. நகைச்சுவை நிகழ்வைப் பார்த்து அரங்கத்தில் உள்ளவர்கள் சிரித்தனர்.

   ஈ. நீரின்றி இவ்வுலக மக்களால் இயங்க முடியாது.

KGL166

சிந்தனை வினா

1. தற்காலப் பேச்சு வழக்கிலும் எழுத்து வழக்கிலும் ஆகுபெயரை எப்படியெல்லாம் பயன்படுத்துகிறோம் என்பதற்கு எடுத்துக்காட்டுகள் தருக.
2. பட்டப் பெயர்கள் ஆகுபெயர்கள் ஆகுமா? எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 171 23/05/18 4:32 PM

மதிப்பீடு

பலவுள் தெரிக.

1. அஃகசாலை என்பது ……. த்தைக் குறிக்கும்.

   அ) அங்காடிகள் அமைந்துள்ள இடம் ஆ) யவனர்கள் இருக்கின்ற இடம்

   இ) நாணயங்கள் அச்சடிக்கும் இடம் ஈ) அரேபியர்களின் பந்தர் இடம்

2. கூற்று 1 – காவிரிப்பூம்பட்டினம் சோழ நாட்டின் துறைமுகமாகும்.

   கூற்று 2– வண்டியூர் என்னும் ஊர் காஞ்சி மாநகரத்தில் அமைந்துள்ளது.

   அ) கூற்று 1, 2 சரி ஆ) கூற்று 1, 2 தவறு

   இ) கூற்று 2 சரி, 1 தவறு ஈ) கூற்று 1 சரி, 2 தவறு

3. ' யவனப்பிரியா' என்பது எதனைக் குறிக்கும்?

   அ) மிளகு ஆ) முத்து இ) சங்கு ஈ) தந்தம்

4. ஏற்றுமதி, இறக்குமதி குறித்துக் கூறும் சங்க நூல்கள்

   அ) பட்டினப்பாலை, குறிஞ்சிப்பாட்டு ஆ) குறிஞ்சிப்பாட்டு, பதிற்றுப்பத்து

   இ) மதுரைக்காஞ்சி, முல்லைப்பாட்டு ஈ) மதுரைக்காஞ்சி, பட்டினப்பாலை

5. விடைக்கேற்ற வினாவைத் தெரிவு செய்க.

   - காவிரியாற்றின் முகத்துவாரம் ஆழமாகவும், அகலமாகவும் இருந்தது.
   - பகலில் இயங்கும் கடைகள் நாளங்காடிகள்.

   அ) காவிரியாற்றின் முகத்துவாரம் எதற்காக அமைந்திருந்தது? – பகலில் இயங்கும் கடைகள் எவ்விதம் அழைக்கப்பட்டன?

   ஆ) காவிரியாற்றின் முகத்துவாரம் எவ்வாறு அமைந்திருந்தது? – பகலில் இயங்கும் கடைகள் எவ்வாறு அழைக்கப்பட்டன?

   இ) காவிரியாற்றின் முகத்துவாரம் எங்கு அமைந்திருந்தது? – பகலில் கடைகள் எவ்வாறு இயங்கின?

   ஈ) காவிரியாற்றின் முகத்துவாரம் எதனால் அமைந்திருந்தது? – பகலில் இயங்கும் கடைகள் எப்படி அழைக்கப்பட்டன?

குறு வினா

1. 'மதுரைக்காஞ்சி' – பெயர்க்காரணத்தைக் குறிப்பிடுக.
2. எதன் பொருட்டுக் கடற்பயணம் மேற்கொள்ளப்பட்டது?
3. உங்கள் ஊரில் உற்பத்தியாகும் பொருள்களையும் சந்தையில் காணும் பொருள்களையும் ஒப்பிட்டு எழுதுக.
4. பண்டைத் தமிழர்களின் துறைமுகப் பயன்பாடு யாது?
5. நாலுமலை கொண்ட பெருநகரம் – இவ்வடிகளில் குறிக்கப்படும் மலைகள் யாவை?

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 172 23/05/18 4:32 PM

சிறுவினா

1. "மாகால் எடுத்த முந்நீர்போல" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.
2. கொற்கை – சிறுகுறிப்புத் தருக.
3. சந்தைக்கும் பல்பொருள் அங்காடிக்குமான வேறுபாடுகளைப் பட்டியலிடுக.
4. காவிரிப்பூம்பட்டினம் குறித்து இலக்கியங்களில் இடம்பெற்ற கருத்துகள் யாவை?
5. ஏறுதழுவுதல் காளைகளால் – தோள்
   ஏறுமே கம்பீரம் மாலைகளால் – இவ்வடிகள் சுட்டும் வீரவிளையாட்டு பற்றி நீங்கள் அறிந்தவற்றை எழுதுக.

நெடுவினா

1. பண்டைய துறைமுகங்கள் பற்றி விவரித்து எழுதுக.
2. எங்கள் ஊர்ச் சந்தை – என்னும் தலைப்பில் நாளிதழ்ச் செய்தி ஒன்றை எழுதுக.

மொழியை ஆள்வோம்

படித்துச் சுவைக்க.

ஏரால் விளையும் உணவுப் பொருள்களை எல்லாம் ஒரு சொல்லால் உணர்த்தினர் தமிழ்நாட்டார். இக்காலத்தில் மளிகைக் கடை என்பது பலசரக்குக் கடையின் பெயராக வழங்குதல் போன்று, முற்காலத்தில் கூலக்கடை என்பது பலவகைத் தானியங்கள் விற்கும் கடைக்குப் பெயராக அமைந்தது. நெல்லும் புல்லும், வரகும் தினையும், எள்ளும் கொள்ளும், அவரையும் துவரையும், பயறும் உளுந்தும், சாமையும் பிறவும் கூலம் என்ற ஒரு சொல்லாலே குறிக்கப்பட்டன. பெரிய நகரங்களில் கூலவீதிகள் சிறந்திருந்தன. சோழநாட்டின் தலைநகராக விளங்கிய காவிரிப்பூம்பட்டினத்திலும், பாண்டி நாட்டின் தலைநகராகிய மதுரையிலும் 'கூலங்குவித்த கூல வீதிகள்' இருந்தன என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. இன்றும் கூலவீதியைத் திருநெல்வேலியிலே காணலாம். மேலரத வீதியை அடுத்துள்ள தெரு, 'கூலக்கடைத் தெரு' என்றே இதுகாறும் வழங்கி வருகின்றது. மதுரை மாநகரில் கூலக்கடை வைத்திருந்த சாத்தனார் 'கூலவணிகன் சாத்தனார்' என்று பெயர் பெற்றார். அவரே மணிமேகலைக் காவியம் இயற்றிய கவிஞர் என்பர். அந்நாளில் இசையரங்குகளிலும், நடன சாலைகளிலும் உழவரை வாழ்த்தும் வழக்கம் இருந்ததாகத் தெரிகின்றது. நாடாளும் மன்னனை வாழ்த்திய பின்பு, உணவளிக்கும் உழவனை வாழ்த்துவர் இசைவாணர். 'பதினெண் கூலமும் உழவர்க்கு மிகவே' என்னும் வாழ்த்துரை ஒரு பழைய இசை நூலிற் காணப்படுகின்றது.

– சொல்லின் செல்வர் ரா.பி.சே.

மொழிபெயர்க்க.

Everyone wants a happy life. To some it means three meals a day and a roof over their head, while for others; it means the most luxurious life with a grand mansion, hundreds of cars and near unlimited supply of cash in the bank. But no matter what type of life you desire, it is your deeds, your attitude towards life that carves your personality and shapes your life. So, have the most positive attitude towards life. If life throws a hundred reasons at you to cry, show it that you have a thousand reasons to smile.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 173 23/05/18 4:32 PM

தொடரில் உள்ள பிழைகளைக் கண்டறிந்து நீக்குக.

1. மலையேறிய மக்கள் மாலையின் வேகவேகமாய்க் கீழிறங்கின.
2. எங்கள் ஊர் சந்தையில் காய்க்கறிகள் கிடைக்கும்.
3. பண்டைத் துறைமுகங்களில் ஏற்றுமதிச் செய்யப்பட்டது.
4. சிட்டுக்கு சிறகுகள் முளைத்தது.

கீழ்க்காணும் பத்தியில் உள்ள ஆகுபெயர்களை அட்டவணைப்படுத்துக.

விமலா கூடத்தில் உள்ள தட்டிலிருந்த டிசம்பரைத் தலையில் சூடிக்கொண்டாள். மல்லிகையைப் படத்திற்குச் சூட்டினாள். அடுப்பிலிருந்து பாலை இறக்கினாள். பின்பு தோட்டத்திற்குச் சென்றாள். விமலாவைப் பார்த்தவுடன் தோட்டம் அமைதியானது! "தலைக்கு இருநூறு கொடுங்கம்மா" என்று தோட்டத்தில் வேலை செய்தவருள் ஒருவர் சொன்னார். வெள்ளை மனங்கொண்ட வேலையாட்களின் கூலியைக் குறைக்க விரும்பாமல் அதனை அவளும் ஏற்றுக்கொண்டாள். அவர்கள் சென்றதும், காலையில் சாப்பிடப் பொங்கல் வைத்தாள். வீட்டில் சமையல் செய்ய, எந்தெந்தப் பொருள்கள் குறைவாக உள்ளன என்பதைப்பற்றிச் சிந்தித்தாள். "சாப்பாட்டிற்கு ஐந்து கிலோ வாங்க வேண்டும். தாளிப்பதற்கு மூன்று லிட்டர் வாங்க வேண்டும். துணி உலர்த்துவதற்கு நான்கு மீட்டர் வாங்க வேண்டும்" எனத் திட்டமிட்டாள். அலைபேசி அழைத்தது. அரை நிமிடம் அலைபேசியில் வந்த வயலின் கேட்டு மகிழ்ந்தாள். பிறகு எடுத்துப் பேசினாள். கடைக்குப் போய்விட்டு வந்த பிறகு, பாதியில் விட்டிருந்த சிவசங்கரியைப் படித்து முடிக்கவேண்டும் என்று நினைத்தாள்.

வரைபடத்தை உற்றுநோக்கி வினாக்களுக்கு விடையளிக்க.

அ. வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ள பண்டைய நகரங்கள் எவை?

ஆ. பண்டைய நகரங்களாகவும் துறைமுகங்களாகவும் விளங்கி, இன்று அகழாய்விற்குரிய இடங்களாகத் திகழ்வன எவை?

இ. பண்டைத் துறைமுகம், இன்றைய துறைமுகம் – வரைபடம் உணர்த்தும் வேறுபாடுகளைச் சுட்டுக.

ஈ. முத்துக் குளித்தலுக்குப் பெயர்பெற்ற துறைமுகங்கள் ……. …….

உ. புகழ்பெற்ற பண்டைத் துறைமுகங்கள் இன்று இல்லாமைக்கான காரணங்களைச் சிந்தித்து எழுதுக.

ஆகுபெயர்களைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.

விளைச்சல், பால், முழம், மதுரை, வெள்ளை, பள்ளி.

(எ.கா.) இந்த ஆண்டில் நல்ல விளைச்சல் பெற்றான்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 174 23/05/18 4:32 PM

பயண அனுபவங்களை விவரிக்க.

"எனது பயணம்" என்னும் தலைப்பில் உங்களது அனுபவங்களை வருணித்து எழுதுக.

மொழியோடு விளையாடு

சொற்றொடரில் ஒளிந்துள்ள தமிழ்நாட்டின் துறைமுகங்களைக் கண்டறிந்து எழுதுக.

1. கல்வியில் தடம் பதித்தவர் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்.
2. பூம்பொழில் புகும் கார்கால மேகம்.
3. தூக்கத்தில் துள்ளிக் குதிக்கும் கரடி.
4. எட்டும் தொண்ணூறும் எண்ணுப்பெயர்கள்.

(எ.கா.) கல்வியில் தடம் பதித்தவர் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் – கடலூர்

அகராதியில் காண்க.

தரங்கம், தொள்ளை, நியமம், பாடிலம், மாறன்

வட்டத்திற்குள் உள்ள எழுத்துகளைக்கொண்டு சொற்களை உருவாக்குக.

காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

வினைமுற்றை வினையாலணையும் பெயராக்கித் தொடர்களை இணைக்க.

1. நேற்று ஒருவன் வந்தான்; அவன் என் தம்பி.
2. அவர் மகிழுந்தை நிறுத்தினார்; வீட்டிற்குள் நுழைந்தார்.
3. கூண்டுக்குள் கிளியைக் கண்டார்; அதை வானில் பறக்கவிட்டார்.
4. எனக்குக் கவிதை நூலைத் தருவார்; அவரே அதன் பதிப்பாளர்.

(எ.கா.)

மதுரையில் தமிழ் வளர்க்கச் சங்கம் அமைத்தார்கள்; அவர்கள் பாண்டிய மன்னர்கள்.

மதுரையில் தமிழ் வளர்க்கச் சங்கம் அமைத்தவர்கள் பாண்டிய மன்னர்கள்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 175 23/05/18 4:32 PM

செயல்திட்டம்

ஒரு வாரத்திற்குத் தேவையான உணவுப்பொருள்களின் வரவு செலவுப் பட்டியலை உருவாக்குக.

நிற்க அதற்குத் தக

எனது வகுப்பு எனது பணிகள்

அ) வகுப்பறைச் செயல்பாடுகளில் ஈடுபாட்டுடன் இருத்தல்

ஆ) வகுப்பறையைத் தூய்மையாக வைத்துக் கொள்வது.

இ) ……

ஈ) ……

கலைச்சொல் அறிவோம்

கழிமுகங்கள் – Estuaries, கலங்கரைவிளக்கம் – Lighthouse, துறைமுகங்கள் – Ports

பண்டமாற்றுமுறை – Commodity Exchange, இளநீர் – Tender Coconut, அகழி – Moat

கரும்புச் சாறு – Sugarcane Juice, காய்கறி வடிச் சாறு – Vegetable Soup

அறிவை விரிவு செய்

1. *நாட்டுப்புறவியல் ஓர் அறிமுகம் – முனைவர் சு.சக்திவேல்*
2. *தரங்கம்பாடி தங்கப் புதையல் – பெ. தூரன்*
3. *இருட்டு எனக்குப் பிடிக்கும் (அன்றாட வாழ்வில் அறிவியல்) – ச. தமிழ்ச்செல்வன்*

இணையத்தில் காண்க.

http://www.tamilvu.org/ta/library-lno0204-html-lno0204p05-274940
http://www.msuniv.ac.in/ddce/Blitt/DLL%2015.pdf
http://www.tamilsurangam.in/literatures/patthu_paddu/maduraikanchi_1.html#.Wqoay-huZPY
https://tamil.mapsofindia.com/tamil-nadu/madurai/madurai-district-map.html

இணையச் செயல்பாடுகள்

ஆகுபெயரை அடையாளம் காண்போமே!

படிகள்

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி ஆகுபெயர் என்னும் செயலியைப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியைத் திறந்தவுடன் ஆகுபெயர் பற்றிய விளக்கமும் அதன் வகைகளும் எடுத்துக்காட்டுடன் கொடுக்கப்பட்டிருக்கும்.
- அதனைத் தெளிவுற அறிந்த பின்பு திரையின் கீழ் வரும் தேர்வு என்பதைத் தேர்ந்தெடுத்து, கொடுக்கப்படும் வினாக்களுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

செயல்பாட்டிற்கான உரலி

https://play.google.com/store/apps/details?id=appinventor.ai_ngmukun.aagupeyar



athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 176 23/05/18 4:32 PM

இயல் ஆறு

திருக்குறள்

புல்லறிவாண்மை

1) *ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்*
போலும் அளவும்ஓர் நோய்.

சொன்னாலும் செய்யாமல், தானாகவும் செய்யாமல்
இருப்பவன் உயிர், சாகும்வரை உள்ள நோய்!

2) *காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்*
கண்டானாம் தான்கண்ட வாறு.

அறிவில்லாதவனுக்கு அறிவுரை சொல்பவன் அறிவில்லாதவனாக மாறிவிடுவான்!
அறிவில்லாதவன் அவனுக்குத் தெரிந்த அளவில் அறிவுடையவனாகத் தோன்றுவான்!

இகல்

3) *இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்*
துன்பத்துள் துன்பங் கெடின்.

துன்பத்தில் மனக்கசப்பு என்னும் மோசமான துன்பம் மறைந்தால்,
இன்பத்தில் சிறந்த இன்பம் பெறலாம் .

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 177 23/05/18 4:32 PM

குடிமை

4) *அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்*
*குன்றுவ செய்தல் இலர்.**

கோடிப் பொருள் அடுக்கிக் கொடுத்தாலும்,
ஒழுக்கமான குடியில் பிறந்தவர், தவறு செய்வதில்லை.

சான்றாண்மை

5) *அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)*
*ஐந்துசால்பு ஊன்றிய தூண்.**

பிறரிடம் அன்பும் பழிக்கு நாணுதலும் அனைவரிடமும் இணக்கமும்
இரக்கமும் உண்மையும் சான்றாண்மையைத் தாங்கும் தூண்கள்!
அணி – ஏகதேச உருவக அணி

6) *ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்*
மாற்றாரை மாற்றும் படை.

செயல் செய்பவரின் ஆற்றல், பணிவுடன் நடத்தல். அதுவே
சான்றோர்க்குப் பகைவரையும் நட்பாக்கும் கருவி.

7) *ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்(கு)*
ஆழி எனப்படு வார்.

ஊழிக்காலம் வந்தாலும் சான்றாண்மை என்னும் கடலுக்குக்
கரை போன்றவர் நற்பண்புகளிலிருந்து மாறமாட்டார் !
அணி – ஏகதேச உருவக அணி

நாணுடைமை

8) *பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்*
*அறம்நாணத் தக்கது உடைத்து.**

பிறர் வெட்கப்படும் பழிக்குக் காரணமாய் இருந்தும் தான் வெட்கப்படவில்லை என்றால், அறம் வெட்கப்பட்டு அவனை விட்டு விலகிப்போகும்.

உழவு

9) *சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்*
*உழந்தும் உழவே தலை.**

பல தொழில்களால் இயங்கினாலும் உலகம் ஏருக்குப் பின்னாலேயே போகும்!
அதனால் வருந்தி உழைத்தாலும் உழவுத் தொழிலே சிறந்தது.

10) *உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃ தாற்றாது*
எழுவாரை எல்லாம் பொறுத்து.

மற்ற தொழில் செய்பவரையும் உழுபவரே தாங்கி நிற்பதால், அவரே உலகத்துக்கு அச்சாணி ஆவர்.
அணி – ஏகதேச உருவக அணி

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 178 23/05/18 4:32 PM

கற்பவை கற்றபின்...

KHDNB4

1. படத்திற்கு ஏற்ற குறளைத் தேர்வு செய்க

அ. இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்
துன்பத்துள் துன்பங் கெடின்.

ஆ. ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவும்ஓர் நோய்.

இ. சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

2. பொருளுக்கேற்ற அடியைக் கண்டுபிடித்துப் பொருத்துக.

கண்டானாம் தான்கண்ட வாறு	பகைவரையும் நட்பாக்கும் கருவி
அறம்நாணத் தக்கது உடைத்து	தெரிந்த அளவில் அறிவுடையவனாகத் தோன்றுவான்
மாற்றாரை மாற்றும் படை	அறம் வெட்கப்பட்டு அவனை விட்டு விலகிப்போகும்

3. ஐந்து சால்புகளில் இரண்டு

அ) வானமும் நாணமும் ஆ) நாணமும் இணக்கமும்

இ) இணக்கமும் சுணக்கமும் ஈ) இணக்கமும் பிணக்கமும்

4. கோடிட்ட இடங்களுக்கான விடையைக் கட்டத்துள் கண்டறிந்து வட்டமிடுக.

ஒ	ப்	பு	று
க	ப	ர	வ
ட	டை	வு	த
ல்	உ	ழ	வ
ம்	ற	அ	ர்

அ. அனைவரிடமும் இணக்கம் என்பதன் பொருள் ……

ஆ. உலகத்துக்கு அச்சாணி போன்றவர் ……

இ. தான் நாணான் ஆயின் …… நாணத் தக்கது.

ஈ. ஆழி என்பதன் பொருள்……

உ. மாற்றாரை மாற்றும் ……

ஊ. ஒழுக்கமான குடியில் பிறந்தவர் …… செய்வதில்லை.

5. அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

இக்குறளின் கருத்தை அடிப்படையாகக் கொண்டு ஒரு பக்கக்கதை ஒன்றை எழுதுக.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 179 23/05/18 4:32 PM

வினாக்கள்

1) இறக்கும்வரை உள்ள நோய் எது?

2) அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ(டு)

ஐந்துசால்பு ஊன்றிய தூண்.

இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்கி எழுதுக.

3) உலகத்திற்கு அச்சாணியாய் இருப்பவர் யார்? ஏன்?

4) காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்

கண்டானாம் தான்கண்ட வாறு.

இக்குறட்பாவில் பயின்றுவரும் தொடைநயத்தை எழுதுக.

இணையச் செயல்பாடுகள்

திருக்குறளை விளையாடிப் பார்ப்போமே!

படிகள்

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தித் திருக்குறள் விளையாட்டு என்னும் செயலியைப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியின் அறிவுரையைத் தொடர்ந்து **விளையாடு** என்பதைத் தெரிவு செய்தவுடன் மாணவர், ஆசிரியர், பேராசிரியர் என்பதில் ஒன்றைத் தெரிவு செய்க.
- இப்போது மிதக்கும் சீர்களைச் சரியான இடத்தில் பொருத்தி முழுமையான குறளைக் கண்டறிக. அக்குறளுக்கான விளக்கம் அதைத் தொடர்ந்து பார்க்க.





செயல்பாட்டிற்கான உரலி

https://play.google.com/store/apps/details?id=com.nilatech.thirukkuralvilaiyaattu

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 180 23/05/18 4:32 PM

இயல்
ஏழு

கலை பல வளர்த்தல்

கற்றல் நோக்கங்கள்

- தமிழர் சிற்பக் கலையின் வரலாற்றுச் சிறப்பைப் போற்றுதல்
- இலக்கியம் காட்டும் ஐவகை நிலங்களின் அழகை நுகர்ந்து அவற்றை விவரித்து எழுதுதல்
- சிறுகதை அமைப்பில் தமிழர் இசைக் கலையின் சிறப்பை உணர்தல்
- புதியன சிந்தித்துக் கவிதை படைத்தல்
- புணர்ச்சி இலக்கண அடிப்படைகளை அறிந்து பயன்படுத்தல்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 181 23/05/18 4:32 PM

இயல் ஏழு

சிற்பக்கலை

KHMJCR

நுழையும்முன்

கல்லிலும், உலோகத்திலும் கருவிகள் செய்த மனிதன், அவற்றில் சிற்பமென்னும் நுண்கலையை வடிக்கத் தொடங்கினான். மனித நாகரிக வளர்ச்சியின் தொடக்கமாக இதைக் கொள்ளலாம். உயிரற்ற கல்லிலும் உலோகத்திலும் தமிழர் மன உணர்வுகளையும் நிகழ்வுகளையும் செதுக்கிவைத்த சிற்பங்கள், இன்றும் வரலாற்றின் வாயில்களாக விளங்குகின்றன. தமிழர் அழகியலின் வெளிப்பாடுதான் நாம் காணும் சிற்பங்கள். தமிழ்ச் சிற்பிகள் கல்லில் வடித்த கவிதைகளே சிற்பங்கள்.

புலிக்குகை, மகாபலிபுரம்

கல், உலோகம், செங்கல், மரம் முதலியவற்றைக் கொண்டு கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் உருவங்கள் அமைக்கும் கலையே சிற்பக்கலை எனலாம்.

'கல்லும் உலோகமும் செங்கல்லும் மரமும்
மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்
கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை
பத்தே சிற்பத் தொழிற்குஉறுப் பாவன"

என்று திவாகர நிகண்டு குறிப்பிடுகிறது. மணிமேகலையிலும் இத்தகு குறிப்புகள் காணப்படுகின்றன.

சிற்பங்களின் வகைகள்

சிற்பங்களை அவற்றின் உருவ அமைப்பு அடிப்படையில் முழு உருவச் சிற்பங்கள், புடைப்புச் சிற்பங்கள் என இரண்டாகப் பிரிக்கலாம். உருவத்தின் முன்பகுதியும் பின்பகுதியும் தெளிவாகத் தெரியும் வகையில் முழு உருவத்துடன் அமைந்த சிற்பங்களை முழு உருவச் சிற்பங்கள் என்று கூறலாம். அவ்வாறின்றி முன்பகுதி மட்டும் தெரியும்படி அமைக்கப்பட்ட சிற்பங்களைப் புடைப்புச் சிற்பங்கள் எனலாம். இத்தகு சிற்பங்களை அரண்மனைகள், கோவில்கள் போன்ற

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 182 23/05/18 4:32 PM

இடங்களில் காணலாம். குறிப்பாகக் கோவிலின் தரைப் பகுதி, கோபுரம், தூண்கள், நுழைவாயில்கள், சுவர்களின் வெளிப்புறங்கள் என எல்லா இடங்களிலும் புடைப்புச் சிற்பங்களைப் பார்க்க முடிகிறது.

தெய்வ உருவங்கள், இயற்கை உருவங்கள், கற்பனை உருவங்கள், முழுவடிவ (பிரதிமை) உருவங்கள் என நான்கு நிலைகளில் உலோகத்தினாலும் கல்லினாலும் சிற்பங்கள் அமைக்கப்படுகின்றன. சிற்ப இலக்கண மரபைப் பின்பற்றிக் கலை நயத்துடனும் மிகுந்த தேர்ச்சியுடனும் சிற்பிகள் சிற்பங்களை வடிவமைக்கின்றனர். அதனால், அவர்களைக் "கற்கவிஞர்கள்" என்று சிறப்பிக்கின்றனர்.

பல்லவர் காலச் சிற்பங்கள்

பல்லவர் காலத்தில் சுதையினாலும், கருங்கற்களினாலும் சிற்பங்கள் அமைக்கப்பட்டன. கோவில் தூண்கள் சிற்பங்களால் அழகு பெற்றன. தூண்களில் யாளி, சிங்கம், தாமரை மலர், நுட்பமான வேலைப்பாடுகள் நிறைந்த வட்டங்கள் போன்றவை பொறிக்கப்பட்டன. பல்லவர் காலத்தில் அமைக்கப்பட்ட கோவில்களின் கட்டடங்கள், கற்றூண்கள், சுற்றுச்சுவர்கள், நுழைவு வாயில்கள் என அனைத்து இடங்களிலும் சிற்பங்கள் மிளிர்வதைக் காண முடியும்.

தெரியுமா?

தமிழின் தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் சிற்பக்கலை பற்றிய குறிப்பு காணப்படுகிறது. போரில் விழுப்புண் பட்டு இறந்த வீரருக்கு நடுகல் நடப்படும். அக்கல்லில் அவ்வீரரின் உருவம் பொறிக்கப்பெறும். தமிழரின் தொடக்ககாலச் சிற்பக்கலைக்குச் சான்றாக இதையும் குறிப்பிடலாம். சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்குச் சிலைவடித்த செய்தி இடம் பெற்றுள்ளது. மாளிகைகளில் பல சுண்ணாம்புக் கலவை (சுதைச் சிற்பங்கள்) இருந்ததை மணிமேகலை மூலம் அறிய முடிகிறது.

பல்லவர்காலச் சிற்பக்கலைக்கு மாமல்லபுரச் சிற்பங்கள் மிகச் சிறந்த சான்றுகளாகும். கடற்கரையில் காணப்பட்ட பெரும் பாறைகளைச் செதுக்கிப் பற்பல உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அங்கு உருவாக்கப்பட்ட பஞ்ச பாண்டவர் இரதங்களில் அழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. பறவைகள், விலங்குகள் ஆகியவற்றின் பல்வேறு உருவச் சிற்பங்களும் பல்லவர்களின் சிற்பக்கலைப் பெருமையை உலகுக்கு உணர்த்துகின்றன.

காஞ்சி கயிலாசநாதர் கோவில் சுற்றுச்சுவர் (முழுவதும்) சிற்பங்களின் கலைக்கூடமாகத் திகழ்கிறது. அதே போன்று காஞ்சி வைகுந்த பெருமாள் கோவிலிலும் பல்லவர் காலச் சிற்பங்கள் மிகுதியாக உள்ளன. இங்குத் தெய்வ உருவங்களும் பிற சிற்பங்களும் கோவில் உட்புறச் சுவரில் செதுக்கப்பட்டுள்ளன. பல்லவர் காலக் குடைவரைக் கோவில்களின் நுழைவு வாயிலின் இருபுறங்களிலும் காவலர்கள் நிற்பது போன்று சிற்பங்கள் படைக்கப்பட்டுள்ளன.

மாமல்லபுரம், காஞ்சிபுரம், திருச்சி மலைக்கோட்டை போன்ற இடங்களில் காணப்படும் பல்லவர் காலச் சிற்பங்கள் சிறந்த கலைநுட்பத்துடன் அமைந்துள்ளன.

பாண்டியர் காலச் சிற்பங்கள்

பாண்டியர் காலத்தில் அமைக்கப்பட்ட குகைக்கோவில்களில் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்துள்ளன. அவற்றைத் திருமயம், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, திருப்பரங்குன்றம் முதலிய இடங்களில் உள்ள கோவில்களில் காணலாம். கோவில்பட்டிக்கு மேற்கே கழுகுமலை வெட்டுவான்கோவிலில் அமைந்துள்ள சிற்பங்களும் பாண்டியர் காலச் சிற்பக்கலைக்குச் சான்றுகளாகும்.

சோழர்காலச் சிற்பங்கள்

கற்சிற்பங்கள் அமைக்கும் கலை, சோழர் காலத்தில் விரைவாக வளர்ச்சி பெற்றது. முதலாம் இராசராசன் கட்டிய தஞ்சைப் பெரியகோவில், முதலாம் இராசேந்திர

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 183 23/05/18 4:32 PM

சோழன் எழுப்பிய கங்கை கொண்ட சோழபுரம், இரண்டாம் இராசராசன் எழுப்பிய தாராசுரம் ஐராவதீசுவர் கோவில், இரண்டாம் குலோத்துங்கச் சோழன் அமைத்த திரிபுவன வீரேசுவரம் கோவில் போன்றவை சோழர் காலச் சிற்பங்களின் கருவூலங்களாகத் திகழ்கின்றன.

தஞ்சைப் பெரியகோவிலில் காணப்படுகின்ற பதினான்கு அடி உயரமுள்ள வாயிற்காவலர் உருவங்களும் மிகப்பெரிய நந்தியும் வியப்பூட்டும் வேலைப்பாடுகள் கொண்ட தூண்களும் சோழர்காலச் சிற்பத்திறனுக்குச் சான்றுகளாக விளங்குகின்றன. கங்கை கொண்ட சோழபுரத்தில் ஒரே கல்லில் அமைந்த நவக்கிரகமும் சிங்கமுகக் கிணறும் அவற்றில் பொறிக்கப்பட்டுள்ள உருவங்களும் குறிப்பிடத்தக்கன.

புதுக்கோட்டை மாவட்டம், நார்த்தாமலையில் நடன முத்திரைகளுடன் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அம்மாவட்டத்தில் உள்ள கொடும்பாளூரில் இரண்டாம் பராந்தகச் சோழனால் கட்டப்பட்ட மூவர் கோவில் சிற்பங்கள் அழகானவை. திருச்சிராப்பள்ளி மாவட்டம், சீனிவாசநல்லூரில் உள்ள குரங்கநாதர் கோவில் சிற்பங்கள் குறிப்பிடத்தக்கவை. சோழர் கால இறுதியில் திருவரங்கக் கோவிலினுள் அமைக்கப்பட்ட சிற்பங்களில் வெளிப்படும் முக பாவனைகள் சோழர்காலச் சிற்பக்கலை நுட்பத்திற்கு மிகச்சிறந்த சான்றுகளாகும். சோழர்காலத்தில் மிகுதியான செப்புத் திருமேனிகள் உருவமைக்கப்பட்டன. கடவுளின் உருவங்களும், மனித உருவங்களும் மிகுந்த கலைநுட்பத்தோடு வடிவமைக்கப்பட்டன. சோழர்காலம் செப்புத்திருமேனிகளின் 'பொற்காலம்' என்று அழைக்கப்படும் அளவிற்கு அவை அழகுற அமைந்துள்ளன.

விஜயநகர மன்னர் காலச் சிற்பங்கள்

விஜயநகர மன்னர்கள் காலத்தில் கோவில்களில் மிக உயர்ந்த கோபுரங்கள்

தெரியுமா?

தமிழக அரசு, சிற்பக் கலைஞர்களைப் பரிசளித்துப் பாராட்டிச் சிற்பக்கலையை வளர்த்து வருகிறது. மாமல்லபுரத்தில் தமிழ்நாடு அரசு சிற்பக்கல்லூரியை நடத்தி வருகிறது. அக்கல்லூரியிலிருந்து ஆண்டுதோறும் சிற்பக் கலைஞர்கள் பலர் உருவாகின்றனர். சுவாமிமலை, கும்பகோணம், மதுரை ஆகிய இடங்களில் உலோகப் படிமங்கள் செய்யும் பயிற்சி நிலையங்கள் அமைந்துள்ளன. சென்னையிலும் கும்பகோணத்திலும் உள்ள அரசு கவின்கலைக் கல்லூரிகளில் சிற்பக்கலையைப் பயிலலாம். இக்கலைத்துறையில் மிகுதியான வேலைவாய்ப்புகள் உள்ளன. சிற்பக்கலை குறித்த செய்திகளை அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் தமிழ்நாடு தொழில்நுட்பக்கல்வி இயக்ககம் "சிற்பச்செந்நூல்" என்ற நூலை வெளியிட்டுள்ளது.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 184 23/05/18 4:32 PM

எழுப்பப்பட்டன. அக்கோபுரங்களில் சுதைகளாலான சிற்பங்கள் மிகுதியாக உள்ளன. அவர்கள் தெலுங்கு, கன்னடப்பகுதிகளுடன் தொடர்புகொண்டிருந்த காரணத்தால் அந்நாட்டுச் சிற்பக் கலையின் தாக்கம் தமிழகச் சிற்பங்களில் ஏற்பட்டது. ஆடை, அணிகலன்கள் அணிந்த நிலையில் உள்ள உருவங்கள் சிற்பங்களாயின. கோவில் மண்டபங்களில் மிகுதியான சிற்பத்தூண்கள் அமைக்கப்பட்டன. குதிரையின் உருவங்களைச் சிற்பங்களில் இடம் பெறச் செய்தனர். வீரர்கள் அமர்ந்த நிலையில் குதிரைகள் முன்கால்களைத் தூக்கி நிற்பது போன்ற சிற்பங்களை மண்டபத் தூண்களில் அமைத்தனர். அத்துடன் பல்வேறு ஓசைகளை எழுப்பும் இசைக் கற்றூண்களையும் அவர்கள் அமைத்தது குறிப்பிடத்தக்கது.

நாயக்கர் காலச் சிற்பங்கள்

நாயக்க மன்னர் பல இடங்களில் ஆயிரங்கால் மண்டபங்களை அமைத்தனர். அம்மண்டபத் தூண்களில் அழகிய சிற்பங்களைச் செதுக்கினர். மதுரை மீனாட்சி அம்மன் கோவில், இராமேசுவரம் பெருங்கோவில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோவில், கிருஷ்ணாபுரம் பெருமாள் கோவில், திண்டுக்கல் அருகே தாடிக்கொம்பில் உள்ள பெருமாள் கோவில், பேரூர் சிவன் கோவில் போன்ற இடங்களில் கலைநயம் மிக்க சிற்பங்களைக் காணமுடியும்.

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் ஆயிரங்கால் மண்டபத் தூண்களில் கண்ணப்பர், குறவன், குறத்தி போன்ற சிற்பங்கள் உள்ளன. அரிச்சந்திரன், சந்திரமதி சிற்பங்களில் ஆடை, ஆபரணங்கள் கலை நயத்துடன் காணப்படுகின்றன. இறந்த மைந்தனைக் கையில் ஏந்தியபடி நிற்கும் சந்திரமதி சிலையும் அமைந்துள்ளது.

கோயம்புத்தூருக்கு அண்மையிலுள்ள பேரூர் சிவன் கோவிலில் உள்ள சிற்பங்கள் நாயக்கர் காலச் சிற்பக் கலை நுட்பத்தின் உச்சநிலைப் படைப்பு என்று கூறலாம். விழியோட்டம், புருவ நெளிவு, நக அமைப்பு என மிக மிக நுட்பமாகக் கலைநயத்துடன்அவை படைக்கப்பட்டுள்ளன.

கிருஷ்ணாபுரம் வேங்கடாசலபதி கோவிலில் உள்ள குறவன் குறத்தி, இரதிதேவி சிலைகள் காண்போரை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளன.

பௌத்த–சமணச் சிற்பங்கள்

பௌத்த மதத்தைத் தழுவிய தமிழர்கள், புத்தரின் உருவத்தை அமர்ந்த, நின்ற, படுத்த (கிடை) நிலைகளில் சிற்பங்களாகப் படைத்து வழிபட்டனர். சமண மதத்தினர் அருகக் கடவுளின் உருவத்தையும், இருபத்து நான்கு தீர்த்தங்கரர் உருவங்களையும் சிற்பங்களாக்கியுள்ளனர். சமண மதத்தில் சில சிற்பங்கள் அளவுக்கு மீறிய உயரமும், பருமனும் உடையனவாக உள்ளன.

சான்றாக விழுப்புரம் மாவட்டம் செஞ்சிக்கு அண்மையில் உள்ள திருநாதர்குன்று என்னும் இடத்தில், ஒரு பாறையில் இருபத்துநான்கு தீர்த்தங்கரர் உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 185 23/05/18 4:32 PM

அது போலவே மதுரைக்கு அண்மையில் சமணர்களின் படுக்கைகள் செதுக்கப்பட்ட இடங்களிலும் மலைப்பாறைகளில் சமணச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

தனிச்சிறப்புகள்

பிறநாட்டுச் சிற்பங்களைக் காட்டிலும் தமிழகச் சிற்பங்கள் தனித்தன்மையுடன் திகழ்கின்றன. யோகக்கலை, நாட்டியக்கலைக் கூறுகளும் தமிழகச் சிற்பக்கலையில் இடம் பெற்றுள்ளன.

இன்றைய சிற்பக்கலை

தமிழகத்தில் கட்டப்படும் கோவில்களில் இன்றும் சுதைச் சிற்பங்களும் கற்சிற்பங்களும் அமைக்கப்பட்டு வருகின்றன. செங்கல், பைஞ்சுதை (சிமெண்ட்), கற்கள் ஆகியவற்றைக் கொண்டு கலைநயமிக்க சிற்பங்கள் உருவாக்கப்படுகின்றன. வெண்கலம் முதலான உலோகங்களாலும் செயற்கை இழைகளாலும் கடவுள் உருவங்களும் மனித உருவங்களும் உருவாக்கப்படுகின்றன. இன்றைய சிற்பக்கலை கோவில்களைக் கடந்து பலதுறைகளில் தன் இடத்தை நிறைவு செய்கிறது. பெரும் அரங்குகளில், காட்சிக்கூடங்களில், வரவேற்பறைகளில் காணப்படுகிற கலைநயம் மிக்க சிற்பங்கள், நினைவுப் பொருள்கள், பரிசுப் பொருள்கள், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் நேர்த்திமிகு சிற்பங்கள் போன்றவை தமிழர் சிற்பக்கலையின் மேன்மையை உலகுக்குப் பறை சாற்றுகின்றன.

KHWFEE

சிற்பங்கள் என்பன தெய்வங்களாகப் போற்றி வணங்குவதற்கும், ஏனைய உருவங்களாகக் கண்டு களிப்பதற்கும் மட்டுமல்ல! அவை வரலாற்றுப் பதிவுகளாகும்; மனித அறிவு வளர்ச்சியின் முதிர்ச்சியாகும்; அத்தகு சிறப்புமிக்க சிற்பக் கலையைப் போற்றிப் பாதுகாப்பது நமது கடமையாகும்.

கற்பவை கற்றபின்...

1. உங்கள் பகுதியில் உள்ள பழமையான சிற்பம் ஒன்றைப் பற்றிய செய்திக் குறிப்பை உருவாக்குக.
2. ஓவியர்/சிற்பி/இசைக் கலைஞர் ஒருவரைச் சந்தித்து அவர் கூறும் கலை நுட்பங்களையும் அனுபவங்களையும் தொகுத்து வகுப்பறையில் படித்துக் காட்டுக.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 186 23/05/18 4:32 PM

இயல் ஏழு

கவிதைப் பேழை

இராவண காவியம்

KI6BG2

நுழையும்முன்

பூத்துக் குலுங்கும் பூஞ்சோலை; அடர்ந்து வளர்ந்த பசுமரங்கள்; நீர் நிறைந்த நதிக்கரைகள்; பச்சை போர்த்திய புல்வெளிகள்; துள்ளித் திரியும் மானினங்கள்; மயில்கள், குயில்கள், கிளிகள் பறந்து திரியும் பறவைகளென இத்தகு அழகியல் சூழலைக் கண்டு மனம் மகிழ்ந்ததுண்டா? அழகைச் சுவைத்தால் மனம் புத்துணர்வு பெறும்; எண்ணம் வளமை பெறும். தமிழ் இலக்கியத் திரையில் மிகுதியான எழிலோவியங்களைச் சொல்லோவியங்களாகப் புலவர்கள் தீட்டி வைத்துள்ளனர். அவற்றில் சில காட்சிகளைக் கண்டு சுவைப்போம் வாருங்கள்.

குறிஞ்சி

அடுப்பிடு சாந்தமோடு அகிலின் நாற்றமும்
துடுப்பிடு மைவனச் சோற்றின் நாற்றமும்
மடுப்படு காந்தளின் மணமுந் தோய்தலாற்
கடைப்படு பொருளெலாம் கமழும் குன்றமே (52)

அருவிய முருகியம் ஆர்ப்பப் பைங்கிளி
பருகிய தமிழிசை பாடப் பொன்மயில்
அருகிய சிறைவிரித் தாடப் பூஞ்சினை
மருவிய குரக்கினம் மருண்டு நோக்குமால். (49)

சொல்லும் பொருளும்: மைவனம் – மலைநெல்; முருகியம்– குறிஞ்சிப்பறை; பூஞ்சினை–பூக்களை உடைய கிளை; சிறை– இறகு; சாந்தம் – சந்தனம்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 187 23/05/18 4:32 PM

முல்லை

பூவையும் குயில்களும் பொலங்கை வண்டரும்
பாஇசை பாடமுப் பழமும் தேனும்தந்
தேஇசை பெறும்கடறு இடையர் முக்குழல்
ஆவினம் ஒருங்குற அருகுஅ ணைக்குமால் (58)

முதிரையும் சாமையும் வரகும் பொய்மணிக்
குதிரைவா லியும்களம் குவித்துக் குன்றுஎனப்
பொதுவர்கள் பொலிஉறப் போர்அ டித்திடும்
அதிர்குரல் கேட்டுஉழை அஞ்சி ஓடுமே! (60)

சொல்லும் பொருளும்: பூவை– நாகணவாய்ப் பறவை; பொலம்– அழகு; கடறு– காடு; முக்குழல்–கொன்றை, ஆம்பல், மூங்கில் ஆகியவற்றால் ஆன குழல்கள்; பொலி– தானியக்குவியல்; உழை– ஒரு வகை மான்.

பாலை

மன்னிய முதுவெயில் வளைப்ப வாய்வெரீஇ
இன்னிளம் குருளைமிகு இனைந்து வெம்பிடத்
தன்னிழல் தங்கவே தாய்மை மீதுற
நன்னரில் வலியசெந் நாய்உய ங்குமே. (65)

கடிக்கமழ் மராமலர்க் கண்ணி அம்சிறார்
படிக்குற எருத்துக்கோடு அன்ன பாலைக்காய்
வெடிக்கவிட்டு ஆடிட விரும்பிக் கோலினால்
அடிக்கும் ஓசையின்பருந்து அஞ்சி ஓடுமே (67)

சொல்லும் பொருளும்: வாய்வெரீஇ– சோர்வால் வாய் குழறுதல்; குருளை– குட்டி; இனைந்து– துன்புறுதல்; உயங்குதல்– வருந்துதல். படிக்குஉற– நிலத்தில் விழ; கோடு– கொம்பு;.

மருதம்

கல்லிடைப் பிறந்த ஆறும்
கரைபொரு குளனும் தோயும்
முல்லைஅம் புறவில் தோன்று
முருகுகான் யாறு பாயும்
நெல்லினைக் கரும்பு காக்கும்
நீரினைக் கால்வாய் தேக்கும்
மல்லல்அம் செறுவில் காஞ்சி
வஞ்சியும் மருதம் பூக்கும் (72)*

மரைமலர்க் குளத்தில் ஆடும்
மயிர்த்தலைச் சிறுவர் நீண்ட
பொருகரிக் குருத்து அளந்து
பொம்மெனக் களிப்பர் ஓர்பால்
குரைகழல் சிறுவர் போரில்
குலுங்கியே தெங்கின் காயைப்
புரைதபப் பறித்துக் காஞ்சிப்
புனைநிழல்அருந்து வாரே. (77)

சொல்லும் பொருளும்: கல்–மலை; முருகு– தேன், மணம், அழகு; மல்லல்– வளம்; செறு– வயல்; கரிக்குருத்து– யானைத்தந்தம்; போர்– வைக்கோற்போர்; புரைதப– குற்றமின்றி.

நெய்தல்

பசிபட ஒருவன் வாடப்
பாத்துஇனி இருக்கும் கீழ்மை
முசிபட ஒழுகும் தூய
முறையினை அறிவார் போல
வசிபட முதுநீர் புக்கு
மலையெனத் துவரை நன்னீர்
கசிபட ஒளிமுத் தோடு
கரையினில் குவிப்பார் அம்மா (82)

வருமலை அளவிக் கானல்
மணலிடை உலவிக் காற்றில்
சுரிகுழல் உலர்த்தும் தும்பி
தொடர்மரை முகத்தர் தோற்றம்
இருபெரு விசும்பிற் செல்லும்
இளமைதீர் மதியம் தன்னைக்
கருமுகில் தொடர்ந்து செல்லுங்
காட்சி போல்தோன்று மாதோ. (84)

சொல்லும் பொருளும்: தும்பி– ஒருவகை வண்டு; துவரை–பவளம்; மரை– தாமரை மலர்; விசும்பு– வானம்; மதியம்–நிலவு.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 188 23/05/18 4:32 PM

பாடலின் பொருள்

1. தீயில் இட்ட சந்தன மரக் குச்சிகள், அகில் இவற்றின் நறுமணமும் உலையிலிட்ட மலை நெல்லரிசிச் சோற்றின் மணமும் வெளிப்படும் காந்தள் மலரின் மணமும் பரவித் தோய்ந்து கிடந்ததனால் எல்லா இடங்களிலும் உள்ள பொருள்கள் மணம் கமழ்ந்து காணப்பட்டன.

2. அருவிகள் பறையாய் ஒலிக்கும்; பைங்கிளி தானறிந்த தமிழிசையைப் பாடும்; பொன் போன்ற அழகிய மயில் தன் அருமையான சிறகினை விரித்து ஆடும்; இக்காட்சியினைப் பூக்கள் நிறைந்த மரக்கிளைகளில் அமர்ந்திருக்கும் குரங்கினம் மிரட்சியுடன் பார்க்கும்.

3. நாகணவாய்ப் பறவைகளும் குயில்களும் அழகுமிக்க வண்டுகளும் பாவிசைத்துப் பாடின. புகழ்பெற்ற முல்லை நில மக்களான ஆயர், முக்கனியும் தேனும் சேகரித்துக் கொண்டு முக்குழல் இசையால் மேயும் பசுக் கூட்டங்களை ஒன்று சேர்த்தனர்.

4. முதிரை, சாமை, கேழ்வரகு, மணி போன்ற குதிரைவாலி நெல் ஆகியவற்றை முல்லை நில மக்கள் அறுத்துக் கதிரடித்துக் களத்தில் குன்று போலக் குவித்து வைத்திருப்பர். கதிரடிக்கும் அதிர்வு தரும் ஓசையைக் கேட்டு மான்கள் அஞ்சி ஓடும்.

5. கொடிய பாலைநிலத்து வெயிலின் வெப்பத்தைத் தாங்க இயலாத செந்நாய்க்குட்டி வாய் மிகவும் உலர்ந்து குழறியது. இதனைக் கண்டு அதன் தாய் வருந்தியது. குட்டி இளைப்பாற எங்கும் நிழலில்லை. எனவே கடும் வெயிலில் தான் துன்புற்று நின்று, தனது நிழலில் குட்டியை இளைப்பாறச் செய்தது.

6. சிறுவர்கள் நன்கு மணம் வீசும் மராமலர்களை மாலையாக அணிந்திருந்தனர். எருதின் கொம்புகளைப் போன்றிருந்த பாலைக்காயை நிலத்தில் விழுந்து வெடிக்குமாறு அவர்கள் கோலினால் அடித்து விளையாடினர். அவ்வோசையைக் கேட்ட பருந்துகள் அச்சத்துடன் பறந்தோடின.

7. மலையிடையே தோன்றும் ஆறும் கரையை மோதித் ததும்பும் குளத்து நீரும் முல்லை நிலத்தின் அழகிய காட்டாறும் மருத நிலத்தில் பாய்ந்தோடும்; அங்கு நெற்பயிரினைக் காக்கும் வகையில் கரும்பு வளர்ந்து நிற்கும். பெருகி வரும் நீரினைக் கால்வாய்வழி வயலில் தேக்கி வளம் பெருக்கும். இத்தகு வளம் நிறைந்த மருதநில வயலில் காஞ்சி, வஞ்சி மலர்கள் பூத்து நிற்கும்.

8. தாமரை மலர்கள் பூத்திருந்த குளத்தில் சிறுவர்கள் நீராடினர். அக்குளத்தில் நீந்தும் யானையின் தந்தங்களை அளந்து பார்த்து, அதன் வடிவழகு கண்டு மகிழ்ந்தனர். சிறுகழல் அணிந்த சிறார்கள் வைக்கோற் போர் குலுங்கிடும்படி ஏறி, தென்னை இளநீர்க் காய்களைப் பறித்தனர். பின்னர்க் காஞ்சி மர நிழலில் அமர்ந்து அருந்தினர்.

9. தூய ஒழுக்கமுறையைப் பின்பற்றுபவர்கள், பசித்துயரால் துன்புறுவோரைக் கண்டு வருந்துவார்கள். அதுபோலத் தான் வாழும் இடமானது மூழ்குமாறு பெரும் கடலலை புகுந்து விட்டாலும், மலையளவு பவளங்களையும் நல் இயல்பு தோன்றும் ஒளி முத்துகளையும் நெய்தல் நிலத்தவர் கடற்கரையில் வந்து குவிப்பர்.

10. தும்பியானது கரையை நெருங்கி வருகின்ற மலை போன்ற அலையினைத் தடவி, கடற்கரை மணலிடை உலவி, காற்றிலே தன் நீண்ட சிறகினை உலர்த்தும். பின்னர்த் தாமரை மலரையொத்த பெண்களின் முகத்தினை நோக்கித் தொடர்ந்து செல்லும். அது வானில் முழு நிலவைத் தொடர்ந்து செல்லும் கருமேகத்தின் காட்சி போல் உள்ளது.

தெரிந்து தெளிவோம்

"இராவண காவியம் காலத்தின் விளைவு. ஆராய்ச்சியின் அறிகுறி. புரட்சிப் பொறி. உண்மையை உணர வைக்கும் உன்னத நூல்" – பேரறிஞர் அண்ணா

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 189 23/05/18 4:32 PM

இலக்கணக் குறிப்பு

இடிகுரல்– உவமைத்தொகை; இன்னுயிர்– பண்புத்தொகை; பிடிபசி– வேற்றுமைத்தொகை. பைங்கிளி– பண்புத்தொகை;

பூவையும் குயில்களும், முதிரையும், சாமையும், வரகும்– எண்ணும்மைகள். பெருங்கடல், முதுவெயில், இன்னிளங்குருளை– பண்புத்தொகைகள்; அதிர்குரல் – வினைத்தொகை; மன்னிய– பெயரெச்சம்; வெரீஇ– சொல்லிசை அளபெடை; கடிகமழ்– உரிச்சொற்றொடர்; மலர்க்கண்ணி– மூன்றாம் வேற்றுமைஉருபும் பயனும் உடன் தொக்க தொகை;

எருத்துக்கோடு– ஆறாம் வேற்றுமைத்தொகை; கரைபொரு– இரண்டாம் வேற்றுமைத் தொகை; மரைமுகம்– உவமைத்தொகை; கருமுகில்– பண்புத்தொகை; வருமலை– வினைத்தொகை;

பகுபத உறுப்பிலக்கணம்

பருகிய = பருகு+இன்+ ய்+அ;

பருகு – பகுதி;

இன்– இறந்த கால இடைநிலை (ன் கெட்டது விகாரம்);

ய் –உடம்படுமெய்; அ –பெயரெச்ச விகுதி

பூக்கும் = பூ + க் + க் + உம்;

பூ – பகுதி; க் – சந்தி

க் – எதிர்கால இடைநிலை;

உம் – வினைமுற்று விகுதி

தெரிந்து தெளிவோம்

கோர்வை/ கோவை : கோ என்பது வேர்ச்சொல். கோப்பு, கோவை, கோத்தல், கோத்தான், கோத்தாள் என்பதே சரி.

(எ.கா.) ஆசாரக்கோவை,

ஊசியில் நூலைக் கோத்தான்.

நூல் வெளி

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய தனித்தமிழ்ப் பெருங்காப்பியம் இராவண காவியம். இந்நூல் தமிழகக் காண்டம், இலங்கைக் காண்டம், விந்தக் காண்டம், பழிபுரி காண்டம், போர்க்காண்டம் என ஐந்து காண்டங்களையும் 3100 பாடல்களையும் கொண்டது. இந்நூல் புலவர் குழந்தை அவர்களால் இயற்றப்பட்டது. தந்தை பெரியாரின் வேண்டுகோளுக்கிணங்க 25 நாள்களில் இவர் திருக்குறளுக்கு உரை எழுதியுள்ளார். யாப்பதிகாரம், தொடையதிகாரம் உள்ளிட்ட முப்பதுக்கும் மேற்பட்ட இலக்கண, இலக்கிய நூல்களைப் படைத்துள்ளார்.

இராமாயணத்தில் எதிர்நிலை மாந்தராகப் படைக்கப்பட்ட இராவணனை முதன்மை நாயகனாகக் கொண்டு அமைக்கப்பட்டது இராவண காவியம்.

கற்பவை கற்றபின்...

1. *ஐவகை நிலங்களில் உங்கள் மாவட்டம்/ஊர் அமைந்த நிலவகை பற்றியும் அதன் கவின்மிகு காட்சியையும் படக் கட்டுரையாக்குக.*
2. *இப்பாடப்பகுதியில் உங்களை ஈர்த்த கவிதைக் காட்சியினை ஓவியமாகத் தீட்டுக/ கவிதை வடிக்க.*
3. *வைக்கோற் போர், நெற்குதிர், போரடிக்கும் களம் போன்ற உழவுத் தொழிலோடு தொடர்புடையவற்றின் விளக்கங்களைத் தொகுத்து வகுப்பில் கலந்துரையாடுக.*

KIF7HP

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 190 23/05/18 4:32 PM

கவிதைப் பேழை

இயல் ஏழு

நாச்சியார் திருமொழி

KIP3JC

நுழையும்முன்

பக்தி இலக்கியம் உணர்ச்சி நிறைந்த பாடல்களை உள்ளடக்கியது. இறையோடு ஒன்றுதலும் அதன்பால் அனைவரையும் சரணடையச் செய்வதும் பக்தி இலக்கியத்தின் பணியாக இருந்தது. இறையை நாயகனாக எண்ணி நாயகி பாவத்தில் பாடுவதும் காணப்படுகிறது. இப்பாவத்தில் பெண் கவிஞர் ஒருவர் பாடுவது உண்மைக் காதலெனக் கருதவைக்கிறது. ஆண்டாள் பாடியதால் அவர் திருமால் மீது காதல் கொண்டு பாடியதாகக் கொள்கின்றனர். அழகியலுக்கும் பக்திக்கும் இடம் தருகிற ஆண்டாள் கவிதைகள் கற்பவர் மனத்தைக் கவர்கின்றன.

கதிரொளி தீபம் கலசம் உடனேந்தி
சதிரிள மங்கையர் தாம்வந்து எதிர்கொள்ள
மதுரையார் மன்னன் அடிநிலை தொட்டுஎங்கும்
அதிரப் புகுதக் கனாக்கண்டேன் தோழீநான்.

(560)

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்துஎன்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீநான்.

(561)

சொல்லும் பொருளும்: தீபம் – விளக்கு; சதிர் – நடனம்; தாமம் – மாலை

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 191 23/05/18 4:32 PM

பாடலின் பொருள்

1. 'ஆடும் இளம் பெண்கள் கைகளில் கதிரவன் போன்ற ஒளியை உடைய விளக்கையும், கலசத்தையும் ஏந்தியவாறு வந்து எதிர்கொண்டு அழைக்கிறார்கள். வடமதுரையை ஆளும் மன்னன் கண்ணன் பாதுகைகளை அணிந்துகொண்டு புவி அதிர மகிழ்ச்சியுடன் நடந்து வருகிறான்'. இக்காட்சியைக் கனவில் கண்டதாக ஆண்டாள் கூறுகிறார்.

2. 'மத்தளம் முதலான இசைக்கருவிகள் முழங்குகின்றன. வரிகளையுடைய சங்குகளை நின்று ஊதுகின்றனர். அத்தை மகனும், மது என்ற அரக்கனை அழித்தவனுமான கண்ணன், முத்துகளையுடைய மாலைகள் தொங்கவிடப்பட்ட பந்தலின் கீழ், என்னைத் திருமணம் செய்துகொள்கிறான்'. இக்காட்சியைக் கனவில் கண்டதாக ஆண்டாள் கூறுகிறார்.

தெரிந்து தெளிவோம்

பெண்ணின் திருமண வயது 18; ஆணின் திருமண வயது 21 என்று சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலக்கணக் குறிப்பு

கொட்ட – வினையெச்சம்

முத்துடைத்தாமம் – இரண்டாம் வேற்றுமைத் தொகை

பகுபத உறுப்பிலக்கணம்

தொட்டு – தொடு (தொட்டு) + உ

தொடு – பகுதி, தொட்டு என ஒற்று இரட்டித்து இறந்தகாலம் காட்டியது – விகாரம்

உ – வினையெச்ச விகுதி

கண்டேன் – காண் (கண்) + ட் + ஏன்

காண் – பகுதி('கண்' எனக் குறுகியது விகாரம்), ட் – இறந்தகால இடைநிலை

ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

நூல் வெளி

திருமாலை வழிபட்டுச் சிறப்புநிலை எய்திய ஆழ்வார்கள் பன்னிருவர் ஆவர். அவருள் ஆண்டாள் மட்டுமே பெண் ஆவார். இறைவனுக்குப் பாமாலை சூட்டியதோடு தான் அணிந்து மகிழ்ந்த பூமாலையையும் சூட்டியதால், "சூடிக் கொடுத்த சுடர்க்கொடி" என அழைக்கப்பெற்றார். இவரைப் பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள் என்பர். ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு "நாலாயிர திவ்வியப் பிரபந்தம்" ஆகும். இத்தொகுப்பில் ஆண்டாள் பாடியதாகத் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்ற இரு தொகுதிகள் உள்ளன. நாச்சியார் திருமொழி மொத்தம் 140 பாடல்களைக் கொண்டது. நம் பாடப்பகுதியின் இரு பாடல்கள் ஆறாம் திருமொழியில் இடம்பெற்றுள்ளன.

கற்பவை கற்றபின்...

1. திருப்பாவையில் இடம்பெற்றுள்ள தொடைநயம் மிக்க பாடல்களுள் எவையேனும் இரண்டினை இணையத்திலோ நூலகத்திலோ திரட்டி வகுப்பறையில் பாடுக.
2. கண்ணனைப் பல்வேறு உறவுநிலைகளில் வைத்துப் பாடிய பாரதியார் பாடல்களுள் உங்களைக் கவர்ந்த பாடல்களைக் குறித்துக் கலந்துரையாடுக.
3. சங்க காலத்திலிருந்து தற்காலம் வரையுள்ள பெண் புலவர்களின் சில கவிதைகளைக் கொண்டு ஒரு கவிதைத் தொகுப்பு உருவாக்குக.

KIXYKZ

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 192 23/05/18 4:32 PM

விரிவானம்

இயல் ஏழு

செய்தி

– தி. ஜானகிராமன்

KJ7UHM

இசை மொழியைக் கடந்தது. அமைதியின் நாக்காக அது எல்லா மொழிகளையும் பேசுவது; மனங்களைக் கரைத்து அந்தரவெளியில் உலவச் செய்வது; சொற்களைப் புறக்கணித்துத் தனக்குள்ளிருக்கும் செய்தியை எந்தமொழி மனதிற்குள்ளும் செலுத்துவது. ஆரவாரங்கள், குழப்பங்கள், கூச்சல்கள், துயரங்கள் என எல்லாவற்றையும் கடந்த அமைதி வெளியில் மனங்களைக் கூட்டுவது. இசையின் செவ்வியைத் தலைப்படும் மனமானது இனம், நாடு என்ற எல்லைக்கோடுகளைத் தாண்டிவிடும். இசை தாண்டவைக்கும்.

நாகசுர வித்வான் ஒற்றை மாட்டு வண்டியிலிருந்து இறங்கி, வக்கீல் வீட்டில் நுழைந்தார். மகன் தங்கவேலுவும், வாத்தியங்களைத் தூக்கிக்கொண்டு ஒத்துக்காரரும் பின்னால் வந்தார்கள்.

பெரிய ஹால். வாசலிலிருந்தே அவரைக் கையைப் பிடித்து அழைத்துப்போன வக்கீல் உள்ளே குழுமியிருந்த கோஷ்டியை ஒவ்வொருவராக அறிமுகப்படுத்தி வைத்தார்.

"இவர்தான் பிலிப் போல்ஸ்கா, இந்தச் சங்கீத கோஷ்டியின் தலைவர்."

"நிறைகுடம்னு சொன்னீங்கள்ள, ஞாபகமிருக்கா?" என்று வக்கீலைப் பார்த்தார்.

"இருக்கு."

"சரியான வார்த்தை! கண்ணைப் பாருங்க. முகம் எவ்வளவு அழகாயிருக்கு, பாத்தீங்களா?"

போல்ஸ்காவுக்குப் பிறகு, கூட வந்திருந்த இருபது இருபத்தைந்து பேருக்கும் வக்கீல், வித்வானை அறிமுகப்படுத்தினார்.

மேலே ஏறி உட்கார்ந்து ஒத்துக்காரன் ஆரம்பித்ததும், ஓலையைச் சரிபண்ணிக்கொண்டார். தங்கவேலு மேடைக்குப் பின்னால் உட்கார்ந்துகொண்டான்.

நாட்டையைக் கம்பீரமாக ஓர் ஆலாபனம் செய்து கீர்த்தனத்தைத் தொடங்கினார்.

போல்ஸ்காவின் முகத்தில் புன்முறுவல் தவழ்ந்தது. விழி மேலே செருகியிருந்தது. அமிருத தாரையாகப் பெருக்கெடுத்த நாதப் பொழிவில் அவன் தன்னை இழந்துவிட்டான்போல் தோன்றிற்று. நாதம் அவனுடைய ஆத்மாவை, காணாத லோகங்களுக்கும் அநுபவங்களுக்கும் இழுத்துச் சென்றதுபோல் தோன்றிற்று. சளைத்துப் பாய் ஆற்றோடு போகிறவனைப்போல், இஷ்டப்படி வெள்ளம் தன்னை அடித்துப் போகும்படி விட்டுவிட்டான் அவன்.

சட்டென்று நாதம் நின்றது. போல்ஸ்காவின் கண் இன்னும் அந்த அநுபவத்தில் திளைத்துக்கொண்டிருந்தது. மேலே செருகிய விழிகள் கீழே இறங்கிப் பார்க்க ஒரு நிமிஷம் ஆயிற்று.

டையும் கால்சட்டையுமாகச் சப்பணம் கட்டி அமர்ந்திருந்த அந்தக் கூட்டம் அசையாது பார்த்துக்கொண்டிருந்தது.

"ஐயா, ஒரு சின்னச் சோதனை வைக்கப்போறேன்" என்றார் வித்வான், வக்கீலைப்பார்த்து.

"என்ன!"

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 193 23/05/18 4:32 PM

"பாருங்களேன்."

வக்கீல் ஒன்றும் புரியாமல் அவரைப் பார்த்தார்.

"தஸரிமா . . . மா" என்று ஆரம்பித்தார்.

சாமா ராகம் என்று அடையாளம் கண்ட வக்கீல், வைத்த கண் எடுக்காமல் பார்த்தார். ராகம் கொஞ்சம் கொஞ்சமாக மலர்ந்துகொண்டிருந்தது. நடு நிசியில் தோட்டத்தில் மலர்ந்து மணத்தைப் பெருக்கும் – அமைதியான மணத்தை வீசும் – பவழமல்லியின் நினைவு அவருள்ளத்தில் தோய்ந்தது. அவரது தலை அங்கும் இங்கும் விட்டுவிட்டு வரும் அந்த மணத்திற்கு இசைவாக அசைந்துகொண்டிருந்தது. ராகம் வளர்ந்துகொண்டிருந்தது.

யாரோ கையாட்டுகிற மாதிரி இருந்தது. திரும்பிப் பார்த்தார் வக்கீல். போல்ஸ்காதான். அவன் உடல் ராகத்தோடு இசைந்து அசைந்துகொண்டிருந்தது. இரண்டு கைகளையும் எதையோ வாங்கிக் கொள்வதுபோல் நீட்டிக்கொண்டிருந்தான். முகத்தில் ஒரு புன்சிரிப்பு. சன்னதம் வந்த வண்மாதிரி அந்த முகம் நினைவிழந்து எங்கேயோ ஆகாசத்தைப் பார்த்துக்கொண்டிருந்தது.

திடீரென்று உட்கார்ந்திருந்தவன் எழுந்துவிட்டான். கையை நீட்டியபடியே நின்றுகொண்டு, மெல்லிய காற்றில் அசையும் சம்பங்கி மரம் மாதிரி ஆடினான். ராகம் இன்னும் வளர்ந்தது.

நின்றுகொண்டிருந்தவன் அடியெடுத்து வைத்தான். கைகளை நீட்டி ஏந்திக்கொண்டே அடியெடுத்து வைத்தான். நடந்து நடந்து மேடை முன் வந்ததும், மெதுவாக முழந்தாளிட்டு உட்கார்ந்துகொண்டான். கையை மேடையோரத்தில் வைத்து முகத்தைப் புதைத்துக்கொண்டான்.

வக்கீலும் போல்ஸ்கா கோஷ்டியும் போல்ஸ்காவையே பார்த்துக்கொண்டிருந்தார்கள். போல்ஸ்கா எந்த உலகத்தில் அலைகிறானோ? எந்த வானில் திரிகிறானோ?

அவன் தவத்தைக் கலைத்துவிடப் போகிறோமே என்று பயந்தாரோ என்னவோ வித்வான்? ராக ஆலாபனத்தைக் கூட ஓர் இடத்தில் நிறுத்தாமல் அப்படியே கீர்த்தனையைத் தொடங்கிவிட்டார்.

"சாந்தமுலேகா..." குழந்தையைக் கொஞ்சுகிறதுபோல அந்த அடி கொஞ்சிற்று. சத்தியத்தைக் கண்டு இறைஞ்சுவதுபோல் கெஞ்சிற்று.

போல்ஸ்காவின் மெய் சிலிர்த்தது, முதுகு ஒரு சொடுக்குடன் உலுக்கியதில் தெரிந்தது.

கீர்த்தனம் முடிந்தது. வாத்தியம் நின்றது.

மேடையில் கைவைத்து, முகத்தைப் புதைத்துக்கொண்டிருந்த போல்ஸ்கா ஓர் எட்டு எட்டிப் வித்வானின் கையைப் பிடித்தான், கெஞ்சுகிறாற்போல ஒரு பார்வை.

"வேறு ஒன்றையும் வாசிக்காதீர்கள். என் உயிர் போய்விடும் போல் இருக்கிறது. வேறு வேண்டாம்."

"சாந்தமுலேகாவையே திரும்பி வாசிக்கச் சொல்றார்" என்று நிசப்தத்தைக் கலைக்கத் துணிவில்லாமல் மெதுவாகச் சொன்னார் வக்கீல்.

மீண்டும் அதே நாதம் பொழிந்தது.

ஐந்து, ஆறு தடவை திருப்பித் திருப்பிக் கீர்த்தனத்தை வாசித்து முடித்தார். கடைசியில் நாதம் மௌனத்தில் போய் லயித்ததுபோல, இசை நின்றது.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 194 23/05/18 4:32 PM

போல்ஸ்கா அப்படியே தலையை அசைத்துக்கொண்டே இருந்தான். கோயில் மணியின் கார்வையைப்போல அந்த நிசப்தத்தில் அவன் தலையும் உள்ளமும் ஆத்மாவும் அசைந்து ஊசலிட்டுக்கொண்டிருந்தன. மூன்று நிமிஷம் ஆயிற்று.

வக்கீல் ஒரு பெருமூச்சு விட்டார். தொண்டையில் வந்த கரகரப்பை, பயந்து பயந்து கனைத்தார்.

திருப்பிப் பார்த்தான் போல்ஸ்கா.

"மிஸ்டர் மணி, இதில் ஏதோ செய்தி இருக்கிறது. ஏதோ போதம் கேட்கிறது. எனக்கு ஒரு செய்தி; எந்த உலகத்திலிருந்தோ வந்த ஒரு செய்தி கேட்கிறது. அந்தப் போதத்தில்தான் திளைத்துக்கொண்டிருக்கிறேன். இன்னும் எனக்கு வேகம் அடங்கவில்லை. செய்திதான் அது. எனக்காக அனுப்பிய செய்தி. உலகத்துக்கே ஒரு செய்தி. உங்கள் சங்கீதத்தின் செய்தி அது!"

குழந்தையைப்போல் சிரித்துக்கொண்டே நினைத்ததைச் சொல்லத் தெரியாமல் தடுமாறினான் போல்ஸ்கா.

"புரிகிறதா?" என்று கேட்டான்.

"புரிகிறாற்போல் இருக்கிறது" என்றார் வக்கீல்.

எனக்கு நன்றாகப் புரிகிறது. அது செய்தி. உலகத்திலேயே எந்தச் சங்கீதமும் இந்தச் செய்தியை எனக்கு அளிக்கவில்லை. இரண்டு கைகளையும் நீட்டி அதை நான் ஏந்தி வாங்கிக்கொண்டுவிட்டேன். ஒருவரும், ஒரு கலையும், ஒரு சங்கீதமும் கொடுக்காத செய்தியை நான் இப்போது பெற்றுக்கொண்டுவிட்டேன்.

"என்னாங்க?" என்று கேட்டார் வித்வான்.

வக்கீல் மொழிபெயர்த்துச் சொன்னார் கேள்வியை.

"என்ன தோன்றிற்று என்று கேட்கிறாரா? உலகம் முழுவதும் பிணக்காடாகக் கிடக்கிறது. ஒரே இரைச்சல், ஒரே கூச்சல், ஒரே அடிதடி: புயல் வீசி மரங்களை முறிக்கிறது. அலை உயர உயர எழுந்து குடிசைகளை முழுக அடிக்கிறது. இடி விழுந்து சாலையின் மரங்கள் பட்டுப்போகின்றன. கட்டிடம் இடிந்து விழுகிறது. எங்கே பார்த்தாலும் ஒரே இரைச்சல் . . . இந்தப் போர்க்களத்தில், இந்த இரைச்சலில், நான் மட்டும் அமைதியைக் காண்கிறேன்.

மெதுவாக இந்த இரைச்சல் தேய்ந்து, இந்தப் பிரளயக் கூச்சலும் இரைச்சலும் மெதுவாக அடங்கித் தேய்கிறது. ஓர் அமைதி என் உள்ளத்தில் எழுகிறது. இனிமேல் இந்த இரைச்சலும் சத்தமும் யுத்தமும் என்னைத் தொடாது. நான் எழுந்துவிட்டேன். அரவமே கேட்காத உயரத்திற்கு, மேகங்களுக்கும் புயலுக்கும் அப்பாலுள்ள உயர்விற்கு, எழுந்து,

தெரிந்து தெளிவோம் — விருது மாலை

சாகித்திய அகாதெமி விருது பெற்ற தமிழ்ச் சிறுகதை எழுத்தாளர்கள்

1970 – அன்பளிப்பு (சிறுகதைகள்) – கு. அழகிரிசாமி
1979 – சக்தி வைத்தியம் (சிறுகதைத் தொகுப்பு) – தி. ஜானகிராமன்
1987 – முதலில் இரவு வரும் (சிறுகதைத் தொகுப்பு) – ஆதவன்
1996 – அப்பாவின் சிநேகிதர் (சிறுகதைத் தொகுப்பு) – அசோகமித்ரன்
2008 – மின்சாரப்பூ (சிறுகதைகள்) – மேலாண்மை பொன்னுசாமி
2010 – சூடிய பூ சூடற்க (சிறுகதைகள்) – நாஞ்சில் நாடன்
2016 – ஒரு சிறு இசை (சிறுகதைகள்) – வண்ணதாசன்

இதேபோல் மற்றவகை இலக்கியப் படைப்புகளுக்காகச் சாகித்திய அகாதெமி விருது பெற்றவர்களைப் பற்றியும் தெரிந்துகொள்க.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 195 23/05/18 4:32 PM

சிறுகதை என்பது...

சிறுகதை என்றால் சிறிய கதை, கொஞ்சப் பக்கங்களில் முடிந்து விடுவது என்பதல்ல; சிறுகதை என்ற பிரிவு இலக்கியத்தில் அதில் எடுத்தாளப்படும் பொருள் பற்றியது; ஒரு சிறு சம்பவம், ஒரு மனோநிலை, மனநிலை ஆகியவற்றை மையமாக வைத்து எழுதப்படுவது; எடுத்து எழுதுவது. சிறுகதையில் சம்பவமோ, நிகழ்ச்சியோ அல்லது எடுத்தாளப்படும் வேறு எதுவோ அது ஒன்றாக இருக்க வேண்டும்.

சிறுகதைப் பின்னலில் ஆரம்பம், மத்திய சம்பவம், அதன் வளர்ச்சி அல்லது வீழ்ச்சி என்ற மூன்று பகுதிகள் உண்டு. சாதாரணமான கதைகளில் இம்மூன்றும் படிப்படியாக வளர்ந்துகொண்டே போகும். சமீபத்தில் எழுதப்பட்ட அமெரிக்க சிறுகதைகளில் பழைய சம்பிரதாயமான ஆரம்பம், முடிவு என்ற இரண்டு பகுதிகளும் கிடையவே கிடையாது. கதை திடீரென்று மத்திய சம்பவத்தின் உச்சஸ்தானத்தில் ஆரம்பிக்கிறது. அதிலேயே முடிவடைகிறது. இன்னும் வேறு ஒரு விதமான கதைகளும் உண்டு. அவற்றில் முடிவு என்ற ஒன்று கிடையாது. அதாவது கதையை வாசிப்பது நமது சிந்தனையின் சலனத்தை ஊக்குவதற்கு ஒரு தூண்டுகோல்.

– புதுமைப்பித்தன்

அங்கே அமைதியை, அழியாத அமைதியைக் கண்டுவிட்டேன். இந்த அமைதி எனக்குப் போதும். இப்போதே நான் இந்த அமைதியில் கலந்துவிடத் தயாராயிருக்கிறேன்."

அமைதியுடன்தான் பேசினான் போல்ஸ்கா. வக்கீல் மொழிபெயர்த்துச் சொன்னார்.

வித்வான் திகைத்துப் போனார்.

"அமைதியா, அப்படியா தோணித்து இவருக்கு!"

"ஆமாம்."

"அப்படித்தானே சொல்கிறார் இவர்."

"வார்த்தைகூடச் சொல்லலையே நான். எப்படி இவருக்குத் தெரிஞ்சுது?"

"மிஸ்டர் போல்ஸ்கா, இந்தப் பாட்டும் அமைதி வேணும் என்றுதான் அலறுகிறது. நீங்கள் சொன்ன புயல், இடி என்ற மாதிரியில் சொல்லாவிட்டாலும், அமைதி, அமைதி என்று அமைதியைத்தான் கடைசி லட்சியமாக இந்தப் பாட்டு இறைஞ்சுகிறது."

"அப்படியா!" என்று போல்ஸ்காவும் சமைந்துபோய்விட்டான்.

"செய்திதான் இது. நாதத்துக்குச் சொல்லவா வேண்டும்! எந்த வரம்பையும் கடந்து செய்தியை அது கொடுத்துவிடும்" என்றான் அவன்.

"இந்தக் கையைக் கொடுங்கள். வாசித்த இந்தக் கையைக் கொடுங்கள். கடவுள் நர்த்தனமாடுகிற இந்த விரலைக் கொடுங்கள். நான் கடவுளை முகர்ந்து முத்தமிடுகிறேன்" என்று விரலைப் பிடித்து உதட்டில் வைத்துக்கொண்டான் போல்ஸ்கா.

(தி. ஜானகிராமனின் செய்தி என்னும் சிறுகதையின் ஒரு பகுதி.)

தெரியுமா?

தி. ஜானகிராமன் அவர்கள், தனது ஜப்பான் பயண அனுபவங்களை உதயசூரியன் என்னும் தலைப்பில் சுதேசமித்திரன் வார இதழில் எழுதினார். இது 1967 இல் நூலாக வெளியிடப்பெற்றது. ரோம், செக்கோஸ்லோவோக்கியா சென்ற அனுபவங்களைக் கருங்கடலும் கலைக்கடலும் என்னும் தலைப்பில் 1974இல் நூலாக வெளியிட்டார். தமது காவிரிக்கரை வழியான பயணத்தை நடந்தாய் வாழி காவேரி என்னும் தலைப்பில் நூலாக வெளியிட்டுள்ளார். இவரது மற்றுமொரு பயணக்கட்டுரை, அடுத்த வீடு ஐம்பது மைல் என்பதாகும்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 196 23/05/18 4:32 PM

நூல் வெளி

தி. ஜானகிராமன் தஞ்சை மண்வாசனையுடன் கதைகளைப் படைத்தவர். உயர்நிலைப்பள்ளி ஆசிரியராகவும் வானொலியில் கல்வி ஒலிபரப்பு அமைப்பாளராகவும் பணியாற்றியவர். வடமொழி அறிவும் சிறந்த இசையறிவும் கொண்ட இவர்தம் கதைகள் மணிக்கொடி, கிராம ஊழியன், கணையாழி, கலைமகள், சுதேசமித்திரன், ஆனந்த விகடன், கல்கி போன்ற இதழ்களில் வெளிவந்தன. நாவல்களையும் நாடகங்களையும் இவர் படைத்துள்ளார். "அவரவர் அனுபவிப்பதும் எழுத்தாக வடிப்பதும் அவரவர் முறை" என்னும் கோட்பாட்டைக் கொண்டவர் இவர். தமிழ்க் கதையுலகம் நவீனமயமானதில் இவரது பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

செய்தி என்னும் சிறுகதை சிவப்பு ரிக்ஷா என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளது. மிகவும் உயர்ந்த இசை சிறந்த கலைஞனால் கையாளப்படும்போது சொற்களின் எல்லையைத் தாண்டி இசையின் மூலமாகவே பொருள் கொடுக்கிறது என்பதை இக்கதை உணர்த்துகிறது.

தஞ்சாவூர் தமிழுக்கு அளித்த கொடை உ.வே. சாமிநாதர், மௌனி, தி.ஜானகிராமன், தஞ்சை பிரகாஷ், தஞ்சை இராமையா தாஸ், தஞ்சாவூர்க் கவிராயர் ஆகியோர்.

தெரிந்து தெளிவோம்

இந்திய இசையின் அழகான நுட்பங்களைத் தெளிவாக வாசித்துக் காட்டக்கூடிய இசைக் கருவிகளில் நாகசுரமும் ஒன்று. மங்கலமான பல நிகழ்வுகளில் இக்கருவி இசைக்கப்படுகிறது. இந்தச் சிறப்பான கருவி 600 ஆண்டுகளுக்கு முன்புதான் தமிழகத்தில் வாசிக்கப்பட்டது. 13ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சங்கீத இரத்னாகரம் என்னும் நூலில் இந்தக் கருவி கூறப்படவில்லை. 13ஆம் நூற்றாண்டு வரையிலுள்ள எந்தப் பதிவுகளிலும் இந்தக் கருவி பற்றிக் குறிப்பிடப்படவில்லை. தமிழகப் பழைமை வாய்ந்த கோவில் சிற்பங்களிலும் இந்தக் கருவி காணப்படவில்லை. ஆகவே இந்தக் கருவி இடைக் காலத்திற்குப் பின் ஏற்பட்டிருக்கலாம் என்று அறியமுடிகிறது. நாகசுரம் என்ற பெயரே சரியானது. நாகசுரக் கருவி ஆச்சா மரத்தில் செய்யப்படுகிறது. வெட்டப்பட்ட ஆச்சா மரத்துண்டுகளை நீண்ட நாள்கள் வைத்திருந்த பிறகே இக்கருவி உருவாக்கப்படுகிறது. எனவே பழைய வீடுகளிலிருந்து பிரிக்கப்பட்ட ஆச்சா மரக்கட்டைகளைக் கொண்டே நாகசுரம் செய்யப்படுகிறது. நாகசுரத்தின் மேல்பகுதியில் சீவாளி என்ற கருவி பொருத்தப்படுகிறது. சீவாளி, நாணல் என்ற புல் வகையைக்கொண்டு செய்யப்படுகிறது.

கற்பவை கற்றபின்...

1. *உலகில் அமைதியை நிலவச் செய்வதில் இசைக்கு நிகர் வேறெதுவும் இல்லை – இத்தொடர் குறித்துச் சொற்போர் நிகழ்த்துக.*
2. *பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள உங்களுக்குப் பிடித்த செய்யுள் பகுதிகளை வகுப்பில் இசையுடன் பாடி மகிழ்க.*

KJGQPA

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 197 23/05/18 4:32 PM

இயல் ஏழு

கற்கண்டு

புணர்ச்சி

KJQLQX

நிலைமொழி – வருமொழி

புணர்ச்சி என்பது இரண்டு சொற்களுக்கு இடையில் நிகழ்வது. இரண்டுக்கு மேற்பட்ட சொற்களாக இருந்தாலும் நிலைமொழி, வருமொழி – வருமொழி, நிலைமொழியாகி நிற்கும். எனவே, இருமொழிகளுக்கு இடையே நிகழ்வதுதான் புணர்ச்சி. ஒரு சொல்லோடு ஒட்டுகளோ, இன்னொரு சொல்லோ இணையலாம். அவ்வாறு இணையும்போது ஒலி நிலையில் மாற்றங்கள் நிகழ்வதுண்டு; மாற்றம் இல்லாமலும் சேர்வதுண்டு.

புணர்ச்சியில் நிலைமொழியின் இறுதி எழுத்தைப் பொருத்து உயிரீறு, மெய்யீறு எனவும் வருமொழியின் முதல் எழுத்தைப் பொருத்து உயிர்முதல் மெய்ம்முதல் எனவும் பிரிக்கலாம்..

புணர்மொழியின் இயல்பு

எழுத்து வகையால் சொற்கள் நான்கு வகைப்படும்.

கலை + அழகு	உயிரீறு
மண் + குடம்	மெய்யீறு
வாழை + இலை	உயிர்முதல்
வாழை + மரம்	மெய்ம்முதல்

மேலும் இப்புணர்ச்சியை நிலைமொழி இறுதி எழுத்து, வருமொழி முதல் எழுத்து அடிப்படையில் நான்காகப் பிரிக்கலாம்.

உயிர்முன் உயிர்	மணி (ண்+இ) + அடி = மணியடி
உயிர்முன் மெய்	பனி + காற்று = பனிக்காற்று
மெய்ம்முன் உயிர்	ஆல் + இலை = ஆலிலை
மெய்ம்முன் மெய்	மரம் + (க்+இ) கிளை = மரக்கிளை

இயல்பு புணர்ச்சியும் விகாரப் புணர்ச்சியும்

புணர்ச்சியில் நிலைமொழியும் வருமொழியும் அடையும் மாற்றங்களின் அடிப்படையில் புணர்ச்சியை இருவகைப் படுத்தலாம். புணர்ச்சியின்போது மாற்றங்கள் எதுவுமின்றி இயல்பாகப் புணர்வது இயல்பு புணர்ச்சி எனப்படும்.

வாழை + மரம்= வாழைமரம்

செடி + கொடி = செடிகொடி

மண் + மலை = மண்மலை

புணர்ச்சியின்போது ஏதேனும் மாற்றம் நிகழ்ந்தால் அது விகாரப் புணர்ச்சி எனப்படும். இந்த மாற்றம் மூன்று வகைப்படும். அவை:

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 198 23/05/18 4:32 PM

தோன்றல், திரிதல் கெடுதல்.

நுழைவு + தேர்வு = நுழைவுத்தேர்வு (தோன்றல்)

கல்லூரி + சாலை = கல்லூரிச்சாலை (தோன்றல்)

பல் + பசை = பற்பசை (திரிதல்)

புறம் + நானூறு = புறநானூறு (கெடுதல்)

உயிரீற்றுப் புணர்ச்சி

உடம்படுமெய்

உயிரை ஈறாக உடைய சொற்களின்முன் உயிரை முதலாக உடைய சொற்கள் வந்து சேரும்; அப்போது சொற்கள் சேராமல் தனித்து நிற்கும்; ஒன்று சேராத உயிரொலிகளை ஒன்று சேர்ப்பதற்கு அங்கு ஒரு மெய் தோன்றும். இதனை உடம்படுமெய் என்று சொல்வர்.

நிலைமொழியின் ஈற்றில் 'இ,ஈ,ஐ' என்னும் உயிரெழுத்துகளை ஈறாக உடைய சொற்கள் நிற்கும். அவற்றின்முன், பன்னிரண்டு உயிர்களையும் முதலாவதாக உடைய சொற்கள் சேரும். அந்நிலையில் யகரம் உடம்படுமெய்யாக வரும்.

மணி + அழகு = மணி + ய் + அழகு = மணியழகு

தீ + எரி = தீ + ய் + எரி = தீயெரி

ஓடை + ஓரம் = ஓடை + ய் + ஓரம் = ஓடையோரம்

'இ, ஈ, ஐ' தவிர, பிற உயிரெழுத்துகள் நிலைமொழி ஈறாக வரும்போது அவற்றின்முன் வருமொழியில் பன்னிரண்டு உயிர்களும் வந்து புணர்கையில் வகர மெய் தோன்றும்.

பல + உயிர் = பல + வ் + உயிர் = பலவுயிர்

பா + இனம் = பா + வ் + இனம் = பாவினம்

நிலைமொழி ஈறாக ஏகாரம் வந்து, வருமொழியில் பன்னிரண்டு உயிரெழுத்துகளையும் உடைய சொற்கள் வந்து

> இ ஈ ஐவழி யவ்வும் ஏனை
> உயிர்வழி வவ்வும் ஏமுனிவ் விருமையும்
> உயிர்வரின் உடம்படு மெய்யென் றாகும்.
> (நன்.162)

புணர்கையில் யகரமோ வகரமோ தோன்றும்.

சே + அடி = சே + ய் + அடி = சேயடி;

சே + வ் + அடி = சேவடி

தே + ஆரம் = தே + வ் + ஆரம் = தேவாரம்

இவனே + அவன் = இவனே +ய் + அவன் = இவனேயவன்

குற்றியலுகரப் புணர்ச்சி

வட்டு + ஆடினான் = வட்(ட்+உ) + ஆடினான் = வட்ட் + ஆடினான் = வட்டாடினான்

நிலைமொழியாக வரும் குற்றியலுகரத்தின் முன் உயிரெழுத்துகள் வந்தால், நிலைமொழியிலுள்ள உகரம் கெடும். வருமொழியிலுள்ள உயிரெழுத்து நின்ற மெய்யுடன் இணையும்.

குற்றியலுகரத்தைப் போலவே சில முற்றியலுகரத்துக்கும் இவ்விரு விதிகளும் பொருந்தும்.

உறவு + அழகு = உற(வ் +உ) = உறவ் + அழகு = உறவழகு

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 199 23/05/18 4:32 PM

தெரிந்து தெளிவோம்

தனிக்குறில் அல்லாது, சொல்லுக்கு இறுதியில் வல்லின மெய்கள் ஏறிய உகரம் (கு, சு, டு, து,பு, று) தன் ஒரு மாத்திரை அளவிலிருந்து அரை மாத்திரை அளவாகக் குறைந்து ஒலிக்கும். இவ்வாறு குறைந்து ஒலிக்கும் உகரம் குற்றியலுகரம் ஆகும். சொல்லின் இறுதியில் நிற்கும் உகரத்தின் முந்தைய எழுத்தைப் பொறுத்துக் குற்றியலுகரம் ஆறு வகைப்படும்.

நாக்கு, வகுப்பு	வன்தொடர்க் குற்றியலுகரம்
நெஞ்சு, இரும்பு	மென்தொடர்க் குற்றியலுகரம்
மார்பு, அமிழ்து	இடைத்தொடர்க் குற்றியலுகரம்
முதுகு, வரலாறு	உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்
எஃகு, அஃது	ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்
காது, பேசு	நெடில் தொடர்க் குற்றியலுகரம்

மெய்ம்மயக்கம்

புணர்ச்சியில் இரு சொற்கள் இணையும்போது வருமொழியில் க, ச, த, ப வந்தால் சில இடங்களில் மீண்டும் அதே எழுத்துத் தோன்றும். இதை 'வலி மிகுதல்' என்பர். இது போன்றே சில இடங்களில் மெல்லினமும் மிகுதல் உண்டு. குறிப்பாக, ங, ஞ, ந, ம என்ற நான்கு எழுத்துகளும் இவ்வாறு மிகும்.

1. 'ய'கர ஈற்றுச் சொற்கள் முன் மெல்லினம் மிகும்.
   எ.கா. மெய்+மயக்கம்=மெய்ம்மயக்கம்
   மெய்+ஞானம்=மெய்ஞ்ஞானம்
   செய்+நன்றி=செய்ந்நன்றி

2. வேற்றுநிலை மெய்ம்மயக்கத்தில் ய,ர,ழ முன்னர் மெல்லினம் மிகும்.
   எ.கா. வேய்+குழல்=வேய்ங்குழல்
   கூர்+சிறை=கூர்ஞ்சிறை
   பாழ்+கிணறு=பாழ்ங்கிணறு

3. 'புளி' என்னும் சுவைப் பெயர் முன்னர் வல்லெழுத்து மட்டுமன்றி மெல்லினமும் மிகும்.
   எ.கா. புளி+கறி=புளிங்கறி
   புளி+சோறு=புளிஞ்சோறு

4. உயிரெழுத்தை இறுதியில் கொண்ட மரப் பெயர்களுக்கு முன்னர் மெல்லினம் மிகும்.
   எ.கா. மா+பழம்=மாம்பழம்
   விள+காய்=விளங்காய்

5. 'பூ' என்னும் பெயர் முன்னர் வல்லினத்தோடு மெல்லினமும் மிகும்.
   எ.கா. பூ+கொடி=பூங்கொடி
   பூ+சோலை=பூஞ்சோலை
   பூ+தொட்டி=பூந்தொட்டி

கற்பவை கற்றபின்...

1. எழுத்துவகை அறிந்து பொருத்துக.

1. இயல் – அ. உயிர் முதல் உயிரீறு
2. புதிது – ஆ. உயிர் முதல் மெய்யீறு
3. ஆணி – இ. மெய்ம்முதல் மெய்யீறு
4. வரம் – ஈ. மெய்ம்முதல் உயிரீறு

KJZHSK

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 200 23/05/18 4:32 PM

2. புணர்ச்சிகளை 'முதல், ஈற்றுச்' சொல்வகையால் பொருத்துக.

1. செல்வி + ஆடினாள் – அ. மெய்யீறு + மெய்ம்முதல்

2. பாலை + திணை – ஆ. மெய்யீறு + உயிர்முதல்

3. கோல் + ஆட்டம் – இ. உயிரீறு + உயிர்முதல்

4. மண் + சரிந்தது – ஈ. உயிரீறு + மெய்ம்முதல்

3. சேர்த்து எழுதுக.

அ) தமிழ் + பேசு ஆ) தமிழ் + பேச்சு இ) கை + கள் ஈ) பூ + கள்

4. பொருத்தமான உடம்படுமெய்யுடன் இணைக்க.

அ) பூ + இனம் ஆ) இசை + இனிக்கிறது இ) திரு + அருட்பா ஈ) சே + அடி

சிந்தனை கிளர் வினாக்கள்

அ) குற்றியலுகரம், முற்றியலுகரம் இவற்றின் வேறுபாட்டை எழுதுக.

ஆ) தற்காலத் தமிழில் குற்றியலிகரத்தை எந்த அளவுக்குப் பயன்படுத்துகிறோம்?

இ) 'புணர்ச்சி இலக்கணம் கற்பது உரைநடை எழுதுவதற்கு உதவும்' – இக்கூற்றை ஆராய்க.

ஈ) கீழ்க்காணும் பத்தியில் உள்ள சொற்களைச் சேர்த்து எழுதுக.

தமிழின் 'தொன்மை + ஆன' இலக்கண 'நூல் + ஆகிய' 'தொல்காப்பியம் + இல்' 'சிற்பம் + கலை' பற்றிய குறிப்புக் காணப்படுகிறது. போரில் விழுப்புண்பட்டு இறந்த வீரருக்கு நடுகல் நடப்படும். 'அ + கல்லில்' அவ்வீரரின் உருவம் பொறிக்கப்பெறும். 'தமிழக + சிற்பம் + கலை'யின் தோற்றத்திற்கான சான்றாக 'இதனை + கொள்ளலாம்'. சிலப்பதிகாரத்தில் 'கண்ணகிக்கு + சிலை' வடித்த செய்தி இடம் பெற்றுள்ளது. மாளிகைகளில் பல 'சுதை + சிற்பங்கள்' இருந்ததை மணிமேகலை மூலம் 'அறிய + முடிகிறது'.

உ) படக்காட்சியிலிருந்து இருசொல் தொடர்களை அமைத்து, அவற்றின் புணர்ச்சி வகையினைக் கண்டறிக.

எ.கா. மரக்கிளை – விகாரப் புணர்ச்சி, மூன்று பெண்கள் – இயல்புப் புணர்ச்சி

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 201 23/05/18 4:32 PM

மதிப்பீடு

KK9DU8

பலவுள் தெரிக.

1. பல்லவர் காலச் சிற்பங்களுக்குச் சிறந்த சான்று _____

அ) மாமல்லபுரம் ஆ) பிள்ளையார்பட்டி இ) திரிபுவனவீரேசுவரம் ஈ) தாடிக்கொம்பு

2. 'பொதுவர்கள் பொலிஉறப் போர்அடித்திடும்' நிலப் பகுதி _____

அ) குறிஞ்சி ஆ) நெய்தல் இ) முல்லை ஈ) பாலை

3. மரவேர் என்பது _____ புணர்ச்சி

அ) இயல்பு ஆ) திரிதல் இ) தோன்றல் ஈ) கெடுதல்

4. 'அதிரப் புகுதக் கனாக் கண்டேன்' -யார் கனவில் யார் அதிரப் புகுந்தார்?

அ) கண்ணனின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்

ஆ)தோழியின் கனவில் ஆண்டாள் புகுந்தாள்

இ) ஆண்டாளின் கனவில் தோழி புகுந்தாள்

ஈ) ஆண்டாளின் கனவில் கண்ணன் புகுந்தான்

5) திருநாதர்குன்றில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளவை _____ .

அ) விலங்கு உருவங்கள் ஆ) தீர்த்தங்கரர் உருவங்கள்

இ) தெய்வ உருவங்கள் ஈ)நாட்டியம் ஆடும் பாவை உருவங்கள்

குறுவினா

1. செப்புத் திருமேனிகள் பற்றிக் குறிப்பு வரைக.

2. நடுகல் என்றால் என்ன?

3. இசைத் தூண்கள் யார் காலத்தில் அமைக்கப்பட்டவை?

4. கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது?

5. இடிகுரல், பெருங்கடல் – இலக்கணக் குறிப்புத் தருக.

6. பாலை நிலத்தில் பருந்துகள் பறந்ததன் காரணம் என்ன?

சிறுவினா

1. முழு உருவச் சிற்பங்கள் – புடைப்புச் சிற்பங்கள் இரண்டிற்கும் உள்ள வேறுபாடு யாது?

2. நாயக்கர் காலச் சிற்பங்களின் நுட்பங்கள் யாவை?

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 202 23/05/18 4:32 PM

3. இராவண காவியத்தில் இடம்பெற்ற இரண்டு உவமைகளை எடுத்துக்காட்டுக.

4. ஆண்டாளின் கனவுக் காட்சிகளை எழுதுக.

5. குறிஞ்சி மணப்பதற்கான நிகழ்வுகளைக் குறிப்பிடுக.

6. கைபிடி, கைப்பிடி – சொற்களின் பொருள் வேறுபாடுகளையும் அவற்றின் புணர்ச்சி வகைகளையும் எழுதுக.

நெடுவினா

1. இராவண காவியத்தில் உங்களை ஈர்த்த இயற்கை எழில் காட்சிகளை விவரிக்க.

2. தமிழ்நாட்டுச் சிற்பங்கள் கலைநயம் மிக்கனவாகவும் வரலாற்றுப் பதிவுகளாகவும் இருப்பதை நிறுவுக.

3. இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதைச் 'செய்தி' கதையின் மூலமாக விளக்குக.

மொழியை ஆள்வோம்

படித்துச் சுவைக்க.

வான் தந்த பாடம்	The Lesson the Sky Teaches
எத்தனை பெரிய வானம்!	How Vast is the sky!
எண்ணிப்பார் உனையும் நீயே;	Think you of yourself;
இத்தரை, கொய்யாப் பிஞ்சு,	The earth is a tiny
நீ அதில் சிற்றெறும்பே,	Guava fruit; you. like all
அத்தனை பேரும் மெய்யாய்	Others are a tiny ant
அப்படித் தானே மானே?	In it? is that not so?
பித்தேறி மேல்கீழ் என்று	Why talk madly of
மக்கள்தாம் பேசல் என்னே!	The high and the low?
– பாவேந்தர் பாரதிதாசன்	Pavendar Bharathidasan
	(translated by P. Parameswaran)

மொழிபெயர்க்க.

1. Strengthen the body
2. Love your Food
3. Thinking is great
4. Walk like a bull
5. Union is Strength
6. Practice what you have learnt

(– Putiya Athichoti by Bharathiyar)

மரபுத் தொடர்களைக் கொண்டு தொடர் அமைக்க.

எட்டாக்கனி, உடும்புப்பிடி, கிணற்றுத்தவளை, ஆகாயத் தாமரை, எடுப்பார் கைப்பிள்ளை, மேளதாளத்துடன். (எ.கா.) முயன்றால் எந்தச் செயலிலும் வெற்றி என்பது எட்டாக்கனி இல்லை.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 203 23/05/18 4:32 PM

பத்தியில் இடம்பெற்றுள்ள இயல்பு புணர்ச்சிகளையும் விகாரப் புணர்ச்சிகளையும் எடுத்தெழுதுக.

காஞ்சி கயிலாசநாதர் கோவில் சுற்றுச்சுவர் முழுவதும் சிற்பங்களின் கலைக்கூடமாகத் திகழ்கிறது. அதேபோன்று காஞ்சி வைகுந்தபெருமாள் கோவிலிலும் பல்லவர்காலச் சிற்பங்கள் மிகுதியாக உள்ளன. இங்குத் தெய்வச்சிற்பங்கள் மட்டுமல்லாது பிற சிற்பங்களும் கோவில் உட்புறச் சுவரில் செதுக்கப்பட்டுள்ளன. பல்லவர்காலக் குடைவரைக் கோவில்களின் நுழைவுவாயிலின் இருபுறங்களிலும் காவலர்கள் நிற்பதுபோன்று சிற்பங்கள் படைக்கப்பட்டுள்ளன.

மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக.

1. இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை போட்டனர்.
2. கயல் பானை செய்யக் கற்றுக் கொண்டான்.
3. நேற்று தென்றல் காற்று அடித்தது.
4. தென்னை மட்டையிலிருந்து நார் எடுத்தார்.
5. அணில் பழம் சாப்பிட்டது.
6. கொடியிலுள்ள மலரை எடுத்து வா.

(எ.கா.) இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை வேய்ந்தனர்.

கவிதை படைக்க.

மூடநம்பிக்கை, புவியைப் போற்று, அன்பின்வழி

(எ.கா.) மூடநம்பிக்கை

பூனை குறுக்கே போனதற்குக்
கவலைப்படுகிறாயே!
அந்தப் பூனைக்கு என்ன ஆனதோ?

மொழியோடு விளையாடு

விடையைத் தமிழ் எண்களில் எழுதுக.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 204 23/05/18 4:32 PM

கண்டுபிடிக்க.

1. எண்ணும் எழுத்தும் கண் – இந்தத் தொடரை ஒருவர் 1 2 3 4 1 5 6 7 4 8 2 என்று குறிப்பிடுகிறார். இதே முறையைப் பின்பற்றிக் கீழ்க்காணும் சொற்களை எப்படிக் குறிப்பிடுவார்?

   அ) எழுது ஆ) கண்ணும் இ) கழுத்து ஈ) கத்து

2. என் வகுப்பில் படிக்கும் அனைவரும் புதிய புத்தகம் வைத்திருந்தனர். இராமனும் புதிய புத்தகம் வைத்திருந்தான். எனவே, இராமன் என் வகுப்பு மாணவன் – இக்கூற்று

   அ) உண்மை ஆ) பொய் இ) உறுதியாகக் கூறமுடியாது

அகராதியில் காண்க.

ஏங்கல், கிடுகு, தாமம், பான்மை, பொறி

உவமைத் தொடர்களை உருவகத் தொடர்களாக மாற்றுக.

1. மலர்விழி வீணை வாசித்தாள்; கேட்டவர் வெள்ளம் போன்ற இன்பத்தில் நீந்தினர்.
2. குழலியின் இசையைச் சுவைத்தவர், கடல் போன்ற கவலையிலிருந்து நீங்கினர்.
3. தேன் போன்ற மொழியைப் பவளவாய் திறந்து படித்தாள்.
4. முத்துநகை தன் வில் போன்ற புருவத்தில் மை தீட்டினாள்.

காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

.....

.....

.....

.....

.....

.....

செயல் திட்டம்

உங்கள் மாவட்டத்தின் கலைநயம் மிக்க இடங்களின் சிறப்புகளைப் படங்களுடன் திரட்டிப் பள்ளியில் காட்சிப்படுத்துக.

நிற்க அதற்குத் தக

என்னை மகிழச்செய்த பணிகள்

(எ.கா.)

1. இக்கட்டான நேரத்தில் தம்பிக்கு உதவியதற்காக அப்பாவிடம் பாராட்டுப் பெற்றேன்.
2. எனது வகுப்றையில் கரும்பலகையின்கீழ் சிதறிக்கிடந்த சுண்ணக்கட்டித் துண்டுகளைத் திரட்டி எடுத்துக் குப்பைத் தொட்டியில் போட்டதற்கு ஆசிரியர் மற்றும் வகுப்புத் தோழர்களிடம் கைத்தட்டல் பெற்றேன்.
3. _____.

கலைச்சொல் அறிவோம்

குடைவரைக் கோவில் – *Cave temple*,
கருவூலம் – *Treasury*,
மதிப்புறு முனைவர் – *Honorary Doctorate*,
மெல்லிசை – *Melody*
ஆவணக் குறும்படம் – *Document short film* ,
புணர்ச்சி – *Combination*

அறிவை விரிவுசெய்

நட்புக்காலம் – கவிஞர் அறிவுமதி
திருக்குறள் கதைகள் – கிருபானந்தவாரியார்
கையா, உலகே ஒரு உயிர் – ஜேம்ஸ் லவ்லாக்
– தமிழில்: சா. சுரேஷ்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 205 23/05/18 4:32 PM

இணையத்தில் காண்க.

http://www.tamilvu.org/courses/degree/do51/do512.pdf
http://www.tamilvu.org/courses/degree/ao11/ao114/html/Ao114331.htm
http://www.tamilsurangam.in/literatures/divya_prabandham/naachiyaar_thirumozhi.html#.WqolcuhuZPY
https://sites.google.com/site/rsrshares/home/03-thi-janakiraman-stories-and-novels

இணையச் செயல்பாடுகள்

தமிழ்நாடு இ-சேவை

எளிதாய் விண்ணப்பிக்கலாமே இனி!

படிகள்

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி தமிழ்நாடு இ-சேவை என்னும் செயலியைப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியின் முதல் பக்கத்தில் ஆதார் சேவை, பான் கார்டு, குடும்ப அட்டை, வாக்காளர் அட்டை, காவல் துறை, திருமணச் சான்றிதழ், ஓட்டுநர் உரிமம் போன்ற பல்வேறு அரசு சார்ந்த இ-சேவைக்கான தெரிவுகள் கொடுக்கப்பட்டிருக்கும். அவற்றில் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்து எவ்வாறு விண்ணப்பிப்பது என்பதை அறிக.
- உதாரணத்திற்கு பான் கார்டு என்பதில் பான் பதிவு NSDL என்பதைத் தெரிவு செய்து online PAN application என்பதில் உங்கள் சுய விவரங்களைப் பூர்த்தி செய்து இ-சேவையில் விண்ணப்பிக்க.

செயல்பாட்டிற்கான உரலி

https://play.google.com/store/apps/details?id=com.tn.android.eservice

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 206 23/05/18 4:32 PM

இயல் எட்டு

வாழிய நிலனே

கற்றல் நோக்கங்கள்

- பழந்தமிழரின் சமூக வாழ்க்கை முறையைத் தற்காலச் சமுதாய வாழ்வுடன் ஒப்பிடல்
- விடுதலைப் போரில் தமிழர்கள் ஆற்றிய தொண்டினை உணர்ந்து நாட்டுணர்வு பெறுதல்
- இலக்கியங்கள் காட்டும் நாட்டு வளம் குறித்த செய்திகளை அறிந்து நாட்டை வளப்படுத்தும் ஊக்கத்தைப் பெறுதல்
- பல்வேறு நூல்களைப் படித்து, ஒரு தலைப்பையொட்டிக் கருத்துகளை ஒருங்கிணைத்துக் கூறும் திறனை வளர்த்துக் கொள்ளுதல்
- இலக்கியங்கள்வழியே பொருளிலக்கணத்தை உரிய விளக்கங்களுடன் கற்றல்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 207 23/05/18 4:32 PM

இயல் எட்டு

பழந்தமிழர் சமூக வாழ்க்கை

நுழையும்முன்

ஒவ்வொரு சமூகமும் தனக்கெனத் தனித்தன்மைகளைக் கொண்டுள்ளது. பல்வேறு சமூகங்களின் காலகட்டத்தையும் நாகரிகப் பாங்கையும் அறிவது பெருங்கல்வியாக அமைகிறது. ஒப்பீட்டளவில் தமிழ்ச்சமூகம் மூத்த சமூகமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அத்தகைய தமிழ்ச்சமூகத்தின் வாழ்க்கையை அறிவதென்பது பெருமிதம் தருவதாகும்.

LIFPHM

உலகில் இன்று வாழும் இனங்களுள் தொன்மையும் வரலாற்றுப் பெருமையும் பண்பாட்டுச் செழுமையும் நாகரிகச் சிறப்பும் கொண்டவை சிலவே. அவற்றுள் நம் தமிழ் இனத்திற்கு என்று ஒரு தனிச் சிறப்புண்டு. தமிழரின் சமூக வாழ்க்கை, தாமும் வாழ்ந்து, தம்மைச் சுற்றியிருக்கும் அனைவரையும் வாழவைக்கும் சிறப்புடையதாகத் திகழ்கிறது.

அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை என்ற இல்லறம், உண்பது நாழி உடுப்பவை இரண்டே என்னும் எளிய வாழ்க்கை, செல்விருந்து ஓம்பி வருவிருந்து எதிர்பார்க்கும் உயர் பண்பு, கொள்வதும் மிகைகொளாது கொடுப்பதுவும் குறைபடாது வாழும் கொள்கைச் சிறப்பு, களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே என்ற வீரம், அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு என்னும் தூய அன்பு, யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற உலகப் பொதுமை போன்ற தன்னேரில்லாத பண்புகளோடு உயர்ந்திருந்தது நம் தமிழர் சமுதாயம்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 208 23/05/18 4:32 PM

திணை நிலத் தெய்வங்கள்

தமிழர் திணைநிலத் தெய்வ வழிபாடு, இயற்கை வழிபாடு, நடுகல் வழிபாடு ஆகியவற்றைத் தமது வழிபாடுகளாகக் கொண்டிருந்தனர். குறிஞ்சிக்கு முருகனையும் முல்லைக்குத் திருமாலையும் மருதத்திற்கு இந்திரனையும் நெய்தலுக்கு வருணனையும் பாலைக்குக் கொற்றவையையும் தெய்வங்களாகக்கொண்டு வழிபட்டனர்.

வெற்றியைக் கொண்டாடக் கொற்றவை என்னும் பெண் தெய்வத்தை வணங்கும் மரபிருந்தது. இயற்கைப் பொருள்களான ஞாயிறு, நிலவு, நெருப்பு முதலானவற்றையும் அவர்கள் வணங்கினார்கள். வீரத்தை உணர்த்த வீரர்களுக்கு 'நடுகல் வழிபாடு' செய்வதும் வழக்கத்தில் இருந்தது.

நல்லமர்க் கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்

– அகநானூறு 67

விழாக்கள்

பழந்தமிழர் பல்வேறு விழாக்களைக் கொண்டாடியுள்ளனர். தைத்திங்கள் நோன்பு, தை நீராடல், கார்த்திகைத் திருநாள், திருவாதிரை விழா, பங்குனி உத்திர விழா, இந்திர விழா, வேலன் வெறியாட்டு விழா, இளவேனில் விழா போன்ற விழாக்களைச் சிறப்பாகக் கொண்டாடினர் என்பதை அகநானூறு, கலித்தொகை, பரிபாடல் முதலிய இலக்கியங்கள் மூலம் அறியலாம்.

அறுமீன் சேரும் அகலிரு நடுநாள்
மறுகு விளக்குறுத்து மாலை தூக்கி

– அகநானூறு 141

வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்
வெறியாட்டு அயர்ந்த காந்தளும்

– தொல். புறத். 63

பழக்க வழக்கங்கள்

பழந்தமிழ்ச் சமூகத்தில் தீ மூட்டக் கல்லை உரசுவது, நேரத்தையும் காலத்தையும் ஞாயிறு, நிலவு, விண்மீன்கள், கோள்கள், மலர்கள் பூக்கும் வேளை ஆகியவற்றைக் கொண்டு கணக்கிடுவது, இறந்தோரை முதுமக்கள் தாழியில் இட்டுப் புதைப்பது, விருந்தினரை வீட்டிற்கு வெளியே வந்து வழியனுப்புவது போன்ற பழக்கவழக்கங்கள் இருந்தன.

ஆடை, அணிகலன்கள்

சங்ககாலச் சமுதாய மக்கள் நேர்த்தியும் அழகும் மிக்க பல்வேறு வகையான ஆடை அணிகலன்களை அணிந்திருந்தனர். ஆடவர் இடையில் ஓர் ஆடையும், மேலே ஒரு துண்டும் அணிந்தனர்; சிலர் மேற்சட்டை அணிந்தனர். மேற்சட்டையைக் 'கஞ்சுகம்' என்றனர். பெண்கள் புடவை அணிந்தனர். பட்டு, பருத்தியாலான ஆடைகளை அனைவரும் பயன்படுத்தினர். மெல்லிய இழைகளால் நெய்யப்பட்ட ஆடைகள் பாம்பின் சட்டையைப்போலவும் புகையைப்போலவும் பாலாவிபோலவும் விளங்கின. துணிகளுக்கு வண்ணம் ஏற்றும் கலையையும் பழந்தமிழர் அறிந்திருந்தனர். துணி தைக்கும் பழக்கமும் இருந்தது. துணி தைப்பவர் 'துன்னக்காரர்' எனப்பட்டார்.

உலோகங்களாலும் விலையுயர்ந்த கற்களாலும் ஆன அணிகலன்களை அணிந்தனர். சிலம்பு, மேகலை, குழை, மோதிரம், கடகம் முதலானவற்றைப் பெண்கள் அணிந்து மகிழ்ந்தனர். சிறுவர் 'ஐம்படைத்தாலி' என்னும் கழுத்தணி அணிந்தனர்.

புகைவிரிந்தன்ன பொங்கு துகில் உடீஇ
ஆவியன்ன அவிர் நூற் கலிங்கம்

–புறம். 398:19

– பெரும்பாணாற்றுப்படை, அடி: 469

பொழுதுபோக்கு மற்றும் விளையாட்டுகள்

முல்லை நிலத்தின் 'ஏறு தழுவுதல்', ஆண்மகனின் வீரத்தைப் புலப்படுத்துவதாக இருந்தது. மற்றொரு சிறந்த வீரவிளையாட்டு மற்போரிடல். கிராமப்புறங்களில் கோழிச்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 209 23/05/18 4:32 PM

சண்டையும் ஆட்டுக்கிடாய்ச் சண்டையும் நடைபெற்றதைச் சங்க இலக்கியங்கள் பதிவுசெய்துள்ளன. யானைச்சண்டை நடைபெறுவதும் வழக்கத்தில் இருந்துள்ளது.

நகர்ப்புற மக்கள் மேடை அமைத்து, இசை, நாட்டியம், நாடகம் ஆகியவற்றைக் காண்பதைப் பொழுதுபோக்காகக் கொண்டிருந்தனர். பெண்கள் கழங்காடல், அம்மானை, பந்தாடுதல், ஓரையாடுதல் போன்ற விளையாட்டுகளில் ஈடுபட்டார்கள்.

தமிழர் உணவு

உயிர் காக்கும் அமுதம் 'உணவு' என்பதை அறிந்தோர் பழந்தமிழர். அவர்தம் உணவு இயற்கை உணவாகவும் உடலைப் பாதுகாப்பதாகவும் மருந்தாகவும் அமைந்திருந்தது. அவரவர் வாழிடத்திற்கேற்ப உணவு வேறுபட்டது. காய்கனி, இறைச்சி என இருவகை உணவையும் உட்கொண்டனர். நெல்சோற்றை நண்டுக்கறியோடும் காய்கறியோடும் உண்டனர். கடுகு இட்டுத் தாளிக்கும் பழக்கமும் இருந்துள்ளது. ஊறுகாய் போடும் பழக்கமும் நடைமுறையில் இருந்தது. அரிசி, தினை, வரகு போன்றவற்றையும் உண்டனர்.

அவைப்பு மாண் அரிசி அமலை வெண்சோறு
கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுகுவீர்

– சிறுபாணாற்றுப்படை, அடி: 194, 195

பண்டைத் தமிழர் திருமண முறை

பழந்தமிழர் வாழ்வு அகம், புறம் என இருதிறப்பட்டதாக இருந்தது. அக வாழ்வைப் பாடுவது 'அன்பின் ஐந்திணை' எனப்பட்டது.

தெரிந்து தெளிவோம்

இசைநூல்கள் சில

முதுநாரை, முதுகுருகு, பெருநாரை, பெருங்குருகு, பஞ்சபாரதீயம், இசை நுணுக்கம், பஞ்சமரபு

பெண்ணுக்கு மணமகன் பரிசம் அளிப்பது வழக்கத்தில் இருந்தது. மண நிகழ்வின்போது மணமக்களை நெல்லும் மலரும் கலந்த நீரால் நீராட்டி, தூய ஆடை அணிகலன்களை அணிவித்தனர். மணமுழவு ஒலிக்க மணமகளைத் தலைவனிடம் தந்து மூத்தோர் வாழ்த்துரை வழங்கினர்.

சிறுவளை விலையெனப் பெருந்தேர் பண்ணிளம்
முன்கடை நிறீஇச் சென்றிசி னோனே

– நற்றிணை, 300

இல்லறம்

அறத்தின் வழிப்பட்ட வாழ்க்கையைப் பழந்தமிழர் வாழ்ந்தனர். இதன் காரணத்தால்தான் குடும்ப வாழ்க்கை இல்லறம் எனப்பட்டது. இல்லறத்தார்க்கு விருந்தோம்பல், சுற்றம் தழுவல், வறியோர் துயர் துடைத்தல் ஆகியவை தலையாய கடமைகளாக இருந்தன.

இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்
அசையுடன் இருந்தோர்க்கு அரும்புணர்வு இன்மென

– நற்றிணை 214

தமிழர்தம் இல்வாழ்க்கை அன்பின் வழியதாகும். தலைவன் தலைவியர் செம்புலப் பெயல் நீர் போல் அன்புடை நெஞ்சம் கலந்தவர்கள். 'இம்மை மாறி, மறுமை ஆயினும் நீயாகியர் என் கணவர்' என மனைவியும் நரைமுடி வரினும் தலைநாள்போன்ற அன்போடு மனைவியைப் போற்றுவதைக் கணவரும் தம் கடமையாகக் கருதினர். அறிவறிந்த மக்களைப் பெறுவது இல்லறத்தின் நற்பேறு என வாழ்ந்தனர்.

பழந்தமிழகத்தில் கல்வி

திருக்குறளில் கல்வி, கேள்வி, அறிவுடைமை போன்ற அதிகாரங்கள், அக்காலக் கல்வியின் சிறப்பை விளக்குவன. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் கல்வியின் சிறப்பு பல இடங்களில் விளக்கப்பட்டுள்ளது. எண்ணும் எழுத்தும் கண்ணெனப் போற்றப்பட்டன. இவற்றுடன் வானியல்,

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 210 23/05/18 4:32 PM

மருத்துவம் போன்றவையும் கற்பிக்கப்பட்டன. கல்வி ஒருவனுக்கு உயர்வளிக்கும் என உறுதியாக நம்பியதால் எக்குடிப் பிறப்பினும் யாவரே ஆயினும் அக்குடியில் கற்றோரை மதித்தனர்.

அக்காலத்தே கல்வி கற்கும் இடங்களாக மரத்தடியும் ஊர் மன்றமும் ஆசிரியர் வீடும் வீட்டுத் திண்ணைகளும் அமைந்திருந்தன. பனையோலையில் எழுத்தாணி கொண்டு எழுதும் பழக்கம் இருந்தது.

பல்கேள்வித் துறை போகிய
தொல்லாணை நல்லாசிரியர்
உறழ் குறித் தெடுத்த உருகெழுகொடியும்
– பட்டினப்பாலை, அடி: 169–171

பழந்தமிழர் சமூகத்தில் தொழில்கள்

தமிழ்ச் சமூகத்தின் நல்வாழ்வுக்கு உறுதுணையாக இருக்கக்கூடிய பல்வேறு தொழில் பிரிவினர் இருந்தனர். தச்சுத் தொழில் மேலோங்கி இருந்தது. தேர், வண்டி, நாவாய்கள், படகுகள், வீடுகளுக்கான தூண்கள், கதவுகள், கட்டில்கள் முதலான பல பொருள்கள் செய்யப்பட்டன. இரும்பாலும் பொன்னாலும் கருவிகள் நகைகள் செய்யப்பட்டன. நெய்தல் தொழில் மேம்பட்டிருந்தது. உமணர் ஊர் ஊராகச் சென்று உப்பு வணிகம் செய்தனர். பாணர்கள், இசைக் கலைஞர்கள். இவர்கள் பெயரில் இலக்கியங்கள் படைக்கப்படும் அளவு சமூகத்தில் புகழ்பெற்றிருந்தனர். மீன்பிடித் தொழில் பற்றிய குறிப்புகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. உழவுத்தொழில் மிகப்பெரும் தொழிலாக இருந்தது. வேறு பலவகையான சிறுதொழில்கள் செய்வோரும் இருந்தனர்.

தமிழர் அறிந்த கலைகள்

இசை, நாட்டியம், நாடகம், ஓவியம், சிற்பம் முதலான பல்வேறு கலைகள் அக்காலத்தே செழித்திருந்தன. அவற்றுக்கான இலக்கண நூல்களும் தோன்றின. ஐவகை நிலத்திற்கும் தனித்தனியே பண்வகை, யாழ், பறை போன்றவை இருந்தன. பல்வேறு இசைக்கருவிகளைப் பயன்படுத்தினர். பாணன், பாடினி முதலான இசைக் கலைஞர்கள் சிறப்புப் பெற்றிருந்தனர்.

சங்ககாலத் தமிழர் மண்ணாலும் மரத்தாலும் தந்தத்தாலும் ஆன சிற்பங்களை அமைத்தனர். தமிழர்தம் ஓவிய மரபு தொன்மையானது. பழங்காலப் பாறை ஓவியங்கள் இதற்குச் சான்று பகர்கின்றன.

தமிழர் போற்றி வளர்த்த கலைகளுள் கூத்துக் கலையும் ஒன்று. கூத்தர், விறலியர் முதலிய கலைஞர் பலர் அக்காலத்தில் இருந்தனர். மன்னர்க்குரிய கூத்து 'வேத்தியல்' என்றும் மற்றவர்க்குரியவை 'பொதுவியல்' என்றும் அழைக்கப்பட்டன. கூத்துக்கலை போலவே நாடகக்கலையும் மக்களிடையே சிறப்பிடம் பெற்றிருந்தது.

பழந்தமிழர், உலக மக்கள் அனைவரையும் உறவினராய் எண்ணி வாழ்ந்தனர்; உலக உயிர்கள் அனைத்தையும் தழுவி நிற்கும் உயர்ந்த பண்புடன் திகழ்ந்தனர். இயற்கை அறிவியலில் சிறந்திருந்தனர்; தாவரத்திற்கும் உயிருண்டு என்பதை நீண்ட காலமாகவே அறிந்திருந்தனர். மரபும் தொழில்நுட்பமும் தொன்மையும் கலைப் பண்பாட்டுக் கூறுகளும் பழந்தமிழர் இயற்கையுடன் இயைந்த சமூகமாக வாழ்ந்தனர் என்பதைக் காட்டுகின்றன.

கற்பவை கற்றபின்...

1. உங்கள் மாவட்டத்தில்/வட்டாரத்தில் உள்ள தமிழர் உணவு வகைகளையும் அவற்றின் செய்முறைகளையும் சுவையையும் பயனையும் திரட்டி ஓர் உணவுக் குறிப்பேடு உருவாக்குக.
2. பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள் ஆகியவற்றை உணர்த்தும் பழமொழிகளின் தொகுப்பை உருவாக்குக.

LIPKJA

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 211 23/05/18 4:32 PM

இயல் எட்டு

கவிதைப் பேழை

சீவக சிந்தாமணி

LIYGKX

நுழையும்முன்

சங்க இலக்கியங்கள் நிகழ்வுகளில் கருத்தைக் கூறும் தன்னுணர்ச்சிப் பாடல்களாக அமைந்தன. அதனைத் தொடர்ந்து பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் அறக்கருத்துகளைக் கூறுவனவாக இருந்தன. பின்னர், ஒப்பில்லாத தலைவன் ஒருவனது வாழ்க்கையைப் பாடுவனவாய்க் காப்பியங்கள் உருவாயின. இவ்வகையில், சீவகனைத் தலைவனாகக் கொண்டு தோன்றிய காப்பியம் சீவக சிந்தாமணி. இன்பங்களைத் துறந்து துறவு பூணவேண்டும் என்பதே காப்பியத்தின் மையக் கருத்தாகும். ஏமாங்கத நாட்டின் வளத்தைத் திருத்தக்கத்தேவர் வருணிக்கும் பகுதி நாட்டின் சிறப்பை உணர்த்துகிறது.

ஏமாங்கத நாட்டு வளம்

பார் போற்றும் ஏமாங்கதம்

காய்மாண்ட தெங்கின் பழம்வீழக் கமுகின் நெற்றிப்
பூமாண்ட தீந்தேன் தொடை கீறி வருக்கை போழ்ந்து
தேமாங்கனி சிதறி வாழைப் பழங்கள் சிந்தும்
ஏமாங்கதம் என்று இசையால்திசை போயது உண்டே! 31

சொல்லும் பொருளும்:
தெங்கு – தேங்காய்; இசை – புகழ்;
வருக்கை – பலாப்பழம்; நெற்றி – உச்சி

வாரி வழங்கும் வள்ளல்

வள்ளல் கைத்தல மாந்தரின் மால்வரைக்
கொள்ளை கொண்ட கொழுநிதிக் குப்பையை
உள்ளம் இல்லவர்க்கு ஊர்தொறும் உய்த்துஉராய்
வெள்ளம் நாடு மடுத்து விரைந்ததே. 36

சொல்லும் பொருளும்:
மால்வரை – பெரியமலை;
மடுத்து – பாய்ந்து; கொழுநிதி – திரண்ட நிதி

மணம் கமழும் கழனி

நெறிமருப்பு எருமையின் ஒருத்தல் நீள்இனம்
செறிமருப்பு ஏற்றினம் சிலம்பப் பண் உறீஇப்
பொறிவரி வராலினம் இரியப் புக்குடன்
வெறிகமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே. 44

சொல்லும் பொருளும்:
மருப்பு – கொம்பு; வெறி – மணம்;
கழனி – வயல்; செறி – சிறந்த; இரிய – ஓட

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 212 23/05/18 4:32 PM

தலைவணங்கி விளைந்த நெற்பயிர்

சொல்அரும் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருஇருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே. 53

எல்லாம் ஆயிரம் ஆயிரமாய்

அடிசில் வைகல் ஆயிரம் அறப்புறமும் ஆயிரம்
கொடியனார் செய் கோலமும் வைகல்தோறும் ஆயிரம்
மடிவுஇல் கம்மியர்களோடும் மங்கலமும் ஆயிரம்
ஒடிவுஇலை வேறுஆயிரம் ஓம்புவாரின் ஓம்பவே. 76

சொல்லும் பொருளும்

அடிசில் – சோறு; மடிவு – சோம்பல்
கொடியன்னார் – மகளிர்

நாடுகள் சூழ்ந்த ஏமாங்கதம்

நற்றவம் செய்வார்க்கு இடம்தவம் செய்வார்க்கும் அஃது இடம்
நற்பொருள் செய்வார்க்கு இடம்பொருள் செய்வார்க்கும் அஃதுஇடம்
வெற்ற இன்பம் விழைவிப்பான் விண்உவந்து வீழ்ந்தென
மற்றநாடு வட்டமாக வைகும் அற்றநாடரோ. 77

சொல்லும் பொருளும்

நற்றவம் – பெருந்தவம்; வட்டம் – எல்லை; வெற்றம் – வெற்றி

ஐம்பெருங்காப்பியங்கள்

சிலப்பதிகாரம்

மணிமேகலை

குண்டலகேசி

வளையாபதி

சீவகசிந்தாமணி

பாடலின் பொருள்

1. தென்னை மரத்திலிருந்து நன்றாக முற்றிய காய் விழுகிறது. அது விழுகின்ற வேகத்தில், பாக்கு மரத்தின் உச்சியிலுள்ள சுவைமிக்க தேனடையைக் கிழித்து, பலாப் பழத்தினைப் பிளந்து, மாங்கனியைச்சிதற வைத்து, வாழைப் பழத்தினை உதிரச்செய்தது. இத்தகு வளம் நிறைந்த ஏமாங்கத நாட்டின் புகழ் உலகின் பலதிசைகளிலும் பரவியிருந்தது.

2. இரந்து கேட்பவர்க்கு இல்லை யென்னாது வாரி வழங்கும் செல்வர்களைப் போன்றது வெள்ளம். அது உயர்ந்த மலையிலிருந்து செல்வக் குவியலைச் சேர்த்துக்கொண்டு வந்து, ஊக்கமில்லாத மக்களுக்கு ஊர்தோறும் வழங்கும் வகையில் நாட்டினுள் விரைந்து பாய்கிறது.

3. அழகான கொம்புகளை உடைய ஆண் எருமைகளும் நேரான கொம்புகளையுடைய வலிமையான எருதுகளும் பேரொலி எழுப்புகின்றன. அவ்வொலி கேட்டுப் புள்ளிகளும் வரிகளும் உடைய வரால் மீன்கள் கலைந்து ஓடுகின்றன. அத்தகு மணம் வீசும் வயலில் உழவர் கூட்டம் வெள்ளம் போல் நிறைந்திருந்தது.

4. கருக்கொண்ட பச்சைப் பாம்புபோல நெற்பயிர்கள் தோற்றம் கொண்டுள்ளன. நெற்பயிர்கள் கதிர்விட்டு நிமிர்ந்து நிற்பது, செல்வம் பெற்ற பக்குவம் இல்லாதவர் தலைநிமிர்ந்து நிற்பதுபோல் உள்ளது. அப்பயிர்கள் முற்றியவுடன் நெற்கதிர்கள் சாய்ந்திருப்பது, தெளிந்த நூலைக் கற்ற நல்லவர்களின் பணிவைப்போல் உள்ளது.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 213 23/05/18 4:32 PM

5. வளம் நிறைந்த ஏமாங்கத நாட்டிலுள்ள ஊர்களில் நாள்தோறும் ஆயிரம் வகையான உணவுகள் கிடைக்கின்றன. உணவளிக்கும் அறச்சாலைகளும் ஆயிரம் இருக்கின்றன. அங்கே மகளிர் ஒப்பனை செய்துகொள்ள மணிமாடங்கள் ஆயிரம் இருக்கின்றன. மேலும், செய்தொழிலில் சிறிதும் சோம்பல் இல்லாத கம்மியர் ஆயிரம்பேர் உள்ளனர். அதனால் நிகழும் திருமணங்களும் ஆயிரமாக இருக்கின்றன. ஏமாங்கத நாட்டில் இல்லாதன இல்லை என்னும் வகையில், ஆயிரக்கணக்கான நிகழ்வுகள் குறைவின்றி நிகழ்கின்றன.

6. ஏமாங்கத நாடு, உண்மையான தவம் புரிவோர்க்கும் இல்லறம் நடத்துவோர்க்கும் இனிய இடமாகும். நிலையான பொருளைத் தேடுவோர்க்கும் நிலையில்லாத பொருட்செல்வத்தைத் தேடுவோர்க்கும் உகந்த இடமாகும். நாடுகள் சூழ்ந்து இருக்கும் எழில்மிகு சிறப்புப் பொருந்திய ஏமாங்கத நாடு வானுலகம் வழங்கும் இன்பம், உலகோர் ஏற்கும் வகையில் தாழ்ந்து மண்ணுலகிற்கு வந்ததுபோல் திகழ்ந்தது.

இலக்கணக் குறிப்பு

தேமாங்கனி, செந்நெல், தண்கடல், நற்றவம் – பண்புத்தொகைகள்;
விளைக – வியங்கோள் வினைமுற்று;
செய்கோலம் – வினைத்தொகை;
தேர்ந்த – பெயரெச்சம்;
இறைஞ்சி – வினையெச்சம்.

பகுபத உறுப்பிலக்கணம்

இறைஞ்சி – இறைஞ்சு+ இ
இறைஞ்சு – பகுதி; இ – வினையெச்ச விகுதி

ஓம்புவார் – ஓம்பு + வ் + ஆர்
ஓம்பு – பகுதி; வ் – எதிர்கால இடைநிலை;
ஆர் – பலர்பால் வினைமுற்று விகுதி

நூல் வெளி

சீவக சிந்தாமணி ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று. இது விருத்தப்பாக்களால் இயற்றப்பட்ட முதல் காப்பியமாகும். 'இலம்பகம்' என்ற உட்பிரிவு காணப்படுகிறது. 13 இலம்பகங்களைக் கொண்டுள்ள இந்நூல் 'மணநூல்' எனவும் அழைக்கப்படுகிறது. நாமகள் இலம்பகத்தில் நாட்டுவளம் என்னும் பகுதி பாடமாக அமைந்துள்ளது. இதன் ஆசிரியர் திருத்தக்கதேவர். சமண சமயத்தைச் சார்ந்த இவர், இன்பச்சுவை மிக்க இலக்கியமும் இயற்றமுடியும் என்று நிறுவும் வகையில் இக்காப்பியத்தை இயற்றினார். இவரது காலம் ஒன்பதாம் நூற்றாண்டு. சீவக சிந்தாமணி பாடுவதற்கு முன்னோட்டமாக 'நரிவிருத்தம்' என்னும் நூலைப் பாடினார் என்பர்.

கற்பவை கற்றபின்...

1. அருகிலுள்ள இயற்கைக் காட்சிகளைக் குறிப்பெடுத்து ஓவியம் தீட்டுக.
2. உங்கள் பள்ளி வேரூன்றிய நாள் தொடங்கி வளர்ந்த வரலாற்றையும் அதன் சிறப்புகளையும் கட்டுரையாக்குக.

LJ8CMK

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 214 23/05/18 4:32 PM

இயல் எட்டு

கவிதைப் பேழை

முத்தொள்ளாயிரம்

LJH8P8

நுழையும்முன்

ஒரு நாட்டின் வளத்தைப் பாடுவதைப் புலவர்கள் கவிமரபாகக் கொண்டிருந்தனர். பிற்காலக் காப்பியங்களில் நாட்டுவளம் தவறாது இடம்பெற்றது. முத்தொள்ளாயிரம் சேரன், சோழன், பாண்டியன் ஆகியோருடைய நாடுகளின் வளங்களை நயமாக வெளிப்படுத்துகிறது.

1. சேரநாடு

அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ
வெள்ளம்தீப் பட்ட(து) எனவெரீஇப்பு ள்ளினம்தம்
கைச்சிறகால் பார்ப்பொடுக்கும் கவ்வை உடைத்தரோ
*நச்சிலைவேல் கோக்கோதை நாடு.**

சொல்லும் பொருளும்: அள்ளல் – சேறு; பழனம் – நீர் மிக்க வயல்; வெரீஇ – அஞ்சி; பார்ப்பு – குஞ்சு.

அணி – தற்குறிப்பேற்ற அணி

2. சோழநாடு

காவல் உழவர் களத்துஅகத்துப் போர்ஏறி
நாவலோஓ என்றிசைக்கும் நாளோதை – காவலன்தன்
கொல்யானை மேலிருந்து கூற்றிசைத்தால் போலுமே
நல்யானைக் கோக்கிள்ளி நாடு.

சொல்லும் பொருளும்: 'நாவலோ' – நாள் வாழ்க என்பது போன்ற வாழ்த்து; இசைத்தால் – ஆரவாரத்தோடு கூவுதல்.

அணி – உவமை அணி

3. பாண்டியநாடு

நந்தின் இளஞ்சினையும் புன்னைக் குவிமொட்டும்
பந்தர் இளங்கமுகின் பாளையும்–சிந்தித்
திகழ்முத்தம் போல்தோன்றும் செம்மற்றே தென்னன்
நகைமுத்த வெண்குடையான் நாடு.

சொல்லும் பொருளும்: நந்து – சங்கு; கமுகு – பாக்கு.

முத்தம் – முத்து

அணி – உவமை அணி

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 215 23/05/18 4:32 PM

பாடலின் பொருள்

1. சேறுபட்ட நீர்மிக்க வயல்களில் அரக்கு நிறத்தில் செவ்வாம்பல்கள் மெல்ல விரிந்தன. அதைக் கண்ட நீர்ப்பறவைகள் தண்ணீரில் தீப்பிடித்துவிட்டது என்று அஞ்சி விரைந்து தம் குஞ்சுகளைச் சிறகுகளுக்குள் ஒடுக்கி வைத்துக் கொண்டன. அடடா! பகைவர் அஞ்சும் வேலைக் கொண்ட சேரனின் நாட்டில் இந்த அச்சம் இருக்கின்றதே.

2. நெல்லை அறுவடை செய்து காக்கும் உழவர்கள் நெற்போர் மீதேறி நின்று கொண்டு மற்ற உழவர்களை 'நாவலோ' என்று கூவி அழைப்பர். இவ்வாறு அவர்கள் செய்வது வீரர்கள் போர்க்களத்தில் கொல்யானை மீது ஏறி நின்று கொண்டு மற்ற வீரர்களை 'நாவலோ' என்று அழைப்பது போலிருந்தது. யானைப்படைகளை உடைய சோழனது நாடு, இத்தகு வளமும் வீரமும் மிக்கது.

3. சங்குகள் மணலில் ஈனுகின்ற முட்டைகள் முத்துகள் போலிருக்கின்றன. தரையில் உதிர்ந்துகிடக்கும் புன்னை மொட்டுகள் முத்துகள் போலிருக்கின்றன. பந்தல் போட்டதுபோல் தோன்றும் பாக்கு மரத்தின் பாளையிலிருந்து சிந்தும் மணிகளும் முத்துகள் போலிருக்கின்றன. முத்துகளால் ஆன வெண்கொற்றக் குடையை உடைய பாண்டியனது நாடு இத்தகைய முத்து வளம் மிக்கது.

இலக்கணக் குறிப்பு

அஞ்சி – பெயரெச்சம்

வெண்குடை, இளங்கமுகு – பண்புத் தொகைகள்

கொல்யானை, குவிமொட்டு – வினைத்தொகைகள்.

பகுபத உறுப்பிலக்கணம்

கொண்ட – கொள்(ண்) + ட் + அ

கொள் – பகுதி(ண் ஆனது விகாரம்)

ட் – இறந்தகால இடைநிலை;

அ – பெயரெச்ச விகுதி

நூல் வெளி

வெண்பாவால் எழுதப்பட்ட நூல் முத்தொள்ளாயிரம். மன்னர்களின் பெயரைக் குறிப்பிடாமல் சேர, சோழ, பாண்டியர் என்று பொதுவாகப் பாடுகிறது. மூன்று மன்னர்களைப் பற்றிப் பாடப்பட்ட 900 பாடல்களைக் கொண்ட நூல் என்பதால் முத்தொள்ளாயிரம் என்று பெயர்பெற்றது. நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை. புறத்திரட்டு என்னும் நூலிலிருந்து 108செய்யுள்கள் கிடைத்துள்ளன. அவை முத்தொள்ளாயிரம் என்னும் பெயரில் பதிப்பிக்கப்பட்டுள்ளன. ஆசிரியரின் பெயரை அறியமுடியவில்லை. இவர் ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவராகக் கருதப்படுகிறார். சேரநாட்டை அச்சமில்லாத நாடாகவும் சோழநாட்டை ஏர்க்களச் சிறப்பும் போர்க்களச் சிறப்பும் உடைய நாடாகவும் பாண்டி நாட்டை முத்துடை நாடாகவும் பாடப்பகுதி காட்டுகிறது.

கற்பவை கற்றபின்...

1. நீங்கள் வசிக்கும் பகுதி, வேந்தருள் யார் ஆண்ட நாடு என்பதை அறிந்து அவர்களைப் பற்றிய செய்தித் தொகுப்பேடு ஒன்றை உருவாக்குக.
2. நெல் விதைப்பது முதல் அரிசி புடைப்பது வரை வயல்களைக் காட்சியை அறிந்து தகுந்த படங்களுடன் வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

LJR4QV

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 216 23/05/18 4:32 PM

விரிவானம்

இயல் எட்டு

இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு

— மா.சு. அண்ணாமலை

நுழையும்முன்

இந்திய தேசிய இராணுவம் இந்திய விடுதலைக்காக உருவாக்கப்பட்ட அமைப்பு. இந்த அமைப்பின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள் நம் தமிழர்கள். விடுதலைப் போராட்டத்தை ஒளி மங்காமல் பாதுகாத்தவர்களுள் ஒருவரான நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களுடன் இணைந்து இந்திய தேசிய இராணுவப் படையில் போராடிய தமிழர்களின் பங்கு வியந்து போற்றத்தக்கது.

இரண்டாம் உலகப் போர் நடந்துகொண்டிருந்த 1942ஆம் ஆண்டு பிப்ரவரி 15ஆம் நாள் ஆங்கிலேயப் படைகள், மலேயாவில் ஜப்பானியரிடம் சரணடைந்தன. இப்படையில் இந்திய வீரர்களும் இருந்தனர். சரணடைந்த அவ்வீரர்களைக் கொண்டு ஜப்பானியர்கள், மோகன்சிங் என்பவரின் தலைமையில் இந்திய தேசிய இராணுவம் (ஐ.என்.ஏ) என்ற படையை உருவாக்கினர்.

இந்திய தேசிய இராணுவத்திற்கு மக்கள் ஆதரவு பெருகியது. அக்காலகட்டத்தில் தமிழகத்தில் இருந்து மலேயா, பர்மா போன்ற நாடுகளுக்குப் பிழைப்பிற்காகச் சென்ற தமிழர் பலர் இந்திய தேசிய இராணுவத்தில் சேர்ந்தனர். இந்திய தேசிய இராணுவத்தில் பல பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன. அதில் ஒன்றுதான் ஒற்றர்படை. ஜப்பானியர்கள் ஒற்றர்படையில்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 217 23/05/18 4:32 PM

இருந்த வீரர்களை, இந்தியாவில் உள்ள ஆங்கிலேய இராணுவத்தைப் பற்றி ஒற்றறிய நீர்மூழ்கிக்கப்பல் மூலம் கேரளாவிற்கும் குஜராத்திற்கும் அனுப்பினர். சிலரைத் தரைவழியில், பர்மாக் காடுகள் வழியாக இந்தியாவிற்கு அனுப்பினர். இந்திய இராணுவம் அவர்களைக் கைது செய்து சென்னைச் சிறைக்கு அனுப்பியது. பலருக்கு மரண தண்டனை அளித்தது.

தூண்களாகத் திகழ்ந்தவர்கள்

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் இந்திய தேசிய இராணுவத்தின் பொறுப்பை ஏற்க, 91நாள்கள் நீர்மூழ்கிக் கப்பலில் பயணம் செய்து ஜெர்மனியிலிருந்து சிங்கப்பூர் வந்தடைந்தார். 1943ஆம் ஆண்டு சூலை மாதம் 9ஆம் தேதி பதவியேற்றார். அவர் உரையாற்றிய மாபெரும் கூட்டத்தில் "டெல்லி நோக்கிச் செல்லுங்கள்"(டெல்லி சலோ) எனப் போர்முழக்கம் செய்தார். இவரின் வேண்டுகோள் அனைவரது மனத்திலும் பசுமரத்தாணிபோல் பதிந்தது.

நேதாஜி தலைமையில் இருந்த இந்திய தேசிய இராணுவப்படை பிரித்தானிய அரசை

நேதாஜியே தமிழ் வீரர்களைப் பாராட்டி நான் மறுபடியும் பிறந்தால் ஒரு தென்னிந்தியத் தமிழனாகப் பிறக்க வேண்டுமென்று கூறியிருக்கிறார்.

– பசும்பொன் முத்துராமலிங்கனார்

எதிர்த்தது. அப்போது தமிழகத்திலிருந்து பெரும்படையைத் திரட்டி இந்திய தேசிய இராணுவத்திற்கு வலுச்சேர்த்த பெருமைக்கு உரியவர் பசும்பொன் முத்துராமலிங்கனார்.

இந்திய தேசிய இராணுவப்படைத் தலைவராக இருந்த தில்லான் "இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்கள்தான்" என்றார்.

தெரியுமா?

வான்படைப் பிரிவு

இந்திய தேசிய இராணுவத்தில் இருந்து 45 வீரர்கள் நேதாஜியால் தேர்வு செய்யப்பட்டு, வான்படைத் தாக்குதலுக்கான சிறப்புப் பயிற்சி பெறுவதற்காக, ஜப்பானில் உள்ள இம்பீரியல் மிலிட்டரி அகடமிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அந்த 45பேர் கொண்ட பயிற்சிப் பிரிவின் பெயர்தான் டோக்கியோ கேடட்ஸ்.

யுத்தச் சூழலுக்கு நடுவில் இந்திய தேசிய இராணுவ வீரர்கள் டோக்கியோ செல்வது ஒரு சவாலாக இருந்தது. பர்மாவில் இருந்து காட்டுவழியாகப் பயணம் செய்து சயாம் மரண ரயில் பாதையைக் கடந்து அங்கிருந்து படகு வழியாகத் தப்பிச் சென்று பழைய கப்பல் ஒன்றில் ஏறி, சீறும் அலைகளில் சிக்கித் தவித்து முடிவில் ஜப்பானின் "கியூசு" தீவை அடைந்தனர். அந்தத் தீவு, கடற்படையின் வசம் இருந்தது. அங்கே, கடற்படைக்கான பயிற்சிகள் நடைபெற்றன.

காலை 5 மணிக்கு எழுந்து மூன்று மைல் தூரம் ஓடவேண்டும். அப்போது குளிர், பூஜ்யத்திற்குக் கீழ் இருக்கும். உதடுகள் வெடித்து வலி தாங்க முடியாது. பனிப்புகை படர்ந்த மைதானத்தில் ஓடுவார்கள். மூன்று மைல் தூரம் ஓடியதும் ஐந்து நிமிடங்கள் ஓய்வு, பிறகுதான் சிறப்புப் பயிற்சிகள். அதை முடித்துக்கொண்டு அவசரமாகக் குளித்துத் தயாராகி வர வேண்டும்.

– பசும்பொன் மடல், மடல் 32, இதழ் 8, ஜனவரி 2018, ப.14–16

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 218 23/05/18 4:32 PM

பெண்கள் படை உருவாக்கம்

இந்திய தேசிய இராணுவத்தில் ஜான்சிராணி பெயரில் பெண்கள் படை உருவாக்கப்பட்டது. இதன் தலைவர் டாக்டர் லட்சுமி. இப்படையில் தமிழ்ப் பெண்கள் பெருமளவில் பங்கேற்றார்கள். இதில் தலைசிறந்த தலைவர்களாக ஜானகி, இராஜாமணி போன்றோர் விளங்கினர்.

நேதாஜி அமைத்த தற்காலிக அரசில் கேப்டன் லட்சுமி, சிதம்பரம் லோகநாதன் முதலான தமிழர்கள் அமைச்சர்களாக இருந்தார்கள். சிறந்த தலைவர்களை உருவாக்க நேதாஜி 45 இளைஞர்களை டோக்கியோ அனுப்பினார். அவர்களில் பெரும்பாலோர் தமிழர்கள். அதில் பயிற்சி பெற்றவர்களுள் குறிப்பிடத்தக்கவர் கேப்டன் தாசன் ஆவார். அவர் பின்பு சுதந்திர இந்தியாவில் செசல்ஸ் நாட்டுத் தூதுவராகப் பணியாற்றினார்.

இரண்டாம் உலகப்போர்க் காலம்

இந்திய தேசிய இராணுவம் ஜப்பானிய இராணுவத்தோடு சேர்ந்து, ஆங்கிலேயரோடு போரிட பர்மா வழியாக இந்தியா வரத் திட்டமிட்டது.

தமிழ் மக்களை வைத்துப் போராடிய நேதாஜியைக் கண்டு ஆங்கிலப் பிரதமர் சர்ச்சில் கோபம் கொண்டார். 'மலேயாவில் உள்ள தமிழர்களின் இரத்தம் நேதாஜியின் மூளையில் கட்டியாக உள்ளது' என்று சர்ச்சில் கூறினார். அதற்கு நேதாஜி இந்தத் தமிழினம்தான் ஆங்கிலேயர்களை அழிக்கும் என்று பதில் கூறினார்.

நேதாஜியின் பொன் மொழி

அநீதிகளுக்கும் தவறான செயல்களுக்கும் மனம் ஒப்ப இடம் தருதல் மிகப் பெரிய குற்றமாகும். நீங்கள் நல்வாழ்வைத் தந்தே ஆக வேண்டும் என்பதுதான் காலத்தால் மறையாத சட்டமாகும். எந்த விலை கொடுத்தாவது சமத்துவத்திற்குப் போராடுவதே மிகச்சிறந்த நற்குணமாகும்.

மனதை மலரவைக்கும் இளங்கதிரவனின் வைகறைப் பொழுது வேண்டுமா?

அப்படியானால் இரவில் இருண்ட நேரங்களில் வாழக் கற்றுக்கொள்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 219 23/05/18 4:32 PM

தெரிந்து தெளிவோம்

நேதாஜியின் பொன்மொழி

விடுதலையினால் உண்டாகும் மகிழ்ச்சியும் சுதந்திரத்தினால் உண்டாகும் மனத்திருப்தியும் வேண்டுமா? அப்படியானால் அதற்கு விலையுண்டு. அவற்றுக்கான விலை துன்பமும் தியாகமும் தான்.

இரண்டாம் உலகப்போரில் பர்மாவில் நடந்த போர் 'மிகவும் கொடூரமானதாகும்". இந்திய தேசிய இராணுவம் 1944ஆம் ஆண்டு மார்ச் 18அன்று ஆங்கிலேயரை வென்று இந்தியாவிற்குள் மணிப்பூர்ப் பகுதியில் 'மொய்ராங்' என்ற இடத்தில் மூவண்ணக் கொடியை ஏற்றியது. ஆனால், அமெரிக்கர்களும், ஆங்கிலேயர்களும் சேர்ந்து போரிட்டதால் இந்த வெற்றி நிலைபெற்று நீடிக்கவில்லை. இப்போரில் ஒரு இலட்சம் இந்தியரும் ஜப்பானியரும் வீரமரணம் எய்தினர்.

மரணம் பெரிதன்று

இந்திய தேசிய இராணுவத்தைச் சேர்ந்த பதினெட்டு இளைஞர்கள், 1943-45ஆம் ஆண்டுகளில் சென்னைச் சிறையில் தூக்கிலிடப்பட்டனர்.

1944ஆம் ஆண்டு பதினெட்டே வயதான இராமு என்பவர் தூக்கிலிடப்பட்டார். அவர் தூக்கிலிடப்படுவதற்கு முதல்நாள் இரவு "நான் என் உயிரைக் கொடுப்பதற்குக் கொஞ்சமும் கவலைப்படவில்லை. ஏனெனில் நான் கடவுளுக்கு எதிராக ஒன்றும் செய்யவில்லை" என்று கூறினார்.

மரணதண்டனை பெற்ற அப்துல்காதர் பின்வருமாறு கூறினார்.

"வாழ்வின் பொருள் தெரிந்தால்தான் மனிதன் மேல்நிலை அடைவான். நாட்டிற்காக உயிர்நீத்த முழுநிலவினைப் போன்ற தியாகிகள் முன்பு நாங்கள் மெழுகுவர்த்திதான்".

இந்தியாவிற்கு விடுதலை பெற்றுத் தந்ததில் இந்திய தேசிய இராணுவத்தினரின் பங்கினை நாம் மறந்துவிட முடியாது. அவர்கள் தாயக நலனுக்காகத் தங்கள் வாழ்க்கையைத் தியாகம் செய்தனர். இந்திய விடுதலைப் போரில் ஈடுபட்ட தமிழர்கள் பலர் வீரமரணத்தைத் தழுவினர். அவர்களின் வீரம் போற்றுதலுக்குரியது. தங்கள் இன்னுயிர் இழந்த முகம் தெரியாத தமிழர்களின் அர்ப்பணிப்பு உணர்வையும் அஞ்சாத வீரத்தையும் நாட்டுப்பற்றையும் என்றும் போற்றுவது நம் கடமையாகும்.

நூல் வெளி

பேராசிரியர் மா.சு.அண்ணாமலை: "இந்திய தேசிய இராணுவம் – தமிழர் பங்கு" என்ற நூலுக்காகத் தமிழக அரசின் பரிசுபெற்றவர். இவர் தலைமையில் எடுக்கப்பட்ட குறும்படங்கள் சர்வதேச அளவில் பரிசுபெற்றன.

கற்பவை கற்றபின்...

1. நீங்கள் நாட்டிற்கு உங்கள் பங்கினை அளிக்க விரும்புகிறீர்களா? - இந்திய இராணுவத்தில் சேருவதற்கான தகுதி, அவர்களுக்கான பணிகள் குறித்த கருத்துகளைத் திரட்டி வகுப்பில் கலந்துரையாடுக.
2. எனக்குப் பிடித்த விடுதலைப் போராட்ட வீரர் என்ற தலைப்பில் அவர்தம் வாழ்க்கை நிகழ்வுகளைக் காலக்கோட்டில் உருவாக்குக.

LK9VU6

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 220 23/05/18 4:32 PM

இயல் எட்டு

கற்கண்டு

பொருளிலக்கணம்

LKIRVT

பொருளிலக்கணம் – தொல்காப்பியம்

எழுத்தும், சொல்லும் மொழியின் அமைப்பையும், பயன்பாட்டையும் கூறுகின்றன. பொருளிலக்கணம் தமிழர் வாழ்க்கையிலிருந்து பிறந்த இலக்கியத்தின் கொள்கைகள் பற்றிக் கூறுகின்றது.

அகப்பொருள், புறப்பொருள் என்று பொருளிலக்கணம் இருவகைப்படும்.

தலைவனுக்கும், தலைவிக்கும் இடையில் உள்ள அன்பையும், வாழ்க்கை நிகழ்வுகளையும் கூறுவதே அகப்பொருள்.

அகம் சாராத அறம், பொருள், வீடு, கல்வி, வீரம், கொடை, புகழ் முதலியவற்றைப் பற்றிக் கூறுவது புறப்பொருள்.

அகப்பொருள் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறும் இலக்கணம் அகத்திணை எனவும் புறப்பொருள் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறும் இலக்கணம் புறத்திணை எனவும் அழைக்கப்படுகின்றன.

அகத்திணை

ஐவகை நிலங்களில் வாழும் மக்களின் அன்பு ஒழுக்கத்தை முதல், கரு, உரி என்னும் மூப்பொருள்களின் வழி அகப்பொருள் இலக்கணமாகத் தொல்காப்பியர் கூறுகிறார்.

தொல்காப்பியர் காட்டும் அகத்திணைகள் கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல், பெருந்திணை என ஏழுவகைப்படும்.

வாழ்வியல் நிகழ்வுகள் நடைபெறுவதற்கு அடிப்படையாய் அமைந்த நிலமும், பொழுதும் முதற்பொருள் ஆகும்.

அகப்பாட்டுக்கு உரிய மூன்று பொருள்களுள் முதன்மை வாய்ந்தது உரிப்பொருள் ஆகும். உரிப்பொருள் என்பது அந்தந்தத் திணைக்குரிய ஒழுக்கம். அந்த உரிப்பொருளை உணர்வதற்கு ஒரு பின்னணி தேவைப்படுகிறது. அந்த நிகழ்வு நடக்கிற இடமும் நேரமும் அந்நிகழ்வை மேலும் சிறப்படையச் செய்கின்றன. இடமும் நேரமுமே நிலம், பொழுது என அழைக்கப்படுகின்ற முதற்பொருள்களாகும். இவ்விரண்டும் இன்றிச் செயல்கள் நடைபெறுவதில்லை.

ஐவகை நிலங்களும் திணைகளும்

மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி

தலைவனும், தலைவியும் உள்ளத்தால் இணைவதே குறிஞ்சித் திணை.

காடும் காடு சார்ந்த இடமும் முல்லை

தலைவன் வருகைக்காகக் காத்திருத்தல் முல்லைத் திணை.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 221 23/05/18 4:32 PM

வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம்

தலைவன் தலைவிக்கிடையே ஏற்படும் சிறுபிணக்காகிய ஊடல் மருதத்திணை.

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல்

கடலுக்குச் சென்ற தலைவன் பொழுதோடு திரும்பாததற்குத் தலைவி வருந்தியிருத்தல் நெய்தல் திணை.

சுரமும் சுரம் சார்ந்த இடமும் பாலை

தலைவன், தலைவியை விட்டுப் பிரிதல் பாலைத்திணை.

தெரிந்து தெளிவோம்

புறம் என்றால் வெளியே என்று பொருள்.

எ.கா புறநானூறு, புறநகர்

பக்கம் என்ற பொருளும் உண்டு.

எ.கா உட்புறம், வெளிப்புறம், வலப்புறம், மேற்புறம்.

புரம் என்பது நகரம் என்ற பொருளில் வரும்.

எ.கா காஞ்சிபுரம், விழுப்புரம்

பொழுது என்பது நிகழ்ச்சி நடைபெறும் காலம் ஆகும். காலத்தைத் தமிழர் இரண்டாகப் பிரிப்பர். அவை பெரும்பொழுது, சிறுபொழுது எனப்படும்.

ஒரு கவிதை நிகழ்வை உருவாக்கப் பயன்படும் வாழ்வியல் சார்ந்த பின்னணிப் பொருள்கள் கருப்பொருள்கள் ஆகும். ஒவ்வொரு திணைக்கும் இன்னின்ன கருப்பொருள்கள் அமையலாம் என்பதைத் தொல்காப்பியர் முதலான இலக்கண நூலார் கூறுகின்றனர். அவை தெய்வம், மக்கள், உணவு, விலங்குகள், மரம், பறவை, பண், பறை, தொழில், யாழ், ஊர், நீர், பூ என்பனவாகும். இவை அனைத்தும் திணைக்குத் திணை வேறுபடும்.

புறத்திணை

புறத்திணை என்பது பொது வாழ்க்கை. அகத்திணையை ஏழு பிரிவுகளில் கூறிய தொல்காப்பியர், புறத்திணையையும் ஏழு பிரிவுகளாகக் கூறுகிறார். அவை வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் ஆகிய திணைகளாகும்.

தெரிந்து தெளிவோம்

புறப்பொருள் வெண்பாமாலை என்னும் நூல் புறத்திணைகளைப் பன்னிரண்டாக வகைப்படுத்தியுள்ளது. அவை வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை. (திணையின் உட்கூறு துறை எனப்படும்.)

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 222 23/05/18 4:32 PM

திணை		விளக்கம்	துறை எண்ணிக்கை
1	வெட்சி	மன்னரின் ஆணைப்படி, வீரர்கள் பகை நாட்டுப் பசுக்கூட்டங்களைக் கவர்தலும் கவர்ந்தவற்றை மீட்டலும்.	பதினான்கு துறைகளை உடையது.
2	வஞ்சி	மண்ணாசை கொண்டு அரசன் போர்தொடுத்தலும் மண்ணாசையுடன் வரும் பகையரசனோடு எதிர்நின்று போரிடுதலும்.	பதின்மூன்று துறைகளை உடையது.
3	உழிஞை	பகை மன்னனின் கோட்டையை முற்றுகை இடுதலும் கோட்டையின் உள்ளிருக்கும் வேந்தன் கோட்டையைக் காத்தலும்.	எட்டுத் துறைகளை உடையது.
4	தும்பை	தனது வலிமையை நம்பி வந்த மன்னனை, எதிர்த்து வலிமையுடன் போரிடுதல்.	பன்னிரண்டு துறைகளை உடையது.
5	வாகை	போர்வீரம் மட்டுமல்லாமல் பல்வேறு ஒழுக்கங்களிலும் மற்றவரிலிருந்து மேம்பாடு மிக்கவராகத் தனித்து நிற்றல்.	பதினெட்டுத் துறைகளை உடையது.
6	காஞ்சி	நிலையாமையை உணர்த்துவது. சிறப்புடைய வீட்டின்பம் காரணமாக, பலவழிகளிலும் நிலையற்ற உலகில் பொருந்திய நல்ல நெறியினை மேற்கொள்ளுதல்.	இருபது துறைகளை உடையது.
7	பாடாண்	ஒருவர் பெற்ற கல்வி, புகழ், ஈகை, போன்ற மேம்பாடுகளைப் போற்றிப் பாடுதல்.	பத்துத் துறைகளை உடையது.

கற்பவை கற்றபின்...

1. பாடலில் காணப்படும் நிலத்தையும், கருப்பொருள்களையும் எழுதுக.

நெறிமருப்பு எருமையின் ஒருத்தல் நீள்இனம்
செறிமருப்பு ஏற்றினம் சிலம்பப் பண் உறீஇப்
பொறிவரி வராலினம் இரியப் புக்குடன்
வெறிகமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே..

LKSMXG

2. பத்தியில் இடம் பெற்ற நிலம், பொழுது, கருப்பொருள்களைப் பட்டியலிடுக.

கார்த்திகைத் திங்களில் உழவர் ஒருவர் மதுரையிலிருந்து கொடைக்கானலில் உள்ள முருகன் கோவிலுக்குக் காலை எட்டு மணிக்குச் சென்றார். கோவிலில் பால், தேன் போன்றவற்றால் திருமுழுக்குச் செய்யப்பட்டதைக் கண்டார்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 223 23/05/18 4:32 PM

3. திணையை உரிய நிகழ்வுடன் பொருத்துக.

திணை	நிகழ்வு
உழிஞை	எதிர் நின்று போரிடுதல்
வஞ்சி	பசுக்கூட்டங்களைக் கவர்தலும் மீட்டலும்
பாடாண்	வலிமையை நம்பிப் போராடுதல்
தும்பை	ஒருவரின் மேன்மைகளைப் பாடுதல்
வெட்சி	பகை மன்னரின் கோட்டையை முற்றுகையிடல்

4. தொல்காப்பியர் கூறும் புறத்திணைகளையும் ஒழுக்கங்களையும் அட்டவணைப்படுத்துக.

5. ஓவியங்கள் உணர்த்தும் புறத்திணைகளைக் கண்டறிக.



சிந்தனை வினா

1. நில அமைப்புக்கும், தமிழர் வாழ்வுக்கும் உள்ள தொடர்பு தற்காலத்தில் பொருந்துமா?
2. காஞ்சித்திணைக்கும் பாடாண் திணைக்கும் உள்ள தொடர்பினைக் குறிப்பிடுக.
3. ஆநிரை கவர்தலுக்கும் ஏறு தழுவுதலுக்குமான வேறுபாடுகளை எழுதுக.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 224 23/05/18 4:32 PM

மதிப்பீடு

பலவுள் தெரிக.

1. வேறுபட்ட குழுவினைக் கண்டறிக.

   அ) சிலம்பு, மேகலை, குழை, கடகம்

   ஆ) நோன்பு, நீராடல், திருநாள், விழா

   இ) ஊசல், கழங்காடல், ஓரையாடல், அம்மானைப் பந்தாடல்

   ஈ) கூத்து, பாடினி, இசை, சிற்பம்

2. சொல்லும் பொருளும் பொருந்தியுள்ளது எது?

   அ) வருக்கை - இருக்கை ஆ) புள் - தாவரம்

   இ) அள்ளல் – சேறு ஈ) மடிவு – தொடக்கம்

3. பாதிரி ஒத்த பூ, செய்கோலம் – இலக்கணக்குறிப்புத் தருக.

   அ) உருவகத்தொடர், வினைத்தொகை ஆ) உவமைத்தொடர், வினைத்தொகை

   இ) வினைத்தொகை, பண்புத்தொகை ஈ) வினைத்தொகை, உருவகத்தொடர்

4. நச்சிலைவேல் கோக்கோதை நாடு, நல்யானைக் கோக்கிள்ளி நாடு - இத்தொடர்களில் குறிப்பிடப்படுகின்ற நாடுகள் முறையே,

   அ) பாண்டிய, சேர நாடு ஆ) சோழ, சேர நாடு

   இ) சேர, சோழ நாடு ஈ) சோழ, பாண்டிய நாடு

5. வெறிகமழ் கழனியுள் உழுநர் வெள்ளமே – இவ்வடி உணர்த்தும் பொருள் யாது?

   அ. மணம் கமழும் வயலில் உழவர் வெள்ளமாய் உழுதிருந்தனர்

   ஆ. வறண்ட வயலில் உழவர் வெள்ளமாய் அமர்ந்திருந்தனர்

   இ. செறிவான வயலில் உழவர் வெள்ளமாய்க் கூடியிருந்தனர்

   ஈ. பசுமையான வயலில் உழவர் வெள்ளமாய் நிறைந்திருந்தனர்

குறு வினா

1. கருக்கொண்ட பச்சைப் பாம்பு, எதற்கு உவமையாக்கப்பட்டுள்ளது?

2. கொற்கைநகரில் முத்துக்களைப் போல் உள்ள பொருள்களாகக் காட்டப்படுவன எவை?

3. சுதைச்சிற்பங்கள் என்றால் என்ன?

4. அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ – இவ்வடியில் சேற்றையும் வயலையும் குறிக்கும் சொற்கள் யாவை?

5. நீங்கள் வாழும் நிலப் பகுதியின் திணை யாது?

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 225 23/05/18 4:32 PM

சிறுவினா

1. பழந்தமிழர், உலகமக்களை உறவினராய் எண்ணி வாழ்ந்தனர் – தொடர் உணர்த்தும் கருத்தை எழுதுக.
2. தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
3. புறப்பொருள் அமைந்த சங்க இலக்கிய நூல்களை அறிந்தெழுதுக.
4. சேர, சோழ, பாண்டிய நாட்டு வளங்களை முத்தொள்ளாயிரம் வழி விளக்குக.
5. ஏமாங்கத நாட்டில் எவையெல்லாம் ஆயிரக்கணக்கில் இருப்பதாகத் திருத்தக்கதேவர் பாடியுள்ளார்?

நெடுவினா

1. நீங்கள் அறிந்துகொண்ட தமிழரின் தன்னேரில்லாத பண்புகளை விவரிக்க.
2. ஏமாங்கத நாட்டு வளம் குறித்த வருணனைகளை நும் ஊரின் வளங்களோடு ஒப்பிடுக.
3. இந்தியதேசிய இராணுவத்தின் தூண்களாகத் திகழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதைக் கட்டுரைவழி நிறுவுக.

மொழியை ஆள்வோம்

படித்துச் சுவைக்க.

எல்லார்க்கும் பெய்யும் மழை

ஏந்திக்கொள்கிறார்கள் சிலர்
வரமாக
ஏற்றுக்கொள்கிறார்கள் சிலர்
வேறு வழியின்றி
ஒதுங்கிக்கொள்கிறார்கள் சிலர்
ஒத்துக்கொள்ளாதென
பாறையில் விழுந்து
பயன்படாமலே போகின்றன
சில துளிகள்
சாக்கடையில் விழுந்து
சங்கமமாகின்றன சில
ஆனாலும்
எப்போதும்போல
இன்னமும்
எல்லோருக்குமாகப்
பெய்துகொண்டுதான் இருக்கிறது
மழை!

காலை

ஒவ்வொரு முறையும்
காவிரி ஆற்றை
கடந்து செல்கையில்
நீந்திக் களித்த நாட்கள்
நினைவுக்கு வந்தன!
குளித்து மகிழ்ந்த ஆற்றை
குழந்தையிடம் காட்டிய போது
அவள் கேட்டாள். . .
"எப்படி அம்மா. . .
மணலில் நீந்திக்
குளித்தாய்?"

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 226 23/05/18 4:32 PM

மொழிபெயர்க்க.

Conversation between two friends meeting by chance at a mall.

Aruna: *Hi Vanmathi! It's great to see you after a long time.*

Vanmathi: *It's great seeing you. How long has it been? It must be more than 6 months. I'm doing good. How about you?*

Aruna: *Fine. I have come with my parents. They are inside the grocery shop. What about you?*

Vanmathi: *I came with my father. He has gone to buy tickets for a 3D movie.*

Aruna: *Which movie?*

Vanmathi: *Welcome to the jungle.*

Aruna: *Great! I am going to ask my parents to take me to that movie.*

பொருத்தமான இடங்களில் அடைமொழியிட்டு, சொற்றொடரை விரிவாக்குக.

1. புத்தகம் படிக்கலாம் (நல்ல, ஆழ்ந்து, நாளும், தேர்ந்து, மகிழ்ந்து, உணர்ந்து)
2. விளையாடுவது நன்று (ஓடியாடி, மாலையில், சேர்ந்து, திடலில், அனைவருடன்)

(எ.கா) நல்ல புத்தகம் படிக்கலாம், நாளும் நல்ல புத்தகம் படிக்கலாம்

பிழை நீக்குக.

பெறுந்தலைவர் காமராசர் பள்ளிப் படிப்பை நிரைவு செய்யவில்லை எண்ராலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் புத்தகங்கள் படிக்கும் அலவுக்கு புலமைகள் பெற்றிருந்தது பலருக்குத் தெரியாது. ஆங்கிலச் செய்தி இதழ்கலை நாள்தோறும் படித்தது. எப்போது அரையை விட்டு வெளியே போனாலும் மின்விசிரியை நிருத்த மறப்பதில்லை. வெளியூருக்குச் செல்லும்போது தம்முடைய துணிமனிகளைத் தாமே எடுத்துவைத்துக்கொள்வார்.

சுருக்கி வரைந்து பொருத்தமான தலைப்பிடுக.

பெரியாரின் மனைவி நாகம்மையார் பகுத்தறிவு வாழ்க்கை நெறிக்குள் ஆட்படுத்தப்பட்டதோடு, அவருடன் இணைந்து பொது வாழ்க்கையிலும் ஈடுபட்டார். அகில இந்திய காங்கிரசுக் கட்சியின் தமிழ் மாநிலத்தின் முதல் பெண் சார்பாளராகத் (பிரதிநிதியாக) தேர்வாகிப் பங்கு பெற்றிருக்கிறார். இவரும் பெரியாருடைய தங்கை கண்ணம்மாவும் தென்னகத்தில் மதுவிலக்குப் போராட்டத்தை, மகாத்மா காந்தியின் ஆணையையேற்று முன்னின்று நடத்தினர். அப்போதெல்லாம் கள்ளுக்கடைகள் ஊருக்கு வெளியே பெண்கள் போக முடியாதபடி அமைந்திருக்கும். அங்கேயே சென்று பெண்கள் மறியல் நடத்தியது, ஆங்கில ஆட்சியாளரை அதிர வைத்தது. காந்தியடிகளிடம் மதுவிலக்குப் போராட்டத்தைக் திரும்பப் பெறுமாறு கேட்டபோது மும்பையிலிருந்து அவர் சொன்னார், "அது என் கையில் இல்லை; ஈரோட்டிலிருக்கும் இரண்டு பெண்கள் கையில்தான் இருக்கிறது" என்று. வைக்கம் போராட்டத்தில் பெரியார் சிறை பிடிக்கப்பட்ட பின் அந்தப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்த வைக்கம் சென்றார் அன்னையார். ஆண்களின் போராட்டத்தை எளிதாகக் கையாண்ட அரசு, பெண்களின் இந்தப் போராட்டத்தைக் கண்டு திகைத்தது. பெரியாரின் அனைத்துப் பணிகளுக்கும் உறுதுணையாக இருந்ததுடன் இயக்கத் தோழர்களை அன்புடன் அரவணைத்து அன்னமிட்ட அன்னையாகத் திகழ்ந்தார்; குடியரசு இதழின் பதிப்பாளராகப் பணியாற்றினார்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 227 23/05/18 4:32 PM

படங்கள் காட்டும் திணைநிலை வாழ்வை அழகுற விவரிக்க.

பாராட்டுமடல் வரைக.

இராணுவத்தில் சிறப்பாகப் பணிபுரிந்துவரும் இராணுவ வீரரைப் பாராட்டிப் பாராட்டுமடல் வரைக.

நயம் பாராட்டுக.

வயலிடைப் புகுந்தாய் மணிக்கதிர் விளைத்தாய்
வளைந்துசெல் கால்களால் ஆறே!
அயலுள ஓடைத் தாமரை கொட்டி
ஆம்பலின் இதழ்களை விரித்தாய்
கயலிடைச் செங்கண் கருவரால் வாளை
கரைவளர் தென்னையில் பாயப்
பெயரிடைப் பட்ட வானெனத் தோன்றும்
பெருங்குளம் நிறைந்து விட்டாயே! – வாணிதாசன்

மொழியோடு விளையாடு

புதிர் அவிழ்க்க.

நான்கெழுத்துக்காரன்;
முதல் இரண்டும்
அம்மாவில்
"மா"வைத் தொலைத்து நிற்கும்;
அடுத்த எழுத்தைச் சேர்த்தால்
வில்லின் துணைவன்;
கடை இரண்டும்
கணக்கில் 'இது' என்பர்.!
முழுதாய்ப் பார்த்தால்
மேகத்திடை தெரிவான்!
அவன் யார்?

அகராதியில் காண்க

ஈகை

குறும்பு

கோன்

புகல்

மொய்ம்பு

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 228 23/05/18 4:32 PM

பண்புத்தொகைகளை இட்டு நிறைவு செய்க.

(இன்னோசை , பேரொளி , சிற்றோடை , பேரின்பம் , பைங்கிளி , பேரூர், செந்தாமரை)

மானாமதுரை ஓர் அழகான _____; நீண்டவயல்களும்_____களும் நிறைந்த அவ்வூரின் நடுவே வானுயர்ந்த கோபுரத்துடன் கூடிய கோவில் குளத்தில் எங்கும் _____ பூக்கள் மலர்ந்துள்ளன; கதிரவனின் _____ வீசிட, சோலைப்_____களின் _____கேட்போரைப் _____ அடையச் செய்கிறது.

குறிப்புகளைக் கொண்டு மாவட்டத்தின் பெயரைக் கண்டுபிடிக்க.

1. தமிழக மாவட்டங்களுள் ஒன்று.
2. கிழக்குக் கடற்கரைச் சாலையில் அமைந்துள்ள மாவட்டம்.
3. வங்காள விரிகுடாவின் கரைகளில் வேகமாக வளர்ந்து வரும் பெருநகரம் எனலாம்.
4. தொடர்வண்டி நிலையத்தோடு இணைக்கப்பட்ட புகழ்வாய்ந்த கடற்கரைத் துறைமுகம் இங்குள்ளது.
5. இந்தியாவிலேயே அதிகளவு பழுப்பு நிலக்கரி கிடைக்கும் சுரங்கம் உடைய ஊரைக் கொண்ட மாவட்டம்.
6. சுரபுன்னைக் காடுகளுடன் கூடிய ஏரி இம்மாவட்டத்தின் அழகான சுற்றுலாத்தலம் ஆகும்.
7. போர்த்துக்கீசியர்கள் வணிகம் நடத்திய பழைமையான 'பரங்கிப்பேட்டை' இங்குள்ளது.
8. வாடிய பயிரைக் கண்டபோது வாடிய 'பசிப்பிணி மருத்துவர்' பிறந்து வாழ்ந்த மாவட்டமும் இதுவே.
9. பாடல் பெற்ற பழைமையான பல கோவில்கள் நிறைந்த மாவட்டம்.
10. இயற்கைச் சீற்றங்களால் அடிக்கடி அல்லல்படும் மாவட்டம் எனில் மிகையில்லை.

காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

.....

.....

.....

.....

.....

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 229 23/05/18 4:32 PM

செயல்திட்டம்

'பழந்தமிழர் சமூக வாழ்க்கை - இக்காலத் தமிழர் வாழ்க்கை' இரண்டினையும் ஒப்பிட்டுக் கையெழுத்து இதழ் ஒன்றை உருவாக்குக.

நிற்க அதற்குத்தக

சமூகத்திற்கு எனது பணிகள்

அ) குப்பைகளைக் குப்பைத் தொட்டியில் போடுவேன்

ஆ) தண்ணீர் வீணாவதை எங்குக் கண்டாலும் தடுப்பேன்.

இ) என்னால் முடிந்த உதவிகளைப் பிறருக்குச் செய்வேன்.

ஈ) மழை நீர்ச்சேகரிப்பின் இன்றியமையாமையை வலியுறுத்துவேன்.

……

……

……

கலைச்சொல் அறிவோம்

மற்போர் – *Wrestling*

இந்திய தேசிய இராணுவம் – *Indian National Army*

செவ்வியல் இலக்கியம் – *Classical Literature*

நாட்டுப்புற இலக்கியம் – *Folk literature*

அறிவை விரிவுசெய்

தமிழர் உணவு – பக்தவச்சல பாரதி (தொ.ஆ)

ஆகாயத்துக்கு அடுத்த வீடு – மு.மேத்தா

தமிழ்ப் பழமொழிகள் – கி.வா. ஜகந்நாதன்

இணையத்தில் காண்க.

http://www.tamilauthors.com/01/705.html
http://www.tamilvu.org/courses/degree/a031/a0311/html/a0311664.htm
http://www.tamilvu.org/slet/lA100/lA100pd4.jsp?bookid=229&pno=46
http://shodhganga.inflibnet.ac.in/bitstream/10603/191124/10/introduction.pdf
http://www.tamilvu.org/library/lA417/html/lA417con.htm
http://www.tamilvu.org/courses/degree/a041/a0411/html/a04115l2.htm
http://ilakkiyam.com/iyal/25-tamil/iyal/imperunkapiyam/4047-seevaga-sinthamani
http://www.tamilvu.org/courses/degree/c021/c0211/html/c0211221.htm

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 230 23/05/18 4:32 PM

இயல் ஒன்பது

என்தலைக் கடனே



கற்றல் நோக்கங்கள்

- தமிழரின் சிந்தனை மரபுகளை உணர்தல்
- தமிழ் இலக்கியங்கள் காட்டும் அறச் சிந்தனைகளை அறிந்து, அறத்தோடு வாழும் வாழ்வியல் திறன் பெறுதல்
- கடித இலக்கிய வகையைப் படித்துப் பொருளுணர்ந்து எழுதுதல்
- பிற நாட்டு அறிஞர்களின் தத்துவங்களைத் தெரிந்துகொள்ளுதல்
- செய்யுள் உறுப்புகளை யாப்பிலக்கணம் வழி அறிந்து, அலகிடல்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 231 23/05/18 4:32 PM

இயல் ஒன்பது

பெரியாரின் சிந்தனைகள்

நுழையும்முன்

சமூகம், செம்மாந்து சீர்மையுடன் திகழப் பாகுபாடுகளற்ற மனவுறுதி படைத்த மக்கள் தேவை. அத்தகைய மக்களை உருவாக்கப் பகுத்தறிவு இன்றியமையாதது. பாகுபாட்டு இருளுக்குள் சிக்கித் திணறிக்கொண்டிருந்த தமிழக மக்களைத் தம் பகுத்தறிவு ஒளியால் வெளிக்கொணரப் பாடுபட்டோருள் முதன்மையானவர். இருபதாம் நூற்றாண்டில் ஈரோட்டில் தோன்றிப் பகுத்தறிவு, தன்மதிப்பு (சுயமரியாதை) ஆகிய கண்களை மக்களுக்கு அளிக்க அரும்பணியாற்றியவர். யார் அவர்?

LLBF1R

தந்தை பெரியார்

வெண்தாடி வேந்தர், பகுத்தறிவுப் பகலவன், வைக்கம் வீரர், ஈரோட்டுச் சிங்கம் என்றெல்லாம் பலவாறு சிறப்பிக்கப்படுபவர் தந்தை பெரியார்; மூடப்பழக்கத்தில் மூழ்கிக் கிடந்த தமிழ் மக்களைப் பகுத்தறிவுப் பாதைக்கு அழைத்துச் சென்றவர்; அடிமையாய் உறங்கிக் கிடந்த சமூகம் விழிப்பதற்குச் சுயமரியாதைப் பூபாளம் இசைத்தவர்; மானமும் அறிவும் கொண்டவர்களாகத் தமிழர்கள் வாழவேண்டும் என்று அரும்பாடுபட்டவர்; தானே முயன்று கற்று, சுயமாகச் சிந்தித்து அறிவார்ந்த கருத்துகளை வெளியிட்டவர்.

பகுத்தறிவு

'பெரியார்' என்றவுடன் நம்முடைய நினைவுக்கு வருவது அவரின் பகுத்தறிவுக் கொள்கை. எச்செயலையும் அறிவியல் கண்ணோட்டத்துடன் அணுகி ஏன்? எதற்கு? எப்படி? என்ற வினாக்களை எழுப்பி, அறிவின்வழியே சிந்தித்து முடிவெடுப்பதே பகுத்தறிவாகும்.

முன்னோர்கள் செய்தார்கள் என்பதற்காகவே ஒரு செயலை அப்படியே

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 232 23/05/18 4:32 PM

பின்பற்றி இன்றும் கடைப்பிடித்தல் கூடாது. அக்காலத்திற்கு ஏற்ற வகையில் அப்படிச் செய்திருப்பார்கள்; இன்று காலம் மாறிவிட்டது. இக்கால வளர்ச்சிக்கு ஏற்ப அறிவு நிலையில், நடைமுறைக்கேற்ற வகையில் செயல்பட வேண்டும். அக்கண்ணோட்டத்துடனே பெரியார் சிந்தித்தார். சமூகம், மொழி, கல்வி, பண்பாடு, பொருளாதாரம் என அனைத்துத் துறைகளிலும் அவரின் சிந்தனை புதிய எழுச்சியை ஏற்படுத்தியது.

சமூகம்

தந்தை பெரியார் வாழ்ந்த காலத்தில் சமூகத்தில் சாதி மதப் பிரிவுகள் மேலோங்கி இருந்தன. பிறப்பின் அடிப்படையில் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்னும் வேறுபாடுகள் இருந்தன. சாதி என்னும் பெயரால் ஒருவரை ஒருவர் இழிவு செய்யும் கொடுமை இருந்தது. இந்த இழிநிலை கண்டு தந்தை பெரியார் கொதித்தெழுந்தார். "சாதி உணர்வு ஆதிக்க உணர்வை வளர்க்கிறது. மற்றவர்களின் உரிமைகளைப் பறிக்கிறது. மனிதர்களை இழிவுபடுத்துகிறது. அந்தச் சாதி என்ற கட்டமைப்பை உடைத்தெறிய வேண்டும்" என்றார் அவர்.

சாதியினால் மனித வாழ்விற்கு எவ்விதச் சிறு பயனும் விளையப் போவதில்லை. அதனால், வீண் சண்டைகளும் குழப்பங்களுந்தான் மேலோங்குகிறது. அத்தகு சாதி, மனிதனுக்குத் தேவையில்லை என்று வலியுறுத்தினார்.

மதம்

'மதங்கள் என்பன மனித சமூகத்தின் வாழ்க்கை நலத்திற்கே ஏற்படுத்தப்பட்டன. ஆனால், இன்று மதத்தின் நிலை என்ன? நன்கு சிந்தித்துப் பாருங்கள்; மனிதர்களுக்காக மதங்களா? மதங்களுக்காக மனிதர்களா? மதம் என்பது மனிதர்களை ஒற்றுமைப்படுத்துவதற்காகவா? பிரித்து வைப்பதற்காகவா?' எனப் பெரியார் பகுத்தறிவு வினாக்களை எழுப்பினார்; கடவுள் மறுப்புக் கொள்கையைக் கடைப்பிடித்தார்.

கல்வி

சமூக வளர்ச்சிக்குக் கல்வியை மிகச் சிறந்த கருவியாகப் பெரியார் கருதினார். 'கற்பிக்கப்படும் கல்வியானது மக்களிடம் பகுத்தறிவையும், சுயமரியாதை உணர்ச்சியையும், நல்லொழுக்கத்தையும் ஏற்படுத்த வேண்டும்; மேன்மை வாழ்வு வாழ்வதற்கேற்ற தொழில் செய்யவோ அலுவல் பார்க்கவோ பயன்பட வேண்டும்' என்றார். 'அறிவியலுக்குப் புறம்பான செய்திகளையும் மூடப்பழக்கங்களையும் பள்ளிகளில் கற்றுத் தரக்கூடாது. சுயசிந்தனை ஆற்றலையும் தன்னம்பிக்கையையும் வளர்க்கும் கல்வியினைக் கற்றுத்தர வேண்டும்' என்று பெரியார் கூறினார்.

சமூகத்தின் அனைத்து நிலையினருக்கும் கல்வி அளிக்கப்பட வேண்டும். குறிப்பிட்ட பிரிவினருக்கு மட்டுமே கல்வி உரிமையானது எனவும் சில பிரிவினர்க்குக் கல்வி கற்க உரிமை இல்லை எனவும் கூறப்பட்ட கருத்துகளைப் பெரியார் கடுமையாக எதிர்த்தார். அனைவருக்கும் கல்வி அளிக்கப்பட வேண்டும். குறிப்பாகப் பெண்களுக்குக் கல்வியறிவு புகட்ட முன்னுரிமை அளிக்க வேண்டும் என்றார். பெண்களுக்கு அளிக்கப்படும் கல்வியினால் சமுதாயம் விரைவாக முன்னேறும் என்று

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 233 23/05/18 4:32 PM

பெரியார் எதிர்த்தவை...

இந்தித் திணிப்பு

குலக்கல்வித் திட்டம்

தேவதாசி முறை

கள்ளுண்ணல்

குழந்தைத் திருமணம்

மணக்கொடை

பெரியார் நம்பினார். மனப்பாடத்திற்கு முதன்மை அளிக்கும் தேர்வு முறையையும், மதிப்பெண்களுக்கு முதன்மை அளிக்கும் முறையையும் பெரியார் கடுமையாக எதிர்த்தார்.

மொழி, இலக்கியம்

'ஒரு மொழியின் தேவை என்பது, அதன் பயன்பாட்டு முறையைக் கொண்டே அமைகிறது; இந்தியாவிலேயே பழமையான மொழி தமிழ் மொழியாகும். இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கேற்ற நூல்கள் தமிழில் படைக்கப்பட வேண்டும்' என்று கூறினார்.

'மொழியோ நூலோ இலக்கியமோ எதுவானாலும் மனிதனுக்கு மானம், பகுத்தறிவு, வளர்ச்சி, நற்பண்பு ஆகிய தன்மைகளை உண்டாக்க வேண்டும்' என்று கருதி மொழி, இலக்கியம் ஆகியவற்றின் வளர்ச்சி குறித்தும் பெரியார் ஆழ்ந்து சிந்தித்தார்.

மதம், கடவுள் ஆகியவற்றின் தொடர்பற்ற இலக்கியம், யாவருக்கும் பொதுவான இயற்கை அறிவைத் தரும் இலக்கியம், யாவரும் மறுக்க முடியாத அறிவியல் பற்றிய இலக்கியம் ஆகியவற்றின் மூலம்தான் ஒரு மொழியும் அதன் இலக்கியங்களும் மேன்மை அடையமுடியும். அத்துடன் அதனைக் கையாளும் மக்களும் அறிவுடையவராவர் என்று பெரியார் கூறினார்.

திருக்குறளில் அறிவியல் கருத்துகளும் தத்துவக்கருத்துகளும், அனைவருக்கும் பொதுவான வகையில் இடம் பெற்றிருப்பதால் அதை மதிப்புமிக்க நூலாகப் பெரியார் கருதினார். இந்நூலில் அரசியல், சமூகம், பொருளாதாரம் உள்ளிட்ட அனைத்தும் அடங்கியுள்ளன. இதை ஊன்றிப் படிப்பவர்கள் சுயமரியாதை உணர்ச்சி பெறுவார்கள் என்றார்.

எழுத்துச் சீர்திருத்தம்

மொழியின் பெருமையும் எழுத்துகளின் மேன்மையும் அவை எளிதில் கற்றுக் கொள்ளக்கூடியனவாக இருப்பதைப் பொறுத்தே அமைகின்றன. எனவே, காலவளர்ச்சிக்கேற்பத் தமிழ் எழுத்துகளைச் சீரமைக்கத் தயங்கக் கூடாது என்று பெரியார் கருதினார். "மொழி என்பது உலகின் போட்டி, போராட்டத்திற்கு ஒரு போர்க்கருவியாகும்; அக்கருவிகள் காலத்திற்கேற்ப மாற்றப்பட வேண்டும்; அவ்வப்பொழுது கண்டுபிடித்துக் கைக்கொள்ள வேண்டும்" என்றார். அம்மாற்றத்திற்கான முயற்சியையும் பெரியார் மேற்கொண்டார்.

உயிர் எழுத்துகளில் 'ஐ' என்பதனை 'அய்' எனவும், 'ஔ' என்பதனை 'அவ்' எனவும் சீரமைத்தார் (ஐயா – அய்யா, ஔவை – அவ்வை). அதுபோலவே, மெய்யெழுத்துகளில் சில எழுத்துகளைக் குறைப்பதன் வாயிலாகத் தமிழ் எழுத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாம் என்றார்; அவ்வாறு குறைப்பதால் தமிழ்மொழி கற்பதற்கும் தட்டச்சு செய்வதற்கும் எளிதாகும்

வ.எண்	பழைய வடிவம்	புதிய வடிவம்
1	ஸ	ஸ
2	கூ	ஸ
3	டூ	ஸ
4	டூ	ஸ
5	கூ	ஸ
6	கூ	ஸ
7	ஞ	ஞ
8	டூ	டூ
9	டூ	டூ
10	ஸ	ஸ
11	கூ	ஸ
12	டூ	ஸ
13	டூ	ஸ

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 234 23/05/18 4:32 PM

எனக் கருதினார். இச்சீரமைப்புக்கான மாற்று எழுத்துருக்களையும் (வரி வடிவம்) உருவாக்கினார். கால வளர்ச்சிக்கு இத்தகு மொழிச் சீரமைப்புகள் தேவை என்று கருதினார். பெரியாரின் இக்கருத்தின் சில கூறுகளை 1978ஆம் ஆண்டு தமிழக அரசு நடைமுறைப்படுத்தியது.

பெண்கள் நலம்

அக்காலத்தில் பெண்கள் அனைத்துத் துறைகளிலும் ஒடுக்கப்பட்டிருந்தனர். எனவே, நாட்டு விடுதலையைவிட, பெண் விடுதலைதான் முதன்மையானது என்று கூறினார் பெரியார்.

கல்வி, வேலைவாய்ப்புகளில் ஆண்களுக்கு நிகரான உரிமை பெண்களுக்கும் அளிக்கப்பட வேண்டும். வேலைவாய்ப்பில் ஐம்பது விழுக்காடு இட ஒதுக்கீடு பெண்களுக்குத் தரப்பட வேண்டும். பொருளாதாரத்தில் பெண்கள் பிறரைச் சார்ந்து வாழவேண்டிய நிலையில் இருக்கக்கூடாது. நன்கு கல்வி கற்று, சுய உழைப்பில் பொருளீட்ட வேண்டும். தெளிந்த அறிவுடனும் தன்னம்பிக்கையுடனும் திகழ வேண்டும் என்றார்.

இளம்வயதில் பெண்களுக்குத் திருமணம் செய்து வைக்கக்கூடாது; கைம்பெண்களுக்கு மறுமணம் செய்ய வழிவகை செய்ய வேண்டும் என்னும் கருத்தை வலியுறுத்தினார். குடும்பத்தில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களுக்கும் சம உரிமை அளிக்கப்படவேண்டும். பெண்களின் கருத்துகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும்.

தெரியுமா?

பெரியார் விதைத்த விதைகள்:

கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் இடஒதுக்கீடு

பெண்களுக்கான இடஒதுக்கீடு

பெண்களுக்கான சொத்துரிமை

குடும்ப நலத்திட்டம்

கலப்புத் திருமணம், சீர்திருத்தத் திருமணச் சட்டம் ஏற்பு

குடும்பச் சொத்தில் ஆண்களுக்குச் சமமான உரிமையைப் பெண்களுக்கும் வழங்க வேண்டும். குடும்பப் பணிகளில் ஆண்களுக்கென்று தனிப்பணிகள் எதுவுமில்லை. ஆண்களும் குடும்பப் பணிகளைப் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பன போன்ற கருத்துகளை எடுத்துரைத்தார்.

சிக்கனம்

சிக்கனம் என்னும் அருங்குணத்தைப் பெரியார் பெரிதும் வலியுறுத்தினார்; அதற்கேற்பத் தானும் வாழ்ந்து காட்டினார்; பொருளாதாரத் தன்னிறைவு அடையாத நிலையில் அனைவரும் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது கட்டாயம் என்றார். விழாக்களாலும் சடங்குகளாலும் மூடப்பழக்கம் வளர்வதோடு, வீண்செலவும் ஏற்படுவதால் தேவையற்ற சடங்குகளையும் விழாக்களையும்

தெரியுமா?

1938 நவம்பர் 13இல் சென்னையில் நடந்த பெண்கள் மாநாட்டில் ஈ.வெ.ரா.வுக்குப் 'பெரியார்' என்னும் பட்டம் வழங்கித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

27.06.1970 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் யுனெஸ்கோ நிறுவனம் தந்தை பெரியாரைத்' தெற்கு ஆசியாவின் சாக்ரடீஸ்' எனப் பாராட்டிப் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 235 23/05/18 4:32 PM

தவிர்க்கவேண்டும் என்றார். திருமணம் போன்ற விழாக்களைப் பகட்டின்றி மிக எளிமையாகவும் சீர்திருத்த முறையிலும் நடத்த வேண்டும் என்றார்.

சிந்தனைச் சிறப்புகள்

பெரியாரின் சிந்தனைகள் தொலைநோக்கு உடையவை; அறிவியல் அடிப்படையில் அமைந்தவை; மனிதநேயம் வளர்க்கப் பிறந்தவை. நடைமுறைக்கு ஒவ்வாத கருத்துகளை அவர் எப்பொழுதும் கூறியதில்லை. மேலும், தமது சீர்திருத்தக் கருத்துகளுக்கேற்ப வாழ்ந்து காட்டினார்; தம் வாழ்நாள் முழுவதும் பகுத்தறிவுக் கருத்துகளைப் பரப்புரை செய்தார்; சமுதாயம் மூடப்பழக்கங்களிலிருந்து மீண்டெழ அரும்பாடுபட்டார்; அதற்காகப் பலமுறை சிறை சென்றார்; பலரின் கடும் எதிர்ப்புகளைச் சந்தித்தார். ஆயினும், இறுதி மூச்சுவரை சமூகச் சீர்திருத்தப் போராளியாகவே வாழ்ந்து மறைந்தார்.

பெரியாரின் சிந்தனைகள் அறிவுலகின் திறவுகோல்; பகுத்தறிவுப் பாதைக்கு வழிகாட்டி; மனித நேயத்தின் அழைப்பு மணி; ஆதிக்கசக்திகளுக்கு எச்சரிக்கை ஒலி; சமூகச் சீர்கேடுகளைக் களைவதற்கு மாமருந்து என்று அறிஞர்கள் மதிப்பிடுவர்.

தெரிந்து தெளிவோம்

பெரியார் இயக்கமும் இதழ்களும்

தோற்றுவித்த இயக்கம் – சுயமரியாதை இயக்கம்

தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு –1925

நடத்திய இதழ்கள் – குடியரசு, விடுதலை, உண்மை, ரிவோல்ட் (ஆங்கில இதழ்)

கற்பவை கற்றபின்...

1. 'இன்று பெரியார் இருந்திருந்தால்" என்னும் தலைப்பில் மேடைப் பேச்சுக்கான உரை ஒன்றை எழுதுக.
2. பெரியாரை நேர்காணல் செய்வதாகக் கருதி வினாப்பட்டியலை உருவாக்குக.
3. 'இன்றைய சமூகம் பெரியாரின் பாதையில் நடக்கிறதா? நடக்கவில்லையா?' எனும் தலைப்பில் கலந்துரையாடல் நடத்துக.

LLKB3E

தொண்டு செய்து பழுத்த பழம்
தூயதாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகு தொழும்
மனக்குகையில் சிறுத்தை எழும்
அவர்தாம் பெரியார் – பார்
அவர்தாம் பெரியார்

– புரட்சிக்கவி பாரதிதாசன்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 236 23/05/18 4:32 PM

இயல் ஒன்பது

கவிதைப் பேழை

ஒளியின் அழைப்பு

LLU752

நுழையும்முன்

புவிஈர்ப்பு விசையை எதிர்த்து விண்ணோக்கி விரைவது தாவரத்தின் தனித்துவம். வேர் வளர்க்கும் கதிரவன் ஒளியும் காற்றும் நீரும் பசுமரத்தின் வேருக்கு நெக்குவிடும் பாறையும் என எல்லாம் இணைந்தே இயற்கையைப் போற்றி வளர்க்கின்றன. போட்டியின்றி வாழ்க்கையில்லை; வலிகளின்றி வெற்றியில்லை. ஒன்றையொன்று அடுத்தும் படுத்தும் மென்மேலும் முன்னேறுவது இயற்கைக்கு மட்டுமன்று, வாழ்க்கைக்கும்தான்!



பிறவி இருளைத் துளைத்து
சூழலின் நிழலை வெறுத்து முகமுயர்த்தி
எப்படி விண்ணின்று வழியும் ஒளியமுதைத் தேடிப் போகிறது
ரவியின் கோடானுகோடி விரல்களின் அழைப்பிற்கு இணங்கி
எப்படி உடலை நெளித்து நீட்டி, வளைத்து வளருகிறது
எப்படி அமிருதத்தை நம்பி, ஒளியை வேண்டி
பெருமரத்துடன் சிறு கமுகு போட்டியிடுகிறது
அதுவே வாழ்க்கைப் போர்
முண்டி மோதும் துணிவே இன்பம்
உயிரின் முயற்சியே வாழ்வின் மலர்ச்சி.

– *ந. பிச்சமூர்த்தி*

சொல்லும் பொருளும்

விண் – வானம் , ரவி – கதிரவன்,
கமுகு –பாக்கு

பாடலின் பொருள்

கமுகு மரம், தான் தோன்றிய இடத்தில் இருந்த பெருமரத்தின் நிழல் என்னும் இருளைத் துளைத்து நின்றது. பெருமரத்தின் நிழலை வெறுத்தது. உச்சிக்கிளையை மேலே உயர்த்தியது. விண்ணிலிருந்து வரும் கதிரவன் ஒளியாகிய உயிர்ப்பைத் (அமுதை) தேடியது. மீண்டும் மீண்டும் உயர்ந்து உயரே கதிரவன் ஒளிக்கதிர்களாகிய விரல்களின் அழைப்பைக் கண்டதும், பெருமரத்தின் இருட்டில் இருந்துகொண்டே தன் கிளைகளை வளைத்து, நீட்டியது.

அமுதத்தை நம்பி, ஒளியை வேண்டிக் கமுகு அப்பெருமரத்துடன் போட்டி போடுகிறது. அதுதான் வாழ்க்கைப்போர். வாழ்க்கை உறுதிபெற வேண்டுமென்றால் போட்டியிட்டு, போரிட்டே ஆக வேண்டும். பெருமரத்தை முட்டி மோதி மேலே செல்லும் துணிச்சலே இன்பம். முயற்சி உள்ளனவே வாழ்வில் மலர்ச்சி பெறும். கமுகுமரம் கடுமையாகப் பெருமரத்தோடு முட்டிமோதித் துணிச்சலான முயற்சிகளில் ஈடுபட்டது. நம்பிக்கை, தன்முனைப்போடு கூடிய போட்டியில் கமுகு வென்றது. பெருமரத்தை விஞ்சி வளர்ச்சி நடை போடுகிறது.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 237 23/05/18 4:32 PM

இலக்கணக் குறிப்பு

பிறவிஇருள், ஒளியமுது, வாழ்க்கைப்போர்– உருவகங்கள்.

பகுபத உறுப்பிலக்கணம்

வேண்டி = வேண்டு+இ

வேண்டு – பகுதி;

இ – வினையெச்சவிகுதி

போகிறது = போ+கிறு+அ+து

போ–பகுதி; கிறு–நிகழ்கால இடைநிலை;

அ–சாரியை

து–ஒன்றன்பால் வினைமுற்று விகுதி.

மலர்ச்சி = மலர்+ச்+சி

மலர் –பகுதி; ச் – இடைநிலை;

சி – தொழிற்பெயர் விகுதி

இயற்கையையும் வாழ்க்கை அனுபவங்களையும் இணைத்து, அறிவுத் தெளிவுடன் நல்வாழ்க்கைக்கான தத்துவ உண்மைகளைக் காணும் முயற்சிகளே பிச்சமூர்த்தியின் கவிதைகள்

–புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், என்னும் நூலில் வல்லிக்கண்ணன்.

நூல் வெளி

புதிய படைப்புச் சூழலில் மரபுக்கவிதையின் யாப்புப் பிடியிலிருந்து விடுபட்ட கவிதைகள் புதுக்கவிதைகள் எனப்பட்டன. பாரதியாரின் வசன கவிதையைத் தொடர்ந்து புதுக்கவிதை படைக்கும் முயற்சியில் ந.பிச்சமூர்த்தி ஈடுபட்டார். எனவே, அவர் "புதுக்கவிதையின் தந்தை" என்று போற்றப்படுகிறார். புதுக்கவிதையை "இலகு கவிதை, கட்டற்ற கவிதை, விலங்குகள் இலாக் கவிதை, கட்டுக்குள் அடங்காக் கவிதை என்று பல்வேறு பெயர்களில் குறிப்பிடுகின்றனர்.

ந. பிச்சமூர்த்தி தொடக்க காலத்தில் வழக்குரைஞராகவும் பின்னர் இந்து சமய அறநிலையப் பாதுகாப்புத் துறை அலுவலராகவும் பணியாற்றினார். ஹனுமான், நவஇந்தியா ஆகிய இதழ்களின் துணை ஆசிரியராகவும் இருந்தார். இவர் புதுக்கவிதை, சிறுகதை, ஓரங்க நாடகங்கள், கட்டுரைகள் ஆகிய இலக்கிய வகைமைகளைப் படைத்தவர். இவரின் முதல் சிறுகதை – "ஸயன்ஸுக்கு பலி" என்பதாகும். 1932 இல் கலைமகள் இதழ் வழங்கிய பரிசைப் பெற்றார். பிக்ஷு, ரேவதி ஆகிய புனைபெயர்களில் படைப்புகளை எழுதினார்.

LH436P

கற்பவை கற்றபின்...

1. *முயற்சி, நம்பிக்கை, வெற்றி ஆகியவற்றை உணர்த்தும் அறிஞர் மொழிகளைத் தேடி தொகுக்க.* (எ.கா.)

உங்கள் பாதையை *நீங்களே தேர்ந்தெடுங்கள்* *ஏனெனில்* *வேறு எவராலும் உங்கள்* *கால்களைக் கொண்டு* *நடக்க முடியாது....!*	*எட்டி விடும் தூரத்தில்* *வெற்றியும் இல்லை!* *அதை விட்டுவிடும்* *எண்ணத்தில்* *நானும் இல்லை!*	*வாழ நினைப்பவனுக்கு* *வானம் கூட* *வாயிற் படிதான்!*

2. *'தன்னம்பிக்கையின் மறுபெயர் நான்' என்னும் தலைப்பில் ஒரு கவிதை படைத்து வகுப்பறையில் படித்துக்காட்டுக.*

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 238 23/05/18 4:32 PM

கவிதைப் பேழை

இயல் ஒன்பது

தாவோ தே ஜிங்

LMCY8C

இருப்பதும் இல்லாதிருப்பதும் ஆகிய இரண்டு நிலைகளுக்குள் உள்ளடங்கியது வாழ்க்கை. ஒன்றைப் பிடித்த பிடியை விட்டுப் பிறிதொன்றை எட்டிப் பிடிக்கும் முன்னே ஏற்படும் வெற்றிட அனுபவங்களே வாழ்க்கையின் உருவத்தை வரைந்து வைத்து விடுகின்றன. உண்டு, இல்லை என்ற சிந்தனைகளுக்கிடையே உண்டு என்பதையே பயனுள்ளதாகக் கருதுவதைச் சீனக்கவிஞர் லாவோட்சு மறுக்கிறார். எந்த ஒன்றும் உருவாக வேண்டுமென்றால் உண்டும் வேண்டும்; இல்லையும் வேண்டும் என்ற கருத்தைக் கூறுவது இவர் படைத்த இக்கவிதை.

ஆரக்கால் முப்பதும்
சக்கரத்தின் மையத்தில் இணைகின்றன;
ஆனால், சக்கரத்தின் பயன்
அதன் காலிப் பகுதியால் கிடைக்கிறது.
பாண்டம் பாண்டமாகக்
களிமண் வனையப்படுகிறது;
ஆனால், பாண்டத்தின் பயன்
அதன் காலிப் பகுதியால் கிடைக்கிறது.
வீட்டுச் சுவர்களில்
வாயிலுக்காகவும் சன்னலுக்காவும்
வெற்றுவெளியை விடுகிறோம்;
ஆனால், வாயிலும் சன்னலும்
வெற்றுவெளி என்பதால் பயன்படுகின்றன.
எனவே, ஒரு பக்கம்
இருத்தலின் பலன் கிடைக்கிறது;
இன்னொரு பக்கம்
இருத்தலின்மையைப் பயன்படுத்திக்கொள்கிறோம்.

– லா வோட்சு

பாடலின் பொருள்

சக்கரம் பல ஆரங்களைக் கொண்டதாயினும் அவற்றிடையே உள்ள வெற்றிடத்தை மையமாக வைத்தே சுழல்கிறது; அழகிய வேலைப்பாடுகள் கொண்ட பானையாயினும் அதன் வெற்றிடமே நமக்குப் பயன்படுகிறது; வீட்டிலுள்ள சன்னலும் கதவும்கூடச் சுவரின் வெற்றிடமே; அதுவே நமக்குப் பயன்பாடு. சுவர்களுக்கிடையே

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 239 23/05/18 4:32 PM

உள்ள வெற்றிடமே அறையாக நமக்குப் பயன்படுகிறது.

நம் பார்வையில் படும் உருப்பொருள்கள் உண்மை எனினும், உருவம் இல்லாத வெற்றிடமே நமக்குப் பயன் உடையதாகிறது. வெற்றிடமே பயன் உடையதாகுமெனில் நாம் வெற்றி பெறத் தடை ஏதும் உண்டோ?

(வாழ்க்கை மிகவும் விசாலமானது. அதன் சில பகுதிகளை மட்டுமே நாம் பயன்படுத்துகிறோம். உணர்கிறோம். நாம் பயன்படுத்தாத அந்தப் பகுதிகளும் சுவை மிகுந்தவை; பொருள் பொதிந்தவை. வாழ்க்கையின் அனைத்துப் பக்கங்களையும் சுவைத்து, நம் வாழ்க்கையைப் பொருளுடையதாக்குவோம்.)

பகுபத உறுப்பிலக்கணம்

இணைகின்றன = இணை+கின்று+அன்+அ

இணை – பகுதி,

கின்று – நிகழ்கால இடைநிலை

அன் – சாரியை

அ – பலவின் பால் வினைமுற்று விகுதி

தத்துவ விளக்கம்

இல்லை என்பது வடிவத்தை வரையறை செய்கிறது. குடம் செய்ய மண் என்பது உண்டு. குடத்திற்குள்ளே வெற்றிடம் என்பது இல்லை. இந்த உண்டும் இல்லையும் சேர்வதால்தான் குடத்தில் நீரை நிரப்ப முடியும். வெற்றிடம் இல்லாத குடத்தில் நீரை நிரப்ப முடியாது. இவை முரண்களாகத் தெரிந்தாலும் இவை முரண்களல்ல. அதை வலியுறுத்தவே இன்மையால்தான் நாம் பயனடைகிறோம் என்கிறார் கவிஞர். ஆரங்களைவிட நடுவிலுள்ள வெற்றிடம் சக்கரம் சுழல உதவுகிறது. குடத்து ஓட்டினைவிட உள்ளே இருக்கும் வெற்றிடமே பயன்படுகிறது. சுவர்களைவிடக் காலியாக இருக்கும் இடமே பயன்படுகிறது. ஆகவே, 'இன்மை' என்று எதையும் புறக்கணிக்க வேண்டாம் என்பது அவர் கருத்து.

இலக்கணக் குறிப்பு

பாண்டம் பாண்டமாக – அடுக்குத்தொடர்

வாயிலும் சன்னலும் – எண்ணும்மை

நூல் வெளி

லாவோட்சு, சீனாவில் பொ.ஆ.மு. 2ஆம் நூற்றண்டிற்கு முன் வாழ்ந்தவர். சீனஞானி கன்பூசியஸ் இவரது சமகாலத்தவர். அக்காலம், சீனச் சிந்தனையின் பொற்காலமாக இருந்தது. லாவோட்சு "தாவோவியம்" என்ற சிந்தனைப்பிரிவைச் சார்ந்தவர். ஒழுக்கத்தை மையமாக வைத்துக் கன்பூசியஸ் சிந்தித்தார். லாவோட்சுவோ இன்றைய வாழ்வை மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்னும் சிந்தனையை முன்வைத்தார். தாவோவியம் அதையே வலியுறுத்துகிறது.

கற்பவை கற்றபின்...

1. நீங்கள் அறிந்த அயல்நாட்டுத் தத்துவ அறிஞர்களின் பெயர்களைத் தொகுக்க.
2. ஜென் தத்துவக்கதை ஒன்றைப் படித்து அதுகுறித்து வகுப்பறையில் கலந்துரையாடுக.
3. மண்பாண்டங்கள் செய்வோரைச் சந்தித்து அதன் உருவாக்கம் குறித்துத் தெரிந்து கொள்க.

LMLU9Z

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 240 23/05/18 4:32 PM

இயல் ஒன்பது

கவிதைப் பேழை

யசோதர காவியம்

LP3HVY



படித்து இன்புற மட்டுமின்றி வாழ்க்கை நெறிகளை அறிவுறுத்த உதவுவதும் இலக்கியங்களே! உலகப் பொதுமறையாம் திருக்குறள் தொடங்கி அறம் சார்ந்த தனித்துவ இலக்கியங்கள் தமிழில் உண்டு. அவ்விலக்கியங்கள் காட்டும் வாழ்க்கைப்பாதை உன்னதமானது; அப்பாதையில் பயணித்தால் வாழ்க்கையை வளமாக்கலாம். வாருங்கள் அறத்தேரின் வடம் பிடிப்போம்!

ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக
போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக
நோக்குவது ஏதெனில் ஞானம் நோக்குக
*காக்குவது ஏதெனில் விரதம் காக்கவே.** 1405

சொல்லும் பொருளும்

அறம் – நற்செயல்; வெகுளி– சினம்; ஞானம்– அறிவு; விரதம் – மேற்கொண்ட நன்னெறி.

பாடலின்பொருள்

நாம் ஒரு செயலைச் செய்வதென்றால் அச்செயல் பயன்தரத்தக்க நற்செயலாக இருத்தல் வேண்டும்; நம்மிடம் உள்ள தீய பண்புகளை நீக்கிட வேண்டுமாயின் முதலில் சினத்தை நீக்கவேண்டும்; ஆராய வேண்டுமானால் மெய்யறிவு நூல்களை ஆராய வேண்டும்; இடைவிடாது போற்றிக் காக்க வேண்டுமானால் தாம் கொண்ட நன்னெறியினைக் காக்க வேண்டும்.

இலக்கணக் குறிப்பு

ஆக்குக, போக்குக, நோக்குக, காக்க– வியங்கோள் வினைமுற்றுகள்

பகுபத உறுப்பிலக்கணம்

காக்க = கா+க்+க

கா – பகுதி

க் – சந்தி

க – வியங்கோள் வினைமுற்று விகுதி

நூல் வெளி

ஐஞ்சிறு காப்பியங்களுள் ஒன்று யசோதர காவியம்; இந்நூல் வடமொழியிலிருந்து தமிழில் தழுவப்பெற்றதாகும் ; இந்நூலின் ஆசிரியர் பெயரை அறிய முடியவில்லை. இது சமண முனிவர் ஒருவரால் இயற்றப்பட்டது என்பர். யசோதர காவியம், 'யசோதரன்' என்னும் அவந்தி நாட்டு மன்னனின் வரலாற்றைக் கூறுகிறது. இந்நூல் ஐந்து சருக்கங்களைக் கொண்டது; பாடல்கள் எண்ணிக்கை 320 எனவும் 330 எனவும் குறிப்பிடப்படுகிறது. .

கற்பவை கற்றபின்...

LPCDXL

தொடர்களை ஒப்பிட்டுக் கருத்துகளை வகுப்பறையில் கலந்துரையாடுக.

அறம் செய விரும்பு ஆறுவது சினம்	ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 241 23/05/18 4:32 PM

விரிவானம்

இயல் ஒன்பது

மகனுக்கு எழுதிய கடிதம்

– நா. முத்துக்குமார்

LPL9Z9

நுழையும்முன்

தொலைவில் உள்ளோருக்குக் கருத்தைத் தெரிவிக்கப் புகையில் தொடங்கி ஒலியில் வளர்ந்து விலங்குகள், பறவைகள், மனிதர்கள் எனப் பலராலும் தொடர்ந்து அஞ்சலில் நிலைபெற்றுள்ளோம் நாம். அதுவே இன்று மின்னஞ்சல் உள்ளிட்ட புதுப்புது பரிணாமங்களில் வளர்ந்து கொண்டே இருக்கிறது. பரிமாற்றங்கள் எவ்வாறாக இருப்பினும் உயர்வான கருத்தும் உயிர்ப்புள்ள மொழியுமே செய்தி அளிப்பவருக்கும் பெறுபவருக்குமான உறவுப்பாலத்தை உறுதியாக்குகிறது! கவிஞர் நா. முத்துக்குமார், தம் மகனுக்கு எழுதுவதாக அமைந்த இக்கடிதம், பிள்ளை வளர்ப்பில் தாயுமானவராகத் திகழ்ந்த ஒருவரை நமக்குக் காட்டிச் செல்கிறது.

அன்புள்ள மகனுக்கு, அப்பா எழுதுவது. இது நான் உனக்கு எழுதும் முதல் கடிதம். இதைப் படித்துப் புரிந்துகொள்ளும் வயதில் நீ இல்லை. மொழியின் விரல் பிடித்து நடக்கப் பழகிக்கொண்டு இருக்கிறாய். உன் மொழியில் உனக்கு எழுத, நான் கடவுளின் மொழியை அல்லவா கற்க வேண்டும்.

என் பிரியத்துக்குரிய பூங்குட்டியே! உன் மெத்தென்ற பூம்பாதம் என் மார்பில் உதைக்க... மருத்துவமனையில் நீ பிறந்ததும் உனை அள்ளி என் கையில் கொடுத்தார்கள். என் உதிரம் உருவமானதை, அந்த உருவம் என் உள்ளங்கையில் கிடப்பதை, குறுகுறு கை நீட்டி என் சட்டையைப் பிடித்து இழுப்பதை, கண்ணீர் மல்கப் பார்த்துக்கொண்டு இருந்தேன்.

உலகிலேயே மிகப்பெரிய இன்பம் எது?.... "தம் மக்கள் மெய் தீண்டல் உயிர்க்கு இன்பம்" என்கிறார் வள்ளுவர். நீ எம் மெய் தீண்டினாய், மெய்யாகவே மெய்யாகவே நான் தூள் தூளாக உடைந்து போனேன். உன் பொக்கை வாய்ப் புன்னகையில் நீ என்னை அள்ளி அள்ளி எடுத்து மீண்டும் மீண்டும் ஒட்டவைத்துக்கொண்டு இருந்தாய்.

நீ அழுதாய்; சிரித்தாய்; சிணுங்கினாய்; குப்புறக் கவிழ்ந்து, தலை நிமிர்ந்து, அந்தச்

சாகசத்தைக் கொண்டாடினாய். தரை எல்லாம் உனதாக்கித் தவழ்ந்தாய். தகப்பன் விரல் பிடித்து எழுந்தாய். நீயாகவே விழுந்தாய். தத்தித் தத்தி நடந்தாய். தாழ்வாரம் எங்கும் ஓடினாய். மழலை பேசி, மொழியை ஆசீர்வதித்தாய்.

என் பொம்முக்குட்டியே! இந்த எல்லாத் தருணங்களிலும் நீ நம் வீட்டுக்கு இறைவனை அழைத்து வந்தாய்.

என் செல்லமே! இந்த உலகமும் இப்படித்தான். அழ வேண்டும். சிரிக்க வேண்டும். சிணுங்க வேண்டும். குப்புறக் கவிழ்ந்து, பின் தலை நிமிர்ந்து, அந்தச்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 242 23/05/18 4:32 PM

சாகசத்தைக் கொண்டாட வேண்டும். தரை எல்லாம் தனதாக்கித் தவழ வேண்டும். எழ வேண்டும். விழ வேண்டும். தத்தித் தத்தி நடக்க வேண்டும். வாழ்க்கை முழுக்க இந்த நாடகத்தைத்தான் நீ வெவ்வேறு வடிவங்களில் நடிக்க வேண்டும்.

என் சின்னஞ்சிறு தளிரே! கல்வியில் தேர்ச்சிகொள். அதே நேரம், அனுபவங்களிடம் இருந்து அதிகம் கற்றுக்கொள். தீயைப் படித்துத் தெரிந்து கொள்வதைவிட, தீண்டிக் காயம் பெறு. அந்த அனுபவம் எப்போதும் சுட்டுக்கொண்டே இருக்கும். இறக்கும்வரை இங்கு வாழ, சூத்திரம் இதுதான், கற்றுப்பார். உடலைவிட்டு வெளியேறி, உன்னை நீயே உற்றுப்பார்.

எங்கும் எதிலும், எப்போதும் அன்பாய் இரு. அன்பைவிட உயர்ந்தது இந்த உலகத்தில் வேறு எதுவுமே இல்லை. உன் பேரன்பால் இந்தப் பிரபஞ்சத்தை நனைத்துக்கொண்டே இரு.

உன் தாத்தா, ஆகாய விமானத்தை அண்ணாந்து பார்த்தார். அவரது 57ஆவது வயதில்தான் அதில் அமர்ந்து பார்த்தார். உன் தகப்பனுக்கு 27ஆவது வயதில் விமானத்தின் கதவுகள் திறந்தன. ஆறு மாதக் குழந்தைப் பருவத்திலேயே நீ ஆகாயத்தில் மிதந்தாய். நாளை உன் மகன் ராக்கெட்டில் பறக்கலாம்.

இந்த மாற்றம் ஒரு தலைமுறையில் வந்தது அல்ல. இதற்குப் பின்னால் நெடியதொரு உழைப்பு இருக்கிறது. என் முப்பாட்டன் காடு திருத்தினான். என் பாட்டன் கழனி அமைத்தான். என் தகப்பன் விதை விதைத்தான். உன் தகப்பன் நீர் ஊற்றினான். நீ அறுவடை செய்துகொண்டு இருக்கிறாய். என் தங்கமே! உன் பிள்ளைக்கான விதையையும் உன் உள்ளங்கையில் வைத்திரு. உழைக்கத் தயங்காதே. உழைக்கும்வரை உயர்ந்து கொண்டு இருப்பாய்.

இதை எழுதிக்கொண்டு இருக்கையில் என் பால்ய காலம் நினைவுக்கு வருகிறது. கிராமத்தில் கூரை வீட்டிலும், பின்பு ஓட்டு வீட்டிலும் வளர்ந்தவன் நான். கோடைக் காலங்களில் வெப்பம் தாங்காமல் ஓட்டுக்கூரையில் இருந்து கொடிய தேள்கள் கீழே விழுந்துகொண்டே

தெரிந்து தெளிவோம்

கைப்பேசியின் வரவால் இன்று கடிதம் எழுதும் பழக்கம் பெரும்பாலும் இல்லை என்றே சொல்லலாம். கடிதங்களைக் கொண்டு பல வரலாறுகளையும் இலக்கியங்களையும் பரிமாறியிருக்கிறார்கள். கடித வடிவில் புதினங்களும் எழுதப்பட்டுள்ளன. தாகூர், நேரு, டி.கே.சி., வல்லிக்கண்ணன், பேரறிஞர் அண்ணா, மு. வரதராசனார், கு. அழகிரிசாமி, கி. இராஜநாராயணன் முதலானோர் கடித வடிவில் இலக்கியங்கள் படைத்துள்ளனர்.

இருக்கும். அதற்குப் பயந்து என் தகப்பன் என் அருகே அமர்ந்து இரவு முழுவதும் பனை ஓலை விசிறியால் விசிறிக்கொண்டே இருப்பார். இன்று அந்த விசிறியும் இல்லை. கைகளும் இல்லை. மாநகரத்தில் வாழும் நீ, வாழ்க்கை முழுக்கக் கோடைக்காலங்களையும் வெவ்வேறு வடிவங்களில் கொடிய தேள்களையும் சந்திக்க வேண்டி இருக்கும். எத்தனை காலம்தான் உன் தகப்பன் உன் அருகில் அமர்ந்து விசிறிக்கொண்டு இருப்பான்? உனக்கான காற்றை நீயே உருவாக்கப் பழகு.

வயதின் பேராற்றங்கரை உன்னையும் வாலிபத்தில் நிறுத்தும். சிறகு முளைத்த தேவதைகள் உன் கனவுகளை ஆசீர்வதிப்பார்கள். பெண் உடல் புதிராகும். உன் உடல் உனக்கே எதிராகும். என் தகப்பன் என்னிடம் ஒளித்துவைத்த ரகசியங்கள் அடங்கிய பெட்டியின் சாவியை நான் தேட முற்பட்டதைப்போல், நீயும் தேடத் தொடங்குவாய். பத்திரமாகவும் பக்குவமாகவும் இருக்க வேண்டிய தருணம் அது. உனக்குத் தெரியாதது இல்லை. பார்த்து நடந்துகொள்.

நிறையப் பயணப்படு. பயணங்களின் ஜன்னல்களே முதுகுக்குப் பின்னாலும் இரண்டு கண்களைத் திறந்து வைக்கின்றன. புத்தகங்களை நேசி. ஒரு புத்தகத்தைத் தொடுகிறபோது

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 243 23/05/18 4:32 PM

தூர்

வேப்பம்பூ மிதக்கும்
எங்கள் வீட்டுக் கிணற்றில்
தூர் வாரும் உற்சவம்
வருடத்திற்கொரு முறை
விசேஷமாய் நடக்கும்.

ஆழ்நீருக்குள்
அப்பா முங்க முங்க
அதிசயங்கள் மேலே வரும்.

கொட்டாங்குச்சி, கோலி, கரண்டி,
கட்டையோடு உள்விழுந்த
துருப்பிடித்த ராட்டினம்,
வேலைக்காரி திருடியதாய்
சந்தேகப்பட்ட வெள்ளி டம்ளர்,
சேற்றிற்குள் கிளறி
எடுப்போம் நிறையவே.

சேறுடா... சேறுடாவென
அம்மா அதட்டுவாள்
என்றாலும்
சந்தோஷம் கலைக்க
யாருக்கு மனம் வரும்?

பகை வென்ற வீரனாய்
தலைநீர் சொட்டச் சொட்ட
அப்பா மேல் வருவார்.

இன்றுவரை அம்மா
கதவுகளின் பின்னிருந்துதான்
அப்பாவோடு பேசுகிறாள்.
கடைசிவரை அப்பாவும்
மறந்தே போனார்
மனசுக்குள் தூரெடுக்க.

நீ ஓர் அனுபவத்தைத் தொடுவாய். உன் பாட்டனும் தகப்பனும் புத்தகங்களின் காட்டில் தொலைந்தவர்கள். உன் உதிரத்திலும் அந்தக் காகித நதி ஓடிக்கொண்டே இருக்கட்டும்.

கிடைத்த வேலையைவிட, பிடித்த வேலையைச் செய். இனிய இல்லறம் தொடங்கு. யாராவது கேட்டால், இல்லை எனினும் கடன் வாங்கியாவது உதவி செய். அதில் கிடைக்கும் ஆனந்தம் அலாதியானது.

உறவுகளிடம் நெருங்கியும் இரு, விலகியும் இரு. இந்த மண்ணில் எல்லா உறவுகளையும்விட மேன்மையானது நட்பு மட்டுமே. நல்ல நண்பர்களைச் சேர்த்துக்கொள். உன் வாழ்க்கை நேராகும்.

இவை எல்லாம் என் தகப்பன் எனக்குச் சொல்லாமல் சொன்னவை. நான் உனக்குச் சொல்ல நினைத்துச் சொல்பவை.

என் சந்தோஷமே! நீ பிறந்த பிறகுதான் என் தகப்பனின் அன்பையும் அருமையையும் நான் அடிக்கடி உணர்கிறேன். நாளை உனக்கொரு மகன் பிறக்கையில், என் அன்பையும் அருமையையும் நீ உணர்வாய்.

நாளைக்கும் நாளை நீ உன் பேரன், பேத்திகளுடன் ஏதோ ஒரு ஊரில் கொஞ்சிப் பேசி விளையாடிக்கொண்டு இருக்கையில் என் ஞாபகம் வந்தால், இந்தக் கடிதத்தை மீண்டும் எடுத்துப் படித்துப்பார். உன் கண்களில் இருந்து உதிரும் கண்ணீர்த் துளியில் வாழ்ந்து கொண்டு இருப்பேன் நான்.

இப்படிக்கு,
உன் அன்பு அப்பா.

கற்பவை கற்றபின்...

1. முத்துக்குமார் தம் மகனுக்கு எழுதிய கடிதத்தைப் போல நீங்கள் யாருக்குக் கடிதம் எழுத விரும்புகிறீர்கள்? அப்படியொரு கடிதம் எழுதுக.
2. வகுப்பில் நீங்கள் தேர்ந்தெடுத்த நண்பரின் சிறந்த பண்பைப் பாராட்டியும் அவர் மாற்றிக்கொள்ள வேண்டிய பண்பையும் பெயரைக் குறிப்பிடாமல் கடிதமாக எழுதிப் படித்துக்காட்டுக.

LPV61H

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 244 23/05/18 4:32 PM

இயல் ஒன்பது

கற்கண்டு

யாப்பிலக்கணம்

LQ523J

யாப்பின் உறுப்புகள்

மரபுக் கவிதை இயற்றும் முறைகளைக் கூறும் இலக்கணமே யாப்பிலக்கணம். இது செய்யுள்கள் பற்றியும் அவற்றின் உறுப்புகள் பற்றியும் விரிவாகப் பேசுகிறது.

உறுப்பியலில் யாப்பின் ஆறு உறுப்புகளான எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகியவை விளக்கப்படுகின்றன.

எழுத்து

யாப்பிலக்கண அடிப்படையில் எழுத்துகள் குறில், நெடில், ஒற்று என மூவகைப்படும். எழுத்துகளால் ஆனது 'அசை' எனப்படும்.

அசை

ஓரேழுத்தோ, இரண்டெழுத்தோ நிற்பது அசை ஆகும். இது நேரசை, நிரையசை என இருவகைப்படும். அசைப் பிரிப்பில் ஒற்றெழுத்தைக் கணக்கிடுவதில்லை.

நேரசை	
தனிக்குறில்	ப
தனிக்குறில், ஒற்று	பல்
தனிநெடில்	பா
தனிநெடில், ஒற்று	பால்

நிரையசை	
இருகுறில்	அணி
இருகுறில், ஒற்று	அணில்
குறில், நெடில்	விழா
குறில், நெடில், ஒற்று	விழார்

சீர்

ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட அசைகளின் கூட்டம் சீர் ஆகும். இதுவே பாடலில் ஓசைக்கு அடிப்படையாய் அமையும். ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர் எனச் சீர் நான்கு வகைப்படும். அவை:

நேர் என்பதோடு உகரம் சேர்ந்து முடிவது உண்டு. அதனை நேர்பு என்னும் அசையாகக் கொள்வர். நிரை என்னும் அசையோடு உகரம் சேர்ந்து முடியும் அசைகள் நிரைபு என்று கூறப்படும். இவை வெண்பாவின் இறுதியாய் மட்டுமே அசையாகக் கொள்ளப்படும்.

ஈரசைச் சீர்களுக்கு, 'இயற்சீர்', 'ஆசிரிய உரிச்சீர்' என்னும் வேறு பெயர்களும் உண்டு.

ஓரசைச் சீர்

அசை	வாய்பாடு
நேர்	நாள்
நிரை	மலர்
நேர்பு	காசு
நிரைபு	பிறப்பு

ஈரசைச் சீர்

அசை	வாய்பாடு	
நேர் நேர்	தேமா	மாச்சீர்
நிரை நேர்	புளிமா	
நேர் நிரை	கூவிளம்	விளச்சீர்
நிரை நிரை	கருவிளம்	

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 245 23/05/18 4:32 PM

மூவசைச் சீர்

காய்ச்சீர்		கனிச்சீர்	
அசை	வாய்பாடு	அசை	வாய்பாடு
நேர் நேர் நேர்	தேமாங்காய்	நேர் நேர் நிரை	தேமாங்கனி
நிரை நேர் நேர்	புளிமாங்காய்	நிரைநேர்நிரை	புளிமாங்கனி
நிரை நிரை நேர்	கருவிளங்காய்	நிரை நிரை நிரை	கருவிளங்கனி
நேர் நிரை நேர்	கூவிளங்காய்	நேர் நிரை நிரை	கூவிளங்கனி

காய்ச்சீர்களை "வெண்சீர்கள்" என்று அழைக்கிறோம்.

மூவசைச் சீர்களை அடுத்து நேரசையோ அல்லது நிரையசையோ சேர்கின்ற பொழுது நாலசைச்சீர் தோன்றும்.

அலகிட்டு வாய்பாடு கூறுதல்

நாம் எளிய முறையில் திருக்குறளை இங்கு அலகிடலாம்.

வெண்பாவில் இயற்சீரும், வெண்சீரும் மட்டுமே வரும்; பிற சீர்கள் வாரா. தளைகளில் இயற்சீர் வெண்டளையும், வெண்சீர் வெண்டளையும் மட்டுமே வரும்; பிற தளைகள் வாரா.

ஈற்றடியின் ஈற்றுச் சீர் ஓரசைச் சீர்களில் முடியும்.

இப்போது அலகிடலாம்.

பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்
அறம்நாணத் தக்க துடைத்து.

வரிசை	சீர்	அசை	வாய்பாடு
1	பிறர்/நா/ணத்/	நிரை நேர் நேர்	புளிமாங்காய்
2	தக்/கது/	நேர் நிரை	கூவிளம்
3	தான்/நா/ணா/	நேர் நேர் நேர்	தேமாங்காய்
4	னா/யின்/	நேர் நேர்	தேமா
5	அறம்/நா/ணத்/	நிரை நேர் நேர்	புளிமாங்காய்
6	தக்/க/	நேர் நேர்	தேமா
7	துடைத்து	நிரைபு	பிறப்பு

பாட நூலில் வந்துள்ள பிற குறட்பாக்களுக்கும் அலகிடல் பயிற்சி மேற்கொள்க.

தளை

பாடலில், நின்ற சீரின் ஈற்றசையும், அதனையடுத்து வரும் சீரின் முதல் அசையும் பொருந்துதல் 'தளை 'எனப்படும். இது ஒன்றியும் ஒன்றாமலும் வரும். அது ஏழு வகைப்படும்.

1. நேரொன்றாசிரியத்தளை – மா முன் நேர்
2. நிரையொன்றாசிரியத்தளை – விளம் முன் நிரை
3. இயற்சீர் வெண்டளை – மா முன் நிரை, விளம் முன் நேர்
4. வெண்சீர் வெண்டளை – காய் முன் நேர்
5. கலித்தளை – காய் முன் நிரை
6. ஒன்றிய வஞ்சித்தளை – கனி முன் நிரை
7. ஒன்றா வஞ்சித்தளை – கனி முன் நேர்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 246 23/05/18 4:32 PM

அடி

இரண்டும் இரண்டிற்கு மேற்பட்ட சீர்களும் தொடர்ந்து வருவது 'அடி' எனப்படும். அவை ஐந்து வகைப்படும்.

இரண்டு சீர்களைக் கொண்டது குறளடி; மூன்று சீர்களைக் கொண்டது சிந்தடி; நான்கு சீர்களைக் கொண்டது அளவடி; ஐந்து சீர்களைக் கொண்டது நெடிலடி; ஆறு சீர் அல்லது அதற்கு மேற்பட்ட சீர்களைக் கொண்டது கழிநெடிலடி.

தொடை

தொடை - தொடுத்தல். பாடலின் அடிகளிலோ, சீர்களிலோ எழுத்துகள் ஒன்றிவரத் தொடுப்பது 'தொடை' ஆகும். தொடை என்னும் செய்யுள் உறுப்பு, பாடலில் உள்ள அடிகள்தோறும் அல்லது சீர்கள்தோறும் ஒரு குறிப்பிட்ட வகையிலான ஓசை பொருந்தி வருமாறு பாடலை இயற்றுதல் பற்றி அமைகிறது.

மோனை, எதுகை, இயைபு, அளபெடை, முரண், இரட்டை, அந்தாதி, செந்தொடை என்று எட்டு வகைகளாகத் தொடை அமைகிறது.

மோனைத் தொடை: ஒரு பாடலில் அடிகளிலோ, சீர்களிலோ முதலெழுத்து ஒன்றி அமைவது. (எ.கா.)

ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்.

எதுகைத் தொடை: அடிகளிலோ, சீர்களிலோ முதல் எழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றியமைவது. (எ.கா.)

திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று.

இயைபுத் தொடை: அடிகள்தோறும் இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ, அடியோ ஒன்றியமைவது. (எ.கா.)

வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்

கற்பவை கற்றபின்...

1. உமக்குப் பிடித்த திருக்குறளை அலகிட்டு அதன் வாய்பாடு காண்க.
2. பாடல்களில் பயின்றுவரும் தொடைநயங்களை எடுத்து எழுதுக.

கொண்டல் கோபுரம் அண்டையில் கூடும்
கொடிகள் வானம் படிதர மூடும்
கண்ட பேரண்டம் தண்டலை நாடும்
கனக முன்றில் அனம் விளையாடும்

விண்ட பூமது வண்டலிட்டு ஓடும்
வெயில் வெய்யோன் பொன்னெயில் வழி தேடும்
அண்டர் நாயகர் செண்டலங் காரர்
அழகர் முக்கூடல் ஊர் எங்கள் ஊரே

வினாக்கள்

1. உங்கள் வீட்டில் உள்ளவர்களின் பெயர்களை நேர் – நிரை அசைகளாகப் பிரித்துப் பார்க்க.
2. மூவசைச் சீரில் அமைந்த பெயர்கள் நான்கைக் குறிப்பிடுக.
3. *தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்*
   தம்தம் வினையான் வரும்.
   இக்குறட்பாவில் பயின்றுவரும் மோனை, எதுகைகளைக் கண்டறிக.
4. தளையின் வகைகளை எழுதுக.

LQDX57

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 247 23/05/18 4:32 PM

மதிப்பீடு

LQMT6U

பலவுள் தெரிக.

1. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

   கூற்று - பெரியார் உயிர் எழுத்துகளில் 'ஐ' என்பதனை 'அய்' எனவும், 'ஔ' என்பதனை 'அவ்' எனவும் சீரமைத்தார்.

   காரணம் – சில எழுத்துகளைக் குறைப்பதன் வாயிலாகத் தமிழ் எழுத்துகளின் எண்ணிக்கையைக் குறைக்கலாம் என்று எண்ணினார்.

   அ) கூற்று சரி, காரணம் தவறு ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி

   இ) கூற்று, காரணம் இரண்டும் தவறு ஈ) கூற்று தவறு, காரணம் சரி

2. காலத்தினால் செய்த நன்றி சிறிதெனினும்
   ஞாலத்தின் மாணப் பெரிது - இக்குறளின் ஈற்றுச் சீரின் வாய்பாடு யாது?

   அ) நாள் ஆ) மலர் இ)காசு ஈ)பிறப்பு

3. முண்டி மோதும் துணிவே இன்பம் – இவ்வடியில் இன்பமாக உருவகிக்கப்படுவது

   அ) மகிழ்ச்சி ஆ) வியப்பு இ) துணிவு ஈ) மருட்சி

4. விடைக்கேற்ற வினாவைத் தேர்க.

   விடை – பானையின் வெற்றிடமே நமக்குப் பயன்படுகிறது.

   அ) பானையின் எப்பகுதி நமக்குப் பயன்படுகிறது?

   ஆ) பானை எப்படி நமக்குப் பயன்படுகிறது?

   இ) பானை எதனால் நமக்குப் பயன்படுகிறது?

   ஈ) பானை எங்கு நமக்குப் பயன்படுகிறது?

5. 'ஞானம்' என்பதன் பொருள் யாது?

   அ) தானம் ஆ) தெளிவு இ) சினம் ஈ) அறிவு

குறுவினா

1. 'பகுத்தறிவு' என்றால் என்ன?

2. தாவோ தே ஜிங் 'இன்னொரு பக்கம்' என்று எதைக் குறிப்பிடுகின்றார்?

3. கழுகுமரம் எதைத் தேடியது?

4. யசோதர காவியத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?

5. அசை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 248 23/05/18 4:32 PM

சிறுவினா

1. சிக்கனம் குறித்த பெரியாரின் கருத்துகளை இன்றைய நடைமுறையோடு தொடர்புபடுத்தி எழுதுக.

2. அதுவே வாழ்க்கைப் போர் – எது?

3. நாம் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறிகளாக யசோதர காவியம் குறிப்பிடுவன யாவை?

4. பிறமொழி இலக்கியங்களைத் தழுவி எழுதப்பட்ட தமிழ் இலக்கியங்களைக் குறிப்பிடுக.

5. யசோதர காவியம் வெளிப்படுத்தும் வாழ்க்கை நெறிகளைத் திருக்குறளுடன் ஒப்பிட்டு எழுதுக.

நெடுவினா

1. மொழியிலும் இலக்கியத்திலும் பெரியார் மேற்கொண்ட சீரமைப்புகளை விளக்குக.

2. மொழியின் விரல் பிடித்து நடக்கப் பழகிக்கொண்டிருக்கும் தன்மகனுக்கு நா.முத்துக்குமார் எழுதியுள்ள கடிதச் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

3. வாழ்க்கைப் போரில் வெற்றிபெறுவதற்கான வழிகளைக் கழுகுமரம் வாயிலாக ஆசிரியர் எவ்வாறு உணர்த்துகிறார்?

மொழியை ஆள்வோம்

படித்துச் சுவைக்க.

1) *இருத்தலெனும் சமுத்திரம், அந்தப் பேரிருளிலிருந்து வந்தது,*
மெய்ம்மையெனும் இந்த ரத்தினம், ஊடுருவிப் பார்த்ததில்லை எவரும்;
அவரவர் இயல்பின்படி சொல்லிச் சென்றார்கள் ஒவ்வொருவரும்,
எதனுடைய குணத்தையும் விளக்க முடியாது எவராலும்.

2) *நமது மகிழ்ச்சியின் தோற்றுவாயும் துயரத்தின் சுரங்கமும் நாமே,*
நீதியின் இருப்பிடமும் அநீதியின் அஸ்திவாரமும் நாமே;
தாழ்ச்சியும் உயர்ச்சியும் நாமே, நிறைவும் குறைவும் நாமே,
ரசம் போன கண்ணாடி, சகலமும் தெரியும் ஜாம்ஷீத்தின் மாயக்கிண்ணம்,
இரண்டும் நாமே.

– உமர் கய்யாம்

மொழிபெயர்க்க.

Once Buddha and his disciples were thirsty. They reached a lake. But it was muddy because somebody just finished washing their clothes. Buddha asked his disciples to take a little rest there by the tree. After half an hour the disciples noticed that the water was very clear. Buddha said to them," You let the water be and the mud settled down on its own. Your mind is also like that. When it is disturbed, just let it be. Give a little time. It will settle down on its own. We can judge and take best decisions of our life when we stay calm."

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 249 23/05/18 4:32 PM

சொற்றொடர்களை அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு மாற்றுக.

1) மறுநாள் வீட்டுக்கு வருவதாக முரளி கூறினார். (நேர்க்கூற்றாக மாற்றுக)

2) "தென்னாட்டுப் பெர்னாட்ஷா என்று அறிஞர் அண்ணாவைப் புகழ்கிறோம்" என்று ஆசிரியர் கூறினார். (அயற்கூற்றாக மாற்றுக)

3) மார்னிங் நாஷ்டாவுக்கு இரண்டு தோசைகள் ஹோட்டலில் சாப்பிட்டான். (பிறமொழிச் சொற்களைத் தமிழாக்குக)

4) அலறும் மயிலும், கூவும் ஆந்தையும், அகவும் சேவலும் போன்ற இயற்கையின் அழகான ஒலிகளை நாம் நேசிக்கவேண்டும். (ஒலி மரபுப் பிழைகளைத் திருத்துக)

5) கோழிக்குட்டிகளைப் பிடிக்கப் பூனைக்குஞ்சுகள் ஓடின. (பெயர் மரபுப் பிழைகளைத் திருத்துக)

அஞ்சலட்டையில் எழுதுக.

வார இதழ் ஒன்றில் படித்த கவிதையை/ கதையைப் பாராட்டி அந்த இதழாசிரியருக்கு அஞ்சலட்டையில் கடிதம் எழுதுக.

நயம் பாராட்டுக.

திங்கள்முடி சூடுமலை
தென்றல்விளை யாடுமலை
தங்குமுகில் சூழுமலை
தமிழ்முனிவன் வாழுமலை
அங்கயற்கண் அம்மைதிரு
அருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை
பொதியமலை என்மலையே

குமரகுருபரர்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 250 23/05/18 4:32 PM

மொழியோடு விளையாடு

பொருத்தமான வாய்பாடுகளை வட்டமிடுக.

பகலவன் – காசு/கருவிளம்/கூவிளங்கனி

மலர்ச்சி – கூவிளம்/ புளிமா/ கருவிளம்

தாவோவியம் – தேமாங்கனி/ தேமா/ பிறப்பு

வெற்றிடம் – நாள்/ கூவிளம் / புளிமா

பூங்குட்டி – கருவிளங்கனி / மலர்/ தேமாங்காய்

அகராதியில் காண்க.

வயம், ஓதம், பொலிதல், துலக்கம், நடலை

வினைத்தொகைகளைப் பொருத்தி எழுதுக.

(வளர்தமிழ், விளைநிலம், குளிர்காற்று, விரிவானம், உயர்மதில், நீள்வீதி, கரைவிளக்கு, மூடுபனி, வளர்பிறை, தளிர்பூ)

1. ----------நிலவுடன் ----------அழகாகக் காட்சியளிக்கிறது.
2. ----------ங்கொடிகளும் ----------ங்களும் மனத்தைக் கொள்ளையடிக்கின்றன.
3. ----------கள் அனைத்தும் ----------யில் முழுகிக்கிடக்கின்றன.
4. மெல்ல வீசும் ----------றும் ----------புகழ்பாடுகின்றது.
5. தொலைவில் கலங்----------த்தின் ஒளி ---------- சுவரை ஒளிரச் செய்கிறது.

பொருத்துக.

நேர் நேர் நிரை	கருவிளங்காய்
நிரை நிரை நேர்	புளிமாங்காய்
நேர் நிரை	தேமாங்காய்
நிரை நிரை	தேமாங்கனி
நேர் நேர் நேர்	கருவிளம்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 251 23/05/18 4:32 PM

காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

.....

.....

.....

.....

.....

செயல் திட்டம்

புகழ்பெற்ற கடிதங்களைத் தொகுத்துத் தொகுப்பேடு உருவாக்குக.

கலைச்சொல் அறிவோம்

எழுத்துச் சீர்திருத்தம்- Reforming the letters எழுத்துரு - Font

மெய்யியல் (தத்துவம்) - Philosophy அசை - Syllable

இயைபுத் தொடை - Rhyme

நிற்க அதற்குத்தக

ஒரு நல்ல தோழியாக / தோழராக நண்பர்களுக்குச் செய்ய வேண்டியது..

அ) எழுதுபொருள்களை நண்பர்களுக்குக் கொடுத்து உதவுவது

ஆ) விடுப்பு எடுத்த நண்பர்களுக்கு ஏடுகள் கொடுத்து உதவுதல், வகுப்பில் நடந்தவற்றைப் பகிர்தல்

……

……

அறிவை விரிவு செய்

பெரியாரின் சிந்தனைகள் - வே. ஆனைமுத்து

அஞ்சல் தலைகளின் கதை – எஸ்.பி. சட்டர்ஜி (மொழிபெயர்ப்பு – வீ.மு. சாம்பசிவன்)

தங்கைக்கு – மு. வரதராசன், தம்பிக்கு – அறிஞர் அண்ணா

இணையத்தில் காண்க

http://www.tamilvu.org/slet/lA100/lA100pd1.jsp?bookid=222&pno=191
http://www.tamilvu.org/slet/lA100/lA100pd1.jsp?bookid=222&pno=192
http://www.tamilvu.org/slet/lA100/lA100pd2.jsp?bookid=180&pno=65
http://www.tamilvu.org/library/l3A00/html/l3A00inp.htm
http://www.tamilvu.org/courses/degree/d031/d0311/html/d03111nd.htm
http://tamil.thehindu.com/opinion/blogs/பட்டாம்பூச்சி–விற்பவன்/article8990805.ece

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 252 23/05/18 4:32 PM

இயல் பத்து

அன்பென்னும் அறனே

கற்றல் நோக்கங்கள்

- சான்றோர்கள், அறிஞர்களின் உழைப்பாகிய உரத்தில் தமிழ்ப்பயிர் வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து, தம்மால் இயன்ற பங்களிப்பை நல்குதல்
- புதுக்கவிதைகளைப் படிப்பதால், தற்காலக் கவிதையின் போக்கினை அறிதல்
- குறிப்பிட்ட தலைப்பில் கருத்துகளைத் திரட்டிக் கலந்துரையாடும் திறன் பெறுதல்
- மனிதம் சார்ந்த படைப்புகளைப் படிப்பதன் வாயிலாக மனிதநேயப் பண்புடன் வாழ்தல்
- நூலின் மதிப்புரைகளைப் படித்தறிந்து அதுபோல எழுத முனைதல்
- அணியிலக்கணத்தை அறிந்து கவிதையைச் சுவைத்துப் படித்தல்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 253 23/05/18 4:32 PM

இயல் பத்து

விரிவாகும் ஆளுமை

தமிழியல் ஆய்வு வளரக் காரணமாக இருந்த தமிழறிஞர்கள் பலர். பேராசிரியர் தனிநாயகம் அவர்கள் இதழ்கள், கருத்தரங்குகள், மாநாடுகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலம் தமிழியலை உலகச் செயல்பாடாக ஆக்கினார். தமிழின் பரப்பையும் சிறப்பையும் உலகின் பல நாடுகளில் பரவலாக்கினார். அவரது வாழ்வு, தமிழ் வாழ்வாகவே இருந்தது. அவர் இலங்கையில் யாழ் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய உரை, பொதுமையாக மனிதனுக்குத் தேவையான ஆளுமை பற்றி விளக்குகிறது.

உலக நாடுகளையும் மக்களையும் உட்படுத்தி அன்பு பாராட்டுவது நம் இயல்பு. இது இருபதாம் நூற்றாண்டில் விமானப் போக்குவரத்து வளர்ந்த பின்பு தோன்றியதோர் பண்பு என்று நாம் நினைக்க வேண்டியதில்லை. பண்டைத் தமிழ் இலக்கியங்களிலேயே தமிழ்ப்புலவர்களால் இப்பண்பு பாராட்டிப் பாடப்பட்டுள்ளது. அக்காலத்திலேயே ஒரு நாட்டவர் பிற நாட்டவரோடு உறவு பாராட்ட விரும்பியுள்ளனர். இதனைக் கீழ்க்காணும் இரு செய்யுள்கள் நமக்கு எடுத்துக்காட்டுகின்றன.

கணியன் பூங்குன்றனாரின் "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்னும் கொள்கை எல்லா நூற்றாண்டுகளுக்கும் பொருத்தமாக உள்ளது.

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு (குறள்.397)

என்னும் திருக்குறள், முன்பு எப்போதையும்விட நம் காலத்திற்குப் பொருத்தமான அறிவுரையாக விளங்குகின்றது.

மேற்கண்ட பாடல்களில் ஆளப்பட்டுள்ள 'ஊர்', 'நாடு', 'கேளிர்' என்னும் தமிழ்ச்சொற்கள் வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு பொருண்மைகளைக் கொண்டிருக்கலாம். ஆயினும், இம்மேற்கோள்கள் காட்டும் பரந்த ஆளுமையும் (personality) மனித நலக் கோட்பாடும் (humanism) இலத்தீன் புலவர் தெரென்ஸ் (Terence) கூறிய கூற்றுடன் ஒப்பிடத்தக்கவை ஆகும். "நான் மனிதன்; மனிதனைச் சார்ந்த எதுவும் எனக்குப் புறமன்று" என்பதே அவரது கூற்று.

மூன்று இலக்கணங்கள்

முதிர்ந்த ஆளுமைக்கு மூன்று இலக்கணங்கள் இன்றியமையாதவை என்கிறார் கோர்டன் ஆல்போர்ட் (Gordon Allport) என்னும் உளநூல் வல்லுநர். முதலாவதாக மனிதன், தன் ஈடுபாடுகளை விரிவாக வளர்ப்பவனாக இருத்தல் வேண்டும்; பிறருடைய நலத்திற்கும் இன்பத்திற்கும் பாடுபடக்கூடிய வகையில் தன் ஆளுமையை விரிவடையச் செய்து செழுமைப்படுத்த வேண்டும். இரண்டாவதாக, ஒருவன் பிறரால் எவ்வாறு கணிக்கப்படுகிறானோ அதை அறிந்துகொள்ளும் ஆற்றல் படைத்தவனாக

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 254 23/05/18 4:32 PM

இருத்தல் வேண்டும் (self objectification). மூன்றாவதாக அவனது வாழ்க்கைக்குச் சுய ஓர்மையைத் தரும் வாழ்க்கைத் தத்துவத்தைக் கடைப்பிடித்து நடத்தல் வேண்டும் (unifying philosophy of life-self-unification).

இலட்சியங்களைக் கடைப்பிடித்தும் கற்பித்தும் வருவதால்தான் சமுதாயம் முன்னேற்றம் அடைகிறது. அது மக்களுக்கு வேண்டிய இன்பத்தையும் சீர்திருத்தத்தையும் அளிக்கின்றது. குறிக்கோள் இல்லாத சமுதாயம் வீழ்ச்சி அடையும் என்னும் உண்மையைப் பண்டைக் காலத் தமிழரும் நன்கு உணர்ந்திருந்தனர். குறிக்கோள் இல்லாதவன் வெறும் சதைப்பிண்டம் என்பதைப் "பூட்கையில்லோன் யாக்கை போல" (புறம்) என்னும் அடியில் புலவர் ஆலத்தூர்கிழார் நிலைநாட்டுகிறார்.

பிறர் நலவியல்

விரிவாகும் ஆளுமையை உருவாக்கும் நோக்கம் கொண்டுள்ள மக்கள் சமுதாயமே இன்பத்தை அளிக்கும் சமுதாயமாகக் காணப்படும். எந்த அளவிற்குப் பிறர் நலத்திற்காக மனிதன் பாடுபடுகின்றானோ அந்த அளவிற்கு அவனது ஆளுமை வளரும். பிறருக்காகப் பணி செய்வதால்தான் ஒருவனுடைய வாழ்க்கை, பண்புடைய வாழ்க்கை ஆகின்றது. 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்னும் குறிக்கோள், வாழ்க்கையைத் தன்னலம் தேடுவதிலிருந்து விடுவித்து ஆளுமையை முழுமைப்படுத்தும் பண்பாக ஆக்குகின்றது.

பிறர் நலவியல் (Altruism) என்னும் பண்பு, மக்கள் வரலாற்றில் படிப்படியாகத்தான் தோன்றும். மேம்படாத சமுதாயத்தில் மனிதன் தன்னுடைய குடும்பத்தையும் தன் இனத்தையும் (tribe) காப்பாற்றவே முயல்வான். படிப்படியாக அறிவு வளர வளர எங்கு வாழ்ந்தாலும் மக்கள் அனைவரும் தன் இனத்தவர், எல்லா உயிர்க்கும் அன்புகாட்டுதல் வேண்டும் என்னும் சிந்தனை அவனுக்குத் தோன்றும்.

வெவ்வேறு பண்பாடுகள் வெவ்வேறு காலத்தில் பிறர் நலவியலைக் கற்பித்து வந்திருக்கின்றன. சீனநாட்டில் பொ.ஆ.மு. 604ஆம் ஆண்டில் பிறந்த லாவோட்சும் (Lao-Tse) அவருக்குப் பின்பு கன்பூசியசும் (Confucius பொ.ஆ.மு. 551-479) தம் காலத்திலேயே இந்தக் கொள்கையை ஒருவாறு தெளிவாகக் கற்பித்துள்ளனர். ஆனால், பிளேட்டோ, அரிஸ்டாட்டில் போன்ற கிரேக்கத் தத்துவ ஞானிகள் கிரேக்கக் குடியினரை மட்டுமே தம் சிந்தனைக்கு உட்படுத்தினர்.

பண்டைக்கால தருமசாத்திர நூல்களும் பிறரைக் கவனத்தில் கொள்ளவில்லை. 'விந்திய மலைத்தொடருக்கும் இமய மலைக்கும் இடையே உள்ள நிலப்பரப்பே கருமபூமி; வீடுபேறு அடைவதற்கு அப்பூமியிலே பிறந்திருக்க வேண்டும்' என்பதே அவற்றின் கருத்தாக இருந்தது.

தமிழ் மக்களிடமோ, ஸ்டாயிக்வாதிகள் கூறியதுபோல 'மக்கள் அனைவரும் உடன் பிறந்தவர்கள்; பிறப்போ, சாதியோ, சமயமோ அவர்களைத் தாழ்த்தவோ உயர்த்தவோ முடியாது' என்னும் நம்பிக்கை பண்டுதொட்டே நிலவியுள்ளது. இந்திய வரலாற்றில் பண்டைக் காலத்திலேயே இத்தகைய அரிய கொள்கையைத் தமிழ் மக்கள் கடைப்பிடித்திருந்தனர் என்னும் உண்மை பெரும் வியப்பைத் தருகின்றது. ஒழுக்கவியலை (Ethics) நன்கறிந்து எழுதிய உலகமேதை ஆல்பர்ட் சுவைட்சர், திருக்குறளைப் பற்றிக் கூறும்போது "இத்தகைய உயர்ந்த கொள்கைகளைக் கொண்ட செய்யுட்களை உலக இலக்கியத்திலேயே காண்பது அரிது" என்பார். ஆனால், இத்தகைய கொள்கைகள் திருவள்ளுவர் காலத்திற்கும் முன்பே தமிழ் மக்களால் போற்றப்பட்டுள்ளன.

ஒற்றுமை உணர்ச்சி

தமிழ் இலக்கியத்தை ஆராயும்போது, பிறர் நலக்கொள்கையையும் பிறர் மீதான அன்பு பாராட்டலையும் முதன்முதலில் பரப்புவதற்குக் காரணமாய் இருந்தவர்கள்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 255 23/05/18 4:32 PM

தமிழ்நாட்டுப் பாணரும் புலவருமே ஆவர் என்பதை அறிய முடிகிறது. பாணர்க்கும் புலவர்க்கும் சொந்த ஊரும் நாடும் உண்டு. ஆயினும், அவர்கள் தமிழ் வழங்கும் இடமெங்கும் சென்று அரசர்களையும் வள்ளல்களையும் மக்களையும் வாழ்த்தி வந்ததால் 'தமிழகம்' என்ற ஒற்றுமை உணர்வு உண்டானது. அம்மொழி பரவிய நிலம் அனைத்தையும் "தமிழகம்" என்றும் "தமிழ்நாடு" என்றும் வாழ்த்தினர்.

பிறநாடுகளைக் குறிப்பிடும் போது வேற்று நாடு, பிறநாடு என்று குறிக்காது மொழிமாறும் நாடு – மொழிபெயர் தேயம் – என்றே வரையறுத்துக் கூறியுள்ளனர்.

இலக்கணத்தில் பரந்த மனப்பான்மை

அகத்திணை இலக்கியம் பல்வேறு வழிகளில் பரந்த மனப்பான்மையையும் விரிவான ஆளுமையையும் வளர்த்தது. ஐவகை நிலங்களின் பெரும்பொழுது, சிறுபொழுது, கருப்பொருள் ஆகியவற்றைப் புலவரும் பாணரும் இலக்கியம் பயில்வோரும் தவறாது கற்றுவந்தனர். தொல்காப்பியர் நிலத்தைப் பிரித்தமுறை உலகின் பிரிவாகவே அமைந்தது.

படுதிரை வையம் பாத்திய பண்பே –

(தொல். 948)

களவொழுக்கத்திலும் கற்பொழுக் கத்திலும் பிற உயிரொன்றைக் காதலிப்பதாலும் குழந்தைகளைப் பேணுவதாலும் இருவருடைய ஆளுமையும் இன்னும் விரிவடைய வாய்ப்பிருந்தது. புலவர்கள் தம் செய்யுள்களில் தலைவன், தலைவி, தோழி, செவிலித்தாய் ஆகியோரைக் கற்பனை செய்து பாடுவதால் பிறர் பற்றி அறியும் பண்பை அவர்கள் எளிதாகப் பெற்றிருக்க வேண்டும்.

நன்மை நன்மைக்காகவே

அன்பு வாழ்க்கையிலும் பிறருடன் கலந்து வாழும் முறைகளிலும் பிறர்நலம் பேணுவதிலும் தமிழ்ப் பண்பாட்டின் இன்றியமையாத கொள்கை உருப்பெறுகிறது. கடையெழு வள்ளல்களுள் ஒருவரான ஆய் என்பவனைப் போற்றுவதற்குக் காரணம் அவன் நன்மையை நன்மைக்காவே செய்ததுதான். பிறர் போற்றுவார்கள் என்றோ வேறு நலன்களைப் பெறலாம் என்றோ அவன் நன்மைகளைச் செய்யவில்லை.

இம்மைச் செய்தது மறுமைக்கு ஆமெனும்
அறவிலை வணிகன் ஆய் அலன்

(புறம். 134)

பிறர்க்காக வாழும் மக்கள் இவ்வுலகில் இல்லையென்றால், நாம் வாழ்வது அரிது. பிறர்க்காக வாழ்வதே உயர்ந்த பண்பும் பண்பாடும் ஆகும். "உண்டாலம்ம இவ்வுலகம்" என்ற புறப்பாட்டு இந்தப் பண்பை அழகாக எடுத்துக் காட்டுகின்றது.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 256 23/05/18 4:32 PM

பண்புடைமை என்னும் அதிகாரத்திற்கு உரை கண்ட பரிப்பெருமாள் பின்வருமாறு கூறியுள்ளார்: "பண்புடைமையாவது யாவர்மாட்டும் அவரோடு அன்பினராய்க் கலந்து ஒழுகுதலும், அவரவர் வருத்தத்திற்குப் பரிதலும் பகுத்து உண்டலும் பழிநாணலும் முதலான நற்குணங்கள் பலவும் உடைமை".

இமயவரம்பு

இதுவரை வடவேங்கடம் தென்குமரிக்கு இடைப்பட்ட நிலப்பரப்பில் விரிவான ஆளுமையின் வளர்ச்சியைக் கண்டோம். ஆனால், தமிழ் ஈடுபாடு தமிழகத்தோடு நிற்கவில்லை.

வட இந்தியாவுடன் தொடர்புகள் வளர வளரக் கங்கையும் இமயமும் அடிக்கடி தொகைநூல்களில் எடுத்தாளப்பட்டன. இமயமலை, நீடிக்கும் உறுதிக்கு மேற்கோளாகக் காட்டப்படுகின்றது.

இமயத்துக்
கோடு உயர்ந்தன்ன தம் இசை நட்டுத்
தீது இல் யாக்கையொடு மாய்தல்
தவத்தலையே

(புறம். 214, 11–13)

புலவர்கள் குமரி ஆறு, காவிரி ஆறு போன்ற மணல் நிறைந்த இடங்களை நீண்ட வாழ்க்கைக்கும் பன்மைக்கும் உவமையாகக் கூறுகிறார்கள். அத்துடன் கங்கையையும் இமயத்தில் பெய்யும் மழையையும் உவமையாகச் சேர்த்துக் கொள்கிறார்கள்.

"இமயத்தீண்டி இன்குரல் பயிற்றிக்
கொண்டல் மாமழை பொழிந்த
நுண்பஃ றுளியினும் வாழிய பலவே".

(புறம் 34, 21–23)

சில புலவர்கள் இமயத்தையும் கங்கையையும் தமிழ்நாட்டு மலைகளுடனும் ஆறுகளுடனும் சேர்த்தே பாடுகின்றனர்.

ஒவ்வொருவரும் சான்றோர் ஆகலாம்

திருக்குறளில் பூட்கைமகன் அல்லது குறிக்கோள் மாந்தனின் இயல்புகள் பல கூறப்பட்டிருக்கின்றன. ஒன்று பிறர்பால் அன்புடைமை ஆகும். இல்லற வாழ்க்கையின் நோக்கம் ஈகை, விருந்தோம்பல் போன்ற பண்புகளால் ஆளுமையை வளர்த்தல் ஆகும்.

தமிழ் மக்கள் "சான்றோன்" எனப்படும் குறிக்கோள் மாந்தனைப் பாராட்டிய காலத்தில் இத்தாலிய நாட்டில் உரோமையர் "*sapens*" (அறிவுடையோன்) எனப்படும் இலட்சிய புருஷனைப் போற்றி வந்தனர். உரோமையருடைய "சாப்பியன்ஸ்" அல்லது சான்றோன் என்பவன் சமுதாயத்திலிருந்து விலகி, தன் சொந்தப் பண்புகளையே வளர்க்க வேண்டும். உரோமையருடைய சான்றோர் அரிதாகவே சமுதாயத்தில் தோன்றுவர்;

ஸ்டாயிக்வாதிகளின்படி அவர்களுடைய இலட்சிய மனிதர்கள் ஒரு சிலரே. அச்சிலர் தனிமையாகத் தம் இல்லங்களில் வாழ்ந்து வருவர். திருக்குறளின் சான்றோரோ பலர். பெருமை, சான்றாண்மை, பண்புடைமை, நட்பு முதலான அதிகாரங்களில் இச்சான்றோனுடைய இயல்புகள் எல்லாம் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மனிதனும் சான்றோன் ஆதல் கூடும். அவனை அவ்வாறு ஆக்குவதே கல்வியின் நோக்கம். ஒவ்வொரு தாயும் தன் மகன் சான்றோன் ஆக வேண்டும் என்றே எதிர்பார்ப்பாள். தன் பிள்ளையைச் சான்றோன் ஆக்குதல் ஒவ்வொரு தந்தைக்கும் கடனாகும்.

தமிழ்ச் சான்றோன் சமுதாயத்திலேயே வாழ்ந்து தன்னால் இயன்றவரை சமுதாயத்திற்குப் பல நன்மைகளைச் செய்வான். பிசிராந்தையார் கோப்பெருஞ் சோழனுக்குக் கூறியது போலத் தமிழ்ச் சான்றோர் பலர் வாழும் ஊரே வாழ்க்கைக்கு இன்பத்தைத் தருவதாகும் (புறம் 191).

ஒன்றே உலகம்

உரோம நாட்டுச் சிந்தனையாளர்களும் ஏறத்தாழத் தமிழ்ப் புலவர்களைப் போல அதே காலத்தில் ஒன்றே உலகம் என்ற கொள்கையைப் பாராட்டி வந்தனர். ஸ்டாயிக்வாதிகள் உலகில் ஒற்றுமை உண்டு

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 257 23/05/18 4:32 PM

என்றும், மக்கள் அனைவரும் ஒரே குலத்தவர் என்றும், எல்லா உயிர்களும் தொடர்பால் இணைக்கப்பட்டுள்ளன என்றும் கற்பித்தனர். ஒன்றே உலகம் என்ற மனப்பான்மையும் கொள்கையும் முதன்முதல் மேலை நாட்டில் ஸ்டாயிக்வாதிகளால் போற்றப்பட்டது.

செனக்கா என்னும் தத்துவ ஞானி கூறியதாவது: "எல்லாருடைய நாடுகளும் நமக்குத் தாய் நாடு என்றும், நம் நாடு எல்லா மக்களுக்கும் தாய் நாடு என்றும் நாம் கருதுதல் வேண்டும்".

மார்க்ஸ் அரேலியஸ் என்னும் பேரரசர் கூறியதாவது: "நான் பகுத்தறிவும் கூட்டுறவும் உடையவன்; நான் அன்டோநீனஸ் ஆதலால் உரோமுக்கு உரியவன்; நான் மனிதன் என்பதால் உலகிற்கு உரியவன்" இவ்வாறு உலக மாந்தரின் ஒற்றுமைத்தன்மை மிகவும் அழகாகக் கூறப்பட்டுள்ளது. மக்கள் அனைவரும் மக்கட்தன்மையை வளர்க்க வேண்டும் என்பதற்காக எழுதப்பட்ட நூல் திருக்குறள். ஜி.யு. போப் திருவள்ளுவரை "உலகப் புலவர்" என்று போற்றுவது மிகவும் பொருத்தமானதாகும்.

மக்கள் அனைவரையும் ஒரே குலத்தவர் என்று கருதுவதோடு உயிர்கள் அனைத்தையும் மக்களோடு சேர்த்து ஒரே குலத்தவை என்று கருதும் பண்பும் திருக்குறளுக்கும் ஸ்டாயிக் வாதிகளுக்கும் பொதுவான ஒரு தன்மை.

உரோம நாட்டவர் எழுதும்போது "நாம்", "நம்மவர்" என்ற செருக்கோடு உரோமரைக் கருதியே எழுதுகின்றனர். வள்ளுவரோ எல்லா உலகிற்கும் எல்லா மாந்தர்க்கும் பயன்படும் வகையில் உலகமெல்லாம் தழுவுவதற்குரிய பான்மையில் தம் நூலை யாத்துள்ளார்.

விரிவாகும் ஆளுமை

இறுதியில், அன்பர்களே, திருவள்ளுவரின் கூற்றுடன் இவ்விரிவுரையை முடிக்க விரும்புகின்றேன். விரிவாகும் ஆளுமையைப் பற்றி ஒரு சில உண்மைகளைக் கண்டோம். திருவள்ளுவரோ இரண்டு அறவுரைகளில் இந்தக் குறிக்கோளை எவ்வாறு அடையலாம் என்று காட்டியுள்ளார். "உள்ளற்க உள்ளம் சிறுகுவ" (798) என்றும் "உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல்" (596) என்றும் கற்பித்துள்ளார்.

நூல் வெளி

தமிழுக்குத் தொண்டாற்றிய கிறித்துவப் பெரியார்களுள் தனிநாயகம் அடிகள் குறிப்பிடத்தக்கவர். அடிகளாரின் சொற்பொழிவுகள் தமிழர் புகழைப் பரப்பும் குறிக்கோளைக் கொண்டவை. இலங்கையில் யாழ் பல்கலைக்கழகத்தில் அவர் ஆற்றிய பஸ்கர் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு பாடமாக இடம்பெற்றுள்ளது. தம் சொற்பொழிவு வாயிலாக உலகம் முழுக்கத் தமிழின் புகழைப் பரப்பினார். அகில உலகத் தமிழாய்வு மன்றம் உருவாகவும் உலகத் தமிழராய்ச்சி நிறுவனம் உருவாகவும் இவர் காரணமாக இருந்தார். இவர் தொடங்கிய தமிழ்ப் பண்பாடு என்ற இதழ் இன்றுவரை வெளிவந்து கொண்டிருக்கிறது.

கற்பவை கற்றபின்...

1. உங்களுக்குப் பிடித்த தமிழ் ஆளுமைகள் குறித்துக் கலந்துரையாடிக் குறிப்புகள் எழுதுக.
2. உலகத் தமிழ்மாநாட்டு மலர், பொங்கல் மலர், தீபாவளி மலர் போன்றவற்றில் வெளிவந்துள்ள உலகப் பொதுவியல் சிந்தனைகள் குறித்து ஐந்து மணித்துளிகள் பேசுக.

LR6KA5

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 258 23/05/18 4:32 PM

இயல் பத்து

அக்கறை

நுழையும்முன்

உரைநடையில் கவிதை எழுதுவதைப் பாரதி தம் வசன கவிதைகளின் வழியாகத் தொடங்கினார். அவற்றின் தொடர்ச்சியான கவிதைகளே புதுக்கவிதைகள். அவ்வகையில் புதுக்கவிதையின் வரலாறு நூறு ஆண்டுகளை எட்டுகிறது எனலாம். புதுக்கவிதைகள் மனித நேயத்தை வலியுறுத்துவனவாக இருக்கின்றன. பரபரப்பான இந்நூற்றாண்டு வாழ்வின் நெருக்கடியில் மனிதம் நசுங்கிவிடக்கூடாது என்பதைப் புதுக்கவிதைகளின் வாயிலாகக் கவிஞர் பலர் பல பரிமாணங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். கல்யாண்ஜி கவிதைகளிலும் மனிதம் பரவலாக வலியுறுத்தப்படுகிறது.

LRFGBS

சைக்கிளில் வந்த
தக்காளிக் கூடை சரிந்து
முக்கால் சிவப்பில் உருண்டது
அனைத்துத் திசைகளிலும் பழங்கள்
தலைக்கு மேலே
வேலை இருப்பதாய்க்
கடந்தும் நடந்தும்
அனைவரும் போயினர்
பழங்களை விடவும்
நசுங்கிப் போனது
அடுத்த மனிதர்கள்
*மீதான அக்கறை**

– கல்யாண்ஜி



இலக்கணக் குறிப்பு

உருண்டது, போனது – ஒன்றன் பால் வினைமுற்றுகள்

சரிந்து – வினையெச்சம்

அனைவரும் – முற்றும்மை.

பகுபத உறுப்பிலக்கணம்

சரிந்து = சரி + த்(ந்) + த் + உ;

சரி – பகுதி; த் –சந்தி (ந் ஆனது விகாரம்);

த் – இறந்த கால இடை நிலை;

உ – வினையெச்ச விகுதி

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 259 23/05/18 4:33 PM

நூல் வெளி

கல்யாண்ஜியின் இயற்பெயர் கல்யாணசுந்தரம்; சிறுகதை, கவிதை, கட்டுரை, நாவல் எனத் தொடர்ந்து எழுதி வருபவர். வண்ணதாசன் என்ற பெயரில் கதை இலக்கியத்திலும் பங்களிப்பு செய்துவருகிறார். புலரி, முன்பின், ஆதி, அந்நியமற்ற நதி, மணல் உள்ள ஆறு ஆகியவை அவரின் கவிதை நூல்களுள் சில. இவை தவிர, அகமும் புறமும் என்ற கட்டுரைத் தொகுப்பும் வெளிவந்திருக்கிறது. பல கடிதங்கள் தொகுக்கப்பட்டு, 'சில இறகுகள் சில பறவைகள்' என்ற பெயரில் வெளியானது. கலைக்க முடியாத ஒப்பனைகள், தோட்டத்துக்கு வெளியிலும் சில பூக்கள், உயரப் பறத்தல், ஒளியிலே தெரிவது உள்ளிட்டவை இவரது குறிப்பிடத்தக்க சிறுகதை நூல்கள். ஒரு சிறு இசை என்ற சிறுகதைத் தொகுப்பிற்காக இவருக்கு 2016ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதெமி பரிசு வழங்கப்பட்டது.

கற்பவை கற்றபின்...

நிலா, மழை, காற்று, தண்ணீர் போன்றவை குறித்த புதுக்கவிதைகளைத் திரட்டி, இலக்கிய மன்றத்தில் படித்துக் காட்டுக.

LRPCDF

(எ.கா.)

ஹைக்கூ

இந்தக் காட்டில்
எந்த மூங்கில்
புல்லாங்குழல்?

– அமுதோன்

பிம்பங்களற்ற தனிமையில்
ஒன்றிலொன்று முகம் பார்த்தன
சலூன் கண்ணாடிகள்

– நா. முத்துக்குமார்

வெட்டுக்கிளியின் சப்தத்தில்
மலையின் மௌனம்
ஒரு கணம் அசைந்து திரும்புகிறது.

– ஜப்பானியக் கவிஞர் பாஷோ

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 260 23/05/18 4:33 PM

கவிதைப் பேழை

இயல் பத்து

குறுந்தொகை

LRY8F3

நுழையும்முன்

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று மனிதம் பேசிய சங்கக் கவிதைகள் தமிழ்ச் சமுதாயத்தின் மாண்புகளைக் காட்டும் காலக் கண்ணாடியாய்த் திகழ்வன. அவற்றுள் ஒன்றான குறுந்தொகை ஓர் அக இலக்கிய நூலாகும்; அதன் சிறப்பு கருதியே 'நல்ல குறுந்தொகை' என்று அழைக்கப்படுகிறது; குறுந்தொகைப் பாடல்கள் பலவும் இயற்கைக் காட்சிகள் மூலம் நாட்டு வளத்தைப் படம்பிடித்துக் காட்டுவன. அத்தகைய ஒரு பாடல், தலைவனைப் பிரிந்த தலைவியின் துயரைத் துடைக்கத் தோழி ஆறுதல் கூறுவதாகப் பாடப்பகுதியில் இடம்பெறுகிறது.

நசை பெரிது உடையர்; நல்கலும் நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின – தோழி அவர் சென்ற ஆறே. (37)

– பாலை பாடிய பெருங்கடுங்கோ

பேரன்பு உடையவன் பெரிதுனக்குத் தருவான்
பொருள்தேடச் சென்றவன் பறந்தோடி வருவான்
பசித்தீ அணைக்க மெல்லிய யாமரக்
கிளையொடித்து உதவும் யானைக் காட்சியே
உன்நினைவு தூவி இங்கவனை அழைத்துவரும்
மலரினும் மெல்லியளே மனக்கவலை கொள்ளாதே

திணை: பாலை

துறை: தலைவன் விரைந்து வருவான் எனத் தோழி தலைவியை ஆற்றியது.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 261 23/05/18 4:33 PM

சொல்லும் பொருளும்

நசை–விருப்பம், நல்கல் –வழங்குதல், பிடி–பெண்யானை, வேழம் –ஆண்யானை, யா–ஒரு வகை மரம் ; பாலை நிலத்தில் வளர்வது, பொளிக்கும் –உரிக்கும், ஆறு–வழி

பாடலின் பொருள்

தோழி தலைவியிடம், ''தலைவன் உன்னிடம் மிகுந்த விருப்பம் உடையவன். அவன் மீண்டும் வந்து அன்புடன் இருப்பான். பொருள் ஈட்டுதற்காகப் பிரிந்து சென்ற வழியில், பெண் யானையின் பசியைப் போக்க, பெரிய கைகளை உடைய ஆண்யானை, மெல்லிய கிளைகளை உடைய 'யா' மரத்தின் பட்டையை உரித்துத் தன் அன்பை வெளிப்படுத்தும்" (அந்தக் காட்சியைத் தலைவனும் காண்பான்; அக்காட்சி உன்னை அவனுக்கு நினைவுபடுத்தும். எனவே, அவன் விரைந்து உன்னை நாடி வருவான். வருந்தாது ஆற்றியிருப்பாயாக) என்று கூறினாள்.

இப்பாடலில் இறைச்சி அமைந்துள்ளது.

இலக்கணக் குறிப்பு

களைஇய – சொல்லிசை அளபெடை,

பெருங்கை, மென்சினை– பண்புத் தொகைகள்,

பொளிக்கும் – செய்யும் என்னும் வினைமுற்று, பிடிபசி – ஆறாம் வேற்றுமைத் தொகை, அன்பின – பலவின்பால் அஃறிணை வினைமுற்று,

நல்கலும் நல்குவர் – எச்சஉம்மை

பகுபத உறுப்பிலக்கணம்

உடையர் = உடை+ ய் + அர்

உடை – பகுதி;

ய் – சந்தி (உடம்படுமெய்);

அர் – பலர்பால் வினைமுற்று விகுதி

பொளிக்கும் = பொளி + க் + க் + உம்

பொளி –பகுதி

க் – சந்தி; க் –எதிர்கால இடைநிலை

உம் – வினைமுற்று விகுதி

நூல் வெளி

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று குறுந்தொகை. இது, தமிழர் வாழ்வின் அகப்பொருள் நிகழ்வுகளைக் கவிதையாக்கிக் கூறுகிறது; கடவுள் வாழ்த்து நீங்கலாக 401 பாடல்களைக் கொண்டது. இதன் பாடல்கள் நான்கடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் கொண்டவை. 1915ஆம் ஆண்டு சௌரிப்பெருமாள் அரங்கனார் முதன் முதலில் இந்நூலைப் பதிப்பித்தார். நமக்குப் பாடமாக வந்துள்ளது 37ஆவது பாடல் ஆகும். இப்பாடலின் ஆசிரியர் 'பாலை பாடிய பெருங்கடுங்கோ'. இவர் சேர மரபைச் சேர்ந்த மன்னர்; கலித்தொகையில் பாலைத் திணையைப் பாடியதால் 'பாலை பாடிய பெருங்கடுங்கோ' என அழைக்கப் பெற்றார்.

கற்பவை கற்றபின்...

நீங்கள் கண்ட/ உதவிசெய்து மனம் நெகிழ்ந்த நிகழ்வை வகுப்பறையில் பதிவு செய்க.

LS84GQ

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 262 23/05/18 4:33 PM

விரிவானம்

இயல் பத்து

தாய்மைக்கு வறட்சி இல்லை!

– சு. சமுத்திரம்

மனிதம் குறித்து எல்லாவகை இலக்கியங்களும் பேசுகின்றன . மனிதத்தை நிலைநாட்டவே சான்றோர் பலரும் முயல்கின்றனர். எது வறண்டாலும் மனிதம் வறண்டுவிடக் கூடாது என்பது பன்னெடுங்கால விழைவாகவும் செய்தியாகவும் திகழ்கிறது. தமிழ்ச் சிறுகதைகளும் இதற்கு விதிவிலக்கல்ல. தாய்மை வழியே மனிதம் காக்கப்படுவதை, சு.சமுத்திரம் அவர்களின் சிறுகதை உணர்த்துகிறது.

LSGZID

கர்நாடக மாநிலத்தின் வடமாவட்டத் தலைநகரான குல்பர்கா நகரைத் தாண்டிய அந்த தேசிய நெடுஞ்சாலை, ஒரு கிலோ மீட்டர் தொலைவுக்கு அப்பால் காடுகளுக்கு மத்தியில் மலைப்பாம்புபோல் நெளிந்து கொண்டிருந்தது... நகரச் சந்தடியில்லாமல் நிசப்தம் நிலவிய அந்தக் காட்டின் மவுனம், உள்மனதிற்குப் பேரிரைச்சலாய் ஒலித்துக் கொண்டிருந்த மத்தியான வேளையில்...

இந்தச் சாலையின் வலதுபக்கம் முள்வேலி போட்ட ஒரு தோட்டம். மண்ணவதாரம் எடுத்தது போன்ற பாதை, அந்தத் தோட்டத்திற்கு மத்தியில் அரைகிலோ மீட்டர்வரை ஓடிக் கொண்டிருந்தது. இந்தத் தோட்டத்திற்கு முன்பகுதியிலேயே ஒரு கல்மாளிகை. இதையொட்டி, முன்னாலும் பின்னாலும் இரண்டு கம்புகள் தூக்கி நிற்க முக்கோண வாசல் கொண்ட குடிசை. குடிசைக்குக் கதவு கிடையாது. அது தேவையும் இல்லை. அதைப் பார்த்தால், உள்ளே இருப்பது வெளியே போவதற்கு முகாந்திரம் இல்லை. வெளியே இருப்பது உள்ளே போகாமல் இருப்பதற்குத்தான் கதவு தேவை. அந்தக் குடிசைக்கு முன்னால் அந்தக் குடும்பமே சுருண்டு கிடந்தது.

அவன் குப்புறக் கிடந்தான். தார்ப்பாய்த்த நாலு முழவேட்டி, முருங்கைக் கொம்பாய்த் தோன்றிய அவன் பின் கால்களைக் காட்டியபடியே இடுப்பைப் பற்றி இருந்தது. இரண்டு கரங்களையும் குறுக்காய் மடித்து மூச்சிழுத்துக் கொண்டிருந்தான். அவன் அருகே அவள் படுத்திருந்த விதத்தைப் பார்த்தால், அவள் மூக்கில் கை வைத்தால்தான் எந்த நிலையில் இருக்கிறாள் என்று சொல்ல முடியும். கரி கரியாய், கருப்புக் கருப்பாய், சாலைபோடப் பயன்படுத்தப்படும் தாரையே நெய்தது போன்றிருந்தது அவள் புடவை. இவள் தலைமாட்டில் இரண்டு சாம்பல் நிற நாய்க்குட்டிகள். இரண்டு சடை நாய்கள்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 263 23/05/18 4:33 PM

கால்மாட்டில் மூன்று வயது பெண்குழந்தை ஒருச்சாய்த்துக் கிடந்தாள். வயிற்றைக் கைகளால் அணைமுறித்துத் தூக்கத்தில் துக்கத்தைக் கலைத்துக் கொண்டிருப்பதுபோல் தோன்றியது. ஒரு வயது குழந்தை ஒன்றுதான், ஈரத் தடயங்கள் ஏதும் இல்லாத ஈயத்தட்டை எடுத்து, 'ஏம்மா என்னைப் பெத்தே' என்பது மாதிரி அம்மாவின் வயிற்றில் அடித்துக் கொண்டிருந்தபோது அந்தப் பேரிரைச்சலைக் கேட்டு அவள்கூட கண்விழித்தாள். கண் முன்னால் தன்னையும், தன்னவர்களையும் நோக்கி மோதிக் கொல்லப்போவதுபோலப் பாய்ந்து வந்த அந்த ஜீப்பிற்குப் பயந்து, கோயிலில் அங்கப்பிரதட்சிணம் செய்வதுபோல் அனிச்சையாக உருண்டு உருண்டு உடம்பைச் சுழற்றினாள். கணவனின் கையையும் பிடித்து அவனையும் அவள் உருட்டிப் போட்டாள். இதற்குள் அவன் துடித்தெழுந்தான். அந்தச் சடை நாய்க்குட்டிகள் பாய்ந்து வந்த ஜீப்பை வழி மறிப்பதுபோல் முன்னால் போய் நின்றபடி பயமில்லாமல் குலைத்தன. 'எம்பி எம்பிக்' குதித்தன.

இதற்குள், ஜீப் புழுதி பறக்க நின்றது. புழுதி மண் பட்ட கண்களைத் துடைத்தபடியே அவள் கீழேயே கிடந்தாள். பிறகு கணவன் கைதூக்கிவிட எழுந்த அவள் ஜீப்காரர்களைக் கோபமாகப் பார்த்தாள்.

அவள் தனது செல்லாக் கோபத்தைப் பொறுமையாக்கியபோது, ஜீப்பின் முன் இருக்கையில் இருந்து குதித்த ஒருவரை, பின்னால் இருந்து குதித்தவர்கள் பயபக்தியுடன் சூழ்ந்திருந்தார்கள். அந்த அதிகாரிக்கு நாற்பத்து ஐந்து வயதிருக்கலாம். அவரை மற்றவர்கள் பயத்துடன் பார்ப்பதைப் பார்த்த அவனுக்குப் பயம் பிடித்தது. மனைவியை ஆணையிடும் பாவனையில் நோக்கி, அப்புறம் அடிபணியும் தொனியில் கண்களைக் கீழே போட்டு, குடிசையை நோக்கி நடந்தான். எங்கிருந்தோ கஷ்டப்பட்டுப் பிடித்து வைத்திருந்த மண்பானைத் தண்ணீரைக் கொண்டு வந்தான்.

அந்த மாளிகைப் படிக்கட்டுகளில் அவர்கள் அந்தஸ்துக்கு ஏற்ப உட்கார்ந்தார்கள். பியூன், ஒவ்வொருவருக்கும் அந்தஸ்துபடியே வாழையிலையைக் கொடுத்தார். அவர் போட்ட உணவுப் பண்டங்களும் அந்தஸ்து கனத்தைக் காட்டியது. அப்போது, மண்பானையை அங்கே கொண்டு வந்த தோட்டக்காரன், அதைத் தரையில் இறக்கி வைத்துவிட்டுத் திரும்பிப்பாராமல் நடந்த போது, அந்த அதிகாரி அடைக்கோழி மாதிரி கத்தினார். அவன் திரும்பிப் பார்த்தபோது, அவனைத் தன்னருகே வரும்படி சைகை செய்தார். உடனே பியூன் பாதிப் பிரியாணியோடு அந்தத் தட்டை எடுத்து அவனிடம் நீட்டினார். அவன் அதைத் தயங்கித் தயங்கி வாங்கி மற்றவர்கள் தட்டில் பரிமாறப் போனபோது அந்த அதிகாரி அவன் தோளைத் தட்டிக்கொடுத்தார். இலையில் இருந்த ஒரு முட்டையை எடுத்து அந்த சைவப் பிரியாணிக்கு வெள்ளை மகுடம் சூட்டி, இதர வகையறாக்களையும் அதில் அள்ளிப்போட்டு, அவனைத் தன் குடும்பத்தை நோக்கி நடக்கும்படி முதுகைத் தள்ளினார்.

அவனோ அவரிடம் ஏதோ சொல்லப் போனான். பிறகு தன்மானத்தை வயிற்றுக்குள் தின்றபடியே மனைவியை நோக்கி நடந்தான். அவள் அவனைக் கண்களால் கண்டித்தாள். பிறகு தன் தலையில் கைகளால் அடித்தபடியே அவனைத் தண்டித்தாள். ஏதோ கோபம் கோபமாய்ப் பேசினாள். என்ன பேசியிருப்பாள்?

அந்த அதிகாரி யோசித்தார். திடீரென்று எழுந்தார். அவர் எழுந்ததும் கூடவே எழப்போன மற்றவர்களைக் கையமர்த்திவிட்டு, சாப்பாட்டுத் தட்டுடன் அந்தக் குடும்பத்தை நோக்கி நடந்துவர பாதிவழியில் நின்று கவனித்தார். கணவனுடன் இதுவரை வாதாடியவள், சுற்றும் முற்றும் பார்த்தாள். மூன்று வயது மகள் அப்பா பக்கம் நின்றபடி அம்மாவைக் கோபம் கோபமாய்ப் பார்த்தாள். ஒருவயது குழந்தை அந்த வட்டத்தட்டை நோக்கி, 'நிலவே நிலவே வா' என்பது போல் கையாட்டியது. அந்த நாய்க்குட்டிகள் அவனைப் பார்த்து வாலாட்டின. அவளைப் பார்த்து லேசாய்க் குரைத்தன.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 264 23/05/18 4:33 PM

வளத்தம்மா

அம்மா இறந்த பிறகு, என் அம்மாவின் அம்மாவான வளத்தம்மாவிடம் வளர்ந்தேன். ஊரில் பிள்ளைகள் தாயை "வாளா, போளா" என்பார்கள். என் வளத்தம்மா, தன் பிள்ளைகள் தன்னை "நீங்க, நாங்க" என்று பேசும்படிச் செய்தவர். வயல்வரப்பிற்குப் போகாதவள். எஸ்.எஸ்.எல்.சி படிக்கும் வரை வளத்தம்மாவுடன், படுப்பேன். வளத்தம்மாவைப் பார்க்காமல், என்னால் இருக்க முடியாது. பிறகு, சென்னைக்குப் படிக்க வந்ததும், தூங்கி எழுந்திருக்கும் போதெல்லாம், "வளத்தம்மா, வளத்தம்மா" என்று சொல்லிக்கொண்டே எழுந்திருப்பேன். ஆனால் காலப்போக்கில், வளத்தம்மாவை மறக்கத் தொடங்கி விட்டேன். நான் சென்னையில் பட்ட சிரமங்களும், வளத்தம்மா, மகள்கள் விஷயத்தில் மேற்கொண்ட திருமண முடிவுகளும், எனக்கு வளத்தம்மா மீது ஒருவித விருப்பமின்மையை ஏற்படுத்தின. விடுமுறையில் ஊருக்குப் போகும்போதெல்லாம், வளத்தம்மாவுடன் பழைய பாசத்துடன் பேசியதில்லை. ஆனாலும் வளத்தம்மாவிற்கு அவ்வப்போது பணம் அனுப்பிக் கொண்டிருந்தேன். அவளுக்கு 90 வயது வந்து விட்டது. திடீரென்று ஒருநாள் வளத்தம்மா இறந்து போனதாகத் தந்தி வந்தது. அலறி அடித்து ஊருக்குச் சென்றேன். அப்போது தான் வளத்தம்மா, என்னை வளர்த்த விதம், அம்மா இல்லாத குறையை நீக்கியது, ஆசையோடு ஊட்டியது, அடுக்கடுக்கான அறிவுரைகளைச் சொன்னது – எனக்கு நினைவிற்கு வந்தது. சின்னப்பிள்ளை போலக் கேவிக்கேவி அழுதேன். இன்னும் கூட சில சமயம் அழுகிறேன். இந்தப் பின்னணியில் "வளத்தம்மா" என்ற கதையை எழுதினேன். இதில் என்னையும் தாக்கிக் கொண்டேன்.

– சு.சமுத்திரம், என் கதைகளின் கதைகள்.

அவள் புரிந்துகொண்டாள். அவர்களைப் பற்றி மட்டுமல்ல தன்னைப் பற்றியும். அவள் வயிற்றிலும் பசி முள் குத்தி வலியெடுத்தது. தானே எழுந்து கணவன் கையில் இருந்ததை, தன் கையில் கொண்டு வந்தாள். குழந்தைகள் வாயாட்டின. நாய்கள் வாலாட்டின. அப்பளம் மாதிரி - அதேசமயம் அதைப்போல் மூன்று பங்கு கனம் கொண்ட வட்ட சப்பாத்திகளைக் கொண்டு வந்தாள். அவற்றில் ஆளுக்கு இரண்டைக் கொடுத்தாள். அவற்றின் மேல் வெஜிடபிள் பிரியாணியையும், உருளைக்கிழங்குப் பொறியலையும் எடுத்து வைத்தாள்.

காணாததைக் கண்டுவிட்ட மகிழ்ச்சியில் அவர்கள், அதை, தீர்ந்துவிடக்கூடாதே என்று மெல்ல மெல்லச் சுவைத்தார்கள். செல்லமாகக் குரைத்த அந்த நாய்களுக்கு மட்டும் அவ்வப்போது கவளங்களைப் போட்டபடி அவனும் குழந்தைகளும் வாயசைத்தபேது அவள் மனம் அசைத்தாள். அவர்களை அனுதாபத்துடன் பார்த்தாள். 'இப்போ இப்படிச் சாப்பிடுகிறீர்களே... ராத்திரி என்ன செய்வீர்கள்?' என்ற பார்வை. இனிமேல் இதைக் காண முடியாது என்பதால்தான், இப்படிக் கண்ணை மூடிக்கொண்டு சாப்பிடுகிறீர்களோ என்பது போன்ற கலைப்பார்வை... அவர்களைப் பார்த்துத் தனக்குள் ஏற்பட்ட பசிப்பார்வை...

அவள் அந்த ஈயத்தட்டை எடுத்து ஒரு கவளத்தை உருட்டி வாய்க்குள் திணித்தாள். உலர்ந்து போய் இருந்த அவள் தொண்டை அதை உள்வாங்க மறுத்தது. அவள் தொண்டைக்குழி அதனால் அலறுவதுபோல் சத்தமிட்டது. அந்த சப்தம் நிற்பதற்கு முன்னால், பாதிவழியில் நின்ற அதிகாரி அங்கே வந்தார். கையில் வைத்திருந்த ஒரு தம்ளர் தண்ணீரை அவளிடம் நீட்டினார். உடனே அவள் அவரைப் பார்த்து லேசாய்க் கூசினாள். அந்த அதிகாரி தான் பேசுவது தமிழ் - அவளுக்குப் புரியாத மொழி என்பதைப் புரியாமலே தழுதழுக்கப் பேசினார்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 265 23/05/18 4:33 PM

"உன்னை மாதிரியே கஷ்டப்பட்ட ஒரு தாய்க்குத்தான் அம்மா பிறந்தேன். உன்னை என் தாயாய் நினைத்துத்தான் கொடுக்கேன்".

அவளுக்கு, அவர் வார்த்தைகள் புரியவில்லை. ஆனால், அதன் ஆன்மா தெரிந்தது. அந்தச் சக்கைச் சொற்களுக்குள் உள்ளாடிய மனிதநேயம் அவளுக்குப் புரிந்தது. லேசாய்ச் சிரித்தாள். பிறகு சகஜமாக சாப்பிடப் போனாள். இதற்குள் அந்த அதிகாரி அவள் கணவனிடம், அரைகுறை இந்தியில் கேட்டார்.

"என்னப்பா இது? எங்கே பார்த்தாலும் ஒரே சுடுகாடாய்க் கிடக்குது... இதோ இந்த திராட்சைக் கொடிகூட இரும்புக் கம்பிகளில் கருகிக் கிடக்குதே... பச்சை இலைகள் பழுப்பேறிப் போயிருக்குதே..."

"அதை ஏன் கேட்கறீங்க? இந்த மாதிரி பஞ்சத்தை நான் பிறந்த இந்த முப்பது வருஷத்திலே பார்த்ததில்லை. மழை இப்போ மாதிரி எப்பவும் ஏமாற்றுனது இல்லை. இந்த நிலத்தை ஆண்டாண்டு காலமா நான்தான் கவனித்து வரேன். என்னுடைய எஜமானர், 'தோட்டத்திலே பிரயோசனமில்லேடா சென்னப்பா... இனிமேல் உனக்குச் சம்பளம் கிடையாது. இங்கே இருந்தால் இரு. இல்லன்னா உன் ஆட்களை மாதிரி பஞ்சம் பிழைக்க நாடோடியாய்ப் போயிடு' என்றார். இது என்ன சாமி நியாயம்? என் வேர்வையில் பழுத்த திராட்சையை விற்ற, எஜமானரு லட்சம் லட்சமாய் சம்பாதித்தபோது, சம்பளத்துக்கு மேலே கூட்டிக் கொடுக்கவில்லை. லாபம் வந்தப்போ கூலியைக் காட்டாதவர், நஷ்டம் வரும்போது கழிக்கப்படாது பாருங்கோ... ஆனா, இவரு சம்பளத்திலே கழிச்சு தந்தாக்கூடப் பரவாயில்லை. என்னையே கழிக்கப் பார்க்காரு. இது எந்த நியாயத்திலே சேர்த்தி சாமி?"

அந்தக் கிராமத்துக் கூலியாளின் எதார்த்தமான பேச்சைக் கேட்டு மலைத்துப்போன அதிகாரியின் காலுக்குள் அந்த இரண்டு சடை நாய்க்குட்டிகளும், நுழைந்து நுழைந்து சுற்றி வந்தன. அவர் இலையில் கை வைக்கும்போது அந்த கையையும், அந்த கை வாய்க்குப் போகும்போது அந்த வாயையும், அந்தக் கைபோன போக்கிலேயே உயரப் பார்த்தன. உடனே அவர் இலையில் இருப்பதைத் தரையில் இறக்குவார். இப்படி அவர் எடுத்தெடுத்துப் போடுவதும், அதை நாய்க்குட்டிகள் குலைத்துக் குலைத்துத் தின்பதுமாய் இருந்தன. ஒரு கட்டத்தில் அவர் இலையில் பார்த்தார். பகீரென்றது. அதில் கொஞ்சம்தான் இருந்தது. நாய்கள் மீண்டும் குலைத்தன. வாலாட்டின. அவருக்கு இது அதிகபட்சமாகத் தெரிந்தது. அவரை விடவில்லை. இடுப்பிலே எகிறின. காலில் இடறின.

திடீரென்று ஒரு சின்னக் கல் ஒரு நாய்க்குட்டி மீது விழுந்தது. ஒரு மண்கட்டி இன்னொரு குட்டிமீது விழுந்தது. மண்பட்ட நாய்க்குட்டி புத்திசாலி. எறிந்தவளை ஓரங்கட்டிப் பார்த்தது. அவளோ கோபம் கோபமாய்க் குரலிட்டபடியே கையைத் தூக்கியபோது, அது சிறிது ஓடிப்போய், ஓர் இடத்தில் மண்ணாங்கட்டியாய்ப் படுத்தது. திடீரென்று அவள் அங்கே ஓடிவந்தாள். அந்த நாயின் கழுத்தைப் பிடித்துச் சற்றுத் தொலைவில் மெதுவாகத்தான் தூக்கிப் போட்டாள். கீழே விழுந்த அந்தச் சின்ன குட்டியோ சுரணையற்றுக் கிடந்தது. உடனே அவள் அலறியடித்து நெருங்கினாள். அதுவோ அவள் தன்னை மீண்டும் தாக்க வருவதாய் அனுமானித்து, ஒரு காலைத் தூக்கியபடியே திராட்சைத் தோட்டத்திற்குள் ஓடியது. அப்புறம் அதன் ஓல ஒலி மட்டுமே கேட்டுக்கொண்டிருந்தது.

அவள் வயிற்றுக்கும் சூடு பிடித்தது. பட்டினியால் பழக்கப்பட்ட மரத்துப்போன அவள் வயிறு இப்போது வாயை வம்புக்கிழுத்தது. இரண்டு கவளம் மட்டுமே எடுக்கப்பட்ட அந்தத் தட்டை அவள் ஆசையோடு பார்த்தாள். பிறகு அதைக் குழந்தை மாதிரி மடியில் வைத்துக்கொண்டு ஒரு கவளத்தை வாய்க்குள் போட்டாள். இவ்வளவு ருசியாய் அவள் சாப்பிட்டதாய் நினைவில்லை. தட்டில் இன்னும்

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 266 23/05/18 4:33 PM

முக்கால்வாசிக்கு மேலேயே இருந்தது. உண்டு... உண்டு... சுவையில் சொக்கிச் சொக்கி அவள் லயித்தபோது அந்த நாயின் ஓல ஒலி, அவளைச் சுண்டி இழுத்தது. 'எம்மா நீயா இப்படிச் செய்துட்டே...?' என்பதுபோல் அது ஒலித்தது. அவள் தட்டைக் கீழே வைத்துவிட்டு, எச்சில் கையைத் தரையில் ஊன்றியபடியே எழுந்தாள். சுற்றும் முற்றும் கண்களைச் சுற்றவிட்டாள். காய்ந்துபோன திராட்சைக் கொடிகள் படர்ந்த கம்பிப் பந்தலைத் தாங்கிய ஒரு கல்தூணின் கீழே அந்த நாய்க்குட்டி ஈனமுனகலாய்க் கிடந்தது. அவளைப் பார்த்து அப்போதும் வாலாட்டியது.

அவள் அந்த நாய்க்குட்டியை வாரி எடுத்தாள். அதன் முதுகைத் தடவி விட்டாள். அந்தக் குட்டியைத் தன் மடியில் சம்மணக் கால்களை அங்குமிங்குமாய் ஆட்டி அதைத் தாலாட்டினாள். பிறகு அந்தத் தட்டைத் தன் பக்கமாய் இழுத்து, அதில் இருந்ததைக் கவளம் கவளமாய் உருட்டி, அந்தச் சின்னக் குட்டிக்கு ஊட்டிக் கொண்டிருந்தாள். அந்தச் செல்லக்குட்டியோ பிகு செய்தபடியே அவள் கையை லாவகமாய் விட்டுவிட்டு, கவளத்தை மட்டும் கவ்விக் கொண்டே இருந்தது.

அந்தத் தட்டில் இருந்த உணவு குறையக்குறைய அவள் தாய்மை கூடிக்கொண்டே இருந்தது.

நூல் வெளி

சு. சமுத்திரம் திருநெல்வேலி மாவட்டம், திப்பணம்பட்டியைச் சேர்ந்தவர். தமது பெயரைப் போலவே ஆழமும் விரிவும் வளமும் கொண்டவர்; முந்நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதைகளை எழுதியுள்ளார்; வாடாமல்லி, பாலைப்புறா, மண்சுமை, தலைப்பாகை, காகித உறவு போன்றவை இவரின் புகழ்பெற்ற சிறுகதைத் தொகுப்புகளாகும். 'வேரில் பழுத்த பலா' நாவல் சாகித்திய அகாதெமி விருதையும் 'குற்றம் பார்க்கில்' சிறுகதைத் தொகுதி தமிழக அரசின் பரிசையும் பெற்றுள்ளன.

கற்பவை கற்றபின்...

1. 'பிறர்க்கு உதவி செய்வதற்கு மொழி தேவையில்லை' என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு வகுப்பறை மேடையில் நடித்துக் காட்டுக.

LSQVK1

2. கதையைத் தொடர்ந்து எழுதித் தலைப்பிடுக.

சுண்டெலிகளுக்குப் பூனையால் மிகவும் துன்பமான நேரம். ஒவ்வொரு நாளும் இரண்டு மூன்று சுண்டெலிகளைப் பிடித்துத் தின்றது பூனை. சுண்டெலிகள் ஒன்றுசேர்ந்து, என்ன செய்வது என்று ஆலோசித்தன. அவை மேலும் மேலும் ஆலோசித்தன. ஆனால், ஒரு முடிவும் கிடைக்கவில்லை.

பிறகு ஒரு சின்ன சுண்டெலி சொன்னது:

பூனைக்கு என்ன செய்யவேண்டும் என்று நான் சொல்கிறேன். பூனை எப்போது நம்மைப் பிடிக்க வருகிறது என்று நமக்குத் தெரிவதில்லை. கட்டாயம் நாம் அதைச் செய்தாக வேண்டும்.....

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 267 23/05/18 4:33 PM

இயல் பத்து

கற்கண்டு

அணிகள்

LSZRLN

அணி – அழகு

செய்யுளின் கருத்தை அழகுபடுத்துவது அணி எனப்படும்; சொல்லாலும் பொருளாலும் அழகுபட எடுத்துரைப்பது 'அணி' இலக்கண இயல்பாகும்;

உவமைஅணி

அணிகளில் இன்றியமையாதது உவமையணி ஆகும். மற்ற அணிகள் உவமையிலிருந்து கிளைத்தவையாகவே உள்ளன.

மலர்ப்பாதம் – மலர் போன்ற பாதம்

இத்தொடரில் பாதத்துக்கு மலர் உவமையாகக் கூறப்படுகிறது.

பாதம் - உவமேயம்

மலர் - உவமை

போன்ற -உவம உருபு

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

இதில் உவமையணி அமைந்துள்ளது.

உருவக அணி

கவிஞன், தான் ஒரு பொருளைச் சிறப்பிக்க எண்ணி, அதற்கு உவமையாகும் வேறொரு பொருளோடு ஒன்றுபடுத்திக் கூறுவான். உவமையின் தன்மையைப் பொருள்மேல் ஏற்றிக்கூறும் இத்தன்மையே 'உருவகம்' எனக் கூறப்படும். உவமை, உவமேயம் என்னும் இரண்டும் ஒன்றே என்று தோன்றக் கூறுவது உருவக அணி ஆகும்.

(எ.கா.)

இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈன்றதோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்.

இப்பாடலில், இன்சொல் – நிலமாகவும், வன்சொல் – களையாகவும், வாய்மை – எருவாகவும், அன்பு – நீராகவும், அறம் - கதிராகவும் உருவகப்படுத்தப்பட்டுள்ளன.

பின்வருநிலை அணிகள்

ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல்லோ பொருளோ மீண்டும் பல இடத்தும் வருதலே' பின்வருநிலை' அணியாகும். இது மூன்று வகைப்படும்.

சொற்பின்வருநிலையணி

முன் வந்த சொல்லே பின்னும் பலவிடத்தும் வந்து வேறு பொருள் உணர்த்துவது சொற் பின்வருநிலை அணியாகும். (எ.கா.)

துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉம் மழை.

இக்குறளில்' துப்பு' என்ற சொல் மீண்டும் மீண்டும் வந்து வேறு வேறு பொருள்களைத் தருகிறது.

துப்பார்க்கு – உண்பவர்க்கு; துப்பு – நல்ல, நன்மை; துப்பு – உணவு என்று பல பொருள்களில் வருவதைக் காணலாம்.

பொருள் பின்வருநிலையணி

செய்யுளில் முன்வந்த பொருளே பின்னர்ப் பல இடங்களிலும் வருவது பொருள் பின் வருநிலையணி ஆகும். (எ.கா.)

அவிழ்ந்தன தோன்றி யலர்ந்தன காயா
நெகிழ்ந்தன நேர்முகை முல்லை – மகிழ்ந்திதழ்
விண்டன கொன்றை விரிந்த கருவிளை
கொண்டன காந்தள் குலை.

இச்செய்யுளில் அவிழ்ந்தன, அலர்ந்தன, நெகிழ்ந்தன, விண்டன, விரிந்தன, கொண்டன

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 268 23/05/18 4:33 PM

ஆகிய சொற்கள் மலர்ந்தன என்ற ஒரு பொருளையே தந்தன.

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

இக்குறட்பாவில் செல்வம், மாடு ஆகிய இரு சொற்களுமே செல்வத்தையே குறிக்கின்றன.

சொற்பொருள்பின்வருநிலையணி

முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னர்ப் பல இடங்களிலும் வருவது சொற்பொருட் பின்வருநிலையணி ஆகும். (எ.கா.)

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

இக்குறட்பாவில் 'விளக்கு' என்னும் சொல் ஒரே பொருளில் பலமுறை வந்துள்ளதால் இது சொற்பொருள் பின்வருநிலையணி ஆகும்.

வஞ்சப்புகழ்ச்சியணி

வஞ்சப்புகழ்ச்சியணி என்பது புகழ்வது போலப் பழிப்பதும், பழிப்பது போலப் புகழ்வதுமாகும். (எ.கா.)

தேவ ரனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்.

கயவர்கள் தேவர்களுக்கு ஒப்பானவர்கள் என்று புகழப்படுவது போலத் தோன்றினாலும், கயவர்கள் இழிந்த செயல்களையே செய்வர் என்னும் பொருளைக் குறிப்பால் உணர்த்துகிறது. எனவே, இது புகழ்வது போலப் பழிப்பது ஆகும். (எ.கா.)

பாரி பாரி என்றுபல ஏத்தி,
ஒருவற் புகழ்வர், செந்நாப் புலவர்
பாரி ஒருவனும் அல்லன்;
மாரியும் உண்டு, ஈண்டு உலகுபுரப் பதுவே

இப்பாடலின் பொருள்: புலவர் பலரும் பாரி ஒருவனையே புகழ்கின்றனர். பாரி ஒருவன் மட்டுமா கைம்மாறு கருதாமல் கொடுக்கின்றான்? மாரியும்தான் கைம்மாறு கருதாமல் கொடுத்து இவ்வுலகத்தைப் புரக்கிறது.

இது பாரியை இகழ்வது போலத் தோன்றினாலும், பாரிக்கு நிகராகக் கொடுப்பவரில்லை என்று புகழ்கிறது.

கற்பவை கற்றபின்...

1. கீழ்க்காணும் குறட்பாக்களில் அமைந்த அணி வகையைக் கண்டறிக.

   அ) *ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு*
   ஆழி எனப்படு வார்.

   ஆ) *பிறர்நாணத் தக்கது தான்நாணா னாயின்*
   அறம்நாணத் தக்கது உடைத்து.

   இ) *தீயவை தீய பயத்தலால் தீயவை*
   தீயினும் அஞ்சப் படும்.

2. உவமையணி அமைந்த பாடல் அடிகளை எழுதுக.

3. கீழ்க்காணும் புதுக்கவிதையில் அமைந்த அணியினை எழுதுக.

   விருட்சங்கள்
   மண்ணரசி மடக்காமலேயே
   பிடித்துக்கொண்டிருக்கும்
   பச்சைக் குடைகள்.

LT9MNB

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 269 23/05/18 4:33 PM

மதிப்பீடு

பலவுள் தெரிக.

1. இமயத்துக் கோடு உயர்ந்தன்ன – இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் யாது?

   அ) கொம்பு ஆ) மலையுச்சி இ) சங்கு ஈ) மேடு

2. தமிழ்ப் புலவரைப் போலவே உரோமச் சிந்தனையாளர் கொண்ட கொள்கை

   அ) நிலையற்ற வாழ்க்கை ஆ) பிறருக்காக வாழ்தல் இ) இம்மை மறுமை ஈ) ஒன்றே உலகம்

3. வண்ணதாசனுக்குச் சாகித்திய அகாதெமி பரிசு பெற்றுத் தந்த நூல்

   அ) ஒரு சிறு இசை ஆ) முன்பின் இ) அந்நியமற்ற நதி ஈ) உயரப் பறத்தல்

4. யாமரம் என்பது எந்த நிலத்தில் வளரும்?

   அ) குறிஞ்சி ஆ) மருதம் இ) பாலை ஈ) நெய்தல்

5. கேடில்விழுச் செல்வம் கல்வி ஒருவற்கு

   மாடல்ல மற்றை யவை – இக்குறளில் பயின்று வந்துள்ள அணி?

   அ) சொல் பின்வருநிலையணி ஆ) பொருள் பின்வருநிலையணி

   இ) சொற்பொருள் பின்வரு நிலையணி ஈ) வஞ்சப் புகழ்ச்சியணி

குறுவினா

1. தமிழ்ச் சான்றோர்க்கும் உரோமையரின் சான்றோர்க்கும் உள்ள வேறுபாடு யாது?
2. பிடிபசி களைஇய பெருங்கை வேழம் – இவ்வடியில் உள்ள இலக்கணக் குறிப்புகளைக் கண்டறிக.
3. குறுந்தொகை – பெயர்க்காரணம் எழுதுக.
4. நினைத்தேன் கவித்தேன் படைத்தேன் சுவைத்தேன். இத்தொடரில் அமைந்துள்ள உருவகத்தைக் கண்டறிக.

சிறுவினா

1. உலக இலக்கியத்தில் காண இயலாத அரிய கருத்துகளாக ஆல்பர்ட் சுவைட்சர் குறிப்பிடுவன யாவை?
2. கோர்டன் ஆல்போர்ட் கூறும் மூன்று இலக்கணங்களைக் குறிப்பிடுக.
3. பழங்களை விடவும் நசுங்கிப் போனது – இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.
4. மணல் விளையாட்டு என்னும் தலைப்பில் சிறு கவிதை படைக்க.
5. "யா" மரத்தின் பட்டையை உரித்தது எது? எதற்காக? விளக்குக.
6. உருவக அணியை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

நெடுவினா

1. தமிழ் இலக்கியங்கள் காட்டும் சான்றாண்மைக் கருத்துகளைத் தனிநாயக அடிகளாரின்வழி நிறுவுக.
2. 'தாய்மைக்கு வறட்சி இல்லை' என்னும் சிறுகதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்குக.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 270 23/05/18 4:33 PM

மொழியை ஆள்வோம்

ஒப்பிட்டுச் சுவைக்க.

நூல் மதிப்புரை அன்றும் இன்றும்

பாஞ்சாலி சபதம்

இது மிக அழகிய வர்ணனைகள் நிறைந்த ஒரு காவியம், பிரஹ்ம ஸ்ரீ ஸி. சுப்பிரமணிய பாரதியவர்களால் இயற்றப் பெற்றது.

தர்மங்கள் நிறைந்த, ஐந்தாம் வேதமாகிய மகாபாரதத்தில் பொறாமையே உருவாக வந்த துரியோதனன் தனது தாய் மாமனாகிய சகுனியைக் கொண்டு பஞ்ச பாண்டவர்களில் மூத்தோனாகிய தர்மபுத்திரருடன், அவருடைய ராஜ்யத்தை எல்லாம் பிடுங்கிக் கொண்டு அவரையும் அவரது சகோதரர்களையும் காட்டுக்குத் துரத்த வேண்டும் என்ற எண்ணத்துடன், சூதாடும்படி செய்விக்கின்ற பாகத்தை பிரஹ்ம ஸ்ரீ பாரதி அவர்கள் செய்யுள் எழுதியுள்ளார்.

பாரதியவர்களின் தமிழ் நடையைப் பற்றியும் செய்யுள் விசேஷத்தைப் பற்றியும் தமிழ் நாட்டினரில் பெரும்பான்மையோரும் அறிவர் என நம்புகிறோம். ஆசிரியர் இப்புஸ்தகத்தின் ஒரு பிரதியை சென்னை கவர்னர் அவர்களுக்கு அனுப்பியிருந்ததாகவும் அவர் அதை வந்தனத்துடன் ஏற்றுக் கொண்டதாக ஆசிரியருக்குக் கடிதம் எழுதியதாகவும் கேள்விப்படுகிறோம்.

பாஷாபிமானிகளும் தேசாபிமானிகளும் அவசியம் படிக்க வேண்டிய புத்தகம் இது. இதன் விலை அணா எட்டு, தபாற் செலவு வேறு. வேண்டியவர்கள் நமது ஆபீசுக்கேணும் அல்லது பிரஹ்ம ஸ்ரீ ஸி. சுப்பிரமணிய பாரதியவர்கள், புதுச்சேரி யென்ற விலாசத்திற்கேனும் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

'ஞான பாநு' மாதப்பத்திரிகை,
ஆசிரியர் எஸ். சுப்பிரமணிய சிவா,
சென்னை, நவம்பர் 1913.

நூல் மதிப்புரை

இருபதாம் நூற்றாண்டுச் சூழலில்தான் கம்பரின் இராமாயணம் இலக்கியம் எனத் தகுதி பெற்றதோடு ஆய்வுக்குரிய பெருநூலாகவும் கருதப்படுகிறது. இலக்கிய நோக்கில் கம்பர் நூல், எவ்வாறு காவியம் எனச் சிறக்கிறது? என்பதைப் பேராசிரியர் அ. பாண்டுரங்கன் மிக விரிவாக ஆராய்கிறார். வால்மீகியிலிருந்து கம்பர் வேறுபடும் இடங்களை விரிவாகத் தொகுத்து உரைக்கிறார். தண்டியின் பாவிகம் என்ற கருத்தாக்கத்தின் மூலம் இக்காப்பியத்தின் உள்ளுறையை, கவிக்குரலை நுட்பமாக எடுத்துரைக்கிறார். அரிஸ்டாட்டில் முதல் ஆபர் கிராம்பி வரையிலான காவியம் பற்றிய மேற்கத்தியர் கோட்பாடுகளையும் தண்டி முதல் வ.சுப. மாணிக்கம் வரையிலான நம்மவர்களின் கோட்பாடுகளையும் தக்க முறையில் பயன்படுத்திக் கம்பர் காவியத்தின் கட்டமைப்பு, பாத்திரப் படைப்பு, கவிக்குரல் முதலியவற்றைத் தெளிவுபடுத்துகிறார். இம்முறையில் சிறப்பான ஆய்வுநூல் என இந்நூலை மதிப்பிடலாம்.

கவித்துவ இயக்கத்தினுள் பக்தியும், புராணிகமும் பகுதிகளாவதைத் தவிர்க்க இயலுமா என்ற கேள்வியோடு கம்பர் காவிய ஆய்வை ஆழமாகத் தொடர்வதற்கு இடம் இருக்கிறது. வரலாற்றுச் சூழலிலிருந்து, இலக்கிய இரசனை ஆய்வை விலக்கிச் செய்ய முடியுமா என்பதும் கேள்வி. இந்தத் திசைகளில், கம்பர் காவிய ஆய்வை ஆசிரியர் தொடரவேண்டும்.

'நிகழ்' – நூல் திறனாய்வுகள்
100; ஞானி, அறிவன்;
டிசம்பர் 2001

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 271 23/05/18 4:33 PM

மொழி பெயர்க்க.

A deer, a turtle, a crow and a rat were friends. One day the deer was caught in a hunter's trap. Friends made a plan to save him. According to the plan, the deer lay motionless as if it were dead. The crow sat on the deer and started poking. The turtle crossed the hunter's path to distract him. The hunter left the deer, assuming it dead, and went after the turtle. Meanwhile, the rat chew open the net to free the deer. The crow picked up the turtle and quickly took it away from the hunter. From this Panchatantra story, we learn that the teamwork can achieve great results.

பொருத்தமான நிறுத்தக் குறியிடுக.

ஆசிரியர் மாணவர்களிடம் மாணவர்களே கடவுளரையும் தலைவர்களையும் குழந்தையாகக் கருதி எழுதப்பட்ட சிற்றிலக்கிய வகை பற்றித் தெரியுமா தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளுள் பிள்ளைத் தமிழும் ஒன்று என்று கூறினார்

பிள்ளைத் தமிழ் நூல்கள் முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ் அமுதாம்பிகைப் பிள்ளைத்தமிழ் முதலியன

அடடா என்று சிலிர்ப்பூட்டும் பட்டறிவைப் படிப்பவர்க்கு அளிக்கும் வகையில் குமரகுருபரரின் மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் மிகச் சிறந்ததாகத் திகழ்கிறது

சொற்றொடர் உருவாக்குக.

1. *செந்தமிழும் சுவையும் போல*
2. *பசுமரத்தாணி போல*
3. *உள்ளங்கை நெல்லிக்கனி போல்*
4. *அத்தி பூத்தாற் போல*
5. *மழைமுகம் காணாப் பயிர் போல*

வடிவம் மாற்றுக.

பாடலில் காணும் இலக்கிய வடிவங்களையும் அவற்றுக்குப் புகழ்பெற்றோரையும் கண்டறிந்து எழுதுக.

வெண்பாவிற் புகழேந்தி; பரணிக்குஓர் .....

சயங்கொண்டான்; விருத்தம் என்னும் .....

ஒண்பாவிற்கு உயர்கம்பன்; கோவைஉலா .....

அந்தாதிக்கு ஒட்டக் கூத்தன்; .....

கண்பாய கலம்பகத்திற்கு இரட்டையர்கள்; .....

வசைபாடக் காள மேகம்; .....

பண்பாய பகர்சந்தம் படிக்காசு .....

அலாதொருவர் பகர ஒணாதே. .....

பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 272 23/05/18 4:33 PM

நூல் மதிப்புரை எழுதுக.

நீங்கள் விரும்பிப் படித்த நூல் ஒன்றுக்கு மதிப்புரை எழுதுக.

நயம் பாராட்டுக.

"எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம்முயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர்அவர் உள்ளம்தான் சுத்த
சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்
இடம் என நான் தெரிந்தேன் அந்த
வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திட என்
சிந்தை மிக விழைந்த தாலே"

– வள்ளலார்

மொழியோடு விளையாடு

எழுத்துகளை முறைப்படுத்திச் சொற்களைக் கண்டுபிடிக்க.

1. புன்பமொப்லமைழி ,
2. யனிநேம்தம ,
3. கச்வப்ஞ்புசிழ்ச
4. தைக்விதுகபு ,
5. டுசிப்காட்ஞ்ப

அகராதி காண்க.

குரிசில், தலையளி, நயம், உய்த்தல், இருசு

தொகைச்சொற்களைக் கொண்டு பத்தியைச் சுருக்குக.

சேர, சோழ, பாண்டிய அரசர்களிடம் யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, தரைப்படை ஆகியவை இருந்தன. அவர்கள் மா, பலா, வாழை ஆகிய கனிகளுடன் விருந்தோம்பல் செய்தனர். கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு ஆகிய திசைகளில் அவர்களின் ஆட்சிப்புகழ் பரவியிருந்தது. தமிழகத்தின் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நிலங்களில் உள்ள புலவர்கள் இவ்வரசர்களை இம்மையிலும் மறுமையிலும் வாழ்கவென்று வாழ்த்தினர்.

வினைப்பகுதிகளை எச்சங்களாகவும் முற்றாகவும் மாற்றுக.

பூங்கொடி நேற்றுப் பள்ளிக்குச் _____ (செல்), தன் தோழிகளைக் _____ (காண்), மகிழ்ச்சியுடன் _____ (உரை); பின்னர் வங்கிக்குப் _____ -(போ) தான் கூடுதலாகச் _____ (செலுத்து) தொகையைத் திரும் _____ (பெறு) _____ (கொள்) வந்தாள். வரும் வழியில் வீட்டுக்கு _____ (வேண்டு) பொருள்களை _____ (வா). அங்கு _____ (நில்) பேருந்தில் _____ (ஏறு) வீடு _____ (திரும்பு) .

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 273 23/05/18 4:33 PM

பொருத்தமான தமிழ் எண்களைக் கொண்டு நிரப்புக.

தமிழிலுள்ள மொத்த எழுத்துகள் _____ ஆகும்; இவை முதலெழுத்து, சார்பெழுத்து என்று _____ பிரிவாகப் பிரிக்கப்படும்; _____ உயிரெழுத்துகள், _____ மெய்யெழுத்துகள் ஆகிய _____ எழுத்துகளும் முதலெழுத்துகள் எனப்படும்; இவற்றைச் சார்ந்து பிறப்பவை சார்பெழுத்துகள் என்றழைக்கப்படுகின்றன; சார்பெழுத்துகள் _____ வகைப்படும்.

காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.

.....

.....

.....

.....

.....

.....

.....

.....

செயல்திட்டம்

இருபத்தோராம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர் சிலரின் படங்களையும் கவிதைகளையும் திரட்டி, படக் கவிதைத்தொகுப்பு உருவாக்குக.

நிற்க அதற்குத் தக

நான் தலைமைப் பொறுப்பிற்கு வந்தால் ...

1. அனைவரிடமும் பாகுபாடின்றி நடந்து கொள்வேன்.
2. இயன்றவரை பிறருக்கு உதவுவேன்.
3. பெரியோர்களின் அறிவுரைகளைக் கேட்டு நடப்பேன்.
4. ……

கலைச்சொல்லாக்கம்

மனிதம் =Humane ஆளுமை = Personality பண்பாட்டுக் கழகம் = Cultural Academy

வசன கவிதை = Free verse உவமையணி =Simile உருவக அணி =Metaphor

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th_Tamil_Pages 122-277.indd 274 23/05/18 4:33 PM

அறிவை விரிவு செய்

1. *சிற்பியின் மகள் – பூவண்ணன்*
2. *அப்பா சிறுவனாக இருந்தபோது - அலெக்சாந்தர் ரஸ்கின் (தமிழில் நா. முகமது செரீபு)*

இணையத்தில் காண்க.

http://www.tamilheritage.org/thfcms/index.php/2008-/2009-06-13-06-32-59
http://www.tamilvu.org/library/l1220/html/l1220ind.htm
http://www.tamilvu.org/library/nationalized/html/naauthor-23.htm
http://www.chennailibrary.com/samuthiram/samuthiram.html
https://vannathasan.wordpress.com/2010/07/30/**கவிதைகளுக்கு–கல்யாண்ஜி**

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 275 23/05/18 4:33 PM

இணையச் செயல்பாடுகள்

tamilwordgame இல்
தேடிப் பிடி புதுச் சொற்களை!

படிகள்

- கொடுக்கப்பட்டிருக்கும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி tamilwordgame என்னும் இணையச் செயலியின் பக்கத்திற்குச் செல்லவும். அங்குக் கொடுக்கப்பட்டிருக்கும் play பொத்தானை சொடுக்கவும்.
- இப்போது திரையில் Easy, Medium, Hard ஆகிய மூன்று தெரிவுகள் கொடுக்கப்பட்டிருக்கும். அதில் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்து வார்த்தைகளை இணைத்து விளையாடவும்.
- உதாரணத்திற்கு Easy என்பதைச் சொடுக்கியதும் திரையின் வலது பக்கத்தில் எழுத்துக்கட்டகம் தோன்றும். அதில் உள்ள எழுத்துகளை இணைத்துப் புது வார்த்தைகளை உருவாக்கவும்.
- உருவாக்கும் வார்த்தைகள் சரியாக இருப்பின் இடது பக்கத்தில் உள்ள கரும்பலகையில் இடம்பெறும். இது போன்று மீண்டும் மீண்டும் உங்கள் சொற்கள் உருவாக்கும் செயல்பாட்டைத் தொடரலாம்.



செயல்பாட்டிற்கான உரலி
/http://tamilwordgame.appspot.com

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181
9th_Tamil_Pages 122-277.indd 276 23/05/18 4:33 PM

திருக்குறள்

பொறையுடைமை (16)

1) அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை.

2) பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று.

3) இன்மையுள் இன்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.

4) நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை
போற்றி ஒழுகப் படும்.

5) ஒறுத்தாரை ஒன்றாக வையாரே வைப்பர்
பொறுத்தாரைப் பொன்போல் பொதிந்து.

6) ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்.

7) திறன்அல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறன்அல்ல செய்யாமை நன்று.

8) மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

9) துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னாச்சொல் நோற்கிற் பவர்.

10) உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்.

தீவினையச்சம் (21)

1) தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னும் செருக்கு.

2) தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்.

3) அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய
செறுவார்க்கும் செய்யா விடல்.

4) மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம்சூழும் சூழ்ந்தவன் கேடு.

5) இலன்என்று தீயவை செய்யற்க செய்யின்
இலன்ஆகும் மற்றும் பெயர்த்து.

6) தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால
தன்னை அடல்வேண்டா தான்.

7) எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென்று அடும்.

8) தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயாது அடிஉறைந் தற்று.

9) தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்.

10) அருங்கேடன் என்பது அறிக மருங்கோடித்
தீவினை செய்யான் எனின்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th tamil.indd 277 23-03-2018 17:49:47

கேள்வி (42)

1) செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை.

2) செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்.

3) செவிஉணவிற் கேள்வி யுடையார் அவிஉணவின்
ஆன்றாரோடு ஒப்பர் நிலத்து.

4) கற்றிலன் ஆயினும் கேட்க அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாம் துணை.

5) இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்.

6) எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

7) பிழைத்துஉணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்து
ஈண்டிய கேள்வி யவர்.

8) கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி.

9) நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது.

10) செவியின் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்?

தெரிந்து தெளிதல் (51)

1) அறம்பொருள் இன்பம் உயிர்அச்சம் நான்கின்
திறம்தெரிந்து தேறப் படும்.

2) குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்
நாண்உடையான் கட்டே தெளிவு.

3) அரியகற்று ஆசுஅற்றார் கண்ணும் தெரியுங்கால்
இன்மை அரிதே வெளிறு.

4) குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்.

5) பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

6) அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றுஅவர்
பற்றிலர் நாணார் பழி.

7) காதன்மை கந்தா அறிவுஅறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாந் தரும்.

8) தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா இடும்பை தரும்.

9) தேறற்க யாரையும் தேராது தேர்ந்தபின்
தேறுக தேறும் பொருள்.

10) தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th tamil.indd 278 23-03-2018 17:49:47

ஒற்றாடல் (59)

1) ஒற்றும் உரைசான்ற நூலும் இவைஇரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்.

2) எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் தொழில்.

3) ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்
கொற்றம் கொளக்கிடந்தது இல்.

4) வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றாங்கு
அனைவரையும் ஆராய்வது ஒற்று.

5) கடாஅ உருவொடு கண்அஞ்சாது யாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று.

6) துறந்தார் படிவத்துர் ஆகிஇறந்து ஆராய்ந்து
என்செயினும் சோர்வுஇலது ஒற்று.

7) மறைந்தவை கேட்கவற்று ஆகி அறிந்தவை
ஐயப்பாடு இல்லதே ஒற்று.

8) ஒற்றுஒற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்.

9) ஒற்றுஒற்று உணராமை ஆள்க உடன்மூவர்
சொல்தொக்க தேறப் படும்.

10) சிறப்புஅறிய ஒற்றின்கண் செய்யற்க செய்யின்
புறப்படுத்தான் ஆகும் மறை.

வினைத்தூய்மை (66)

1) துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும்.

2) என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை.

3) ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர்.

4) இடுக்கண் படினும் இழிவந்த செய்யார்
நடுக்குஅற்ற காட்சி யவர்.

5) எற்றென்று இரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று.

6) ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

7) பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை.

8) கடிந்த கடிந்துஓரார் செய்தார்க்கு அவைதாம்
முடிந்தாலும் பீழை தரும்.

9) அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை.

10) சலத்தால் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்
கலத்துநீர் பெய்திரீஇ யற்று.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th tamil.indd 279 23-03-2018 17:49:47

பழைமை (81)

1) பழைமை எனப்படுவது யாதுஎனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

2) நட்பிற்கு உறுப்புக் கெழுதகைமை மற்றுஅதற்கு
உப்புஆதல் சான்றோர் கடன்.

3) பழகிய நட்புஎவன் செய்யும் கெழுதகைமை
செய்தாங்கு அமையாக் கடை?

4) விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையால்
கேளாது நட்டார் செயின்.

5) பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுஉணர்க
நோதக்க நட்டார் செயின்.

6) எல்லைக்கண் நின்றார் துறவார் தொலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு.

7) அழிவந்த செய்யினும் அன்புஅறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

8) கேள்இழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாள்இழுக்கம் நட்டார் செயின்.

9) கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையும் உலகு.

10) விழையார் விழையப் படுப பழையார்கண்
பண்பின் தலைப்பிரியா தார்.

தீ நட்பு (82)

1) பருகுவார் போலினும் பண்புஇலார் கேண்மை
பெருகலின் குன்றல் இனிது.

2) உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்?

3) உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது
கொள்வாரும் கள்வரும் நேர்.

4) அமரகத்து ஆற்றுஅறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை.

5) செய்துஏமம் சாராச் சிறியவர் புன்கேண்மை
எய்தலின் எய்தாமை நன்று.

6) பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுஉடையார்
ஏதின்மை கோடி உறும்.

7) நகைவகையர் ஆகிய நட்பின் பகைவரால்
பத்துஅடுத்த கோடி உறும்.

8) ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை
சொல்ஆடார் சோர விடல்.

9) கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.

10) எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th tamil.indd 280 23-03-2018 17:49:47

பேதைமை (84)

1) பேதைமை என்பதுஒன்று யாதெனின் ஏதம்கொண்டு ஊதியம் போக விடல்.

2) பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை கையல்ல தன்கண் செயல்.

3) நாணாமை நாடாமை நார்இன்மை யாதொன்றும் பேணாமை பேதை தொழில்.

4) ஓதி உணர்ந்தும் பிறர்க்குஉரைத்தும் தான்அடங்காப் பேதையின் பேதையார் இல்.

5) ஒருமைச் செயல்ஆற்றும் பேதை எழுமையும் தான்புக்கு அழுந்தும் அளறு.

6) பொய்படும் ஒன்றோ புனைபூணும் கையறியாப் பேதை வினைமேல் கொளின்.

7) ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை பெருஞ்செல்வம் உற்றக் கடை.

8) மையல் ஒருவன் களித்தற்றால் பேதைதன் கையொன்று உடைமை பெறின்.

9) பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண் பீழை தருவதுஒன்று இல்.

10) கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றால் சான்றோர் குழாஅத்துப் பேதை புகல்.

புல்லறிவாண்மை (85)

1) அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதுஇன்மை இன்மையா வையாது உலகு.

2) அறிவிலான் நெஞ்சுஉவந்து ஈதல் பிறிதுயாதும் இல்லை பெறுவான் தவம்.

3) அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை செறுவார்க்கும் செய்தல் அரிது.

4) வெண்மை எனப்படுவது யாதுஎனின் ஒண்மை உடையம்யாம் என்னும் செருக்கு.

5) கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடற வல்லதூஉம் ஐயம் தரும்.

6) அற்றம் மறைத்தலோ புல்லறிவு தம்வயின் குற்றம் மறையா வழி.

7) அருமறை சோரும் அறிவிலான் செய்யும் பெருமிறை தானே தனக்கு.

8) ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர் போஒம் அளவும்ஓர் நோய்.

9) காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான் கண்டானாம் தான்கண்ட வாறு.

10) உலகத்தார் உண்டென்பது இல்என்பான் வையத்து அலகையா வைக்கப் படும்.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th tamil.indd 281 23-03-2018 17:49:47

இகல் (86)

1) இகல்என்ப எல்லா உயிர்க்கும் பகல்என்னும்
பண்பின்மை பாரிக்கும் நோய்.

2) பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி
இன்னாசெய் யாமை தலை.

3) இகல்என்னும் எவ்வநோய் நீக்கின் தவல்இல்லாத்
தாவில் விளக்கம் தரும்.

4) இன்பத்துள் இன்பம் பயக்கும் இகல்என்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

5) இகல்எதிர் சாய்ந்துஒழுக வல்லாரை யாரே
மிகல்ஊக்கும் தன்மை யவர்.

6) இகலின் மிகல்இனிது என்பவன் வாழ்க்கை
தவலும் கெடலும் நணித்து.

7) மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்
இன்னா அறிவி னவர்.

8) இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம் அதனை
மிகல்ஊக்கின் ஊக்குமாம் கேடு.

9) இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை
மிகல்காணும் கேடு தரற்கு.

10) இகலானாம் இன்னாத எல்லாம் நகலானாம்
நன்னயம் என்னும் செருக்கு.

குடிமை (96)

1) இற்பிறந்தார் கண்அல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு.

2) ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார்.

3) நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு.

4) அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

5) வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பில் தலைப்பிரிதல் இன்று.

6) சலம்பற்றிச் சால்பில செய்யார்மாசு அற்ற
குலம்பற்றி வாழ்தும்என் பார்.

7) குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து.

8) நலத்தின்கண் நார்இன்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும்.

9) நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச் சொல்.

10) நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம் வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th tamil.indd 282 23-03-2018 17:49:47

சான்றாண்மை (99)

1) கடன்என்ப நல்லவை எல்லாம் கடன்அறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

2) குணநலம் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத்து உள்ளதூஉம் அன்று.

3) அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ(டு)
ஐந்துசால்பு ஊன்றிய தூண்.

4) கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

5) ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை.

6) சால்பிற்குக் கட்டளை யாதெனில் தோல்வி
துலையல்லார் கண்ணும் கொளல்.

7) இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு?

8) இன்மை ஒருவற்கு இளிவன்று சால்புஎன்னும்
திண்மைஉண் டாகப் பெறின்.

9) ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்.

10) சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலந்தான்
தாங்காது மன்னோ பொறை.

நாண் உடைமை (102)

1) கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற.

2) ஊண்உடை எச்சம் உயிர்க்குஎல்லாம் வேறுஅல்ல
நாண்உடைமை மாந்தர் சிறப்பு.

3) ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாண்என்னும்
நன்மை குறித்தது சால்பு.

4) அணிஅன்றோ நாண்உடைமை சான்றோர்க்கு அஃதுஇன்றேல்
பிணிஅன்றோ பீடு நடை?

5) பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்கு
உறைபதி என்னும் உலகு.

6) நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர்.

7) நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்
நாண்துறவார் நாண்ஆள் பவர்.

8) பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்
அறம்நாணத் தக்கது உடைத்து.

9) குலம்சுடும் கொள்கை பிழைப்பின் நலம்சுடும்
நாணின்மை நின்றக் கடை.

10) நாண்அகத்து இல்லார் இயக்கம் மரப்பாவை
நாணால் உயிர்மருட்டி அற்று.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th tamil.indd 283 23-03-2018 17:49:47

உழவு (104)

1) சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

2) உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.

3) உழுதுஉண்டு வாழ்வாரே வாழ்வார்மற்று எல்லாம்
தொழுதுஉண்டு பின்செல் பவர்.

4) பலகுஉடை நீழலும் தம்குடைக்கீழ்க் காண்பர்
அலகுஉடை நீழ லவர்.

5) இரவார் இரப்பார்க்குஒன்று ஈவர் கரவாது
கைசெய்துஊண் மாலை யவர்.

6) உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேம்என் பார்க்கும் நிலை.

7) தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்துஎருவும்
வேண்டாது சாலப் படும்.

8) ஏரினும் நன்றால் எருஇடுதல் கட்டபின்
நீரினும் நன்றுஅதன் காப்பு.

9) செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்து
இல்லாளின் ஊடி விடும்.

10) இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலம்என்னும் நல்லாள் நகும்.

வான்புகழ் வள்ளுவரின் அறக்கருத்துகள் மாணவரிடம் சென்று சேர வேண்டும்; அதன்வழி நன்னெறிப் பண்புகள் மாணவரிடையே வளர வேண்டும் என்ற நோக்கில் புதிய பாடத்திட்டத்தில் திருக்குறளின் 150 பாக்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

- திருக்குறளை நாள்தோறும் வழிபாட்டுக் கூட்டத்தில் பொருளுடன் கூறலாம்.
- வகுப்பு வாரியாகத் திருக்குறள் ஒப்பித்தல் போட்டி வைக்கலாம்.
- குறட்பாக்கள் தொடர்பான கதைகள், நாடகங்களை இலக்கியமன்ற கூட்டங்களில் நடத்தச் செய்யலாம்.
- குறட்பாக்கள் தொடர்பான வினாக்களைத் தொகுத்து "வினாடி வினா" நடத்தலாம்.
- உலகப் பொதுமுறையாம் திருக்குறளில் இடம் பெற்றிருக்கும் நன்னெறிக் கருத்துகளின் அடிப்படையில் நீதிக்கதைகள், இசைப்பாடல்கள், சித்திரக் கதைகள், அசைவூட்டப் படங்கள் வாயிலாகத் திருக்குறள் வளங்களை மாணவர்களிடம் கொண்டு சேர்க்கலாம்.

குறிப்பு: மாணவர்கள் எளிதில் படித்துப் பொருள் புரிந்துகொள்வதற்கு ஏற்றவகையில் குறட்பாக்களின் சொற்கள் பிரித்துத் தரப்பட்டுள்ளன; அலகிடுவதற்கு அல்ல.

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th tamil.indd 284 23-03-2018 17:49:47

ஒன்பதாம் வகுப்பு – தமிழ்
ஆக்கம்

ஆலோசனைக் குழு

முனைவர் **இ. சுந்தரமூர்த்தி,**
மேனாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை.

முனைவர் **சி. சுப்பிரமணியன்,**
மேனாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை.

முனைவர் **கி. நாச்சிமுத்து,**
மேனாள் பேராசிரியர், மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்.

முனைவர் **வீ. அரசு,**
மேனாள் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.

மேலாய்வாளர் குழு

முனைவர் சிற்பி **பாலசுப்பிரமணியம்,** மேனாள் தமிழியல்
துறைத்தலைவர், பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.

திரு **பிரபஞ்சன்,** எழுத்தாளர், புதுவை.

முனைவர் **பா. மதிவாணன்,** தமிழ்த்துறை தலைவர்
பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.

திரு. **ம. இராமகிருட்டினன்,** முதன்மைக்கல்வி அலுவலர், திருச்சி.

பாட வல்லுநர் குழு

முனைவர் **மு. சுதந்திரமுத்து,**
இணைப்பேராசிரியர் (ப.நி), மாநிலக் கல்லூரி, சென்னை.

முனைவர் **பா. டேவிட் பிரபாகர்,** இணைப்பேராசிரியர்
சென்னை கிறித்தவக் கல்லூரி, தாம்பரம், சென்னை.

முனைவர் **த. புகழேந்தி,** இணைப்பேராசிரியர்
நந்தனம் அரசு ஆடவர் கலைக் கல்லூரி (தன்னாட்சி), சென்னை.

முனைவர் **ச. திருஞானசம்பந்தம்,**
இணைப்பேராசிரியர் (ப.நி), தமிழ்த்துறை உயராய்வு மையம் , அரசர் கல்லூரி, திருவையாறு

முனைவர் **சு. தாமரைப்பாண்டியன்,**
உதவிப்பேராசிரியர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி , சென்னை.

முனைவர் **இரா. இலட்சாராமன்,** முதல்வர் (ப.நி), ஸ்ரீமத் சிவஞான
பாலய சுவாமிகள் தமிழ் அறிவியல் கல்லூரி, மயிலம், விழுப்புரம்.

முனைவர் **க பலராமன்,**
உதவிப்பேராசிரியர், நந்தனம் அரசு ஆடவர் கலைக் கல்லூரி (தன்னாட்சி), சென்னை.

பாடநூல் உருவாக்கக் குழு

திருமதி **ப. சுமதி,** விரிவுரையாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
திருவல்லிக்கேணி, சென்னை.

திரு **நா. ஹரிகுமார்,** பட்டதாரி ஆசிரியர், இராஜாமுத்தையா மேனிலைப்பள்ளி,
இராஜாஅண்ணாமலைபுரம், சென்னை.

திரு **வே. சங்கர்ராம்,** பட்டதாரி ஆசிரியர், அரசு ஆண்கள்
மேனிலைப்பள்ளி, சங்கரன்கோவில், திருநெல்வேலி.

திரு **மு. பாலகிருஷ்ணன்,** பட்டதாரி ஆசிரியர், எஸ். எஸ். என். அரசு
மேனிலைப்பள்ளி, கொம்மடிக்கோட்டை, தூத்துக்குடி.

திருமதி **வெ. மீனாட்சி,** பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி, ஏனாத்தூர், காஞ்சிபுரம்.

முனைவர் **கோ. நாராயணமூர்த்தி,** பட்டதாரிஆசிரியர்,
பாரதி மேனிலைப்பள்ளி, நாமக்கல்.

திரு **அ. பாண்டியன்,** பட்டதாரி ஆசிரியர்,
அ.வே.நா.செ. அரசு மேனிலைப்பள்ளி, ஜி.அரியூர், விழுப்புரம்.

திரு **இரத்தின. புகழேந்தி,** பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி, மன்னம்பாடி, கடலூர்.

திரு **இரா. பாண்டியன்,** பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர்நிலைப்பள்ளி, வெண்பாவூர், பெரம்பலூர்.

திரு **க. வேல்முருகன்,** பட்டதாரி ஆசிரியர்,
அரசு உயர்நிலைப் பள்ளி, ஆர்ப்பாக்கம், திருவண்ணாமலை.

திரு **ஆ. சின்னதுரை,** பட்டதாரி ஆசிரியர்,
அரசு மேனிலைப்பள்ளி, தேவியாக்குறிச்சி, சேலம்.

திரு **அ. இரவிச்சந்திரன்,** முதுகலை ஆசிரியர்,
அரசு மகளிர் மேனிலைப்பள்ளி, மணப்பாறை, திருச்சி.

திரு **வெ. பாலமுருகன்,** பட்டதாரி ஆசிரியர்,
அரசு மேனிலைப்பள்ளி, ஆரம்பாக்கம், திருவள்ளூர்.

திரு **க. சிவக்குமார்,** பட்டதாரி ஆசிரியர்,
அரசு மேனிலைப்பள்ளி, ஏலாக்குறிச்சி, அரியலூர்.

திரு **கும. திருப்பதி,** பட்டதாரி ஆசிரியர்,
மு.நா.செ. உயர்நிலைப்பள்ளி, கொப்பணாபட்டி, புதுக்கோட்டை.

கவிஞர் **நா. முத்துநிலவன்,** தமிழாசிரியர் (ஓய்வு),
அரசு முன்மாதிரி மேல்நிலைப்பள்ளி, புதுக்கோட்டை.

திருமதி **கோ. தாட்சாயணி,** பட்டதாரி ஆசிரியர்,
அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளி, அயப்பாக்கம், சென்னை.

திரு **அ. அந்தோணிராஜ்,** முதுகலைத் தமிழாசிரியர்,
புனித வளனார் மே.நி.ப., மஞ்சக்குப்பம், கடலூர்

கலை மற்றும் வடிவமைப்புக் குழு

தலைமை ஒருங்கிணைப்பாளர்
வடிவமைப்பு – ஆக்கம்

சீனிவாசன் நடராஜன்

வரைபடம்

திரு **க.த. காந்திராஜன்,**
ஆய்வு வளமையர், தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை

திரு **ச.கௌதம்,**

திரு **பொ. வள்ளிநாயகம்,** ஓவிய ஆசிரியர்,
ஸ்ரீமந்திரமூர்த்தி மேனிலைப் பள்ளி, திருநெல்வேலி.

மு. விசுவேசுவர ஆசிவேல் குமரன், ஓவிய ஆசிரியர்,
அ.மே.நி. பள்ளி, முண்டியம்பாக்கம், விழுப்புரம்.

கா. புகழேந்தி, பட்டதாரி ஆசிரியர்,
அரசு முன்மாதிரி மே.நி. பள்ளி, புதுக்கோட்டை.

திரு **ஏ. ஜேம்ஸ்பாண்ட்,** ஓவிய ஆசிரியர், அரசு உயர்நிலைப் பள்ளி, அரசர்குளம்,
அறந்தாங்கி, புதுக்கோட்டை.

திரு. **ஜேசுநாதன்,** ஓவியர், சென்னை.

திரு **க. சந்திவீரன்,** அரசு கவின் கலைக்கல்லூரி, சென்னை

திரு. **வெ. கார்த்திகேயன்,** அரசு கவின் கலைக்கல்லூரி , சென்னை

திரு. **தீபக் ராஜன், வேல்முருகன், பிரமோத்,**

திரு. **சார்லஸ், கோகுல கிருஷ்ணன்,**

ஓவியர்கள், சென்னை.

நன்றி

ஓவியர்கள்
திரு. **கோபுலு**
திரு. **மாதவன்**
திரு. **மனோகர் தேவதாஸ்**
திரு. **மணியன் செல்வன்**
திரு. **பெருமாள்**
ஓவிய ஆசிரியர் திரு. **எஸ். முரளிதரன்,** சேலம்.

வரைகலை & வடிவமைப்பு

பழையவலம் திரு. **பா. இராமநாதன்,** சென்னை.

In-House - QC
திரு. **கோபு ராசுவேல்,** சென்னை.

கணினித் தொழில்நுட்பம்

திரு **இரவிக்குமார்,** விரிவுரையாளர்,
மா.ஆ.க.ப.நி, சென்னை.

செல்வி **த. ரேவதி,** பட்டதாரி ஆசிரியர்,
ந.உ.நி.ப. இராஜகோபாலபுரம், புதுக்கோட்டை.

ஒருங்கிணைப்பு

திருமதி. **க.சு. சங்கீதா,** உதவிப் பேராசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

வல்லுநர் & ஒருங்கிணைப்பாளர்

முனைவர் **நா. அருள்முருகன்,** துணை இயக்குநர்,
தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை.

ஒருங்கிணைப்பு உதவி & தட்டச்சர்

திருமதி **டி.தே. வர்மிளா,** பட்டதாரி ஆசிரியர்
அரசு மேனிலைப்பள்ளி, மோரூர், வேலூர்.

திருமதி. **ப. குமுதா,**
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை

athiyamanteam.com | Video Course & Test Batch For TNPSC,Forest,TNUSRB,RRB Exams | Call : 8681859181

9th tamil.indd 285 23-03-2018 17:49:47